www.tamilarangam.net

3 €

# அசை

– சமூக அசைவிற்கான எழுத்தியக்கம் –

இவ்வுலகம் முழுவதையும் தோற்கடிக்கும் வரையிலும் நான் காத்திருப்பேன்.

– ரோசா லுக்சம்பேர்க் –




தொகுப்பு இல. 02

ஜனவரி 2003

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆசை


Assaie
45 Rue Davy
75017 Paris
France.
assaie@hotmail.com
00 33 1 42653176

00 91 44 23418231

www.tamilarangam.net



"தமிழ்த் தேசியக் குழுக்கள்பற்றி எங்களுக்கு மாறுபாடான கருத்துக்கள் இருக்கு."

# தலித்திய செயற்பாட்டாளர்
# அரங்க குணசேகரன்
## அவர்களோடு உரையாடல்

அசைக்காக இவ்வுரையாடலை சாத்தியப்படுத்திய காலக்குறி தோழர்களுக்கும் உரையாடல்களிற்கு எழுத்து வடிவம் தந்த தோழர் சிங்கராயருக்கும் அசையின் தோழமையான நன்றிகள்!

www.tamilarangam.net

www.tamilarangam.net

தோழர் அரங்க குணசேகரன், தமிழகத்தில் இன்று பரவலாக பேசப்படும் தலித் அரசியலை, இந்திய கம்யூனிஸ்ட் (ML) கட்சியில் விடுதலைக் குழுவில் தான் பங்காற்றிய காலத்திலேயே எழுப்பியவர். 1970களின் பத்தாண்டுகளில் மேலெழும்பிய நக்சல்பாரி புரட்சியில் முளைவிட்ட வித்துக்களில் தோழர் அரங்க குணசேகரனும் ஒருவர். இந்திய மக்கள் முன்னணியின் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத் தலைவராக, அம்பேத்கர் மக்கள் உரிமைக் கழகத்தின் தலைவராக, தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் மலைச்சாதி மாணவர் இயக்கத்தின் திருச்சி மாவட்டத் தலைவராக, தமிழ்நாடு ஆதி திராவிடர் சங்கத்தின் பொறுப்பாளராக, தாழ்த்தப்பட்டோர் உரிமைச் சங்கத்தின் தஞ்சை மாவட்ட அமைப்பாளராக, மக்கள் சமத்துவ முன்னணியின் கொள்கை பரப்பு செயலாளராக, இந்திய மனித உரிமைக் கட்சியின் மாநிலச் செயலாளராக எனப் பலவாறு பொறுப்புக்களை ஏற்று தலித் உரிமைக்கும் பாதுகாப்புக்கும் விடுதலைக்கும் போராடி வரும் தோழர் அரங்க குணசேகரன் அவர்களின் வயது 49. சமரசம் அற்று போராடி வரும் இவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் ஒரு முறையும், பிற வழக்குகளில் ஏழு முறைகளும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டவர். தலித் தலைமை, தலித் அரசியல் என்பதே நம் முன்னேயுள்ள எல்லாச் சிக்கல்களுக்கும் தீர்வாகும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்ட இவர் வறிய விவசாய குடும்பத்தில் பிறந்தவர். சாதி ஒழிப்பையும் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் இணைத்து 1996இல் மாநாடு நடத்தியவர். பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் செயலூக்கமும் கொண்ட தோழர் அரங்க குணசேகரன் தற்போது தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒற்றன்காடு என்ற ஊரில் வசித்து வருகிறார்.

அரங்க குணசேகரன்



www.tamilarangam.net

**காலக்குறி :**

உலகமயமாதல் குறித்து தலித் இயக்கத்தின் பார்வையில் தாங்கள் கூற விரும்புவது என்ன?

**அரங்க குணசேகரன்:**

*தலித் இயக்கமும் உலகமயமாக்கலும் - இது ஒரு தலைப்பு.*

உலகமயமாக்கலால் தலித் மக்களுக்கு வேலை கிடைக்கும் என்று கெயில் ஓம்வெத் கூறுகிறார். விடுதலை கிடைக்கும் என்று கூறவில்லை. இவரது கருத்துக்களையே அ. மார்க்ஸ் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். தலித் இயக்கங்களும் உலக மயமா தலும் - இதில் கடந்த 90களின் பத்தாண்டுகள் முழுமையும் தலித் இயக்கங்களால் உலகமயமாதலை எதிர்கொண்டு வெற்றிகொள்ள முடியாது என்ற போக்குத்தான் நிதர்சனமான உண்மையாக - வெளிப்பாடாக உள்ளது. அந்த அளவுக்கு தலித் இயக்கங்களை பின்னுக்குத் தள்ளுவதில் - சீர் குலைப்பதில் உலகமயமாதல் செல்வாக்குச் செலுத்தி இருக்கிறது.

தலித் இயக்கம் என்பது சாதி இயக்கமாகி இருக் குமானால் அந்தச் சாதிக்கென்று சில உடைமைகள் இருக்கும். அந்த உடைமை வர்க்கத்துக்கெதிராக உலகமயமாதல் வரும்பொழுது, உலக மயமாதலுக்கு எதிரான போராட்ட அமைப்பாகக்கூட அது மாறி யிருக்கும். ஆனால், தலித் இயக்கம் என்பது உடைமை யற்ற வர்க்கம், சாதி எதிர்ப்பு இயக்கம், சனநாய கத்துக்கான இயக்கம்.

சனநாயகம் மறுக்கப்பட்ட, நிலவுடைமைச் சாதி அதிகார அமைப்பை எதிர்த்திருக்க வேண்டிய எதிர்த் திருக்கின்ற ஒரு தலித் இயக்கம், உலகமயமாதல் வேகமாக வருகின்றபொழுது அதனை தாக்குப் பிடிக்க முடியாமல், எதிர்கொள்ள முடியாமல் வாழ்வதற்கே போராடவேண்டிய அவலநிலைக்குத்தான் அது வரும். அப்படி அது வரும் என்பதை நான் 90களிலேயே சொல்லி இருக்கிறேன். பல மேடைகளில் பேசி இருக் கிறோம். பல வெளியீடுகளில் சொல்லி இருக்கிறோம். குறிப்பாக 'தலித் மக்களின் தொடர் முழக்கப் போர்' என்ற புத்தகம் வெளியிட்டோம். அதில் என்னுடைய கட்டுரையே, இந்த உலக மயமாதல் தலித்துகளுக்கு எதிரானது; தலித்துகளுக்கு வேலை மறுப்பதாகவோ, கல்வியை மறுப்பதாகவோ, மருத்துவத்தை மறுப்பதா கவோ மட்டும் பார்க்காமல், வாழ்வுரிமையையே மறுப்பதாக இது மாறும் என்பதை இந்த ஐந்தாண்டு களில் பார்த்தாகிவிட்டது.

உலகமயமாதல் வந்து பத்தாண்டு காலமாகி விட்டது. ஆனால், ஐந்தாண்டுகளுக்குள் தமிழகத்தில் இரண்டு வகையான போக்குகள் இருந்தது. ஒரு போக்கு, தாழ்த்தப்பட்டவர்கள் ஆண்டுக்கு 9 மாதங் கள் விவசாயக் கூலி வேலைசெய்துவிட்டு, 3-4 மாதங்கள் வேலை இல்லாமல் இருப்பார்கள்.



அரங்க குணசேகரன்

ஆனால், இன்றைக்கு 9 மாதங்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். 3-4 மாதங்கள் வேலை செய்கிற அளவுக்கு, அந்த 3-4 மாதங்களும் 50 பெண்கள் போய் தங்களுக்கு குறிப்பிட்ட கூலி தந்தால்தான் நடவு செய்வோம் என்று சொன்னது போய், 100 பெண்கள் போய் 50 பெண்களுக்கான சம்பளத்தை வாங்கிக்கொண்டு, அதைப் பகிர்ந்து கொள்ளும் அவலநிலைதான் இன்றுள்ளது. எனவே, கூலி உயர்வைத் தீர்மானிக்கும் சக்தியையும் இன்று அவர்கள் இழந்துள்ளார்கள்.

இதற்குக் காரணம், நவீனமான அறுவடை இயந் திரம், களை எடுக்கிற யந்திரம், விதைக்கிற யந்திரம், நடவு யந்திரம் - கோடை காலத்தில் குளம் வெட்டு வது, ஆறு வெட்டுவது போன்ற பணிகளுக்கு யந்திரம் பயன்படுத்தப்பட்டது. இப்படி எல்லா வகையான வேலைகளுமே யந்திர மயமாக்கப்பட்டதால், சாதார ணமாக, விவசாய தொழிலாளிகளுக்கு ஆண்டில் பல மாதங்கள் வேலை இல்லை. புதிய நவீனமான உற்பத்தி முறைகள் - பணப்பயிர் சாகுபடி வளர்ந்து விட்டதால், விவசாயிகள் எல்லாம் முதலாளித்துவ உற்பத்திமுறையில் இருப்பதால், எல்லாம் இயந்திர மயமாகி இருப்பதால் விவசாய தொழிலாளிகள் விவசாயத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பட்டினி கிடக்கிறார்கள். மருத்துவம் - கல்வி இவை எல்லாம் இவர்களை, கிராமப்புறங்களில், போய்ச் சேரவே யில்லை. ஒரு சில பகுதிகளில் யார் வந்திருக்கி றாங்கன்னா, ஏற்கனவே கிராமங்களில் இடைநிலை ஆசிரியர்களாக, பட்டதாரி ஆசிரியர்களாக, பொறியிய லாளர்களாக, மருத்துவர்களாக உள்ளவர்களின் பிள்ளைகள் மட்டும்தான் மீண்டும் மீண்டும் படிக்க வாய்ப்புள்ளதே தவிர, படித்தவர்களின் விழுக்காடு குறைவாகவே உள்ளது. கிராமப்புற மக்களிடமிருந்து, தலித்துக்களிடமிருந்து படித்தவர்கள் புதிதாகத் தோன்றவில்லை. வாழ்வதற்கே வேலையின்றி பட்டினி கிடக்கும்போது, நிலமில்லாமல் இருக்கும்போது இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாத்தியமில்லை.

நிலச்சீர்திருத்தச் சட்டம் என்பது இன்றைக்கு பேசப்படக்கூட முடியாத நிலையில், அது பண்ணை வடிவத்தில் முதலாளிய வடிவத்தில் பழத் தோட்டங்கள், வணிகத் தோட்டங்கள், பல்வேறு தோட்டங்களுக்காக பன்னாட்டு முதலாளிகளுக்கு தொழிற்சாலைக்காக ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் அரசால் கொடுக்கப்படுகின்ற சூழலில், தலித்துகளுக்கு நிலம் வழங்கப்பட மாட்டாது. மாற்றுத் திட்டமாக, உலகமயமாதல் வருவதற்கு முன்பாக இந்த அரசு குறைந்த பட்சம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழுது, உற்பத்தி செய்து உணவுக்காகவாவது உத்திரவாதமாக குடும்பத்துக்கு ஒரு ஏக்கர் நிலத்தை உறுதிப்படுத்தி பின்னர் இத்திட்டத்தை அமுல்படுத்தியிருந்தால், வேலை இல்லாதவர்கள் நிலத்தில் உற்பத்தி செய்தாவது சாப்பிடுவார்கள். இப்ப நிலமும் வழங்கப்படவில்லை. உற்பத்தியும் யந்திரமயமாகி விட்டது. அதனால், வாழ்நிலை அபாயகரமாகவும் மோசமாகவும் போய்க் கொண்டிருக்கிறது. உலகமயமாதல் என்பது இன்றைக்கு மட்டுமல்ல, என்றுமே தலித்துக்களின் வாழ்வுரிமைக்கு எதிரானது என்று நாங்கள் சொல்கிறோம்.

**காலக்குறி:**

உலகமயமாதல் உள்ளூர் தொழிற்சாலைகளை அழித்துவிடுகின்றது. அதேபோல், உள்ளூர் பொதுத்துறை எல்லாம் தனியார்துறையாக மாறியுள்ளது. பொதுத்துறையாக இருக்கும்போது ரயில்வே, வங்கி, தபால் தந்தி போன்ற மத்திய அரசுத்துறைகளில் இடஒதுக்கீடு மூலமாக வேலை கிடைத்தது. பொதுத்துறை தனியார் துறையாக மாற்றப்படும்போது பன்னாட்டு நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு இருக்கப்போவதில்லை. உலகமயமாதலுக்குப் பின் இடஒதுக்கீட்டை எப்படி அமுல்படுத்துவார்கள்? வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய முதலாளிகளிடம் நாம் இடஒதுக்கீடு கோர முடியுமா?

**அரங்க குணசேகரன்:**

முடியாது. இடஒதுக்கீட்டையும் உலகமயமாதல், பொதுத்துறை இவற்றையும் இரண்டு சிறுபிரிவாகப் பிரித்துப் பேசலாம்.

இந்த பொதுத்துறை என்ற சொல்லை மிக மோசமாக நமது தலையில் கட்டி விட்டிருக்கிறார்கள். தனியார் துறையை பொதுத் துறையாக மாற்றியது வங்கிகளைப் பொறுத்தவரையில்தான். மற்றப்படி எதையுமே - தனியார் துறைகளை பெருமளவில் பொதுத் துறையாக இந்த அரசாங்கம் மாற்றவில்லை. ஏற்கனவே இருக்கிற ரயில்வே LIC எல்லாம் அரசுத் துறைகள் தாம். பொதுத் துறை என்பதும் எப்போது வருகுதுன்னா, வங்கிகள் தேசியமயப்படுத்தும் போதுதான் அது பொதுத்துறை என்று சொல்லப்படும்.

சில எஃகு ஆலைகள், சில தொழிற்சாலைகள் இவற்றை பொதுத் துறை என்று சொல்கிறார்கள். இவை எல்லாமே சாராம்சத்தில் அரசுத் துறைதான். தேசிய மயம் - அரசு மயம் என்று சொல்வதெல்லாம் யதார்த்தத்தில் அரசு எந்த வர்க்கத்தின் கையில் இருக்கிறதோ அந்த வர்க்கத்தின் துறைதான். அது குப்புசாமி முதலியார் பெயரில் இருந்தாலும், இந்திரா காந்தி பெயரில் இருந்தாலும், முதலமைச்சர் கருணாநிதி பெயரில் இருந்தாலும் சாராம்சத்தில் ஒன்றுதான். அரசுத்துறை என்பதே மக்களுக்கானதுதான் என்ற மாயை நமக்கு ஊட்டப்பட்டிருக்கிறது. தேசியமயம் என்ற மாயை நமக்கு ஊட்டப்பட்டிருக்கிறது. தனியாரிடமிருந்தாலும் அது ஆளும் வர்க்கத்துக்குத்தான் பயன்படும். அரசிடமிருந்தாலும் அது ஆளும் வர்க்கத்துக்குத்தான்.

ஆனால், இந்தியாவில் இன்றைக்குள்ள பொதுத் துறை என்பது அன்றைக்கு இட ஒதுக்கீடு ஒரு குறிப்பிட்ட சதவிகித தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இதில் இடம் பெறுவதற்கு மட்டும் பயன்பட்டதே அல்லாமல், பொதுத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியால், எந்த ஒரு தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், உழைக்கும் மக்களும் பயனடையவில்லை.

உதாரணமாக சொல்லப் போனால், தனியார் வங்கிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு - ஏழை உழைக்கும் மக்களிற்கு கடன் வழங்கவில்லை என்று சொல்லித்தான் (1971இல்) தேசியமயமாக்கினார்கள். ஆனால், இன்றைக்கு - 25 ஆண்டு காலத்துக்குப் பிறகும் வங்கிகள் 51 000 கோடி ரூபாயை முதலாளிகளுக்கு கடனாகத் தந்துள்ளன. விவசாயிகளுக்கு கொடுத்தால் கிட்டி போட்டு வசூலிக்கிறான். ஜப்தி செய்து வசூலிக்கிறான். மொத்தக் கடனைப் பார்த்தால் விவசாயிகளுக்கு கொடுத்த கடன் முதலாளிகளுக்கு கொடுத்த கடனைப்போல் ஐந்திலொரு பங்குதானிருக்கும். IRDP போன்று கிராமம் கிராமமாக கொடுத்ததை கூட்டிப் பார்த்தால்கூட, சில ஆயிரம் கோடிதான் வரும். ஆனால், 51 000 கோடியை முதலாளிகளுக்குத்தான் கொடுத்திருக்கிறான். முதலாளிகள்தான் பொதுத் துறையை முழுமையாகப் பயன்படுத்திவிட்டு அது நட்டமானதற்கும் காரணம். நட்டமாகும்வரைக்கும் பயன்படுத்திவிட்டு நட்டமானவுடன், அதற்குக் காரணம் நிர்வாகச் சீர்கேடுதான், எனவேதான், 'அரசுத்துறையை தனியார் மயமாக்கு' என்கிறோம் என அதே முதலாளியே குரல் கொடுக்கிறான். அதே முதலாளியின் பிரதிநிதிதான் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கிறான். எனவே, இதை பொதுத்துறை என்று சொல்வதே ஒரு மோசடிதான்.

அரசுத்துறை, தேசிய மயம் என்பது சரியான சொல். ஆனால், தேசியம் யார் கையில் இருக்கிறதோ, அரசு யார் கையில் இருக்கிறதோ அந்த வர்க்கத்துக்குச் சேவை செய்யக்கூடிய துறைதான். தவிர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாமல் இட ஒதுக்கீட்டை ஏன் கொடுத்தார்கள் என்றால், அரசு நிர்வாகம் என்று வைத்துக்கொண்டு இடஒதுக்கீட்டை மறுத்தால் சில அரசியல் சட்ட சிக்கல்களை - குடியுரிமைச் சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வரும்.

இரண்டாவது, வளர்ச்சிக்கேற்றபடி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்திலும் வளர்ந்து வரக்கூடிய படித்தவர்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பதன்மூலமாக இந்த அரசுத்துறை, பொதுத்துறை மக்களுக்கானது என்ற மாயை காட்டி, அம்மக்கள் இந்தத் துறைகளின் அநீதிகளை எதிர்த்துப் போராடாதவாறு அவர்களை நீர்த்துப் போகச் செய்வதற்கும் இடஒதுக்கீட்டைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இடஒதுக்கீட்டுக்கு நாங்கள் எதிரியில்லை. இச் சமூகத்துக்கு இட ஒதுக் கீடு மட்டுமே ஒரு மாமருந்து கிடையாது. இட ஒதுக்கீட் டைக்கூட, இந்த மக்களின் போராட்ட உணர்வை நீர்த்துப் போகச் செய்வதற்காகத்தான் தந்திருக் கிறார்கள்.

எந்த ஒரு வங்கியில் உள்ள - தொழில்துறையில் உள்ள எந்த ஒரு தலித் மேலாளரும் தன் சமூகத் துக்குத் தான் நினைத்ததை எல்லாம் செய்துவிட முடியாது. அந்த அளவுக்கு அரசியல் சட்டத்தில் - சமூக அமைப்பில் வரம்பு - நெருக்கடி உள்ளது. எனவே, இடஒதுக்கீடு என்ற ஒரு குறைந்த பட்ச உரிமையைத் தவிர்த்து எல்லா வகையிலும் அரசுத் துறை என்பதும் தனியார்துறை, பொதுத்துறை என்ப தும் எல்லாம் ஒன்றுதான். அன்றைக்குத் தனியார் துறை தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், வளப்படுத்திக் கொள்வதற்கும் பொதுத்துறை என்ற ஒன்றை ஆளும் வர்க்கம் உருவாக்கியது. இன்று பொதுத்துறை என்று ஒன்றை வைத்துக்கொண்டு கட்டித் தீனி போடவேண்டிய அவசியமில்லை என்று, தானே அரசை நேரடியாக நிர்வகிக்கலாம் என்று, ஆளும் வர்க்கம் தனக்கு பொதுத்துறை தேவை யில்லை என்று மூடிவிடுகிறது.

இந்த ஆளும் வர்க்கம் தாழ்த்தப்பட்ட - பிற்படுத் தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை நிராகரிக்குமா என்றால் நிராகரிக்கும். அதே சமயத்தில் நிராகரிக் காமல் சில இடங்களில் வாய்ப்புமளிக்கும். ஆனால், தனியார் துறையை பொறுத்தமட்டில் இதைச் சட்ட பூர்வ உரிமையாக கேட்க முடியாது. இடஒதுக்கீடு என்ற கொள்கை சரியானதுதான். ஆனால், அதை நடைமுறைப்படுத்தும் முறையை மாற்றியாக வேண்டும்.

இடஒதுக்கீட்டை 40 - 50களில் நடைமுறைப் படுத்திய மாதிரியில் இன்று நடைமுறைப்படுத்த முடியாது. 30களில் (1937-1947) சுயராச்சிய கட்சி - நீதிக்கட்சி ஆட்சியில் இருந்தபோது ஒரு வகையான இடஒதுக்கீடு அமுலில் இருந்தது. பார்ப்பனர் அல்லாத இந்துக்களுக்கு, முஸ்லிம்களுக்கு, கிறிஸ்தவர் களுக்கு, தலித்துக்களுக்கு என்று சொல்லி 12 இடத்தை பொது இடமாக வைத்துக்கொண்டு ஒரு இடஒதுக்கீடு இருந்தது. 47க்குப் பின்பு வகுப்புவாரி உரிமையென்று சொல்லி விகிதாசார அளவில் கொண்டு வந்தாங்க. இன்று காலத்திற்கேற்றாற் போல், அந்த இடஒதுக்கீடுகளை முழுமையாக பயன் படுத்தாத காரணத்தால், அதை பிற்படுத்தப் பட்டோரிடமிருந்து மிகப் பிற்படுத்தப்பட்டோர் கேட்டாங்க. மிகப் பிற்படுத்தப்பட்டோர் கேட்டவுடனே பிற்படுத்தப்பட்ட சாதி எல்லாம் தங்களை மிகப் பிற்படுத்தப்பட்ட சாதின்னு அறிவிக்கிறாங்க. பள்ளர்கள் எல்லாம் எங்களைவிட பறையர்கள் அதிகம் வேலைக்கு போயிட்டாங்கங்கிறான். பள்ளரும் 'பறையரும் எங்க இடஒதுக்கீட்டை பறிச்சிட்டாங்கன்னு சொல்லி சக்கிலியர்கள் / அருந்ததியர்கள் தனி இட ஒதுக்கீடு கேட்கிறாங்க. ஆக, மேலும் மேலும் இட ஒதுக்கீடென்கிற ஒரு துருப்புச் சீட்டை வச்சிகிட்டு, சாதிய அமைப்புக்கு எதிரான சக்திகளிடையே ஐக்கியத்தையும் சமத்துவத்தையும் உருவாக்குவதற்கு மாறாக, ஆளும் வர்க்கம் சாதிகளிடையே பகைமை வளர்வதற்கு இந்த இடஒதுக்கீட்டை செயல் தந்திர பூர்வமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால், சமூக வளர்ச்சி விதிகளுக்கு ஏற்றாற் போல் இடஒதுக்கீட்டை அமுல்படுத்துவதில் உள்ள முறைகளில் மாற்றங்களை, வடிவங்களில் மாற்றங் களை உருவாக்கவேண்டும் என நாம் சில விசயங் களை முன்வைச்சி போராடி இருக்கிறோம். குறிப்பாக, அருந்ததியர்களுடைய இடஒதுக்கீடு - உள்ஒதுக்கீடு 10% என வரும்போது தமிழக மனித உரிமைக் கழகம் அதை மனப்பூர்வமாக ஆதரித்துள்ளோம்.

'அது எப்படி?' என உஞ்சைராசன் போன்றவர்க ளும், திருமாவளவன் போன்றவர்களும் - என்ன நீங்க இப்படி பேசுறீங்க? மொத்தம் இருக்கும் 18%த் தில் பாக்கி 8%ஐ பள்ளர் பறையர் எப்படி பங்கு பிரித்துக் கொள்வது எனக் கேள்வி எழுப்பினர்.

மொத்தம் 18%இல்தான் பிரித்துக்கொள்ள வேண்டும் என்று யார் சொன்னது? பாட்டாளி வர்க்கத் தலைமை - தலித் தலைமை என்ற அடிப்படையில் நீ சிந்தித்தால், இந்த நாட்டில் 2000 ஆண்டுகளாக வசதிகளை அனுபவித்துக் கொண்டிருப்பவன், 2000 ஆண்டுகளாக வசதிகளை இழந்து கொண்டிருப்பவன் எனப் பார்த்து, இழந்தவனுக்கு எதுவும் முழுமையாக சேராதபோது, அனுபவித்தவனே மென்மேலும் அனுபவிக்கும் போக்கைத் தடுத்து நிறுத்தி அனுபவித் தவனிடம் இருந்து அதைப் பறிமுதல் செய்யணும் அல்லது குறிப்பிட்ட காலத்துக்கு தாழ்த்தப்பட்டோர் அல்லாத யாவருக்கும் இந்த நாட்டில் இடஒதுக்கீடு அடிப்படையில் சலுகை கிடையாது அல்லது ஒரு வரம்பு கட்டி, அவர்களது 50% என்பது இன்னும் குறையும் வகையில் செய்யவேண்டும். அதன் பின்னர் தாழ்த்தப்பட்டோருக்கு கூடுதலாக இடஒதுக்கீடு அதிகரித்து அதில் உள்ஒதுக்கீடாக, பறையரைவிட,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பள்ளரைவிட அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற அருந்ததியர்களுக்கு குடுக்கிறதின்னு ஏன் நீங்க மாத்தி சிந்திக்கக்கூடாது?

இன்னும் தாழ்த்தப்பட்டிருக்கிறவர்களிடையே டாக்டர் மகன் டாக்டர், எஞ்சினியர் மகன் எஞ்சினியர், IPS மகன் IPS - இந்தப் போக்கு இருக்கு. இதை வரம்பு கட்டி வேறு வடிவங்கள்ல மாத்த வேண்டி இருக்கு. இது ஒரு creamy layer system, economical criteria அடிப்படையில் அமையக்கூடாது. வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட எல்லையை தாண்டுன வங்களுக்கு இருக்கக்கூடாது. ஏன்னு சொன்னா, கிராமப்புறங்களில் ஒரு VAO நினைச்சான்னா 2 ஏக்கர் இருக்கிற SCயை வருசத்துக்கு 25000 ரூபா வருமானம் உடையவர் என எழுதி குடுக்க முடியும். 5 ஏக்கர் இருக்கிற கள்ளருக்கும் வெள்ளாளருக்கும்



அரங்க குணசேகரன்

விளைவெல்லாம் புளகஞ்சி போச்சி - பூச்சி அடிச்சி போச்சின்னு 500ரூபா வருமான சர்டிபிகேட் கொடுக்க முடியும். Creamy layer என்கிறது வருமானத்தை மட்டும் அடிப்படையாக கொண்டது. ஒரு தலைமுறையில் ஒரு சாதிக்குள்ளேயே ஒரு பறையர் SP ஆயிட்டார். அவருக்கு மாசம் 30 000ரூபா சம்பளம் கிடைக்குது. வீடு கிடைக்குது. தனி ஜீப்பு காரு கிடைக்குது. அவர் மகன் ஏன் ஒரு industry owner ஆகவோ, ஒரு commercial ஆகவோ ஒரு காண்ட்ராக்டர் ஆகவோ வரக்கூடாது? ஏன் ஒரு டாக்டராகவோ எஞ்சினியராகவோதான் meritஇலை வந்து நிக்கணுமா? ஏன் இந்த சமூக போக்கை சிந்திக்கலை, அந்த SP? அப்ப அவரே வந்துட்டாகூட, அவருடைய மகனாவது வராம, ஏற்கனவே டாக்டராகவே வராத குடும்பம் எஞ்சினியராகவே வராத SC குடும்பம். வருவதற்கும், இவர்களே மீண்டும் அந்தத் துறைக்கு apply பண்ணினாலும் கிடைக்காதளவுக்கு தடுக்கிற ஒரு systemத்தை இடஒதுக்கீட்டில் கொண்டுவந்தால் ஒழிய இந்த இடஒதுக்கீட்டில் உண்மையான சமூகநீதி கிடைக்காது.

ஒருவேளை SCயில் ஒரு IPS, IAS அதிகாரி இருக்கிறார். அவர் பையன் எங்கு போட்டி போடணும். Defenseஇல, technologyயில அயலக தூதரகங்கள்ல - இந்த மாதிரியே வேறு சில ஆய்வுத் துறைகளில் - ஏன்னா பி.ஏ. படிச்சிட்டு, எம்.ஏ. படிச்சிட்டு அந்தக் காலத்தில் ஒருத்தர் IASஆக வந்திருப்பார். Confessed IAS ஆகக்கூட வந்திருப்பார். அவருக்கு நிறைய வசதிகள் கிடைச்சிருக்கும். அவர் நகரத்திலேயே சென்னையில் - திருச்சியில் - கோயமுத்தூரிலேயே தன் பிள்ளையை படிக்க வைக்கிறார். கான்வெண்டில படிக்க வைக்கிறார். தினம் 2 நியூஸ் பேப்பர் வாங்குகிறார். அவர் வந்து, MBBS சீட்டுக்காக வந்து நின்னுகிட்டிருக்க வேண்டியதில்லை.

இதைப் போய் படிப்பு உரிமை, ஜனநாயக உரிமைன்னு எல்லாம் சொல்லுவாங்க. ஜனநாயக உரிமை என்பது யாருக்கு மறுக்கப்பட்டதோ அவங்களுக்குத்தான் கொடுக்கணுமே தவிர, பலருக்கு சனநாயக உரிமையை மறுத்துக்கொண்டிருப்பவனே அதைப் பெற்றுக் கொண்டிருப்பது சனநாயகம் இல்லை. அந்த இடத்தில் சனநாயகத்தை மறுத்துத்தான் ஆகணும். அந்த அளவுக்கு கறாரா இல்லைன்னா சமூக மாற்றம் வராது. அதனால் அந்தத் துறைகளில் தலித்துகள் இன்னும் போய்ச் சேரலை அல்லவா? அந்தத் துறைகளுக்கு இந்த IAS, IPS ஆபீசர், டாக்டர், எஞ்சினியர் வீட்டுப் பிள்ளை போட்டி போட்டுட்டு போகட்டும். அந்த இடங்கள் vacant ஆக இருக்குன்னா அந்த இடங்களுக்கு suitable candidates from the scheduled castes இலிருந்து வரலைன்னு சொல்லிக்கிட்டே இருக்கிறான், அதிலுள்ள bureaucrates. அந்த இடத்தில் போட்டி போடு. அதுக்கு special coaching கொடு.

அதை விட்டிட்டு சாதாரண +2 பாஸ் பண்ண, B.A., B.Sc., M.A., M.Sc., Library Sc., Bio-tech இந்த மாதிரி சின்னச் சின்ன courses. MBBS, ஓமியோபதி, BSMS, சித்தா - இதெல்லாம் கிராமப்புற விவசாயிகளின் குழந்தைகள் 8வது, 10வது கஷ்டப்பட்டு high schoolல்ல படிச்சி வந்திருப்பான். அவனும் வந்து நிப்பான். இவனும் வந்து நிப்பான். அதில் அவன் போட்டி போடுறபோது இவன் அடிபட்டுப் போயிடறான். ஒரு சமூகத்துக்குள்ள, மொத்த சமூகத்தையும் சொல்லலை, பறையருக்குள்ளேயே இது நடக்குது. சக்கிலியருக்குள்ளேயே இது நடக்குது. வேறு ஒண்ணும் வேணாம். 24 மணி நேரமும் மலத்தை கூடையில் அள்ளிக்கிட்டிருக்கிற சக்கிலியர் வீட்டுப் பிள்ளைகளுக்கு இடஒதுக்கீடுன்னா அந்த இடம் எப்படி fill



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

up ஆகும்? அப்போ ஏன் அவன் தலைமுறை தலை முறையா மலம் அள்ளுற மாதிரியே இருக்குது? 10வது வரை படிச்சவனும் மலம்தான் அள்ளறான்னா அது எதுக்கு? இந்த சமூகம் சுத்தமா 10வதுக்கு மேல் ஏறக்கூடாது. நவீன ஏகாதிபத்திய உற்பத்தி சந்தைக ளுக்கு தகுந்த மாதிரியான பொருள்களை தள்ளு வண்டியில் கொண்டு வந்து விக்க, வரவு செலவு கணக்கு எழுத தெரிஞ்சிகிட்டா போதும் - அதுக்கு மேல அவன் படிச்சா வேலை கேப்பான். டிகிரியில் சீட் கேட்பான். MBBSஇலை கேட்பான். அதுக்கெல் லாம் நாம செலவு பண்ணிக்கிட்டிருக்கணும். பிரச்னை வரும். கூடப் படிச்சான்னா மூளை வேலை செய்யும். பத்தாக் குறைக்கு புரட்சி வரும். இதைத் தடுத்து நிறுத்தணும்னுதான் 10வது வரைக்கும் பரீட்சையே வேணாம்னு சொல்லிகிட்டிருக்கான். இதெல்லாம் ஆளும் வர்க்கத்தோட கண்ணோட்டத்துல இருந்து தான் இருக்கே தவிர, மக்கள் நலன்கிற கண்ணோட் டத்துல இருந்து இல்ல.

இடஒதுக்கீடு இன்று இருக்கிற முறையில் எந்த சமூகநீதியும் கடைக்கோடி தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கோ, கடைக்கோடி பிற்படுத்தப்பட்ட மக்க ளுக்கோ கிடைக்கப்போறது கிடையாது. இடஒதுக்கீட் டில் மாறுதல்கள் செய்யணும். அது ஒரு பக்கம் - எப்படி செஞ்சாலும் தனியார் துறையில் இடஒதுக்கீடு குடுக்கிறது எங்க சொந்த உரிமை அப்படீன்னு ஒரு பிரைவேட் கம்பெனி சொல்றான். பன்னாட்டுக் கம்பெனி சொல்றான். நாம என்ன சொல்றோம்னா தனியார் துறைக்கு 100 கோடி ரூபா குடுக்கிற தொழில் துவங்க. இங்க இருக்கிற 500 ஏக்கர் நிலத்தை குடுக்கிற. இந்த நிலமும் பேங்குல இருக்கிற பணமும் யாருடையது? யாருடைய உபரி? யாருடைய உழைப்பு? இப்படிப் பார்க்கிறோம்.

இரண்டாவது, ஒரு சிமென்ட் பேக்டரிய உத்திர பிரதேசத்துல வித்தாங்க. அது அப்போ 100 கோடி ரூபா மதிப்புள்ளது. அதை வெறும் 40 கோடிக்கு விக்கிறான். 40 கோடிக்கு விக்கிற பொழுது 5 வருசத் துக்கு வட்டியில்லை. 10 வருசத்துக்கு 3இல் ஒரு பங்கு வட்டி. கடனில் முதல் தவணையை அரசாங்கத் துக்கு 5வது வருசத்தில் கட்ட ஆரம்பிச்சா போதும். இப்படி சலுகைகளோட 100 கோடி மதிப்புள்ள சிமென்ட் பேக்டரிய 40 கோடி ரூபாய்க்கு அரசு விற் கிறது. இப்படியாக ஒரு மோசடி பொதுத் துறைகளை தனியார் துறைக்கு விற்கிறபோது நடக்குது.

இப்ப ம.பி. இல் பல்கோ கம்பெனி 551 கோடி ரூபா, அந்த industry போட மொத்த மூலதனம் - அந்த நிலம் ஏற்கனவே மலையடிவாரத்தில் உள்ள பழங்குடி மக்களுக்கு சொந்தமான நிலம். பழங்குடி மக்களுக்கு சொந்தமான நிலம்கிறபொழுது அவர் களுக்குத்தான் அது உரிமை உள்ள நிலம். ஆனா, அரசு நிறுவனம்கிறதுனால அரசு எடுத்துக்கிச்சி. நாங்க உங்களுக்கு பாதுகாப்பு தாறோம். உங்களுக்கு வேலை தாறோம். உங்களுடைய வாழ்க்கைக் கெல்லாம் நாங்க ஏதாவது வசதி பண்றோம்னு சொல்லி, பழங்குடி மக்களுடைய நிலத்தில் தொழிற் சாலை கட்டினான் பால்கோ கம்பெனி. இப்ப அதைக் கொண்டுபோய் ஸ்டெரலைட் கம்பெனிகிட்ட விக்கிற பொழுது நிலத்துக்கு சொந்தக்காரன் (பழங்குடி) அப்புறப்படுத்தப்படுறான். இப்ப அந்த மினிஸ்டர், சட்டிஸ்கார் மாநில முதல்வர் என்ன சொல்லியிருக் கார்ன்னா (ம.பி.யில் இருந்து பிரிந்ததே சட்டிஸ்கர் மாநிலம்) இது பழங்குடி மக்களோட நிலத்தில் இருக் கும் தொழிற்சாலை, இதை யாரைக் கேட்டு விற்றாய், வித்தது தப்புன்னு சொல்லி போராடிக்கிட்டிருக்கான்.

இந்த மாதிரி பழங்குடி மக்கள் எல்லாரும் இன்று அவர்கள் வாழும் பிரதேசத்தில் இருந்து எல்லாம் அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வர்கள் மட்டுமல்ல, மீனவர்கள், மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்கள் எல்லாருமே வாழ்க்கையில் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டு, அந்நியப்படுத்தப்பட்டு இருக் கிறார்கள்.

அடிமட்டத்தில் இருக்கிற இந்த மக்கள் இன்று உலகமயமாதலால் பாதிக்கப்படுறாங்க. இடஒதுக் கீடுங்கிற ஒரு விசயத்தை மட்டும் காட்டி அவர்களை நாம் அணி திரட்டுவதில் பல சிக்கல்கள் இருக்கு. ஆகவே, இட ஒதுக்கீட்டுக்கு அப்பால் இருக்கக்கூடிய ஜனநாயக சக்திகளையும், புரட்சிகர சக்திகளையும் நாம் திரட்டிப் போராட வேண்டும். இடஒதுக்கீட்டால் மட்டும் தீர்வாகக்கூடிய பிரச்சினையில்லை இது. ஏனெனில், இன்று கிராமப்புற தாழ்த்தப்பட்ட மக்கள் வேலை வாய்ப்பு மற்றும் கல்வி உரிமையில் நசிக்கப் படுகிறார்கள் என்பது எவ்வளவு உண்மையோ, அதை விடவும் உண்மை, அவர்கள் உயிர் வாழ்வதற்கே உறுதியில்லாத சூழ்நிலையை உலகமயமாதல் உரு வாக்கி இருக்கு என்பது. அப்படி வேணும்னா இட ஒதுக்கீட்டுக்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரச் சொல்லி போராடலாம். தனியார் துறையில் இல்லைன்னு சொன்னா, தனியார் துறையில் இடம் குடுக்காதே யாருக்கும்னு சொல்லாம். ஆனா, இன்று இதெல்லாம் செய்யாதேன்னு இந்த அரசுகிட்ட போயி சொன்னாலும் அது செவிடன் காதில் ஊதின சங்கா தான் இருக்கும். இந்த அரசாங்கமும் உலகமய மாதலை withdraw பண்ணப் போறதில்ல. நமது மண்ணையும் ஆற்றலையும் சுரண்டும் உரிமையை பன்னாட்டு கம்பெனிக்கு குடுக்காம இருக்கப் போவ தில்லை. அப்ப ஒரு மாற்றீடாக, இடஒதுக்கீட்டை சட்டத்தில் திருத்தம் கொண்டுவர சொன்னாகூட.

இடஒதுக்கீடு என்பது, அரசுத்துறையில் முதன்மை யாக அமுல்படுத்த கேட்டுப் போராடுவது ஒன்று. தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்த அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி போராடுவது இன்னொன்று. இவற்றுக்கு அப்பால், இடஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தும் வடிவங்களை மாற்றக்கோரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராடுவது மற்றொன்று - என்ற சூழல்கள் எல்லாம் வேலை வாய்ப்பு விரிவடைகிற சமூக இயக்கப் போக் கிலேயே சாத்தியம். இவையெல்லாம் தாழ்த்தப்படும் மக்கள் உயிரோடு இருப்பதற்கான உத்தரவாதமான சூழலில் போராடி பெறுகிற உரிமைகள். ஆனால், இன்று உலகமயமாதல் சூழல், கல்வி, வேலை உரிமை என்கிற களங்களை எல்லாம் தாண்டி உயிர் வாழ்வதற்கே உறுதியற்ற நெருக்கடிக்குள் தள்ளிக் கொண்டிருக்கிற வேறு வகையான சூழலில், இட ஒதுக்கீட்டு உரிமைகளோடு உலக மயமாதல் சூழ லால் உருவாகியுள்ள அபாயகரமான பலவகையான நெருக்கடிகளுக்கு எதிராகவும் ஜனநாயக சக்தி களையும் புரட்சிகர சக்தியையும் இணைத்துக் கொண்டு போராட வேண்டிய தேவையையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டியவர்களாக இருக்கி றோம்.

மேலும், உலகமயமாதல் சூழல் வேலைவாய்ப்பு களை சுருக்கி இடஒதுக்கீட்டையே கேலிக் கூத்தாக்கிக் கொண்டிருக்கிற நிலையையும் நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் பட்ஜெட்டெல் லாம் பார்த்திருக்கலாம் - ஆண்டுதோறும் வேலைக்கு ஆள் எடுப்பதை 2% குறைக்க வேண்டும். வீட்டுக்குப் போங்க என்கிறான். VRS கொண்டு வர்றோம் என்கி றார்கள். இப்படி பல்வேறு விசயங்களை கொண்டு வந்ததுக்கப்புறம், என்னதான் சட்டம் போட்டாலும் - சட்டியில் இருந்தாதானே அகப்பையில் வரும் - new recrutments இல்லைங்கிற பொழுது, தனியார் துறை யில் இடஒதுக்கீடுன்னு சட்டம் கொண்டு வந்துட்டா மட்டும் யாருக்காவது வேலை கிடைத்து விடுமா? அப்போ இந்த தனியார் மயம் - உலகமயமாதலுக் கெதிரான வீச்சான போராட்டத்தை முன்கை எடுக்கி றது ஒன்றுதான் சரியான விசயமாய் இருக்கும்.

அதில் உயிர் வாழ்வு மறுக்கப்பட்டவர்கள், தொழி லாளி வகுப்பு முதலாளி வகுப்புக்கு எதிராக திரண்டு சோசலிச புரட்சி பண்ணனும்னு சொன்னதுக்கு மாறாக - இன்று இங்கு தொழிலாளி வகுப்பாகவே யாரும் இல்லை. தொழில்துறையில், உற்பத்தித் துறையில், ஆலைத்துறையில் வேலை இல்லாம மறுக்கப்பட்டு தொழிலாளியா போறதுக்கே தகுதியற்ற நிலையில் - வாழுறதுக்கே உனக்கு உரிமை கிடை யாது என்று வெளித்தள்ளப்பட்டிருக்கிறார்கள். கஞ்சி குடிச்சிட்டு உயிர் வாழக்கூட உரிமை இல்லாத நிலை.

ஈரோடு கோவை பக்கமா பாத்தா, நச்சுக் காற்று கெமிக்கல் இண்டஸ்ட்ரீ, கடலூர் O.T.யில் இருந்து சிதம்பரம்வரை பார்த்தால் பஸ்களில் எல்லாம் போக முடியவில்லை. ஒரு பக்கம் உலகமயத்தின் பயனாக நமக்கு வேலை கிடைக்கவில்லை, சம்பளம் கிடைக்க வில்லை, கூலி உயர்வு கிடைக்கவில்லை என்பது மாத்திரம் அல்ல, நல்ல காற்றைக்கூட சுவாசிக்க நமக்கு வழியில்லை. சாப்பிடும் உணவில்கூட நம் உயிருக்கு உத்தரவாதமில்லை. நல்ல சம்பளம் கிடைத்து நல்ல மாதிரி சாப்பிட்டாலும் கெண்டகி சிக்கனும், பிராய்லரும் இவன் கறிக்கு வாங்குவான்- அதில் என்ன சத்து இருக்கு? நாட்டுக் கோழியில் கிடைக்கும் உடல் உறுதி, நலம் இதில் கிடைக்கப் போறதில்ல. காய்கறியில் bio-tech.

உலக மயமாதல் ஒரு முனையில், ஒரு சமூகத்தை மட்டும் தாக்கும் விசயமா இல்லை. எல்லாரையும் எல்லா முனைகளிலும் தாக்குகிறது. அதனுடைய வீச்சு என்னான்னு - இப்போ 2 வருசமா தேங்கா விவசாயி விலை கிடைக்கவில்லை என்று கூச்சல் போடுகிறான். தலித்துகள், கூலி வேலை செய்கிறவன், நிலமில்லா தவங்க வாழ்வுரிமை மறுக்கப்பட்டிருக்காங்க. ஆனா, உடைமை வர்க்கம் ஆகா ஓகோன்னு கோட்டை கட்டிக்கிட்டிருக்கு. தேங்காய் விவசாயி, பருத்தி விவசாயி, மஞ்சள் விவசாயி, வாழை விவசாயி, எண்ணைப் பனை விவசாயி, தேயிலை விவசாயி எல்லாரும் இன்னைக்கு தெருவில வந்து நிற்கிறான் - ஐயோ ஐயோன்னு அடிச்சிக்கறான். இது அத்த னைக்கும் காரணமா என்ன இருக்கின்னா, உலக மயமாதல் சூழல்தான்.

இப்ப பட்ஜெட்ல தேயிலைக்கும் தேங்காயெண் ணைக்கும் நாங்க இறக்குமதி வரியை கூட்டிட்டோம் அப்படின்னு சொல்றாங்க. வரியை கூட்டிட்டா இறக்கு மதி பண்ணுகிற வியாபாரி 2 ரூபா விலையை கூட்டி வைச்சி வித்துற போறான். அதனாலை இறக்குமதி நின்று போயிடாது. தேயிலை விளைய இந்த நாட்டில் நிறைய தோட்டங்கள் இருக்கு, நிலங்கள் இருக்கு. அதனாலை, வெளிநாட்டில் இருந்து தேயிலை வேண் டாம்னு சொல்ற அளவுக்கு இந்த அரசு தயாரா இருக்கா? அப்பதான் தேயிலைக்கு இங்கே மார்க்கட் கிடைக்கும்.

**காலக்குறி:**

இந்தியா ஒரு அரைநிலப்பிரபுத்துவ - அரைக் கால னித்துவ நாடுன்னு சொல்றோம். அதை ஒழிக்க முதலா ளியம் வந்தாகணும். ஏகாதிபத்தியம்கிறது முதலாளி யத்தின் உச்சபட்ச வளர்ச்சி. எனவே, நிலப்பிரபுத்து வத்தை ஒழித்துவிட்டுத்தான் ஏகாதிபத்தியம் - உலக மயம் தனக்கு லாபம் எடுக்க முடியும். எனவே, அரைக் காலனிய, அரைநிலப்பிரபுத்துவ ஒழிப்பு என்பது உலக மயமாதல் சூழலால்தான் சாத்தியம். எனவே, உலகமய மாதல் நல்லதுதானே என்று சில மார்க்சிய குழுக்கள் சொல்கின்றனவே இது சரிதானா?

**அரங்க குணசேகரன்:**

நிலப்பிரபுத்துவம் என அவர்கள் புரிந்துள்ளது பெருநிலவுடைமையாளர்களை ஒழித்துக் கட்டிவிட்டு அவர்களை சிறுநிலவுடைமையாளர்களாகவும் நிலத்தின்மீது, உற்பத்தியின்மீது பற்றற்றவர்களாகவும் ஆக்கிவிட்டு, தன் செல்வாக்கை முழுமையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செலுத்தி தொழில் முதலாளியத்தை வளர்த்து விடலாம். பின் அதிலிருந்து ஜனநாயக புரட்சி, சோசலிச புரட்சி வந்துவிடும் என்ற கருத்தில் இருந்து பார்க்கிறார்கள்.

நம் கருத்தில், நிலப்பிரபுத்துவம் என்பது எண்ணிக்கை அளவில் பிரபுக்கள் இருப்பதல்ல. ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கொண்ட பெருநிலப் பிரபுக்களை ஒழிப்பதை மட்டும் சொல்லலை. இங்குள்ள சமூகம் நீண்ட நெடுங்காலமாக குறிப்பிட்ட கட்டமைப்பில் இருக்கிறது.

காட்டாக, ஒன்று, எவ்வளவோ மாறுதல் வந்தும், சாதிரீதியாதான் இந்நாட்டு கிராமங்கள் அமைந்துள்ளன. திருமணங்கள், சடங்குகள் எல்லாமே சாதி அடிப்படையில்தான் இருக்கு. BCக்குள் கூட எல்லாருக்கும் ஒரே சடங்கு இருக்காது.

24 கார்காத்த வெள்ளாளன் ஒரு மாதிரி திருமணம் பண்ணுவான், கைக்கோள முதலியார் இன்னொரு மாதிரி திருமணம் பண்ணுவார். 10ம் நூற்றாண்டில் - ராசராசசோழனின் காலத்தில் - சாதி சட்டங்கள் உருவாக்கப்பட்டது. அதிலிருந்து இங்கு எல்லாமே சாதிரீதியாதான் இருக்கு. இது நிலப்பிரபுத்துவ காலக்கட்டமைப்பு.

சாதி அமைப்பு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவி வந்தாலும் தமிழகத்தைப் பொறுத்தவரை வலிமையாக்கப்பட்டது ராசராசனின் காலத்தில் இருந்துதான். அந்தக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட நீர்ப்பாய்ச்சல் முறைகள், கம்மாய் ஏரி குளங்கள், அதை ஒட்டி வயல்கள் உருவாக்கப்பட்டது. அந்த வயல்கள் யார் பொறுப்பில் இருப்பது? கோயில் பொறுப்பிலா, அறங்காவலர் பொறுப்பிலா, தனியார் பொறுப்பிலா? அதற்கு எப்படி பாசனம் கொண்டு போவது? என்று கட்டமைக்கப்பட்டன.

இந்தப் பலவித பொறுப்புகள் சாதிரீதியாகவே கட்டமைக்கப்பட்டன. இதில் யார் கூலிக்காரன், யார் விவசாயி, யார் குத்தகைக்காரன், யார் ஜமீன்தார், யார் கங்காணி வசூலிக்கிறது? என்கிற கட்டமைப்புகள் - அது அந்தந்த சாதிக்கான கட்டமைப்புகளாகத்தான் அன்று இருந்தது.

10ம் நூற்றாண்டில் போய், ஒரு பறையன் 50 ஏக்கருக்கு நான் குத்தகை தர்றேன், எனக்கு maintenance குடுன்னு கேட்கமுடியாது. பறையன்னா நீ பண்ணை அடிமைதான். உழுகலாம், பழைய சோறு சாப்பிடலாம், நீ போயி 10 ஏக்கர் குத்தகை எடுத்து விவசாயம் பண்ண முடியாது. இப்படிக் கட்டமைக்கப்பட்டுத்தான் குறிப்பிட்ட சாதிகளிடம் நிலம் போனது. அந்தக் கட்டமைப்பு என்பது சமூகத்தில் சில உறவுகளை உருவாக்குது. பண்ணையாருக்கும் பண்ணை அடிமைக்கும் இடையிலான உறவுகளை உருவாக்குது. அந்தப் பாய்ச்சல் நிலங்கள் - அந்தப் பாசன விபரங்கள் - வடிவங்கள் இதெல்லாம் சில உறவுகளை உருவாக்குது. அன்றைக்கு, ஒரு ஆசாரி விவசாய உற்பத்திக்கான கருவிகளை செய்து குடுக்கணும். அவ்வளவுதான். ஆசாரி போய் 50 ஏக்கர் வச்சி விவசாயம் பண்றேன்னு சொல்ல முடியாது. ஆசாரி ஊர்க்காரனுக்கு வண்டி அடிச்சிக் குடுக்கலாம், கலப்பை அடிச்சி குடுக்கலாம். அப்படியான விசயங்களில்தான் அந்த ஆசாரிக்கும் பிற சாதிக்குமான உறவு. ஏற்றத்தாழ்வான சிந்தனைப் போக்கு - பறையனுக்கும் வெள்ளாளனுக்குமிடையிலான சிந்தனைப் போக்கு. எப்படிப் பறையனைப் பார்ப்பது, நடத்துவது என்பதில் கட்டாயமாக்கப்பட்ட ஒரு கருத்தியல் இருக்கிறது இல்லையா?

இந்தக் கருத்தியல் இன்னும் முற்று முழுக்க நிலவிக் கொண்டிருக்கிற கிராமங்களில், குறிப்பாக, போலிஸ் ஸ்டேசனுக்கு போறபோது, ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பிரதிநிதி போனா அவனை உட்காரச் சொல்றதுமில்லை, இவனாக உட்காருவதற்குத் தெம்பும் இல்லை. ஒரு சில இடங்களில் உட்கார்ந்தாக்கூட, பேசும்போது SI நீ நானுன்னுதான் பேசறாங்க. இன்னொருத்தன் மூணு பைசாவுக்கு பெறாதவனாயிருப்பான், கரை வேட்டி கட்டியிருப்பான், முழு முட்டாளா இருப்பான், அவன் தி.மு.க.வாகவோ அ.தி.மு.க.வாகவோ இருந்தா, வரும்போது ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு வாங்க உட்காருங்கம்பான். அவன் பிறப்பு BCயா இருந்தா போதும். அ.தி.மு.க., தி.மு.க.வா இருந்தா போதும். M.A. படிச்சிருந்தாலும் ஒரு லீடரா இருந்தாலும் ஒரு பறையனா அல்லது பள்ளனா சுதந்திரத்தை அவன் அனுபவிக்கவே முடியாது. போலீஸ் ஸ்டேசன்லகூட சாதி அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும்தான் மரியாதை தீர்மானிக்கப்படுது.

சராசரி உறவுள்ள கிராமப்புறத்தில் பார்த்தீங்கன்னா, ஒரு வெள்ளாளர் பிரசிடண்ட் ஆகவோ அல்லது சாதாரண விவசாயியாகவோ இருப்பார். அந்த ஊருக்கு ஒரு செட்டியார் பையன் ஒரு வேலையா அவரை பாக்குறதுக்கு வருவாரு. 'வாங்க வாங்க செட்டியாரே'ன்னு அவருக்கு நாற்காலி எடுத்துப் போடுவாரு. அதே வெள்ளாளர் கிட்ட ஒரு பறையர் வந்தா, வாப்பா எப்பப்பா வந்த, நல்லாயிருக்கியாங்கிறாரு. 'வாடா'ன்னு சொல்லலியே தவிர, 'வாப்பா நல்லாயிருக்கியா'ம்பாரே தவிர, உக்கார சொல்றது அவர் வேலை கிடையாது. வாடாங்கிறதை வாப்பான்னு மாத்தினா ஒரு வெள்ளாளர் செட்டியாரை வாங்க வாங்க உக்காருங்கங்கிறார். ஆனா, அவர் நிக்க சொல்லி பேசிக்கிட்டிருக்கிற பறையரை விட செட்டியார் வீட்டுப் பையன் இளமையா இருப்பான். இந்த பறையர் 30-40 வயசான ஆளாக்கூட இருப்பார். அவனுக்கு குடுக்கிற மரியாதை வேறை. இவருக்கு குடுக்கிற மரியாதை வேறை. இதெல்லாம் நிலப்பிரபுத்துவ சாதி அதிகார சமூகத்தினுடைய உறவுகள். இந்த உறவுகள் இன்னும் தகர்க்கப்படலை, நிலவிக்கிட்டிருக்கு என்பதை வைத்துத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தான் நிலவுடைமையில் பல மாறுதல்கள் ஏற்பட்டு அரசு எடுத்தாலும் சரி, உற்பத்திக்காக பாகப்பிரி வினைகள் ஆனாலும் சரி, ரயத்வாரி, ஜமீன்தாரி இனாம் எஸ்டேட்டுகள் ஒழிக்கப்பட்டதற்குப் பிறகு பெருங்குடும்பங்களுக்கு இந்த பாகப்பிரிவினைகளின் அடிப்படையிலும், நிலங்கள் சிதைந்து போய் ஒரு ஏகமா, 1000 ஏக்கரா 500 ஏக்கரான்னு இருந்த தன்மை கள் மாறி இருப்பதால்தான் இதை அரைநிலப்பிரபுத் துவம் என்கிறோம்.

இப்படி சமூகத்தில் சிந்தனையில் நிலப்பிரபுத்துவம் பல கட்டமைப்புகளில் இருக்கு. உற்பத்தி வடிவத்தில் நிலங்கள் பிரிவினை ஆயிருக்கு. அதனால்தான் அரை நிலப்பிரபுத்துவம் என்கிறோம். இந்த ஒடுக்குமுறை முழுவதுமே முழு நிலப்பிரபுத்துவ கண்ணோட்டத்தில் இருக்கும் என்றும் சொல்ல முடியாது. பாரிய மாறுதல் கள், சிந்தனைகள். நகரத்தில் நாம், பல சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சந்திக்கிறோம், பேசுகிறோம், ஒரு கருத்தோட்டத்துக்கு வந்திருக்கிறோம். இந்தக் கருத்தோட்டங்களை அங்கீகரித்துக் கொள்கிற ஒரு தகுதியும் முதலாளியக் கல்வியும் வளர்ந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான், இதை அரைநிலப்பிரபுத்துவம் என்று சொல்கிறோம்.

இந்த அரைநிலப்பிரபுத்துவ சமூகம் என்பது முதலாளிய சமூகம் அல்ல, நிட்சயமாக. புதிய சனநாயகத்துக்கான சமூகமும் அல்ல. அரைநிலப் பிரபுத்துவ சமூகத்தைச் சேர்ந்த உற்பத்தியில் இருக் கிற உபரியை எடுக்கிறவன், தனக்கு வரும் இலா பத்தை தொழில் வணிகத்துறையில் முதலீடு செய்து அதிலிருந்து வரும் லாபத்தால் பலருக்கும் வேலை கிடைத்து அவர் வாழ்க்கை நடத்தும்போதுதான், முதலாளி தொழிலாளி உடன்பாட்டில்தான் ஒரு மாறுத லுக்கான சமூகச் சிந்தனை என்கிறது வரமுடியும்.

அரைநிலப்பிரபுத்துவத்தில் இருக்கும் நிலப் பிரபுத்துவ (இந்துத்துவா) சிந்தனைகள் - சக்திகளோ டும் நிலப்பிரபுக்களோடும் கூட்டுச் சேர்ந்து கொண்டு தான் அந்நிய முதலாளி அப்பட்டமாக கொள்ளை யடிக்க வருகிறான். இந்த நாட்டை வளப்படுத்தி முதலாளித்துவத்தை வளர்ப்பதற்காக வரவில்லை.

இந்த நாட்டு இளைஞர்களெல்லாம் வெளிநாட் டுக்குப் போயிட்டிருக்கான். அங்கை உள்ளவன் இங்கை முதலீடு போட வாறான். எப்பவுமே வெளி நாட்டுக்காரன் இங்கை வந்து முதலீடு போடுவது, இந்த நாட்டை வளப்படுத்த அல்ல. இலாபமில்லாமல் இங்கு வந்து ஏன் ஆயிரம் கோடி முதலீடு போடு கிறான். வளர்க்கவே வருகிறான் என்பது ஒரு மோச மான எதிர்பார்ப்பு, மோசமான சிந்தனை. அவன் போட்டிருக்கிற மூலதனம் எல்லாம் நம்மிடம் இல்லாத தொழில் துறைகளில் போட்டிருந்தால் ஒருவேளை நல்லதாகச் சொல்லலாம்.

கண்டலா, தூத்துக்குடி, இரண்டு துறைமுகத் திலும் 740 பொருட்களை இறக்குமதி செய்ய முரசொலி மாறன் அனுமதி கொடுத்துள்ளார். அதில் விளக்குமாறும் உள்ளது. ஆபரண, ஆடம்பர, நவீன பொருட்கள், பால், முட்டை, இறைச்சி.

கிராமப்புற இளைஞனுக்கு பால் மாட்டுக்கு லோன் குடுத்திட்டு பாலை இறக்குமதி செய்கிறான். அவனுக்குக் குடுத்திருக்கிற கடனுக்கு பாலுற்பத்தி செலவு லீட்டர் 18 ரூபா வரும். 18 ரூபாக்குக் கொடுத்தாதான் லாபம். லீட்டர் 12 ரூபாக்கு விற்கும் பாலை இறக்குமதி செய்ய முதலாளிக்கு அனுமதி தந்தால் பால்பண்ணை என்னாகும். நாட்டுக்கோழி எல்லாம் இப்ப அழிஞ்சு போச்சு. முன்பெல்லாம் விவசாயி வீட்டில் இருந்து சந்தைக்கு நாட்டுக்கோழி போகும். இப்போ விவசாயி சந்தையில் இருந்து பிராய்லர் கோழி வாங்கி வரவேண்டி இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் டங்கல் திட்டம்தான்.

டங்கல் திட்டத்தின் ஒரு சாராம்சம் என்னன்னா, நாங்கள் பல துறைகளிலும், உன் தொழில் வளர்ச் சிக்கு உதவி செய்யணும்னா, ஒவ்வோர் பத்தாண்டி லும் உங்களின் விவசாய உற்பத்தி சார்ந்த பொருள் உற்பத்தியை 20% குறைத்துக் கொள்ள வேண்டும் என்பது நிபந்தனை. நாட்டின் எல்லா விவசாய உற்பத் தியையும் குறைத்துவிட்டு அவர்களுடைய நாட்டுக்கு வேண்டிய வாழை, மஞ்சள், கரும்பு, பருத்தி ஆகிய பணப்பயிர் மட்டும் உற்பத்தி செய் என்கிறான். நெல், கோதுமை இரண்டையும் காலி பண்ணினாத்தான் - இந்தியா தன்னைச் சார்ந்து நிற்கும். இந்தத் திட்டத் தோடுதான் வேளாண்மை உற்பத்தியில் கை வைத் தான்.

சோத்துக்கே இல்லாத சமுதாயம் எப்படி முதலாளித்துவமா வளர்ந்து சோசலிசத்திற்கு போய்ச் சேரும்கிறது ஒரு கேள்வி. இரண்டாவது, இந்தச் சமூகத்தில் உலகமயம் என்ற இந்தப் போக்கைத் தொடர்ந்து வரும்போது மிகமோசமான நெருக்கடிக்கு உள்ளாகக்கூடிய மக்களாக யார் இருப்பார்களோ அவர்கள், அவங்க மாடல்ல பதப்படுத்திய உணவை வாங்கிச் சாப்பிட முடியுமா? 3000 ரூபா கொடுத்தால் ஒரு பொண்ணுக்கு gas கொடுத்து (கட்டமுடியுமா என்பது வேறு) 3000 ரூபா இல்லாவிட்டாலும் நாங்க கட்டுறம் போட்டோ குடுங்கண்ணு ஓட்டு வாங்குவ தற்காக, கடனுக்கு கிராமம் கிராமமா gas அடுப்பு குடுக்கிறான் ஊர்ஊரா. விறகு உற்பத்தி இங்கு பஞ்சமா ஏழைக்கு, அரிசியே வாங்க முடியாத வனுக்கு, தாழ்த்தப்பட்டவனுக்கு gas அடுப்பு எந்த அளவுக்கு சாத்தியம்? 95-96இல் பக்ரைனோடு ஒப்பந்தம் செய்தனர். அதன்படி வருங்காலத்தில் வீட்டில் சோறு ஆக்கிக் கொண்டிருக்கத் தேவை யில்லை. செயற்கையான fast foodதான் இருக்கும் - பதப்படுத்தப்பட்ட உணவுதான் இருக்கும். சில நாட்கள் கெடாமல் இருக்கும். சர்வதேச அளவில், ஒரு சில நாட்களுக்கு தேக்கி வைத்து விற்கக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தைக்கான விசயமாக உணவுமுறையை உரு வாக்கி விட்டால், உழவுத்தொழிலில் யார் ஈடுபடுவார் கள். எனவே, அவர்களுடைய சந்தைக் கண்ணோட்டத் தில்தான் நம் வேளாண்மையைக் குறைக்கப் பார்க்கி றார்களே தவிர, புரட்சிக்கோ சோசலிசத்திற்கோ அல்ல. நம் நாட்டில் புரட்சியை நடத்த ஏகாதிபத்தி யத்திற்கு அவசியம் கிடையாது. ஆசையும் கிடையாது. இதை மார்க்சியத்தின் பெயரால் எந்தக் குழு சொன் னாலும் அது தவறான பார்வையே.

**காலக்குறி:**

உலகமயம் வந்தாலே நிலப்பிரபுத்துவத்தை யாரும் ஒழிக்க வேண்டியதில்லை, தானாக ஒழித்து விடுவான், ஏனெனில் அதற்குத் தேவையில்லை என்கிறார்களே?

**அரங்க குணசேகரன்:**

நிலப்பிரபுத்துவம் ஒழியாதுங்க. உலகமயம் வருவதனால் சாதியம் ஒழிஞ்சிடுமா? கிராமக் கட்டமைப்பு ஒழிஞ்சிடுமா?

நிலப்பிரபுத்துவப் பண்ணை முறை ஆள் இல்லாமலிருக்கலாம். ஆனால், நிலப்பிரபுத்துவ உறவுகள் நீடிக்கும். நிலங்களை அவன் பண்ணை விவசாய முறைக்கு கொண்டு வந்து விடுவான். அதில் அந்நிய நாட்டின் ஆதிக்கம்தானே இருக்கும். நிலப்பிரபுத்துவத்தை - அதன் உற்பத்தி உறவுகளை ஒழிக்க வேண்டும் என்பது அந்நியனுக்குத் தேவையில்லை. எனவே, அதற்கான சனநாயகத்திற்கான போராட்டங்களை இந்த நாட்டு மக்கள்தான் எடுக்க முடியுமே/ வேண்டுமே தவிர, அவர்கள் ஒன்றும் எடுக்க மாட்டார்கள்.

**காலக்குறி:**

'தலித் விடுதலைக்கு சாதிகளின் இணக்கம்' என்று ராமதாசு ஒரு யோசனை தெரிவித்துள்ளார். யதார்த் தத்தில் இது சாத்தியமா?

**அரங்க குணசேகரன்:**

சாதிகளிடையே இணக்கம் என்பது வேறு. சாதி ஒழிப்பு என்பது வேறு.

வலுத்தவனும் வலுக் குறைந்தவனும் இணக்கமாக இருப்பது என்பதில் வலுக்குறைந்தவன் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை கண்டு கொள்ளாமலோ அட்ஜஸ்ட் பண்ணிக்கொண்டோ போகக்கூடிய சூழலில்தான் சாதிகளிடையே இணக்கம் என்பது சரியாக இருக்கும். அப்படியொரு இணக்கம் தாழ்த்தப் பட்டவனுக்கு எந்த வகையிலும் நன்மை தராது.

ஆகவே, சாதிய ஒழிப்புக்கான அல்லது ஒரு சாதிக்குள்ள உரிமை இன்னொரு சாதிக்கு மறுக்கப் படுவதற்கு எதிரான சனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் எடுக்கனும். இந்த மொத்த சமூக சுதந்திரத்துக்கும் சனநாயகத் துக்கும் விடுதலைக்கும் எதிராய் இருக்கக்கூடிய ஒரு உடைமை வர்க்கக் கண்ணோட்டத்தை உடைத்தெறிவதில் தாழ்த்தப்பட்டோர் அல்லாத சக்திகளிடையே, பெருந்திரளான இளைஞர்களிடையே சனநாயகத்தை அங்கீகரிக்கிற, சனநாயகம் மறுக்கப்பட்ட முளைப் பதிவுகளால் தன்னையும் முடமாக்கிக் கொண்டிருக்கிற போக்குகளில் இருந்து தன்னைத்தானே அவர்கள் விடுவித்துக் கொள்ளனும். இதைத் தான் மார்க்ஸ்




ஒடுக்கப்பட்டவர்கள் அல்லது பாட்டாளி வர்க்கம் தன்னைத்தானே விடுவித்துக கொள்ளனும் என்று சொன்னார்.

இங்கு சாதிகளே வர்க்கங்களாக இருக்கிற சூழ் நிலையில், பிற்படுத்தப்பட்ட சாதிகளில் இருக்கிற வர்கள் அல்லது தாழ்த்தப்பட்டோர் அல்லாத எந்த சாதியினரும் தாங்கள் மேல்சாதிக்காரர் - பிறப்பால் உயர்ந்தவர்கள் என்ற குருட்டுத்தனமான, கருத்து ரீதியாக அடிமைப்படுத்தி வைக்கிற சிந்தனைப் போக் குகளில் இருந்து அவர்கள் விடுபடனும். அதற்கான கருத்தோட்டங்களையும் நாம வைக்கனும். தாழ்த்தப் பட்டவர்கள் தங்களுக்கு மறுக்கப்பட்ட சனநாயக உரிமைகளைப் பெறுவதில் கறாராக எந்தவித சமரசத் துக்கும் இடமில்லாமல் போராடனும். இந்தப் போராட்டம் சாதி ஒழிப்பை நோக்கியதாக, சாதி ஒழிப்புக்குக் காரணியாக இருக்கக்கூடிய ஒடுக்கப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஏனைய சாதிகளில் இருக்கக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடிய சனநாயக சக்திகளோடு ஒன்றிணையக் கூடிய கண்ணிகளை நோக்கி இருக்கணுமே தவிர, பாரதூர - திட்டமிட்ட சாதிப் பகையில் சமூகத்துடன் இணங்கிப் போவதற்கு - ஐக்கியப்பட்டு வாழ்வதற்கு எதிரான திசைவழியில் போகக்கூடாது. இதற்கு அடிப்படையில் ஒரு மார்க்சியப் பார்வை இருந்தாலொழிய அந்த இயக்கங்களை இப்படி இட்டுச்செல்ல முடியாது.

**காலக்குறி:**

ஒருங்கிணைக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் அமைப்பை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

அதன் நோக்கம் சாதி ஒழிப்பா அல்லது தலித் விடுதலையா?

**அரங்க குணசேகரன்:**

தலித் விடுதலை என்பதன் மறுதலை சாதி ஒழிப்புத்தான். சாதி ஒழிப்பின் மறுதலை தலித் விடுதலைதான். இதில் பெரிய வேறுபாடு இருப்பதாக நாங்கள் கருதவில்லை.

ஏன்னா சாதி ஒழிப்பு என்பது ஒரு நீண்ட நெடிய போராட்டத்தின் விளைபொருளாகக் கண்டெடுக்கப்பட வேண்டிய ஒரு விசயம். நாம் விரும்புகிற ஒரு சோசலிச சமுதாயத்தை - சமத்துவ சமுதாயத்தை காணுவதற்கான போராட்ட இலக்கில் தான் சாதி ஒழிப்புங்கிறதை அடைய முடியும். அதற்கிடையில் சாதியை ஒழித்துவிட முடியாது. இடைக்காலத்தில் சாதி ஒழிப்பிற்கான போராட்டம் - சனநாயக உரிமைகளிற்கான போராட்டமாக மாறும். சனநாயக உரிமைகளிற்கான போராட்டத்தை அது மறுக்கப்பட்டவர்கள்தான் அதற்காகப் போராட முடியும்.

மறுக்கப்படுகிற வர்க்கங்கள் மறுத்துக் கொண்டிருக்கிற வர்க்கங்களுடன் இணைகிற ஒரு அரசியல் இலக்கை நோக்கிப் போகிற திசைவழியில் சாதி ஒழிப்பு என்பது ஒரு இலக்கு, சோசலிசம் என்பதும் ஒரு இலக்கு. புதிய ஜனநாயகப் புரட்சி என்பதும் இலக்கு. இதை ஒரு மார்க்சிய மொழியில் 'பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ்' என்று மட்டும் சுட்டுவது எதிர்ப்புரட்சி சக்திகள் இலாபகரமாக இந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சியில், புதிய சனநாயகப் புரட்சியில் உள் நுழைந்து, சீர்குலைத்து விடாமல் தடுப்பதற்கான ஒரு எச்சரிக்கையாகத்தான், நாங்க தலித் தலைமையை வைச்சிருக்கிறோமே தவிர, தலித் விடுதலை மட்டும் இதன் உள்ளீடு அல்ல.

தலித் விடுதலை - தலித் தலைமை என்பது தலித் மக்களுக்கு தலித்துக்கள் தலைமை தாங்குவது என்ற பொருளில் அல்ல. தலித் தலைமை என்பதும் தலித் விடுதலை என்பதும் இந்த சமூகத்தை விடுவிக்கின்ற - மாற்றியமைக்கின்ற மிகப் பெரிய போராட்டத்தில் இணைந்திருக்கிற விசயமாகத்தான் நான் பார்க்கிறேன். தலித் தலைமையின் மூலமாகத்தான் இந்த நாட்டில் எந்த மாற்றத்தையும் உருவாக்க முடியும். அண்மையில் TNML கட்சியினர் கேட்டார்கள், தலித் தலைமைக்கு என்ன உற்பத்தி வடிவம் இருக்கிறது? நிலப்பிரபுத்துவம் - முதலாளித்துவம் - ஏகாதிபத்தியம், இவற்றிற்கெல்லாம் ஒரு உற்பத்தி வடிவம் இருக்கிறது, தலித் தலைமைக்கு?

தலித் தலைமை என்பதை ஒரு சாதிபோல் புரிந்து கொண்டு, சாதி உற்பத்தியை நாங்கள் கட்டிக் காப்பாத்தப் போற மாதிரி நீங்க நினைத்துக்கொண்டு கேட்கிறீர்கள்? தலித்துக்கள் முதலாளி வர்க்கம் அல்ல, முதலாளியத்தை கட்டிக் காப்பாற்ற. நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக உழைக்கும் மக்களுக்கான உற்பத்திமுறைதான், உற்பத்தி வடிவம்தான் - அந்த வர்க்கத்திற்கான தலைமைதான் தலித்.

ஏன் தலித் தலைமைன்னு சொல்றோம்னா, இந்த நாட்டில் வர்க்கங்கள் மதம், சாதி அடிப்படையில் தான் நீண்ட காலமா பாதுகாக்கப்பட்டு வந்து கிட்டிருக்கு. ஐரோப்பா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் சாதி இந்தளவு கூர்மையாக இல்லை. சின்னச் சின்னத் தொழில் குலங்கள் இருந்திருக்கு. அதற்கு இந்துத்துவா போன்ற ஏற்றி வைக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்கள், ஒழுகலாறுகள் எல்லாம் கிடையாது. பிறப்பினாலேயே இங்கு சாதி தீர்மானிக்கப்பட்டிருக்கு. அங்கு தொழில் துறைகள் மாறும்போது சாதியும் மாறிட்டுது. இங்கே ஒருவன் எவ்வளவு வளர்ந்தாலும் சாதி மாறுவதில்லை.

குறிப்பா, ஜெகஜீவன்ராம் ஒரு உதாரணம். 1933 இலேயே B.Sc. Hons படித்தவர். துணை PM ஆக இருந்தவர். அவர் திறந்து வைத்த சிலையைக் கழுவி தீட்டுக் கழித்தார்கள். உ.பி. யில் ஒரு தலித் நீதிபதி இருந்த நாற்காலியைக் கழுவிவிட்டு அடுத்து வந்த பார்ப்பன நீதிபதி அமர்கிறார். எனவே, தலித் தலைமைன்னு ஏன் சொல்றோம்னா பாட்டாளி வர்க்கத் தலைமை என்கிற பேர்ல எதிர்ப்புரட்சி சக்திகள் இந்த அரசியலில் வந்து உட்கார்ந்து சீரழிப்பதற்கான போக்குகள் - வாய்ப்புகள் இருக்கு.

கடந்த கால கம்யூனிஸ்ட் கட்சிகளின் வரலாறுகளைப் பார்த்தீர்கள் என்றால் - டாங்கே காலம் முதல் வினோத் மிஸ்ரா காலம் வரை - இந்த ML அரசியல் என்பது பார்ப்பனிய சக்திகளால் கால வளர்ச்சியில் சிதைக்கப்பட்டிருக்கு. அது அவர்கள் தாம் பார்ப்பனர்களாக இருக்கிறோம், சிதைக்கிறோம் என்பதற்காக திட்டமிட்டு சிதைக்கவில்லை. மாறாக, அவர்கள் அந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்பதால் அந்த நெருக்கடி - வலி - அப்புண்ணு அவங்களுக்குத் தெரியல்லை. தாம் செய்வது சரிதான் என்றே அவர்கள் நினைத்தார்கள்.

பறையனாக இருந்து பார்க்கிறதுக்கும் பறையனைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்வதற்கும் வேறுபாடுள்ளது. வர்க்கப் புரட்சி என்ற பேரிலும் தலித்துக்கள் பாட்டாளி வர்க்கத்தினுடைய தலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைக்கு வரலாம். ஆனால், அதற்கான சாத்தியம் குறைவு.

பெரும்பான்மை சிறுபான்மையில், சிறுபான்மைச் சமுதாயத்தின் குரல், அவர்கள் எவ்வளவு ஆற்றல் படைத்தவர்களாயினும் சனநாயக மத்தியத்துவம் என்கிற பெயரில் நசுக்கப்பட்டுள்ளது. ஆனால், தலித் தலைமை என்றால் பிறப்பால் தலித்தாயிருந்து இந்தப் பாட்டாளி வர்க்க தத்துவத்திற்கு - சிந்தனைப் போக்குக்கு இருக்கக்கூடிய உரைகல். யாரெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்களோ - குறிப்பாக, முதல்ல ஒரு பறையனைத் தலைவராக ஒத்துக்கக்கூடிய பக்குவம் வரணும்.

இந்த நாட்டிலை எல்லாரும் தலைவரா இருந்திருக்கிறாங்க. ஆனா ஒரு தாழ்த்தப்பட்டவரின் தலைமையின் கீழ் தானியங்குவது என்பதை ஏற்றுக் கொள்வதே சாதி ஒழிய முதல்படி பரிசோதனை. அதுக்கு இந்த நாட்டில் எத்தினை பேர் தயார்?

வருகிற சமுதாயத்தில் எங்க தலைவர் அரங்க குணசேகரன்னு ஒரு வெள்ளாளர், கள்ளர், முதலியார், ஐயர் சொல்ல பக்குவம் இருக்கா? அத்தகைய வரலாறு இந்த நாட்டிலை இருக்கா? அந்த அடிப்படை இருந்தா, அதுவே சனநாயகத்தை அங்கீகரிக்கிற ஆள் என்பதற்கான அளவுகோல்ன்னு பார்ப்போமே தவிர, மற்றப்படி ஒரு மார்க்சியக் கண்ணோட்டத்துக்கு எதிரானதா நாங்க வைக்கலை.

சாதி மறுப்புங்கிறதுதான் தலித்துங்கிறது - சாதி மறுப்பாளர்கள், சனநாயகத்தைக் கோரி நிற்பவர்கள். அதற்கான போராட்டத்தை முன்னெடுப்பவர்கள்தான் தலித். அந்த சித்தாந்தத்தின் அடிப்படையில்தான் தலித் தலைமைன்னு வைச்சிருக்கிறோமே தவிர, ஒரு ஆயிரம் தலித்துகளைத் திரட்டி வைச்சுக்கிட்டு நான் தலித் தலைவரா இருக்கிறேன்னா இளைய பெருமாள் தலித் தலைவர்தான். ஜெகஜீவன்ராமும் தலித் தலைவரா இருந்தார். இப்ப கே. ஆர். நாராயணனும் தலித் தலைவர்தான். ஆனா, எந்த லட்சியத்திலை எந்த வர்க்கத்துக்காக தலைவரா வச்சிருக்கோம் நாராயணனை? நாம அடிபடும்போது இப்படிப்பட்ட கொடுமை நடக்குதுன்னு ஒப்பாரி வைக்கிறத்துக்காக, பாருங்க உங்க ஆளையே ஒப்பாரி வைக்க வைச்சிருக்கிறோம். உங்களுக்காக சனாதிபதியே பேச ஆரம்பிச்சிருக்காருன்னு சொல்வதற்கான ஒரு வழியாத்தான் அதை வைச்சிருக்காங்க. ஆனா, உண்மையிலேயே இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் சாதிரீதியா மட்டும் ஒடுக்கப்பட்டிருக்கலை. அவங்களோட பொருளாதார நிலை, வாழ்நிலை சமுதாயத் தட்டுத்தான் காரணம். எனவே, வர்க்கப் போராட்டம் இல்லாமல் ஒரு தலித் விடுதலையையோ, சாதி ஒழிப்பையோ, ஒரு சனநாயக புரட்சியையோ நாம் கற்பனை செய்யலை. இப்படித்தான் தலித் தலைமை - தலித் விடுதலை என்பதை நாம் பார்க்கிறோம். தலித்துக்கள் ஒரு தீவில் தனியா வாழலை. இந்த சமுதாயத்தில்தான் வாழ்றாங்க. இந்த விடுதலை தலித் அல்லாத ஒடுக்கப்பட்ட வர்க்க மக்களுக்கும் சேர்த்துத்தான். சுதந்திரத்தையும் சனநாயகத்தையும் இணைத்துக் கொண்ட விசயம்தான்.

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்காக சமரசமற்ற சனநாயகப் போராட்டம் நடத்தணும். தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத சாதிகளில் பிறப்பால் கிடைத்திருக்கிற மரியாதை, அகந்தை என்கிற கருத்துக் குருட்டுத் தனத்தில் இருந்து விடுபட்டு, நாம் மேல்சாதி என்று சொல்வதே இந்த சமூகத்திற்குக் கேடான ஒரு கருத்து, அது நம்ம கிட்ட இருக்கு என்கிறதில இருந்து முதல்ல விடுபடணும். பொருளாதார வர்க்க நிலையால் தான் சொத்துடைமையாளாய் இருந்தாலும் கூலியாளாய் இருந்தாலும், அந்தந்த வர்க்க நலனுக்காக உழைச்சாலும், பொதுவாக, தான் ஒரு அந்தஸ்துள்ள சாதி என்ற கருத்துப் பதிவிலிருந்து விடுபடணும். அதற்கான அடையாளம் என்னண்ணா மொத்த இந்தியத் தமிழ் சமூகத்தின் சுதந்திரம் சனநாயகத்துக்காக தயாராயிருந்தால் ஒரு தாழ்த்தப் பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளாவிட்டாலும் தாழ்த்தப்பட்டவனை அரசியலில் தலைவரா ஏத்துக்கணும்.

**காலக்குறி:**

அப்படீன்னா பாட்டாளி வர்க்கத் தலைமை வேண்டாம்கிறீங்களா?

பாட்டாளி வர்க்கத் தலைமைக்கும் தலித் தலைமைக்கும் என்ன வேறுபாடு?

சிக்கல் எங்கை வருகுது?

**அரங்க குணசேகரன்:**

இன்று பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு பாட்டாளி வர்க்கப் புரட்சி நடக்கவில்லை. சனநாயகப் புரட்சிதான். சனநாயகப் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கத் தத்துவம் தலைமை தாங்கணும். சனநாயகப் புரட்சியில் பல்வேறு வர்க்கங்கள் வரும். அடுத்து சோசலிசப் புரட்சிக்கும் சனநாயகப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்க தத்துவம்தான் நிலை களன்.

ஆனால், சனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே அதிகாரத்துக்கு வருவதல்ல. சனநாயக ரீதியாக, பல்வேறு வர்க்கங்களுக்கும் பல்வேறு கோணங்களில் சனநாயகம் இங்கே மறுக்கப்படுகிறது. தொழிற்துறையில், மனித உரிமையில், சாதியில், வழிபாட்டில் சனநாயகம் மறுக்கப்பட்டவர்கள். சிறு விவசாயிக்கும் பணக்கார விவசாயிக்கும் இடையேயான முரண்பாடு - இப்படி பலதரப்பட்ட சனநாயகம் மறுக்கப்பட்டோர் இங்கு ஒரு தரப்பில் இல்லை. இப்படி பலதரப்பட்ட சனநாயகம் மறுக்கப்பட்ட வர்களும் சனநாயகப் புரட்சிக்காக அணிதிரளுகிற பொழுது, அதற்குள் ஏற்றத் தாழ்வான வர்க்கங்கள், வர்க்கக் குணாம்சங்கள் இருக்கும். அவை, சனநாய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உலகமயமாக்கலால் தலித் மக்களுக்கு வேலை கிடைக்கும் என்று கெயில் ஓம்வெத் கூறுகிறார். விடுதலை கிடைக்கும் என்று கூறவில்லை. இவரது கருத்துக்களையே அ. மார்க்ஸ் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தலித் இயக்கங்களும் உலகமயமாதலும் — இதில் கடந்த 90களின் பத்தாண்டுகள் முழுமையும் தலித் இயக்கங்களால் உலகமயமாதலை எதிர்கொண்டு வெற்றிகொள்ள முடியாது என்ற போக்குத்தான் நிதர்சனமான உண்மையாக — வெளிப்பாடாக உள்ளது.**



*கப் புரட்சி என்கிற நீரோட்டத்தில் எதிர்ப் புரட்சி சக்திகளும் தலைமை எடுத்து வருகிற பொழுது....*

*இன்றைய சமூகக் கட்டமைப்பு தாழ்த்தப்பட்டோரா கவும் பிற்படுத்தப்பட்டோராகவும் இருக்கு. தாழ்த்தப் பட்டோர் மிகச் சிறுபான்மையினராக அரசியல் தளத் துக்கு வர்றாங்க. பிற்படுத்தப்பட்டோர் பெரும்பான்மை யாக இருக்காங்க. அவங்கள்ல இருந்து வருவோரின் விகிதம் எப்போதும் ஒரே அளவில்தான் இருக்கு. அப்போ கட்சி - அமைப்பு குழுக்களில் தலைமைக் கொள்கைகளை - போராட்டங்களைத் தீர்மானிப்பதில் பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோருடைய சமூகத் திரட்சியினுடைய சனநாயக சக்திகளுடைய கருத்துக் கோப்புத்தான் மேலோங்கி நிற்கும். பெரும்பான் மைக்கு சிறுபான்மை கட்டுப்படணும்கிற விதியின் அடிப்படையில், எப்பொழுதுமே பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோரல்லாத சனநாயக சக்திகளின் குரல் தான் ஓங்கி நிற்கும். அந்தத் தலைமை பாட்டாளி வர்க்கத் தத்துவ உரைகளில் இருந்து எடுக்கப்பட் டாலும் அதற்குள் எதிர்ப்புரட்சி சக்திகள் தலைமைக்கு வந்து சீரழிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கு. கடந்த காலத்தில் நடந்திருக்கு. ஆனால், தலித் தலைமைன்னு சொல்லும்போது பாட்டாளி வர்க்க அரசியலை உட்கிரகித்துக் கொண்டு சரியா இருக்கிற சக்திகள்தான் வர வாய்ப்புள்ளது. ஏன்னா இவன் குறைந்த பட்சம் தன் சமூக நலனைப் பின்னுக்குத் தள்ளி அதற்குள் இருக்கும் புரட்சியாளர்களை ஆதரிக்க மாட்டான். தாழ்த்தப்பட்டோர் வஞ்சிக்கப் படக்கூடாது....*

**காலக்குறி:**

தலைமைக்கு தாழ்த்தப்பட்டோர் வந்தாலும், வேறு யார் வந்தாலும் - புரட்சி என்ன புரட்சி என்றாலும், தலைமை தாங்கத் தகுதி படைத்தது தொழிலாளி வர்க்கம்தான். இங்கே இருக்கிற நிலப்பிரபுத்துவத்தில் இருக்கிற தொழிலாளி வர்க்கம் புரட்சி நடத்த தகுதி இல்லாம இருக்கு?

**அரங்க குணசேகரன்:**

*அப்படி இல்லை. ஏற்கனவே நாம் பார்த்திருக்கிற வடிவத்திலேயே புரட்சி வராது. ருசியா போலவோ சீனா போலவோ இங்கே புரட்சி வராது. இங்கே பிறப்பே ஒரு மனிதனுடைய தகுதியைத் தீர்மானிப் பதால் பிறப்புத் தகுதியை உடைத்தெறியும் வடிவத்தில் தான் இங்கு புரட்சி வரணும்.*

**காலக்குறி:**

அப்படிப் பார்த்தா ஒடுக்கப்படும் வர்க்கத்தில் இருந்து, கொஞ்சம் elite, வந்தவன் நீங்க எதிர்பார்க்கிற படித்த தொழிலாளி வர்க்கம் சமரசப் போக்கை நிலைநாட்டி தலைமையைத் தக்க வைச்சிருக்கிறத்துக்கும் மாத்திக் கிறத்துக்கும் வாய்ப்பு இருக்கிறதனாலே தலித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைக் கொண்டு வரணும்கிறீங்க. ஆனா ஏன் தலித்தே வந்தாலும் அந்த நிலைமைக்குப் போகாது?

**அரங்க குணசேகரன்:**

போகாது. இதற்கு உரைகல் பாட்டாளிவர்க்கத் தத்துவம்னு சொன்னாலும் தலித் தலைமைன்னு சொன்னாலும் தனிநபர் தலைமை அல்ல. ஒரு அரசியல் விடுதலைக்கான தலைமை.

அந்த அரசியல் விடுதலைக்கான போரில் தலித்தின் நிலை என்பதை முன்வைக்கிறேமேயொழிய மொத்தத்தில் ஒரு விவாதத்தில்தான் ஒரு கட்சியின் கொள்கைகள், திட்டங்கள் முடிவு செய்யப்படும். ஒரு சிறப்பான தலித்தாக இருக்கிறவரை, தலைமையில் தீர்மானகரமான இடத்திற்கு அங்கீகரித்ததை நாங்க பார்க்கலை. எங்க கடந்த கால அனுபவம் இது.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, தாழ்த்தப்பட்டோரல்லாதவர்கள் இந்த நாட்டை ஆண்டதிலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி கடந்த 50 ஆண்டுகளாகவும் சரி தலைமை தாங்கி, அவர்கள் எந்த ஒரு மாற்றத்தையும் செய்ய முடியலை. சாதி அடிப்படையிலான உறவுகளை உடைக்க முடியாம, கம்யூனிஸ்ட் கட்சிகளே, திராவிட இயக்கங்களே, தமக்குள்ளேயே சாதிய உறவுகளில் எந்தத் தகர்ப்பையும் செய்யலேங்கிற விசயத்தில் இருந்துதான் பார்க்கிறோம்.

இவ்வளவு காலமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்கள் இந்த நாட்டுக்கு தலைமை எடுத்த பொழுது இதை யாரும் கேட்கலை. பாட்டாளி வர்க்கத் தலைமை என்று சொன்னபோது இதை யாரும் கேள்வி கேட்கலை அல்லது எந்த ஒரு தலைமைபற்றிப் பேசும்பொழுதும் கேட்கலை. தலித் தலைமை என்றால் தமிழகத்தில் / இந்தியாவில் அதிர்ச்சியடைகிறார்கள்.

தலித் தலைமை எப்படி சரின்னு சொல்றோம்னா எங்க பகுதியில் நூறுக்கு மேற்பட்ட மிகப் பெரிய ஆதிக்க சக்திகளை எதிர்த்து வழக்குப் போட்டிருக்கிறோம். போராட்டம் நடத்தியுள்ளோம். அவர்களைத் தண்டித்திருக்கிறோம். அவங்க தலித்து கிட்ட இருந்து பறிச்ச நிலத்தையெல்லாம் மீட்டோம். ஆனால், அந்தப் பகுதியில் நாங்கள் எதிர்த்த மிராசுதாரின் சாதியைச் சேர்ந்த ஆயிரம் பேர் திரண்டு எங்களை எதுவும் செய்யலை. ஆனா அதற்காக, அந்த மிராசுதாரை எதிர்க்கிறது நமக்காகண்ணு லட்சக்கணக்கான தலித்துகளும் எங்கள் பின்னே திரண்டு விடவில்லை. குறைந்த பேர்தான், அவன்தான் அந்த சாதியில் மாட்டிக்கிட்டிருப்பான்.

ரோட்டிலை போகும்போது தேவர் ஒழிகண்ணுக் கிட்டிருப்போம். போஸ்டர் ஒட்டி இருப்போம். என்ன காரணம்? நாங்கள் அந்த சாதி அதிகாரத்துக்கு - அவன் எந்த வடிவில் எடுத்தானோ அதை விபரிச்சு, அது இந்த மக்களுக்கு எதிரானதுன்னு சொல்லி அதை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தி இருக்கோம். ஒரு வெள்ளாளன்மேல் நடவடிக்கை எடுக்கும்போது கூட, வெள்ளாளர் சாதியில் இருந்து அவரைத் தனிமைப்படுத்தி தலித்துகளுடைய எதிரியாகச் சித்தரிக்கிறபோது வெள்ளாள சமூகத்தில் இருக்கக்கூடிய மொத்தத் திரட்சியும், சமூகத்தில் இருக்கக்கூடியவர்களும் வந்ததே இல்லை. 15 வருஷமா, 91இலிருந்து ஆரம்பிச்சாக்கூட நிறைய விஷயத்தை நாங்க எடுத்திருக்கோம். அருணாசலம் என்பவர் மிகப் பெரிய எதிரி - 15 வருஷத்துக்கு முன் இரண்டு ஏக்கரைப் பறிச்சிட்டான். இப்ப இரண்டு ஆண்டுகளாகப் போராடி மீட்டோம். நான் எடுத்தது தேராவுரணி பகுதி கள்ளனை - ஆவுடையார் கோவில் பகுதியில் இருக்கிற அவனுடைய சொந்தக்காரக் கள்ளர்கூட வந்து எங்களுக்கு நன்றி சொல்லி, ஆயிரம் ரூபா கட்சிக்கு நிதி தந்து சென்றார். ஏன்னா இவனாலை முன்பு அவன் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கிறான். அவனை எதிர்த்து தோத்துப் போயி ஓட்டாண்டி ஆகிட்டான். இப்படி ஒரு ஆளை மீட்டதுக்கு உங்களுக்கு நாங்க நன்றி சொல்லணும்னு சொல்லிட்டுப் போறான்.

ஏன் அந்தக் கள்ளன் நம்ம கள்ளனை நம்ம முன்னாலேயே எதிர்த்திட்டாரேன்னு திரண்டு வரலை. எங்களுக்கு அந்தத் தந்திரம் செய்முறை தெரியும். ஒரு சாதி அதிகார சக்தியை மொத்த சாதியையும் எதிரா நிறுத்தி அழிக்கிறதாலை அதிலை நமக்குப் பயனிருக்குமா அல்லது அந்த ஒரு நபரை தனிமைப் படுத்தி அழிக்கிறதா? தலித்துகளுக்கு வன்னியர்கள் பூராவும் எதிரி என்கிறார் திருமாவளவன். நீங்க ஒரு வன்னியர் பிரச்சனையொன்றை எங்கிட்டக் கொடுங்க. அந்த வன்னியரை எவருமே சப்போர்ட் பண்ணாத அளவுக்கு அந்த ஆதிக்க சக்தியை நான் தனிமைப் படுத்தி சட்டரீதியாகவும் சமூகரீதியாகவும் தண்டிக்கிறேனா இல்லையா பாருங்க.

**காலக்குறி:**

நான் முன்பு சிதம்பரத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது ராமதாஸ் பேசுவதைப் பத்திரிகையில் போடுவதுதான் என் வேலை.

ஒரு நாள் அவருடன் ஜீப்பில் போய்க் கொண்டிருந்த பொழுது நைஸாச் சொன்னேன், பள்ளருக்கும் வன்னியருக்கும் கிராமத்திலை ஏதாவது வித்தியாசம் தெரியுதா பாருங்க. இரண்டு பேரும் ஒரே மாதிரித்தானே இருக்காங்க. என்ன சார் வித்தியாசம்னேன் உர்ருன்னு ஆயிட்டார். அதுமாதிரி எல்லா இடத்திலும்....

**அரங்க குணசேகரன்:**

அம்பேத்கர் *caste problem is area problem* ன்னு சொல்றார். சாதி ஒரு வட்டாரப் பிரச்சினைன்னு சொல்றார்.

தஞ்சை மாவட்டத்து வன்னியர் பன்னிக்கறி தின்பதில்லை. தென்னாற்காடு மாவட்டத்தில் ஆடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ப்பதுபோல் வீட்டுக்கு நாலு பன்னி வளர்க்கிறான். அதே பறையர் இங்கே வன்னியன் பன்னி தின்கிறான்ல, தஞ்சை மாவட்டத்துப் பறையன்கிட்ட ஆயிரம் ரூபா கொடுத்து பன்னி கறி ஒருநாள் திங்க சொன்னாலும் சாப்பிடமாட்டாங்க. தஞ்சாவூரில் இருக்கிற பறையர் ஒழிஞ்சு மாட்டுக்கறி திம்பான். சிதம்பரத்துக்கு வடக்கே beef - mutton stall, beef - பிரியாணின்னு போர்டு போட்டு வச்சிருக்கான். தஞ்சை மாவட்டத்திலை திங்க மாட்டான். இது பார்ப்பன வெள்ளாள கலாச்சாரம்.

ஏன்னா, மேலைத்தஞ்சையிலை பறையர் உடைமை வர்க்கம், உழவர் - நம்ம வீட்டுப் பசுவை நாம சாப்பிடக்கூடாது என. அதே பறையன் தரும புரியில் பசுமாட்டை ஏர் கட்டி ஓட்டறான். கலாச்சாரம் வேறுபடுகிறது. தென் மாவட்டப் பள்ளர் மாட்டுக்கறி தின்னும் பறையனை இழிவாப் பேசுவான். ஆனாப் பன்னிக் கறி சாப்பி டுவான். பன்னி மலத்தைத் திங்குது. மாடு புல்லைத் திங்குது. ஆனா அவன் பன்னிக் கறி சாப்பிடுறான். அப்ப என்ன கலாச்சாரம்? வன்னியர் திங்கிற பன்னியும் பள்ளர் திங்கிற பன்னியும் ஒண்ணு. இவன் சத்திரியகுல வன்னியங்கிறான். அவன் தேவேந்திரகுல வேளாளர் என்கிறான். ரெண்டும் கதை ஒண்ணுதான். Economical criteria வாழக் கூடிய, புவியியல் பிரதேச அடிப்படையில் சில குணாம்ச வேறுபாடுகள் இருக்கு. இந்துத்துவ - தீண்டாமை வடிவங்களில் இருக்கு. இங்க பறையனைப் பூரா எதிரின்னுட்டு அங்க பள்ளரிடம் போயி ஒரு தாய் மக்கள்ன்னு மாநாடு போடுறாரு ராம்தாஸ். இது பள்ளரையும் பறையரையும் பிரிக்கிற செயல் தந்திர உத்தி இல்லையா? ஆக, அரசியல் தலைவர்கள் கிட்ட சில கோளாறு இருக்கே தவிர, மக்கள் கிட்ட பெரிசா இல்ல.

என்னைப் பலரும் தவறான புரிதலில் மரபு முறையில் மார்க்சியத்தைப் பார்க்கிறதா சொல்றாங்க. ராமதாசையும் திருமாவளவனையும் நான் எப்படிப் பார்க்கிறேன்னா, வட தமிழ்நாட்டிலை சிதம்பரம் தொடங்கி தருமபுரி வரையிலும் தமிழரசன் கலிய பெருமாள் போன்றவர்களுடைய உழைப்பு அதற்குப் பின்னால் வந்த இளைஞர்களுடைய உழைப்பால் வார்த்தை அடிப்படையில் - அது வர்க்கப் போராட்டமோ, தமிழ்த்தேசிய போராட்டமோ, ஒரு மாற்று சமூகத்துக்கான விதைப்புகள் இங்கே நடந்தது.

இந்த விதைப்புகளால் 90களில், 80களில் தமிழரசன் உச்சத்தில் இருந்த நேரம். அரசு ஏஜண்டுகள் அரசு நிர்வாகம் ஆளும் வர்க்கம் சாதிரீதியான சலுகைப் போராட்டத்துக்குள்ளேயே உனக்கு எல்லாம் இருக்குன்னு காட்டக்கூடிய அளவில் இந்தப் புரட்சிகரக் கருத்தோட்டத்தை மாற்றியமைப்பதற்காக ஆளும் வர்க்கத்தால் அடையாளம் காணப்பட்டவர் தான் ராமதாஸ். அதில் அவர் ஆயிரம் வீராவேசம் பேசியிருக்கலாம். அதைப் போலவே, அதிலிருந்த வடநாட்டு வன்னியர்கள், நக்சல்பாரிகள் இயக்கத்திலிருந்த வள்ளுவன் போன்றவர்கள் எல்லாம் ராமதாஸ் கிட்டப்போய் சேர்ந்தாங்க. பல்வேறு ஆட்களெல்லாம் போய்ச் சேர்ந்தீங்க. அப்ப உங்க எண்ணங்களுக்கு ஏதாவது பொருத்தம் இருக்கா. அவர் வன்னியர் சங்கத்துக்கு கும்பம் வச்சாரு. கும்பங்கிறது இந்துத்துவாவினுடைய ஒரு கலாச்சாரக் குறியீடு. மஞ்சத் துணி.....

தடா பெரியசாமி, திருவள்ளுவன் போன்ற பழைய ML இயக்கத்தில் ஈடுபாடு இருந்தவங்களையெல்லாம் வழக்குகள் மூலமா அரசு நெருக்கடி கொடுத்தது. அப்ப இவர் ஜாமீன் எடுக்கிறது, பாதுகாப்புக் குடுக்கிறது இப்படியாக - இதெல்லாம் தெரிஞ்சுதான் நாங்க திருமாவளவனுடன் கூட்டமைப்பு உறவுகள் வைச்சிருந்தோம்.

அப்பவே சொல்லி இருக்கிறேன். கூட்டமைப்பிலிருந்த வினோத்தோ, சந்திரபோஸோ, பொழிலனோ இவர்களெல்லாம் சொல்வார்கள் - அவங்க அரங்க குணசேகரன் தொடக்கத்திலிருந்தே திருமாவளவனின் நடைமுறையை சந்தேகக் கண்கொண்டு பார்த்தவர் என்பதை ஒத்துக்கொள்வார்கள். ஏன்னா தொண்ணூறுகளிலேயே சந்தேகித்தேன். 94இல் சந்தேகித்தேன். 97இலும் சந்தேகித்தேன். கடைசிவரையிலும் நான் சந்தேகித்தேன்.

நான் வசனம் பேசுபவர்களிடம் ரொம்பக் கம்மியான நம்பிக்கை உள்ள ஆள். இப்ப நான் பேசுவது ஒரு ஒழுங்கான மொழி வடிவத்தில் வரலை. ஒரு சிஸ்டமாகவும் வரலை. இந்நேரம் திருமாவளவனாக இருந்தா அடுக்குமொழியை எடுத்துக் கோர்த்து உங்களையெல்லாம் இரத்தம் சூடேற வைத்திருப்பார். அந்த மாதிரி வடிவத்திலை பேசுறவன் மூளைக்கு ரொம்ப சிறப்பா வக்கணையான இலக்கிய வார்த்தையில் மட்டும் கவனம் செலுத்தி அதை மட்டும் கோர்க்கிற ஆளு, ஒரு சந்தர்ப்பவாதியாத்தான் போவான். ஏன்னா வார்த்தைகளைக் கோர்க்கிறவன் வாழ்க்கையையும் கோர்க்கத்தான் செய்வான். இது நாங்க கண்கூடாப் பார்த்த விசயம்.

திருமாவளவன் ராமதாஸை 'தமிழ்க்குடிதாங்கி' ன்னு சொன்னார். அதனுடைய உள்ளீடு என்னங்கிறது அவரெடுத்த democratic நடவடிக்கையிலை சரிதான். மேலோட்டமா அவர் பிணத்தை தூக்கிட்டுப் போறதை அங்கை இருக்கிற வன்னியர் ஏத்துக்கிட்டாங்க. பறையர் தூக்கிட்டுப் போறபோது அவங்க ஏத்துக்கலை. அதனுடைய உள்ளீடு என்ன. பிணம் அந்தராத்திலை போகுது. பிணத்தைத் தூக்கிக்கிட்டு, தொட்டுக்கிட்டு கீழே நடந்து போறவர் பறையர். அப்போ பறையர் எடுத்துக்கிட்டுப் போனாத்தான் கோளாறு. அது இளையபெருமாளோ, திருமாவளவனோ, அரங்க குணசேகரனோ, வை . பாலசுந்தரமோ எடுத்துக் கிட்டுப் போனா கலவரம். ராமதாஸ் தூக்கிட்டுப் போறபோது, வன்னியர் தெருவிலை வன்னியருக்கே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடையா - அது ஒண்ணுமில்லை. இவர் உடனே தமிழ்க்குடிதாங்கின்னு சொன்னார். ஆனா, நான் அன்னிக்கே ராமதாஸ் ஒரு மூன்றாவது வகைக் கருணாநிதிதான்னு கட்டுரை எழுதினேன்.

ஏன்னா பிரபஞ்சன் என்ன எழுதினாருன்னா....

(காலக்குறி: அவர் கதை எழுதிறவரு அவரை விடுங்க)

**அரங்க குணசேகரன்:**

....அப்படீன்னா அவர் கதை எழுதிறதோடை நின்னுக்கிடணும்.

அவர் பெரியாருக்கிணையான பெருந்தலைவர் ராமதாசுன்னு நக்கீரனில் ஒரு கட்டுரை எழுதினார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அடப் பாவி! மாட்டுக்கறி திங்கிறது, செத்த மாடு திங்கிற பறையர் வைக்கம் வீதியில் நடப்பதற்கு எல்லாம் தத்துவார்த்த ரீதியா விளக்கம் சொல்லி, சாதி இழிவுக்கு எதிரா ஒரு 50-60 ஆண்டு காலம் போராடின ஒரு ஆளை, 12000 தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகளை எரித்தவ ரோடை போய் ஒப்பிடுறார் இந்த ஆள் என்று உடனே மறுப்புக் கடிதம் எழுதினேன். எந்த வகையில் பெரியா ருக்கும் ராமதாசுக்கும் முடிச்சுப் போடுறீங்க. என்ன அர்த்தத்திலை செஞ்சீங்கன்னு ஒரு கட்டுரை எழுதி னேன் அன்னிக்கு.

அந்தக் கட்டுரையை பாதியை கறையான் தின் னிருச்சா. அதைக் கொண்டிட்டு வந்து இங்கு fair பண்ணினேன். வச்சிருக்கேன். கறையான் அரிச்ச காப்பியும் இருக்கு. Rewrite பண்ணின காப்பியும் இருக்கு. அப்ப அரசியலல்ல திணிக்கப்படுது.

ராமதாசு பிணம் தூக்கினாக்கூட தமிழ்நாடு பூராப் பேசப்படுது. ஒரு காமராசர் ஒண்ணு செஞ்சா அது தமிழ்நாடு பூரா பேசப்படுது. தாழ்த்தப்பட்டவர்களான அயோத்திதாச பண்டிதரைப் பற்றியோ, இரட்டை மலை சீனிவாசனைப் பற்றியோ அல்லது தியாகி இம்மானுவல் சேகரனைப்பற்றியோ - அவர்கள் சாதி ஒழிப்பிற்காகப் போராடினதைப் பற்றியோ வரலாற்றில் பின்னுக்குத் தள்ளப்படுது. தாழ்த்தப்பட்டோர் அல்லாத வர்கள் சாதி ஒழிப்புக்குப் போராடி இருந்தா அது பெருமைப்படுத்தப்படுது. ஏன்னா அவங்கதான் ஆளும் வர்க்கமா இருக்காங்க. அவங்க அவங்க ளையே பாராட்டிக்கிறாங்க.... தாழ்த்தப்பட்டவன் பேசினா அவன் சாதிப் பகையை உருவாக்கிறான், கலவரத்தை உருவாக்கிறான், வன்முறையை உருவாக் கிறான்.

அப்ப, அந்த வன்முறை சக்திகளை எப்படி வளர விட்டு எப்படிக் கையாளாகப் பயன்படுத்திக்கிறது என்கிறது ஆளும் வர்க்கத்திற்குத் தெரியும். திருமாவ ளவன் எப்படி ஆயிட்டாருன்னு நமக்குத் தெரியும். ஆனா, நம்ம அறிவார்ந்த சக்திகளிலேயே சிலர் என்ன சொல்றாங்க?

Main stream politicsஇலை இந்த வர்க்கத்துக்கும் இரண்டு ஆள் வேணுமா இல்லையா? அதிலை என்ன உங்களுக்குக் கஷ்டம்? நஷ்டம்? திருமாவளவன் வரட்டுமே!

கருணாநிதி பேசினபடியா ஆட்சி நடத்து றாரு? 20இலை ஒண்ணு பேசினாரு, 30இலை ஒண்ணு பேசினாரு, இப்ப ஒண்ணு பேசலியா? அதுமாதிரி ஏன் நீங்க திருமாவளவனை ஏத்துக்கக்கூடாது? அப்பி டீங்கறாங்க.

அவர் பேசி அப்படியே செய்யட்டும். நான் ஏத்துக் கிடணும்கிறத்துக்கு என்ன அவசியம் இருக்கு. இப்ப டித்தான் நாம பார்க்கிறோம். அதனாலை திருமாவள வன் - கிருஷ்ணசாமி அரசியல் ஒரு ஆளும் வர்க்கத் துக்குச் சேவை செய்கிற அரசியலாக, சாதி அதிகாரத் தைப் பாதுகாக்கிற - நிலப்பிரபுத்துவத்துக்கு கட்டுப் பட்டுப் போயிருக்குன்னு அர்த்தம்.

**காலக்குறி:**

மார்க்சிய சிந்தனை அடிப்படையில் வேலை செஞ்சுக்கிட்டிருக்கீங்க. வர்க்கப் போராட்டத்தை முன்னெ டுத்துச் செல்லாமல் சாதி ஒழிப்புக்கும்... தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுக்க என்ன காரணம்?

**அரங்க குணசேகரன்:**

வர்க்கப் போராட்டம்கிறது எதுவாக நீங்க நினைக்கிறீங்க? ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறையும் - ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களும் - ஒடுக்கப்பட்ட வர்க்கத்துக்கு ஆதர வான போராட்டம்தானே. காவிரி நீர் உரிமைக்காக நாங்கள் போராடி இருக்கிறோம். நான் NSAவில் கைது செய்யப்பட்டதே காவிரி நீர் உரிமைக்கா கத்தான். மொழி உரிமைக்குப் போராடி இருக்கிறோம். விவசாய மக்களைத் திரட்டி நடுவர் மன்றக் குழுவின் முன்னாலை மனுக் குடுத்திருக்கோம். கட்டுப்படியான விலை கேட்டு போராடி இருக்கிறோம். எங்க போராட் டங்கள் முழுவதையும் ஆதாரத்தோடை உங்ககிட்ட நாங்க....

**காலக்குறி:**

ஆனா, அதெல்லாம் சனநாயகப் போராட்டங்கள் தானே?

நான் கேட்கிறது வர்க்கப் போராட்டம். அவனை வீழ்த்திட்டு அரசதிகாரத்தை நீங்க கைப்பற்ற வேண்டியது தானே? அதுதானே இறுதித் தீர்வு.

**அரங்க குணசேகரன்:**

இப்ப நடத்திறது, ஒரு வர்க்கப் போராட்ட அரசி யலை உள்வாங்கிக்கொண்டு நடத்த வேண்டியது சனநாயகப் புரட்சிப் போராட்டத்திற்கான வேலைகள் தான். அதுதான் இப்ப இங்கை அவசியமாயில்லை இருக்கு. சனநாயகம் இல்லாத ஒரு சமூகத்திலை போயி பாட்டாளி வர்க்கப் புரட்சி அல்லது சோசலிசப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இன்று பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு பாட்டாளி வர்க்கப் புரட்சி நடக்கவில்லை. சனநாயகப் புரட்சிதான். சனநாயகப் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கத் தத்துவம் தலைமை தாங்கனும். சனநாயகப் புரட்சியில் பல்வேறு வர்க்கங்கள் வரும். அடுத்து சோசலிசப் புரட்சிக்கும் சனநாயகப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்க தத்துவம்தான் நிலை களன். ஆனால் சனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே அதிகாரத்துக்கு வருவதல்ல. சனநாயக ரீதியாக பல்வேறு வர்க்கங்களுக்கும் பல்வேறு கோணங்களில் சனநாயகம் இங்கே மறுக்கப்படுகிறது. தொழிற்துறையில் மனித உரிமையில் சாதியில் வழிபாட்டில் சனநாயகம் மறுக்கப்பட்டவர்கள். சிறு விவசாயிக்கும் பணக்கார விவசாயிக்கும் இடையேயான முரண்பாடு - இப்படி பலதரப்பட்ட சனநாயகம் மறுக்கப்பட்டோர் இங்கு ஒரு தரப்பில் இல்லை. இப்படி பலதரப்பட்ட சனநாயகம் மறுக்கப்பட்டவர் களும் சனநாயகப் புரட்சிக்காக அணிதிரளுகிற பொழுது அதற்குள் ஏற்றத் தாழ்வான வர்க்கங்கள் வர்க்கக் குணாம்சங்கள் இருக்கும். அவை சனநாயகப்புரட்சி என்கிற நீரோட்டத்தில் எதிர்ப் புரட்சி சக்திகளும் தலைமை எடுத்து வருகிற பொழுது....**

*புரட்சி நடத்துறதுங்கிறது எப்படி முடியும்? வர்க்கப் போராட்டங்கள் ஒவ்வொண்ணும் சனநாயகத்திற்கான போராட்டங்கள்தான் இங்கே. இன்றைய சூழல்.... (காலக்குறி : அது தற்காலிகமானது)*

**அரங்க குணசேகரன்:**

....தற்காலிகமானது இல்லீங்க. சனநாயகப் போராட்டத்தை எடுக்காம என்ன வர்க்கப் புரட்சி எடுத்திடப் போறீங்க.

**காலக்குறி:**

*சனநாயகப் போராட்டத்தை எடுத்துக்கக்கூடாதுண்ணு அர்த்தமில்லை இதுக்கு. எந்த நாட்டிலையுமே சனநாயகம் கம்மியில்லை, எல்லாருமே போராடி சனநாயகம் நடத்தித்தான் செஞ்சிருக்காங்க. ஆனா, இதுக்கெல்லாம் தீர்வெங்கிறது வர்க்கப் போராட்டம்தானே? வர்க்கப் போராட்டத்தின் மூலமாத்தானே இதையெல்லாம் ஒழிக்க முடியும்? அதை முன்னெடுத்துச் செல்லாம....*

**அரங்க குணசேகரன்:**

....வர்க்கப் போராட்ட அரசியல் அடித்தளத்தில் இருக்கிற ஒருவரால் மட்டுமே சனநாயகத்திற்கான போராட்டத்தை நடத்த முடியும். எனவே, வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாத்தான் சனநாயகப் போராட்டத்தைப் பார்க்கிறோமே தவிர, அப்ப வர்க்கப் போராட்டத்தின் தொடர்ச்சிதானே அது.

தொடக்கம்தானே? அதை எப்படி நீங்க வர்க்கப் போராட்டம் இல்லைன்னு பார்க்கிறீங்க.

வர்க்கப் போராட்ட அரசியலை மறுத்து ஒதுக்கி விட்டு முதலாளிய கட்சிகளோடு அல்லது நிலப்பிரபுத் துவக் கட்சிகளோடு, ஏகாதிபத்தியக் கட்சிகளோடு இணைந்து நின்று கொண்டு வெறுமனே போலி சனநாயகத்தை நம்பிக்கொண்டு - இது சனநாயக நாடுதான், இங்கு சனநாயகம் இருக்குன்னு போராடி னோம்னாத்தான் இது பூர்சுவா சனநாயகத்துக்கான போராட்டம் மட்டும்னு குறுக்கப்படும்; ஆளும் வர்க்கத்துக்கான - ஆளும் வர்க்க சனநாயகத்திற்குள் தன்னைக் குறுக்கிக் கொண்ட விசயம் அடிப்படை யிலேயே ஆளும் வர்க்கத்திற்கெதிரான சனநாயகத்திற் கான போராட்டம் என்கிறபொழுது வர்க்கப் போராட் டத்தின் ஒரு பகுதிதானே சனநாயகப் போராட்டம்? வர்க்கப் போராட்டம்னா இதுதான்னு ஒரு script வச்சுக்கிட்டு இப்படி இருக்கிறதுதான் வர்க்கப் போராட்டம் அப்படீன்னு நீங்க எப்படிப் பார்க்கிறீங்க?

**காலக்குறி:**

*சிக்கல் எங்கை வருதுன்னு சொன்னா, தலித் - ஒடுக்கப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோரை நீங்க ஒருங்கி ணைக்கும்போது மறுபடியும் நீங்க ஒரு சாதியக் கட்ட மைப்புக்குள்ளைதானே ஒருங்கிணையுறீங்க.*

*வர்க்கம் சார்ந்த ஒரு கட்சியாகவோ ஒரு பிரிவின ராகவோ அவங்க ஒட்டுமொத்தமாகத் திரளலியே....?*

**அரங்க குணசேகரன்:**

ஒட்டுமொத்தமாகத் திரளுறாங்க.

எங்களுடைய பத்திரிகை ஆசிரியர் குமரன்தாஸ் அகமுடையார். அரசியல் உறுப்பினர் சுந்தரம் கள்ளர். இன்னொரு உறுப்பினர் நாயுடு. இப்படிப் பலதரப்பட்ட வர்கள் மனித உரிமைக் கழகத்தில் இருக்கிறாங்க. தலித் தலைமை குறித்து இவர்களிடம் நான் பல நாள்கள் விவாதித்து, அவர்களின் சந்தேகங்கள் எல் லாம் தெளிவானதற்குப் பிறகுதான், ஒரு ஏழு எட்டுப் பேர் இப்ப அரசியல் குழுவில் பள்ளர் - பறையர் அல்லாத சாதிகள், BC, நாயுடு - வெள்ளாளன் - கள்ளர் - அகமுடையார் இத்தினைபேர் இருக்காங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களே. அவங்க எல்லாரும் அரங்க குணசேகரன் தலித்தாயிருப்பதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேப னையும் இல்லை, சாதி ஒழிப்பு- சனநாயகப் புரட்சி என்கிற லட்சியம் இருக்கும் பட்சத்தில், பாட்டாளி வர்க்க தத்துவத்தின் அடிப்படையில் போகும் பட்சத் தில் அரங்க குணசேகரன் ஒரு பிரச்சினை இல்லை. தலித் ஒரு பிரச்சினையில்லைன்னு ஒத்துக்கிட்டவங்க தான் வந்திருக்காங்க.

தலித்துகள் பாதிக்கப்படுறாங்க, குரல் கொடுக்கி றோம் தலித் அல்லாதவர்கள் - மதுக்கூர்ங்கிற கிராமத் தில் 30 ஆண்டுகளாக புறம்போக்கு நிலத்திலை றோட்டோரமா ஒரு 20 குடும்பங்கள் குடி இருக்காங்க. எல்லாருமே non dalit - ஆசாரி, வன்னியர், குறவர், கோனார், பிள்ளைமார், முத்தரையர் இப்படியாகப் பலதரப்பட்டோர். அந்தப் பகுதியில் இருந்த பிரெசி டென்ட் வெள்ளாளன்.

இப்ப அண்மையில் தி.மு.க. அரசு ஒரு சிறப்பு அரசாணை வெளியிட்டது. பத்து ஆண்டுகளுக்கு மேல் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போருக்கு குடிமனைப் பட்டா வழங்கலாம் என்பது அந்த அர சாணை. அவர்கள் குளத்துக்கரையில் குடியிருக்கி றாங்க. அந்தக் கரை மன்னார்குடி - பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையின் மேற்குக் கரையோரமாக இருக்கி றது. பட்டா கேட்டுக் குடியிருக்கும் மக்கள் அரசுக்கு மனுக் கொடுக்கிறார்கள். அந்தப் பிரசிடன்ட் அவர் களை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு அந்த நிலத் தின்மீது பஞ்சாயத்துக்கு வருவாய் ஈட்டக்கூடிய வணிக வளாகங்கள் கட்டத் திட்டமிட்டு அவர்களை வெளி யேற்றத் திட்டமிடுகிறார். சிறப்பு அரசாணையின்படி பஞ்சாயத்து அல்லது குளம் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போருக்கு பட்டா கொடுக்க வேண்டுமென் றால், தொடர்புடைய பஞ்சாயத்துத் தலைவர் அரசுக்கு இந்த இடத்தில் குடியிருப்போருக்கு பட்டா குடுக்க தங்களுக்கு எவ்வித மறுப்பும் இல்லை என்ற தீர்மா னத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். ஆனால், அந்த மதுக்கூர் ஊராட்சி மன்ற (பஞ்சாயத்) தலைவர் அந்த மக்களுக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற் றாமல், வருவாய்த்துறை அதிகாரிகளிடம் சொல்லி, அந்தப் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போரை வெளியேற்ற நோட்டீஸ் அனுப்புகிறார். இதற்குப் பஞ்சாயத் தலைவர் சொல்லும் காரணம், அவர் களெல்லாம் வெளியூரில் இருந்து பிழைக்க வந்தவர் கள் என்றும் - மக்களுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்றும் சொல்கிறார். ஆனால், அங்கிருக்கிற அரசியல் கட்சிகளில் இருக்கிற எவரும் இம்மக்களுக்கு ஆதர வாக இல்லை. காரணம் அங்கிருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளில் இருக்கிற அனைவரும் அதே ஊரைச் சேர்ந்த வெள்ளாளர்கள். ஒரு உள்ளூர் வெள்ளாளர் - பஞ்சாயத் தலைவர் எடுத்த முடிவை அனைத்து வெள்ளாளர்களும் அனைத்துக் கட்சி யினரும் ஆதரிப்பதன் நோக்கம், புறம்போக்கு நிலத் தில் குடியிருப்பவர்கள் எல்லாரும் வெளியூர்க்காரர்கள் என்ற கண்ணோட்டம்தான்.

ஆனால், அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் சமூகத் தைச் சேர்ந்த பரம ஏழைகள். ஆறு தேர்தல்களில் அவர்கள் அதே ஊரில் வாக்களித்திருக்கிறார்கள், பஞ்சாயத்துக்கு வீட்டு வரி கட்டுகிறார்கள், ரேசன் கார்ட் வைத்திருக்கிறார்கள். இவ்வளவு இருந்தும், குடியேறி 30 ஆண்டுகள் கழித்தும், அவர்களுடைய குடியுரிமையை மறுத்து வெளியூர்க்காரர்கள் என்று இட்டுக்கட்டி அவர்களை வெளியேற்ற முயன்றார்கள். இதில் சாதி பிரச்சினை என்று பார்த்தால், அவர்களில் எவரும் தலித்துகள் அல்லர். எங்களிடம் - தமிழக மனித உரிமைக் கழகத்திடம் - தங்கள் நிலை குறித்து அவர்கள் முறையிட்ட பொழுது, நாங்கள் எதுவித மறுப்பும் இன்றி அவர்களுக்குள்ள நியாயத்தையும் உரிமையையும் வலியுறுத்தி அவர்களோடு இணைந்து போராட்டம் நடத்தியதற்குப் பிறகு, அம்மக்கள் தற் போது வரையிலும் அங்கே குடியிருப்பதை எவராலும் தடுக்க முடியாத ஒரு நிலையை உருவாக்கி இருக்கி றோம்.

இவையெல்லாம் ஒரு தலித் இயக்கம் என்பதற்காக செய்யக்கூடாது என்று இருந்துவிட முடியுமா? ஒரு தலித் இயக்கம் தன் பிரச்சினைகளுக்கு மட்டுமே குரல் கொடுக்கவேண்டும் - அனைத்து மக்களுக்கு மான பிரச்சினையில் தலையிட்டு மொத்த சமூகத்தில் இருக்கிற உழைக்கும் மக்களுடைய நலனுக்காக, அரசியல் தலைமையாக தன்னை உயர்த்திக் கொள்வ தைப் பார்த்து அச்சப்படுகிற மேல்சாதியினரின் மூளைகளில் இத்தகைய செயல்கள் அதிர்ச்சியையும் எரிச்சலையும் தான் உருவாக்கும்.

இதையெல்லாம் ஏன் நான் சொல்றேன்னா, தமிழக மனித உரிமைக் கழகத்தை அல்லது அதனுடைய தலைவர்களை வெகுவாக சாதி ஆதிக்க சக்திகள் குறி வைத்துத் தாக்கி அழிக்க முடியாமல் இருப்ப தற்கு, இத்தகைய எங்களுடைய அணுகுமுறைகளும் ஒரு காரணம்.

குறிப்பாக, நாங்கள் மேடையில் பேசும்பொழுது சாதி ஆதிக்க அதிகாரத்துவ சக்திகளை கடுமையாகத் தாக்கிப் பேசும் அதே நேரத்தில், அதே சாதிகளில் இருக்கிற ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களின் நலன் களை பிரதிநித்துவப்படுத்தியும் பேசுகிறோம்.

சான்றாக, தமிழகத்தின் 16 பல்கலைக்கழகங்க ளிலும் மிகப் பெரிய தீர்மானகரமான பதவிகளில் இன்னும் செல்வாக்குச் செலுத்துவது முதலியார்களும் சைவப் பிள்ளைமார்களும்தான். அதேபோல், தமிழ கத்தின் துணி ஆலைகள் முதலீட்டில் நாயுடுகளும், கரும்புத் தோட்டங்கள், சர்க்கரை ஆலைகள் முதலீட் டில் கொங்கு வெள்ளாளர்களும், நிதி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களில் நாட்டுக்கோட்டை செட்டிகளும், வெல்லமண்டி, பாத்திர வியாபாரம் போன்ற மத்தியதர சந்தைப் பொருளாதாரத்தில் நாடார்களும் முஸ்லிம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களும், அனைத்து அதிகார மையங்களிலும் - உயர் தொழில்நுட்ப மையங்களிலும் பார்ப்பனர்களும், அதிகாரம் செலுத்துகிற இடங்களில் கள்ளர், மறவர், கோனார், முத்தரையர், வன்னியர் போன்ற பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் இன்னும் அவர்களை மிஞ்சி உள்ளே நுழைய முடியவில்லை. அத்தகைய சக்திகளுக்கு எதிராக கள்ளர்கள் போன்ற சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் போராடாமல் தலித்துகளுக்கு எதிராக வரிந்து கட்டுவது எதைச் சாதிக்க?

எனவே, இத்தகைய தலித்துகளுக்கு எதிராக திட்டமிட்டு வன்முறையைத் தூண்டும் கள்ளர் போன்ற சாதிகளில் இருக்கக்கூடிய சாதி வெறியர்களை அச்சமூகங்களில் இருக்கக்கூடிய ஏழைகள் இனம் கண்டு கொள்ள வேண்டும் என்றும் பேசுகிறோம். இவையெல்லாம் எதிர்காலத்தில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் இருக்கக்கூடிய சனநாயக சக்திகளை ஒரு சனநாயகப் புரட்சிக்கான மைய நீரோட்டத்தில் இணைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடுதான்.

பார்ப்பன, வெள்ளாள சாதிகளின் ஆதிக்கத்தில் தமிழகத்தின் மொத்தப் பொருளாதாரமும் குவிந்திருக்கிற சமூகத்தில், கள்ளர் போன்ற சாதியினரே நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

10 ஏக்கர் நிலமும், அதை உழுவதற்கான இரண்டு சோடி மாடுகளும், 2 லட்சம் ரூபா கடனும், அந்த மாட்டை பிடித்துக் கட்ட இரண்டு பறையனும் உனக்கு அடிமையாக இருந்தால் நீ பெரிய சாதியா? நீ தாழ்த்தப்பட்டவனை ஒடுக்குறதினாலை என்னத்திலை வளரப் போறாய்?

அயலக தூதரகத்தில் தூதராகப் போகப் போறியா? பல்கலைக்கழகங்களில் பதிவாளராகப் போகப் போறியா? துணைவேந்தராகப் போறியா? பெரும் தொழிலதிபராகப் போறியா? அப்படியானால் உன் வறுமைக்கும் உன் சாதியின் தாழ்ந்த நிலைக்கும் எதிரி யார்? நீ எதுக்காகத் தாழ்த்தப்பட்டவனை ஒடுக்குகிறாய்? தாழ்த்தப்பட்டவனை ஒடுக்குவதனால் நீ எந்த அடிப்படையில் வாழ்ந்து விடமுடியும்.

எனவே, இந்தப் போக்கை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். எதிரிக்கு எதிரான போராட்டத்தில், எங்களோடு நீ இணையாமல் கைக்கூலியாக மாறி, ஆளும் வர்க்கத்தைக் காப்பாத்தினியானால் அந்தத் துரோகத்துக்கான பலனை நீ சந்திக்கவேண்டி வரும். இதைக் கேட்கும் கள்ளர்களுக்குள் மாறுபாடு ஏற்படுகிறது. ஒருவர் எங்கள்மீது ஆத்திரப்படுகிறார். மற்றவர் அவர் பேசுவதில் என்னப்பா தப்புங்கிறார்?

ஏன்னா அந்த சாதி ஒரே வர்க்கமாவா இருக்கு? அப்ப மோதல் ஏற்படுது. - இந்தக் கருத்துத்தான் எங்களைப் பாதுகாக்கிறது. கள்ளர் பூரா திருடர், அவங்கள மொத்தமா பேசுகிறபொழுது, அது மிகப் பெரிய பாரதூர சாதிப்பகை வெறியா மாறி, உழைக்கும் மக்களுடைய எதிர்கால அணிசேர்க்கைக்கு கேடு விளைவிப்பதாக ஆகிவிடுகிறது.

இந்த பாலிசியை நீங்க வன்னியர் பெல்ட்டில அப்ளை பண்ணுங்க - கள்ளரை விட கூடுதலாக வன்னியர் ஆதரவு கிடைக்கும். எப்படி வன்னிய சாதியே எதிரியா வரும்?

ஆக, வன்னியர் பூரா எதிரின்னு சொல்றீங்களா? ஒரு ஊர்ல ஒரு SCயை ஒரு வன்னியன் அடிக்கிறான், அவன் வன்னிய எதிரி. அவன் தி. மு. க. விலும் இருக்கலாம். அ. தி. மு. க. விலும் இருக்கலாம், பா. ம. க. விலும் இருக்கலாம். இல்லையா? நம் வீட்டை கொளுத்திய வன்னியன் நேத்து ராமதாசுடன் இருந்திருப்பான், இன்று அவன் கட்சி மாறி தி. மு. க. வில் இருப்பான்.

எனவே, ஒரு கட்சிக்கு சாதி முத்திரை குத்துவதோ அல்லது ஒரு சாதியை இன்னொரு சாதிக்கு எதிரா நிறுத்துவதோ என்ன வகையான அரசியல்? மூன்று மாவட்டத்தில் இருக்கிற வன்னிய சாதியர் மட்டுமே தலித்துகளுக்கு எதிரின்னு சொன்னா, 400 மாவட்டங்களில் இருக்கிற சாதி அதிகார சக்தியை பாதுகாக்கிற தத்துவ கருத்தியலாக இருக்கக்கூடிய இந்துத்துவா - அது தலைமை தாங்கக்கூடிய பாரதீய ஜனதா கூட்டணி மட்டும், எப்படி சாதிய அமைப்புக்கு எதிரானதாக அல்லது தலித்துகளுக்கு ஆதரவானதாக ஆகிவிட முடியும்?

இப்படியெல்லாம் நாங்கள் புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற தேர்தலில் ஈடுபடும் தலித் இயக்கங்களை கேள்விக்குள்ளாக்குகிறோம். அவர்கள் தேர்தலில், ஓட்டு வாங்குவதற்கான ஒரு உத்தியாக, பா. ம. க.தான் தலித்துகளுக்கு எதிரி என்ற கொச்சையான வாதத்தை முன்வைக்கிறார்கள். அப்படியானால் ராமதாஸ்தான் சாதி வெறியர், கருணாநிதி - ஜெயலலிதா - மூப்பனார் எல்லாம் சமத்துவவாதிகளா? ஜெயலலிதா 91 - 96 கால கட்டத்தில் முதல்வராக இருந்தபொழுது, மத்திய அமைச்சர் அருணாசலத்தையே (தலித்), தான் பயணம் செய்யும் விமானத்தில் ஏறினார் என்பதற்காக கீழே இறக்கிவிட்டவர்தானே? அப்படின்னா ஜெயலலிதா சாதி வெறியர் இல்லை, ராமதாஸ் மட்டும் தான் சாதி வெறியரா?

அதனால், இந்த மாதிரி தேர்தல் முழக்கங்களை வைத்துக் கொண்டிருக்கும் தலித் இயக்கங்களுக்கும் எங்களுக்கும் ஒரு மாறுபட்ட அணுகுமுறை இருக்கு. அந்த அடிப்படையில்தான் தலித் தலைமைன்னு குறைந்த பட்சம்.....

**காலக்குறி:**

பிற்படுத்தப்பட்ட சாதிகளில் உள்ள அடித்தட்டு வர்க்கம் இருக்காங்கள்ல, அவங்களை திரட்டுறதுக்கான திட்டம் என்ன உங்ககிட்ட இருக்கு?

**அரங்க குணசேகரன்:**

**தமிழக மனித உரிமைக் கழகம் என்பது**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லெனின்

எங்களுடைய அமைப்பு. அதன் அரசியல் குழுவில் அறிவார்ந்த, தெளிந்த, தலித் தலைமையை ஏற்றுக் கொள்கிற தாழ்த்தப்பட்டோர் அல்லாத இளைஞர்கள் இந்த இயக்கத்துக்கு வந்தால் அவர்களை இந்த இயக்கம் ஏற்றுக்கொள்ளும். அதற்கப்பால், தாழ்த்தப் பட்டோர் அல்லாத அமைப்புகள் - இந்த சனநாயக கண்ணோட்டம் இல்லாதவர்கள் - இந்த தலித் தலைமையை / நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், அந்த வர்க்கத்தை நம்மோட இணைச்சா கணும். அந்த வர்க்கம் பெருந்திரளான மத்தியதர வர்க்கமாவும், சிறு அளவில் கூலி ஏழை வர்க்கமாகவும் இருக்கிறது. அப்போ மத்தியதர வர்க்கத்தையும் கூட எதிரியின் பக்கம் தள்ளிவிடாமல் நம் அரசியலின் பக்கம் கொண்டுவர வேண்டிய கடமை / தேவை நமக்கு இருக்கு.

இதற்கு விவசாய உரிமை இயக்கம் என்று வெள்ளாளர் சமூகத்தை சேர்ந்த மழவை சிங்காரவேல் என்பவரைக் கொண்டு ஒரு இயக்கத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். நகரங்களில் இருக்கும் ஓட்டல் தொழிலாளர்களை மன்னார்குடி, திருவாரூரை மையப் படுத்தி அமைப்பாக்கிக் கொண்டிருக்கிறோம். கிராமங்களில் செங்கல் சூளை தொழிலாளர்களை அமைப் பாக்கி இருக்கிறோம். இவர்களில் முத்தரையர், கோனார் போன்ற BC மக்களும் இருக்கிறார்கள். எங்களுடைய எல்லா துணை அமைப்புகளிலும் தொடர்புடைய தொழிலாளர் - உரிமை சங்கம் என்று பெயர் வரும். காரணம் தமிழக மனித உரிமைக் கழகத்தின் துணை அமைப்பு என்பதற்கான அடையாளத்தை இணைக்கும் நோக்கத்தில் அப்படிப் பெயர் வைத்துள்ளோம்.

**காலக்குறி:**

செயங்கொண்டம் பகுதியில் நிலக்கரிச் சுரங்கங்கள் அமைப்பது குறித்து வன்னியர் சங்கம் அல்லது பா. ம. க. எடுக்கும் போராட்டங்களைக் குறித்து உங்கள் பார்வை என்ன?

**அரங்க குணசேகரன்:**

பா. ம. க. நிலக்கரிச் சுரங்கங்களை முற்றாக எதிர்க்கவில்லை.

சுரங்கம் அமைக்க வரும் முதலாளிகள் அப்பகுதியில் இருக்கின்ற வன்னிய நிலவுடைமையாளர்களின் நிலத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு தலா 50,000 ரூபா முதல் 1 இலட்சம் ரூபா வரை மதிப்பீடு செய்து ஈட்டுத்தொகை அளிக்கிறார்கள். இந்தத் தொகை போதாது, ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 3 இலட்சத்திலிருந்து ரூபா 5 இலட்சம் வரை ஈட்டுத்தொகை வேண்டும் என்றும், குடும்பத்தில் ஒருவருக்கு சுரங்கத்தில் வேலை கொடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்து போராடுகிறார்கள்.

சுரங்கத்தை எதிர்ப்பது என்பது ஒரு நிலை - ஒரு கொள்கை வழிப்பட்ட நீண்டதொரு பார்வை. இந்தச் சுரங்கம் இந்திய அளவிலான பெரு முதலாளிகளின் வர்க்கத்தின் நலனுக்கு மின்சார விநியோகம் அளிக்கவும், இதில் முதலீடு செய்கிற முதலாளிகள் அந்நிய ஏகபோக கம்பெனியாக இருந்து லாபத்தை அவன் தன் நாட்டுக்கு எடுத்துச் செல்வதாலும் - இதை ஒரு நீண்ட தூரக் கண்ணோட்டத்தில் எதிர்க்க வேண்டும் என்று சொல்கிறோம்.

ஆனால், ஒரு தேசிய கனிவளத்தை சொந்த மண்ணில் மக்களின் நலனுக்காக பயன்படுத்திக் கொள்வது என்கிற பார்வையில், காலம் காலத்துக்கும் நாம் நிலக்கரிச் சுரங்கங்கள் அமைப்பதை எதிர்க்கவோ மறுக்கவோ முடியாது. உடனடிப் பிரச்சனையாக, ஏகபோக கம்பெனிகளை தடுக்கும் திராணியற்ற உலகமயமாதல் சூழலில், வன்னிய நிலவுடைமையாளர்கள் வைக்கிற இந்தக் கோரிக்கையில் அடிப்படை நியாயம் இருக்கிற அதே அளவுக்கு, அவர்கள் அப்பகுதியில் வாழுகிற தலித்துகளின் நலனுக்கான கோரிக்கைகளை முன்வைக்காததை நாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். நிலத்துக்கான பட்டா பதிவுகள், விட்டா அடங்கல்கள் போன்ற உரிமைகள் எல்லாம் நாயக்க மன்னர்கள் அல்லது பிரிட்டிஷார் ஆட்சிக்குப் பிறகு வளர்ந்து வந்த சமீன் தாரி முறைகளின் கண்டுபிடிப்பே தவிர, இது காலா காலத்துக்கும் இருந்து வந்த நடைமுறை அல்ல.

ஆனால், மக்கள் இந்த மண்ணில் நீண்டதூர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றுத் தொடர்ச்சியுடைய பாரம்பரிய வாழ்க் கைக்கு உரிமை உடையவர்கள். இவர்களில் வர்க்க சமூகத்தின் வஞ்சனையால் சில சாதிகளுக்கு நிலவு டைமைப் பதிவேடுகளும் நிலம் மறுக்கப்பட்ட சில சாதிகளுக்கு (தலித்) நிலவுடைமைப் பதிவேடுகள் அற்ற நிலையும், அதனால் அந்த தலித் மக்கள் - புறம்போக்குகள், புறக்குடிகள் என்கிற அவல நிலைக்குத் தள்ளப்பட்டு அநீதிக்குள்ளாக்கப்பட்டு வந்துள்ளனர். தற்போது நிலவுடைமையாளர்களாக இருக்கிற வன்னியர்களுக்கு, தான் கைப்பற்றும் நிலத் துக்கு மதிப்பீடு செய்து ஈட்டுத்தொகை கொடுக்கிற செயங்கொண்டம் நிலக்கரி சுரங்க முதலாளிகளும் அரசும், தலித்துகள் தங்கள் குடியிருப்புகளுக்கும் தங்களுடைய அனுபவ விவசாய நிலங்களுக்கும் இழப்பீடு வேண்டும் என்று கேட்கிறபொழுது அவர் களிடம் பட்டா இருக்கிறதா அடங்கல் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அப் பட்டா, கிட்டா இல்லாதவன் - புறம்போக்கில் குடி இருந்தவனுக்கு எப்படி நட்ட ஈடு கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

புறம்போக்கு என்பது அரசுக்கு சொந்தமானது. அரசுக்குச் சொந்தமான இடத்தில் நீ இவ்வளவு காலமும் குடி இருந்ததே ஆக்கிரமிப்புத்தான். மரியா தையாக வெளியேறிக்கொள், இல்லாவிட்டால் போலீசை வைத்து வெளியேற்றுவோம் என்று மிரட்டு கிறார்கள். இத்தகைய சிக்கல்களை எல்லாம், அப்பகு தியில் இருக்கிற பா. ம. க.வோ, விடுதலைச் சிறுத் தைகளோ தலித்துகளின் பார்வையில் அணுகுவதற்கு தயாராக இல்லை. அரசும் நிலக்கரிச் சுரங்க முதலாளி களும் தங்களின் நலனுக்காக நடப்பில் உள்ள வர்க்க சமூக சட்டங்களை மட்டும் பிடித்துக்கொண்டு தொங் குகிறார்களே தவிர, மக்கள் நலன் - குறிப்பாக, தலித்துகளின் நலன் என்பது எள்ளளவும் அவர்களிடம் இல்லை. இதை எல்லாம் நாங்கள் எதிர்த்து போராட திட்டமிட்டுக் கொண்டுள்ளோம். இந்த அரசாங்கமும் சுரங்க முதலாளிகளும் இங்கே சுரங்கம் தோண்ட வருவார்கள் என்பதற்காக, முன்னரே அனுமானித்து தலித்துகள் பட்டா வாங்கி வைத்துக்கொள்ள முடி யாது. நீண்ட காலமாக குடியிருக்கும் தலித்துகளுக்கு பட்டா கொடுக்காமலே வஞ்சித்த அரசாங்கமும் ஆளும் வர்க்கமும், சுரங்கம் தோண்ட வருகிற காலத்தில், அதே பட்டா இல்லாததையே காரணமாக்கி நட்டஈடு வழங்க மறுப்பதும், ஆக இரண்டு வகை யிலும் தலித்துகளுக்கு எதிராகவே இந்த அரசின் - ஆளும் வகுப்பின் நடவடிக்கைகள் இருக்கின்றன என்பது அம்பலமாகிறது.



**....வர்க்கப் போராட்ட அரசியல் அடித்தளத்தில் இருக்கிற ஒருவரால் மட்டுமே சனநாயகத்திற்கான போராட்டத்தை நடத்த முடியும். எனவே, வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாத்தான் சனநாயகப் போராட்டத்தைப் பாரக்கிறோமே தவிர....**

**காலக்குறி:**

தேர்தல்கள் பற்றிய உங்களின் பார்வை என்ன?

**அரங்க குணசேகரன்:**

இதுவரையிலும் தேர்தலை புறக்கணிச்சிட்டே வந்திருக்கோம்.

'பாராளுமன்றம் பன்றிகளின் தொழுவம்', 'தேர்தல் பாதை திருடர் பாதை' - இப்படியான கோசங்களில் நாங்கள் மூழ்கிக் கொள்ள தயாராக இல்லை. அதே சமயத்தில், இன்றைக்கு இருக்கிற பாராளுமன்றத்தில் பங்கேற்று, இந்த மக்களுடைய முழுக் குரலையும் ஒலித்து, இந்த வடிவத்திலேயே இந்த மக்களுக்கு முழுமையான உரிமையைப் பெற்றுத் தரமுடியும் என்கிற நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை.

ஆனால், பாராளுமன்ற ஆட்சிமுறை - அது கம்யூ னிஸ்ட் நாடுகளிலும் சரி, முதலாளித்துவ நாடுகளிலும் சரி - பல்வேறு வடிவங்களில், பல்வேறு தேர்தல் சீர்திருத்த முறைகளில் மாற்றம் நடந்து பாராளுமன்ற முறைகளிலேயே ஆட்சி நடைபெறுகிறது. அப் பாராளு மன்றம் எந்த வர்க்கத்தைச் சார்ந்தது என்பதுதான் இங்கே பிரச்சனையே தவிர, பாராளுமன்றம் என்ற வடிவமே மறுக்கப்படவேண்டியது என்பதில் எங்க ளுக்கு உடன்பாடில்லை.

பாராளுமன்றத்தை ஒரு கட்டத்தில் லெனின் போன்றவர்கள், 'பன்றிகளின் தொழுவம்'னு சொல் றாங்க. இன்னொரு கட்டத்தில், கெரன்ஸ்கியின் தலை மையில், சோவியத் பாராளுமன்றம் - முதலாளித்துவ ஆட்சி - ஏற்பட்டபொழுது, அதை 'சனநாயக குணாம் சம் கொண்டது - எனவே அவர்கள் அமைத்த பாராளு மன்றத்தில் பங்கெடுக்கலாம்' என்றார். அதைப் போலவே, பாராளுமன்றம் பிரிட்டனில் நிலப்பிரபுத்துவ முடியாட்சி முறையை எதிர்த்த வணிக முதலாளிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்திகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், இந்தியப் பாராளுமன்றம், அப்படிப்பட்ட நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு கிளர்ச்சியில், முதலாளிய சனநாயக போராட்டத்தின் வளர்ச்சியாக, இந்திய மக்கள் தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக் கொண்ட பாராளுமன்றம் அல்ல. இந்திய ஆளும் நிலப்பிரபு - தரகு முதலாளிய வர்க்கத்தின் கையில் பிரிட்டிஷார் தாங்கள் ஏற்கனவே நிறுவியிருந்த பாராளுமன்றத்தின் ஒரு வகைமாதிரியை ஒப்படைத்து சென்றதால் வந்ததுதான், நம்முடைய பாராளுமன்ற ஆட்சிமுறை. ஆகவே, இதற்குள் ஒரு முதலாளிய வளர்ச்சி - முதிர்ச்சி என்பது இல்லை. ஆனால், கால வளர்ச்சியில் சமூகத்தினிடையே பல்வேறு வர்க்கங்களின் விருப்பங்களும் வெளிப்படாத பொழுது, ஒவ்வொரு வர்க்கத்திலும் தனித்தனிக் கட்சிகளாக சிதறுண்டு தன்னுடைய செல்வாக்குப் பிரதேசத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிற ஒரு அரசியல் கூறு என்பது கடந்த 10 ஆண்டுகளில் வளர்ந்துள்ளது. வி.பி.சிங் அரசுக்குப் பிறகு இப் போக்கு கூர்மை அடைந்துள்ளது.

இதற்கான வேர் எங்கே பிடிச்சதுன்னா - ஜெயப் பிரகாஷ் நாராயணனின் முழுப்புரட்சி இயக்க காலத் திலேயே (76) வந்துவிட்டது. பெரிய நிலப்பிரபுத்துவ - முதலாளிய கட்சிகள் உடைவதும், சில கட்சிகள் பகுதிகளில் உருவாவதும், அந்தந்த கட்சிகளுக்குள் இருக்கக்கூடிய சுயலாப விருப்பங்களைக் கொண்ட அந்தந்த வர்க்கங்களின் விருப்பங்கள் தடுக்கப் பட்டதாலும், தனித்தனி பிரதேச கட்சிகள், உள்ளூர் கட்சிகள் மாவட்ட அளவிலான கட்சிகள் வளர்ந்தது. அப்ப, சனநாயகம் மறுக்கப்பட்ட பல்வேறு சக்திகளி டையே அரசியல் வடிவத்தில் ஏற்படும். அதையே முன்னெடுத்துச் செல்பவர்கள்கூட, பாட்டாளி வர்க்கப் பார்வை இல்லாததனால், இந்தத் தேர்தல் பாதைக் குள்ளேயே அந்த வர்க்கத்துக்கான லாபத்தைப் பெற்று விடலாம் என்று சொல்லி, அதற்கான ஒரு அரசியல் அமைப்பாக இருக்கிறார்கள்.

இந்த அரசியல், முன்புபோல், 350 இடம் காங் கிரஸ், 350 இடம் இன்னொரு கட்சி என்று அது வெற்றி பெற்று வருகின்ற பெரும்பான்மை அழுத்தத் தில் - மாநிலத்தில், வட்டாரத்தில் பல்வேறு கருத்தோட் டங்களை மறுத்த ஒரு மிகப் பெரும்பான்மையை தவிர்த்து சிறுசிறு கட்சிகளும் இந்த முதலாளிய ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பதன் மூலம் தன்னுடைய வர்க்கங்கள், சாதிகள், மாநிலங்களுக்கான உரிமை களுக்கான குரலை ஒலிக்கக்கூடிய ஒரு தன்மையை அது பெற்று அப்படிப்பட்ட ஒரு மேடையாக அது உருமாறிப் போயிருக்கிறது.

Multi party system - பல கட்சி சனநாயகமுறை என்பது இந்த நாட்டுக்கு வேணுமா, இரு கட்சி சனநாயக முறை வேணுமா என்று பாராளுமன்றத்தில் விவாதம் நடக்கிறபொழுது அம்பேத்கர் மிகத் தெளிவா


அம்பேத்கர்

சொன்னார்: "பிரிட்டன் போன்ற நாடுகளில் முதலாளித் துவம் வளர்ந்திருக்கின்றது. அங்கே இரு கட்சி முறை இருக்கலாம். இங்கே பல சாதிகள், பல மொழிகள் இருக்கும் நாட்டில் பல கட்சி முறைங்கறதுதான் சரியாக இருக்கும். அப்பதான் ஒரு சிறு குழுவும்கூட தன்னுடைய உரிமையைத் தட்டிக் கேட்க முடியும்"னு அன்று சொன்னார்.

கடந்த 30 - 40 ஆண்டுகளில் இப்படி நடக்க முடியலை. இப்ப அதற்கான வாய்ப்புகள் கனிஞ்சுதான் மாயாவதி - கிருஷ்ணசாமி - திருமாவளவன் போன்ற வர்கள் ஒரு pressure group ஆக வெற்றி பெற்று, இந்த சட்டசபையில் செல்வாக்கு செலுத்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. இன்று ஆளும் வர்க்கம் எல்லா இடத்திலும் அவர்கள் மூலமாகத்தான் உக்காந்துக்கிற வாய்ப்பு இருக்கு. இதை ஒரு செயல் தந்திரமாகக்கூட ஆளும் வர்க்கம் தன்னுடைய அரசியல் அடித்தளம் தளர்ந்த நிலையில், இத்தகைய சக்திகளின் மூலமாக தன்னுடைய அரசியல் செல்வாக்கை பலப்படுத்திக் கொள்கிற இன்னொரு பரிமாணமும் இதற்குள் இருக்கிறது.

ஆகவே, பழைய காலம் போல் அல்லாத அள வுக்கு ஒப்பீட்டளவில் pressure group ஆக ஒவ்வொரு கட்சியும் வளர்வதற்கான ஒரு சனநாயக தன்மை யிலான திருப்பம் - மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆனா லும், இது மேலும் மேலும் என்னவாக மாறியிருக் கிறது என்றால் சாதிரீதியான, மதரீதியான பிளவு களுக்கு, அதாவது, ஒவ்வொரு கட்சியும் ஒரு பகுதிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியாக மாறணும்கிறபொழுது, அது இந்த சனநாய கத்தை கேள்விக்குள்ளாக்குவதற்காக அல்லாமல், இந்த நிலவுடைமை சமுகத்தை பாதுகாக்கிற வடிவங் களாக, இன்று சாதி அரசியல் கட்சிகளெல்லாம் வந்ததனாலை, சாதி தன்னை தக்க வைச்சிக்கிற அரசியல் வந்ததனாலை, இந்த தேர்தல் மூலம் எந்த வித பெரிய இலாபத்தையும் அடைந்து விடமுடியாது, பெரிய மாற்றத்தையும் உருவாக்கிவிட முடியாது.

இதுவும்கூட, பல கட்சி சனநாயக முறை - pressure group ஆக செயல்பட முடியும் என்ற கருத்தாக் கத்தின்மூலம், பல சாதி குழுக்கள் ஒரு சாதிக்குள் இருக்கிற பல்வேறு உட்குழுக்களை வகைப்படுத்து வதற்கான செயல் தந்திரம். உதாரணமாக, இடஒதுக் கீட்டை எப்படி சனநாயகத்திற்கானது என்று சொல்லி விட்டு, சமூக நீதிக்கானது என்று சொல்லிவிட்டு, அதுவே சாதியை பாதுகாக்கிறதுக்கான ஆயுதமாக ஆளும் வர்க்கத்துக்குத் தெரிகிறபொழுது அதை ஏற்றுக் கொண்டதோ, அதைப் போலத்தான் இந்த பல கட்சி சனநாயக முறையும். சாதியமைப்பில் உற்பத்தி முறையும், உற்பத்தி வடிவமும், உற்பத்தி உறவுகளும் அதற்கேற்றாற்போல வாய்க்கப் பெறுகிற கல்வியும் கட்டமைப்பும் இல்லாமல் எந்தவிதமான முறைகளிலும் இந்த பாராளுமன்ற தேர்தல் சன நாயகம் வெற்றி பெறக்கூடியது அல்ல என்பதை நாம் பார்க்கிறோம்.

**காலக்குறி:**

உங்களுடைய அமைப்பில் எல்லா சாதிகளை சேர்ந்தவங்களையும் இணைச்சிக்கிறீங்க. ஆனா, பெரும் பான்மையாக பறையர்கள் திருமாவளவனோடும், பள்ளர் கள் கிருஷ்ணசாமியோடும், சக்கிலியர்கள் அதியமா னோடும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். SCங்கிற category உள்ளேயே ஒரு பெரும் பிரிவாக இது மாறியிருக்கு, ஒன்றிணைக்கப்படலை.

இதுக்கும் அப்பால் கிட்டத்தட்ட 25-26 மலைச்சாதி - ஆதிவாசி பிரிவினர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். இவர்களுக்கு கிடைத்த உரிமைகூட அவர்களுக்கு கிடைக்காம இருக்கு.

**அரங்க குணசேகரன்:**

வி. பி. குணசேகரன் பழங்குடி மக்களை அமைப்பு ஆக்கியிருக்கிறாரே....

**காலக்குறி:**

....ஆனா இந்த 25 மலைச்சாதிகளையும் இணைக் கக்கூடிய போக்காக அது வெளிப்படலை. ஏன்னா காணிக்காரர்கள் திருநெல்வேலி, குமரி போன்ற பகுதி களில் இருக்கிறார்கள். தர்மபுரியில் இன்னும் இடுக்கில் இருக்கிறார்கள். சக்கிலியரிடமிருந்து வரும் குரல் என் னன்னா, இவங்க இரண்டு பேரும் எங்களை ரொம்ப அதிகமா ஒடுக்குறாங்கங்கிறாங்க. அவங்க தெலுங்கரா இருக்கிறது வேறு விசயம். அது ஒரு ஒதுக்கம் - காலாகாலமா இருக்குது. இதில் எப்படிப்பட்ட ஐக்கி யத்தை கொண்டுவர முடியும்ங்கிறீங்க. இந்தக் கேள்வி பலரிடமும் இருக்கு.

**அரங்க குணசேகரன்:**

மனித உரிமை கழகத்தில் ஒரு நோட்டீஸ் போட் டோம், 96இல். அப்போது நடத்திய தெரு முனைப் போராட்டத்தில் நாங்க ஒரு கோரிக்கை வச்சோம். தமிழ்நாட்டில 42 சட்டமன்ற தொகுதிகள் ரிசர்வ் தொகுதி. 14 சட்டமன்ற தொகுதிகளில் மேற்கு மாவட் டங்களில் சக்கிலியர்தான் வரணும். அதில் தமிழ் நாட்டில் 1 அல்லது 2க்கு மேல் அவர்கள் சட்டமன்றத் துக்கு வருவதில்லை. அந்த மேற்கு மாவட்டங்க ளிலும் பள்ளர் பறையருக்குத்தான் இந்தக் கட்சிக் காரன் எல்லாரும் சீட்டுக் கொடுக்கிறான்.

**காலக்குறி:**

இதில் இன்னொரு விசயம் - scattered ஆக ஓட்டைப் பிரிச்சிடறாங்க.

**அரங்க குணசேகரன்:**

பரவலா, scatteredஆ இருக்காங்க. மேற்கு மாவட்டத்தில் அருந்ததியர்கள், வட மாவட்டத்தில் பறையர்கள், தென் மாவட்டத்தில் பள்ளர்கள் மெஜா ரிட்டி. எல்லா இடத்திலும் பறையர் இருக்கிறாங்க. தொடர்ச்சியா இந்த அடிமை வேலை செஞ்சுகிட்டி ருக்காங்க. கொஞ்சம் கொஞ்சம் அதை கைவிட்டி ருக்காங்க. Scatteredஆக இருக்கிறது பறையரும் பள்ளரும் சக்கிலியரும்தான்.

சக்கிலியரிலேயே மொழிவழியாக தமிழரா இருந்து பிறமொழிகள் உருவாவதற்கு முன்னால இந்த பூமி யில் இருந்த வேளாண்மைக்கு தேவையான ஏற்றம், கவலை போன்ற தோற்பொருட்களைச் செய்த அருந்த தியர்கள் - தமிழை மட்டுமே தாய்மொழியாக கொண்ட வர்கள், இங்கே இருக்காங்க. பின்னால் வந்த மன்னர் கள் - விசயநகர பேரரசு வருகிறபோது அங்கிருந்து வந்த நாயுடுகள், ரெட்டியார்கள் தம்மோடு குடும்ப அடிமைகளாக இருந்த, தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட மாதிகா சாதியினரை இங்கே அழைத்து வந்து தம்மோடு தங்க வைத்துக் கொண்டனர். இப்படி அருந்ததியர் என்கிற பேரில இருக்காங்க.

அந்த மொழிச் சிக்கலுக்குள்ளை இப்ப நாம போகவேண்டாம். Scatteredஆக இருக்காங்கன்னா பாளையக்காரர் ஆட்சி நிலவிய கோவை ஈரோடு தாராபுரம் போன்ற பகுதிகளில் அதிகமா இருந்தாங்க. தஞ்சை மாவட்டத்தில் தேடிப் பார்க்கணும் அருந்ததி யர்களை. நகரத்தில் துப்புரவு பணியாளரா இருப் பாங்க. துப்புரவுப் பணியாளரிலும் பாதிப்பேர் காட்டு நாயக்கரா இருப்பாங்க. பாதிப் பேர்தான் அருந்ததியரா இருப்பாங்க. தென் மாவட்டத்தில் - ராமநாதபுர மாவட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டத்தின் உட்கிராமங்களில் இருக்கும் சக்கிலியருக்கு தமிழைத் தவிர வேறெதுவும் தெரியாது. இப்படிப்பட்ட நிலவியல் சூழல்ல scatteredஆ இருக்கிறது - வாழ்க்கைத் தகவமைப்பில இருக்காங்க.

அப்ப எந்தப் பகுதியில் எந்தப் பிரிவு மக்கள் அதிகமா இருக்காங்களோ, அந்தந்த பகுதியில் அந்தந்த பிரிவு மக்களுக்குத்தானே அதிகமான சட்டமன்ற உறுப்பினருக்கான இடங்கள் கொடுக்கப்பட வேண்டும். ஆனா, இந்த முறையில் பிரிச்சி குடுக்காம அரசியல் கட்சிகளே ஒருதலை சார்பா சனநாயகமற்ற முறையில், பள்ளர் பறையருக்கே அதிகமான இடங்களைக் கொடுக்கிறார்கள். தலித்துக்களில் பறையர் பள்ளர்கள் அந்த இடத்தை அதிகமா பிடிக்கிறாங்க. அவங்களுக்கு MLA சீட் கிடைச்சா சரிதான்.

அடுத்து, சக்கிலியருக்குள்ளேயே அது போராட்டமா எழும்பணும். பறையர் பள்ளருக்கிடையில் ஒரு சனநாயக கண்ணோட்டம் வளர்றபொழுது, மேற்கு மாவட்டங்கள்ல உள்ள ரிசர்வ் தொகுதியில பள்ளர் பறையரை நிறுத்துனா, அந்த வேட்பாளர்களை கெரோ - மறியல் செய்யணும், அதை அரசியல் பிரச்சனையா மாத்தனும். அப்பதான் இந்தப் பிரச்சினை தீரும். சக்கிலியருக்கு 14 தொகுதிகள் கொடுக்கணும்னு வலியுறுத்தி நாங்க கிராமங்களில் 96இல் தெருமுனை பிரச்சாரம் செய்தோம். சனநாயகம்னா பறையருக்குன்னு ஒரு முடிவு, சக்கிலியருக்கு அது இல்லையா?

மதுரை தமிழ்நாடு ஓட்டல்ல 'விடுதலை வீரர் அம்பேத்கர்' நூல் வெளியீட்டு விழாவில் நான், திருமாவளவன், சந்திரபோஸ், S.T. கலியாணசுந்தரம் எல்லாரும் உக்காந்திருக்கோம். S.T. கலியாணசுந்தரம் எங்களுக்கு (அருந்ததியருக்கு) 6% உள் ஒதுக்கீடு வேணும்னு கேட்டார். அதைப் பத்தி யாரும் பேசாம உட்டுட்டாங்க. திருமாவளவன் பேசும்போது, பாராளுமன்றத்துக்குச் செல்வது என்பது வயித்துக்குள்ள போன வாழைப்பழம் காலையில் மலமாக வருவது போல பாராளுமன்றத்துக்குள் செல்லும் உறுப்பினர்கள் கழிவுகளாகத்தான் வருவார்கள் என்று பேசினார். முருகவேல்ராசன் (பள்ளர்) எழுந்து, தம்பி, வாழைப்பழம் சாப்பிட்டா அதில் புரதச்சத்து இருக்கும், கார்போவைதரேட் இருக்கும், வைட்டமின் சத்து இருக்கும். அது போகத்தான் கழிவு வரும். பழமே அப்படியே கழிவா வராது. நீ ஏன் சத்தைப் பாக்காம கழிவைப் பாக்குற அப்படீன்னு சொல்லி, பள்ளர் பறையர் கலவரமா போச்சி.

நான் பேசும்போது நான் உள்ஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்கிறேன்னு பேசிட்டு வந்துவிட்டேன். உஞ்சை ராசன் உடனே எனக்கு 3 பக்கம் கடிதம் எழுதினார். அதில், நீ எப்படி அப்படி சொல்லலாம், இருக்கிறது 18, அதுல அவங்களுக்கு 6 குடுத்திட்டா? 73 சாதி இருக்கு என்று எழுதி இருந்தார். இதற்கு கலியாண சுந்தரத்திடம் விளக்கம் சொன்னேன். அதாவது 30%ஆக இருந்த BC ஒதுக்கீட்டை 50% ஆக உயர்த்தியபொழுது எம்.ஜி.ஆர். அதை எங்கிருந்து எடுத்தார்? பொது தொகுப்பிலிருந்துதானே எடுத்தார். சக்கிலியருக்கு 6% கொடுக்கணும்னா, ஏன் 18%க்குள்ளேயோ 12%க்குள்ளேயோதான் எடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? பொதுத் தொகுப்பில் இருக்கிற 31%த்தில் இருந்து ஏன் எடுத்துக் கொடுக்கக்கூடாது? பொதுத் தொகுப்பு 31%ஐ மக்கள் தொகையில் 3% ஆக இருக்கிற மேல்சாதிக்காரர்தானே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்?

எனவே, வழிமுறைகளை தேடாமல், இருக்கிற இடஒதுக்கீட்டுக்குள்ளேயே ஏன் எண்ணிக்கை விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்க வேண்டும்? எம்.ஜி.ஆருக்குத் தெரிஞ்சது நமக்கு ஏன் தெரிவதில்லை. ஆக, சரியான தீர்வு வேணும்னா சண்டை போட்டுத்தான் ஆகணும். பள்ளர் பறையர் சண்டை போட்டுக் கொள்வார்கள் என்பதற்காக சக்கிலியர் தம் உள்ஒதுக்கீட்டு உரிமையை ஏன் விட்டுத்தர - இழக்க வேண்டும்.

அப்ப முதல்ல, சக்கிலியர் இப்படிக் கேட்பதையே தடுத்திட்டோம்னு வையுங்க. அது பெரிய அநீதி. அவங்க பேச வந்திருக்கிறதே இப்பதான் - பள்ளர் பறையர் தலித் அரசியல் வர்றபொழுதுதான். ஆக, பள்ளர் பறையருக்கு மட்டும்தானா தலித் அரசியல். நம்மளுக்கும் குறை இருக்கே, நமக்கும் பிரச்சினை இருக்கேன்னு பேச வந்திருக்காங்க. பேசறவங்களை குரல்வளையைப் பிடிச்சு அமுக்கலாமா? பேசட்டும், சத்தம் போடட்டும், மக்களைத் திரட்டட்டும், அமைப்பாகட்டும், அதை முதலில் அங்கீகரிப்போம்.

அது அறிவார்ந்த பிரச்சினையா, தீர்க்கக்கூடிய பிரச்சினையா, வர்க்கக் கண்ணோட்டத்தோடு, சனநாயக கண்ணோட்டத்தோடு இணைந்து நிற்கக்கூடிய சக்திகள் ஒரு மேடையிலே உக்காந்து பேசி, தவறுகள் இருந்தா திருத்திக்குவோம் - சரி பண்ணிக்குவோம்.

திருமாவளவன்கிட்ட பொன்னேரியில் அதுதான் பேசினேன் நான். கம்யூனிஸ்டுகளை, நக்சல்பாரிகளை கடுமையா திட்டினார் அவர். இனிமேல் இப்படிப் பேசினீங்கன்னா உங்களை மேடையில் counter பண்ணுவேன் என்றேன். கம்யூனிஸ்டுகளுக்கும் எனக்கும் முரண்பாடு இருக்குங்க. நக்சல்பாரிகளுக்கும் எனக்கும் முரண்பாடு இருக்கு. ஆனால், அது அறைக்குள் உட்கார்ந்து விவாதிக்கப்பட வேண்டிய முரண்பாடே தவிர, அவர்களை மக்களின் எதிரிகளா காட்ட வேண்டிய தேவை இல்லை. பி. ஜே. பி. காரனைப் போலவே MLகட்சியை ஏன் திட்டணும்? அது தேவையில்லை என்றெல்லாம் சொன்னேன். அவர்கள் கேட்கலை. ஏன்னா, கம்யூனிஸ்டுக்களை திட்டினதினாலைதான் அவருக்கு தினமணியில் அரைப் பக்கம் செய்தி போடுறான். பேப்பர்ல வரணும்கிற துக்காக நாம கம்யூனிஸ்டுகளைத் திட்ட முடியாது....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

....இதுல என்ன வித்தியாசம் கண்டு பிடிச்சிட்டீங்க. போராடுன்னா, கலகம் செய்யின்னா என்ன அர்த்தம் என்னாரு. வித்தியாசம் இருக்கப்போயிதானே அந்த வார்த்தையை அம்பேத்கர் போட்டிருக்காரு. போராட்டத்தைவிட புரட்சி மேலானதில்லையா? புரட்சி செய்யின்னு போட்டா என்ன, அப்படீன்னுட்டாரு. அதுவும் தப்புங்க. மூணு நாலு மணி நேர விவாதம் நடந்தது. சந்திரபோஸ், வினோத் எல்லாம் இருக்கிறாங்க. எனக்கும் தடா பெரியசாமிக்கும் திருமாவளவனுக்கும் விவாதம்.

கடைசிவரைக்கும், 'கலகம் செய்னு போட்டா நான் கூட்டமைப்பில் இருக்கமாட்டேன். இது எதிரியோடை வார்த்தை' அப்படீன்னுட்டேன். அதுக்கு நான் விளக்கம் சொன்னேன். கலகங்கிறது தன்னெழுச்சியா வர்றது, திட்டமிடாமல். அதை எதிரி அடையாளம் கண்டு நசுக்குவான். சில சீர்திருத்தங்கள் வெளியிடுவான். அதோட முடிஞ்சது. புரட்சிங்கறது ஒரு சமூக அமைப்பை மாத்தி புதிய சமூக அமைப்பை உருவாக்குவதற்கான அரசு அமைப்பை நிறுவுவது. ஆனா போராட்டம்கிறது முடிவற்றது. புரட்சிகர சோவியத் ரசியாவுக்குள்ளும், அரசு நடவடிக்கைகளிலும், கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் உள்போராட்டம் இல்லாது போனதனாலேயே எதிர்ப்புரட்சிச் சக்தி உள்ளே வந்தது. ஆக, போராட்டம்கிறது புரட்சி நடந்தாலும் இருக்கும், எதிர்வர்க்கத்தின் ஆட்சியிலும் இருக்கும். எல்லாக் காலத்திலும் போராட்டம் மனிதனுடன் நீக்கமற அக வாழ்விலும் புறவாழ்விலும் நிறைந்திருக்கும். அதுக்கு முடிவில்லை. அதனால்தான், அம்பேத்கர் அந்த வார்த்தையை போட்டிருக்காரு. Agitateஐ கலகம் செய்யின்னு ஏன் போடலைன்னா, அவருக்கு விருப்பம் இருந்திருந்தாதான் revoltன்னு போட்டிருப்பாரே?

அடுத்து 6 மாசத்தில் எலெக்சன் வந்தது. விவாதம் அப்படியே நின்னு போச்சு. அப்புறம் அந்த அறிக்கை அப்பிடியே இருக்கு.

**காலக்குறி:**

புரட்சிகர உணர்வுகளை சீர்திருத்த மயமாக்கும் கிறிஸ்தவ மிசனரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தலித் விடுதலைக்கு உதவுமா?

**அரங்க குணசேகரன்:**

புரட்சிகர உணர்வுகளை சிதைப்பது கிறிஸ்தவ மிசனரிகள், தொண்டு நிறுவனங்கள் மட்டுமல்ல, அரசு - இந்துத்துவா மிசனரிகள் - முசுலீம் மிசனரிகள் எல்லாருமே சிதைக்கிறார்கள். ஆனா, தலித் மேம்பாடுங்கிற பெயரில் திட்டவட்டமான சில நிதிகளை (adult education முதலிய பெயர்களில் வாங்கி) தொண்டு நிறுவனங்கள் வாங்குகிறார்கள். தொண்டு நிறுவனங்கள் ஆரம்ப காலத்தில், சர்வதேச அளவில் இருக்கக்கூடிய ஏகாதிபத்திய சக்திகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதுதான். ஆனா, அண்மைக்காலங்களில், பணம் வாங்குவோர் பூராவுமே புரட்சிக்கு எதிரானவர்கள் அப்படீங்கிற பார்வையில் முழுமையா பார்க்க வேண்டியதில்லை. சில சனநாயக சக்திகள் இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் சில projects போட்டு ஒரு அமைப்பு வைத்துப் பணம் வாங்குவது எதிரானது. அதற்குள் நாம் ஆழமாக செல்ல வேண்டியதில்லை. கடைத்தெருவில் நூறு இடத்தில் நன்கொடை பெறுகிறார்கள். 101வது இடம் ஒரு தொண்டு நிறுவனம்னா, அவங்க 1000 ரூபா நன்கொடை கொடுக்கிறாங்கன்னா, அது அயல்நாட்டுக் காசுன்னு பார்க்க வேண்டியதில்லை. Systemeticஆ இருக்கிற பொழுதுதான் அது எதிரானதா மாறும். சாதாரணமா தனிப்பட்ட முறையில் நன்கொடை வாங்கும்போது தொண்டுநிறுவனம்னு நாம் பார்க்க வேண்டியதில்லை. அவங்க செய்யக்கூடிய வேலைகளில் ரொம்ப நுணுக்கமா புரட்சிகர கூறுகளைக் கண்டுகிட்டு, அதை மாத்தி வேறு திசைவழிப்படுத்தி, சீர்திருத்தவாதமாக அல்லது அரசிடம் போராடிப் பெறலாம் - இந்த அரசியல் சனநாயக உரிமையை பெற்றுத் தந்துவிடலாம் - இந்த அரசே சனநாயக அரசாதான் இருக்கு என்ற நம்பிக்கையை ஊட்டும் காரியங்களைத்தான் தொண்டு நிறுவனங்கள் செய்கின்றன. அரசே எதிரானது என்று பார்ப்பதற்குப் பதிலாக, இந்த அரசிடமே எல்லாவற்றையும் பெற்றுவிட முடியும்

குலத்தொழில் ஏன் செய்யக்கூடாதுன்னா குலத்தொழிலை குறிப்பிட்ட குலத்துக்கு சொந்தமானதா பாத்தாங்க. எந்தத் தொழிலையும் யார் செய்றதுக்கும் தடையற்ற சனநாயகம் இருக்குதுன்னு சொல்றான். குலத்தொழில் செய்யக் கூடாது என்பதல்ல இப்போதுள்ள முறையில் தலித்துகளுக்கு அது அடிமைத் தொழிலே. ஒருவன் ஓட்டல் வைக்கலாம் ஒருவன் துணிக்கடை வைக்கலாம் என்பது மறுக்கப்படுது. குலத்தொழில் ஏற்கனவே ஒவ்வொரு சாதிக்கும் இருக்கு. அந்தத் தொழிலை அவர்கள் கைவிடுவதற்கு வேறு தொழிலுக்குப் போறதுக்கு தயாராயிருக்கணும். எந்த அடிப்படைச் சாதிகளும் அந்தச் சாதிக்கான சேவைத் தொழிலை விட்டுட்டு வேறு தொழில் செய்ய தடையில்லாத அங்கீகாரம் இருக்கணும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அம்பேத்கர்

என்ற நம்பிக்கையை ஊட்டக்கூடிய போக்குகளும் இருக்கு. அரசு எதிர்ப்புள்ள சில உண்மையான சனநாயக சக்திகளும் வருகிறார்கள், போராடு கிறார்கள். ஆகவே, எல்லாருக்கும் ஒரே அளவு கோலை வைக்கமுடியாது...

**காலக்குறி:**

தொண்டு நிறுவனங்களுக்கு பணம் கொடுக்கும்போது குறிப்பிட்ட இலக்குகளோடுதான் கொடுப்பாங்க. அந்த இலக்கிலிருந்து இவங்களும் மாற முடியாது

**அரங்க குணசேகரன்:**

*ஒழுங்கா வாங்கிட்டு அவங்க கொடுக்கிற instructions இன்படி நடந்தா மாற முடியாது.*

**காலக்குறி:**

அப்படித்தானே செய்யவும் முடியும்?

**அரங்க குணசேகரன்:**

*தொண்டு நிறுவனங்கள் தனக்குன்னு ஒரு வட்டா ரத்தை வச்சிக்கிட்டு ஒரு வேலை செய்து புரட்சித் தன்மையை சீரழிக்குது. ஒரு புரட்சி அமைப்புக் குக்கோ, சனநாயக அமைப்புக்கோ ஒரு உதவி செய்றாங்கன்னா, அந்த அமைப்புக்கான project போட்டு வாங்கினாலும் தப்பாயிடும். தொண்டு நிறுவ னத்தின் தனிநபர்களிடம் வாங்கும் நன்கொடையை தொண்டு நிறுவன காசுன்னு சொல்லி கொச்சைப் படுத்த முடியாது. வேறு யாரிடமும் வாங்கும் பணம் போன்றதே அது. மொத்தத்தில் தொண்டு நிறுவனம் எதிர்ப்புரட்சிகரமானதுதான். அதில் எந்த மாற்றமும் கிடையாது.*

**காலக்குறி:**

அவர்களும் தலித் விடுதலையிலும் பிற்படுத்தப் பட்டோர் விடுதலையிலும் அதிகமான பங்கு எடுத்துக் கிட்டுத்தானே இருக்காங்க.

**அரங்க குணசேகரன்:**

*விடுதலையில் அவர்கள் பெரிசா பங்கெடுக்கிறது இல்லை. தொண்டு நிறுவனம் எதிர்ப்புரட்சி வேலை யைத்தான் செய்யுது. ஆனாலும் அவர்களுக்குள் சில சனநாயக சக்திகள் - நல்லவர்கள் வந்திருக்கிறார்கள், தனிப்பட்ட நபர்களாக - என்பதைப் பார்ப்பதற்கு மறுக்க வேண்டியதில்லை.*

**காலக்குறி:**

தற்போது தலித் இயக்கங்களை இந்துத்துவ பாசிச கரங்கள் அரவணைக்கத் தொடங்கி இருக்கு என்று ஒரு கருத்திருக்கு, இதுக்கு உங்க பதில்?

**அரங்க குணசேகரன்:**

*இந்துத்துவ பாசிசம் - பாரதிய ஜனதா, RSS வடிவத்தில் - தலித்துகளை அரவணைப்பது என்பது புதிய விசயம் அல்ல. அன்று காங்கிரஸ் கட்சி இந்துத் துவாவுடைய நிலப்பிரபுத்துவத்துடைய பாதுகாவலனா யிருக்கிறபோது, சுதந்திரம் வாங்கி குடுத்த கட்சிங்கிற மாயையில் பெருந்திரளான மக்கள் கிராமப் பண்ணை யார்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலத்தில், பண்ணையார்களின் பாதுகாவலாக மதமும் பாராளு மன்றமும் இருந்தபோது பண்ணையாருக்கு அடிமை யாக இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பெருந்திரளா காளை மாட்டுக்கும் பசு மாட்டுக்கும் ஓட்டுப் போட் டாங்க. அன்னைக்கு இந்துத்துவா இவர்களைப் பயன் படுத்திக் கொண்டது. அது அரசியல் தளத்தில் ஓட்டு வாங்க மட்டும் பயன்படுத்திக் கொண்டது. அன்று இந்துத்துவாவை அரசியலில் இருந்து பிரிச்சி ஒரு தனி systemஆக வளர்க்கனும் என்ற தேவை ஆளும் வர்க்கத்துக்கு இருக்கலை. ரெண்டும் ஒண்ணோட ஒண்ணா பின்னிக் கிடந்தது. ஒரு காலத்தில் அரசிய லுக்காக அரசியல் அதிகாரத்தை நிறுவிக்கொள்ள இந்துத்துவாவை பலப்படுத்துவது ஒரு பக்கம். இதை யும் தாண்டி இந்துத்துவா தனிமைப்பட்டுப் போய் விடாமல், அரசியல் களத்துக்குள் பல்வேறு சக்திகள் போகும்போது அதற்குள் சில கலவரங்கள் வந்துகூட இந்துத்துவா பலவீனப்பட்டா, ஆளும் வர்க்கத்துக்கு அதில் பெரிய ஆபத்து இருக்கிறதென்கிறத்துக்காக ஒரு கருத்தியல் கலாச்சார தளமாவே வளர்க்கிறது, குறிப்பா கடந்த 10 ஆண்டுகளில் தலித் தெருவில்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டுமல்ல, பேருந்துகளில் சில சுலோகங்களை ஒட்டுவது, BJP - இந்து முன்னணி - RSS ஆகியோர் பேருந்துகளில் சில சுலோகங்களை ஒட்டுறாங்க. மருத்துவமனையில் வேல் நடுவாங்க. இதையெல்லாம் செய்வது பொதுமக்கள் அல்ல. அந்தப்பகுதியில் உள்ள இந்துத்துவா ஆதரவாளர்கள்.

பாங்கில் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை போய் பணத்துக்கு பூசை பண்ணுவாங்க. முக்கியமான இடங்களில் ஏதோ ஒரு விதத்தில் இந்துத்துவா அடையாளம் இருக்கும். சாலை ஓரத்தில் சும்மா இருக்கிற இடங்களில் திடீர்னு ஒரு அரசமரத்தையோ வேப்ப மரத்தையோ நட்டு வைச்சு கோயில் ஆக்கிடுவாங்க. இந்த மாதிரி நேரடியாக - பெரியார் காலம் - அதற்குப் பின்னால்கூட இந்துத்துவாவுக்கு எதிரான சக்திகள் அரசியலில் சொந்தமா வலுவா இருந்த காலத்தில் அவங்க நேரடியா அரசியல் தளத்துக்கு வர முடியாம கருத்தியல் தளங்கள்ல, பண்பாட்டுத் தளங்கள்ல, ஏற்கனவே இந்த மக்கள்கிட்ட இருக்கிற ஆன்மீகத்தைப் பயன்படுத்தி செல்வாக்கு செலுத்திக்கிட்டிருந்தாங்க.

பின் மண்டைக்காட்டு கலவரத்தை ஒட்டி, மீனாட்சி புரத்தில் தலித்துகள் மதம் மாறினதை மையமா வைச்சு எங்கெல்லாம் மதக் கலவரங்களை, இந்துத்துவத்தின் கலவரம்னு சொன்னா, சாதி உரிமைக்கான போராட்டங்கள் வேகமா வருது. முசுலீம்களுக்கும் சாதி இந்துக்களில் செல்வாக்கு மிக்க சாதிகளுக்கும் மோதல் வருகுதுன்னா வியாபாரங்கள்ல தொழில் துறையில் அக்கம் பக்கமா ஒருத்தரை ஒருத்தர் சார்ந்து வாழவேண்டிய நிலை இருக்கிறது. அதனால் நேரடியா BCக்கும் SCக்கும் இடையிலான மோதலைப் போலவே SCக்கும் முசுலீமுக்கும் இடையிலான மோதலை காட்டி SCகளை இந்துக்களா பாவிச்சி இந்து - முசுலீம் கலவரங்களாக சித்தரிக்கிறது பாருங்க.

ஏதோ இந்து மதத்தில் சாதி இருக்கிறதா சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களை திராவிட, கம்யூனிஸ்டு இயக்கங்கள் கொச்சைப்படுத்துகின்றன. முசுலீமும் பாருங்க அப்படித்தான் செய்யறாங்க. அப்ப நாமெல்லாம் ஒன்று, முசுலீம்தான் எதிரின்னு சொல்றதுக்காக நாகர்கோயிலில் தொடங்கி முதல்ல கடற்கரை ஓரங்களைத்தான் கவர் பண்ணியிருக்காங்க. - அங்கு தலித் பெல்ட்டில் இந்து முன்னணி - RSS போன்ற அமைப்புகளை உருவாக்கினாங்க. அதுக்கப்புறம் கொஞ்சம் கொஞ்சம், இந்த மீனாட்சிபுரம் போன்ற கலவரங்கள் வர்ற இடத்தில் உடனடியாக ஆதிசங்கராச்சாரியாரை அனுப்பி, காந்தி அரிசன சேவா சங்கத்தாரை அனுப்பி சமரசம் பண்ணுறது. அடுத்து, ஆலயப் பிரவேச பிரச்சனைகள் வரும்போது தாழ்த்தப்பட்டோர் தனிக்கோயில் கட்ட, சங்கர மடத்திலிருந்து நிதி கொடுக்கிறது. ஏன்னா பொதுக்கோயிலுக்குள்ளை போறதனாலைதான் கலவரம் வருது, உன் தெருவுல பள்ளிக்கூடம் இருக்கிறமாதிரி, மின்சாரம் தனித்தனியா இருக்கிறமாதிரி, கோயிலும் தனியா கட்டிக்குங்கன்னு 10000 ரூபா குடுத்ததும், நம்ம குலதேவதைக்கு கோயில் கட்ட சங்கரமடத்துல பணம் குடுக்கிறாங்கன்னு அந்த மடத்துடன் ஒரு இணைப்பை பிணைப்பை உருவாக்குற கலாச்சார போக்குகள். இப்படியாக தலித்துகள் மத்தியில் செல்வாக்கு செலுத்துதல்.

என் நேரடி அனுபவம்: நான் எம். ஏ. படிக்கிற பொழுது திருச்சி கமால் முகம்மது கல்லூரி ஆஸ்டல்ல கீழே ground floorஇலை கதவை சாத்திகிட்டு தினம் ஒரு பையன் ஏதோ ஒரு பாட்டைப் பாடி ஒப்பிச்சிகிட்டே இருப்பான். கருப்புப் பாசி மாலை, ருத்திராட்ச மாலை, சந்தனம், குங்குமம் இல்லாம அவனைப் பார்க்கவே முடியாது. என்னடா நம்ம SCபையன் தினம் இப்படி உள்ளே கும்பிட்டுக்கிட்டிருக்கானேன்னு ஒரு நாள் போயி பார்த்தா பெரியார் படம் இருக்கு. பெரியார் படத்துக்கு இவன் சந்தனம் குங்குமம் வைச்சு - 64வது நாயன்மார் அவரு!

எப்படிப்பா இதெல்லாம் உனக்குத் தெரியும்? எங்க ஊர்ல இந்து மறுமலர்ச்சி இயக்கம்னு ஒண்ணு இருக்குது. 83இல் - முசிறிக்குப் பக்கம் எப்படி ஏற்பாடு பண்ணியிருக்கான் பாருங்க. தலித் தெருவுக்கு போயி, சாதி ஒழிப்புக்காக, இந்துக்கள் சமத்துவமா வாழணும்கிறத்துக்காக கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு தூதர் பெரியார்னு சொல்லி, அவருக்கே பொட்டு வைச்சி விட்டுட்டாங்க. அதிர்ச்சி அடைந்தேன். முத்தரச நல்லூரில் People's Solidarity Association சார்பா ஜானின்னு ஒருத்தர் ஒரு காம்ப் நடத்தினாங்க. அப்ப RSS பத்தி நான் கேள்வி கேட்டதுமே ஆச்சரியமா பயந்து போனாங்க. அதனாலைதான் அனுபவரீதியா, RSS அபாயம் - ஆதிதிராவிடருக்கு ஒரு எச்சரிக்கைன்னு கட்டுரை எழுத முடிந்தது (1984).

இந்துத்துவா என்பது இன்று ஒரு தனிக் கலாச்சார அமைப்பாக இருந்துகிட்டு, அரசியலில் தவறு நடந்தா அதை தட்டிக் கேட்கிற மாதிரி காட்சியளிச்சுக்கிட்டு, உடைமை வர்க்க சமுதாயத்தில் இந்துத்துவ மனப்பாங்கு - வீரம் நேர்மை துணிவு இருந்தா சாதிச்சிடலாம்கிற show காட்டிக்கிட்டிருக்கு. பாரதீய ஜனதா அரசு செய்கிற தவறுகளுக்கெல்லாம் முட்டுக் கொடுக்கிறவங்களாவும் போயிகிட்டிருக்கு. சுதேசி இயக்கம் லாம் பேசினாங்களே, அவங்கள இப்ப கண்ணால பார்க்க முடியுதா?

காங்கிரசைவிட வேகமா இருக்காங்க. காரணம், அது ஒரு வாய்ச்சொல். ஆக இந்துத்துவாங்கிற அடிப்படையே சாதியை பாதுகாக்கிறதுதான். பிரபுத்துவ கருத்தியலை - உற்பத்தி உறவுகளை பாதுகாக்கிறதுதான். அதை தாழ்த்தப்பட்டோர் எந்த அளவுக்கு வேகமா முறியடிக்க முடியும்னா, ஒரு அரசியல் கல்வி மூலமாதான் முடியும். பிற்படுத்தப்பட்டவர்களில், தி.மு.க. - அ.தி.மு.க.விலும் ஒரு பெரிய section



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த அடிப்படையில்தான் பிரிந்துள்ளது. RSSஇன் தாக்கம் தாழ்த்தப்பட்டவர்களில் இன்னும் குறைவுதான் - சென்னை போன்ற சில நகரங்களில் (நீங்க சொல்ற இடங்களில்) கொஞ்சம் இருக்கலாமே தவிர நகரங் களில் எல்லாக் கட்சிக்குமே அடியாளா இருக்கி றதுனாலை - காசு செலவுக்கு இல்லை, விவசாய உற்பத்தி இல்லை, தொழில் இல்லை - வணிக மில்லை. எனவே கட்சிக்கு அடியாளா இருக்கிறது, யார் கூப்பிட்டாலும் செய்யிறதுங்கற அடிப்படையில் சில இடங்களில் அப்படி இருக்கலாம். ஆனா அடிப்படையில் இப்பவும் நாட்டில் தாழ்த்தப்பட்டோர் தெருக்களில் அம்பேத்கர் போயிருக்கும் அளவுக்கு, தலித் இயக்கம் போயிருக்குமளவுக்கு, அரசியல் கட்சிகள் போயிருக்கும் அளவுக்கு RSS போயிடலை. ஆனாலும், அதற்கான முயற்சிகள் நடந்து கொண்டி ருக்கு. அதைத் தடுக்கவேண்டிய அவசியம் நமக்கு இருக்கு.

**காலக்குறி:**

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறைகளுக்கு எதிராக கோயில் நுழைவுப் போராட்டம், தனி டம்ளர் ஒழிப்பு, சுடுகாட்டுப் பாதைக்கான போராட்டம், சாதி மறுப்புத் திருமணம் போன்ற சாதி, சீர்திருத்த போராட் டங்களை மேற்கொள்கின்றனர். மாறாக, இவைகளை முற்றிலும் ஒழிக்க வர்க்கப் போராட்டத்துக்கான பாதையில் திரளாமல் போவது ஏன்?

**அரங்க குணசேகரன்:**


நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு என்பது ஒரு வலுவான ஆயுதம் தாங்கிய மொத்த சமூகத்தின் உழைக்கும் மக்களின் திரட்சியில் எழுந்து சந்திக்கும் எதிரிக்கு எதிரான யுத்தம் எனலாம்.

டீ கிளாஸ் போராட்டம்ங்கிறது ஒரு வளர்ந்து வருகிற விஞ்ஞான முதலாளிய புறநிலை வளர்ச்சியில் தொழில்துறை, நகர நாகரிக வளர்ச்சியில்கூட, இது (தனி டம்ளர்) தப்புன்னு சொல்லக்கூடிய சக்திகளின் எண்ணிக்கை பெருகியிருக்கு. அந்த ஆதரவோடு இதை ஒழித்துக் கட்ட சாத்தியம் இருப்பதால், இந்த அநீதி இந்தளவு விஞ்ஞான வளர்ச்சி நிலையிலும் இருக்குதேங்கிற கோபத்துல, இரட்டை டம்ளரை எடுக்கிறோம். இரட்டை டம்ளர் நிலவுவதற்கான கருத் தியல் அடிப்படை நிலப்பிரபுத்துவ அடிப்படைதான். நிலப்பிரபுத்துவ அடித்தளத்தை வீழ்த்துவது நீண்டகால போராட்டத்தின் வளர்ச்சி - அதிகாரத்தை கையிலை எடுக்கிற விசயம். அதுவரை இது காத்துக்கிட்டி ருக்கணும்னு அவசியமில்லை. இது ஒரு சனநாயக உரிமை. குறைந்த பட்சம் போராடினாலே, சட்டவாதத் தில்கூட சில இடங்கள்ல முறியடிக்க முடியும். ஆகவே, இதைப் புரட்சிக்கு முரணா பார்க்க வேண்டி யதில்லை. அடுத்தது, ரெண்டு சுடுகாடுங்கறதை மாத்தி ஒரு சுடுகாடு கேக்கறதும், சுடுகாட்டுக்கு பாதை வேணும்னு சொல்றதும் தவறில்லை. இதுவும் சனநாயகத்துக்கான ஒரு போராட்டம்தான்.

கோயில் நுழைவு போராட்டம்கிறதும் கோயில் களில் வடம் இழுக்கறதும், ஒட்டுமொத்தமா ஒரு சனநாயக போராட்டமா பார்க்க முடியும். கண்டதேவி கோயில்ல வடம் இழுக்கக்கூடாது என்கிறார்கள் என் றால், அந்த வடத்தை பனை நாரோடு அல்லது தென்னை நாரோடு தொடர்பானதாக மட்டும் பார்க்க முடியாது (வடம்னா கயிறுதான்). கண்டதேவி என்றால் நீலகண்டம். அவருடைய தேவி பார்வதி - பரமசிவன். இது ஒரு சிறுதெய்வ வழிபாட்டைத் தாண்டி உடைமை வர்க்கங்கள் ஆளுமையில் இருக்கிறபொழுது அந்த வர்க்கங்கள் தன்னுடைய ஆற்றலால் வடிவமைக்கப் பட்ட ஒரு ஆலயம். ஆலயத்துக்கு 500 ஏக்கர் - 400 ஏக்கர் நிலம். அதற்கு உண்டியல் வருமானம். அதில் ஒரு சாதிய சமூக தற்பெருமையை காப்பாத்துற தன்மை - அது நிலப்பிரபுத்துவத்தின் சின்னம். அந்தக் கோயிலுக்கு சேவை - வேலை செய்வோர் தாழ்த்தப் பட்டவர்கள். அப்போ, வடம் இழுக்கிறேன், கோயிலுக் குள்ள போறேன்கிறது நிலப்பிரபுத்துவ சொத்து அதி காரத்தை - சாதி அதிகாரத்தை தகர்க்கிற விசயமா அவன் பார்க்கிறான். அப்ப அதை நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டம்ன்னுதான் பார்க்கணுமே தவிர வெறுமனே சனநாயக போராட்டமா பார்க்க முடியாது.

கிராமப்புறத்தில் ஒரு புத்து இருக்குது, வேப்ப மரம் இருக்குது. அதை யாரும் கிட்டே போயும் கும்பிடலாம். அதில் பிரவேசிக்கவோ வெளியில் வரவோ ஒன்றுமில்லை. அது வெறும் open place.

பெரியார்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாவோ போன்றவர்களுடைய அரசியல் முதிர்ச்சி எங்கிருந்து வரும்னா, எவ்வளவு தான் அவர் கார்ல் மார்க்சியத்தை ஏத்துக்கிட்டாலும், சொந்த மண்ணைப்பத்தி ஆழமா படிச்சவர் மாவோ. அதனாலைதான் அவரால் அதைச் செய்ய முடிஞ்சது. நாமும் இதுமாதிரி நம்மை வளத்துக்கிறத்துக்கு, இன்னும் ஆழமா இந்த நாட்டில் சாதியத்தை மதத்தை புரிஞ்சுக்கிறதுக்கு பெரியாரை அம்பேத்கரை படிக்க வேண்டும். அவர்களை மட்டுமல்ல, இன்னும் அவர்களைப் போன்ற இந்தியாவிலுள்ள பலரையும் — வைணவர்களை ராமானுசரைக்கூட படிக்கவேண்டி இருக்கும் — சித்தர்களைப் படிக்கவேண்டி இருக்கும்.

ஆலயத்தை தாண்டினா - சில பேர் சீசனுக்கு மட்டும் பூசை போடு கையில், கிடா வெட்டுகையில் - புடவை வச்சு, பச்சை தட்டியை கட்டி வைச்சுக்கிட்டு - அன்று கும்பிட்டிட்டு போயிடுவான். அப்புறம் அது விழுந்து காத்துல காஞ்சி போயிடும் - இதுதான் அந்த வழிபாடு. அதற்கு மேல் கொஞ்சம் வசதி உள்ளவர்கள், அது எந்த சாதியாக இருந்தாலும், ஓட்டு கொட்டகை போட்டுக்குவான். அப்புறம் சிலர் கட்டிடம் கட்டிக்குவான். சிமெண்டுக் கட்டிடமா கட்டாத வரையிலும் அந்தப் பகுதியிலுள்ள சாதிக்காரன்தான் பூசாரியா இருப்பான். சிமெண்டுக் கட்டிடம் கட்டிட்டா அதுக்கு இவனே போயி அய்யரை அழைச்சி வந்து பூசாரி ஆக்கிடுவான். ஏன்னா, கும்பாபிசேகமெல்லாம் நம்ம சாதி பண்ணக்கூடாதுங்கற கருத்தெல்லாம் ஏற்கனவே இவன்கிட்ட இருக்கு. அதனாலை சங்கர மடத்து ஐயர்க நாலஞ்சி பேரை கொண்டாந்து சவுண்டிய ஊதி, இவன் கட்டிக்கிட்டு வெளியில் நின்னுக்குவான். அவனை உள்ள வச்சிடுவான் - அப்போ உடைமை வர்க்கங்களிடையே, சாதிகளிடையே என்னென்ன பொருளாதார தட்டு இருக்கோ, அதுக்குத் தகுந்த மாதிரி கோயில்களின் standard மாறுது. ஒரு கோயில் அப்படி இருக்கு, ஒரு கோயில் சும்மா தெருவில மரமும் புத்துமா இருக்கு. அதை கும்புடுறதுக்கும், கண்டதேவின்னு சொல்லி 100 அடி உயரத்துலை ஒரு கோயில் கட்டி வைச்சுக்கிட்டு என் சாதி கோயில்னு சொல்றதுக்கும் வித்தியாசம் எங்க இருக்குன்னு பார்க்கணும். அந்த கோயிலின் கட்டுமானம், அதுக்கான பொருளாதாரம், அந்தக் கோயிலுக்கு சுத்தி இருக்கிற சொத்து, அந்தக் கோயிலால் கிடைக்கக்கூடிய வருமானம், திருவிழா நடத்தினா வரக்கூடிய லாபம் 5 இலட்சம், 10 லட்சம், இதுல தலித்துக்கு இடம் இருக்குன்னு சொல்லிட்டா, வடம் இழுங்கண்ணு சொல்லிட்டா அதற்கான பங்கைக் கொடுக்கணும். ஆக, உடைமையை தகர்க்கிற விசயமாதான் பார்க்கிறான். வெறுமனே பனை நாரு - தென்னை நாரு - அதனாலை அதை யாரு புடிச்சு இழுத்தா என்ன வராதா - என்பதல்ல. பனை நாருக்காக பனை மரத்துல ஏறி வெட்டுறவனே பறையனா தான் இருப்பான். அவன் கயிறு திரிக்கிற வரையிலும் தீட்டு இருக்காது. அதை கோயிலிலை கொண்டு போயி தேரிலை கட்டி இழுக்கறப்பதான் தீட்டு வரும். அப்பிடீன்னா என்ன? அது நிலப்பிரபுத்துவ கருத்தியல்தானே - நிலப்பிரபுத்துவ கட்டுமானத்துல வந்ததுதானே? அப்ப அதை எதிர்த்த போராட்டம்கிறது, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டம்தான்.

**காலக்குறி:**

ஆனா 50 - 60 - 70இல பாத்தீங்கன்னா விவசாய போராட்டம்கிறது ரொம்ப உக்கிரமா இருந்தது.

**அரங்க குணசேகரன் :**

ஆனா, அன்னிக்கு கம்யூனிஸ்ட் கட்சிகிட்ட இருந்த பார்வை - வர்க்கப் போராட்டத்தில் வலுவா இருந்தாங்க. முதன்மையா பெருந்திரளான நிலவுடைமையை பறிச்சி ஏழை எளியவர்களுக்கு சொந்தமாக்கினது கம்யூனிஸ்ட் கட்சி....

**காலக்குறி :**

அப்ப இதெல்லாம் இல்லாம, வெறும் அந்த போராட்டமே...

**அரங்க குணசேகரன்:**

அது என்னன்னா, பெரியார் - அம்பேத்கர் சாதிய சீர்திருத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மா ஓ சேதுங்

வாதிகள், மார்க்சிய லெனினியம்னா வர்க்கப் போராட் டம் அப்படீன்னு மார்க்சிய லெனினியர்கள் சொன்னது னால, பின்னால பெரியார் - அம்பேத்கரை அரசிய லில், தம் சாதி ஒழிப்புப் போராட்டத்துக்கான மூலவர் களாகவும் அதற்கான சனநாயக சக்திகளாகவும் பார்க்கத் தொடங்கிய தலித் இயக்கங்கள், திராவிட இயக்கத்தில் இருந்து வந்த தமிழ்த் தேசியக் கொள்கை பெரியார் - அம்பேத்கரை சனநாயக சக்திகளாகப் பார்த்த நக்சல்பாரி இயக்கத்திலிருந்து வந்த சில சனநாயக சக்திகள் எல்லாம் சேர்ந்து, பெரியார் - அம்பேத்கரையும் சாதி ஒழிப்பு வர்க்கப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று, நக்சல்பாரி இயக்கம் வழி தவறிட்டதா சொல்லிக்கொண்டு, அந்தக் காலகட்டத்தில் மார்க்சியத்தைக் கைவிட்டுட்டு இதை எடுத்துக் கொண்டார்கள்.

மார்க்சிய அடித்தளத்தில் நின்றுகொண்டு பெரியா ரையும் அம்பேத்கரையும் துணையான சக்திகளாக எடுத்துக் கொள்வதற்கு மாறாக, மார்க்சியம் - லெனி னியம் இதை எல்லாம் பார்க்கத் தவறிவிட்டது, பெரி யார் - அம்பேத்கர்தான் இந்த மண்ணின் மார்க்ஸ் என்று சொல்ல ஆரம்பித்து, மார்க்சியத்தை விட்டுட்டு இதை தூக்கிகிட்ட வேலைதான் அது.

அப்போ, பெரியார் - அம்பேத்கரை மறுதலித்தா லும், இந்துத்துவா சாதியத்துக்கு எதிரான ஒரு முழுமையான ஒரு கருத்தியல் போராட்டத்தை இங்கே நடத்த முடியாது. மார்க்சியத்தை புத்தகத்திலை படிச்சிட்டு அப்படியே செய்யவும் முடியாது. மார்க்சி யம் அனைத்து தழுவிய மாறுதலுக்கான ஒரு அறிவியல். அந்த அறிவியல் இந்த மண்ணில் எத்த கைய சூழலில் சரியா பொருத்தப்படணும்கிற விசயத் தில் இருந்துதான் பெரியாரையும் அம்பேத்கரையும் துணைக்குக் கொண்டு வரணுமே தவிர, பெரியார் - அம்பேத்கர் அரசியல் ஒரு கட்டத்துக்கு மேல் தீர்வு தரும் அரசியல் அல்ல. சனநாயகரீதியான சில சீர் திருத்தங்களுக்கு - முன் பாய்ச்சலுக்கு பயன்படும்.

இதெல்லாம் எங்கிருந்து வருதுன்னா, சீனாவில் இருந்து. ஒரு சன்யாட் சென்ன படிக்காம மாவோ அங்க புரட்சி நடத்தலை. ஆனால், இந்தியாவில் நக்சல்பாரிகள், அம்பேத்கர் பிற்போக்குவாதி, இந்நாட் டுக் கலாச்சாரமெல்லாம் நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் என்று சொல்லி, இங்குள்ள இலக்கியம் எதையுமே படிக்காமே எல்லாவற்றையும் அங்கிருந்து நேரடியா இறக்குமதி பண்ணிக்கறோம்னு சொன்னதன் விளைவு, இவற்றில் இருந்த சாதகமான அம்சங்களை அவர்கள் மறுக்க வேண்டியதாப் போச்சு. மாவோ போன்றவர் களுடைய அரசியல் முதிர்ச்சி எங்கிருந்து வரும்னா, எவ்வளவுதான் அவர் கார்ல் மார்க்சியத்தை ஏத்துக்கிட் டாலும், சொந்த மண்ணைப்பத்தி ஆழமா படிச்சவர் மாவோ. அதனாலைதான் அவரால் அதைச் செய்ய முடிஞ்சது. நாமும் இதுமாதிரி நம்மை வளத்துக்கி றத்துக்கு, இன்னும் ஆழமா இந்த நாட்டின் சாதி யத்தை மதத்தை புரிஞ்சுக்கிறதுக்கு பெரியாரை, அம் பேத்கரை படிக்க வேண்டும். அவர்களை மட்டுமல்ல, இன்னும் அவர்களைப் போன்ற இந்தியாவிலுள்ள பலரையும் - வைணவர்களை! ராமானுசரைக்கூட படிக்கவேண்டி இருக்கும் - சித்தர்களைப் படிக்க வேண்டி இருக்கும்.

இதை எல்லாம் மறுத்தவர் நக்சல்பாரிகள். 'பறைச் சியாவதேதடா, பாளத்தியாவதேதடா, பறைச்சி போகம் வேறதோ, பாளத்தி போகம் வேறதோ இறைச்சி தோல் எலும்பினில் இலக்கமிட்டிருக்குதோ' என்றெல்லாம் சொல்லி 300 - 400 வருசத்துக்கு முன்பே சித்தர்கள் பாடியிருக்காங்க. இதெல்லாம் மார்க்ஸே தோன்றாத காலத்தில் தோன்றிய பாட்டு. ஆனால், இதெல்லாமே நிலப்பிரபுத்துவ இலக் கியம் - அப்படீன்னுதானே நக்சல்பாரிகள் சொன் னாங்க. என்னைக்கூட படிக்க விட்டாங்களா? Library யிலை போய்ப் படிப்பேன். என்ன, இந்த நிலப்பிரபுத் துவ கல்வியைப் போய் இவ்வளவு ஆழமாப் படிச்சுக் கிட்டிருக்கீங்க எந்த நேரமும்? நீங்க காலேஜை விட் டுட்டு வந்திடுங்கன்னு சொன்னாங்கள்ல? நான் அனுபவிச்சவன்ல ML பார்ட்டியிலை? அதைக் கேட்டி ருந்தா நானும் ஒரு தற்குறியாத்தான் இருந்திருக்க முடியும். ஆக, படிக்கிறதே குத்தம்னு சொன்ன காலங் கள்லாம் உண்டு நக்சல்பாரிகளிடத்தில்.

**காலக்குறி:**

"இன்று நம் தேவை, இந்திய சிந்தனை மரபுக்கு எதிரானதும் இந்துத்துவத்திலிருந்து துண்டித்துக் கொண்டதுமான ஒரு புதிய எதிர்ப்பு சிந்தனை முறை தான் - மக்களின் போராட்ட உணர்வுகளை வளர்த்துச் செல்ல உதவும்"னு எழுதியிருக்கீங்க, ஒரு பத்திரிகை யிலை. இந்திய சிந்தனை மரபுக்கு எதிரானதுன்னு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதைச் சொல்றீங்க? எதிர் சிந்தனைன்னு எதைச் சொல்றீங்க?

**அரங்க குணசேகரன்:**

இந்திய சிந்தனை மரபுங்கிறது இந்துத்துவா சிந்தனை மரபுதான். அது சைவமா இருந்தாலும் சரி, வைணவமா இருந்தாலும் சரி.

**காலக்குறி:**

அப்படி சொல்லிட முடியுமா?

**அரங்க குணசேகரன்:**

அப்படித்தான் இந்தியாவின் சாதிய கட்டமைப்பு, ஆன்மீக தொடக்கம் - அதாவது, இருக்கு காலத்திலிருந்தே இயல்பாயிருந்த இயற்கை வழிபாட்டின்மீது ஒரு கருத்தியல் செல்வாக்குச் செலுத்தி, வர்க்க சமுதாயம் வளர வளர வழிபாட்டு முறைகளிலும் மாறுதல் ஏற்பட்டு, ஒரு சாதி இறுக்கம் மதவடிவத்தில் பாதுகாக்கப்பட்டு, அதற்கான தத்துவங்கள் புராணங்கள் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கு. இந்திய சிந்தனை மரபுங்கறதே இந்து சிந்தனை மரபாதான் இருக்கு. அதில் எதிரான சிந்தனை மரபுகளும் வந்திச்சு. அதெல்லாம் தோத்து போயிடுச்சு. ஆசிவகம், சார்வாகம், புத்தம், சமணம் எல்லாம் வந்தது. சித்தம்கூட இந்திய சிந்தனை மரபில் ஒன்றுதான். ஆனா நிக்க முடியலை. இவை அத்தனையையும் அடித்துத் தள்ளக் கூடிய பெருவெள்ளமாக இந்து சிந்தனை மரபென்கிறது - இந்த நாட்டின் செல்வாக்குப் பெற்ற ஒரு மரபா போயிடுச்சு. பல கோடி மக்களுடைய வாழ்க்கையை அது சீரழிச்சிருக்கு.

**காலக்குறி:**

பொதுவா இருக்கிற இந்திய சிந்தனை மரபுக்கு, ஒட்டு மொத்த பிரதிநித்துவமா இந்துத்துவத்தை எப்படி நீங்க சொல்ல முடியும்?

**அரங்க குணசேகரன்:**

இந்திய சிந்தனை மரபென்பது சாதிய சிந்தனை மரபுதான். சாதிங்கிறது இந்துத்துவாதான். நான் அப்படித்தான் பார்க்கிறேன். வேறு எந்த மரபு இருக்கிறதாவும் எனக்குத் தெரியலையே. இந்திய சிந்தனை மரபில் இடையிடையே மின்னல்போல சில மாற்றுச் சிந்தனைகள் வந்திருக்கு. அந்தச் சிந்தனைகள் செல்வாக்குச் செலுத்தியிருக்கா இந்தியாவுல?

**காலக்குறி:**

புத்தம் செல்வாக்குச் செலுத்தலையா?

**அரங்க குணசேகரன்:**

புத்தம் செல்வாக்குச் செலுத்தி எங்க நின்னிருக்கு? கொஞ்ச காலத்தில் அது அடிபட்டிருச்சே. வந்து ஒரு நூற்றாண்டுகூட அது நிக்கலை. மறுபிறவி பற்றி அவர் சொல்றாரு. மறுபிறவி எப்படி வருதுன்னா, மறுபிறவியை புத்தர் ஏத்துக்கிறார். ஒரு மனிதர் செத்த உடனே அந்த உடம்பிலுள்ள ஐந்து புலன்களும் chemicalsஉம் அப்படியே காத்திலை கலந்து போயிருது - அஞ்சு சேர்க்கைகளும் என்றார் அவர்.

வேறொரு சூழலில் ஒரு மனிதன் தோன்றுகிற பொழுது அந்த ஐந்து ஆவிகளோ/ chemicalsஓ/ சேர்மானங்களோ இணைந்து மறுபிறவி நேர்கிறது என்றுதான் சொன்னாரே தவிர, ஒரு மனிதன் செத்து அவன் ஒரு பிறவியில் நாயாகவும் ஒரு பிறவியில் பார்ப்பானாகவும் ஒரு பிறவியில் பறையனாகவும் பிறப்பதென்பது பொய் என்றுதான் சொன்னார்.

ஆனா, மறுபிறவியை அவர் முழுமையா மறுத்திருந்தார்ன்னா அந்தச் சிந்தனைமுறை வெற்றி பெற்றிருக்காது. மறுபிறவிக்கே ஒரு புது விளக்கம் கொடுக்கப் போய், அந்தப் புது விளக்கத்தை இவனுக்கேற்ற விளக்கமா ஆதிசங்கரர் கொண்டு வந்திட்டார். அப்ப, மறுபிறவித் தத்துவத்தையே அவர் முழுமையா தூக்கி எறியலை. ஆசிவகம் என்ற இன்னொரு தத்துவத்திலும் மறுபிறவி பற்றிச் சொல்றான் - மனிதன் செத்தா செத்ததுதான், அதுக்குப் பிறகு எதுவுமே இல்லை. கழுத்து அறுக்கப்படறபொழுது எல்லாம் அப்படியே காத்துல கலந்திடுது என்கிறது அது. சார்வாகம் பரவாயில்லை. அது தெளிவா சொல்லாட்டியும் எனக்குக் கொஞ்சம் பிடித்தது அது. சைவ - வைணவத்தை பார்த்தா அவை போதிக்கும் அகிம்சை புத்தத்தில் இருந்து எடுத்துக் கொண்டது. இவங்க பங்களிப்பு 8000 சமணர்களைக் கழுவேத்தி சைவம் வளர்ந்திருக்குது. அதனால், இங்கு எல்லாத் தத்துவமும் உடைமை வர்க்கத்தை - சாதியத்தை பாதுகாக்கிறதாதான் - பாதுகாக்கிறதுக்காகத்தான் இருந்திருக்கே ஒழிய, இந்திய சிந்தனை மரபு இதுவரை இந்துத்துவா சிந்தனை மரபுதான் - சாதியத்தை பாதுகாக்கிற, பராமரிக்கிற, வளர்த்துச் செல்கிற மரபுகளாத்தான் இருக்கு. தொடக்கத்திலிருந்தே அது அப்படித்தான் இருக்கு.

என் கருத்தில், ஆரியர் வருகைக்குப் பிறகு இந்துத்துவா என்பதல்ல. ஆரியர் வருகைக்கு முன்பே சாதிகள் இருந்தது - தொல்குலங்கள், தொழில் குலங்கள், இனக்குழுக்கள் அப்படியாக இருந்தது. அதன் மீது சமூக உடைமை வர்க்கத்துக்கு, அரசர்களுக்கு ஏற்படக்கூடிய பாதுகாப்பு உணர்ச்சியில் இருந்துதான் அந்த புரோகிதர்கள் - ஆரியர்கள் இதுக்கு தத்துவங்களையும் சட்டகங்களையும் உருவாக்குகிறவர்கள். அதுவே மனுவுக்குப் பிறகு சட்டமாக்கப்படுது. ஆக, சாதி என்பது ஆரியர்கள் கொண்டு வந்ததல்ல. ஏற்கனவே சாதிக்கான கூறுகள் இருக்கு. சாதிக்கான அடையாளங்கள் இருக்கு. தொழில் அடிப்படையில் சாதிகள் இருக்கு. ஆரியர்கள் மட்டுமே உருவாக்கி இருந்தா தொழில் அடிப்படையில் அல்லாத சாதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்திருக்கும். சில சாதிப் பெயர்கள் தொழில் அடிப் படையில் இருக்கு. சில சாதிப் பெயர்கள் குடியிருக் கும் ஏரியா சார்ந்து இருக்கு. இப்படி சாதிப் பெயர்கள் அமைவதற்கு பல்வேறு காரணங்கள். குடும்பங்களே சாதிப் பெயரா இருக்கு.

காட்டாக, காந்திங்கறது குடும்பப் பேரு, நேருங் கறது குடும்பப் பேரு, பட்டேல்ங்கறதும் ஒரு வம்சத் தோடை பேருதான். கண்டியர்னா கள்ளருக்குள் ளேயே ஒரு பட்டப் பிரிவு. பறையர்னா ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அது தொழிலு. மறு புறம் இயல்பா அது பேச்சு மொழிகளில் ஒருவருடன் ஒரு வர் கலந்துரையாடல் - தகவல் தொடர்பில், மனிதர்கள் பேச கத்துகிட்ட காலத்தில் தகவல் பரிமாறிய விசயத் தையும் அது சொல்றது. ஆக, ஒவ்வொரு சாதிக்கும் ஒரு தொழில் அடிப்படை. உவச்சர்னா கடற்கரையில் வாழக்கூடிய நெய்தல் நில மக்களைச் சொல்லுது. ஆயர்னு கோனார்களைக் சொல்லுது. ஆக, இது தொழில் அடிப்படையில் இருக்கு, வாழக்கூடிய பிரதேச அடிப்படையில் இருக்கு, பல பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் இருக்கு.

ஆக, இதெல்லாமே ஒரு சமூகத்தில் நிலவக் கூடியதுதான். இது நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைக்கு மாறி, அதிலிருந்து உபரியை வணிக சமுதாயம் முதலீடு செய்து தொழில் சமுதாயம் வளர்வதற்குப் பதிலாக, தலைமுறை அடிப்படையில் ஆட்சியை நிறுவுவதற்காக, சாதிகளுக்கு சட்டங்கள் உருவாக்கப்பட்டு, அதுக்கு தத்துவ முலாம் பூசப்பட்டு இறுக்கமாக்கிய வேலையைந்தான் பார்ப்பனர்கள் - ஆரியர்கள் செய்தார்கள். ஆக, ஆரியர்கள் செல் வாக்கு செலுத்துவதற்கு முன்னாலேயே சாதி இருக்கு.

இன்று இந்துத்துவா சொல்லும் இந்துவாகத் தன்னை புரிஞ்சிக்காமே, சைவ - வைணவம், ஆசி வகம், சார்வாகம் என இந்திய மரபு - சாதி மரபு சாதியத்தை பாதுகாக்கும் மரபுக்கான சிந்தனை ஓட்டம்தான் இங்கே இருந்திருக்கு - இதுக்கு மெரு கூட்டியது இந்துத்துவா. ஆகவே, இந்திய சிந்தனை மரபென்கிறது இந்துத்துவா சிந்தனை மரபுதான். இதுக்கு எதிர் சிந்தனையா உழைக்கும் மக்களுடைய பண்பாடு - சாதி ஒழிப்புச் சிந்தனை - மார்க்சிய சிந்தனை போன்ற சிந்தனைகளைத்தான் நாம் கொண்டு வர முடியும். இந்துத்துவா சிந்தனை மரபே இந்திய மரபுங்கிறதை நான் இப்படித்தான் பார்க் கிறேன். வேறு சிந்தனை மரபுகள் இருந்திருக்கலாம், அவையெல்லாம் தத்துவ அளவில்தான். சார்வாகம் போன்றவை ஒரு நாடு தழுவிய இயக்கமா மாறலை. இந்தியாவின் ஒரு பகுதியில் மட்டுமே சார்வாகம் இருந்துள்ளது. இந்தியா முழுவதிலும் இந்துத்துவா தான் செல்வர்க்குச் செலுத்தி வந்திருக்கு. அது சைவ, வைணவமா இருந்தது. இந்துவாங்கிறது in-dus, இந்துக்கள், இந்த தத்துவ விளக்கமெல்லாம் latest ஆராய்ச்சி, வார்த்தைகள். இந்துத்துவா, சைவ-



பெரியார்

வைணவம் இதெல்லாம் சேர்த்துத்தான் சொல்ல வர்றேன்.

**காலக்குறி:**

நடைமுறையில் சாதி ஒழிப்புக்கான திட்டம் என் னென்ன வச்சிருக்கீங்க? அதை எப்படி செயல்படுத்தப் போறீங்க?

பெரியார் - அம்பேத்கருடைய அதே வழியை நீங்க பின்பற்றுகிறீர்களா அல்லது வேறை வழியா?

**அரங்க குணசேகரன்:**

பெரியார் - அம்பேத்கர் வழியை அப்படியே அல்ல, மாற்றுதான்.

முதலில் சில விசயங்கள் - கம்யூனிஸ்டுகள் குதி ரைக்கு சேணம் கட்டினமாதிரி, அனைத்துக்கும் வர்க் கப் போராட்டத்தில் தீர்வு கண்டு விடலாம். மார்க்சிய வாதின்னாலே அவன் பகுத்தறிவு வாதிதான், கடவுள் மறுப்பாளன்தான், சாதி மறுப்பாளன்தான்னு தங்க ளைப்பற்றி நினைச்சுக்கிட்டு வர்க்கப் போராட்டத்தால் அனைத்துக்கும் தீர்வு காணலாம் என்கிற கருத்தை இந்த நாட்டிலை வச்சாங்க. ஆனா, வச்சிகிட்டே கோயில் குளத்துக்குப் போனான், சொந்தத்திலேயே (= சாதியிலேயே) கல்யாணம் பண்ணிக்கிட்டான், கம்யூனிசமும் பேசிக்கிட்டிருந்தான். திராவிட இயக் கங்கள் உருவான காலகட்டம் தென்னிந்தியாவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கக்கூடிய மேனன்கள், நாயர்கள், முதலியார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், நாயுடுகள், சைவ பிள்ளைகள், இந்த சமுதாயங்கள்தான் பார்ப்பனர் அல்லாத இயக்கத்தை உருவாக்கினாங்க. அவங்களோட இலக்கு, பிரிட்டிஷ் பாராளுமன்றம் உருவாகும்போது, அந்த வணிக தொழில் முதலாளி சமுதாயங்கள் மன்னராட்சிக்கு எதிரா மக்களாட்சின்னு சொல்லி, அந்த வர்க்கத்துக்கான ஆட்சியை அமைச்சு மக்களின் ஒப்புதலோடை செஞ்சாங்கள். அதுமாதிரி பார்ப்பனர் அல்லாத இயக்கம்கிற பேர்ல பறையர்களையும் கடைக்கோடி மக்களையும் சேத்துகிட்டு பார்ப்பனர்களை வீழ்த்துறத்துக்காக இந்த சமுதாயத்தில் இருந்த ஆளும் வர்க்கம் அந்தக் கருத்தோட்டத்தை உருவாக்கினாங்க. அப்படி இருந்த இயக்கம் தான் பெரியார்வரையிலும்.

பெரியாருக்குப் பிறகு பல்வேறு இடைநிலை, கடைநிலை சாதிகள் சேர்கின்றன. பெரியார் அதுக்கு தலைமை தாங்குகிற வரையிலும் அது பார்ப்பனர் அல்லாத - அதே சமயம் பள்ளர், பறையர் அல்லாத - மேல்தட்டு, மேல்சாதிக்காரங்களோடை அரசியல் பொருளியல் நலன்களுக்கான மேடையாத்தான் இருந்திச்சு. அப்பிடி அவங்ககிட்ட இருந்து - அந்த அரசியல் கண்ணோட்டத்திலை இருந்து வந்ததாலை, பகுத்தறிவு வளர்ந்து, சாதி - மதம் - ஏற்றத்தாழ்வு ஒழிஞ்சிட்டா எல்லாருக்கும் எல்லாம் கிடைச்சிடும் என்கிற கருத்தியலை சொல்லி மார்க்சியத்தை மறுத்தாங்க. மார்க்சியத்தை மறுத்தே, இந்த நாட்டிலை சனநாயகத்தை சமத்துவத்தை கொண்டு வந்திடலாம்கிற பொய்மையான கோணத்திலை, காங்கிரசை எதிர்க்கணும், பார்ப்பானுடைய ஆதிக்கத்தைத் தகர்க்கணும் - பாட்டாளி வர்க்கத்தோடை தலைமையிலும் ஏனைய உழைக்கும் வர்க்கங்களோடை தலைமையிலும் இந்த நாடு வந்திடக்கூடாது, அதனாலை ஒரு பொய்மையாக பார்ப்பனர் அல்லாதார் இயக்கம்கிறார். அந்தக் கண்ணோட்டத்திலேயே செயற்பட்டார் பெரியார். அதனோடை பாதிப்புதான் இன்னைக்குவரை வர்க்கப் போராட்டத்தை திராவிட இயக்கம் ஏத்துக்கிறதில்லை. பெரியாரும் அம்பேத்கரும் வேறு யாரையும் விட அதிகமாக இந்துத்துவாவை கேள்விக்குள்ளாக்கி விமர்சனப்படுத்தினாலுங்கூட, வர்க்கப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் அதைத் திசைதிருப்பி விட்டார்கள்.



அம்பேத்கர்

1917இல் சோவியத் புரட்சி நடந்தது. 50களில் அரசியல் சட்டத்தை எழுதுகிறார் அம்பேத்கர். ஆனா, அதுல மார்க்சிய புரட்சி பற்றி ஒரு சிறு குறிப்பைக்கூட அவர் தெளிவா வைக்கலை. இந்துத்துவாவை கேள்விக்குள்ளாக்கிய வகையில் அவர் சிறப்புக்குரியவர்தான். ஆனால், மார்க்சியரீதியான பார்வை அவரிடம் இல்லை. இதுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கு. அதுக்குள்ள இப்ப நாம போகவேண்டாம்.

ஆனால், மார்க்சியத்தை மறுத்த ஒரு சாதி ஒழிப்பு - மத ஒழிப்பு - பகுத்தறிவு - நாத்திகம் இவற்றை நிறுவுவது முடியாது. ஏன்னா உடைமை இருக்கும் போது, உடைமை வர்க்கம் தனக்கான கலாச்சாரத்தை பாதுகாத்துக்கிட்டேதான் இருக்கும். அந்தக் கலாச்சார வளர்ச்சியில் வீழ்ந்த மக்கள் அந்த வர்க்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யாமல் அந்த வர்க்கத்துக்குள் தொடர்ந்து இருப்பார்கள். இந்த இரண்டும் simultaneousஆ இருக்கும். இந்த உண்மையை மறைச்சு, வெறுமனே சாதி ஒழிப்பு - தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம் பண்ணினா, சாதி ஒழிஞ்சிடும் சமத்துவம் வந்திடும்னு சும்மா ஒரு பொய்மையைத்தான் திராவிட இயக்கம் கட்டிக் காத்தது.

இதன்பின் தனித்தமிழ் இயக்கங்கள் - தமிழ்த் தேசிய இயக்கங்கள். இவற்றில் இரண்டு போக்கு. வட மாவட்டங்கள்ல உள்ள வன்னியர் மத்தியில் எழுந்த தமிழ்த் தேசிய சிந்தனைங்கிறது வறுமையில் இருந்து - சுரண்டல்ல இருந்து விடுபடுறத்துக்கான தனித் தமிழ்நாடு - சுதந்திரத் தமிழ்நாடுங்கிற ஒரு மார்க்சியப் பார்வையில் இருந்து தமிழ்த் தேசியம் வளர்ந்தது. தஞ்சாவூரின் காவிரி தண்ணீர் குடிச்ச கள்ளர்களும் ராமநாதபுரத்து கள்ளர்களும் பேசிய தமிழ்த்தேசியம் புரட்சிக்காக அல்ல. தம் நிலப் பிரபுத்துவத் தன்மைகளைக் கட்டிக் காக்கிறதுக்கான - பழைய பண்டாரம் பரதேசிகளுடைய திருவெம்பாவை - திருவாசகம் எல்லாம் எடுத்து, இவர் தமிழை இப்படிச் சொல்லி இருக்கிறார், அவர் அப்படி அழகா சொல்லியிருக்கிறார்னு ஒரு தமிழ்த் தேசியத்தை முன்வைச்சது. தமிழுக்காக - தமிழ் வளர்ச்சிக்காகன்னு தஞ்சாவூருக்கு தெற்கே உள்ள தமிழர்கள் - மதுரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

யில் இருக்கிறவங்க பேசினது ஒரு மாதிரி, வடதமிழ் நாட்டில் பேசினது ஒரு மாதிரி, இந்த இரண்டு போக்கிலையுமே தமிழ் உணர்வு இருந்தாற்கூட, மையத்தமிழ் நாட்டோட (தஞ்சை) போக்கு பிரபுத்துவத்தை காப்பாத்தறதா இருந்துது. வடதமிழ்நாட்டில் சரியான தமிழ் உணர்ச்சி இருந்தாலும் மக்கள் இயக்கம் இல்லாததனாலை ஒரு நக்சல்பாரி அரசியலில் - ஆயுத அரசியலில் ஈடுபட்டு வீணானது, ஒரு பின்னடைவு நேர்ந்தது. இந்த சூழ்நிலையில்தான், இவை எல்லாவற்றையும் கொண்டு கூட்டித்தான், 90களில் அம்பேத்கர் இயக்கங்கள் வந்தது.

அம்பேத்கர் இயக்கங்கள் 50 - 100 ஆண்டு காலமா இருந்தாற்கூட, இளையபெருமாள் - பாலசுந்தரம் முதலியோர் வடிவத்தில் பல்வேறு கால கட்டங்களில் இந்த சமூகத்தில் உள்ள முதலாளித்துவ கட்சிகளுடைய மாதிரியில்தான் இருந்தது. ஆனால், அம்பேத்கர் இயக்கத்தில் இன்று எழுந்திருக்கக்கூடிய சந்திரபோஸ், பொழிலன் போன்றவர்கள், திருமாவளவனைத் தவிர அவர் இயக்கத்தில் இருக்கிறவர்கள், என் போன்றவர்கள் - இவர்கள்தான் 90களில் ஆங்காங்கு இருந்த தலித் இயக்கங்களுக்கு ஒரு தத்துவார்த்த விவாதம் கொண்டு வந்து, தலித் அரசியலுக்கு - தலித் விடுதலைக்கு ஒரு தத்துவார்த்த வளர்ச்சியை கொடுத்தவர்கள்.

இதில் கடந்த காலத்தில் மார்க்சியவாதிகள் செய்த தவறு, திராவிட இயக்கங்கள் கைவிட்ட வர்க்கப் போராட்டம், தமிழ்த் தேசிய குழுக்கள் எங்கேயாவது தமிழர் இறந்தால், தன் பக்கத்து வீட்டு பறையரை கண்டுக்காம, தமிழுக்காக மட்டுமே எங்காவது குரல் கொடுக்கிறது என்ற இந்த வித்தியாசமான போக்குகளை எல்லாம் கொண்டு கூட்டித்தான் - ஒரு மும்முனைப் பார்வையில் சாதி ஒழிப்பு - தலித் விடுதலையைப் பார்க்கணும்.

ஒரு மனிதன் பிறப்பால் பறையனா இருக்கிறான், மொழியால் - இனத்தால் தமிழனா இருக்கிறான், தமிழ்நாட்டிலை வாழுறான், பொருளாதாரத்தில் சுரண்டப்படுகிறவனா இருக்கிறான். சுரண்டலல்ல இருந்து விடுபடணும்னா சுரண்டப்படும் சக்திகள் ஒன்று திரளணும். சுரண்டப்படுகிற சக்திகள் சாதிரீதியா இன்னொரு சாதியில் பிறந்ததனாலேயே தன்னைப் போல் சுரண்டப்படுகிறவனுக்கு தானே எதிரியா நிற்கிறான், நிறுத்தப்பட்டிருக்கிறான். அவனுக்கும் இவனுக்குமான இணைப்பு என்ன? இந்து மதமான்னா, இந்து மதம் பிரிக்குது - சாதிரீதியா. அடுத்தது இனம்கிறது தமிழனா இருப்பது. தமிழன்கிற போர்வையில் பெரும் பண்ணைகளும் ஆதிக்க சக்திகளும்கூட தலைமை தாங்கி மேலும் சீரழிவை உருவாக்குகிறான். அப்பதான் தலித் தலைமைங்கிற விசயத்தை நாங்க முன் வைச்சு தலித் தலைமையின் கீழே சாதி ஒழிப்பு, தலித் தலைமையின் கீழ் சுரண்டலுக்கு எதிரான போராட்டம், தலித் தலைமையின் கீழ் தேசிய இனத்



அரங்க குணசேகரன்

துக்கான போராட்டம் என்கிற விசயத்தை நாங்க முன் வைச்சது ஒரு வரலாற்றுத் தேவையில் இருந்து தான். இதுதான் இறுதிவரையான்னு கேட்டா அதை நாம ஆய்வுக்கு உட்படுத்தலாம். இப்படித்தான் நாங்க பார்க்கிறோமே தவிர, சாதி ஒழிப்புங்கிறது தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் திரண்டு ஒழிச்சிடக்கூடிய விசயம் அல்ல.

தாழ்த்தப்பட்ட மக்களின் அழுத்தம் இல்லாம BC எல்லாம் கருணை கொடை வள்ளல்களா வந்து சாதியை ஒழிச்சிட மாட்டாங்க. அவங்களுக்குள்ள சாதி ஒழிப்புக்கான ஒரு அரசியல் போராட்டமும், இவங்ககிட்ட சாதி அடிமைத்தனத்தில் இருந்து விலகுறதுக்கான துடிப்பும் தொடர்ச்சியான போராட்டமும் இணைக்கப்படணும். அந்த இணைப்பை தடையா நிரந்தர பகையா பார்க்காம, எந்தெந்த கண்ணிகள்ல இணைக்கலாம், எந்தெந்த கண்ணிகள்ல எதிரிகளை பிளக்கலாம் என்கிற அரசியல் நீரோட்டம் - அரசியல் தகவமைப்பு - நடைமுறை உத்திகள்தான் சாதி ஒழிப்பை நோக்கி இட்டுச் செல்லும் என்கிறது என்னோட கருத்து.

**காலக்குறி:**

சாதி ஒழிப்பில் இந்த உத்திகள்மூலம் உங்க அனுபவம் என்ன? மத்த சாதிகள் எவ்வளவு தூரம் உங்ககூட இணைஞ்சு நின்னாங்க?

**அரங்க குணசேகரன்:**

எங்கள் பகுதியில் மற்ற சாதியை சேர்ந்த மக்கள் பெருவாரியாக எங்கள் அமைப்பில் வந்து இணையலை. தனிநபர்கள் இணைஞ்சிருக்காங்க. இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாதிரியான அணுகுமுறையில் கிராமப் புறங்கள்ல, குறிப்பாக, முதல் போராட்டமே 91இல் ஒரு நில உரிமைப் போராட்டம். தேசிய நெடுஞ்சாலை பக்கத்தில் பம்பாயிலிருந்து வந்த தலித் இளைஞர் அவர் சம்பாதித்து கொண்டு வந்த பணத்தில் work shop கட்டினார், புறம்போக்கில் - அந்தப் பகுதியில் 3000 வெள்ளாளர்கள் குடி இருந்தார்கள். பறையன் றோட்டோரத்திலை work shop கட்டினா நாற்காலி போட்டு உட்காருவான், கால்மேல் கால் போட்டுக்கு வான், நமக்கென்ன மரியாதை இருக்கு? என்று அதை காலி பண்ணச் சொல்லி விரட்டுறான். காலி பண்ண மறுத்துடறாங்க. அதுக்கப்புறம் VAO பாத்திருக்கார், RDO எல்லாம் பார்த்து காலி பண்ண சொல்லிடறான். அந்தத் தகவல் எங்களுக்கு வருது. நாங்க தாசில் தாரிடம் போய், அதை காலி பண்ணக் கூடாது, அது அங்கதான் இருக்கும் என்றோம். இது நொச்சி குளம் புறம்போக்குன்னு பேரு. அந்த இடத்துல நாங்க சில விசயம் பேசிட்டு, அவங்ககிட்ட கருத்து ரீதியா, அரசியல்ரீதியா சொல்லிட்டு வேற வேலையா திருச்சிக்கோ எங்கேயோ போயிடறேன்.

ஒரு நாள் அந்த ஊர் வெள்ளாளர்கள் RDOவை, தாசில்தாரை செட் பண்ணி போலீஸ் வைச்சு work shopஐ தூக்கி எறிஞ்சிடறாங்க. அப்பதான் போராட நமக்கும் வசதியாயிருந்தது. நாங்க நோட்டீஸ் போட றோம். முதல்ல RDO மேல, SC-ST actஇலை முறை யீடு செய்தோம். அந்த வெள்ளாளங்க மேல பண் ணலை. சண்முகசுந்தரம்னு ஈரோடு பக்கமிருந்து வந் தவர் ஒரு BC, முதலியார் அவர். அவர் பேரில் ஒரு FIR போட்டோம். FIRஐயே நோட்டீசா போட்டு RDOவை கைது செய்யச் சொன்னோம். நாங்க வச்ச வாதம், புறம்போக்கில் ஒரு தலித் கொட்டகை போட் டதை வெள்ளாளர் விரும்பலை. இது சமூக நடை முறை. இதுல RDOவுக்கு என்ன கஷ்டம்? இன்னிக்கு இந்த ஊர்ல இருப்ப, நாளைக்கு இன்னொரு ஊர்ல இருப்ப, தாசில்தாருக்கு என்ன நஷ்டம்? அப்ப, நீயும் அந்த சாதி ஆதிக்கத்துக்கு துணை போயி இருக்கிற. சாதியை பாதுகாக்கிறது தீண்டாமைதான். அதனாலை நீ அவர் மேல நடவடிக்கை எடுன்னு நோட்டீஸ் போட்டோம். அந்த FIRஐயே நோட்டீசா போட்டு பிரச்சாரம் செஞ்சோம்.

பிரச்சாரத்தை கட்டமைக்கிறபோது அவங்க பரபரப்பாக தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் சண்முகராஜேசுவரனை பள்ளத்தூர்ங்கிற கிராமத் துக்கு அழைச்சு வந்தார். மனுநீதி நாள். நான் அங்கு போயி தோழர்கள் - மக்களை எல்லாம் அழைச்சி கிட்டு போயி வைச்சுக்கிட்டு RDO மேலை போட்ட FIR நோட்டீஸ் இரண்டையும் இணைச்சு நடவடிக்கை எடுக்கணும்னு மனுக் கொடுத்தேன். கலக்டர், RDO எல்லாம் இருக்காங்க. மக்கள் அங்கை வந்து மனு குடுத்துகிட்டு இருக்காங்க. எல்லார் மனுவும் RDO கிட்ட வருது. கலெக்டர் கிட்ட போகுது. கலெக்டர் நடவடிக்கை எடுக்க RDOகிட்ட கொடுக்கிறார். நான் குடுத்த மனுவை கலெக்டர் பாத்துகிட்டு பக்கத்திலை இருந்த RDOவை பார்த்தார். RDO மேலை முறைப் பாடு. எழுந்து கையை கட்டிக்கிட்டார் RDO.

வெளியேற்றம் நடந்தது மதுக்கூரில், மனுநீதிநாள் நடந்தது பள்ளத்தூரில். வெள்ளாளர்கள் 3000 வீடு இருக்கிற மக்கள் மத்தியில் இது நடக்குது - என் னான்னு கேட்டார் கலெக்டர். RDO ஒண்ணும் பதில் சொல்லலை. எல்லாமே உங்களாலைதான் (கலெக்ட ராலை)னு சொன்னாங்க. நான் என்ன கேள்வி எழுப்பி இருந்தேன்னா நொச்சிகுளத்துல புறம் போக்குல SC கட்டினது தப்பு. அதிலை இருந்து 1 கிலோ மீற்ற ரில் ரெட்டைகுளம் புறம்போக்குல ரைஸ் மில் கட்டி யிருக்கிறான், கிரைண்டர் மிசின் வச்சு மாவாட்டி வியா பாரம் பண்ணுறான், கொல்ல பட்டறை இருக்குது, சுண்ணாம்பு காளவாய் இருக்குது, மரக்கடை வைச்சி ருக்கான். இத்தனை பேரு ரெட்டைகுளத்துல வியா பாரம் பண்ணிக்கிட்டிருக்கான். பக்கா கடை கட்டி, வீடு கட்டி. அதுவும் புறம்போக்குதான் - மதுக்கூர் புறம்போக்கு. அது பூரா BC. புறம்போக்கை காலி பண்ணணும், அரசுக்கு தேவைப்படுதுன்னா - ஒரு அரசு பஞ்சாயத்திலுள்ள அத்தனை புறம்போக்கையும் காலி பண்ணணும்.

ரெண்டு லட்ச ரூபாயிலை மில் கட்ட அனுமதிச் சிட்டு 10000 ரூபாயில் செட் போட்ட பறையன் இடத்தை காலி பண்ணி இருக்கியே உன் நோக்கம் என்ன? நீ யார்? கலெக்டர் பார்த்துட்டு சொன்னார், எங்க RDO செஞ்சது தப்பு. ஆனா புறம்போக்குல கட்டிக்கிறதை மீண்டும் கட்டச் சொல்லி நான் எழுத்து மூலமா தரமுடியாது. அது சட்டச் சிக்கலை உருவாக் கும். போயி கொட்டகை போடுங்க. போலீசோ, RDOவோ குறுக்கே வரமாட்டாங்க. நீங்க கட்டறதுக்கு போலீசு பாதுகாப்பு குடுக்கும் என்றார். நாங்களும் அதேபோல் திரும்பவும் 300 - 400 இளைஞரை திரட்டிட்டு வந்து, எடுத்த கொட்டகையை திரும்பக் கட்டினோம். கலவரம் வராம பாத்துகிட்டோம். நாங்க வெள்ளாளரை எப்படி பிரிச்சோம்னு சொல்லி, 10 இளைஞரைத் தூண்டி விட்டு வெள்ளாளருக்கு எதிரா போயி தகராறு பண்ணி இருந்தோம்னா இவங்க (தலித்) 100 வீடு, அவங்க 3000 வீடு. தாக்கினா அந்த மக்களின் அழிவில்தான் போய் நிக்கும்.

அதுக்குப் பிறகு, அவங்க பேரில் போட்ட கேசுக்கு SC-ST actஇல கேஸ் போட்டு peace meeting போட்டு அதே RDO, IPC-107இலை 200 வெள்ளாளர், 50 பறையர் 2 மாசம் வாராவாரம் வந்து கையெழுத் துப் போட்டு, அதிலிருந்து இன்று வரை எந்தப் பிரச்சினையும் இல்லாம இருக்கு.

இன்னொரு விசயம் - அதே நேரத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் ஒன்றிய செயலர் புலவர் காசிநாதன் என்கிறவர், இந்தப் பிரச்சனை நடந்துகிட்டிருக்கும் போது கொஞ்சநாள்ல வேறு ஒரு பிரச்சனையிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- பிரமையா கோயில் ஒண்ணு இருக்குது - நாலு ரோடு பிரியிற இடம் - இந்தப் பக்கம் பட்டுக்கோட்டை, இந்தப் பக்கம் மன்னார்குடி, இந்தப் பக்கம் பட்டுக் கோட்டை, இந்தப் பக்கம் பெருகவந்தான் பாப்பா நாடு. தலித் மக்கள் தம் தெருவில் இருந்து வந்து பஸ்சுக்கு நிக்கிறது அந்த சாலை ஓர பாலத்திலை தான். பாலத்துக்கு மேல உட்காரணும். இங்க வந்து உக்காந்துகிட்டுதான், இதெல்லாம் தெரிஞ்சுகிட்டு பறையங்கள்லாம் இப்படி பண்றாங்கன்னு சொல்லி சின்ன பயல்களை விட்டு புலவர் காசிநாதன் - ஒன்றிய அ.தி.மு.க. செயலரை அனுப்பி, தார் ஊத்தி பாலத் தில் உக்கார முடியாதபடி பண்ணிவிடுகிறார். இது என் கவனத்துக்கு வந்தவுடனை போயி சப் இன்ஸ் பெக்டர் கிட்ட கேட்டோம். அந்தப் பாலத்து மேல தார் ஊத்தினதை ஒரு மணி நேரத்திலை remove பண்ணலேன்னா நாங்க அந்தப் பாலத்தை இடிப் போம்னோம். பொதுச்சொத்தை எப்படி இடிப்பீங்கன் னார். பொதுச்சொத்து மேல தார் ஊத்தறத்துக்கு புலவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது. பொதுச் சொத்து மீது தார் ஊத்தி பொதுமக்கள் உக்கார்றதை தடுக்கிற அதிகாரம் அவருக்கு இருக்குன்னா, இன் னைக்கு nightக்குள்ள அந்த தாரை எடுக்கலைன்னா இந்தப் பாலத்தை நான் இடிப்பேன். நீ என் மேல கேசு போடக்கூடாது. அப்படீன்னு அவரை எச்சரித்த உடனே அவர் கூப்பிட்டு மரியாதையா தாரை அப்பு றப்படுத்துன்னார். அவனும் சரின்னு மண்ணெண்ணை ஊத்தி தேங்கா நாரு போட்டு தேச்சி எடுத்தான். கண்கூடான சாட்சி. அன்னைக்கு நான் அந்த ஊர்ல எங்கையுமே போகாம இருந்து பார்த்தேன்.

ஆக, மக்களை எதிரெதிரா பிரிக்க விடாமல், இந்த அநீதிக்கு துணைபோற, அரசு யந்திரத்துக்கு எதிரா இந்தப் போராட்டத்தை மாத்தி அமைக்கிறது எப்படீங்கற அரசியல்தான் பிரதானம். இதனால், அதே மதுக்கூர் வெள்ளாள மக்கள் மத்தியிலை சமீபத்தில்கூட குதிரைக்கார வெள்ளாளன்கிறவன் தன் ஊர்ல உள்ள பறையர்களை மட்டுமல்ல, வெள்ளா ளர்களையும் இஷ்டத்துக்கு அடிப்பான். அவனை எதிர்த்துக் கேட்கவே முடியாது. அவன் மாமன் மச்சான் எல்லாம் அடிப்பான். எந்த ஊரில் இருந்தும் கொண் டாந்து வச்சுக்குவான். 97ன்னு நினைக்கிறேன். - சினிமாவுக்கு போயிட்டு வந்த நம்ம பையன்களை அவன் போதையிலை அடிச்சிட்டான். அடிச்ச உடனே பசங்க நமக்கு தகவல் குடுத்திட்டாங்க. போய் முறைப்பாடு செய்து அவனைப் பிடிச்சு உள்ள வைச் சாச்சு. உள்ள வைச்ச உடனே - SC தெருவில் பின் னால் அவனுடைய தென்னந்தோப்பு, பாக்குத் தோப்பு, தேக்குமரம் எல்லாம் போட்டிருக்கான். நல்ல சந்தர்ப்பம். - அவனை உள்ள புடிச்சி வைக்க யாருடா வருவான்னு வெள்ளாளரெல்லாம் ஏங்கி கிட்டிருக்கான். ஏற்கனவே, வெள்ளாளர்களை மொத் தமா பகைச்சிருக்கிறான். வெள்ளாளன் யாரை வேணும்னாலும் இழுத்துப் போட்டு அடிப்பான். அவனு மேல யாருடா கை வைப்பான்னு இருக்கிறான் வெள்ளாளன். எனவே அவன் உள்ள போனதும் வெள்ளாளர்களுக்கு சந்தோசம். விசாரிச்சேன். வெள் ளாளர்கள் சந்தோசமா இருப்பது தெரிஞ்சுது. 'அப்ப இரவு உன் வீட்டுக்கு பின்னால் உள்ள தென்னை மரம், பாக்கு மரம் பூராவும் வெட்டி எறிஞ்சிடு' என்று சொல்லி இரவில் 40 - 50 இளைஞர்களை வெளியில் கொண்டு வந்து நாலே மணி நேரத்தில் மொத்தத்தையும் வெட்டி எறிஞ்சுட்டோம். காலையில் எழுந்ததும் அந்த ஊருக்கே சந்தோசம்.

இன்னொரு விசயம் - ஒரு வருசத்துக்கு முன்பு இலவங்காடுங்கற ஊர்ல கீழக்குறிச்சி பொண்ணை ஒருத்தர் கலியாணம் பண்ணி இருக்கிறார். SC. அவன் கீழக்குறிச்சி வெள்ளாளரிட்ட 2000 ரூபா கடன் வாங்கியிருக்கிறான். 1000 ரூபா குடுத்திட்டு, 1000 ரூபா குடுக்க முடியல்லே. இவன் வேலைக்கு போன நேரம் பார்த்து, தன் ஊர் பறையர் வீட்டு பொண்ணு தானேங்கற தெம்புல, அந்த கீழகுறிச்சி வெள்ளாளன் கடன்பட்டவர் பெண்டாட்டிய கடத்தியிருக்கான். 30 மணி நேரம் house arrest. அந்த ஊர்ல இருக்கிற இலங்காட்டு வெள்ளாள கள்ளர்கள் எல்லாம் நம்ம ஊருக்கே மரியாதை போச்சுன்னு சொல்லி 100 பேர் திரண்டு போயிருக்கான். அந்த ஊர் பறையரும் இலங்காட்டு கள்ளரும் திரண்டு போயி பணத்துக்காக பறையன் பொண்டாட்டியைக் கொண்டு வந்து வைச்சுக்கிட்டிருக்கிறே மரியாதையா விட்டுடுன்னு மரியாதையா பிரச்சினையை பேசியிருக்கான். 'மரியாதை வேணும்னா கடனைக் குடுத்திட்டுப் போ'- என்னிருக்கான். விடலை. அவங்க ஒண்ணும் பண்ண முடியலை. பறையனுக்காக மீறிப் போயி சண்டை போட்டுக்கவும் தயாரில்லை. வெள்ளாளர் நிறைஞ்ச பகுதி பட்டுக் கோட்டை. கள்ளர்கள் அங்கங்கே கொஞ்சப்பேர்தான் இருப்பாங்க. அதனாலை ரொம்ப risk எடுத்துக்க தயாரில்லை. மறுநாள் காலையில் எனக்குத் தகவல் வந்தது. நான் போய் ஸ்டேசன்ல உக்காந்தேன். SI செல்வத்திடம், 'யாருக்கு கடன் இல்லை. கடன் வாங்கினவன் எல்லாம் பொண்டாட் டியை இழக்கணும்னா, உங்களுக்கே பொண்டாட்டி இருக்காது. முதல்ல போயி அந்தப் பொம்பளையை கூட்டிக்கிட்டு வாங்கன்னேன்' - ஸ்டேசன்ல உக்காந்து கிட்டே. அரைமணி நேரத்துல போயி கொண்டாந்தான். கடத்திட்டு போனவன் மதுக்கூர்ல இருந்த குதிரைக் கார வெள்ளாளனுடைய மச்சான். அவனைக் கை விலங்கு போட்டுக் கொண்டாந்து வச்சாங்க ஸ்டே சன்ல. அதுல ஏகப்பட்ட சந்தோசம் வெள்ளாளர்க ளுக்கு - அரங்க குணசேகரனை அழிச்சிடணும்னு நினைச்ச வெள்ளாளர்கள்.

ஆதிதிராவிடர் தெருவிலை நடக்கிற அத்தனை திருமணங்களும் என் தலைமையிலை நடக்கும். அந்தத் திருமணத்திலை எல்லாம் அந்த வெள்ளாளன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> இந்திய சிந்தனை மரபென்பது சாதிய சிந்தனை மரபுதான். சாதிங்கிறது இந்துத்துவாதான். நான் அப்படித்தான் பார்க்கிறேன். வேறு எந்த மரபு இருக்கிறதாவும் எனக்குத் தெரியலையே. இந்திய சிந்தனை மரபில் இடையிடையே மின்னல்போல சில மாற்றுச் சிந்தனைகள் வந்திருக்கு. அந்தச் சிந்தனைகள் செல்வாக்குச் செலுத்தியிருக்கா இந்தியாவுல?



பூரா தி.மு.க. - அ.தி.மு.க.விலை இருக்கிறவன், ஒன்றிய செயலாளரா இருக்கிறவன் வாழ்த்துரை வழங்கிட்டுப் போறான். அரங்க குணசேகரன் தலைமையை இல்லாமப் பண்ணிப்புடனும்னு பத்து வருசமா எவ்வளவோ முயற்சி பண்ணினான். முடியலை - அந்த அளவுக்கு எல்லாமே இணைஞ்சு வந்துகிட்டிருக்கு. இதை பகையாவும் மாத்தியிருக்க முடியும். அரசு - சமூக கட்டமைப்புக்கு எதிரா கொண்டு போகணும்கிற முறையில் அதில் ஒரு வெற்றி. இது மாதிரி தொடர்ச்சியா இப்ப வெள்ளாளர்களுக்கும் அங்கை ரெட்டைக்குளத்திலை குடியிருக்கிற BCக்களுக்கும் காலி பண்ணணும்னு நோட்டீஸ் குடுத்து அப்புறப்படுத்தினான். அதை நம்ம போராட்டத்திலை தான் தக்க வச்சிக்கிறோம். போஸ்டர் போட்டு இப்படி எப்படி அணுகணும்கிறதுக்கு நமக்கு சில அனுபவங்கள் இருக்கு - நிறைய சொல்லலாம்.

**காலக்குறி:**

மார்க்சிய கோட்பாட்டுத் தளத்திலை நட்பு முரண்பாடு - பகை முரண்பாடு.... பெரியார் - அம்பேத்கர்லை இது வராதா?

**அரங்க குணசேகரன்:**

பெரியார் - அம்பேத்கர்ல இருந்து வராது.

சாதிரீதியான ஒடுக்குமுறையில் இருந்து இந்த மக்களை சுயமரியாதைக்கான போராட்டத்துக்கு மாத்தணும். ஆனா, எதிரி யாருங்கறதைத் தெளிவா வரையறுக்கணும். இந்த மக்கள் ரெண்டு பேரையும் மோதவிட்டுட்டு அவர்களில் உள்ள சனநாயக சக்திகள் ஒன்று சேர முடியாது.

அரசிடமும் நேரடியா போகிறபோது, அவன் என்ன செய்வான். ஞானசேகரன்கிற ஒருத்தன் அந்தக் கொட்டகையை பிரிப்பதற்கு முக்கிய காரணம். இந்தச் சம்பவம் நடக்கும்போதே நாம் போட்ட கொட்டகையை மறுநாள் - 2,3 நாள் கூட்டம் போட்டு, இப்படியெல்லாம் பண்ணி, அரசாங்கத்தை வைச்சு திருப்பிப் போட்டுப் பிட்டாங்கன்னு ஊரு கூட்டம் போட்டு பேசுகையில், கொட்டகைக்கு நெருப்பு வைச்சு விட்டுடணும்னு பேசியிருக்காங்க. அதை முதல்ல பிரித்துவிட தலைமை தாங்கினவன் ஞானசேகரன்கிறவன். அவன் என்ன சொல்லிட்டான். 'அவன் என் மேலை ஏற்கனவே 107 செக்சன் போட்டுகிட்டு வந்துகிட்டிருக்கான். ஏற்கனவே நான் தலைமை தாங்கினவன்னு சொல்லி என் மேல பொல்லாப்பு இருக்கு. நீங்க பாட்டுக்கு நெருப்பு வைச்சா நான்தான் உள்ளே போவேன்னு சொல்லி இதை நான் செய்யக்கூடாதுன்னு அவன் போய் ஊர்ல பேசியிருக்கான். அதையும் மீறி நெருப்பு வைக்கணும்னு பேசுகையில் அவங்க பேசி முடிக்கிறதுக்குள்ளை இவன் போய் போலீஸ் ஸ்டேசன்ல படுத்துக்கிட்டு, அய்யய்யோ நெருப்பு வைக்கப் போறாங்க எங்க ஆளுக மனித உரிமைக் கழகம் கொட்டகையிலை, என்னை மாட்டி விட்டுடப் போறாங்க, நல்லா இருப்பீங்க கொட்டகைக்கு பாதுகாப்புக் குடுங்க'ன்னு அவனே வந்து பொலீஸ்ல சொல்லிட்டான். இவ்வளவு நடந்திச்சு இதிலை முழுக் கதையையும் நான் சொல்லலை. எதிரிங்கறவங்க ஒரு வல்லமை மிக்க அதிகாரமும் சாதிய சக்தியா நிலவுடைமையாளரா இருக்கிறவன்கிற அரசியல் தளமுள்ளவன்தான் பண்ணுவான். சாதாரண சனங்களில் ஒரு பறையன் ஒரு கிராமத்துக்கு போலீஸ் போனா எவ்வளவு பயப்படுறான். அவ்வளவு பயம் BCக்கு இருக்காதா, அவன் என்ன இந்திரலோகத்திலிருந்து குதிச்சவனா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போலீசைக் கண்டா பயப்படுவது, சட்டத்துக்கு பயப்படுவது, தண்டனைக்கு பயப்படுவது எல்லாமே மனித சமூகத்தில் இருக்கிற யதார்த்தம்தான். வெள்ளாளர் எல்லாம் திமிரோடையே இருப்பான், கள்ளர் எல்லாம் துப்பாக்கியோடையே இருப்பான்னு நாம நினைச்சிக்க முடியாது. அவனுக்குள்ளை இருக்கிற வெட்டுக் குத்துக்குள்ளை போயி பாத்தா தெரியும். அதுக்காக சாதியத்தை நான் நெகிழ்ச்சியா பார்க்கலை. எல்லாக் கோணத்திலும் கறாரா நின்னு எதிரியை வெற்றி கொண்டிருக்கிறோம். அதனாலை தான் அங்கை இருக்கிற சனநாயக சக்திகளை நாம் கவனத்தில் எடுத்திருக்கிறோம்.

அதேநேரத்தில்தான் காவிரி நடுவர் மன்ற குழு வருது. அனைத்துக் கட்சி விவசாய சங்கத்தோடு சேர்ந்து நாங்களும் போய் மக்களை அணிதிரட்டி போராடி, மனித உரிமை கழக சார்பில் நடுவர் மன்றத்தில் மனு குடுத்தோம். காப்பி இருக்கு. இப்படி எல்லா வேலையும் செய்தோம். ஆக, காவிரி நீர் பிரச்சனை வந்தா அவனுக்கு இங்கே நிலம் இருக்கான்னு திருமாவளவன் கேட்டாரு, உஞ்சை ராசன் கேட்டாரு, T.A. மணி கேட்டாரு. நீங்க எத்தனை ஏக்கர் நிலம் வைச்சிருக்கிறிய? உங்களுக்கு ஏன் காவிரிப் பிரச்சினைன்னார். பரவலா கேட்டாங்க.

அய்யா தண்ணி, நிலம் வைச்சிருக்கிறவங்களுக்குத்தான்னு இல்லை. மனுசன் குளிக்கணும், குடிக்கணும், சமைக்கணும், துவைக்கணும். விவசாயத்திலாவது ஒண்ணுல வருமானம் வரும், இன்னொண்ணுல வராட்டியும் பரவாயில்லை. தண்ணி இல்லைன்னா வாழவே முடியாது. அது எப்படி நீங்க இப்படி சிந்திக்கிறீர்கள் என்றெல்லாம் பேசினோம்.

NSAவில் என்னை அரெஸ்ட் பண்ணினதே காவிரி நீர் பிரச்சனையை மையப்படுத்தித்தான். அதனாலை தான் இந்த கேள்விகள் எல்லாம் நிறைய raise ஆச்சு. இவர் ஏன் காவிரி நீர் பிரச்சினை எல்லாம் பேசினாருன்னு SC-ST employees கேட்டான்.

திருச்சியில் ஒரு தடவை, ஒகழூரில் SC மக்களை அவர்களின் வீடுகளை பிரித்துத் தூக்கி எறிஞ்சிட்டாங்க. SC-ST employeesஇடம் பேசுறதுக்காக மக்களை அழைச்சிட்டு போயி நோட்டீசைக் குடுக்கிறபோது, இது சிவில் மேட்டர் SC-ST problem இல்லைன்னாங்க employees. நிலப்பிரச்சினை SC-ST பிரச்சினை இல்லைன்னு புரிஞ்சிகிட்டிருக்கான். அப்படி மோசமான கருத்தியல்ல இருக்கான், இது ஒரு அனுபவம்தான். அத்திவெட்டி மறவக்காடுங்கற ஊர்ல மாவட்ட செயலர் குமரவேல் குடும்பம்- அது போல் 30 குடும்பங்கள் அங்கை வசிக்கிறாங்க. அங்க மறவர் ஒருத்தர் ஜமீன். திருநாவுக்கரசு மந்திரியோடை நெருங்கிய சொந்தக்காரர். அந்த ஊரில் 5000 கள்ளர்கள். இவர் மட்டும் மறவர், ஜமீன். அய்யான்னுதான் எல்லாரும் சொல்லுவாங்க. பழனியப்பன் (மறவர்) குடும்பம் - அவங்க 200 வருசத்துக்கு முன்பு தேவகோட்டையிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டவர்கள். இந்த கள்ளர்கள் தங்களுக்கு தலைமை தாங்க மறவர்களை அழைச்சு வந்தாங்க.

ஆக 5000 கள்ளர் தம்மை நிர்வகிக்க ஒரு மறவர் வேணும்னு சொல்லி தேவகோட்டையிலிருந்து கொண்டு வந்து குடி வைச்சு இந்த ஜமீன் பொறுப்பை அவங்ககிட்ட கொடுத்திட்டாங்க. ஜமீன் abolition, இனாம் abolition ஆயிடுச்சு 62இல். ஜமீன் - இனாம் காலத்தில் ஒரு பெரிய மிராசுதார் இருந்தாருன்னா அந்த மிராசுதாருடைய எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள புறம்போக்குகளும் குளத்து நீர், கம்மாய் நிலங்களும் எல்லாமே அவருடைய controlதான். அவருக்கு 100 - 200 வேலி பட்டா இருக்கும். அதுக்குள்ள இருக்கிற குளம், கம்மாய் எல்லாம் அவருக்குத்தான் சொந்தம். அதன் குடிவரி அவருக்குத்தான் கொடுக்கணும். இனாம் எஸ்டேட் abolition act வந்தவுடனே அவருக்குள்ள property பாக்கி எல்லாம் கவர்ன்மென்டே எடுத்துக்கிது. அப்ப புறம்போக்கு பூரா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்திடுது. ஆனா, இனாம் ஜமீன் காலத்திலை, அவர் என்ன செய்வார்னா, அந்தப் புறம்போக்குல சில குடும்பங்களை உழச் சொல்லி இருப்பார். தன் பட்டா நிலங்களிலும் சில விவசாயிகளை உழச் சொல்லி இருப்பார். பட்டா நிலத்தில் குறித்த நேரத்தில் வாரம் வந்திடும், rights வந்திடும், இருந்தாலும் வார குத்தகை விவசாயி அனுபவத்தை மீறி ஜமீன்தார் அவருடைய நிலத்தையே வித்துவிட முடியாது.

அப்படி சில இடங்களை விக்கவும் வேணும்னா rights இருக்கு. ஆனால் abolition actக்குப் பிறகு, abolition act வாரதுக்கு முன்னாலை இருந்த புறம்போக்கு நிலம் - எந்த சாதி உழுதுகிட்டிருந்தாங்களோ அது அவனுக்கே சொந்தமாகணும். 13 வருசம் உழுதா அரசாங்கம் பட்டா குடுக்கணும். ஆனா abolition act, 62இல் வந்ததுக்கு பிறகு 90 வரையிலும் - நான் அந்த ஊருக்கு போற 93 வரையிலும் - கம்யூனிஸ்ட் கட்சி அங்கை இருக்குது.

அத்திவெட்டி மறவகாட்டிலை CPI ராஜப்பான்னு ஒருத்தர் (அவர் மகன் லெனின் இப்பவும் இருக்கிறாரு) இந்த 30 வீடும் வருசத்துக்கு 20 - 30 மூடை நெல் கட்சிக்காக லெவி அளந்துகிட்டிருந்துது. இந்த 60-90 (= 30 ஆண்டு) காலமும் இந்த abolition act பத்தி இவங்க பேசலை. நெல் அளந்திட்டு போறான் கம்யூனிஸ்ட். ஆனா இந்த புறம்போக்குல உழுதுகிட்டு குடியிருந்த விவசாயி, அவருடைய நிலங்களுக்கெல்லாம் வரி கட்டிக்கிட்டிருக்காரு. வரி குடுத்தா ரசீது குடுக்கணுமில்ல?

இல்ல (A) உழுதுகிட்டிருக்கிற புறம்போக்கு நிலத்த (B) கிட்ட கிரயம் வாங்கிக் குடுத்துவாரு. 'யப்பா, நிலத்தை அவரு கேட்கிறாரு. நிலத்த அவருகிட்ட குடுத்துடு.' 'சரிங்க. அய்யா வீட்டு நிலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தானே அய்யாகிட்ட குடுத்திடுறேன்.' அய்யா பத்திரம் பண்ணிக் குடுப்பாரா? அய்யா பேர்ல பட்டா இருக்கா? இவருகிட்ட இருந்து அவருகிட்ட போற பொழுது இவருக்காவது அந்த காசு வருதா? இவரா வது பத்திரம் பண்ணி குடுக்கிறாரா? A கிட்ட இருந்து Bக்கு போறபோது A, B க்கு பத்திரம் பண்ணிக் குடுக்கி றதில்ல. A பேர்லயும் இல்ல சொத்து. Bக்கு குடுக்க சொல்ற மிராசுதாரு - காசை B கிட்ட இருந்து வாங்கிக் கிறான். காசு B கிட்ட இருந்து Aக்கு வர்றதில்ல. 100 - 200 குடுத்தா உண்டு, கள்ளு சாராயம் குடிக்க. மிச்சம்பூரா சமீன்தார் ஐயாங்கிற பேர்ல 62இல் abolition actக்கு பிறகு 90 வரை செல்வாக்கு செலுத் திக்கிட்டிருந்தாரு கிராமத்துல. அந்த ஊர்ல ஒரு 25 - 30 ஏக்கரை சாப்பிட்டுக்கிட்டிருந்தார். சரி, தலித் தெருவில பூவரசமரம் வளர்ந்திருக்கு. அய்யாவுக்கு முடை வந்தா அதே பூவரச மரத்த வெட்டிகிட்டு போயி வித்துருவாரு. இதெல்லாம் எவனுமே கேக் கலை. நான் போயி அது பெரிய கொடுமையா இருந்தது.

என் மைத்துனரும் குமரவேல் அண்ணன் தண்டபாணியும் அபிராம பட்டணம் காலேஜில் கிளாஸ்மேட்ஸ். மதுக்கூர் பிரச்சினை எடுத்தது தெரிஞ்சி, அந்த பையன் அரங்க குணசேகரன் யாருன்னு மச்சினன்கிட்ட கேட்டு, என் மச்சான்தான்னு சொல்லி அந்த பையன் ஒரு நாள் வந்திருந்தார். சென்னையில் பார்த்தேன் ஓட்டல்ல cashierஆ இருக் கார் - பேரு தண்டாயுதபாணி. அவரிடம் முழு விவரத் தையும் கேட்டேன். இதுல உங்களுக்கு எந்த வகை யான பாதிப்பும் இல்ல, ஜமீனுக்கின்னு எந்த உரிமை யும் கிடையாது, ஜமீன் இனாம் எஸ்டேட் 62இல் abolish ஆயிட்டது. அப்படி உங்க நிலத்தை இன்னொ ருவருக்கு விற்கவோ கிரயம் பண்ணிக் கொடுக்கவோ அவனுக்கு ரைட் இல்லை. நீங்க துணிச்சலா நின்னீங் கன்னா நான் இதை முடிச்சி தர்றேன்னு சொல்லி, ஊருக்குப் போனோம். கூட்டம் போட்டோம். 30 பேர் வந்திருந்தாங்க. பேசினதெல்லாம் கேட்டாங்க. சரின்னு சொன்னாங்களே தவிர நடவடிக்கைக்கு பயந்துட்டாங்க. ஜமீனை எதிர்க்க யாரும் தயாராயில்ல. அப்ப நான் தண்டபாணிய கூப்பிட்டு சொன்னேன். ஊர் கூடி செஞ்சா ஊருக்கு நன்மை கிடைக்கும். ஆனா, ஒவ்வொரு தனி மனிதனுடைய உரிமை - தன் நிலத்தை யார்கிட்ட விக்கிறது, யார்கிட்ட எவ்வளவு நாள் வச்சிருக்கிறதுங்கறது தனக்குள்ள உரிமை. உங்க வீட்டு நிலத்தைத்தான் இப்ப இன்னொ ருத்தருக்கு பிடிச்சி குடுத்திருக்காரு. அதை நீங்க மீட்கணும். அதுக்கு உங்களுக்கு சட்டரீதியான உரிமையை நான் பெற்றுத் தர்றேன்னு நல்ல சிவில் லாயரை பிடிச்சு நோட்டீஸ் விட்டோம். நோட்டீஸ் விட்டா அவ்வளவு பெரிய ஜாமீன், BABL, அதே கோர்ட்டுல இருக்காரு, என்ன இருந்தாலும் அந்த ஆளுக்கேதான் தெரியுமே abolition ஆயிடுச்சின்னு. ஒண்ணுமே இல்லை. ex-party தீர்ப்பு வாங்கிட்டு விழுய்யான்னேன். விழுந்துட்டான். ஊரு பூரா அவங்க இயக்கமாயிருச்சி. பல நில விவகாரங்களை தெரியாம செய்ய முடியாது.

பின் சில நாள் போயி, முடி வெட்ட போயிருக் காங்க, ரேசன் கடையிலை அரிசி குறைச்சி போட் டதை எதிர்த்து கேட்டிருக்காங்க. இதைப் போயி ஒரு வெளியூர் பையன் - ரெண்டாம் புளிக்காட்டிலிருந்து வந்தவன் - அதை செஞ்சான். பெயர் குமார்.... அவனை புடிச்சி கட்டிப்புட்டாங்க. அதை எதிர்த்து நாம நோட்டீஸ் போட்டோம். வெளியூர்க்காரனுக்கு இங்கே என்ன வேலை? அப்படீன்னு சொல்லி அந்த அத்திப்பட்டி ஜமீன் பழனியப்பன் பேசியிருக்காரு. அந்த நோட்டீஸை வச்சிருக்கிறேன். அத்திப்பட்டி பழனியப்பன் எந்த ஊர்? இந்த குமார் பொண்ணெ டுத்த ஊர். அத்திபட்டி மறுவாக்காடு. இன்னைக்கு அவரு வெளியூர்ல இருந்து வந்து கேட்டுட்டாரு. அத்திப்பட்டி பழனியப்பன் எந்த ஊர்? தேவகோட்டை. அவருக்கு இங்க என்ன வேலை? இப்படி கேட்டா அந்த காலகட்டங்கள்ல ஜமீனா படை பலத்தோட இருந்திருப்பான். இப்ப அவன் 20 ஏக்கரா, 5 ஏக்க ராவா சுருங்கிப்போயி அன்றாட சாப்பாட்டுக்கே வழி யில்லாம 2 லட்ச ரூபா கடனாளியாயிருப்பான். இவ னுக்கு சமமா இவனையும் தாண்டிட்டான் கள்ளர்கள். இவன் ஒரு குடி, அந்த ஜமீன் பெருமை - கெத்து எல்லாம் முடிஞ்சி போச்சி. இவனுடைய ஒரு குடும்பத் துக்காக மறவர்களே ஒழிக - கள்ளர்களே ஒழிக - முக்குலத்தோரே ஒழிகன்னு எழுதி இருந்தா அந்த 5000 வீடும் நமக்கு எதிரியா மாறியிருப்பான். இவனை தனிமைப்படுத்தி துண்டறிக்கை போட்டு இவனுடைய அநீதிகள், அக்கிரமங்கள், ஏமாத்துகளை கண்டிக்கிற போது, பறையன் வீட்டு புறம்போக்கை ஏமாத்தினது போல எத்தனை கள்ளன், முத்தரையன் வீட்டு புறம் போக்கு சொத்தை ஏமாத்திகிட்டிருப்பான்? இதை பார்க்கிற கள்ளன் எப்படி organise ஆவான்? அப்ப completeஆ அவருக்கு யாருமே துணை வரல்ல. ஈஸியா அடிச்செறிஞ்சுட்டு அவர் மேல FIR போட்டு நடவடிக்கை எடுத்தோம். அவர் வக்கீல். அவர் தன் னைக் காப்பாற்ற இன்னொரு வக்கீலை அழைத்துவர வேண்டியதாயிற்று. ஆகவே முடியும், முடியாததில்லை.

பட்டுக்கோட்டையில் பண்ணை வயல் சேர்வைக் காரர்ன்னு சொன்னா மிகப் பெரிய சக்தி. இரண்டு, மூன்று தியேட்டர் இருக்கு. ஒரு மகன் கழுகுபுளி காட்டில் பிரசிடண்ட். பண்ணை வயல்ல மூத்த மகன் பிரசிடண்ட். பட்டுக்கோட்டையில் நகரசபைத் தலை வரா இன்னொரு மகன். மூன்று பேரும் அப்பன் சொன்ன மாதிரியே பேசுவாங்க. அண்ணன் தம்பி ஒரே மாதிரி பேசுவாங்க. தாங்கள் மூவேந்தர்கள், மூவரசர்கள் இப்படித்தான் 'போஸ்டரே அடிச்சி ஒட்டு வாங்க. (நாடிமுத்து பிள்ளைன்னு ஒருத்தர் பட்டுக் கோட்டையில் இருந்தார் - அவருக்கு நிறைய சொத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தது. அவங்க முதலாளிய தன்மைக்கு போயிட்டாங்க. இவங்கதான் பிரபுத்துவ தன்மையில இருந்தாங்க) இவருடைய மச்சினன் சுப்பையான்னு ஒரு அட்வகேட் - அவர், பாலகிருஸ்ணன்னு ஒரு டாக்டர், இரண்டு பேரும் சேர்ந்து, விசாலாட்சின்னு ஒரு செட்டியார் - அதாவது ஜமீன் காலத்தில் பட்டுக்கோட்டையில் ஆதித்தெருங்கிற இடத்தில் (பூக்கொல்லைன்னு பேரு இப்ப) ஒரு 50 குடும்பங்கள் ஆதிதிராவிடர்கள் இருக்காங்க, அது ஆதி தெரு - பூக்கொல்லைன்னு பேரு. ரோஜா தோட்டம்னும் சொல்லுவாங்க - ரோஜாப்பூ நிறைய இருக்கிறதுனாலை. அந்த இடத்துலை அவங்க நீண்ட காலமா ஜமீன் காலத்துல ராமநாதன் செட்டியார் காலத்துல, பில்லத்தூர் ஜமீன் - ராமநாதன் ஜமீன் காலத்துல அந்த ஏரியா அவங்க கட்டுப்பாட்டிலை இருந்துது. அவங்களுடைய மூன்றாவது வாரிசுதான் விசாலாட்சி செட்டியார். இந்த அம்மா - இவங்களை அப்புறப்படுத்திட்டு அந்த இடத்தை பிடிக்கணும், வித்து காசு பண்ணணும் அப்படீன்னு பல பேரு முயற்சிக்கிறாங்க. இதெல்லாம் அந்த abolition actக்கு உட்பட்ட புறம்போக்குதான். இந்த actக்கு உட்பட்ட அவங்க பட்டா நிலங்கள எல்லாம் அவங்க வித்திட்டாங்க. இப்ப ஏதாவது ஆதாரம் கிடைச்சா நாம நாலு காசு பண்ணிக்கலாம்கிற கால கட்டத்துல ஒரு 60 - 70 ஏக்கர் இருக்கும் - அத அந்த அம்மா பல கட்ட கேஸ் போட்டும் நிக்கலை - successஆகலை. ஒரு கோர்ட்டு, அடுத்த கோர்ட்டுன்னு அப்பீல் பண்ணிக்கிட்டே இருக்காங்க. செட்டியார் நேரடியா அதிகாரத்தை எடுக்க முடியலே. குடியிருந்தவங்களும் அப்ப 50 குடும்பம் இருந்தா, இப்ப நிறைய குடும்பம் ஆயிருச்சி. இந்த சுந்தரராய சேர்வைகாரருடைய மருமகன் சுப்பையன், பால கிருஸ்ணன் டாக்டர் இரண்டு பேரையும் கூப்பிட்டு, நீங்க இவ்வளவு எடுத்துக்குங்க, உங்களுக்கு நான் power எழுதித் தந்துவிடுகிறேன். இந்த நேரத்திலிருந்து SCயை அப்புறப்படுத்தி எனக்கு புடிச்சி குடுங்க. நீங்க இவ்வளவு பங்கு எடுத்துக்குங்க. நீங்க ரெண்டு பேரும் கள்ளர்களா? அந்த தெம்புல உடனடியா ஒரு நாள் - சுப்பிரமணியம்கிற செட்டியார் இன்ஸ்பெக்டரா வந்திருக்கார், திரிபாதி SP தஞ்சாவூரில். அந்த நேரம் நாங்க அங்கதான் இருந்துகிட்டிருப்போம் - பட்டுக்கோட்டை பேராவூரணி அந்த பகுதியெல்லாம் சுத்திகிட்டுதான் இருப்போம். ஏதாவது ஒண்ணுண்ணா உடனே யாரைப் பார்க்கணும்னு மக்களுக்குத் தெரியும், வந்துடுவாங்க.

இவங்க ஒரு நாள் இன்ஸ்பெக்டரை சரி பண்ணிகிட்டு திரிபாதிக்கு தெரியாம ட்ராக்டர், புல்டோசரெல்லாம் கொண்டு போயி கொட்டகையை தகர்த்து எல்லாம் உழுது கிழுது செட் பண்ணிட்டாங்க. பாதை எல்லாம் அடைச்சிட்டாங்க - தூக்கிப் போட்டுட்டாங்க. ஆத்துக்கரை ஓரம், நேரா பிளாட் போட்டு கடை- shopping complex கட்டிவிடலாம், டவுன்லன்னு செஞ்சுட்டாங்க. செஞ்சதுக்கு அப்புறம்தான் எங்களுக்கு தகவல் வந்தது. உடனே நாங்க போனோம். பெண்களை அழைச்சிட்டு போயி தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை சாலையை மறிச்சாச்சு. தஞ்சாவூர் சாலையை மறிச்சா SP இருக்கார். SP கிட்ட நேரா சட்டரீதியா தக்க ஆவணங்களை வச்சு இதுல இன்ஸ்பெக்டர் ஒரு செட்டியார். சொத்துக்கு சொந்தக்காரர் இந்த செட்டியாருக்கு சொந்தம். இந்த இரண்டு பேரும் கள்ளர்கள். இவங்களுக்கு இவ்வளவு பங்கு இந்த மாதிரிப் பண்ணியிருக்காங்க. சிவில் மேட்டர் கோட்டில இருக்கு. எப்படி தொட்டாங்க. இந்த இன்ஸ்பெக்டருக்கு இன்ட்ரஸ்ட், இவரு மேல UT (untouchability) கேஸ் நாங்க போடவா? நீங்க நடவடிக்கை எடுக்கறீங்களா? இல்லாட்டி இவரை இதுலை இருந்து ஒதுங்கிக் கொள்ளச் சொல்லுங்க. நாங்க பார்த்துக்கறோம். அப்படீன்ன உடனே அவர் நெருப்புப் பிளம்பு ஆயிட்டார். எக்கு எக்குன்னு இன்ஸ்பெக்டர் வுட்டு எகிறிட்டான். போஸ்ட்டுக்கு வந்த புதுசு. அதனால நாம் SP மேல நம்பிக்கை ஊட்டலே. பிரச்சினையை நாங்க கொண்டு போன முறையிலை அவன் உண்மையிலை அக்கறை யோடை உனக்கென்ன அக்கறை? நீ எப்படி இதுல போன வந்த? அதென்ன சிவில் மேட்டருக்கு போலீசுக்கு போயி நின்னுகிட்டு, புல்டோசர் வச்சி தகர்க்கிறது அப்படீன்னு சத்தம் போட்ட உடனே வந்து கெஞ்சினான் அந்த ஆள். அதிலயிருந்து இன்னமும் எங்க போனாலும், வாங்க தலைவரே அப்படி இப்படின்னு பேசுவான். அப்ப நான் ஒதுங்கிக்கிறேன். நல்லாய் இருப்பாய் என்னை விட்டிடுங்க அப்படீன்னு அந்த இன்ஸ்பெக்டர் கேட்டுகிட்டார். நீ ஒதுங்கிக்க, நீ இல்லைன்னா நான் எத்தனை பேரை வேணும்னாலும் பார்த்துக்குவேன். அப்படீன்னு சொன்னேன். வேன் எடுத்தேன். 25 கிராமத்துல திரட்டினேன் பையங்களை, கொண்டு போயிட்டு நேரா திருப்பி அடைப்பை எடுத்தேன். கொட்டகையை போடுன்னு சொன்னேன். இன்னமும் நம்ம custodyயிலதான் இருக்கு.

அந்த பிரச்சனைக்குத்தான் உஞ்சைராசன், எப்படி இப்படியெல்லாம் போறாரு? சேர்வையார் குடும்பம், அதெல்லாம் வெட்டுவா கொலையெல்லாம் நடக்கும் என்றார். சேர்வையார் குடும்பத்த எப்படி involve பண்ணி நோட்டீஸ் போட சொல்லி சேர்வையாருக்கு வேண்டாத கோனார்கள் சில பேர் சொன்னான். ஏன்னா கோனாரை வெட்டிப்புட்டாரு சேர்வையாரு. அதே சமயத்துல சேர்வையார் குடும்பத்துக்குள்ள என்ன பலவீனம் இருக்குங்கிறதை தெரிஞ்சி நான் அந்த நோட்டீசில வேற சில விவரங்களை புகுத்தினேன். சேர்வையாரோட மகளைக் கட்டினவரு தான் எதிரி. ஆனா சேர்வையார் மகளைக் கட்டி விட்டதோடு சரி. அவ செத்த அன்னிக்குதான் சேர்வையாரு வந்தாரு, 5 வருசத்துக்கு முன்ன, அவ்வளவு குடும்பப் பகை. அப்போ நீங்க மொத்த சாதின்னு சொல்லியோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரங்க குணசேகரன்

அல்லது சேர்வையார் குடும்பம்னு சொல்லியோ பேசிட்டிருந்தீங்கன்னா அங்க நிக்க முடியாது. சேர்வையார் மகனுக்கே, தன்னுடைய அதிகாரத்தை எல்லா இடத்திலும் நிறுவுற பண்ணை வயல் சேர்வைகாரர் தம் மருமகன் மேல கைதுபண்ணி போஸ்டர் அடிச்சதுல சந்தோசப் பட்டான். இதுதான் fact. அவ்வளவுக்கு அவங்களுக்குள்ள பகை.

இதே சேர்வையாரை மீறி ஒரு இடத்துல 84இல் நான் ஒரு போராட்டம் நடத்தினேன். அவரு ஒரு ஒப்பந்தம். ரெண்டு பேரும் பஞ்சாயத்து போட்டு பேசணும்னு முடிவு பண்ணினோம். பாதிரம் கோட்டை தேவர்களுக்கும் எஸ்சிய பூத் ஏஜெண்டா இருந்ததுக்காக கட்டி வச்சி அடிச்சி போட்டு, பாதிரம் கோட்டை தேவரை கைது பண்ண சொல்லி போஸ்டர் அடிச்சி நோட்டீஸ் போட்டு உண்ணா விரதத்தை அறிவிச்சிட்டான். இடையில காசிதேவர்ங்கிற வரை புடிச்சி பாதிரம் கோட்டை தேவரும் பண்ணைவயல் சேர்வையார்கிட்ட வர்றாங்க. பண்ணைவயல் சேர்வையாரு என்னைப் பார்க்க வர்றார். நான் அவருக்கு ஒரு நாற்கா லியை எடுத்துப் போட்டிட்டு அந்த ஆள்களுக்கு பெஞ்சு எடுத்து போட்டுட்டு (எங்க பங்காளி வீட்டு rice mill) நான் ஒரு ஸ்ருல் எடுத்துப்போட்டு உக்காந்தேன். அவர் கேக்கிறார், எப்படி இதுமாதிரி பிரச்சினை ஆயி போயிடிச்சி? நீங்க பார்த்து செய்யலாம், போலாம் வரலாம், என்னய்யா நாமெல்லாம் தாயா பிள்ளையா - அப்படீன்னாரு. ரைட் டுங்க. பேசிக்குவோம். ஆனா கட்டி வச்சி அடிச்சி போட் டதை எப்படீங்க பாக்குறீங்க? "என்ன தண்டனை வேணும் னாலும் குடுப்போம்யா, அவன் என்னய்யா கண்டான் அகமுடையான்" அப்படி இப்படின்னாரு. சரி, எங்கே பஞ்சாயத்த வச்சிக்குவோம் அப்படீன்னாரு. பஞ்சாயத்து தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த பகுதியில நாலு கிராமத் துலதான் நாங்க பேசமுடியும், மத்த சாதிக ளோட உக்காந்து. ஒட்டங்காரு வீரியங்கோட்டை நடுவிக்கோட்டை கல்லூருணி. இந்த நாலு ஊர்லதான் நாங்க தலித்துக பிற சாதிகளோட உக்காந்து பஞ்சாயத்து பேசினா எங்களுக்கு தற்பாதுகாப்பு இருக்கும். சுதந்திரமாக நாங்க பேசமுடியும். இன்னொரு ஊரிலேன்னா மத்த வங்க பேசுறத கேட்டுகிட்டு வர்ற மாதிரிதான் இருக்கும். இந்த நாலு ஊர்ல எந்த ஊர்ல வச்சிக்குவோம்னேன். டக்குனு அவரு என் வீட்டுல நம்பிக்கை இல்லையான்னார். சரி உங்க வீட்டுல பேசுவோம் - பட்டுக்கோட்டையில. அவரு வீட்டுக்கு போனா freeயா உக்காந்து பேசலாம். ஒரு செல்வாக்கு மிக்க சக்தியே தவிர இந்த மாதிரி விசயங்கள்ல எல்லாம் இது பண்ணிக்கிட மாட்டான். சரின்னு ஒத்துக்கிட் டாலும் பஞ்சாயத்துக்கான குறிப்பிட்ட தேதி வரையிலும் போராட்டத்துக்கான பிரச்சாரத்தைக் கைவிட மாட்டோம். பஞ்சாயத்துல எங்களுக்கு நீதி கிடைச்சாதான் போராட்டத்தை ரத்து பண்ணுவேன். (ஆரம்பத்துல மறுத்துட்டம்னா இந்த ஆள் நம்மை தப்பா கொண்டு போயிடு வார். பிரச்சினையை திசை திருப்பிடுவார்.) அதனாலை போராட்டத்துக்கான பிரச்சாரம் தொடர்ந்து நடந்துகிட்டிருக்கும். போராட்டத் துக்கு முதல் நாள் பஞ்சாயத்து நடக்கும், பஞ்சாயத்தில் எங்களுக்கு நியாயமான தீர்ப்பு கிடைச்சா போராட்டத்தை withdraw பண்ணிக்கு வோம், இல்லைன்னா போராட்டம் மறுநாள் நடக்கும்னேன்.

இவன் என்ன செஞ்சான் - பாதிரம்கோட்டை தேவர்கள் சேர்வையாரை கரெக்ட் பண்ணிகிட்டு, பாதிரம் கோட்டையிலேயே பஞ்சாயத்தை வைச்சுக்கிறதின்னு சொல்லி, இங்கிருந்து அரிசி காய்கறி பருப்பு 100 பேர் சாப்பிடறதுக்கு போய் கிட்டிருக்குது - பாதிரம்கோட்டை பறையன் இதை பாத்துட்டு வந்து சொல்றான் என்கிட்ட. அப்ப அது நமக்கு பாதுகாப்பு இல்லப்பா. அவங்க வீடு 500 வீடு இருக்கு. நீங்க 100 வீடுதான் இருக்கிறிய. நான் வந்து பஞ்சாயத்து பேசி எனக்கும் பாதுகாப்பு இல்ல. உங்க ளுக்கும் நான் பாதுகாப்பு குடுக்க முடியாது. முதல்ல நீங்க எல்லாரும் ஒவ்வொரு படி அரிசி எடுத்துகிட்டு எல்லாரும் பட்டுக்கோட்டைக்கு வீரமுத்து ஹாஸ்டலுக்கு வந்துருங்க. இரட்டை மலை சீனிவாசன் பேர்ல நாங்க ஒரு மாணவர் விடுதி வச்சிருக்கோம். வீரமுத்துன்னு ஒருத்தர் மேனேஜ் பண்ணிக் கிட்டிருக்கார். 30 - 40 வருசமா இருக்கு. அந்த ஹாஸ்டலுக்கு வந்தி ருங்கன்னு அங்கேயே படுத்துக்க சொல்லிட்டு, சமையல்காரரை விட்டு சமைக்க சொல்லிட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாங்க கிராமத்துக்கு போயிட்டோம். அங்கேயே படுத்திட்டு காலையில் போராட்டம்தான். போராட்டத்தில உக்காந்த உடனே பாதிரம்கோட்டை தேவர்கள் 11 பேரை பொலிஸ் அரெஸ்ட் பண்ணிட்டு கும்பகோணத்துக்கு கொண்டு போயிட்டான். சரி, அடுத்த நாள் சேர்வையார் சொன்னார், நீங்க சொன்னதை நடத்தல, உங்களுக்குள்ள பஞ்சாயத்து பண்ணியது எப்படி தேவர் வீட்டுக்கு போச்சின்னேன் - இப்படி ஒவ்வொரு பிரச்சினையிலும்.

இப்ப ஒரு பிரச்சனை - வீரக்குடியில அருணாசல மண்கொண்டான் என்பவர் 83 - 84இல அரசாங்கம் 1 ஏக்கர் 68 செண்ட் நிலத்த தாழ்த்தப்படுத்தப்பட்ட மக்களுக்கு பட்டா கொடுத்தது - குடி இருக்க. அது கலியமூர்த்தி ராங்கியர்ங்கிறவரிட்ட இருந்து வாங்கி பட்டா போட்டது. அவர்கிட்ட இருந்து அரசாங்கம் வாங்கின இடம் - அந்த ஊர் பெருநிலக்கிழாரும் கிராம மணியகாரருமான கள்ளர் சாதியைச் சேர்ந்த அருணாசலம் மண்கொண்டார் இடத்துக்கு பக்கத்தில இருக்கு. அதனால இவர் என்ன நினைக்கிறாரு, இந்த இடத்துல பறையன் இருந்திட்டான்னா நம்ம வீடு அக்கம் பக்கம் ஆயிடுது. அதனாலை நமக்கு மரியாதை இருக்காது. பக்கத்துல 4 - 5 ஏக்கர், இதையும் சேத்துகிட்டோம்னா பெரிய தென்னந் தோட்டமா ஆயிடும் என்று வேறொரு இடத்தில் 1 ஏக்கர் 10 செண்ட்டை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுத்தார். பாக்கி 57 செண்ட் கொடுக்கலை. 15 ஆண்டுகளாக கொடுக்கலை. இந்த 15 ஆண்டுகளுக்கிடையில் தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்பதெல்லாம், நாங்க மாட்டுப் பொங்கலை ரோட்டுல வைக்கிறோம், மாட்டுக்கு கிடை கட்டுற அளவுக்கு ஒரு 20 செண்ட்ட குடுங்கன்னா முடியாதுன்னுட்டாரு. 1.10 ஏக்கரை தன் தம்பி முத்துசாமி - municipal commissioner of Tamilnadu - என்பவருக்கு பாகம் பண்ணும்போது அவருடைய (முத்துசாமி) பாகத்தில் இருந்த 1.10 ஏக்கரை பவர் ஏஜன்டை கொண்டு அருணாசலம் எழுதி வாங்கியிருக்காரு. அந்த 1.10 ஏக்கரை தாழ்த்தப்பட்டவங்களுக்கு குடுக்கிறாரு. இந்த 57 செண்ட்டை 15 வருசமா குடுக்கலை. இடைக் காலத்துல மாட்டுக் கிடைக்கும் இடம் கொடுக்கலை. இதைக் கேட்டதுக்கே ரோட்டுல போயி பொங்கல் வையுடாங்கன்னுட்டாரு. இந்த தடவை அந்த பஞ்சாயத்துல ஒரு தாழ்த்தப்பட்டவர் (ரிசர்வ் தொகுதி) பிரசிடன்ட்டா இருந்தார். 98வரை அதைப்பத்தி நினைக்கலை. தொகுப்பு வீடு வரும்போது நம்ம பிரசிடன்ட் இருக்கிற காலத்தில் 10 தொகுப்பு வீடு கட்டிக் கலாம்னு போயி பிரசிடன்ட்கிட்ட கேட்கிறாங்க. உங்களுக்கு இடம் எங்கய்யாங்கிறாங்க. அருணாசலம் கொடுத்திருக்காரு 1 ஏக்கர் 10 செண்ட். சரி உம் பேர்ல பட்டா இருந்தா எடுத்திட்டு வா.

பட்டாவை கேட்டா இவர் ஆதி திராவிடர் கிட்ட இருந்து எடுத்துகிட்ட 1 ஏக்கர் 68 செண்ட்டுக்கு பதிலா இவர் தன் தம்பிக்கு கொடுத்தார் இல்லியா, அந்த ஒரு ஏக்கர் 10 செண்ட்டையும் தன் பினாமிகளான அன்பழகன், சின்னப்பாங்கிற 2 பேர்ல பட்டா டிரான்ஸ்பர் பண்ணி வைச்சிருக்காரு. அவங்க SC இல்ல. அவங்க யாருன்னே ஆருக்கும் தெரியாது. அதன்பின் வீரக்குடி ராசேந்திரன் நம் அமைப்பில் இருக்கிறாரு. அந்த ஊர்க்காரரு விசயத்தை சொல்றாரு. நாங்க போயி மனு குடுக்கிறோம். மனு குடுத்தும் ஒரு நடவடிக்கையும் இல்லை. அடுத்த கட்டமா, SC-ST யின் நிலத்தை அபகரிச்சா வன்கொடுமை தடுப்புச் சட்டம்கிற விதியை சுட்டிக் காண்பிச்சி SI கிட்ட போயி மனு குடுத்தோம். SI அருணாசலத்தின் தம்பியோட சகலன். அவன், என்ன சார், அருணாசலம் எனக்கு சொந்தக்காரன், நீங்க இன்ன சமுதாயம், இவ்வளவு பெரிய சிக்கல கொண்டு வரீங்களே, என்னன்னான். “நீ பேசு. உன் சொந்தக்காரன்கிற முறையில பேசு. இல்லைன்னா சட்டப்படி நடவடிக்கை எடு, இல்லாட்டா நான் உங்க மேல neglect of dutiesஇல வழக்கு போடுவே”ன்னேன். அவர் இளைஞர்களை பார்க்கிறார், அப்புறம் என்ன செய்றான். வீரக்குடி மணக்காடுங்கறது ஒரே பஞ்சாயத்து 2 hamlet - குக்கிராமம். மணக்காட்டில இருக்கிற 5 - 6 பறையர்கள் வசதியான 10 ஏக்கர் 5 ஏக்கர் நிலம் உள்ளவன். வீரக்குடியில இருக்கிற வன்லாம் கூலிக்காரன். நாங்க போற ஆள் கூலிக்காரரு. வீரக்குடியில பணக்கார SCயை தூண்டிவிட்டு, “எங்க ஊர்ல சாதிக் கலவரத்தை தூண்டும் மனித உரிமை கழக பொதுச்செயலர் அரங்க குணசேகரனை கைது செய்” என 200 - 300 போஸ்டர் அடிச்சி ஒட்டினோம். அதன்பின் பேராவூரணி தாலுகாபீசில் அமைதிக்குழு கூட்டத்திற்கு தாசில்தார் ஏற்பாடு பண்ணினார். மணக்காட்டுல உள்ள வசதி படைச்ச தலித் ஆனந்தன் மெடிக்கல் ஸ்டோர் வச்சிருக்கிறான். கடன் வாங்குறான். டிராக்டர் பயன்படுத்திக்கிறான். வண்டியில ஏத்திட்டு போறான் - இப்படி ஒரு உறவு பணக்கார SCக்கும் பணக்கார கள்ளருக்கும் இடையில் இருக்கிறவரையிலும்....

(காலக்குறி: அப்ப வர்க்கம் வேலை செய்யுது அங்க!)

**அரங்க குணசேகரன்:**

ஆமா - வீரக்குடியில இருக்கிற தலித்துக்கள் எல்லாம் மணக்காடு ஆனந்தனை அடிக்கிறேன், வெட்டுறேன், குத்துறேன், ஆய் ஊய் பார்த்துக்கிறேங்கிறான். நான் சொன்னேன், எதிரி நம்மள சரியா முடிச்சி போட்டு விட்டிருக்கான். இந்த நேரத்துல நாம ஜாக்கிரதையா இருக்கோணும். நீ அடிக்கலாம் பணக்கார பறையனை. காத்திரு இன்னும் ஒரு வருசம் போகட்டும். இப்ப அடிச்சியின்னா ஏதோ SCக்குள்ளயே கோஸ்டி மோதல்ங்கிற மாதிரி கவனத்தையே திசைதிருப்பி விட்டுடுவான் என்று அவனை கட்டுப்படுத்திட்டு, திருப்பி FIR போட்டு நடவடிக்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுன்னு, உண்ணா விரதம் இருந்தோம். உண்ணா விரதம் இருந்தா என்ன பண்றான் தாசில்தார், peace talk போட்டான். யாரு வீரக்குடி SCக்கும் மணக்காடு SCக்கும் peace talk. நாங்க TBயில (பயணியர் விடுதி) உக்காந்திருந்தோம். எங்க இயக்க கொள்கை பரப்புச் செயலாளர் மோட்ச குலசேகரன் மற்றும் சிலரை அனுப்பி தாசில்தாரிடம் Peace Talkக்கு எத்தனை மணிக்கு வரணும், எதிர் தரப்பு யார்ன்னு கேட்டு வர சொன்னேன். அவரும் போயி விபரங்கள தெரிஞ்சிகிட்டு, எதிர் தரப்பினராக தலித்துகளுக்கு உள்ளேயே உள்ள வசதி படைச்ச ஆனந்தன் வகையறாவை சேர்த்திருக்கிறதை ஆட்சேபித்துவிட்டு, அமைதிக்குழு கூட்டத்திலை கலந்துக்க முடியாதுன்னு சொல்லிட்டு வந்துட்டார். பிறகு தாசில்தார் ஆள் அனுப்பியதன் அடிப்படையில் வீரக்குடி மக்கள் மற்றும் இயக்கத் தோழர்களுடன் வட்டாட்சியரை சந்தித்த நான், என்னய்யா peace talk? நாங்க நிலம் பறி கொடுத்தது அருணாசலம் மண்கொண்டார்கிட்ட, என்னவோ மணக்காட்டு பறையனுக்கும் வீரக்குடி பறையனுக்கும் peace talk போட்டிருக்க? யாருகிட்ட நிலம் வாங்கப் போற நீ? அது என்ன - அவனுக்கு நீ சுப்பீரியர் ஆபீசரா, உனக்கு அவன் சுப்பீரியர் ஆபீசரா? உன் டிபாட்மென்ட்தான் பட்டா குடுத்தது? உன் டிபாட்மென்ட் SCக்கு குடுத்ததை எப்படி திருப்பி அவன் பேருக்கு transfer பண்ணின? மரியாதையா நடவடிக்கை எடு, இந்த peace talkஐ காலி பண்ணு. நாங்க கலந்துக்கிற முடியாது. எல்லாரும் வெளியே வாங்கன்னு அழைச்சிட்டு வந்தேன்.

அன்றைக்கு peace talk நடக்கலை. அதுக்கு பிறகு கரம்பயத்திலிருந்து முத்துசாமின்னு பழைய CMகாரர். 80 - 90 வயசு இருக்கும் - அவருடைய சொந்தக்காரர். சாமிநாதன், கரம்பயம் ஒரு மிராசுதார், வேப்பங் காட்டை சேர்ந்த பஸ் முதலாளி இந்த அருணா சலத்தின் சொந்தக்காரர். புலவர் பெருந்தேவன் - பழைய CPI. இவங்கள்லாம் சேந்துகிட்டு அந்தப் பகுதியில் இருக்கிற 10 - 20 வெள்ளாளர்கள் - கள்ளர்கள் - தேவர்களை அழைச்சிகிட்டு TBக்கு வந்துட்டான் - என்ன சொல்றீங்க, ஒத்துப்போவோம், பேசுவோம்னு. என்ன ஒத்துப் போறது? 1 ஏக்கர் 60 சென்ட் எங்களுக்கு கொடுத்தது, 1 ஏக்கர் 10 சென்ட் குடுத்தீக, 50 சென்ட் குடுக்கலை - அதை குடுக்க வேண்டியதுதான? போட்டு குழப்பி ரொம்ப argument எல்லாம் நடந்தது. கறாரா நாங்க சொல்லிட்டோம், இதுலை சமாதானம் பஞ்சாயத்தில்ல. 1.68க்கு 1.68 எங்க இடத்துக்குள்ள அதையே கொடு, இப்ப அதில தென்னம்பிள்ளை போட்டு 100 மரம் காய்ச்சிகிட்டு இருக்கு, எப்படி குடுப்பான் அவன்? வாழை தென்னை போட்டு.... சூப்பரா இருக்கு அந்த இடம். அதை கேட்டுக்கிட்டிருக்கிறோம் நாங்க. மாற்று இடம் தர்றேங்கறான். மாற்று இடம்னா அந்த வீரக்குடியிலேயே கொடு, ஏன்னா மணக்காட்டுக்கு இங்கையிருந்து shift பண்ணிட்டா, வீரக்குடி - மணக்காடுங்கறது ஒரு ரிசர்வ் பஞ்சாயத்தா இருக்கிறதை உடைச்சி தனிப்பஞ்சாயத்தாக்கி அதுல ஏதோ சதித்திட்டத்தை வச்சிகிட்டு மணக்காட்டுல தர்றேங் கிறான், 20 சென்ட்டை. தரவேண்டியதோ 57 சென்ட். இதை புரிஞ்சிகிட்டு கறாரா முடியாதின்னிட்டோம். அந்த sitting முடிஞ்சது. ஒரு வாரம் சென்று அடுத்த sitting. இதைவிட பெருந்தனகாரர்கள் சாதி இந்துக்கள் எல்லாம் TBயில வந்து பேசுறாங்க. மணிமாறன் பஸ் முதலாளி, அவர் சொந்தக்காரரு ஏகப்பட்ட ஆட்கள்லாம், கள்ளர் - அகமுடையார் எல்லாம், மிகப்பெரிய செல்வாக்குள்ள ஆட்கள். அவங்கள்லாம் சசிகலா - நடராசன் கும்பலைச் சேர்ந்த ஆட்கள். சிதம்பரம் - பிரேம்குமார் - வாண்டையார் கும்பலுக்கு உறவினர்கள். அவங்கள்லாம் எங்க ஏரியாவுல மைனாரிட்டி. அவங்க link எல்லாம் இவ்வளவு தூரத்துல இருக்கு. எங்க ஏரியாவுல 10, 20 கள்ளர்கள்தான், ஆதிக்க சக்தியா பணக்காரனா இருக்கிறானே தவிர மக்கள் சக்தி அல்ல. ஆனா அவங்க linkquage சசிகலா - சிதம்பரம் - பிரேம்குமார் - வாண்டையார் வரை இருக்கு. ஆனா உக்காந்து அடி கிழி கிழின்னு கிழிச்சிட்டான். ஏய்யா ஒரு பறையன் சின்னசாதி பறையன்னு சொல்ற, அவன் வீட்டு சொத்த எடுத்துகிட்டு நீ குடுக்க வெட்கப்படுற. என்னய்யா அர்த்தம் அப்படீன்னு உட்டு எக்கின எக்குல அவன் மொண்டு போயி ஒருத்தன் சொல்லிட்டு போயிட்டான், இவங்க கேக்குற கேள்விக்கு நானாயிருந்தா 5 ஏக்கர் குடுத்திட்டு என் மரியாதையை காப்பாத்திட்டு போயிடுவேன்னு சொல்லிட்டு போயிட்டான்.!

இதில என்ன ஒரு பாயின்ட்ன்னா அவருடைய சொந்த தங்கச்சி குடும்பத்துல அருணாசலம் மண் கொண்டார் செய்த சில செயல்களை இங்கிருந்து நான் சேகரிச்சேன். அருணாசலம் தங்கச்சி புருசன் கிட்ட 40 மா (=13 ஏக்கர்) நிலம் சாப்பிட்டிருக்காரு. சொந்த தங்கச்சிக்கு போட்ட 15 பவுனை வாங்கி திருப்பி குடுக்காம தின்னுட்டாரு. தங்கச்சிகூட தங்கச்சி புருசனும் எப்படா இவருடைய யோக்கியங்கிற முகமூடிய கிழிக்கிறதுன்னு காத்துகிட்டிருக்காங்க. அருணாசலம் மண்கொண்டார் தன் சொந்த தம்பி மனைவிகிட்ட ஒரு சொத்து மோசடி செஞ்சிருக்காருங்கிற செய்தியை கொடுத்தேன். ஏன்னா அந்த தம்பி செத்து போயிட்டார். அவர் மனைவி சாந்தி தஞ்சாவூர்ல இருக்காங்க. அந்தம்மாகிட்ட போயி உங்க புருசன் வீட்டு சொத்துதானே - உங்க சொத்துதானே கொடுத்தார், ஒரு ஏக்கர் 10 சென்ட்டா, ஆனா 1 ஏக்கர் 60 சென்ட்ட உங்க குடும்பத்துல பட்டா போட்டாரில்ல SCகிட்ட வாங்கின சொத்த. அதுல எத்தனை சென்ட் உங்க மகன்கள் பேருக்கு பட்டா போட்டவர்? 1 ஏக்கர் 10 சென்ட்ட போடணும்ல உங்க மக்கள் பேர்ல, உங்க பேர்ல, உங்க புருசன் பேர்ல? ஆனா தன் பிள்ளைக பேர்ல 1ஏக்கர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

40செண்ட்ட போட்டுகிட்டு உங்க பிள்ளைக பேர்ல... 20 செண்ட் தான் பட்டா போட்டிருக்காரு. 1 ஏக்கர் 10 செண்ட்ட SC கிட்ட குடுத்துபுட்டு அதையும் பினாமி பட்டா வேறு ஆளுக்கு போட்டுகிட்டு உங்க வீட்டு சொத்த எடுத்துக்கிட்டதுக்கு பதிலா உங்களுக்கு 1 ஏக்கர் 10 செண்ட் பட்டா குடுக்காமல் அதுல 20 செண்ட் உங்க பிள்ளைகளுக்கு, 1 ஏக்கர் 40 செண்ட் தன் மனைவி, மகள், தன் ஆம்பிளை புள்ளை ரெண்டு பேருக்கு போட்டிருக்காரு. இதுதான் உங்க கொழுந்த னுடைய சமத்துவமான்னு கேட்டவுடனே அந்தம்மா முழிச்சிகிச்சி. ஆகா, இவ்வளவு மோசடியான்னு - கொடியவரான்னு சொல்லி அந்தம்மாவும் எங்களுக்கு ஆதரவா மாறிக்கிட்டாங்க. தங்கச்சியும் ஒரு சப்போர்ட், கூடப் பிறந்த தம்பி ஒரு சப்போர்ட், பழையபடி பாகப்பிரிவினைன்னு சொல்லி அவங்க குடும்பத்துல ஒரு பக்கம் குழப்பம், வாங்குன நிலத்த மீட்டு குடுன்னு ஒரு பக்கம் குழப்பம், அடுத்த போராட் டத்துக்கு மேல போராட்டம் ஆர்ப்பாட்டம். தஞ்சா வூர்ல ஒரு 1500 பேரை திரட்டி ஒரு பெரிய ஆர்ப் பாட்டம் பண்ணினோம். பத்திரிகையில எல்லாம் கிளியரா போட்டான். அதுக்குப் பிறகு அந்தம்மாவும் நாங்களும் சேர்ந்து கலெக்டரை நேரா பார்த்து press பண்ணி ஆகஸ்ட் மாதம் 10ம் தேதி பட்டாவை ரத்து பண்ணினோம். நீண்ட ஒன்றரை வருச போராட்டம். அந்த ஆள் பேருல இருந்த பட்டாவை ரத்து பண் ணிட்டு, இப்ப பெப்ருவரி மாசம் 5ம் திகதி எல்லா பட்டாவையும் SCக்கு திருப்பி குடுத்திடுங்க.

இப்ப அந்தாள் என்னென்ன செஞ்சார்ன்னா, இதுக்கிடையில எல்லா சாதி இந்துக்களையும் திரட்டி வந்து நம்மை கட்டுப்படுத்திடலாம்னு முயற்சி எடுத்தார். பேச்சு வார்த்தைக்கு நாம மறுத்திருந்தா, இவ்வளவு திமிரா வந்துட்டாங்களா பறையங்கள்லாம்? பேச்சுவார்த்தைக்கே ஒத்துக்க மாட்டோங்கிறாங்க, இவங்ககிட்ட போயி நாம பேச போனது தப்புன்னு..... டென்சனாகி மொத்த சாதி இந்துக்களும் நமக்கு எதிரா மாறி இருப்பான். இரண்டு sitting பேச ஒத்துக் கிட்டது நம்முடைய செயல் தந்திரம். ஏன்னா யாரா யிருந்தாலும் கொஞ்சம் தெம்பிருக்கும்போது நியாயம் இருக்கும்போது பேசலாம். இந்த ரெண்டு sitting இலும் சாதி இந்து தலைவர்கள் பண்ணையார்கள் வந்து திரும்பி போனதுக்கு அப்புறம், மாவட்ட கவுன் சிலர் பொன் பழனிவேலு, முன்னாள் அமைச்சர் எம். ஆர். கோவிந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குழ. செல்லையா ஆகிய மூணு பேரையும் அழைச்சுகிட்டு ஒரு ரெண்டு கிடாயை வெட்டி சமுதா யத்தில எல்லாருக்கும் ஒரு நோட்டீஸ் போட்டு ஒரு கூட்டத்தை - ஒரு 500 பேரை கூட்டிட்டாங்க. என்ன நினைச்சு கூட்டியிருக்கார்ன்னா இவங்கள்லாம் வந்தா இந்த ஊர் SCயை அரங்க குணசேகரன் இல்லாமலே கட்டுப்படுத்திடலாம், அவங்களை மிரட்டி நாம சாதிச் சிக்கலாம்னு சொல்லி அந்த கூட்டத்தை போட்டாங்க. தலைவர்கள் வந்திருக்காங்க, என்ன பிரச்சனைன்னு கேக்கிறபோது, இந்த மாதிரி பஞ்சாயத்து - யாருக்கு பஞ்சாயத்து? வீரக்குடி ஆதிதிராவிடர்களுக்கும் அருணாசல மண்கொண்டாருக்கும். அவருக்கு என்ன பிரச்சினை, அரங்க குணசேகரன்தான் அவங்க தலை வர் என்றதும், அரங்க குணசேகரன் இல்லாம நாங்க எப்படி பஞ்சாயத்துக்கு வரமுடியும், அது எப்படி நீங்க கூப்பிட்டனுப்பிச்சீங்க? அவர் வர்றார்ன்னுதான் சொன்னீங்க இப்படீன்னு கேட்டிருக்காங்க. எம். ஆர். கோவிந்தனும் குழ. செல்லையாவும் நாங்க பாத்துக் கிறோம் அரங்க குணசேகரனை, நீங்க வாங்க இன் னொரு நாள் பேசுவோம்னு ரெண்டு பேரும் வந் தாங்க. வந்த உடனே நான் பேச ஒத்துக்கிட்டேன். ஒத்துகிட்டதும் 6ம் தேதி அம்பேத்கர் நினைவுநாள், நாலஞ்சி கிராமத்துல நான் கார் எடுத்துகிட்டு போயி மாலை போடணும், புரோகிராம் வச்சிருக்கிறோம், இவரு அன்னிக்கி கூட்டம் போட்டாரு, கோவேந்தன், பழனிவேலு, செல்லையா எல்லாம் கூட்டம் போட்டு அங்க உக்காந்து என்னைக்கு பேசுறதுன்னு எனக்கு சொல்லலை, 12 மணிக்கு அம்பேத்கர் சிலைக்கு மாலை போட வாரேன்னு மட்டும் சொல்லி இருக் காங்க. போலிஸ் ரிப்போர்ட்ட வச்சிகிட்டு அவங்க ளாகவே பேராவூரணியில வச்சி பேசிக்கலாம்னு அவங்களா கூட்டம் போட்டாங்க. நான் போகலை. அவங்க கூடி கலைஞ்சி போயிட்டாங்க. ரெண்டு நாள் சென்று எம். ஆர். கோவிந்தன் போன் பண்ணி னார், என்ன பிரச்சினையை தீர்க்க வேண்டாமா, நீங்க பாட்டுக்கு போனா எப்படி? நீங்க மதிப்ப தில்லை, நாங்க 100 பேரு கூடி இருந்தோம் என்றார். பஞ்சாயத்து நடக்கிறதை யார் சொன்னீங்க, சொன் னீங்களா? ஏன், நாங்க சொல்லி இருந்தோமே, நீங்க கூட வரேன்னு சொல்லி இருந்தீங்களாமே - SI சொன்னாரே, அவரை கூப்பிடுங்க, நான் பேராவூரணி யில் 2 மணிக்கு அம்பேத்கர் சிலைக்கு மாலை போடுறேன்னு புரோகிராம் கொடுத்திருந்தேன். அது ஒரு அரசியல் நிகழ்ச்சி. பஞ்சாயத்துக்கு வர்றேன்னு சொன்னனா? நீங்க எனக்கு அறிவிக்க வேண்டாமா? சரி போகட்டும். பேசுறதா இல்லையான்னார். பேச ணும். எப்ப பேச போறிய? நாங்க 5 பேர் கொண்ட குழு இருக்கோம், பேசி முடிவெடுப்போம். உங்க நியாயத்தை நீங்க சொல்லுங்க, அவங்க நியாயத்தை அவங்க சொல்லட்டும், நாங்க சொல்ற தீர்ப்பை நீங்க ஏத்துக்குங்க.

குழுவுல நான் இருக்கிறனா இல்லையான்னேன். அதெப்படி நீங்க இருக்க முடியும்? நீங்க ஒரு தரப்பு ஆள் இல்லையான்னார். பேசாம போனை வையுங் கன்னு வச்சிட்டேன். அத்தோட அவருக்கும் நமக்கும் பிரச்சனை முடிஞ்சது. அதன்பின் அவரைப் பார்ப்ப தில்லை, பேசுவதில்லை. அதுக்கு பிறகுதான் இந்தப் போராட்டம் எடுத்து 50000 ரூபா செலவுன்னாங்க. பழனிவேல்ன்னு எங்க ஊர் பிரசிடெண்ட் மூலமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சிக்கு இவ்வளவு நிதி தர்றோம், அந்த மக்களுக்கு செலவு இவ்வளவு தர்றோம், 25 செண்ட் தந்திட றோம்னு என்னென்னவோ பேரம் பேசுனாங்க. சொல்லி ஒண்ணும் நிக்கலை.... அந்த நிலத்த புடிச்சி பட்டா வாங்கிட்டோம்.

தூராங்குடிங்கிற ஊர்ல ஒரு தலித் லேடி. 92இல் இந்த சம்பவம். தொண்டியில இருந்து வந்து தோப்பில குடி இருந்தாங்க, தேவர் வீட்டு தோப்பில....

**காலக்குறி:**

இரட்டை வாக்குரிமைபற்றி உங்கள் கருத்தென்ன?

**அரங்ககுணசேகரன்:**

இரட்டை வாக்குரிமைங்கிறது என்ன தெரியுமா? அடிப்படையில் அது, உதாரணத்திற்கு ஒரு சட்டமன்ற தொகுதியில ஒரு வேட்பாளர் நிற்கிறார். அவருக்கு எல்லாரும் சேர்ந்து வாக்களிச்சி 2,3 பேர்ல ஒருத்தரா ஜெயிக்க வைக்கிறோம். ஆறு சட்டமன்ற தொகுதியை கொண்டது ஒரு நாடாளுமன்ற தொகுதின்னு வச்சிருக்கிறோம். இது இன்றுள்ள நடைமுறை. ஒவ்வொரு சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் ஒரே நேரத்துல தேர்தல் நடக்கையில ரெண்டு பெட்டி இருக்கும் - சட்டமன்றத்துக்கு ஓட்டு போட ஒரு பெட்டி, நாடாளுமன்றத்துக்கு ஓட்டு போட ஒரு பெட்டி. ஒரு லட்சம் வாக்காளர்களுக்கு ஒரு சட்ட மன்ற வேட்பாளர்ங்கிறது குறைந்த பட்சளவு. ஒரு சட்டமன்ற தொகுதிக்குள் 30000 ஓட்டு தாழ்த்தப் பட்டவங்களுக்கு. அப்போ, 5 தொகுதிகள்ல இருக்கக் கூடிய சட்டமன்ற தொகுதிகளின் எல்லையை பிரிச்சி, அதை ஒரு ரிசர்வ் தொகுதியா, தலித் தொகுதியா கணக்கெடுத்து அதுக்கு 5 சட்டமன்ற தொகுதிகளில் இருக்கக்கூடிய தலித்துக்களுக்கு ஒரு சட்டமன்ற தொகுதி, அந்த சட்டமன்ற தொகுதிக்கு வேட்பாளர் இருப்பார். தாழ்த்தப்பட்டவர்களில் ஓரிருவர் போட்டி போடுவார்கள். இப்போதுள்ள நடைமுறைப்படி, ஒரு பூத்துக்குள்ள போறபொழுது தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்கள் சட்டமன்ற தொகுதிக்கு பொது வேட்பாளருக்கு ஓட்டு போடுவார்கள். தாழ்த்தப் பட்டோர் சட்டமன்ற தொகுதி பொது தொகுதிக்கு ஒரு ஓட்டு போடுவார். தன்னுடைய தொகுதிக்காக ஒரு வேட்பாளருக்கு ஒரு ஓட்டு போடுவார். எல்லா ருக்கும் ஒரு ஓட்டுன்னா இவருக்கு 2 ஓட்டு விழும். இந்த முறையில் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுக்கான பிரதிநிதிகளை தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். அப்படி போகும் வேட்பாளர்கள் சட்ட மன்றத்தில் நாடாளுமன்றத்தில் இந்த மக்களுக்காக உண்மையிலேயே பேசினார்கள் - போராடினார்கள் என்றால் மக்கள் மத்தியில் அந்த குழுவுக்கு செல் வாக்கு வரும், மரியாதை வரும், இவர்களின் எண் ணிக்கை பலமில்லாமல் ஒரு ஆட்சி நடக்க முடியா துங்கற அச்சம் வரும், ஆட்சி அதிகாரமும் எச்சரிக்கையா நடத்தப்படும் - மக்களுக்கு பாதுகாப்பு இருக்கும். இதனாலதான் இதை அவர் வலியுறுத்தி பேசினது.



அரங்க குணசேகரன்

இந்த கோரிக்கையை இந்தியாவில் முதன்முதலாக அதிகமா எழுப்பினது, 1919 மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள் வந்த காலத்தில் - தமிழகத்தில் எம். சி. ராசா, இரட்டைமலை சீனிவாசன் போன்றவர் கள்தான். அந்தக் குரல் வந்தபோது அம்பேத்கர் இதை மறுத்து விடுகிறார். இது சரியில்லை என்றார். ஆனால், பின்னால் சைமன் கமிசன் இங்கு வந்த போது எல்லாரும் அதை புறக்கணிக்க வேண்டும் என்றபோது இவர் ஒருவர்தான் இந்தியாவில் சைமன் கமிசனை வரவேற்போம் என்றார். அதன்பின் 1919 முதல் பத்தாண்டு காலம் (சைமன் கமிசன் வந்தது 1928இல்னு நினைக்கிறேன்) இவருக்கு ஏற்பட்ட சில தெளிவுகளின் அடிப்படையில் அம்பேத்கர் இரட்டை வாக்குரிமையை வலியுறுத்தி சைமன் கமிசனிடம் மனு கொடுத்தார். பின்னாலதான் அது வட்டமேசை மகா நாட்டில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுது. காரணம் இந்த காலத்தில் முசுலீம்கள் இரட்டை வாக்குரிமை - தனி வாக்காளர் தொகுதி கேட்கி றார்கள். சீக்கியர்கள் கேட்கிறார்கள், ஆங்கிலோ இந்தியர்கள் கேட்கிறார்கள். இந்துக்களைத்தவிர சிறுபான்மையர் பூரா - கிறித்தவர் உட்படக் கேட்கிறார் கள். இதுவும் வலிமை பெறுது. வட்டமேசை மாநாட் டில் இது விவாதத்துக்கு வருகிறபோது எல்லாவற் றையும் காந்தி ஏத்துக்கிறார், தலித்துகளுக்கு மட்டும் இதை மறுத்துவிடுகிறார். இது என் இந்து சமுதா யத்தை இரண்டாகப் பிளக்கிறது, என் கண் முன்னால் பார்க்கமாட்டேன்னு ஒப்பாரி வச்சி புலம்புகிறார். வாதங்களை அவருக்கு தர்க்கரீதியா வைக்கத் தெரி யலை. வட்டமேசை மாநாடு முடிஞ்சது. அதன்பின் மறுதேதி வச்சி பேசுறதுக்குள்ளை, முசுலீம்களை தனக்கு ஆதரவாக ஐக்கியப்படுத்துகிறார், உங்களுக் கான கோரிக்கையை நான் ஏத்துக்கறேன், எக்கார ணத்தைக் கொண்டும் தலித்துகளுக்கு இடஒதுக்கீடு கொடுப்பதை ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்று கடிதம் எழுதிவிடுகிறார். அந்தக் கடிதத்தை எப்படியோ capture பண்ணி விடுகிறார் அம்பேத்கர். மறு வட்டமேசை மாநாட்டில் தூக்கிப் போட்டு காந்தியின் முகத்திரையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழிச்சுடறார். இப்படித்தான் வந்தது. சாரத்தில் இதுதான் இரட்டை வாக்குரிமை.

அந்த காலகட்டத்தில் எம். சி. ராசா அதை ஒத்துக் கிடலை.. ஏன்னா எம். சி. ராசா இந்த கோரிக்கையை எழுப்பினாரு தமிழகத்தில். ஆனா வட்டமேசை மாநாட்டுக்கு கூப்பிடறபோது பிரிட்டிஸ் அரசாங்கம் அம்பேத்கரை கூப்பிட்டிருச்சி. இரட்டைமலை சீனிவாசனை கூப்பிட்டாங்க. இவர் (எம். சி. ராசா) காங்கிரஸ் பக்கம் போயிட்டாரு. காங்கிரசு சார்பா போனதனாலை காங்கிரஸ் பிரதிநிதி காந்திதான் - வட்டமேசை மாநாட்டுக்கு. தான் தலித் தலைவனா தமிழ்நாட்டுல இருக்கிறோம், தன்னை கூப்பிடலைங்கற கோபத்துல அவர் (எம். சி. ராசா) இரட்டை வாக்குரிமையில் அம்பேத்கருக்கு எதிராக இருந்தார்.

அரசாங்கம் ஒரு கட்டத்தில் இரட்டை வாக்குரிமையை ஏத்துக்கிறோம்னு அறிவிச்சுடுறாங்க - விக்டோரியா ராணி அறிவிச்ச உடனே, காந்தி அப்ப ரெவாடா சிறையில் இருக்கிறார். அங்கேயே சாகும்வரை உண்ணாவிரதம் அறிவிச்சார். அவருடைய சாகும்வரை உண்ணாவிரதம் பற்றி நிறைய கதை எல்லாம் எழுதுவாங்க. ஒரேஒரு முறை சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தது தலித்துக்களுக்கான இரட்டை வாக்குரிமையை பறிக்கிறதுக்குத்தான். அதுக்கு முன்ன ஒரு நாள், இரண்டு நாள் இருப்பாரு, பத்து நாள் இருப்பாரு.... காந்தியுடைய வரலாற்றில் பார்த்தீங்கன்னா, அவர் சாகும்வரை உண்ணாவிரதம்னு அறிவிச்ச ஒரே ஒரு போராட்டம் தலித்துகளுக்கு இரட்டை வாக்குரிமையை கொடுத்தால் அதை நீக்கும்வரை நான் சாகும்வரையும் உண்ணாவிரதம் இருப்பேன்னு சொன்னார். அப்ப ஒரே கொந்தளிப்பு.

அம்பேத்கர் தமிழ்நாட்டில் பெரியார் ஒரு ஆளுக்குத்தான் தந்தி அடிக்கிறார். இதை ஏற்றுக்கொள்ளாத காந்தி செத்தா சாகட்டும்னார் பெரியார். பின்னால் சுதந்திரம் வந்ததுக்கு பிறகு காந்திய சுட்ட உடனே காந்திதேசம்னு பெயர் வைக்கணும்னு பெரியார் சொன்னார். அது ஒரு தனிமனித பண்புதான். ஆனா, அன்றைக்கு 40 - 50வயதில் இருக்கிற காலகட்டத்தில் struggleஇல இருக்கிற போது காந்தி சாகிறத பத்தி கவலை இல்ல, ஒத்துக்கிறேன்னுட்டார். தந்தியடிச்சிட்டார். ராஜாஜி போன்றவர்களெல்லாம் நெருக்கடி பண்ணி ஒரு வாரமா பஞ்சாயத்து பண்ணி அங்கையும் இங்கையுமா மாறி மாறி பேசிக்கிட்டிருந்தாங்க. இவர் ஒரு stand எடுக்கிறத்துக்கு முன்னாலை மேற்கு வங்கத்தில் இந்து மகாசபையும் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் கும்ப்ளேங்கிற தலித் தலைவரும் சேர்ந்து இந்த இரட்டை வாக்குரிமை எங்களுக்கு வேண்டியதில்லை. கூட்டு வாக்காளர் தொகுதியில் அதே எண்ணிக்கையில் கொடுத்தா போதும்னு சொல்லி ஒரு ஒப்பந்தம் போட்டாங்க.

அதே காலகட்டத்தில் தமிழ்நாட்டில் எம். சி. ராசா - காங்கிரஸ் இங்கிருந்த இந்துமகாசபையோட இவர் ஒரு ஒப்பந்தம் போட்டார். அப்ப யாருமே ஒப்பந்தம் போடாம இருந்திருந்தா இதுக்கு எல்லாருமே சேர்ந்து fight பண்ற மாதிரியான நிலை. ஆனா அவனவன் அங்கங்க இருக்கிற செல்வாக்கை காட்டின உடனே காந்தியின் ஆட்கள் எல்லாம் புதிய ஒப்பந்தங்களை போட்டுட்டாங்க. அம்பேத்கருக்கு நெருக்கடி. வேறு வழியில்லாம கூட்டு வாக்காளர் தொகுதிக்கு ஒத்துக்கிட்டாரு. தொகுதி எண்ணிக்கையை அதிகரிச்சு வாங்கிட்டாரு, தொகுதி கூட தரோம்னு வட்டமேசை மாநாட்டுல காந்தி பேசினதுக்கு ஒரு மாதிரி சொல்லியிருக்காரு. குறைச்ச தொகுதிதான் ரெட்டை வாக்குரிமையில வரும், கூட்டு வாக்காளர் தொகுதியில கூடுதலா எண்ணிக்கை தருவோம்னதுக்கு அம்பேத்கர் சொன்னார், நாங்க கூடுதலா புல் திங்கிற குதிரையைவிட குறைச்சலான்னு சொல்லி ஒரு நல்ல உதாரணத்தை சொல்றார்.


மா ஓ சேதுங்

இரட்டை வாக்காளர் முறையில் தொகுதி எண்ணிக்கை குறைவாயிருந்தாலும் எங்களுக்கு மரியாதை - சுதந்திரம் - தன்மானம் இருக்கும், எங்க வெற்றியை நாங்க தீர்மானிப்போம், கூட்டு வாக்காளர் தொகுதியில் நாங்க தீர்மானிக்க முடியாது. ஏன்னா பொது தொகுதியில் - கூட்டு வாக்காளர் தொகுதியில் ஒரு இலட்சம் ஓட்டு இருக்குதுன்னா 50,000 ஓட்டு BC இருப்பாங்க. 50,000 ஓட்டு SC இருப்பாங்க. இந்த திருமாவளவன் போல ஒரு SC அங்க நிக்க போறார். இவர் இன்றைக்கு இருக்கிற நிலையில் அவர் வரலாம். அது வேற விசயம். ஆனா எதிர்காலத்துல இன்னும் 2 பறையர், பள்ளர் மோதுறபோது அந்த SC இயல்பாவே இரண்டா மூணா பிரிஞ்சிடுது - அப்ப BC என்ன பாப்பான், திருமாவளவனும் இன்னொரு ஆளும் நிப்பான், இந்த ஆளு ஜெயிச்சா நமக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதிப்பில்ல, திருமாவளவன் ஜெயிச்சா நாம ஊரிலை குடி இருக்க முடியாது. வீட்டை பத்த வைப்பான், பஸ்ஸை எரிப்பான், சட்ட மன்றத்துலை பேசுவான், இன்னும் பறையனுக்காக கூட கேப்பான். எப்படிறா இவனை நாம தேர்ந்தெடுக்கிறதின்னு சொல்லி அந்த 50,000 ஓட்டு ஒரு பக்கம் முடியுது. அப்ப என்னாகுது, தீர்மானிக்கிற சக்தி அந்த 50,000 ஓட்டுதான். ஆனா SC, தேர்வு செய்யப்படுறவன் SC நலனை பின்னுக்கு தள்ளக்கூடியவன். இது கூட்டு வாக்காளர் தொகுதியில இருக்கக்கூடிய அபாயம். அதனாலைதான் இதை எதிர்த்து இரட்டை வாக்குரிமை என்கிற முன்முயற்சியை நாம கொண்டு போகலாம். அதுக்காக சில மாநாடுகள் போட்டோம். சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியில்கூட 10 இடத்துல பொதுக்கூட்டங்கள் எல்லாம் போட்டிருக்கிறோம். இரட்டை வாக்காளர் தொகுதி பற்றி கட்டுரை வெளியிட்டிருக்கோம். ஏன் இதைத் தொடர்ந்து வலியுறுத்துறது இல்லைன்னா இது இருக்கிற சமூகத்துல, மாற்றை நோக்கி சிந்திக்காம, இருப்பதை நோக்கி சிந்திப்பதுங்கற போக்குகள் இன்று பல பேரிடம் இருக்கு - இருக்கிறதுக்குள்ள எப்படி பாகம் பிரிக்கிறது. இன்று சமூகத்தில் இந்திய ஆட்சிமுறையையும் இந்தியா சுதந்திரம் பெறுவதையும் அம்பேத்கர் முழுமையா அங்கீகரிச்சிட்டார். அதனால தான் அவர் அரசியல் சட்டக் குழுவில் வர்றார். வைசிராய் கவன்மெண்டில அமைச்சராகிறார். இந்திய அரசியல் கட்சிகளை எல்லாம் அவர் அங்கீகரிச்சிட்டு, எந்த மாறுதலையும் எதிர்காலத்தில் செய்யணும்னு அவர் நம்பியிருக்கலாம்: இன்று இது மக்களுக்கு எதிரானதுன்னு அவர் சிந்திக்கலை, அதுக்கான தயாரிப்பில் அவர் இல்லை. ஒரு ஆய்வறிஞரா இந்துத்துவாவுக்கு எதிராக அவர் குரல் கொடுத்தாலும், அரசியல் வடிவம்கிறபோது இதுக்குள்ள நின்னார். இதுக்குள்ளேயே எப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தன்மை வாய்ந்த ஒரு சுதந்திரத்துக்கும் தன்மானத்துக்கும் உரிமைக்குமான கோரிக்கையை அவர் எழுப்ப முடிந்தது.

இதுகூட அவரளவில் அன்றைய சூழல்ல மாற்று சிந்தனைதான். நாம் இன்றைக்கு பார்க்கிறபோது மார்க்சியரீதியாக சமூக மாறுதலை கோரி நிற்கக்கூடிய நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தலித்துகளுடைய தலைமை அங்கீகரிக்கப்படாத இந்நாட்டில், தலித்துகளுக்கு, இருக்கிற கட்சிகளிலேயே பிரதிநிதித்துவம் கொடுக்கப்படாத இந்நாட்டில் தனியாவே தொகுதி கொடுக்கணும், அதையும் அவங்களே தேர்ந்தெடுக்கணும்கிறது இன்றும் அது ஏனைய சமூகங்களில் இருக்கக்கூடிய ஜனநாயக சக்திகளை - ஏழைகளை ஒரு வர்க்க அணிசேர்க்கையில் ஒன்று திரட்டுவதற்கு ஒரு பெரும் தடையாக மாறி மேலும் சாதிரீதியாக பிளவுகளை - பேதங்களை வலுவடைய வச்சிடுமோங்கிற அச்சத்தின் காரணமாத்தான் அந்த விசயத்தை நாங்க கைவிட்டிருக்கிறோம் - மனித உரிமை கழகத்தை பொறுத்தவரை.

அந்த கோரிக்கையை நாங்களும் பேசியிருக்கிறோம், போராடி இருக்கிறோம், மாநாடுகள் கூட்டி இருக்கிறோம். நாங்க அதை வலியுறுத்த முடியாததற்கு காரணம் இப்படி ஒரு சிந்தனை ஓட்டம்தான். ஏன்னா democraticன்னு போயிட்டா ஒரு மனிதனுக்கு ஒரு வாக்குரிமை, ஒரு மனிதன்கிற முறையில் தலித் 5 பங்கு கொடுமை அனுபவிக்கிறான், அதனால் 5 வாக்குரிமை கொடுக்கலாம்கிற வாதம்கூட முன்வைக்கப்படுகுது. நான்கூட சில நேரங்கள்ல இப்படி முன்வைச்சிருக்கிறேன். ஆனா யதார்த்த நிகழ்வில் தாழ்த்தப்பட்ட மக்கள் 44 பேரை தனியா தேர்ந்தெடுத்திட்டா கூட இந்த சமூகத்திற்குள்ளதான் - இந்த அரசாட்சிக்குள்ளதான் சில அழுத்தங்களை கொடுக்க முடியுமே ஒழிய இந்த அரசு வடிவமே, இன்றைக்கு இருக்கிற தேர்தல் முறையே, இன்றைய பாராளுமன்றத்திலை போயி சேர்ந்திருக்கிற வர்க்க சக்திகளே, சாதியையும் மதத்தையும் காப்பாத்திறதுதான். என்ன வகையான மாறுதலை நாம செஞ்சாலும் அதுக்குள்ளயும் சாதி மதத்தை எப்படி காப்பாத்துறதுங்கிறதுல நம்மைவிட மிகுந்த தேர்ச்சி பெற்ற இந்துத்துவா சக்திகள் இங்கே இருக்காங்க. காங்கிரசுக்கும் BJP-RSSக்கும் இன்னைக்கு உறவு இருக்குங்கிறாங்க. அன்னைக்கு காங்கிரசுக்கும் RSSக்கும் எவ்வளவு உறவு இருந்ததுங்கிறதுக்கு இந்துமகாசபை போன்ற உதாரணம் நிறைய சொல்ல முடியும்.

....இந்த இம்பீரியல் சிஸ்டத்துக்குள்ளேயே எல்லா தீர்வையும் நாம் காணப்பெற முடியாது. நாம ஒரு திட்டத்தை குடுத்தா அவன் ஒரு திட்டத்தை குடுத்தும் கூட அதை முழுங்கிடுவான்.

அதனால ஒரு சமூக புரட்சிக்கான சனநாயக மாற்றத்துக்கான தேடுதலோட போயிட்டிருக்கிற நாம், அனைத்து உழைக்கும் மக்களையும் தலித்து மக்களோடு இணைக்கக்கூடிய ஒரு அரசியல் திட்டத்துக்கு இந்த இரட்டை வாக்குரிமை இன்றைய காலகட்டத்துக்கு பொருத்தப் படாததுபோல எங்களுடைய அனுபவம் - உணர்வு - புரிதலில் இருக்கு. அதை நான் வலியுறுத்தலை. ஆனால் மக்களை எழுச்சியூட்ட விழிப்பூட்ட அதுவும் பயன்படுமானால் அதையும் பரிசீலிக்கலாம்.

One man one vote என்கிறது, எல்லோருக்கும் எல்லாம் சமம்கிற தத்துவத்துக்கு எதிரா தெரியுது. ஆனா எல்லாருக்கும் எல்லாம் சமம்னு சமூகம் இல்லையே. கூடுதலா கொடுமை அனுபவிக்கிறவங்க தரப்புல இருந்து அந்த வாதம் வைக்கப்படலாம். ஆனா அதை பெருவாரியா இந்த ஓட்டு மூலமா பெற்றுவிட முடியாது. இந்த ரெண்டு ஓட்டு போடுறதுனால இந்த எல்லா கொடுமையும் தீர்ந்திட முடியும்னு இருந்தா, இந்த ரெண்டு ஓட்டு முறையை நிச்சயம் பண்ணலாம். 5 ஓட்டு கொடுத்தாலும் இவன பறையனா வச்சிருக்கிறதுக்கான செயல் தந்திர உத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த ஆளும் வகுப்பக்கு இருக்கு. அதனால இதை ரொம்ப வலியுறுத்திக்கிட்டு நாம் இருக்க வேண்டி யதில்லை.

**காலக்குறி:**

சட்ட சபையில் இரட்டை வாக்குரிமை கேட்பது என்பது தலித்துகளுக்கு ஒரு ஓட்டா, இரண்டு ஓட்டா என்ற பிரச்சனை அல்ல, சட்டசபையில் தலித்துகளுக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமா வேண்டாமா என்பதுதானே! இது பற்றி உங்க கருத்து என்ன?

**அரங்க குணசேகரன்:**

ரெட்டை வாக்குரிமைங்கிறது ரெண்டு வாக்கு போடுறதா அர்த்தம் கிடையாது. இவங்களுக்கு பிரதிநிதிகள் சட்டசபையில் இருக்கணும்கிறதுதான். அதற்கான வழிவகைதான் ரெட்டை வாக்குரிமை.

மத்தவங்க மறுக்க முடியாது. மத்த சாதிகளுக்கான பிரதிநிதித்துவம் இருந்தே இருக்கு. 12% மக்கள் - 18% மக்கள் இருக்காங்கன்னா, 18%தான் எல்லாத் துறைகளிலும் அவங்க பிரதிநிதித்துவம் இருக்கணும். சட்டசபையிலும் இருக்கணும். அதுக்கான வழிவகை கள்லாம் இருக்கு. மத்த சாதிக்கு இருக்கு. அவன் கேட்க முடியாது. சட்டசபைகளிலும் பிற துறைகளிலும் அவன் இருக்கிற எண்ணிக்கைக்கும் கீழா பிரதிநிதித் துவம் இருந்தா அது சனநாயக முறைக்கு எதிரானது. இதை சரி பண்றதுதான் அந்த வழிமுறையே தவிர அனுபவிக்கிறான் - அதனாலை ரெட்டை வாக்குரிமை கிடையாதுங்கிறதில்ல.

இப்பவுமே தலித்துக்களுக்கு பிரதிநிதித்துவம் கூட்டு வாக்காளர் தொகுதியில இருக்கு. தலித் அல்லாதவர்கள் எப்படி ஏற்கனவே சட்டசபையிலும் நாடாளுமன்றத்திலும் இருக்கிறாங்களோ, கூட்டு வாக்காளர் தொகுதியில், எண்ணிக்கை கொடுத்திருக் கிறோம்ல - உங்க மக்கள் தொகை அளவுக்கு? SC மக்கள் தொகை அளவுக்கு கூட்டு வாக்காளர் தொகுதியில MLA கொடுத்திட்டமே, நீங்க பேசாதது எங்க தப்பான்னு BC கேக்கிறாங்க. என்ன சொல் வீங்க? அப்ப எண்ணிக்கையே இல்லாம இருந்தாதான் நீங்க கேட்கலாம், ரெட்டை வாக்குரிமைங்கிற பிரச்சி னையில representation என்கிறீங்களே, 2 ஓட்டு போடாம ஒரு representation என்கிறீங்களே, 2 ஓட்டு போடாம ஒரு representativeஐ எப்படி தேர்ந் தெடுப்பீங்க? நீங்கதான் எல்லோருக்கும் ஓட்டுப் போடலாம்.

ஒரு பொதுத்தொகுதியில ஒரு முதலியார் நின் னார்ன்னா முதலியாருக்கு SC ஓட்டு போடறான். தன்னுடைய சாதி வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு ஓட்டு போடறான் SC. SCக்கு மட்டுமே SC ஓட்டு போட்டு BC வேட்பாளரை SC தேர்ந்தெடுக்கலைன்னு வையுங்க, BCகிட்ட எந்த ஒரு SCயும் கேள்வி கேட்க முடியாது. நலன்கள் இருக்காது. அவன்பூரா இவன் ஓட்டே நமக்கு தேவையில்ல, இவன ஒதடான்னு டுவான். இவனுடைய ஓட்டுடைய நிர்ப்பந்தமும் BCக்கு இருந்தாதான் இது ரெட்டை வாக்குரிமை. ரெண்டு ஓட்டுல இருந்துதான் ரெண்டு பிரதிநிதிங்கற விசயம் வருகுது. பிரதிநிதிக இல்லைங்கறது எப்ப இருக்கும்? SCயே பிரதிநிதியா தேர்ந்தெடுக்கப்படாம இருந்தா தான். கூட்டு வாக்காளர் தொகுதியிலதான் 42பேர் பாராளுமன்ற தொகுதியிலும் 108 பேர் எம்.பி. தொகுதி யிலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களே.

**காலக்குறி:**

42 வருசமா இந்துத்துவம்கிறது பிரதான politicsஇல் தன்னை openஆ வெளிப்படுத்திக்க முடியாம மறை முகமா வெளிப்படுத்திவிட்டு செயல்பட்டுகிட்டிருந்தது. ஆனா இப்ப 10 வருசமா ரொம்ப வெளிப்படையா - அது ஒரு பலம் கிடைச்ச மாதிரி இருக்குது. இன்னொரு பக்கம், எவ்வளவு குறைபாடு இருந்தாலும் தாழ்த்தப் பட்டோரின் அரசியல் வெளிப்பாடு ஏதோ ஒரு வடிவத்தில் develop ஆயிகிட்டிருக்குது. ரெண்டுக்கும் உள்ள உறவை எப்படிப் பார்க்கிறீங்கள்? இவங்களோட power அரசியலில் increase ஆக ஆக இந்துத்துவாவோட consolidation எப்படி நடக்குது? அல்லது குஜராத்தில் அத்வானியோட experimentsன்னு சொல்வாங்கள்ல முசுலீமையும் தலித்தையும் மோதவிட்டு அத்வானி specificஆ பண்ணிய experiment, அயோத்தியா ரத யாத்திரை வரும்போது.... sucessfulஆ implement பண்ணினதுன்னு சொல்றோமே, இந்த co-relationஐ எப்படி பார்க்கிறீங்க?

**அரங்க குணசேகரன்:**

குறைந்த பட்சம் இந்த 45 ஆண்டுகள் இந்துத் துவா openஆ வந்துதான் தன்னுடைய ஆளுகையை நிறுவணும்கிற அவசியம் இல்லாத அளவுக்கு இந்த parlementary setup இருந்தது. இந்த பாராளுமன் றத்தில், பூனா ஒப்பந்தம் போடற போது கும்பிளேயும் இந்து மகாசபையும் ஒப்பந்தம் போட்டது, இங்கே எம். சி. ராசாவும் இந்து மகாசபையும் ஒப்பந்தம் போட்டது. காந்தியை நிர்ப்பந்திச்சி போட்ட ராஜாஜி போன்றவர்கள், அம்பேத்கரை காந்தி நிர்ப்பந்திச்சது இதெல்லாம், அன்றைக்கு RSS பின்னால யார் இருந் தது. இந்த நாட்டு பாராளுமன்றமே நிலப்பிரபுக்களை யும் மடாதிபதிகளையும் பழைய மகாராஜாக்களையும் கொண்ட பாராளுமன்றம். பழைய மன்னர்களும் பெரும் நிலப்பிரபுக்களும் பண்ணையார்களும் ஜமீன் தார்களும் கொண்ட பாராளுமன்றம். அவர்கள் இந்துத் துவாவை பாதுகாக்கும் வர்க்கத்தின் பிரதிநிதிகள். ஆகவே இந்துத்துவாவுக்கு என்று தனி செல்வாக்கு செலுத்த வேண்டிய தேவை அன்று இல்லை. எப்ப வுமே வர்க்கங்கள் தன்னை பாதுகாத்துக் கொள்வ தற்குத் தான் மதத்தை, கலாச்சாரத்தை புனரமைக் கிறது, மாற்றியமைக்கிறது, பாதுகாக்கிறது. அப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த வர்க்கம் நேரடியாக அதிகாரத்தில் உட்கார்ந்தி ருக்கிற பொழுது தன்னுடைய கன்ட்ரோலை தாண்டி எதுவும் போயிடாது என்ற பிரமையில் இந்துத்துவா கூர்மையடைஞ்சி இங்கு சமூக ஏற்றத்தாழ்வுகள் consolidateஆ நடந்துக்கிட்டிருந்த நேரத்தில் இதைப் பற்றிய அக்கறையை அவங்க நேரடியா செலுத்த தயாரா இல்லை. அதுக்காக அது பாடத்திட்டங்கள்ல, உளவியல் ஆக்கங்கள்ல, பல்வேறு தளங்கள்ல சாதிங்கிறது இவ்வளவு தூரம் ஒடுக்கப்பட்ட சாதி களுக்கு இடையே முரண்பாடுகளும் எழுச்சியும் வீழ்ச் சியும் அன்றைய காலகட்டத்தில் ஏற்படலை. முதல் 40 ஆண்டுகள் வரை processஇல தான் கொஞ்ச கொஞ்சம் வந்துகிட்டிருந்தது. இவனுடைய கல்விக்குப் போக - வேலைக்குப் போக - நகர மயமாக்கல் - சம்பளம் - சேமிப்பு - கிராமத்துக்குள் நகரக் கல்வி அறிவின் தாக்கம் அப்படி ஒரு உருவாக்கம் - தலித் எழுச்சிக்கான உருவாக்கம்கிறது இந்த 50 ஆண்டு காலத்துல ஒரு வகையா நடந்துகிட்டுதான் இருந்தது. இது வெளிப்பட்டு அரசியல் வடிவெடுக்கிறதுக்கு இவ்வளவு காலம் ஆயிருக்குது. Processஇல 45 ஆண்டு காலம் வரையிலும் இந்துத்துவாவுக்கு, தான் நேரடியான ஆளுமை சக்தியா இருக்கிறபொழுது தன்னை அது அந்த வடிவத்தில் வெளிப்படுத்திக் கொண்டது. இந்துத்துவாவை புனரமைக்க வேண்டிய தேவை - இவ்வளவு அழுத்தம் குடுத்து பாதுகாக்க வேண்டிய தேவை அன்றைக்கு இல்லை. அதுக்கான கேந்திரமான அரசியல் தளம் அன்னைக்கு அதுக்கு காங்கிரஸ்தான். ஆனா காங்கிரஸ் எடுத்த சில நடவ டிக்கைகள்ல அதுக்குள்ள இருந்த வர்க்க முரண்பாடு கள் - வர்க்க அணிசேர்க்கைகளுக்குள்ள இருந்த முரண்பாடுகள் - அது பல்வேறு தொழில் வளர்ச்சி களையும் கிராமப்புறங்கள்ல நகரமயமாக்கல்ல கிரா மங்கள்ல ரைஸ் மில் - சினிமா கொட்டகை, இப்படி யானது வர்றபோது பரவலா சில சிதைவுகளும் பிளவு களும் வருது. அப்பதான் பல்வேறு வர்க்கங்களும் organisedஆக- "80களில் எல்லாம்" 75இல் மாபெ ரும் ரயில்வே தொழில் சங்கப் போராட்டம் நடந்தது. அரசு ஊழியர் வர்க்கங்கள் எல்லாம் திரண்டது. நாரா யணசாமி நாயுடு வர்க்கங்கள் வந்தது. இப்படி பல் வேறு வர்க்கங்களும் குமுறி எழுந்தது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றோர் காலத்திலும் மிகப்பெரிய அளவில் காங்கிரசை வீழ்த்திவிட்டு அந்த இடத்தில் பல வர்க்கங்களும் திரண்டு ஒரு ஆட்சியை பிடிப்பது என்னும் சூழல் வருகிறபோது 70 - 80களில் நக்சல் பாரி எழுச்சிகள் வந்த காலகட்டங்கள், தெலுங்கானா புரட்சி வந்த காலகட்டங்கள் தொடர்ச்சியா அது வருது. இவற்றை எல்லாம் உன்னிப்பாக கவனிக்கிற இந்த நாட்டின் நிலப்பிரபுத்துவ அடிப்படை வர்க் கங்கள் அதைப் பாதுகாக்கக் கூடிய வர்க்கங்கள் அது சார்ந்திருக்கிற இந்துத்துவா நிர்மாணித்த RSS - பஜ்ரங்தள் - வி. எச். பி. - சங்கராச்சாரி போன்ற சக்திகள் உன்னிப்பாக கவனிக்கின்றன. இந்தப் போக்கில் விட்டால், காங்கிரஸ் வீழ்கிற போது நம்ம வர்க்கத்தை பாதுகாப்பதற்கு இங்க எந்த பிளாட் பாரமும் இல்லை என்பதற்கான மாற்றாக கண்டு பிடிக்கப்பட்டதுதான் பழைய ஜனசங்கத்தை புனர மைச்ச பா. ஜ. க. ஆகவே அன்னைக்கு 15 - 20 வருசமா 40 வருசமா வெளிய தெரியாம இருந்திச்சி, இன்னைக்கு வெளியில வந்திருச்சி.

இங்கையும் எப்படி வந்தாங்கன்னா பஸ்ல ஸ்டிக்கர் ஒட்டி, ஆஸ்பத்திரியில வேலு குத்தி, பாங்கில வெள்ளிக்கிழமை சனிக்கிழமை பணத்துக்கு பூசை போட்டு, கிராமங்கள்ல இந்து மறுமலர்ச்சி இயக்கங் களைக் கட்டி இந்து முன்னணிகளாக் காட்டி, கடற் கரை ஓரங்களில் முஸ்லீம்கள் இருக்கிற இடங்களில் எல்லாம் தலித்துக்களை அமைப்பாக்கி, கிறிஸ்த வர்கள் பெரும்பான்மையா இருக்கிற இடத்தில் கிறிஸ் தவர்களிடையில் இருக்கிற சாதி முரண்பாடுகளை இந்து முரண்பாடா மாற்றி கிறிஸ்தவ நாடார் இருப் பார், அங்க 2 பறையன் இருப்பான், ஒரு கிறிஸ்தவ பறையன் மாதா கோயிலுக்கு போயிகிட்டிருப்பான், அவனை ஒரு ஓரத்துல உக்கார வச்சிருப்பாங்க. மாதா கோயிலுக்குப் போகாத பறையனுக்கும் கிறிஸ் தவ நாடாருக்கும் ஒரு முரண்பாடு இருக்கும். அவனை இந்துவாக்கி இவனோட மோத விட்டு இந்து - கிறிஸ் தவ கலவரம், இந்து - முஸ்லீம் கலவரம் இப்படி சின்ன சின்ன விசயத்தை எடுத்திகிட்டு மண்டைக் காட்டில் இருந்து மீனாட்சிபுரத்தில் இருந்து பத்தாண்



**இரட்டை வாக்காளர் முறையில் தொகுதி எண்ணிக்கை குறைவாயிருந்தாலும் எங்களுக்கு மரியாதை — சுதந்திரம் — தன்மானம் இருக்கும், எங்க வெற்றியை நாங்க தீர்மானிப்போம், கூட்டு வாக்காளர் தொகுதியில் நாங்க தீர்மானிக்க முடியாது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுகளில் நன்கு திட்டமிட்டு இங்கு வளர்ந்திருக்கிறான். இப்படிப்பட்ட சூழலில் அகில இந்திய அளவில் பாபர் மசூதியையே பிரதானமா வச்சி, பிரச்சனையா மாற்றி - அது ஒரு விஷவிருட்சமாக மாறித்தான் இன்றைக்கு நேரடியா மதமே ஒரு ஆட்சி நடத்தலாம்கிற நிலை வந்திருக்கு. அதனால் இவங்க இப்ப தான் வந்தாங்கங் கிறதில் நமக்கு உடன்பாடு இல்லை. நீண்டகாலமா மதம் தான். நேத்து தோழர்கூட கேட்டார், இந்திய சிந்தனை மரபுங்கிறது இந்துத்துவா சிந்தனை மரபுன்னு சொல்றீங்களே அதுல எனக்கு உடன்பாடு இல்லைன்னார்.

என்னைப் பொறுத்தவரை அது ஒளிந்திருந்தாலும் வெளிப்பட்டாலும் இந்திய சிந்தனை மரபுங்கிறது இந்துத்துவா சிந்தனை மரபை அல்லது சாதி அதிகா ரத்தை நிலை நிறுத்துகிறவர்களுடைய சிந்தனை மரபாகத்தான் இங்கு தொடர்ந்து இருந்துகிட்டிருக்கு. அந்தச் சிந்தனை மரபை எதிர்த்த அத்தனை மரபுக ளுமே வீழ்ந்துபட்டிருக்கிறது என்பதே என் கருத்து என்றேன்.

மதம் இங்கு செல்வாக்குச் செலுத்தலைன்னு சொன்னா, 1945 காலத்துல காங்கிரசு ஆட்சியில், அன்று ஆரியர் வருகை, முசுலிம் படையெடுப்புன் னுதான் மூன்றாம் வகுப்பு புத்தகத்தில் எழுதினான். முசுலிம் இந்த நாட்டில் ஒரு 15 கோடி இருக்கிறான். அவன் இந்த நாட்டு மக்கள். ஆரியர் கலாச்சார ரீதியா யுத்தம் நடத்தி உள்ளே வந்தவன். ஆரியர் பற்றி சொல்லும்போது பாடப் புத்தகத்தில் அவன் ஏதோ பிழைக்க வந்தவன் மாதிரியும் முசுலீம் மட்டும் படையெடுத்து வந்தது மாதிரியும் படிக்கிற மாணவன் உள்ளத்திலேயே எதிர்எதிரா, முசுலீம்னா அந்நிய நாட்டுக்காரன் என்ற கருத்தியலை உருவாக்குகிற கல்வித் திட்டம். ஒவ்வொன்றிலும் இப்படி இருந்தி ருக்கும் - நீங்க எடுத்து பார்த்தீங்கன்னா, குப்தரின் காலம் பொற்காலம்னுதான் எழுதுவான். ஏன்னா இந்துத்துவாங்கிற சாதிய சனாதனத்துக்கான சட்டங்கள்...

**காலக்குறி :**

அன்றைய காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இந்து மதம் தன்னை வெளிப்படையாக காட்டிக்கொள்ளத் தேவை இருக்கவில்லை, இன்றுள்ள பா. ஜ. க. காலத்தில் அதற்கான தேவை வந்துள்ளது என்கிறீர்கள், இதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் இந்த இரண்டுக்குமே qualitative ஆன difference இருக்குங்கிறேன்.

**அரங்க குணசேகரன்:**

எந்த வர்க்கத்துக்கு மதம் தேவையோ அந்த வர்க்கம் நேரடியாக ஆட்சியில் இருக்கிற பொழுது மதத்தை முதன்மைப்படுத்தலை. காங்கிரஸ் பண்ணை யார்களும் நிலப்பிரபுக்களும் குட்டி மகாராசாக்களும் முன்னாள் மன்னர்களும் ஆட்சியதிகாரத்தில் இருக்கிற காலத்தில், நேரு - அவருடைய குடும்பத்தில் இருந்த சிந்தியா, மத்திய பிரதேசத்தில் எல்லாரையும் பாத்தீங் கன்னா பழைய மன்னர்களும் 1000 ஏக்கர் 50 கிராமத் துக்கு சொந்தக்காரர்களும் தாங்க 65 வரையிலும் பார்லிமெண்டுக்குள்ள இருக்கிறான். அவனுக்கு என்னத்துக்குங்க மதம்?

**காலக்குறி :**

அதில்கூட அன்று middle class இலை இருந்து போன minister கூட, பிரிட்டிஷ் educationஇலை போன liberal views அங்க இருந்துது, இன்னிக்கு அதும்கூட இல்லங்கிறேன், இன்னைக்கு RSS இலை அது கிடையாதுல்ல?

**அரங்க குணசேகரன்:**

அதுக்கு intelligentஆக சோசலிச முகமூடியை நேரு அணிந்திருந்தார், இந்திராகாந்தி அணிவிச் சிருந்தாங்க. குறிப்பா நேரு காலத்தில் பொதுத் துறை கள் ஒண்ணுரெண்டு இங்கு உருவாக்கப்பட்டது. சோசலிச முகமூடி அணிந்து சோவியத் ருசியாவோட உறவோட நாங்க செய்றோம், சோசலிச நாட்டோட உறவாயிருக்கிறோம்னு சொன்னாங்க. பொதுத் துறை கள் யாருக்கு சேவை செஞ்சிருக்கு? பொதுத் துறை உருவாக்குனதுனால சோசலிச முகமூடியை அவரு அணிவிச்சிகிட்டாரு. பொதுத்துறை இந்த நாட்டு மக்க ளுக்கு... தனியார் துறைக்கு லோன் குடுக்கிறதுக்கும் தனியார் துறையை வளப்படுத்துறதுக்கும் தான் பொதுத் துறைகள் உருவாக்கப்பட்டது.

(காலக்குறி : அது wrong priorityங்க. அத இன்னிக்கு நாம பாக்குற மாதிரி பார்க்க முடியாது. industry develop என்னா...)

**அரங்க குணசேகரன்:**

இது ஒரு wrong perception. Industry develop ஆச்சின்னா கவர்மெண்ட்டை accept பண்ணிகிட்டு பொதுவா நின்னு பாக்குறபோதுதான் wrong priority ன்னு வரும். கவர்மெண்ட்டே வர்க்க சார்புடையதுன்னு வரும்போது எப்படி wrong priorityன்னு வரும்?

**காலக்குறி :**

ஆரம்ப காலகட்டத்தில் சுதந்திரத்துக்கு பின்னால ஆட்சிக்கு வந்து நடத்தினவர்களின் வர்க்கப் பின்னணி என்ன?

அவங்க யார்? எதை அவங்க பிரதிநிதித்துவப் படுத்தினாங்க?

பின்னால் வந்தவங்க யார்? ஏதாவது ஒரு காலத்தில் அதுல ஏதாவது வேறுபாடு வந்திருச்சா?

Liberal views இருந்தது. இன்னைக்குள்ள RSS ஐயும் அதையும் ஒண்ணாக்க முடியாதுன்னு நினைக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**அரங்க குணசேகரன்:**

ஒண்ணாக்கலைங்க. RSS அன்னைக்கும் இன்னைக்கும் கலாச்சார பிரிவுதான், எப்பவுமே. அன்னைக்கு RSS காமராசர் வீட்டுக்கு நெருப்பு வச்சி கொளுத்தின போது தலைமை தாங்கினது வாஜ்பேய். இன்னைக்கு கருணாநிதி, right person in wrong placeன்னு சொல்றார். அப்ப வாஜ்பேய் இன்னைக்கு எப்படி புரட்சியானவர்? காமராசர் வீட்டுல படுத்திருக்கும்போது ஆள்விட்டு நெருப்பு வச்சி கொளுத்தினவரு வாஜ்பேய் 62இல். Image create ஆகிறபோது, பதவிகள் - வயது எல்லாம் கூடுகிறபோது சில மனிதர்களுடைய மோசமான கேரக்டர்லாம் வெள்ளத்துல அடிச்சிட்டு போயிடும்ங்க. அந்த மாதிரி ஒரு focus இலை காட்டப்படுறார், ஆனா பக்கா ரவுடி element.

வரலாறு தெரிஞ்ச இரா.செழியனும் அதைத்தான் சொல்றார் - இதை யாரும் மறுக்க சொல்லுங்க? வாஜ்பேய் யோக்கியமானவர்னு சொன்னா, RSS ஒரு காலத்தில் காங்கிரசை எதிர்த்து வளர்ந்திச்சி. ஆனா, அதே சமயத்தில், காமராசர் டில்லியில் படுத்திருந்த வீட்டுக்கு நெருப்பு வைச்சது யாரு? வாஜ்பேய்தான் அன்னைக்கு அந்த கட்சிக்கு தலைவர், அதுக்கு வழிகாட்டினவர். ஆனா 25 வயசுல ஒரு பையன் அடுத்த வீட்டுல பூந்துட்டான்னா, அதை நாலு நாளைக்கு பேசுவான், 50 வயசுல பெண்டாட்டி பிள்ளையோட செட்டிலாகி இருக்கிறபோது அதை யாராவது ஒரு புகாரா சொல்றபோது, அதை ஏன்டா இப்ப சொல்ற? 25 வயசுல நீயும் தான் போயிருப்ப, நானும் தான் போயிருப்பேன்கிறான். அரசியல் சட்டத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு reservation குடுக்கிறதுக்கு ஒரு கமிசனை வைக்கலாம்னுதான் அம்பேத்கர் சொல்லியிருக்கிறார், Article 340 இல். SCக்கு ரிசர்வேசன் அக்செப்ட்டட், கன்ஸ்ட்டிட்யூசனில். ஆனா 340இல் பிற்படுத்தப்பட்டோருக்கு விரும்பினா மாநிலங்கள் இடஒதுக்கீடு அளிக்கலாம்னு தான் இருந்தது. இடஒதுக்கீடு அளிப்பதற்கு ஒரு கமிசனை வச்சி கமிசன் ரிப்போர்ட் அடிப்படையில் இடஒதுக்கீடு கொடுக்கலாம்னுதான் இருந்துச்சி கமிசனும் போடலை, கத்திரிக்காயும் போடலை, 25% குடுத்துட்டார் காமராஜ் தமிழ்நாட்டில், BC க்கு...

**காலக்குறி :**

20 வருசம் முன்னால்கூட வேலைவாய்ப்பில் தலித்துகளுக்கு இடஒதுக்கீடுன்னு ஒண்ணு இருந்தது. தனியார் துறையும் வெளிநாடும் வர்றப்ப இதெல்லாம் அடிபட்டு போவுது. ரெண்டுக்கும் ஒரு பொதுத்துறைன்னு வச்சப்பகூட, பொதுத்துறையில இருந்த LIC யாகட்டும், அல்லது எல்லாத் துறையில் இருந்தும் லோன் எடுத்தது, லோன் sanction பெற்றதெல்லாம் பணக்கார வர்க்கம் தான்- உயர்ந்த சாதிதான், சந்தேகமேயில்லை. அது அப்படித்தான் பயன்பட்டிருக்குது. ஆனா அன்னிக்கும் கூட இட ஒதுக்கீடு செயல்பட்டிருக்குது. நீங்க சொல்றதில்



பெரியார்

ஒரு போக்கு என்னாயிடுதுன்னா அதை அன்னைக்கே பண்ணிட்டான், இன்னைக்கு...

**அரங்க குணசேகரன்:**

அப்படி வரலை, இதை சர்வதேச அரசியல்ல கொண்டு வரலாம். இந்தியாவில் இருக்கிற ஆட்சியாளர்கள் விரும்பி இந்த உலகமயமாதலோ தாராளமயமாதலோ கொண்டு வரலை. சர்வதேச அளவில் இந்த பொருளியல் சூழலினால் ஆளும் வர்க்கங்களுக்கு வந்த நெருக்கடிகள் என்ன? Processஇல் நிலப்பிரபுத்துவம், பின் முதலாளியம், பின் சோசலிசம் கிறது மார்க்ஸ் சொன்ன சமூக பரிணாம மாற்றம்.

ஆனா லெனின், இது ஏகாதிபத்தியமாவும் மாறும்னு சொன்னார். ஏகாதிபத்தியமா மாறுனதும் உண்மை. சோசலிச நாடே சமூக ஏகாதிபத்தியமா மாறிடுச்சி. இந்த சூழல்ல கனரக யந்திர தொழில் முறை தொடர்ந்து இருக்கும் பட்சத்தில், தொழிலாளி வர்க்கத்தின் திரட்சி ஏற்படுற போது நிச்சயமா இந்த முதலாளி வர்க்கத்துக்கு அது மரண அடி. ஏகாதிபத்தியம் தொடர்ந்து தன்னை தக்கவச்சிகிறதுக்கு - தகவமைச்சிக்கிறதுக்கு - நீடித்திருக்கிறதுக்கு இந்த கனரக தொழில்பாணி அவசியமற்றது - வேறுவிதமான பயோ-டெக்னாலஜி முதலியன இந்த processஇலை தான் வளர்ந்து வருது. அவருடைய சமூக கட்டமைப்பு, சிந்தனை ஓட்டங்கள்... நம் கண்ணுக்குத் தெரிய WTOவோடு ஒப்பந்தம் போடுகையில் என் நாட்டுக்கும் உன் நாட்டுக்கும் இன்னின்ன தர்றம்பா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வளவு ரூபாய குடுத்துடு, இன்ன தொழில் நான் செய்றேன், இவ்வளவு வரியை குறைச்சி குடு, இவ்வளவு இறக்குமதி லைசன்ஸ் குடுன்னு கேட்டா ரைட். அது உலகமயமாதல். அதைப்பத்தி நாம மறுக்கலாம், அது எல்லாத்துக்கும் இருக்கும்.

ஆண்டுக்கு 20% விவசாய உற்பத்திய நீ குறைச்சிக்கணும், அப்பதான் இதெல்லாம் நான் தருவேன்னு சொன்னதுடைய எதிர்கால திட்டம் என்ன? வருசத்துக்கு 20%ன்னா 10 வருசத்துல கஞ்சி போச்சி! இந்தியா அவன்கிட்டதான் கஞ்சிக்கு கையேந்தணும்கிற நிலை. பேக்டரி தொழில் மூலமாவே பதப்படுத்தப்பட்ட உணவுப் பொட்டலத்தை வாங்கி சாப்பிட்டு கிடக்கணும்கிற அளவுக்கு ஒரு நீண்ட காலத் திட்டத்துல தான் 92லேயே இந்த திட்டத்தை உருவாக்கினான். அப்ப இது யாருடைய தேவை?

இங்க எல்லாமே இருக்கு, காவிரியில தண்ணி வருது, காடுகள் இருக்கு, மழை பொழியுது, விவசாய நிலங்கள் நல்லா மூணு போகம் விளைஞ்சி எல்லாமே நல்லா இருந்துதுன்னா அவன் கிட்ட கோதுமை, பால், முட்டை வாங்க முடியுமா? வேளாண்மைத் தொழில் மேலை ஒரு கட்டுப்பாடு விதிச்சித்தான் தொழில் நுட்ப உதவியை அவன் குடுக்கிறான். இல்லைன்னா தொழில் நுட்ப உதவி தரமுடியாதுங்கிறான். அப்ப அடிவயித்துல கைவச்சிதான் தர்றான். அது அவனது சந்தைக்கான விசயம். சர்வதேச சூழல்ல ஏகாதிபத்தியத்துடைய - சர்வதேச வல்லரசு நாடுகளுடைய பொருளாதார ஆளுமை சக்திகள் பின்னிய வலையில் விழுவது மூன்றாம் உலக நாடுகளின் - வளர்முக நாடுகளின் வரலாற்று விதி - பொருளியல் சுரண்டலின் விதி. அந்த விதியைப் போய் காங்கிரஸ் காலத்துல இருந்தது, அப்பவே நடந்திருக்குது, எல்லாம் ஒண்ணுதான்னு சொல்ல முடியாது, அப்படி சொல்லலை. ஆனா அதை எதிர்கொள்ளக்கூடிய அரசியல் மாற்றங்கள் இங்கே நடக்கலை. காஸ்ட்ரோ இதுவரையிலும் தாக்குபிடிச்சி நிக்கிறார், பக்கத்திலேயே இருந்துகிட்டு, இப்பதான் ஒரு வருசமா சின்ன சின்ன நெருக்கடிகளை - சறுக்கல்களை சந்திக்கிறார். கதவை திறந்துவிட வேண்டிய அவசியம் இருக்கு. WTOவை 5 - 6 ஆண்டுகள் வரை தாக்குப் பிடிச்சாங்க சீனாவில். ஹங்காங்கில் மட்டும் தனி துறைமுகம் போல உறவு வச்சிகிட்டு வாங்கிகிட்டு மீதி பூரா இவங்க products தான். அவங்களும் இப்ப கதவை அகலத் திறந்து விட்டுட்டாங்க. ஒரு சர்வதேச வியாபகமான ஒரு நச்சு சுழல் வளையத்துக்குள்ளை வல்லரசிய G-7 நாடுகளுக்குள்ள மாட்டிக்கிட்டது உலகம். இந்திய ஆட்சியாளர்கள் அந்த வர்க்கத்தினுடைய ஏஜண்டுகளாகவும் பிரதிநிதிகளாகவும் இருக்கிறதுனாலதான் இதை எதிர்த்து நிக்கலை. இதை எதிர்த்து நிற்கக்கூடிய கம்யூனிஸ்ட் அரசியல் வீழ்ந்ததுக்கு பல காரணங்கள்ல 80களில் சோவியத் ருசியாவில் ஏற்பட்ட மாற்றம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றம், கம்யூனிசம் தோத்து போச்சின்னு இங்கே நம்பகமான சக்திகள் கிட்டயே ஏகப்பட்ட பிரச்சாரம், அர்ப்பணிப்போடு இந்த சமூகத்தில் புரட்சி அரசியலை முன்னெடுக்க தகுதியான தலித் சமூகங்கள் - பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் மத்தியில் எல்லாம், கம்யூனிசம் ரஷ்யாவிலேயே விழுந்து போச்சி, இனிமே என்னப்பா, திருமாவளவன் பாதைக்கு போ, நாலுபேர் MLA ஆனியா, MP ஆனியா, அதுக்கு 10 பஸ்ஸை கொளுத்தினியா, ஓடுனியா வந்தியாங்கிற போக்குகளுக்கான அரசியல் தேட்டத்த வளத்து குடுத்து இதை நீர்த்து போக வச்சிருக்காங்க. பல தளங்கள்ல - பல இடங்கள்ல அதுக்கான கருத்து மாத்தங்கள் எல்லாம் நடந்துகிட்டிருக்கு.

**காலக்குறி :**

புறக்காரணிகளை சொல்றீங்க. அகக் காரணியை சொல்லுங்க. தரகு முதலாளித்துவம்தான் அடிப்படை. ஆரம்பத்திலாவது முதல் உலகப்போருக்கு அப்புறம் எம். என். ராய் குறிப்பிட்டு சொல்லுவார். முதல் உலகப் போர் வரை இங்கிருக்கிற பெரு முதலாளிகளுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இருந்த முரண்பாடு பகை முரண்பாடாய் இருந்தது. முதல் உலகப் போருக்கு அப்புறம் அவனால் முதலீடு அனுப்ப முடியலை. இங்கேயே ரயில்வே தொடங்குகிறான். முதல் உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட வளர்ச்சி இங்குள்ள மக்களின் தொழில் நுட்பத் திறமைகளின் அடிப்படையில் வந்ததல்ல. ஏகாதிபத்தியம் தன் நலனுக்காக, லாப நோக்கத்துக்காக இறக்குமதி செய்த தொழில்நுட்ப வளர்ச்சி.

இந்திய மக்களிடம் மிகச் சிறந்த தொழில் நுட்பம் பிரிட்டிஷார் வருவதற்கு முன் இருந்தது. குறிப்பா செங்கல்பட்டு மாவட்டத்தில் உலோகத் தொழிலில் சிறப்பாக ஈடுபட்ட கருமார்கள் நிறைய இருந்திருக்கிறார்கள். ஜப்பானிலும் இப்படி இருந்தது. அவர்களைப் பயன்படுத்தி அவர்கள் தங்கள் தொழில் நுட்பத்தை வளர்த்தெடுத்துக் கொண்டார்கள். மற்ற நாடுகள் போல் இல்லாமல் இங்குள்ள திறமைகள் அழிக்கப்பட்டிருக்கு. பிரிட்டிஷ் காலத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் கட்சி அதற்கான முயற்சிகளை எடுக்கலை. ஏன்னா அவர்களும் பெரு முதலாளிகளுடைய பிரதிநிதியாக இருந்ததனாலதான். கம்யூனிஸ்டுகளும் அதுக்கான ஆய்வு முயற்சி எடுக்கலை. இங்கிருந்த பாரம்பரிய தொழில் நுட்பங்களின் - திறமைகளின் அடிப்படையில் தொழிற்சாலைகள் வந்திருக்குமானால் இங்குள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னுக்கு வந்திருப்பார்கள். பாரம்பரிய தொழில்களை தலித்துடையது - குடிசைத் தொழில்கள் என இழிவா பார்க்க வேண்டியதில்லை.

**அரங்க குணசேகரன்:**

குலத்தொழில் ஏன் செய்யக்கூடாதுன்னா குலத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலை குறிப்பிட்ட குலத்துக்கு சொந்தமானதா பாத்தாங்க. எந்தத் தொழிலையும் யார் செய்றதுக்கும் தடையற்ற சனநாயகம் இருக்குதுன்னு சொல்றான். குலத்தொழில் செய்யக் கூடாது என்பதல்ல, இப்போதுள்ள முறையில் தலித்துகளுக்கு அது அடிமைத் தொழிலே. ஒருவன் ஓட்டல் வைக்கலாம், ஒருவன் துணிக்கடை வைக்கலாம் என்பது மறுக்கப்படுது. குலத்தொழில் ஏற்கனவே ஒவ்வொரு சாதிக்கும் இருக்கு. அந்தத் தொழிலை அவர்கள் கைவிடுவதற்கு வேறு தொழிலுக்குப் போறதுக்கு தயாராயிருக்கணும். எந்த அடிப்படைச் சாதிகளும், அந்தச் சாதிக்கான சேவைத் தொழிலை விட்டுட்டு வேறு தொழில் செய்ய தடையில்லாத அங்கீகாரம் இருக்கணும். அதுதான் அதனுடைய பொருள்.

மலம் அள்ளறதில் 90-100% அவங்கதானே இருக்கிறாங்க? அதை 18% அவங்களுக்குக் குடுத்துட்டு பாக்கிய சமூகம் பூராவுக்கும் குடுக்கணும்கிறதை சட்டரீதியா கேக்கறது. ஒரு கம்யூனிச சமூகத்துல - சோசலிச சமூகத்துல ஒரு புதிய சனநாயக சமூகத்துல மனிதன் தான் மலம் அள்ளணும்னு என்ன இருக்கு? அதுக்கு எத்தனையோ விஞ்ஞான ரீதியான வாய்ப்புகள் இருக்குல்ல? சமூக பொறுப்புணர்ச்சி - குடிமைப் பண்பு வளர்ந்துட்டா தன் மலத்தை லெட்ரின் மூலமாதான் அப்புறப்படுத்துறதுங்கிற பக்குவப்பட்ட கலாச்சார கட்டமைப்பு இருக்குல்ல, அதாவது புதிய சனநாயக அதிகாரத்துல எப்படி ஒரு விசயத்த செயல்படுத்தப் போறோம், இன்னைக்கு இருக்கிற சமூக தளத்தில் அரசாங்கத்தில் எப்படி இந்த மக்களுக்கான உரிமைகளை தட்டிக் கேட்கப் போறோம், மாற்றியமைக்கப் போறோம்கிற ரெண்டையும் வித்தியாசப்படுத்திப் பார்க்கணும். குலத் தொழிலை கைவிடணும்னா சாதிமேல் இருக்கிற பற்றை கைவிடணும்னு சொல்றோம்னு அர்த்தம், தொழிலை அவமதிக்கிறோம்கிற அர்த்தம் இல்லை. அப்பதான் சக்கிலியன் குலத்தொழிலை விடமுடியும், பறையன் மாடு தூக்குறதை விட முடியும்.

கிட்டத்தட்ட 50 ஆண்டு காலம் எவ்வளவு போராடி ஒரு ஊர்ல தொழில் செஞ்சான்னா அந்த தொழில் செஞ்சவன் வீட்டில் பெண் எடுக்க / கொடுக்க மாட்டேன், கலியாணம் பண்ணமாட்டேன்னு கட்டுப்பாடு விதிச்சி ஆயிரக்கணக்கான கிராமங்கள் 40 ஆண்டுகளில் குலத்தொழிலை விட்டிருக்கின்றன. அதைக் கொண்டாந்து இப்ப கிறிஸ்தவ மிசனரியும் தமிழ் மக்கள் இசைவிழா நடத்துற ம. க. இ. க.வும் தலித் இசைன்னு தலித் சமூக மக்களை தப்படிக்க விட்டுகிட்டிருக்கான்னா. அதை கலாச்சாரமா மாத்துறானாம் - சலங்கை கட்டிவிட்டு, நவீன டிரஸ் போட்டு விட்டு, 200ரூபா அன்பளிப்பு தந்து! நான் என்ன சொல்றேன், தமிழ் மக்கள் இசைவிழான்னா தேவர் செட்டியார் வெள்ளாளன்லாம் கம்யூனிஸ்ட் கட்சியில இருக்கான்ல, அதுல 100 இளைஞரைத் தேர்ந்தெடு, இந்த பறையன விட்டு பயிற்சி கொடு, அவனுக்கு சலங்கை கட்டி விட்டு அடிக்கட்டும். அப்பதான் அந்த வலி - நாங்க பட்ட அவஸ்தை தெரியும்.

தெருவுல நான் பேண்ட் போட்டுகிட்டு MA படிச்சிகிட்டு போகையில எங்க அப்பன் தோள்ல செத்த மாடு தூக்கிகிட்டு வரயில அந்த BC பாத்து நீ என்ன தான் படிச்சாலும் உங்க அப்பன் பாரு மாடு தூக்கிக்கிட்டு வாரான்கிற அந்த மன அழுத்தம் - வேதனை அது மாதிரி எத்தனை பேரு இந்த நாட்டுல செத்த மாட்ட தூக்கி தோள்ல போட்டுகிட்டு -

நாங்க துக்கம் சொல்லயில ஒரு சீட்டு எழுதி குடுப்பான், 5ரூபா குடுப்பான், போயி ஊர்ஊரா போயி துக்கம் சொல்லிபுட்டு, துக்கம் எவன் வீட்டுல சொன்னமோ அவன் குடுக்கிற காச வாங்கிகிட்டு மத்தியானம் சாப்பிட்டுட்டு ஊருக்கு வரணும். இப்ப இவன் துக்கம் சொல்லயில கார்ல ஒலிபெருக்கி கட்டி சொல்லிடறான் இன்னார் செத்தார்னு. தகவல் போன் அடிச்சி சொல்லிப்புடறான்ல? அப்ப மத்த சாதி துக்கம் சொல்ல வந்த பொழுது அது வலியில்லாம துக்கம் சொல்ற மாதிரி போயிடுச்சி. நாங்க பட்ட வலி மிகப்பெரிய வேதனை. கால் ரூபா கொடுப்பானான்னு அப்பன் பாட்டன் நின்னுக்கிட்டிருந்தான். ஒவ்வொருத்தன் வீட்ல போயி துக்கம் சொன்னா... இன்னிக்கு ஒரு போன் அடிக்கிறான், ஒண்ணேகால் ரூபாயில துக்கம் சொல்லிப்புடறான், டி. வி. யில சொல்லிப்புடறான், பேப்பர்ல அறிவிச்சிடறான், கார் எடுத்துட்டு 10 கிலோ மீட்டர்ல சுத்திபுட்டு வந்துடறான். Modern technology சாதிய எந்த அளவுக்கு தகர்த்திருக்கு! தகர்க்கப்பட்ட காலங்கள்ல கூட எங்களுக்கு- இப்ப தகர்ந்துகிட்டிருக்கிறபோது ஒவ்வொண்ணையும் எங்களுக்கு உணர வைக்கிறான்: தப்பை அடிச்சி இது தலித் கலை, தலித் இசை! இது எவ்வளவு அவமரியாதைங்கிறது யாருக்குத் தெரியும்? அவன் வீட்டுல செத்திருந்தா அவன் சம்மந்தி கோட்டை எடுக்க வருவான். இங்க தப்ப காய்ச்சி அடிச்சிட்டு போயி அப்படியே அவன அழைச்சி வர வேத்து ரெண்டு பறையன் கால்ல விழுந்து, இவன் துண்ட இடுப்புல கட்டிக்கிட்டு, வாங்க சாமி - அய்யா வாங்கன்னு வரவேற்பு குடுக்கணும். இதெல்லாம் ஒரு மனுசனுக்கு முன்னால இன்னொரு மனுசன் செய்ய வேண்டிய அவசியம் என்ன இருக்கு?

எவனோ ஒரு தேவன் வீட்டுல எவனோ அவன் சம்மந்தி சாகிறதுக்கு இந்த ஊர் பறையனுக்கும் அந்த ஊர் தேவனுக்கும் சம்மந்தமே இருக்காது. இந்த ஊர்ப்பறையன் அந்த ஊர் தேவனுக்கு மாராயம் சொல்லி கூப்பிடுவான், வாங்கன்னு கால்ல விழுந்து. இதெல்லாம் எவ்வளவு கொடுமையானது, இதைப் போய் தலித் கலை, தமிழ் மக்கள் கலைன்னு சொல்லிகிட்டு முட்டாப்பயல்கள் நாட்ட ஏமாத்திகிட்டு எங்கள கேவலப்படுத்திகிட்டு இருக்கான். தமிழ் மக்கள் இசை விழான்னா ம. க. இ. க.வுல உள்ள பறையன் அல்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

லாத அத்தனை பேரும் அடி அதை. நான் ஒரு நல்ல பறையனை வச்சி training தர்றேன். தலித் இசைன்னு சொல்றான்ல சிலபேரு, அவனுக கிட்ட கேக்கிறது என்னன்னா, சாதி முந்தி பிறந்திச்சா, தப்பு (= பறை) முந்தி பிறந்திச்சா? வேட்டை சமுதாயத்தில 30 மிருகம் தோல் உறிஞ்சி கிடக்கையில மனுசங்க வந்து சாதியே உருவாகாத காலத்துல கண்டு பிடிக்கப்பட்ட பல இசை கருவிகள்ல ஒண்ணு தான் பறை /தப்பு. அது ரொம்ப காலத்துக்கு - ஆயிரம் வருசத்துக்கு - பிறகு வளர்ந்து ஒரு குறிப்பிட்ட பொருளாதார வாழ்க்கையில் நசுக்கப்பட்ட பிறகு அடிச்சி அடிச்சி தேர்ச்சி பெற்று வந்தவன்ல சில பேர்ட்ட நீ இதை செய்யப்பா அப்படீங்கவும் ஆகா, இது நல்லாருக்கேன்னு சொல்லி இதையே நீ செய்யப் பான்னு இட்டப்பட்டு வந்த வேலையே தவிர பறையன் உருவானதுக்கு பிறகா தப்ப கண்டு பிடிச்சான்? தப்பு உருவாகி பல ஆயிரம் வருசத்துக்கு பிறகு பறையன்கிற சாதி உருவாக்கம் ஏற்படுது. அப்ப தலித் இசைன்னு சொல்லி இதை எல்லாம் நம்ம தலையில் திருப்பி கட்ட பாக்குறாங்க.

**காலக்குறி :**

தமிழ் இசைன்னு தானே சொல்றாங்க?

**அரங்க குணசேகரன்:**

தமிழ் இசைங்கிறதை ஒத்துக்கறேன். ஆனா குறிப்பிட்ட சாதிய சமூகத்தில் குறிப்பிட்ட சாதிதான் அந்த தமிழ் இசைய வாசிக்கணுமா? நீங்க எல்லாருமே தமிழர்தானே? ஏன், தமிழர்களுக்கு தம் இசையை தாமே வாசிக்கிறதுக்கு என்ன கேடு? தமிழரின் ஒரு பிரிவினர் மட்டுமே அதை வாசிக்கணும்கிறது என்ன நியாயம்?

**காலக்குறி :**

தமிழ் நாடகத்துல முன்பு பறைய use பண்ணும் போது பிரதானமா தமிழ் நாடக நண்பர் தலித் வாத்தியம் ஒண்ண நவீன தமிழ் நாடகத்துல வைக்கணும்கிறதை தான் பிரதானப்படுத்தி தமிழ்நாடு முழுதும் பேசிட்டிருந்தாரு. ஒரு தலித் வாத்தியத்தை ஒரு political symbolஆ வச்சிதான் பேசினாரே தவிர மத்தபடி அல்ல.

**அரங்க குணசேகரன்:**

தமிழ் இசைன்னா தமிழர்கள் எல்லாரும் இசைக்கணும்கிறதுதானே விருப்பம்?

தமிழர்களில்... தண்ட பாணி தேசிகர் இருந்தார். அவர் தமிழிசையில் பாடுவார். ஏன் தமிழிசைக்கு தகுந்த மாதிரி தப்பை அடிச்சிக்கிட்டே பாடக்கூடாது? ஒரு நாயனத்தை வாசிச்சிகிட்டே பாடக்கூடாது? M. S. விசுவநாதன் ஒரு தமிழர்தான், T. M. சவுந்தரராசன் ஒரு தமிழர்தான். P. சுசீலா ஒரு தமிழர்தான். அவங்களுக்குக் கூட ஏன் தப்படிக்கிறதுல அந்த ஆற்றல்



வரக்கூடாது? பறையனுக்கு மட்டும்தான் வரணுமா? பள்ளர் அடிக்கிறானாங்க? நான் கேக்கிறேன் இன்னைக்கி, பள்ளர் சமுதாயம் தப்படிக்கிறதை விட்டு தப்பிச்சி 400 வருசமாச்சி, இப்ப அவன் குழி மட்டும்தான் வெட்டிக்கிட்டிருக்கான். துக்கம் சொல்ல போகமாட்டான், செத்த மாடு தூக்கமாட்டான் தென் மாவட்டத்துல. அவனுக்கும் நாங்க பறையர்தான் செஞ்சிக்கிட்டிருக்கோம்.

ஆக தமிழர்னு சொன்னீங்கன்னா, ஒண்ணு, கருத்து ரீதியா, இருக்கிற சமூகத்துல அதை மாத்த முடியாதுங்க. மார்க்சியத்தை - ஒரு புதிய சமூகத்தை படைக்கப் போறோம்னு சொல்லி மார்க்சிய லெனினியத்தை படைக்கிற நீங்க யாராயிருந்தாலும் உங்களுக்கு தேவைன்னா ஒரு இசையை ஒரு சாதியச் சமூகத்தில் தமிழர்ங்கிற பேர்ல ஒரே சாதியே அடிச்சி அடிச்சி ரசிக்கிறதுக்கு, அதுக்கு அந்த பண்ணையாரே தேவலையே!

இலவச வேட்டி சேலை குடுக்கிறதை நாங்க எப்படி பார்க்கணும்னா, நாங்கள்லாம் சின்ன பிள்ளையில 12, 13 வயசில வருசம் பூரா எங்க அப்பா அம்மால்லாம் உழைப்பாங்க, உழைச்சிட்டு கடைசி களத்தன்னிக்கு, அந்த மிராசுதார் கூலி போடற அன்னைக்கு, அவன் வேலை செஞ்சதுக்கு கூலி குடுப்பான். கருக்கா நெல் 2 மூடை கூலி குடுப்பான். அதுக்கு (கள) சுதந்திரம்னு பேரு. 2 மூடை கூலி, வருசம் பூரா உழைச்சதுக்கு. அதுக்கு பேரு 'சுதந்திரம்'! மாட்டுப் பொங்கல் அன்னிக்கு, விறகு அடுக்க, அடுப்பு போட, பொங்கல் வைக்க, அத்தனை மாட்டையும் குளிப்பாட்டி வந்து கட்ட அப்படீன்னு அத்தனையும் செய்வான். மாடு அவுத்து விடற அன்னிக்கு, அவுக வீட்டுல மாட்ட அவுத்து விட்டதுக்கு அப்புறம் ஒரு வேட்டி துண்டு குடுப்பான். அய்யா குடுத்ததுன்னு அவ்வளவு பெருமையா கட்டிக்குவான் எங்க ஆளு.

www.tamilarangam.net

கிராம அளவில் பண்ணையார் தனம் இருக்கிற பொழுது கிராம பண்ணையார் குடுத்தான். இப்ப அரசே பண்ணையார் வடிவத்துக்கு வந்துட்டதுனால அரசே இலவச வேட்டி சேலை குடுக்குது. அரசுக்கு வருசம் பூரா தொண்டூழியம் பண்றான்ல பள்ளன் பறையன்? ரெண்டுக்கும் என்ன வித்தியாசம் இருக்கு துன்னு நினைக்கிறீங்க? ஒரு குடிமகன் தான் உழைச்சி லாபம் எடுத்து சம்பாதிச்சிதான் ஒரு கடைக்கு பெண் டாட்டி பிள்ளைகள அழைச்சிட்டு போயி சந்தோசமா show caseஇலை நின்று என்னப்பா வேணும் என் னம்மா வேணும்னு கேட்டு அவன் எடுத்து குடுத்ததை கட்டிக்கிட்டா எவ்வளவோ சந்தோசமா இருக்குமா, எப்படா பொங்கல் நாள் வரும், எப்படா அரசாங்கத் துலருந்து VAO கூப்பிடுவாருன்னு நினைச்சிக்கிட்டி ருந்தான்னா அது எவ்வளவு கேவலம்! அய்யா வீட்டுல எடுத்து குடுத்த மாதிரி தான பெரிய அய்யா எடுத்துக் குடுத்தாரு?

என்ன வர்க்க மாற்றம் ஏற்பட்டிருக்கு? ஏன் வலிக்கு துன்னா இதெல்லாம் அனுபவிச்சதுனால. இல்லாட்டி அரசாங்கத்தப்பத்தி என்ன தெரியும் மத்தவங்களுக்கு? ஏயப்பா அரசாங்கம் லட்சக்கணக்கான பேருக்கு இலவச வேட்டி சேலை குடுக்குதாமே, பிரமாதமான அரசய்யா, M.G.R. ஏழைகள் நெஞ்சத்துல இடம் பிடிச்சிட்டாருங்கிறாங்க. இந்த வேட்டி சேலை குடுக் காம பொங்கல் வைக்காம இல்லை, தீபாவளிக்கு துணிமணி எடுக்காம இல்லை. போயி பாத்தா பல கிராமங்கள்ல இந்த இலவச துணி எல்லாம் ஏதாவது ஆயிகிடக்கும், யாரும் கட்டறதில்லை. அவ்வளவும் ஓட்டுக்காக.

**காலக்குறி :**

தலித் சமூகமும் பிற்படுத்தப்பட்ட சமூகத்த போல தங்களை நிலைநிறுத்திக்க பாக்குறாங்க. தலித் முரசுங் குறாங்க, நாங்க பறையனார் அப்படிங்கிறதில பெருமைப் பட்டுக்கிறாங்க. நீங்க தலித்துகள் கிட்ட அந்த உணர் வையும் ஒழிக்கிறதுக்கு என்ன பண்றீங்க?

**அரங்க குணசேகரன்:**

தலித் முரசு - பறையனார் - பள்ளனார் - தேவேந் திரர்னு சொல்றாங்க. இவைகளை சொல்லுற நெருக்கடி ஏன் உருவாயிருக்கு?

இவைகளை சொல்லுவது சரியா தப்பாங்கிறதை விட நாங்க முத்துராமலிங்கத் தேவர், நாட்டுக் கோட்டை செட்டியார், பிள்ளைமார்னு போட்டுக்கிற பொழுது உங்களுக்கு வரக்கூடிய பெருமை - போலி பெருமை - ஒரு குருட்டுத்தனமான அடிமைச் சின்னம் தான் அது, பிள்ளைமார்ங்கிறதும் தேவர்ங்கிறதும், அது போலிதான்னாலும் அதில் பெருமையும் அதை போட்டுக்கிறதில் சமுகத்தில் ஒரு அங்கீகாரமும் கொடுக்கிறதுனால இந்த அரசியல் நீரோட்டத்த சரியா புரிஞ்சிக்காம அதே சமயத்தில் இதை போலவே ஒரு போலிமையின் மூலமா தன்னை உயர்த்திக்க முடியும்கிற நம்பிக்கையில் உள்ளவன்தான் தேவேந் திரகுல வெள்ளாளன், பறையனார், சிவனார், கோனார்னு போட்டுக்கிறவன். ஆனா அது எங்கிருந்து வருது? இந்துத்துவாங்கிற ஆர்டர் உருவாக்கி இருக் கிற மரியாதைய நாமும் அப்படி செய்வதன் மூலமா இந்துத்துவாவுக்கு உள்ளடங்கி equality பெற முடியு மாங்கிற எதிர்பார்ப்பில் இருந்துதான் வருது. போடுற ஆளுக்கு நான் சப்பைக்கட்டு கட்டலை. எதை எதிர் நோக்கி போறான்? பறையனார்னு போடணும்கிற நெருக்கடி, தேவேந்திரர்னு போடணும்கிற நெருக்கடி, அருந்ததியர்னு போடணும்கிற நெருக்கடி. அதை ஆய்வு பண்ணயில, நாங்க இந்த அருந்ததியருக்கு விளக்கம் சொல்றோம்னாங்க STகலியாண சுந்தரம். ஏன்னா அருந்ததி நட்சத்திரத்தோட தொடர்புபடுத்தி சொல்லலாமான்னு... ஏன்னா இந்திரனோட சொல்லிட் டாங்க பள்ளர்கள், இந்திரனுக்கு மேல நட்சத்திரத் தோடு எங்களை சேர்த்துச் சொல்லுங்க ஒரு விளக் கம்னாங்க. விளக்கம் சொன்னேன் - அதாவது நோக் கம் அதல்ல. எதிரி எதை நோக்கி... சாதி அந்தஸ்தை நோக்கி உயர்த்திக் கொண்டிருக்கிறானோ அதை நோக்கி இவர்களும் உயர வேண்டும் என்கிற அற்ப எதிர்பார்ப்புதான். இப்ப எல்லாரும் பறையனார் மட்டும் அல்ல, BC கூட MBC ஆக்க சொல்லி கேக்குறான், ஆனா யாராவது SCயா ஆக்குன்னு கேட்டிருக்காங் களா இந்த நாட்டுல? நான் கேக்குறதெல்லாம், முதலியார்ல இருந்து எல்லா சாதியும் என்னை MBC ஆக்குன்னு கேக்குறான், ஏன் SC ஆக்குன்னு கேட்டா என்ன எல்லாரும்? அதுல என்ன கஷ்டம்?

**காலக்குறி :**

அது, இருக்கிற உணர்வு. ஆனா நீங்க உங்க தரப்புல இருந்து...

**அரங்க குணசேகரன்:**

எங்க தரப்புல இருந்துதாங்க. எங்க தரப்புங் கிறது ஒரு சமூகத்துக்கு ஒரு மொத்த authority இல்ல. இப்ப நீங்க கேக்குற கேள்விய ஒரு சமூக விடுதலைக்கான வழிமுறையில் இருந்து கேக்கலாம், எங்க தரப்புல இருந்து ஒருத்தன் தலித் முரசுன்னு வச்சிருக்கிறான்னா தலித்துங்கிறது சாதியா, சாதி ஒழிப்புக்கான ஒரு அரசியல் வடிவமேடையா? பறை யனார் என்கிறதை அப்படி போட்டிருக்கிறவருடைய எதிர்பார்ப்பு எண்ணத்துல இருந்து பார்க்கணும். அப்படி போட்டிருப்பது தவறு, அதன் மூலம் எந்த விடுதலையும் கிடைக்காது என்பது எங்களுக்கு தெரியும்.

ஆனாலும் ஏன் அப்படி போடுறான்? கோனார்ங் கிறதுக்கு இருக்கிற அங்கீகாரம் கிடைக்குமாங்கிற எதிர்பார்ப்பு தானே?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**காலக்குறி :**

ஒரு சாமியார் 1920இல் ஒரு புத்தகம் வெளியிட்டார், இந்திய தத்துவ ஞானத்தோட பெருமைகளைப்பத்தி. அவர் போடும்போதே அவர் பேரை போட்டுட்டு அடைப் பில் B.A. Historyன்னு போட்டுக்கிறார். ஒரு சாமியார் அவருடைய வேதஉபநிசத்தின் பெருமையை சொல்ற அல்ல B.A.ன்னு போட்டுக்கிறதுக்கு அவசியம் இருக்குங் கிறபோது இவர் என்ன discourseக்குள் போறார்னு பார்க்கும்போது இவரது கலாச்சார பெருமை பேசுவதை காட்டிலும் எதிராளியின் language social discourse இன் patternக்குள்ள போறார். இவர் தன்னை இன்னார்- அன்னார்னு பின்னால் ஒரு ஆர் சேர்த்துக்கும்போது weisting discourseஇன் ஒரு பகுதியா உங்களை நிலைநிறுத்திக்கிறதுக்கான முயற்சி இருக்குதே தவிர, இதுக்கு எதிரா எதுவுமே கிடையாது.

**அரங்க குணசேகரன்:**

*நான் இதை சரின்னு சொல்லலை. இந்துத்து வாவுக்காக ஆய்வு பண்ணி புத்தகம் எழுதின அந்த சாமியார், நேரடியா நான் ஒரு சாமியார்னு சொல்லி யிருந்தா தூக்கி குப்பை தொட்டியில போட்டுட்டு போயிருப்பான். இங்கிலீஷ் படிச்சவன்னும் பாரத்லான் னும் சொல்றது தான் மரியாதை- இந்த காலத்திலும் 1920இலும் இங்கிலீஷ்ல ஒரு வார்த்தை இருந்தாலும் அவர் பெரிய அறிவாளின்னு பாக்குற காலகட்டம். B.Scன்னு போட்டாதான் ஆகா என்ன ஒரு பெரிய படிப்பாளி சொல்லி இருக்கார்னு இந்துத்துவவாதிகூட படிப்பான், அதுக்காக போட்டிருப்பான்.*

**காலக்குறி :**

சமூகத்துக்கான உங்களுடைய politics dilute ஆயிடுதில்ல?

**அரங்க குணசேகரன்:**

*Dilute ஆகாது. அதுக்குள்ள ஒரு சமூக நெருக் கடி - நிர்ப்பந்தம் இருக்கு. அரங்க குணசேகரன், தமிழக மனித உரிமைக்கழகம், நாங்க ஏத்துக்கிட்டி ருக்கிற தலித் அரசியல் விடுதலை - இதை ஒட்டிய விசயங்களை பார்ப்பது வேறு, சமூகத்தில் நிலவுகிற விசயங்களுக்கு என்னிடம் கேள்வி கேட்டா நான் அதை முழுமையா புறக்கணிச்சி பேச முடியாது. ஏன்னா ஒரு முழுமையான மார்க்சியவாதிங்கிற அடிப்படையில், மத்தவங்க பேசுறபோது சாதிய போட் டுக்கிறது தப்புதான். ஆனா சாதிய எல்லாரும் போட்டி ருந்த கடந்த காலத்துல...*

**காலக்குறி :**

...discourse...

**அரங்க குணசேகரன்:**

*discourse என்னவா போயிடும்? இந்திரஜித்*



பெரியார்

*குப்தா, சுர்ஜித் பர்னாலா, நம்பூதிபாட்டுன்னு வச்சி கிட்டு வர்க்க அரசியல் பண்ணலியா? பறையனார்னு போட்டுட்டு ஒருத்தன் சோசலிசம் பேசக்கூடாதா?*

**காலக்குறி :**

முடியும், ஆனா நீங்க உங்களுடைய பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட உணர்வை நீங்களே தக்க வச்சி கிறதுக்கு முயற்சி பண்றீங்க மாதிரி ஒரு தோற்றத்தை கொண்டு வருது-

**அரங்க குணசேகரன்:**

*அது எல்லாரும் பரவலா இல்லையே, ஒரு சிலர் தானே செய்றாங்க? பரந்துபட்ட மக்கள் யாராவது, பறையன், பள்ளன்னு போட்டுககிறாங்களா?*

**காலக்குறி :**

Representativesதான் செய்றீங்க.

**அரங்க குணசேகரன்:**

*Representatives ஒண்ணு ரெண்டு தான். அவங்க பின்னால மக்கள் திரள்றாங்களா - அரசியல் போயி ருக்கான்னு பாருங்க. அது ஒரு கருத்தின் தாக்கம். கிருஷ்ண பறையனார்னு போடாமலேயே அம்பேத்கர் புரட்சிப் புலிகள் இயக்கம்னு வச்சிருந்த ஆளே - அவர்கிட்ட இருந்த politicsஏ அவுட். அவர் பறைய னார்னு போட்டதாலதான் டிஸ்கோர்ஸ் ஆகிறாங்கிறது இல்ல. பறையனார்னு போடாம இருந்தாலே அவர்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*real estate business,* கட்ட பஞ்சாயத்து இதுல தன்னை தக்க வச்சிக்கிறதுக்கு ஒரு இயக்கம். சென்னையில் யாராவது மக்கள் இயக்கம் வச்சிருக் காங்களா? 100 இயக்கம் இருக்கு dalit movement. சென்னையில் சமூக விஞ்ஞான ரீதியா இந்த சமூகத்த பகுப்பாய்வு செய்து சாதி - அதன் தோற்றம் - வளர்ச்சி - ஒழிப்பு பற்றிய ஆய்வு நோக்கிய... அப்படி யெல்லாம் ஒண்ணும் இல்ல. பறையனார்னு போட்ட தாலதான்னு...

**காலக்குறி :**

பறையனார்னு நீங்க போடும்போது அது எல்லா மக்கள் கிட்டயும் போகுதா இல்லையா?

**அரங்க குணசேகரன்:**

பறையர் தேசம்னே ஒரு போர்டு பார்த்தேன். தமிழ் நாட்டுக்கு பறையர் தேசம்னு பெயர் வைன்னு. எந்த உந்துதல்ல இருந்து வருது அது? குருட்டடியா சிந்திக்கிறான் அவன். ஒரு order ஆகவே சிந்திக்க ணும்னு எதிர்பார்க்குது சமூகம். இந்துத்துவா சிந்தனை மரபு ஆளும் வர்க்க சிந்தனை மரபு. தாழ்த்தப்பட்டவன் ஏதாவது குண்டக்கா மண்டக்கா எதிரடியா பண்ணினா அதை கேள்விக்குள்ளாக்குகி றது, அதன்மீது ஒரு பிரச்சனையை உருவாக்கு றதுங்கறது - ஏன்னா இந்த சிந்தனை இந்திய சிந் தனை மரபுக்கு எதிரா இருக்குது. அதிர்ச்சியான விசயமா இருக்குது. அது மார்க்சியவாதிகளுக் குள்ளும் co-operation ஆகுது.

அம்பேத்கர் புரட்சி புலிகள் இயக்கம் - கிருஷ்ண பறையனார் இந்த வர்க்க சமூக மாறுதலுக்கு எதிரியா நண்பனா? தலித்துகள் விடுதலைக்கு எதிரியா நண்பனா? சாதி ஒழிப்புக்கு எதிரியா நண்பனான்னு பார்த்தா நட்பு சக்திகள். அவர் போட்டிருக்கிற பறைய னாரை மட்டும் நாம விமர்சனம் பண்ணிகிட்டு இருக்கி றதை விட அவனவன் முதலியார், படையாட்சி அப்படி போட்டு கிட்டிருக்கான், அதை கேள்விக்குள்ளாக்கி றதுக்கு நாட்டில் ஆளே இல்லை. ஆனா இதை கேள்விக்குள்ளாக்கி இதையே விவாதமாக்கி, இருக்கிற ஒண்ணு ரெண்டு பேரையும் எதிரித் தரப்புக்கு தள்ளிவிடும் இந்தப் போக்கு ஏன்கிறேன். பறைய னார்னு ஒரு ஆயிரம் பேர் போட்டுகிட்டா போட்டுகிட்டு போகட்டும், தப்பில்ல நாட்டுல. அவன் என்ன செய்கி றான், சாதியை எதிர்க்கிறானா ஆதரிக்கிறானான்னு-

**காலக்குறி :**

தப்புக்கு சொல்ல வரல்ல, நாம சாதி ஒழிப்புக்கு பாடுபடும் பொழுது...

**அரங்க குணசேகரன்:**

சாதியே இல்லைங்கறேன். பறையனார்ங்கிறதோ பள்ளனார் - தலித் - ஆதிதிராவிடர் - அருந்ததியர் என்பதோ சாதியே அல்லங்கிறேன். நான் நேத்தே சொல்லிட்டேன், தலித்னா ஒரு சாதி எதிர்ப்பு இயக்கம்

**காலக்குறி :1**

discourseக்குள்ள அது இன்னும் அப்படி வரல.

**காலக்குறி :2:**

தலித் இயக்கங்கள்ல இப்படி சில போக்குகள். இந்த போக்குகளை அரசியல் அடிப்படையில் நீங்கள் ஏத்துக்கிறீங்களா என்பது ஒன்று. ஏன் அந்த போக்குகள் வருதுங்கிறதையும் நாம பார்க்கணும்.

**அரங்க குணசேகரன்:**

வருதுங்கிறது ஏன்கிறதைத் தான் நான் சொல்ல வர்றேன்-

நேத்து ஓர் அறிக்கை கொடுத்தேன். dalit move-ment இலை நாங்க, தமிழக தாழ்த்தப்பட்டோர் விடு தலை முன்னணி கட்டுகையில் எல்லாரையும் இணைக்க முடியலை. ஒரு வரையறை வச்சிகிட்டோம். இல்லைன்னா, பாலசுந்தரம், இளையபெருமாள் அத் தனை பேரும் வருவாங்க, ஒரு வரையறை வச்சி அந்த வரையறைக்கு உட்பட்டவங்களை வச்சோம்.

அதிலிருந்து நான் வெளியேறினேன். அப்புறம் உஞ்சைராசன், அப்புறம் திருமாவளவன், அப்புறம் சந்திரபோசு வெளியேறினாங்க. அப்புறம் 95இல் சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி கட்டுறோம். அதுல இத் தனை பேரும் திரும்ப சேர்றபோது ஒரு வரையறை வைக்கிறோம். ஆக ஒரு வரையறை அறிவிச்சிட்டு தான் சேர்றோம். தமிழகத்தில் எல்லா அமைப்புக்கும் லெட்டர் அனுப்புறோம். இந்த வரையறைகளை ஏத்துக்கிற அமைப்புகள் கூட்டத்துக்கு வரலாம், அப்படீன்னு சொல்லி வரவழைச்சிதான் பேசுறோம். இந்தப் பறையனாரை எல்லாம் அப்போது நாங்க கணக்கிலேயே சேர்க்கலை. ஏன்னா, இன்னைக்கு கூட்டமைப்பில் சேர்வாரு, அடுத்த பெரிய எலக்சன் வந்தா நாமினேசன் போட்டுடுவாரு. ஒவ்வொரு தடவைக்கும்... இப்ப எங்க கதை என்னாச்சி, சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி, முதல்ல S.T.கலியாண சுந்தரம் போனாரு, எங்க அமைப்பு மாநில அமைப் பாளர் அமல்ராஜ் என்னை கேக்காம அவரா தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர் அருணாசலத்துக்கு ஓட்டு போட்டாரு. ஏன் அவர் மீது நடவடிக்கை எடுக்க லைன்னு தடா பெரியசாமி என்னிடம் விளக்கம் கேட்டாரு. அமல்ராஜை அமைப்பை விட்டு விலக்கி னேன். இப்ப அவரே போயிட்டார். திருமாவளவனும் போயிட்டார். யார் நிக்கிறது - சரி, மிச்சம் இருந்தது வினோத், நான், சந்திரபோசு, நிக்கோலசு. நிக்கோலசு போயிட்டாரு இந்த தேர்தல்ல, அ.தி.மு.க.வுக்கு ஆதரவா. அதனால் வரையறைகள் இருக்கும்போது கூட நாம் அவற்றை தப்பா வகுத்துட்டோமோன்னு கூட நினைக்க வேண்டி இருக்கு. வரையறைகளை எல்லாம் மாற்றி அமைக்கவேண்டி இருக்கு. இன்னும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆழமா விவாதிக்க வேண்டி இருக்கு.

அதனால் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களை நான் எப்படி பார்க்கிறேன்னா நீங்க பார்க்கிற மாதிரி பார்க்கலை. அதாவது ஆயிரம் பூக்கள் பூக்கட்டும் நூறு பூக்கள் மலரட்டும்னு மாவோ சொன்னது தமிழகத்தில்தான் உண்மையாக இருக்கும். அதாவது ஒரு கட்சி மூன்றாக நாலாக உடைந்ததாக தலித் இயக்கத்தினுடைய வரலாறு குறைவு. ஆங்காங்கே ஒரு மாவட்டத்தில் இரண்டு மாவட்டத்தில் ஏற்பட்ட கொடுமை - அதற்கேற்ற சூழல்ல ஒரு ஆத்திரப்பட்ட இளைஞன் அந்தக் கொடுமைக்கெதிரா ஒரு ஸ்தாபனமா மாறுறான். அவன் அந்த கொடுமைக்கெதிரா போராடுறான். அவன சுத்தி இருக்கிறவங்கள ஸ்தாபனமாக்குறான். இப்படி 90களின் 80களின் தொடக்கத்துல இருந்து ஆங்காங்கே எழுந்த தன்னெழுச்சியான இயக்கங்கள் - 80களில் 70களில் நக்சல்பாரி இயக்கங்கள் தமிழ்த்தேசிய குழுக்கள்ல இருந்து வெளியேறி ஆத்திரப்பட்ட இளைஞர்கள்தான் - திராவிட இயக்கத்தில் கூட LTTEக்கு ஆதரவாக '83இல் வை. கோ.வுடன் இருந்து மேடைகளில் பேசிவிட்டு வை. கோ.வுடைய ரசிகரா இருந்த ஒரு மாணவர்தான் அவர் - திருமாவளவன். அவர்கூட தமிழ்த்தேசியக் கருத்துக்குள்ளே - அமைப்புக்குள்ளே தன்னை அடையாளப்படுத்திக்கலை. வை. கோ. வின் பேச்சை ரசிக்கக்கூடியவராகவும் அவருடைய ஆதரவாளராகவும் மாணவர் பிரிவில் இருந்துகிட்டு LTTEக்காக கூடுதலாக சுவரொட்டிகள் ஒட்டிக்கிட்டிருந்தவர். அதுக்கப்புறம் அவர் மதுரை போறார், மதுரையில் DPI - விடுதலை சிறுத்தைகள் - அப்படி வரார். ஆக நான், சந்திர போஸ், வினோத், பொழிலன் ஆகியோர் தமிழ்தேசிய அரசியலுக்கு வந்தோம் - நக்சல்பாரி அரசியலில் இருந்து. நாங்க வந்துதான் ஒரு கூட்டமைப்பு - ஒருங்கிணைப்பு உருவாக்கினோம். ஏற்கனவே இளையபெருமாள் போன்ற தலைவர்கள் 30 பேர் ஒரு தடவை மயிலாடுதுறையில் கூடி 50000 பேரை திரட்டினாங்க. ஆறு மாதத்தில் தேர்தல் வந்தது. இவரு ஜெயலலிதா வீட்டுக்கு போயிட்டார், அவரு கருணாநிதி வீட்டுக்கு போயிட்டார், இன்னொருத்தர் காங்கிரஸ் கதவை தட்டினார். அந்த கூட்டமைப்பே முடிஞ்சது - Scheduled இனவிடுதலை இயக்கம்னு கூட்டமைப்புக்கு பெயர் வச்சோம். அதெல்லாம் ஒண்ணும் நிக்கலை. அது கொள்கை ரீதியா வரையறுத்தாதான் நிக்க முடியும். ஏன்னா சாதிரீதியா திரளுற சமுதாய கட்டமைப்பு தலித் மக்களுக்கு இல்லைங்க.

தலித் சமுதாயம்கிறதை மத்தவங்க புரிஞ்சிக்கிறதிலை திரும்ப திரும்ப வர்ற சிக்கல், இதை சாதியாவே பாக்குறாங்க. அப்படிப் பாக்காதீங்க. சாதிய சமுதாயத்தால் நிர்ப்பந்திக்கப்பட்ட ஒரு கூட்டம், தண்டிக்கப்பட்ட ஒரு கூட்டம், வஞ்சிக்கப்பட்ட ஒரு கூட்டம், ஏனைய சாதிக்கான சமத்துவம் உரிமைன்னு



**கம்யூனிஸ்டுகள் தங்களை மாத்திக்கிட்டாத்தான் தலித் இயக்கங்கள் ஒண்ணு சேர்வாங்க. தலித் இயக்கங்கள் எப்போதுமே சேரத் தயார். சேரத் தயாரா இல்லைன்னாலே... இவன் ஆத்துல அடிச்சிட்டு போற நீச்சல்ல நிக்கிறவன் தாங்க — அவன எப்படி மீட்டெடுக்கணும்னு முன்முயற்சி எடுக்கலைன்னா நீங்க கம்யூனிஸ்ட் இல்லை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போறபோது brokenஆயி equalityங்கிறது சனநாயக உரிமைன்னு வந்துருது. சாதிக்கு வெளியில் நிக்கிறவன - outcasteல நிக்கிறவன போயி சாதியா ஏன் பாக்குறீங்க? அப்ப இவனுக்குள்ள பள்ளரும் பறை யரும் ஒண்ணா இருக்கிறியளா, சக்கிலியரும் பறைய ரும் ஒண்ணா இருக்கிறியளான்னு கேட்டீங்க. இந்தக் கேள்வி எல்லாம் வரும். இதெல்லாம் நிறைய கேட்டுக் கேட்டு புளிச்சிப் போச்சி. இதெல்லாம் இந்துத்துவா வின் தாக்கம், 5000 மைலுக்கு அங்கிருந்து வந்த இசுலாமையும் இது விடலை, 5000 வருசத்துக்கு முன்னே பிறந்த புத்தமதத்தையும் விடலை, ஆசீவகம் - சார்வாகம் - சாங் கியம் எதையும் விடலை, கிறித்து வத்தையும் விடலை. இப்ப ஒரு சிறு சதவிகிதம் - அதுவும் அந்த பெரும்பான்மை சாதியை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையில் இருக்கக்கூடிய சிறு சதவிகித - பள்ளன் பறையனை மட்டும் இந்த இந்துத்துவாவுடைய தாக்கம் விட்டுடுமா?

ஆக இந்துத்துவாவுக்கு எதிரான - நிலப்பிரபுத்துவ கட்டமைப்புக்கு எதிரான - உற்பத்தி உறவுகளை மாற்றி அமைப்பதற்கான ஒரு அரசியல் போராட்டத்தின் மூலமாதான் ஒரு புதிய கலாச்சாரத்தை நாம் கட்ட மைக்க முடியும். அன்னைக்குத்தான் பள்ளனுக்கும் பறையனுக்கும் வேறுபாடு வராது. கள்ளரும் தேவரும் முதலியாரும் கலியாணம் பண்ணிக்கிறாங்களா? செட் டியாரும் கள்ளரும் பண்ணிக்கிறாங்களா? நாயுடுகள் தான் எத்தனைபேர் பண்ணிக்கிட்டாங்க? பெரியாரே எத்தன செஞ்சிவச்சார்? அதனால் எந்த 2 சாதிகளிடை யிலும் ஒத்துமை இல்லை. SC தான் ஒண்ணா இல் லைங்கறது இல்லை. BCக்குள் 2 சாதி ஒண்ணா கலியாணமா பண்ணிக்கிறான்? SCஐ எதிர்ப்பதில் அவங்க ஒண்ணா இருக்காங்களே தவிர SCஐ தங்க ளுடைய சேவகத்துக்கு வச்சிக்கிறதில் ஒண்ணா இருப் பாங்களே தவிர தங்களுக்கிடையிலான காண்ட்ராக்ட், வணிகம், தொழில் துறையில் ஒருத்தனை ஒருத்தன் முழுங்கத்தானே பார்க்கிறான்? அதுதானே வர்க்க சக்திகளுக்குள்ள வரக்கூடிய லாப வேட்டைக்கான சண்டை? அது இல்லாமலா இருக்கு? அது அவன் ஈடுபடுற தளத்துல இருக்கு. நான் கதிறுக்க என் ஊர்ல 5 மரக்கா கேட்டுக்கிட்டிருப்பேன், அடுத்த ஊர்க்காரன் 3 1/2 மரக்காலுக்கு வருவான். எப்படிரா வந்தேன்னு கேட்பேன். அவன் (BC) சாதிக்குள்ள காண்ட்ராக்ட் எடுப்பதில் என் ஊர்ல நீ எப்படி எடுக்க லாம்பான். அதுக்காக நான் காண்ட்ராக்ட்லயா போயி சண்டை போட முடியும்? ஒரு காண்ட்ராக்ட் முதலி யாரோட சண்டை போட்றதுக்கு எனக்கு முதலீடு வேணும்ல? ஒரு ஊர்க்காரன் தப்படிக்க வந்துட்டா, இன்னொரு ஊர்க்காரன் வந்து அடிக்கிறபொழுது இவன் தகராறு - எப்படி நீ அடிக்கலாம்னு கேக்க றான். அதுக்காக இந்த தொழிலை நியாயப்படுத்தி இல்ல, நான் மரியாதைக்காகத்தான உட்டேன், நீ வந்து அடிச்சின்னா எப்படி - அப்ப அதை வச்சி எனக்கு வேலை வெட்டி குடுக்கமாட்டான்னு" social boycott.

பல கிராமங்கள்ல என்ன நடக்குது - என்றா ஒரு நாளைக்கு ஒருவன் சாவான், ஒரு நாளைக்கு கலியாணம் பண்ணுவான், ஒரு நாளைக்கு திருவிழா நடத்துவான், இந்த தொழிலை செய்ய மறுத்தா வருசம் பூரா வயித்துக்குப் போடுற வயல் வேலை குடுக்கமாட்டான். நிலவுடமையில் மாற்றங்கள் ஏற்பட்டு தலித்துகளுக்கெல்லாம் ஆளுக்கு ரெண்டு ஏக்கர் இருந்தா செத்தமாடு தூக்க வேணும்கிற சமூக கட்டுப்பாடு இருக்குமா? நீ வேண்ணா செத்த மாடு தூக்கு, எனக்கு 2 ஏக்கர் இருக்கு, நான் சாப்பிட்டுக் கிறேன்பான். நிலம்பூரா தலித் அல்லாதவங்ககிட்ட இருக்கு. சேவைத்தொழில் இவன்கிட்ட இருக்கு.

பெரியாராலேயோ, அம்பேத்கராலேயோ, அரங்க குணசேகரனாலேயோ, திருமாவளவனாலேயோ சுயமரியாதை உணர்வு பீறிட்டுக் கிளம்புது பிரச்சா ரத்துல. பீறிட்டுக் கிளம்பும்போது நாங்க செத்த மாடு தூக்க மாட்டோம், தப்படிக்க மாட்டோம்னா ஒண்ணு திருப்பூர் போகணும் பனியன் தூக்க, இல் லன்னா ஆந்திரா கேரளாவுக்கு ஓடணும் ஓட்டல்ல பெஞ்சு துடைக்க. உள்ளூர்ல இருந்தா வயல்வேலை குடுக்க மாட்டான். வயல்வேலை கிடைக்கலைன்னா பட்டினி. அடுத்த ஊருக்கு போனா அவன் சொந்தக் காரங்களுக்கு குடுத்து என் ஊரு பறையருக்கு கொடுக்காதேம்பான். இப்படியான முரண்பாடு.

இதை உடைக்க நிலச்சீர்திருத்த சட்டங்கள் மூலமா நில உடமை பகிர்மானம் ஏற்படுவதன் மூலமா தலித்துகளுக்கு எவன் கட்டுப்பாட்டிலும் வாழ வேண் டியதில்லை, உனக்கு நீ உயர்ந்திருக்கிற ஆளா இருந்தா வாழ முடியும்கிற நிலையை உண்டாக்கி யிருந்தா இந்த சமூக கட்டுப்பாடு தானா உடைஞ்சி ருக்கும். ஏன் சில இடங்கள்ல தொழில் செய்றாங் கன்னா இந்த நெருக்கடி தான்.

ஒன் - த்ரோ - யூஸ் கொண்டு வந்தாங்களே, அவன் டீ குடிக்கிற கிளாஸ்ல நாங்க கேட்ட போதெல் லாம் தகராறு. மாத்தி, வளர்ச்சியில என்ன பண்ணிட் டாங்க, use - throw. நம்ம நோக்கம் ஒரே கிளாஸ்ல 2 பேர் குடிக்கணும்கிறதுதான், use and throw மூலம் யாருமே குடிக்க விடாம பண்ணிட்டான். இதெல்லாம் வந்து சாதிய தகர்த்திருக்கா? சாதிய அப்படியே பராமரிக்கத்தானே செய்யும்?

**காலக்குறி :**

இட ஒதுக்கீடு - தமிழ்நாட்டை பொறுத்தவரை சமூக நீதின்னெல்லாம் பேசின சாதி பிற்படுத்தப்பட்ட சாதி. இட ஒதுக்கீடு - சமூக நீதி கருத்து எல்லாம் ஏத்துக்கிட்டு போராடி மண்டல் கமிசன் வாங்கியிருக்கோம். இடம்னா நிலம். நிலத்தில் ஒதுக்கீடு . ஒரு சாதி பிற்படுத்தப்பட்ட சாதி ஏகப்பட்ட நிலம் வச்சிக்கிட்டிருக்கான், தலித் மக்களுக்கு பிரிச்சி குடுக்கணும். அந்த மாதிரி இயக்கம்

www.tamilarangam.net

எவ்வளவு இயக்கம் இருக்குது? தலித் கோரிக்கையா வரணும். இதுவரைக்கும் நான் பார்க்கலை.

**அரங்க குணசேகரன்:**

*மனித உரிமை கழகத்தில் 18% ஒவ்வொரு பஞ்சாயத்து மட்டத்திலும் இருக்கிற நிலத்த ஒதுக்கி அளந்து குடுத்துட்டு பண்ணுன்னு நோட்டீஸ் போட்டிருக்கோம். எங்க திட்ட அறிக்கையிலேயே இருக்கு. கோரிக்கை யாவும் வச்சி துண்டறிக்கை போட்டிருக்கோம்.*

**காலக்குறி :**

பஞ்சாயத்தில் கடன். கடன்ல 18% stateஇன் மொத்த வருமானத்தில் 18% Reserves தலித் மக்களுக்கு கொடுக்கப்படணும்...

**அரங்க குணசேகரன்:**

*இன்னொரு கோரிக்கை வச்சிருக்கிறோம், வணிக வளாகங்கள் கட்டுறபொழுது 18% ஒவ்வொரு நகராட்சியிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கணும்கிற கோரிக்கைய முதல்ல எழுப்பி அதுக்குப் பிறகு பேரூர் ஆட்சிக்கு அதை விரிவுபடுத்தினாங்க. பேரூர் ஆட்சியில் என்ன செஞ்சிருக்காங்கன்னா ஒவ்வொரு தாட்கோ மேலாளருக்கும் ஆண்டுக்கு 10 லட்சம் ரூபா வணிக வளாகம் கட்டுவதற்கு பணம் கொடுத்திருக்கான். ஆனா உள்ளாட்சி சட்டத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு இடத்தை தேர்வு செய்கிற உரிமை பேரூராட்சிக்கு கொடுத்துட்டான். பேரூர் ஆட்சியில் எல்லாம் தாழ்த்தப்பட்டோர் அல்லாத சாதிகளா இருக்கிறதுனால வணிக வளாகம் கட்டுற பொழுது தாட்கோ மூலமா வணிக வளாகம் கட்டுறதுக்கு இடம் கொடுக்கிறதில்லை. அதனால் அந்தப்பணம் பூரா pendingல இருக்கு. இப்படி குடுத்து, பேரூராட்சி என்ன செய்யணும்னு திருப்பி திருத்தம் குடுத்தோம். முதலமைச்சருக்கு குடுத்திருக்கோம், நோட்டீஸ் போட்டிருக்கோம், பல அறிக்கைகளும் போட்டிருக்கோம் - என்னன்னா, உள்ளாட்சிகள் சட்டத்திலேயே ஒவ்வொரு பேரூர் ஆட்சியும் வணிக வளாகம் கட்டுறதுக்கு கட்டாயம் 18% தலித்துகளுக்கு இடம் அளித்தே தீரணும்னு சொல்லி பேரூர் ஆட்சி சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தால் ஒழிய எந்த பேரூராட்சி தலைவனும் பறையனுக்கு வணிக வளாகம் கட்ட இடம் கொடுக்க போறதில்லை. ஆக எல்லா முனைகளிலும் நிறைய சிந்திச்சிருக்கோம், அறிக்கைகள் போட்டிருக்கோம்...*

**காலக்குறி :**

சமூக நீதி கேட்டுதான் திராவிட இயக்கம் மேல வந்தது. திராவிட இயக்கத்தில் இருந்த அத்தனை பண்ணையாளர்களும் தங்களுடைய நிலங்களில் 18% தலித்துகளுக்கு பிரிச்சி குடுக்கணும். பிற்படுத்தப்பட்டோர் அவங்க சதவீதத்தை குடுத்துட்டுப்போகட்டும். தமிழ் நாட்டில் பெரும்பான்மை நிலச்சுவான்தார்களாயுள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் - மூப்பனாரும் வாண்டையாரும் பிரிச்சி குடுக்கணும்ல? குறிப்பா தி. மு. க.வில் இருக்கிற வங்க, நில ஒதுக்கீடுங்கிறது அரசாங்கத்தால் மட்டும்னு வச்சிகிட்டு, நிலத்துல - மத்ததுல - பஞ்சாயத்துல - சொத்துல பங்கை பிரிச்சே குடுக்கலைங்கறதை இது வரை தலித்துகள் எடுக்கலைங்கிறீங்க?



லெனின்

**அரங்க குணசேகரன்:**

*Education பத்தி அரசியல் சட்டத்திலேயே சொல்லிட்டான். நிலம்கிறது நம்ம பார்வையிலதான் இட ஒதுக்கீடு. ஆனா அரசியல் சட்டத்துல அப்படி இல்லை. கல்வி - வேலை வாய்ப்புன்னுதான் சொல்லி இருக்கான் அரசியல் சட்டத்துல. அம்பேத்கர் உள்பட எல்லாருமே இந்த நாட்டுல ரொம்ப விவரமான ஆளுக. நிலத்துல இடஒதுக்கீடுன்னாதான் அது புரட்சி யாயிருக்குமே.*

*இன்னும் சொல்லப்போனா அம்பேத்கரின் கடைசி உயிலை பார்த்தீங்கன்னா அவர் சாகப்போறபோது ஆற்றிய கடைசி உரையில் சொல்றாரு - 'தவறு செஞ்சிட்டேன், வருந்துகிறேன், தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருந்து படித்து வந்தவர்கள் வேலைக்கு வந்தால் சமூகத்துக்கு உழைப்பார்கள் என்று பாடுபட்டேன், அவர்களால் வஞ்சிக்கப்பட்டுவிட்டேன், அவர்கள் மூன்றாவது வகை பார்ப்பனர்களாக மாறி விட்டார்கள், முன்னமே நான் செய்திருக்க வேண்டிய வேலை, கிராமப்புற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உழுவதற்கு நிலம் என்ற கோரிக்கைக்காக போராடி இருக்க வேண்டும் என்பதை காலதாமதமாக நான் உணர்வதற்கு வருத்தப்படுகிறேன்' மேலே சொன்ன இந்த அஞ்சாறு வரியை*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படியே சொல்லியிருக்கிறார். சாகிறபோது '56இல் இப்படி சொன்னவர் '50ல் எப்படி அரசியல் சட்டத்தில் நிலம் வேணும்னு எழுதுவார்? ஆனா, on Batday, 'டைரக்டிவ் பிரின்சிலின்ஸ் ஆவ் ஸ்டேட்'ங்கிற நெறி முறைக் கோட்பாடுகள்ல, நிலப் பகிர்மானம் செய்யப் படணும், நிலம் வழங்கணும்னு எல்லாம் சொல்லி இருக்கிறார். அது சட்டமில்லை, அரசு இப்படி எல்லாம் செய்யணும்னு சொல்லி இருக்கார். ஏன்னா கல்வி - வேலை வந்தா அடுத்த அடுத்த கட்டத்துல பொருளா தாரத்தில் தகர்வு ஏற்படும், நிலம் குவிமானத்தில் இவங்க பங்கெடுத்துக்குவாங்கன்னு எதிர்பார்த்தார். அரசமைப்பை முழுமையா ஏத்துக்கிட்டவர். அம்பேத் கரை பொறுத்தவரை, அரசியல் சட்டத்தை இயற்றிய அம்பேத்கர், வைசிராய் கவர்ன்மெண்ட்ல பங்கெடுத்த அம்பேத்கர் இரண்டு பேருக்கும் அப்பால் அவரை இந்துத்துவாவுக்கு எதிரான யுத்த களத்தில் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் சாதி எதிர்ப்பு சனநாயகத் துக்கான போராளியாகவும் பார்க்கணும். 'காந்தியும் காங்கிரசும் தீண்டத்தகாத மக்களுக்கு செய்தது என்ன' என்கிற புத்தகத்துல அழகா வெளிப்படுது. ஆனா இந்த 2 விசயமும் அன்றைய கால சூழ்நிலையில ஒரு compromise தான், ஒரு பாதுகாப்பு இல்லாத மக்களுக்கு ஏதாவது பண்ணியாகணும்னு ஒரு நெருக் கடிக்கு அவர் தள்ளப்பட்டார், வாய்ப்பும் கிடைத்தது அவருக்கு. அதை ஏன் miss பண்ணனும்னு நினைச் சார். இப்படி அவர் செஞ்சதை ஒரு துரோகமாகவும் பார்க்க முடியலை.

ஆனா இன்றைய இடஒதுக்கீடு இன்னும் 100 வருசம் இருந்தாலும் இதனால் எந்த பயனும் இருக் காது. சில வடிவங்கள மாத்தியாகணும். கடைக்கோடி பறையனுக்கும் பள்ளனுக்கும் சக்கிலியனுக்கும் உண் மையாவே வாழ்வளிக்கும் இடஒதுக்கீடு தேவை - இன்றுள்ள இடஒதுக்கீட்டில் அடுத்தடுத்து elite section வந்துகிட்டே இருப்பான், அந்த elite sectionக் குள் போனவன் அடுத்தடுத்த தலைமுறைக்கும் பயன்படுத்திக்கிட்டே இருப்பான் - புது செக்சனுக்கு வராது. செங்கல்பட்டு மாவட்டத்தில் இன்னமும் திருக் கழுக்குன்றத்துக்கு கல்வி போகலை, தஞ்சை மாவட் டத்தில் தடுக்கி விழுந்தா பட்டதாரி - ஒரு வீட்டுல 4 பட்டதாரி, 2 டீச்சர், ஒரு இஞ்சினியர். ராணிப்பேட் டையில் ஒரு கிராமத்தில் 9 IAS இருக்கிறான். எப்படி இந்த மாவட்டங்கள் இப்படி பின்னுக்குத் தள்ளப் படுதுன்னா, தமிழ்நாட்டுல 900 ஆதிதிராவிட நலப் பள்ளிகள் இருக்கு. தஞ்சை மாவட்டத்தில் நான் இருக்கிற பட்டுக்கோட்டை தாலுகாவில் 3 கிமீ - 5 கிமீ இடைவெளியில் ஒரு ஆதிதிராவிடர் நல உயர் நிலைப்பள்ளி - தொடக்கப் பள்ளி - நடுநிலைப்பள்ளி. எங்கே போனாலும் ஒரு ஆதிதிராவிடர் பள்ளி இருக்கு. ஏன் மத்த மாவட்டங்கள்ல எங்கையுமே இத்தகைய போர்டே பார்க்க முடியலை? அப்ப காமராசர், கருணாநிதி காலத்திலிருந்து எல்லாருமே கவனத்தை தஞ்சை மாவட்டத்துலை குவிச்சிருக்கிறான். ஏன்னா கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்தது, திராவிட இயக்கம் வளர்ந்தது, கூடுதல் கவனம் செலுத்தினதுனால இந்த மாதிரி நிறைய மாறுதல். இங்கே எல்லாம் 10வது பெரிய படிப்புன்னு சொல்றபோது அங்கே சாதாரணம். ஆச்சரியமா இருக்கு. பெண்கள் எல்லாம் இன்று நிறைய படிச்சிருக்காங்க. பிற பகுதிகள்ல படிப்பு மட்டுமல்ல, சாதாரண வளர்ச்சிகூட ஏற்படலை. எல்லாருமே தஞ்சாவூரை மய்யமா வச்சி அரசியல் பண்ணி இருக்காங்க, அந்த காலத்துல இருந்து...

**காலக்குறி :**

எங்கு பார்த்தாலும் ஓட்டு சாவடி தலித் பகுதியில் அதிகமா இல்லை. தலித் ஓட்டு போடணும்னா தலித் துகள் அதிகமா இருக்கிற இடத்தில் வைக்கணும், பரிந்துரை பண்ணனும். எல்லாம் ஊர்ல வச்சிருக்கான். 1000, 2000 தலித்துகள் இருக்கிற கிராமங்களில் பூத் வைக்கணும் - மத்த மக்கள் அங்க வந்து போடட்டும். அப்படி பண்ணாததால் ஊர்ல உள்ளவன் அடிச்சி துரத்தி விடுறான்...

**அரங்க குணசேகரன்:**

காமராசரும் இதைத்தான் சொன்னார். காங்கி ரசுக்கு அப்பால காமராசர் எப்படி இந்த விசயங் கள்ல சில பதிலடி - குருட்டடி அடிச்சிருக்கார். ஆதி திராவிடநலப் பள்ளிய பறைத்தெருவிலேயே கட்டினார். அப்ப மேல்சாதிக்காறனெல்லாம் போயி என்ன நீங்க SC தெருவிலேயே கட்றீங்கன்னான். உன் தெருவுல கட்டினா அவன நீயி படிக்க விடமாட்ட. உங்களைவிட இந்த நாட்டுல கல்வி பெற வேண்டியவங்க அவங்க தான். அவங்க தெருவுல கட்டுறேன். நீ போயி படிச்சா உன் பிள்ளைய அவன் நிச்சயம் விரட்டி அடிக்க மாட்டான். உனக்கு இஸ்டம்னா போயி படி, இல் லைன்னா முட்டாளா வச்சிக்க உன் பிள்ளைய. படிப்பு தேவைப்படுறவங்களுக்குத்தான் பள்ளிக்கூடம் கட் றேன்னு பறை தெருவுல தான் 900 ஸ்கூலும். இப்படி முரட்டடியா காமராசர் சொல்லியிருக்கிறார். இதெல் லாம் கம்யூனிஸ்டுகள் சிந்திக்க வேண்டிய விசயம். ஒரு வர்க்க கண்ணோட்டத்துல வந்த பார்வை அது. ஆனா ஒரு காங்கிரசுகாரருக்கு அந்த சிந்தனை வந்தி ருக்கு. அதுக்காக தாழ்த்தப்பட்ட மக்கள் ஓட்டு போடற உரிமையை நீ எப்படி தடுக்கிறது? அவன் தெருவிலும் வைக்கட்டும், இவன் தெருவிலும் வைக்கட்டுமே. கோயில் கட்றான்ல பறை தெருவுக்கு ஒருகோயில் வெள்ளாள தெருவுக்கு ஒரு கோயில்னு...

**காலக்குறி :**

தமிழ் மக்கள் இசைவிழாவில் ரெட்டிபாளையம் பறையர்களையே பறையடிக்க வைப்பது ஒரு சாதிய கண்ணோட்டமில்லையான்னு ம. க. இ. க. தோழர்களை நீங்க கேட்டீங்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அரங்க குணசேகரன்:**

*ஒவ்வோர் ஆண்டும் தமிழ்மக்கள் இசைவிழாவில் 20பேர் சலங்கை கட்டிட்டு வந்து ஆடுவாங்க. வருசாவருசம் ரெட்டிபாளையம் பறையர்களை (அரசாங்க கலைவிழாவுக்கும் அவனதான் கூப்பிடுறான், தமிழ் மக்கள் இசைவிழாவுக்கும் அவனதான் கூப்பிடுறான், கம்யூனிஸ்டும் அவனத்தான்... அப்ப அந்த ரெட்டிபாளையம் பறையர்களையே அழைச்சி வந்து ஆட சொல்றீங்களே, ஏன் இவ்வளவு ஒரு லட்சம் பேர் திரண்டு வளர்ந்திருக்கிற உங்க இயக்கத்துல வேற சாதி 10 பேர் சலங்கை கட்டிட்டு ஆடினா என்ன?*

*ம. க. இ. க. காளியப்பன், அது அவங்க தொழில் தானே? அதுல என்ன தப்பு? அவங்க பரம்பரையா செஞ்ச தொழில்தானேன்னார். அவருக்கு மார்க்சியத்தின்மீது பிடிப்பு, சாதி ஒழிப்பின்மீது பிடிப்பு எல்லாம் இருக்கு. ஆனா அந்த வலி அவருக்கு தெரியல. வியாபாரப்படுத்தப்பட்டு 5000 ரூபா ரேட் பேசுபவர்கள் அதை பெருமையா நினைக்கிறாங்க. இது எவ்வளவு மரியாதை குறைச்சலானது! போயி வரிசையா மாடு அவுத்து விட்டுட்டு, தப்பு கொட்டிக்கிட்டு, சோறு வாங்கிட்டு வந்தது எவ்வளவு கேவலமான வாழ்க்கை முறை - இந்த மக்கள் வாழ்ந்திருக்காங்க, வாழ்ந்து கிட்டிருக்காங்க. தொழில்னா என்ன, தொழில்னாலே முதலீடு போட்டு இவ்வளவு உற்பத்தி நடந்து லாபம் வந்தாதான் தொழில். பழைய கஞ்சிக்கு தப்படிக்கிறது, பட்ட சாராயத்துக்கு ஆட்டம் போடறது தொழிலா?*

**காலக்குறி :**

நீங்க அந்த **aspects**ல பார்க்க வேண்டாம், அவ்வளவு தூரம் போக வேண்டாம். அதுக்கு முன்னாலேயே நின்னுக்குவோம். தொழிலுதானே, செஞ்சா என்னன்னு கேட்டாலே முடிஞ்சி போச்சி. பிறகு பேச வேண்டிய அவசியமே இல்லை. இதே தப்பு சாதாரண ஆட்கள் வாயில இருந்து வந்தா அது வேற விசயம். அதுக்கு பதிலா... இல்ல தோழர், நாமெல்லாம் கத்துக்கணும்னு தலித் தோழர்கள வச்சின்னு சொல்லியிருந்தா சரி,...

**அரங்க குணசேகரன்:**

*பொங்கல் பண்டிகைக்கு தலித் அல்லாதவங்க பொங்கல் வச்சதுக்கப்புறம் அந்த சோறை வாங்கி தின்னுட்டுதான் இவன் பொங்க வைக்கணும். பறையர் இருட்டுலதான் பொங்க வைக்கணும். நாங்களே இதை நிறைய உடைச்சிருக்கிறோம். காலைல 6 மணிக்கு எல்லாரும் வையின்னு...*

*பேய் கரம்பன் கோட்டை பக்கத்தில் சுந்தரேசன்னு தமிழ் பல்கலைக்கழகத்துல வேலை பார்க்கிறார், என்னோட படித்தவர், கள்ளர். அவர் ஊரில் வீட்டுக்கு ஒரு தலித் - சிங்கப்பூர் போயிட்டு வந்து தன் வீட்டுக்கு ஓடு போட்டதுக்காக அந்த ஓட்டு வீட்டையே அடிச்சி*



அரங்க குணசேகரன்

*உடைச்சிட்டாங்க. இப்படி மோசமான அடக்கு முறைகள்லாம்- அது ஒரத்த நாடு தாலுகா. தஞ்சை மாவட்டத்தில் ஒரத்த நாடு தாலுகா மிக மோசமான ஒடுக்கு முறை நிலவும் பகுதி.*

**காலக்குறி :**

உடைச்சவங்க மேல் சாதிகாரங்களா?

**அரங்க குணசேகரன்:**

*கள்ளர்கள். மேல் சாதி - கீழ் சாதி என்பதில் எனக்கு பிரச்சனை என்னன்னா, கள்ளரை மேல் சாதியிலேயும் சேர்க்க முடியலை, அதே சமயம் அவன் செய்யிற அக்கிரமம் அநீதி மேல் சாதிகாரன்கிட்ட - வெள்ளாளர் உடையார் கிட்ட- இல்லை. இவன்தான் அவன்களோட அடியாள், செக் போஸ்ட், அய்யனார், காவல் தெய்வம், சாதியை பாதுகாக்கிற மிலிட்டரி போஸ்ட். அரசாங்கத்துக்கு மிலிட்டரி, உள்ளூர் நிர்வாகத்துக்கு போலீஸ், சாதிய நிலப்பிரபுத்துவத்துக்கு காவல் கள்ளர் தான். தெற்கே கள்ளர், வடக்கே வன்னியர், மேற்கே கொங்கு வெள்ளாளர்.*

*திருமாவளவன்லாம் வன்னியர் ஒடுக்குமுறைன்னு சொல்றாங்க, ஆனா வன்னியர்கூட கள்ளரின் ஒடுக்கு முறை அளவுக்கு இல்லை. வருசநாடுன்னு ஒரு பகுதி. அங்க முத்தரையர் கோயிலுக்குள் போனதுக்காக 3 பேரை வெட்டினவன் கள்ளர். மேலவளவுல பறையர் முருகேசன் பிரசிடென்டா இருந்ததுக்காக 7பேரை வெட்டினவன் கள்ளன். கண்டதேவியில் பள்ளர்கள் கோயிலுக்குள் போனதால் கோயில இழுத்து சாத்தி வைச்சிருக்கிறான். தி.மு.க.வில் உட்கட்சியில் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயலாளரா வளர்ந்து வந்த ரூசோங்கிற உடையார் சமூக இளைஞரை அதே தி. மு. க.வை சேர்ந்த கள்ளரே காலி பண்ணினான் தேவகோட்டையில். அந்த பகுதியில் இருந்த மாடகோட்டை சுப்பு என்ற பள்ளர் சமூக கம்யூனிச போராளியை, சிறுவாச்சியம்மன் கோயிலுக்குள் நுழைஞ்சதுக்காக கள்ளர்கள் வெட்டி காலி பண்ணினாங்க. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு கோனாரை - சிதம்பரம்கிற ஆளை - மாவட்ட செயலாளரா போட்டார் கருணாநிதி. அந்த கள்ளர்கள்லாம், ஒருகோனாரை - இடைப்பயலை நாங்க மாவட்ட செயலரா ஏத்துக்கிறதான்னு சொல்லி அவர பொம்மையா வச்சிட்டு இவனுகளா ஒரு மாவட்ட நிர்வாகத்தை நடத்துனாங்க. அதைப் பொறுக்காமல் அவர் ராஜினாமா பண்றார். சிதம்பரத்தில் பழனிவேலு - அவன் பெல்ட் வன்னியர் பெல்ட், அவன் சைக்கிள் ஸ்டாண்டு எடுக்கபோயி கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பிரேம்குமார் வாண்டையரால் கொலை செய்யப்பட்டான். அப்ப, தலித்துகள் மீதான அதிகாரம்/ஆதிக்கம் மட்டும் அவன் செய்யலை, அத்தனை சாதிகள் மீதும் ஒரு அதிகாரத்தை அவன் - முக்குலத்தோன் - நிறுவிக்கிட்டிருக்கான்... தமிழக மனித உரிமைக் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட புதிய தமிழகம் (டிசம்பர் 94) இதழில் தலையங்கத்தின் கடைசி வரியில், 'இன்றைக்கு முக்குலத்தோர் தங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால், எதிர்காலத்தில் முக்குலத்தோர் அல்லாதார் இயக்கத்தை - பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் போல - முன்னெடுக்க வேண்டிய வரலாற்றுத் தேவை ஏற்படும்னு எச்சரிக்கிறோம்'னு எழுதினேன்.

தேர்தல் அரசியல் எங்களுக்கு ஒரு சிக்கலை உருவாக்கியுள்ளது. இந்த election politicsக்குள் திருமாவளவன் போயி அவரும் வாழாம நம்மையும் வாழ விடாம இந்த மக்களையும் சீரழிச்சி சின்னா பின்னம் பண்ணி நம்ம தோழமை சக்திகள்லாம் போயிடுச்சேன்னு தடுமாறி நிக்கிறோம். அவங்கள்லாம் எலக்சனுக்கு போயிட்டாங்க, நாம போக முடியலை, தனிச்சி நின்னு ஒரு பெரிய புரட்சி நடத்துறதுக்கும் பெரிய மக்கள் சக்தி நம்மகிட்ட இல்ல, அவங்ககிட்ட இருக்கிற மக்கள் சக்தியையும் நம்மகிட்ட இருக்கிற மக்கள் சக்தியையும் ஒண்ணா கூட்டி, எடுத்த alternative எப்படி, ஒரு சமூகத்தை தகர்க்கிற வேலைகளை எப்படி கொண்டு போகலாம்னு உக்காந்து discuss பண்ணி சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணின்னு ஒரு அருமையான கொள்கை அறிக்கை/திட்ட அறிக்கை தயார் பண்ணினோம், நானும் பெரிய சாமியும். அந்த அறிக்கையை தூக்கி பரண்ல போட்டுட்டு அவங்க போயிட்டாங்க. இப்ப நாங்க பேசறது எடுபடலை, actuelஆ. திருமாவளவன் பேசுறது எடுபட்டு successஆனா நல்லாயிருக்கும். ஆனா அது எடுபடாது. எடுபட்டாலும் நிக்காது, மக்களுக்கு விடுதலையை வாங்கி தராது. இனிமேல் விடுதலையை பத்தி எல்லாம் அவர் பேச மாட்டார். இப்படி திரிசங்கு சொர்க்கத்திலேயே நாங்க நின்னுக்கிட்டிருக்கோம், உண்மையில். இதை எப்படி அடுத்த கட்டத்துக்கு நகர்த்தறதுன்னு யோசிச்சிட்டிருக்கோம். ஏன்னா 90களின் 10 ஆண்டுகளில் எழுந்த தலித் எழுச்சி, 2000ஆவது ஆண்டின் தொடக்கத்திலேயே பெருத்த நெருக்கடியை சந்திச்சிக்கிட்டிருக்கு. அந்த 10 வருடங்களில் வந்த எழுச்சியை ஏதோ ஒரு வகையா ஆக்கிட்டாங்க.

...திருமாவளவன் கிருஷ்ணசாமி வெற்றிபெற்று எதிர்கட்சி வரிசையில் இருக்கிற பொழுது தி. மு. க. எதிர்க்கட்சியாவும் அ. தி. மு. க. ஆளும் கட்சியாவும் வந்தா அ. தி. மு. க.வுக்கு எதிராவும் தலித்துகளுக்கு சார்பாவும் அவங்க ரெண்டுபேரும் குரல் குடுப்பாக, கருணாநிதி ஐடியாவை எடுத்துக் குடுப்பாரு, ஆனா தி. மு. க. செயிச்சி திருமாவளவன் கிருஷ்ணசாமியும் செயிச்சாங்கன்னா அப்படியே ஆமாம் சாமி போட்டுகிட்டு உக்காந்துக்க வேண்டியதுதான், தலித் அரசியல் உ டை ப்புல போயிடும். அதனால என்ன செய்யணும், சிறுத்தையில் இருக்கிற தோழர்கள்லாம், தி. மு. க.வில் சிறுத்தை நிக்கிற இடத்தை மட்டும் செயிக்க வச்சிட்டு பாக்கி தி. மு. க.காரங்கள தோக்க வச்சிடணும்! அப்ப தலித் பாலிட்டிக்ஸ் கொஞ்சம் கொஞ்சம் மூச்சு விடும், மெயின் ஸ்ட்ரீம் பாலிட்டிக்ஸ்ல. திருமாவளவன் செயிச்சாலும் தோத்தாலும் நாம எப்பவும் போல செஞ்சிகிட்டிருக்கிற ஆளு தான். இப்படி ஒரு செயல் தந்திரத்தில் எல்லா தலித்துகளும் சிந்திச்சாங்கன்னா சிறுத்தை நிக்கிற இடத்தில் மட்டும் சாலிடா ஓட்டுப் போட்டு ஜெயிக்க வைக்கிறது, பாக்கி ஊர்ல எல்லாம் அந்த ஊர்ல இருக்கிற பறையன்ட்ட சொல்லி ராமதாசுக்கு போட்டுடுங்க, இரட்டை இலைக்கு போட்டுடுங்கன்னா உருப்படியா இருக்கும், இந்த வேலைய வை. கோ. நல்லா செஞ்சிகிட்டு இருக்காரு!

**காலக்குறி :**

தலித் போராட்டங்களை ML பார்ட்டியோட link பண்ணி கொண்டு போறதுல என்ன பிரச்சினை இருக்கு?

**அரங்க குணசேகரன்:**

நல்ல கேள்வி. இந்த பிரச்சனையை நான் 7 - 8 வருசங்களா TNML, SOC, CPIML - லிபரேசன், PW-RYL நாலு அமைப்பிலயும் பேசியிருக்கேன். ஒரு சனநாயக எழுச்சி தலித் மக்கள்கிட்ட வந்திருக்குது, பல கோபங்கள்ல இருந்து வந்திருக்குது. நக்சல்பாரிக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தவறியதாக புரிஞ்சிகிட்டு, செய்யத் தவறுன சில இடங்கள்ல தலித் மக்கள்மீது நடந்த கொடுமைகள் குறித்த கோபத்தில் ஒரு எழுச்சி வந்திருக்குது. ஆனா நக்சல்பாரி இயக்கங்கள் செய்யத் தவறிய விசயத்த நாங்க எடுக்கிறோம்னு வந்த இவர்கள், மார்க்சியவாதிகள்மீது வந்த கோபத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லெனின்

வந்த இவர்கள், மார்க்சியத்தையே கொச்சைப்படுத்திட்டு பின்னுக்கு தள்ளிட்டு விடுதலை வாங்கிறலாம்கிற மனப்பால் குடிச்சிட்டிருக்காங்க. மார்க்சிய - லெனினிய கட்சிகளும் சில தவறுகள் செஞ்சிருக்கலாம். அதை இட்டு நிரப்புவதில் அவர்களிடம் சில தேக்கம் இருந்திருக்கலாம் அல்லது அவர்களின் அரசியல் திறனை இவர்கள் புரிஞ்சிக்கிறதில் பிரச்சனை இருந்திருக்கலாம். அதை சரியில்லைன்னுட்டு வந்த இவங்க, அந்த கட்சிமேல வந்த கோபத்தில், மார்க்சிய லெனினியத்துக்குள் வராமலே தலித்துகள விடுவிச்சிடலாம்னு கனவு கண்டுக்கிட்டிருக்காங்க. மா - லெ. கட்சிகள், அவற்றின் பலவேறு வடிவங்கள் நமக்குத் தெரியும். ஒரு network மூலமா - ஒரு இணைப்புக் கண்ணி மூலமா - இவர்களை ஒரு அரசியல் நீரோட்டத்தில் - ஒரு சனநாயக புரட்சிக்கான திசைவழியில், இவர்களோடு ஒரு fraction உறவு மூலமா அரசியல் படுத்தறது, அதுக்கு என் போன்றவர்களுடைய உதவியை சரியா பயன்படுத்திக்கிட்டு பண்ணலாம்னு (நாங்கள்லாம் ML அரசியலில் இருந்து வந்த ஆள்கள் தான்) சென்னிமலைக்கு போயி TNML பொன்னையன், செங்கோடன், தென்னவன் இவங்க கிட்ட 2 - 3 நாள் உட்கார்ந்து பேசினேன். கார்முகில்கிட்ட பேசினேன். செங்குன்றம் வக்கீல் நடராசன்கிட்ட பல முறை பேசினேன். லிபரேசன்ல பாலசுந்தரம், நாராயணன், .... எல்லாருக்கும் கடிதம் எழுதினேன். அவங்கள்லாம் இதை சாதி அமைப்புன்னு பார்க்குற போக்கும்... இதில் அவங்க கருத்து செலுத்தலை. நம் இயக்க வளர்ச்சியின் அளவு குறைவாக இருக்கையில் இந்த தலித் மக்களுடைய திரட்சி அதிகமா இருக்கும்போது, இரண்டும் இணையறபோது அரசியலில் அதிகார மேலாண்மைங்கறது தலித் இயக்கங்களிடம் போயிடும்னு நினைச்சாங்களா, இல்லை, உண்மையிலேயே ஒரு வர்க்கப் புரட்சி வந்துடக்கூடாதுன்னு நினைக்கிறாங்களா இந்த எம்.எல். பார்ட்டி எல்லாம்? என்னாங்கிறது தெரியலை. இணைவதற்கு நான் யோசிக்கிறேன். அந்த அமைப்புகளோட தொடர்பு வைச்சிருக்கோம், பேசியிருக்கோம், யாருமே இதுக்கு முன்னெடுக்கலை. மனித உரிமை கழகம் முன்னெடுக்க முடியாது. ம. உ. கழகமோ திருமாவளவனோ கிருஷ்ணசாமியோ அல்லது எந்த இயக்கமோ ஒரு சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான கோபக்குரலே தவிர அரசியல் திசைவழிப்பட்ட குரல்னு சொல்ல முடியாது. ஒரு அரசியலுக்கு நேர் எதிரான ஒரு கிளர்ச்சி, இந்த கிளர்ச்சியை திசைவழிப்படுத்த வேண்டியது ஒரு நீண்டகால அரசியல் தொலை நோக்குள்ள ஒரு புரட்சிகர கட்சிதான்.

அவங்க 7 - 8 வருசமா என்ன செஞ்சிட்டிருந்தாங்க, மூப்பனார்கிட்ட திருமாவளவன் போற வரையிலும் ஜெயலலிதா வீட்டுக்கு திருமாவளவன் போற வரையிலும் கிருஷ்ணசாமிக்கு பின்னால திரளும் அந்த மக்கள் போயி சன் டி. வி. யில போட்டோ எடுத்துகிட்டு பின்னால திரளும்வரையிலும் என் போன்றவர்கள் இப்போ எந்தவித ஆதரவுமில்லாம, இப்ப யாரோட சேரலாம், புரட்சிகர சனநாயக சக்திகளோட ஒரு ஐக்கியம் கட்டலாமா அப்படின்னா, பாரு - திருமாவளவன்கூட ம. உ. கழகத்திடமிருந்து போனவனை எல்லாம் 2பேரை MLA ஆக்கி இருக்காரு, இந்த ஆளு திரும்ப திரும்ப முண்டு வைக்கிற கட்சியோடும் துப்பாக்கி தூக்குற கட்சியோடுமே போயிட்டு, திருமாவளவன் போன்றவர்களை , பகைச்சிட்டு இருக்கிறாரு, நீ அழிஞ்சி போயிடுவேன்னு சொல்லி, இருக்கிற இளைஞரை திசை திருப்புற அளவுக்கு பலவேறு மோசமான சக்திகள்தான் மனித உரிமைக் கழகத்துக்கு புறத்தே இருக்கிறார்கள்.

புரட்சிகர சக்திகளை எடுத்துக்கிட்டா அவங்களோட எங்களுக்கு கசப்பான அனுபவம்தான் இருக்கு. இந்த புரட்சி இயக்கங்களுக்கும் தலித்துகளுக்கும் ஒரு உறவு இருக்கணும்னா இந்த உறவு தொடர்ந்து வளர்த்துச் செல்லப்பட வேண்டும். மாறா, ஏண்டா உறவு வச்சோம்னு இருக்கக்கூடாது. ஆக, ஒரு அரசியல் தோழமை வந்திருச்சின்னா அந்த தோழமை, சனநாயக சக்திகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பரஸ்பரம் அரசியல் திட்டத்துலதான் செயல்படணும். இப்படி நக்சல்பாரி இயக்கங்களோடு, தமிழ்த் தேசிய விடுதலை ஏகாதிபத்திய எதிர்ப்பை முனைப்பாக் கொண்ட தமிழ்த்தேசிய விடுதலை பேசக்கூடிய இயக்கங்களோடு தலித் இயக்கங்களின் உறவு, என்றைக்கிருந்தாலும் நிச்சயமா பராமரிக்கப்படணும், அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனா அதை யார் முன்னெடுப்பது? ஒரு தனி இயக்கமாக - தலித் இயக்கமாக - ஒரு வட்டாரத்துக்கான, பகுதிக்கான இயக்கமாக இருக்கக்கூடிய இயக்கம், நாடு தழுவிய ஒரு புரட்சிகர அரசியல் திசைவழிப்படுத்துற இயக் கத்தை வழி நடத்த முடியாது. ஒருவேளை தலித் இயக்கங்கள் சிலவற்றுக்கு அந்த அக்கறை இருந்து அதுபற்றி பேசினாலும் எம். எல். இயக்கங்கள் அது குறித்து போதிய கவனம் செலுத்தலை. ஆனா '70வது திட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அறிக்கையை கம்யூனிஸ்ட் கட்சி வச்சதுக்குப் பிறகு தான் நாட்டில் தேசிய மயமாக்க கொள்கைகள் உருவாகி வங்கிகள் - இன்சூரன்ஸ் போன்ற பல பொதுத்துறை நிறுவனங்களில் தலித்துகள் - பின் தங்கியவர்கள் குறிப்பிடத்தக்க அளவு வேலை வாய்ப்பு பெற்றார்கள். அவர்களிடையே ஒரு வீச்சான கல்விப் பரவலாக்கமும் ஏற்பட்டது. இதனால், பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் கிராமப் புறங்களில் வேலையில்லாமல் குவிந்து கிடக்கிறார்கள். இத்தகையதொரு கிராமச்சூழலில் தலித் இளைஞர்கள் மத்தியில் அம்பேத்கர் - பெரியார் சிந்தனைகள், மரபார்ந்த திராவிட இயக்கங்களின் பார்வையிலிருந்து வேறுபட்டு ஒரு சனநாயக தேடலுக்கான எழுச்சி வளர்ந்துள்ளது. (இதை அங்கீகரிக்க மறுக்கிற சாதி இந்துக்களின் முரட்டுத்தனமான பிடிவாதப் போக்குகளால் சமூக மோதல் முன்னைவிட கூர்மை யடைந்து சாதிக் கலவரங்களாக வடிவெடுக்கிறது).

தலித் இளைஞர்களால் மார்க்சிய புரிதலோடு விவாதிக்கப்பட்டு சனநாயக புரட்சி ஒரு புதிய கட்டத்தில் முனைப்பாக முன்னேறியுள்ளது. அது சாதிக் கலவரம்கிற வடிவத்தில் வெளிப்பட்டாலும் அது சனநாயக புரட்சியின் ஒரு வெளிப்பாடாகவே பார்க்கப் படணும், இத்தகைய போக்குகளை புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சிகள் (நக்சல்பாரிகள்) பார்க்க மறுப்பது ஏன்னு தெரியலை. இன்னொரு புறம், மரபு ரீதியான சமூக இயக்கம்கிறதைத் தாண்டி ஏகாதிபத்திய நாடுகளோட பொருள் குவிப்பானது பிரமாண்டமான தகவல் தொழில்நுட்ப புரட்சியை உலகில் ஏற்படுத்தி அது கிராமம் வரையிலும் பரவி, உலகமே சுருங்கி விட்டதைப்போல காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அரை நிலப்புரபுத்துவ உற்பத்தி உறவுகள் தொடர்ந்து நிலவுகிற அதே நேரத்தில், அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி உடமையாளர் வகுப்பை கேள்விக்குள்ளாக்குகிற அரசியல் சக்திகளும் வளர்ந்திருக்காங்க. எனவே 70களுக்கு பிறகு இந்த 30 ஆண்டுகள்ல இன்று மாறிவரும் சூழலுக்கு ஏற்ப கட்சித் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆனால், அதைச் செய்யாமல் எதற்கு எடுத்தாலும் '70 திட்டத்தையே சொல்லிக் கொண்டிருப்பது நக்சல்பாரிகளின் /கம்யூனிஸ்டுகளின் அரசியல் பின்னடைவையே - தேக்கத்தையே காட்டுகிறது. அதனால் கம்யூனிஸ்டுகள் தங்களை மாத்திக் கிட்டாத்தான் தலித் இயக்கங்கள் ஒண்ணு சேர்வாங்க. தலித் இயக்கங்கள் எப்போதுமே சேரத் தயார். சேரத் தயாரா இல்லைன்னாலே... இவன் ஆத்துல அடிச்சிட்டு போற நீச்சல்ல நிக்கிறவன் தாங்க - அவன எப்படி மீட்டெடுக்கணும்னு முன்முயற்சி எடுக்கலைன்னா நீங்க கம்யூனிஸ்ட் இல்லை.

ஒரு தலித் இயக்கம் சாதி ஒழிப்புக்காக சனநாயக உரிமைக்காக போராடிக்கிட்டிருக்கான், குளத்தில் குளிக்கணும், கோயிலுக்குள்ள போகணும், கான்ட்ராக்ட் வேணும், குளம் வேணும், எல்லாமே வேணும், பள்ளிக்கூடம் வேணும், படிக்கணும், வாத்தியார் வேலை வேணும், இன்னும் இன்னும் எல்லாருக்கும் இருக்கிற உரிமை எனக்கும் வேணும்கிறான். அப்ப உரிமை மறுக்கப்பட்டவன் உரிமைகோரி வருவதற்கு தனக்குத் தானே திரளுகிறான்.

அவனுக்கு ஒரு துடுப்பு குடுத்து இந்த படகிலை ஏறிக்கப்பான்னா வரமாட்டேன்னா சொல்றான்? கடந்த '70கள்ல இருந்த நக்சல்பாரி ஆள்லாம் எங்க போயி சாப்பிட்டான்? சீனிவாசராவே நண்டை சமைச்சி பள்ளன் வீட்டிலை சாப்பிட்டுத்தான் சாணிப்பால் சவுக்கடிங்கிற கொத்தடிமைத்தனத்துல இருந்து கீழ தஞ்சை மக்களை விடுவிச்சாரு... வடசேரியில் தலைமறைவா இருந்தாரு. என் மாமனார் ஊராகிய பத்து தாக்குலதான் ஜெகநாதன் பழனிவேல் தங்கியிருந்தது. இன்னைக்கு பூரா எத்தனையோ நக்சல்பாரி தலைவர்களுடைய வரலாறையும் நீங்க பாத்தீங்கன்னா பள்ளன் பறையன் வீட்டிலைதான் சாப்பிட்டான், தங்கினான், பொண்ணும் எடுத்துகிட்டான். ஆனா அவங்க அந்த மக்களை (தனக்கான) ஷெல்ட்டரா தான் பாத்தானே தவிர அந்த மக்களுக்கான அரசியலை வளர்த்தெடுக்கலை. எம். எல். இயக்கங்கள்... மீண்டும் நிறைய படிக்கணும், நிறைய சிந்திக்கணும், நிறைய விவாதிக் கணும். இதை நான் நூறு தடவை பேசியிருக்கேன்.

த. நா .மா. லெ. கட்சியில கனல்னு ஒரு பத்திரிகையில போட்டாங்க. ஒரு வர்க்க அணிசேர்க்கை - வர்க்க புரட்சி - சனநாயக புரட்சி நடக்கிற வரையிலும் அதுக்கான கால அவகாசம் கனிஞ்சிருக்கிற இந்த சூழலில் சாதிக் கலவரங்கள் என்பதை சற்று நாம் ஒதுக்கி வைக்க வேண்டும்னு எழுதியிருந்தார்கள். Leisure time குடுக்குறாங்க! இவன் புரட்சி நடத்துற வரையில நான் செத்த மாட்ட தோள்ல தூக்கிட்டு திரியணும்? துக்கம் சொல்லிட்டுத் திரியணும்! புரட்சி நடந்துதான் செத்தமாடு தூக்க முடியாதுன்னு சொல்லணுமா? சுயமரியாதை உணர்வு இருந்து 2 - 3 ஏக்கர் நிலமிருந்து வாத்தியாரா இருந்தா செத்தமாடு தூக்க முடியாதுன்னு சொல்லிட்டுப் போறேன். இதுக்கு புரட்சியா வரணும்? இது சனநாயக உரிமை. ஒரு மனுசன் எந்தத் தொழிலை செய்ய முடியும் முடியாதுன்னு சொல்றது.

இந்த செய்திகள் 'கனல்' கடைசி வெளியீட்டுல இருக்கு. கடிதம் எழுதினேன்: என்னய்யா நீங்க அறிக்கை எழுதிருக்கிறிய? நக்சல்பாரிங்கிற, புரட்சியாளங்கிற, அப்புறம் சாதி அங்கம்லாம் ஒழிக்கிறோம்னு யாருக்கு சொல்ற இந்த யோசனை? அதனால முதல்ல இந்த மாதிரி அமர்வுகூட ஒரு காலத்துல முடிஞ்சா ஒரு வாய்ப்புல நமக்கு ஒத்து வரக்கூடிய சில எம். எல். குழுக்களோட உக்காந்து, சில விவாதங்களை இன்னமும் ஆரோக்கியமா பண்ணனும்னா ஒரு கூட்டு முயற்சியில் ஒரு பலன் கிடைக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லைன்னா சனநாயக சக்திகளோடாவது - அது எந்த கட்சியா வேணும்னாலும் இருக்கலாம் - அது தனிநபராயினும் குழுக்களாயினும் உக்காந்து விவாதிச்சி ஒரு sum - up பண்ணனும். TNML கிட்ட கேட்டா, 5வருசமா என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க? விவாதிச்சிட்டிருக்கோம். பத்தி எரிஞ்சிகிட்டிருக்குது, விவாதிச்சிட்டிருக்காங்களாம்!

ஏங்க, 4 வருசத்துக்கு முன்னாலவரைகூட விவசாயி நாம சொன்னதை கேக்கலைங்க. டங்கல் திட்டத்தால ஒண்ணும் ஆபத்து வராதுன்னு. இப்ப நாலு வருசமா பருத்தி விவசாயி ஆந்திராவுல தற்கொலை பண்ணிக்கிட்டிருக்கான். நீலகிரியில தேயிலை விவசாயி போராடிகிட்டு இருக்கான், கிலோ தேயிலை 15 காசுக்கு விக்கிதுங்கிறான். தஞ்சாவூர்ல நெல் விளையலங்கிறான். 8.3% பிழிதிறன் கொண்ட கரும்புக்கு 1000 ரூபா குடுக்கிறது பத்தலன்னு கரும்பு விவசாயி போராடிக்கிட்டிருக்கான். மஞ்சள்ல நோய் வந்திருச்சி, தென்னையில நோய் வந்திருச்சி, நெல் ஹைபிரிட் சீடு சிக்கலாயிடுச்சின்னு சொல்லி உடைமை வர்க்கமே தடுமாறுறான். உடைமை வர்க்கத்துக்கு ஏதாவது விளைஞ்சாத்தான் அதை அறுக்கிறதுக்காவது எங்களுக்கு (தலித்துகளுக்கு) வாய்ப்பு கிடைக்கும், அதுக்கும் மிசின் வந்திடுச்சி. தலித்துகளின் வாழ்க்கைக்கு எல்லா வழியிலும் கதவு அடைச்சாச்சி. அப்படிப்பட்ட வர்க்கம் எப்படி வாழ முடியும்?

அப்படின்னா புரட்சிக்கு இது எவ்வளவு அருமையான சூழல் - புரட்சிகர அரசியலுக்கு! அப்படியே கண்ண மூடிகிட்டு உக்காந்திருக்கிறான் எம். எல். காரன். அப்ப நாம(தலித்)தான் எம். எல். னு புரிஞ்சிகிட்டு நாமதான் அதை முன்னெடுக்க வேண்டியதா இருக்கு. நமக்கு நாமே நக்சல்பாரிப்பா, வாங்கப்பா எல்லாரும் அப்படின்னு சொல்லி செய்ய வேண்டிய தேவை இருக்கு. வேற என்ன செய்யிறது? எம். எல்.னு ஒருத்தன் இருக்கான் அவன் கூப்பிடுவான்னு காத்துக்கிட்டிருக்கவா முடியும்? அதுதான் ஏகாதிபத்திய எதிர்ப்பு சனநாயக முன்னணின்னு ஒரு திட்டத்தை வகுத்தோம். அப்புறம் தோழர்கிட்ட பேசும்போது, செயல்தந்திர உத்தின்னு அவர் பேசுறபோது, இந்த மாதிரி முயற்சி எடுத்தாலும் சிக்கல் வருமோ, நம்மள ஈஸியா வளரவிடாம அடையாளம் கண்டு அழிச்சிடுவாங்களோ அப்படின்னு 2 - 3 நாளா அந்த பரிசீலனை, ஏகாதிபத்திய எதிர்ப்பு சனநாயக முன்னணிங்கிறதை பத்தி பேசினபொழுது நோட்டீசெல்லாம் போட்டது அப்படியே pending இலை இருக்கு.....

....ஒரு சிறு குழுவோ - தனிநபரா இருந்து ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்வதால் வரும் அழிவைவிட, ஒரு பெரும் மக்கள் கூட்டத்தை திரட்டி போரிடும் போது அதனால் வரக்கூடிய சாதக பாதகங்கள் ஒரு தொடர்ச்சியைக் கொடுத்து அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி செல்லும். இதுலை 2 சிக்கல் இருக்கு. ஏகாதிபத்திய எதிர்ப்புங்கிற சொல்லை ஆளக்கூட சிலர் தயாராக இல்லை. திருமாவளவன் பொன்னேரியில் வைத்து கம்யூனிஸ்டுகளைத் திட்டினார். அதில் எனக்கும் அவருக்கும் பிரச்சனை. சி. பி. ஐ, சி. பி. எம். உடன் கூட்டணி இருக்கிற காலத்தில் வெண்மணியில் எங்க மக்களை கம்யூனிஸ்டுகள் பலி கொடுத்தார்கள்னு நாகையில் வெண்மணி நினைவு நாளில் பேசினார். தினமணியில் அரைப்பக்கம் போட்டிருந்தான். நான் அப்படி பேச முடியுமா? கம்யூனிஸ்டு கட்சிகளுடைய வேலை, வர்க்க போராட்ட சக்திகளை அணிதிரட்டி கூலி உயர்வுக்குப் போராட வைப்பது. கொலை செஞ்சவன் நிலப்பிரபு, நாயுடு. கூலி உயர்வு போராட்டத்தில் தன்னை இழந்து இந்த நாட்டின் அடித்தட்டு வர்க்கத்துக்காக மெழுகு திரியா தியாகிகள் ஆனவங்களுக்கு வீரவணக்கம் செலுத்துறோம் அப்படின்னு சொல்லியிருந்தார்னா கரெக்ட். கம்யூனிஸ்டுகள் எங்க மக்களை கொண்டு போய் பலி கொடுத்துட்டாங்கன்னு இவரே சொன்னா அது வரலாற்றை திரிக்கிற விசயம். இதுக்குத்தான் திரிபுவாதம்னு பேரு. இது தாழ்த்தப்பட்ட மக்களைப் பத்தி பேசுனாப்புலயும் இருக்கும், கொன்னவனும் நாயுடுவும் மறைஞ்சிடுறாங்க, நிலப்பிரபுக்களுக்கும் சந்தோசம், பேப்பர் காரனுக்கும் சந்தோசம். அதுக்கு தான் திருமாவளவன் பேச்சை அரைப்பக்கம் போட்டிருந்தான் தினமணி. எனக்கும் தினமணியில் ஒரு அரைப்பக்கம் வரணும்னா நாமளும் ஏதாவது anti-dalitஆ anti-marxistஆ பேசணும்!

விடுதலை சிறுத்தைகளின் மேலூர் ஒன்றிய செயலர் உலகுபிச்சான்பட்டி சந்திரன் என்பவர் திருமாவளவனின் உரைவீச்சு அடங்கிய ஒலிநாடாவை மேலூர் கடைத்தெருவில் ஒலிபரப்பியதற்காகவே அங்கிருக்கக்கூடிய ஆதிக்க சக்திகள் குறிப்பாக, கள்ளர்கள் உலகுபிச்சான்பட்டி சந்திரனை படுகொலை செய்தனர். இதைப்போல, திருமாவளவனின் கனல் தெறிக்கும் பேச்சால் உந்தப்பட்டு போராட்டகளத்தில் போலீசாராலும் ஆதிக்க சக்திகளாலும் கொலை செய்யப்பட்ட தலித் இளைஞர்கள் பலர். இப்படி கொலை செய்யப்பட்டவர்களை எல்லாம் கொலை செய்தவர்கள் ஆதிக்க சாதியினரா திருமாவளவனா? என்றுகூட நாம் கேள்வி எழுப்ப முடியும். எனவேதான், வெண்மணிப் படுகொலைக்கு கம்யூனிஸ்டுகள்தான் காரணம்னு திருமாவளவன் குற்றம் சாட்டுவதை அப்பட்டமான திரிபுவாதம்னு சொல்றோம்... ஆக, வரலாற்றை திரிக்கிறாங்க. இந்த மாதிரி ஆட்களுக்குப் பின்னால இளைஞர்கள் ஓடிக்கிட்டிருக்கையில நாம ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு எடுத்தா, இருக்கிற கொஞ்ச நஞ்சப் பேரையும் சிதைச்சி கொண்டு போயிடுவாங்க, இந்த ஆள் நக்சல்பாரி, 'உங்களை எல்லாம் கொன்னே போட்டுடப்போறாரு'ன்னு ஸ்தாபனத்தை அழிச்சிடுவான். அதுக்குன்னே சில புற சக்திகள், தலித் அரசியலின் பேராலேயே திசை திருப்புற நபர்கள், இன்று ஏராள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக புறப்பட்டிருக்கிறார்கள்...

...எங்க அமைப்பை பொறுத்தவரை இன்னைக்கு பல புதிய சக்திகள் நிறையப்பேர் வந்திருக்காங்க. அவங்களை அரசியல் படுத்திக்கிட்டிருக்கோம். கிராமப்புற அமைப்புகள், சாதாரண சக்திகள் வளர்ந்து வந்துகிட்டிருக்கு. அதில் எங்க அமைப்புல ஒண்ணும் பிரச்சனை இல்லை. ஆனா இதை எடுத்துகிட்டு போறதுக்கு எந்த தலித் இயக்கமும் இந்தக் கண்ணோட்டத்தில வரலை. இருக்கிற தலித் இயக்கங்கள் தேர்தல் நீரோட்டத்தில் நிக்கிறபொழுது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கு திருமாவளவன் கவனம் செலுத்துவாரா னால் ஆயிரக் கணக்கான இளைஞர்களோட கவனம் அதன்மேல் திரும்பும். நான் எடுத்தா பட்டுக்கோட் டைய தாண்டாது. அப்போ அந்த கருத்து வர்றதுக் கான ஆளுக சோரம் போயிருக்கிறபோது இதை எப்படி செய்ய முடியும்?

இந்த சூழல்ல நாங்க என்ன பண்ணினோம்னா... எங்களைப் பொறுத்தவரை நாங்க 94இலேயே ஏகாதிபத்தியத்தை பலவீனப்படுத்துற தமிழ்த்தேசிய விடுதலை போராட்டத்தை ஆதரிப்பதுன்னு எங்க திட்ட அறிக்கையிலேயே சொல்லி இருக்கிறோம்... வெறு மனே தமிழ் தேசியக் குழு அல்ல, ஏன்னா, தமிழ்த் தேசிய குழுக்களைப்பத்தி எங்களுக்கு மாறுபாடான கருத்துகள் இருக்கு. தேசியஇன விடுதலைப் போராட் டம்கிறது ஏகாதிபத்தியத்தை பலவீனப்படுத்துறதா இருந்தா அதை ஆதரிக்கலாம். இந்த கண்ணோட்டம் உள்ள அமைப்புகளை எல்லாம் கூட்டி ஒரு முன்ன ணியை கட்டணும். சின்ன சின்ன முரண்பாடுகளை எல்லாம் கைவிட்டுட்டு ஒண்ணா சேர்ந்து பண்ண ணும். அதுதான் உண்மையான தலித் விடுதலை உள்ளிட்ட சனநாயகம் மறுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பாதையாகும். ●


புகலிட தமிழ் ஊடக இலக்கிய அறிவியல் இணைவலையம்

பாரிசை மையமாகக் கொண்டு பரவலாவது

**www.exilivre.com**

√ தேடல்

√ பகிர்தல்

√ தெளிவுறல்

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன. உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம்.
உணர்வே அமுதம். உணர்வு தெய்வம்.
- பாரதி

ஒளியூட்ட இவ்வுலகில் யாரும் இல்லையேல், தினமும் உதிப்பதில்
உனக்கென்ன ஆனந்தமுண்டு, ஆதவனே சொல்.
- ஸரத்துஸ்த்ரா

சக்தி

புகலிடத்திலிருந்து 10 வருடங்களிற்கு மேலாக வெளிவந்துகொண்டிருக்கும் பெண்நிலைவாத சஞ்சிகை.



தொடர்புகளிற்கு:
SAKTHI
Boks 99 oppsal
0619 OSLO
norway.
மின்னஞ்சல்:
sakthinorway@online.no
இணையம்:
www.geocities.com/pennsakthi




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒப்புரவு

## தமிழ் அடையாள ஆவணம்

தொடர்புகளுக்கு:

ஒப்புரவு
123 சவுராட்டிரா ஆசிரியர் குடியிருப்பு
அனுப்பானடி
மதுரை 625 009
தொலைபேசி: 0452 - 631565
மின்னஞ்சல்: OPPURAVU@yahoo.com

ஆசிரியர் : பாமயன்
ஆசிரியர்குழு : க. மு. நடராஜன், செ. வேலுச்சாமி, மு. குமரவேல்



# தாயகம்

**கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்**

புதிய ஜனநாயகம்,
புதிய வாழ்வு,
புதிய பண்பாடு
என்னும் கோட்பாடுகளோடு
ஈழத்திலிருந்து
வெளிவந்து கொண்டிருக்கிறது.


தொடர்புகளுக்கு:

தாயகம்
வசந்தம் புத்தக நிலையம்
405 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை.

www.tamilarangam.net

# உளவியல் பார்வையில் நாசிசம்

## PSYCHOLOGY OF NAZISM



Erich Fromm

**இக் கட்டுரை Erich Fromm எழுதிய Escape from Freedom என்னும் நூலில் இருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.**

தமிழில் : **தேவா** (சுவிஸ்)

உதவி: மனிதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Erich Fromm 1900இல் பிராங்போர்ட்டில் பிறந்தவர். 1922இல் கைடில்பேர்க் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் பி.எச்.டி. பட்டம் பெற்றார். 1925 காலப்பகுதிகளில் சமூக கலாச்சார பிரச்சனைகளை உளவியல் பகுப்பாய்வு அடிப்படையில் ஆய்வு செய்வதில் ஈடுபடலானார். 1933இல் தற்காலிக விரிவுரையாளராக அமெரிக்கா சென்ற அவர் அங்கு குடியேறினார். பின்னர் சர்வதேச உளவியல் பகுத்தாய்வு சங்கத்தில் சேர்ந்து பணியாற்றினார்.



நாசிசத்தை உளவியல் பார்வையில் விவாதிப்பதற்கு முன்பு நாசிசத்துடன் தொடர்புடைய உளவியல் காரணிகள் பற்றிய தெரிந்து கொள்ளல் நாசிசத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள உதவும். நாசிசம் பற்றிய விஞ்ஞான பூர்வமான பார்வையிலும் சரி, அன்றேல் சாதாரணமான பார்வையிலும் சரி இருவிதமான எதிர்க்கருத்துக்கள் பிரசன்னமாகின்றன. முதலாவதாக, உளவியல், பொருளாதார, அரசியல் உந்துதல்களின் சிக்கலான பாசிசத்திற்கு எவ்விதமான விளக்கமும் இல்லை என்பதும் இரண்டாவதாக, பாசிசம் முற்றும் முழுவதுமான ஓர் உளவியல்சார் பிரச்சினை என்ற விவாதம்.

முதலாவது பார்வை நாசிசத்தை முற்று முழுவதுமாக பொருளாதாரப் பிரச்சினையாக ஜேர்மன் முதலாளித்துவத்தின் விரிவாக்க ஆவலின் வெளிப்பாடாக, அன்றேல் அரசியல் நிலைப்பாடாக ஓர் பிராந்திய அரசியல் கட்சி பெருந்தொழில் உரிமையாளர்களாலும், ஜேர்மன் கோமகன்களாலும் (Junkers - இவர்கள் ஜேர்மனியில் மட்டுமல்லாது பேர்சியாவிலும் தனி ஆளும் உரிமை பெற்றவர்கள்) வெற்றி பெற்றதன் விளைவாகவும் காட்டப்படுகிறது. சுருக்கமாக நாசிசம் ஓர் சிறுபான்மையினரின் கபடத்தனமெனவும், அது பெரும்பான்மை மக்களின் ஒத்துழைப்புடன் கட்டியெழுப்பப்பட்டதென்ற கருத்தையும் முன்வைக்கிறது இவ்வாறான விவாதம்.

இரண்டாவது கருத்து: நாசிசம் உளவியல் மட்டத்தில் மாத்திரம் விளக்கங் கொள்ள முடியுமென்றும், அதிலும் ஒரு படி மேலே போய் உளவியல் நுண்ஆய்வின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும் என்றும் சாதிக்கிறது. கிட்லர் ஓர் வெறியனாகவும் நியூரோட்டிக்காகவும் (Neurotic) இவரது சகாக்கள் இவருக்குச் சமனான பைத்தியங்களாகவும் மூளை குழம்பியவர்களென்றும் வலியுறுத்துகிறது. மம்போர்டின் விளக்கப்படி பாசிசத்தின் உண்மையான காரணங்களை மனிதனின் ஆன்மாவில் தான் மிஞ்சிய பெருமை, மற்றையோர்கள் வருத்தத்தில் மகிழ்வு, குரூரத்தன்மை போன்ற மனோவியல் கோளாறுகளை (Neurotic Disintergration) இவைகளில் காணமுடியுமேயல்லாது, ஜேர்மனியக் குடியரசின் கையாலாகாத் தன்மையிலோ அன்றேல் அதன் சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றியமைக்கும் தன்மையின்மையே எனக் கணக்கிட முடியாது.

எம்மைப் பொறுத்தவரை பொருளாதார அரசியல் காரணங்களை மாத்திரம் வலியுறுத்தும் விளக்கங்களோ, அன்றேல் முற்றும் முழுவதுமான மனோவியல் காரணங்களை மாத்திரம் முன்வைத்து விவாதிக்கும் போக்கோ ஏற்றுக்கொள்ள முடியாதவொன்று. நாசிசம் ஓர் உளவியல் பிரச்சினை. ஆனால், இதன் உளவியல் சார்பு காரணிகள் சமூக பொருளாதாரத்தினூடு தான் வளர்ச்சி பெறுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாசிசம் ஓர் பொருளாதார அரசியல்சார் பிரச்சினை. ஆயினும் மக்கள் திரளின் மீதான இதனது ஆதிக்கத்தை, மக்களை தன் பிடியினில் வைத்திருக்கும் குணாம்சத்தை உளவியலூடாகத்தான் புரிந்து கொள்ள முடியும். இக்கட்டுரையின் சாராம்ச நோக்கு நாசிசத்தின் உளவியல் தன்மைகள் பற்றிய பார்வை, மனிதரீதியான இதன் அடிப்படை. இவைகள் இரு பிரச்சினைகளை எம்முன் வைக்கின்றன. ஒன்று, இதனது அறைகூவலை ஏற்று கவரப்பட்ட மக்களின் குணாம்சங்கள். இரண்டு, இந்தக் கொள்கையின் உளவியல்சார் குணாம்சம் இம்மக்களைக் கவர்வதில் பெற்ற வெற்றி.

நாசிசத்தின் வெற்றிக்கு அடிப்படையாய் அமைந்த உளவியல் அடிப்படையை கவனத்தில் எடுத்துக் கொண்டால் இதில் (வெற்றியில்) செயற்பட்ட வித்தியாசமான காரணிகளைக் கண்டு கொள்ளலாம். மக்கள் திரளின் ஒரு பகுதி எந்தவித எதிர்ப்புமின்றி நாசிசத்திற்கு தலை வணங்கியது. ஆனால் இவர்கள் நாசிசத்தை விரும்புபவர்களாகவோ, அன்றேல் நாசிச அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்பவர்களாகவோ இருக்கவில்லை. மற்றைய பகுதியோ இப்புதிய சித்தாந்தமான நாசிசத்துடன் தங்களை ஆழமாக இனங்கண்டு கொண்டு இதனை அறைகூவியவர்களுடன் தங்களை மகிழ்வுடனும் தீவிரத்துடனும் இணைத்துக் கொண்டது. நாசிசத்திற்கு தலை வணங்கியும், அதைச் சித்தாந்தமாக விரும்பி ஏற்காமலும் அதன் நடவடிக்கைகளிலும் பங்கு பற்றா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலும் இருந்த முதலாவது குழுவில் தொழிலாளர் வர்க்கம், லிபரல் - கத்தோலிக்க பூர்சுவாக்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

அமைப்புரீதியில் அணிதிரண்டிருந்த தொழிலாளர் வர்க்கம் நாசிசத்தினை ஏற்றுக் கொள்ளாத எதிர்ப்பு நிலையைக் காட்டி நின்றிருந்தும் (இவ் எதிர்ப்பு நிலை நாசிசத்தின் தோற்றத்திலிருந்து 1933வரை காணக் கூடியதாக இருந்தது) இவர்களின் உள்ளார்த்தமான எதிர்ப்பு, இவர்களின் அரசியல் ஈடுபாட்டின் அடிப்படையிலான போராட்டக் குணாம்சம் என்பன இவர்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய தொன்றாகினும், அது வெளிப்படாமலே போயிற்று. எதிர்ப்பிற்கான மனோவலிமை மிகவேகமாகவே குலைந்து போயிற்று. ஆகவே நாசிச அரசிற்கும் அமைப்புக்கும் இவர்களுடாக வரக்கூடிய ஆபத்து கணக்கிலெடுக்க முடியாத சிறிய எதிர்ப்பாகப் போயிற்று. (ஓர் சிறிய குழு வீரியமாக நாசிசத்திற்கெதிரான போராட்டத்தை முடிவுவரை போராடியதையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும்) நாசிச அரசிற்கு எதிரான எதிர்ப்போ போராட்டமோ இன்றி தங்களைக் கையளித்ததற்கு உளவியல் ரீதியான காரணங்களாக, உணர்வு நிலையில் களைத்துப் போன தன்மை மற்றும் தங்களுக்குள்ளேயே முடங்கிப் போன தன்மை என்பன இனம் காணப்படுகின்றன. இந்தக் காரணங்கள் ஜனநாயக நாடுகளின் தனிமனிதத் தன்மையில் இன்றளவும் காணக்கூடியதாகவே இருக்கிறது.

இன்னுமொரு மேலதிக காரணமாக -ஜேர்மனியில் தொழிலாளர் வர்க்கத்தில் காணக்கூடியதாகவிருந்தது- 1918 இல் முதன்முதலில் வென்றெடுத்த புரட்சி கை நழுவிப் போனதையும் குறிப்பிடலாம். தொழிலாளர் வர்க்கம் முதலாம் உலக யுத்தத்திற்கு பிந்திய காலகட்டத்தில் முழுநம்பிக்கையுடன் சோசலிசத்தை மலரச் செய்வதற்கான முயற்சிகளில் இறங்கியிருந்த நேரம். ஆகக் குறைந்தளவு தங்கள் வர்க்கத்தின் அரசியல் பொருளாதார சமூக அந்தஸ்து நிலைமைகளில் மேம்பாடடைவதில் பெரும் நம்பிக்கையுடன் தலையெடுத்து நின்றிருந்தது. ஆனால், பல காரணங்களால் தொடராக பல தோல்விகளைச் சந்தித்ததால் மனமுடைந்து சோர்வு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. 1930இல் இதன் ஆரம்ப கால வெற்றியின் பலன்களை முற்றும் முழுவதுமாக இழந்த நிலையில், மனதால் சுருங்கிப் போயிருந்த தொழிலாளர் வர்க்கம் தங்கள் தங்கள் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்து, எந்தவிதமான அரசியல் அணிசேரல்களையும் அரசியல் நடவடிக்கைகளையும் சந்தேகக் கண்களுடன் பார்க்கத் தொடங்கியது. தாங்கள் எந்த அரசியல் கட்சிகளில் அங்கத்துவம் வகித்தார்களோ அவைகளில் அங்கத்தவர்களாகவே தொடர்ந்தும் இருந்து வந்தார்கள். மேலோட்டமாக இவைகளின் சித்தாந்தங்களில் நம்பிக்கை வைத்திருந்தாலும், மனதளவில் அரசியல் நடவடிக்கைகள் மீதான எவ்வித நம்பிக்கையுமற்றுப் போயிருந்தனர்.

நாசிச அரசின் மீது நம்பிக்கை வைத்திருந்தவர்களின் தொகை கிட்லர் ஆட்சிக்கு வந்தவுடன் இலட்சக்கணக்கில் அதிகரிக்கத் தொடங்கியது. கிட்லரின் ஆட்சியேற்றத்துடன் ஜேர்மனி ஒன்றாக இனம் காணப்பட்டது. ஆட்சியிலிருக்கும் கிட்லருக்கெதிரான போராட்டம் எதையும் ஜேர்மன் சமூகத்திலிருந்து தன்னைப் பிரித்துக் காட்டும் நடவடிக்கையாக ஜேர்மன் மக்கள் பார்க்கத் தொடங்கினர். மற்றெல்லா அரசியல் கட்சிகளும் ஒழித்துக் கட்டப்பட்டு நாசிசக் கட்சியே ஜேர்மனி என்றானபோது, இதற்கெதிரான போராட்டம் ஜெர்மனிக்கு எதிரான போராட்டமாயும் போயிற்று. ஓர் சாதாரண மனிதனுக்கு தனது சமூகத்தை விட்டுப் பிரிந்து தனிமை உணர்வுடன் அதே சமூகத்தில் வாழ்வது மிகவும் கடினமானது தான். ஒரு ஜேர்மன் பிரஜை, நாசிசத்திற்கு எவ்வளவு எதிர்ப்பாளனாக இருந்தும், தனது உணர்வுகளுடன் தனியனாக வாழ்வதா அன்றேல் ஜேர்மனியனாக வாழ்வதா என்ற நிலையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாயின் அவன் இரண்டாவதையே தேர்ந்தெடுப்பான். நாசிசத்திற் கெதிரான தாக்குதல்களில், நாசிசத்தை ஏற்றுக் கொள்ளாத ஜெர்மனியர்கள் கூட, அதனை விமர்சிக்கும் வெளிநாட்டவர்களுக்கெதிராக நாசிசத்தை ஆதரித்து குரல் கொடுத்த பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இவர்களைப் பொறுத்தவரை நாசிசத்திற்கெதிரான வாதங்கள் ஜேர்மனிக்கு எதிரான வாதங்கள். தனிமைப்பட்டுப் போகும் பயம் மற்றும் தார்மீக பலம் குன்றிப்போன நிலைமையில், எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வருகின்றதோ அக்கட்சி சமூகத்தின் பெருமளவு மக்களை தன்பக்கம் இழுத்துக் கொள்வதற்கு மேற்சொன்ன காரணங்கள் மிக உதவியாகவே அமையும். இதனை நாசிச அரசு தனது அரசியல் பிரச்சாரத்திற்கு முழுமையாகப் பாவித்துக் கொண்டது.

ஜேர்மனிக்கு எதிரான எந்தவித அபிப்பிராயங்களோ, அன்றேல், ஜேர்மனியர்களுக்கு எதிரான தப்பான பிரச்சாரங்களோ நாசிசத்துடன் தங்களை இனங்காணாதவர்களைக் கூட, ஜேர்மனியன் என்ற அடிப்படையில் நாட்டின் மீதான பற்றைக் கூட்டவே உதவி செய்தது. மனித சாராம்சம் நாட்டுப் பற்றிலும் பெரியது. இந்த உண்மை பல நாடுகளில் வெற்றி பெற்றும் ஒவ்வொரு தனிமனிதனும் வாழ்ந்த/ வாழ்ந்து கொண்டிருக்கும்/ வாழப் போகின்ற சமூகத்தில் மேற்கூறிய பிரச்சினை பற்றிய பார்வை மாறுமேயல்லாது, எவ்வளவுதான் வெற்றிகரமானதும் புத்திசாலித்தனமானதுமான பிரச்சாரத்தில் மாத்திரம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. கத்தோலிக்க பூர்சுவாக்களதும், லிபரல்களதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர் வர்க்கத்தினரதும் எதிர்மறையான பார்வையைப் பெற்ற நாசிசம் நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு மக்களான சிறு வியாபாரிகள், கலைசார் தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் மத்தியில் வரவேற்பைப்பெற்றது.

இவ்வர்க்கத்தின் பழைய தலைமுறை மந்தமான செயற்பாட்டை கொண்டிருக்க, இளம் தலை முறையினர் தீவிரமான நாசிப்போராளிகளாகவும் மாறினர். இவர்களைப் பொறுத்தவரை தலைமைக்கு கண்மூடித்தனமான அர்ப்பணிப்பு, அரசியல், இனரீதியான சிறு இனக்குழுக்கள் மீதான வெறுப்பு, நாசிசத்தின் வெற்றியின் மீதான வெறி, அடக்கியாளும் தன்மை, ஜேர்மன் மக்களின் உயர்வு, நோர்டிக் இனம் (Nordic Race) என்பன உணர்வு ரீதியாக இவர்கள் மேல் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இதுவே நாசிசக் கொள்கை மீது இவர்கள் மாறாத நம்பிக்கை வைக்கவும், நாசிப் போராளிகளாக இவர்கள் மாறவும் காரணமாக அமைந்தது.

நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு நாசிசக் கொள்கையால் கவரப்பட்டதற்கான காரணம் என்ன என்பதை இந்த வர்க்கத்தின் குணாம்சங்களினூடான காரணிகளால் கண்டறியலாம். இவர்களது வர்க்க குணாம்சம் மேல்தட்டு நடுத்தர வர்க்கம், தொழிலாளர் வர்க்கம், பூர்ஷ்வா வர்க்கம் போன்றோரின் குணாம்சத்திலிருந்து வேறுபடுகிறது. இன்னும் ஒரு படி மேலாக இவ்வர்க்கத்தின் வரலாறு முழுவதிலும் இந்தக் குணாம்சத்தைக் காணக்கூடியதாகவும் இருக்கிறது. பலசாலிகள் மீதான அபரிமித அபிமானம், பலவீனமானவர்கள் மீதான மாறாத வெறுப்பு, சின்னத்தனமான நடவடிக்கைகள், எதிர்ப்புணர்வு, மற்றும் உணர்வுகள், பணம் என்பவற்றைச் செலவு செய்வதில் வரைமுறையின்மை என்பவற்றோடு இவர்களது வாழ்க்கை நோக்கு குறுகலானதும், அந்நியர்களைச் சந்தேகித்தலும் வெறுத்தலும், தங்களது நேரடித் தொடர்புடையவர்கள் பற்றி குடைந்து குடைந்து அறிய ஆவலும் எரிச்சலும், இந்த எரிச்சலையே நியாயப்படுத்தும் குணமும் எல்லாமும் சேர்ந்து இவர்களது முழு வாழ்க்கையும் உணர்வு ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பற்றாக்குறையிலே கழிந்து விடுகிறது.

கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கக் குணாம்சம் தொழிலாளர் வர்க்கக் குணாம்சத்திலிருந்து வேறுபடுகிறதெனினும், தொழிலாளர் வர்க்கத்தின் குணாம்சங்களிலும் இவை இல்லாமலில்லை என்ற கருத்தைக் கொள்ளக் கூடாது. இந்தக் குணங்கள் கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தின் விசேட குணாம்சம். தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு சிறு பகுதியே இக்குணாம்சங்களை மிகத் தெளிவாக காட்டி நிற்கிறது. இக்குணாம்சங்களின் தீவிரத் தன்மையில் இரு வர்க்கங்களுக்குமிடையே வித்தியாசங்கள் இருக்கலாம். சில பொதுவான குணாம்சமாகவும் காணப்படுகிறது. உதாரணமாக, அதிகாரத்திற்கு மேலதிக மரியாதை கொடுத்தல், செட்டுத்தன்மை என்பன. மறு கையிலோ உத்தியோகத்தர்களும், உடலுழைப்பாளிகளும் வர்க்க குணத்தில் கிட்டத்தட்ட ஒருவரை ஒருவர் நெருங்கியே காணப்படுகின்றனர்.

பழைய நடுத்தர வர்க்கம் மாத்திரம் இதற்கு விதிவிலக்காக அமைந்தது. ஏனெனில், ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் இது பங்கு பெறாமல் போனதுடன் இதன் வளர்ச்சியினால் பாதிப்பையே அடைந்தது.

நடுத்தர வர்க்கத்தின் கீழ்மட்ட மக்களின் வர்க்க குணங்கள் 1914 போரின் முந்திய காலகட்டத்தில் ஒரே மாதிரியாக இருந்தது எவ்வளவு உண்மையோ, அதேபோல் போரின் பின்காலகட்ட நடவடிக்கைகள் மேலும் இக்குணங்களைக் கூர்மையடையச் செய்தது. நாசிகளின் அறைகூவல் இங்குதான் ஏற்பைக் கண்டது. அதாவது இவ்வர்க்கத்தின் அடிபணிவிற்கானதாகவும் ஆதிக்கத்திற்கான வெறியும் நாசிகளின் கொள்கையுடன் நன்றாக ஒத்துப்போயின.

1918 ஜேர்மன் புரட்சிக்கு முந்திய காலத்திலேயே நடுத்தர வர்க்கத்தின் கீழ்மட்டத்தின் சரிவு நிகழத் தொடங்கிவிட்டது. ஆயினும், இந்தச் சரிவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாததற்குப் பல காரணங்கள் உள்ளன. ஏனெனில், இவ்வர்க்கத்தினை நிலை நிறுத்தும், முட்டுக்கொடுக்கும், காரணிகளும் இங்கே காணப்பட்டன. முடியாட்சியின் அதிகாரம் யாராலுமே எதிர்க்க முடியாததொன்றாக இருந்தது. இதனுடன் தங்களை இனம் கண்டுகொண்டும், இதனுடன் சார்ந்தும் இருந்த நடுத்தர கீழ்த்தட்டு வர்க்கம் தங்களைப் பாதுகாப்பானவர்களாகவே கண்டு கொண்டது. அத்துடன் சமயத்தின் ஆளுமை, பாரம்பரிய ஒழுக்கநெறிகள் என்பனவும் இவ்வர்க்கத்தில் ஆழமாக வேரூன்றியவை. குடும்பம் என்ற கட்டமைப்பு இன்னும் குலையாத நிலை. எதிர்ப்புகள் காட்டும் வெளியுலகத்தில் நின்று அமைதியுடன் அடைக்கலம் புகுந்து கொள்ள வெகு பொருத்தமான குடையாக குடும்பம் தொழிற்பட்டு வந்தது. தனிமனிதனொருவன் தான் ஓர் நிலையான சமூக, கலாச்சாரத்தின் அங்கத்தவன் என்ற எண்ணமும், இதில் தனக்கு குறிப்பிட்ட இடமுண்டு என்ற எண்ணமும் அவனை ஆட்கொண்டிருந்தது. நடை முறையில் இருக்கும் அதிகாரத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளல், அதற்கு உண்மையாக இருத்தல் என்பன தன்னைத்தானே ஒறுக்கும் இம்மனிதனுக்கு எளிதான காரியமே. ஆயினும் தன்னை முற்றும் முழுவதுமாக அர்ப்பணிக்காது தனது தனித்தன்மையைச் சிறிது பாதுகாத்து அதில் பெருமையும் கொள்பவன் அவன்.

சுருக்கமாக இவனது பொருளாதார நிலைமை சுயநம்பிக்கையையும் பாதுகாப்பு உணர்வையும் கொடுக்கக் கூடியளவிற்கு உறுதியானதாக




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விருந்தது. தனி மனிதனாகப் பெற முடியாத பாதுகாப்பு உணர்வினையும் நிச்சயத் தன்மையையும் இவன் சார்ந்திருந்த ஆளும் அமைப்பின் மூலமும் உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்தது.

போருக்குப் பிந்திய காலங்கள் இந்நிலைமையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களைக் கொண்டு வந்தன. முதலாவதாக 'பழைய நடுத்தர வர்க்கத்தினரின்' பொருளாதார வீழ்ச்சி ஈடு கொடுக்க முடியாத அளவிற்கு வேகமாகச் சரிவு கண்டது. இந்தச் சரிவு பணவீக்கத்தினால் மேன்மேலும் தீவிரமாகி, 1923இல் முற்றும் முழுவதுமாக இவ்வர்க்கத்தின் பல வருடச் சேமிப்பைக் கூடக் கரைத்து விட்டது.




1924 - 1928 கால இடைவெளியில் நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு மக்கள் பொருளாதார ரீதியில் சில முன்னேற்றங்களையும் புதிய நம்பிக்கையையும் பெற்றிருந்தும், 1929இன் பொருளாதாரப் பெருவீழ்ச்சியானது எல்லாவற்றையுமே இல்லாது ஒழித்து விட்டது. பணவீக்க காலகட்டத்தில் நடுத்தர வர்க்க தொழிலாளருக்கும் மேல்தட்டு மக்களுக்கும் இடையில் சிக்குண்டு எந்தவித பாதுகாப்புமில்லாத சமூகத் தட்டாக நசுக்கப்பட்டபடியால், இவர்களது இழப்பும் வேதனையும் மற்றவர்களைவிட அதிகமாகவே இருந்தது.

இந்தப் பொருளாதாரக் காரணிகளை விட, உளவியல் தளக் காரணிகளும் நிலைமையை மோசம் பெறச் செய்தன. போரின் தோல்வியும் முடியரசின் வீழ்ச்சியும் ஒரு காரணம். ஏனெனில், அரச குடும்ப ஆட்சிமுறை - அதன் அரசு என்ற தளத்தினிலேயே குட்டி பூர்சுவாக்கள் தங்கள் வாழ்க்கையை உளவியல் பூர்வமாக இனங் கண்டிருந்தார்கள். எனவே இந்த வீழ்ச்சி, அரச குடும்பங்களின் சக்தியற்ற நிலை என்பன இவனது வாழ்க்கைத் தளத்தையே ஆட்டங் காணச் செய்துவிட்டது. முடிக்குரிய அரசனை வெளிப்படையாகவே கேலி செய்யக் கூடுமாயின், அதிகாரிகள் தாக்கப்படக் கூடுமாயின், நாடு தன்னை மாற்றிக் கொண்டு 'சிவப்புக் கலகக்காரர்களை' மந்திரிகளாக ஏற்க வேண்டுமாயின், குதிரைக்குச் சேணங் கட்டுபவன் பிரதமராக வரமுடியுமாயின்... இந்தச் சிறிய மனிதன் யாரை நம்புவது. இவனோ அரச குடும்பம் - அதன் அரசு போன்ற அமைப்புக்களை எந்தவித மறு கேள்வியுமில்லாமல் பக்தி விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டிருந்தவன். இவைகளெல்லாம் இப்போது குலைந்து போயின. இவன் எங்கே போவான்?

பணவீக்கமும், பொருளாதார ரீதியாக மாத்திரமல்லாது உளவியல் ரீதியாகவும், தாக்கங்களைக் கொண்டு வந்தது. சேமித்து பணம் சேர்க்கும் கொள்கைக்கும் நாட்டின் அரசின் ஆளுமைச் சக்திக்கும் பெரிய அடியாக விழுந்தது. ஒருவனது பல வருட கால சேமிப்பு - அதுவும் சிறுகச் சிறுக பல சிறிய சிறிய மகிழ்வுகளைக் கூட தியாகம் பண்ணிச் சேமித்த சேமிப்பு - அவனது பிழையில்லாமல் அவனது கை நழுவிப் போகுமாயின், சேமிப்பதில்தான் என்ன லாபம்? அரசு தனது வாக்குறுதிகளை - பணத்தினில், கடன் பத்திரங்களில் பதிப்பித்து இருந்த தனது வாக்குறுதிகளை - முறித்துக் கொண்டு விட்டது இப்போது யாரை நம்புவது?

இவ்வர்க்கத்தின் பொருளாதார நிலைமை மாத்திரமன்று, இதன் சமூக அந்தஸ்தும் போரின் பின் வீழ்ச்சி கண்டது. போரின் முந்தைய காலத்தில் ஒருவன் தன்னை தொழிலாளியிலும் பார்க்க ஒரு வகையில் மேன்மையானவனாக கணித்துக் கொள்ளக் கூடியதாகவும் அவ் உணர்வினைத் தன்னுள் வைத்திருக்கக் கூடியதாகவுமிருந்தது. புரட்சிக்குப் பின் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக அந்தஸ்து குறிப்பிடத்தக்களவு உயர்ந்தது. அதே வேளையில், நடுத்தர வர்க்கத்தின் கீழ்மட்டச் சமூகத்தின் சமூக அந்தஸ்து குறிப்பிடத்தக்களவு கீழிறங்கியதும் உண்மை. சமூகத்தட்டில் எனக்குக் கீழே இவன் என்று பார்த்துக் கொள்ள யாருமில்லாமல் போனார்கள். இதுவே ஒரு காலத்தில் சிறிய கடை வியாபாரிகள் போன்றோரின் விசேட சமூக உரிமையாக இருந்தது.

இவைகள் அனைத்தும், மற்றும் நடுத்தர வர்க்கத்தின் மிக முக்கியமான குடும்பம் என்ற பிடியும் சின்னாபின்னப்பட்டுப் போயிற்று. போருக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிந்திய காலத்தில் எந்த நாட்டையும் விட ஜெர்மனியில் நடுத்தர வர்க்கத்தின் ஒழுக்க மதிப்பீடு, குடும்பத் தலைவனின் அதிகாரம் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதெனக் கொள்ளலாம். இளைய தலைமுறையினர் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப நடந்து கொண்டனர். முன்னரைப் போல், தாய் தந்தையரின் விருப்பு வெறுப்புக்களை கவனத்தில் கொள்ளவில்லை. இதற்கான காரணங்கள் பலவாகவும் சிக்கலானதாகவும் இருப்பதால் அதனை இங்கு நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆயினும் சில காரணங்களை இங்கு தருகிறேன். பழைய சமூக அதிகாரக் குறியீடுகளான அரசு - முடியாட்சி முறை என்பவற்றின் வீழ்ச்சி தனிப்பட்ட முறையில் குடும்பத்தின் அதிகாரிகளான தாய் தந்தையர்களையும் பாதித்தது. பெற்றோர்களால் எந்த அதிகாரங்களை - அதாவது முடியாட்சி அரசு போன்றவற்றை - மதிக்க கற்பிக்கப்பட்டார்களோ, அதுவே பலமிழந்து போனபின் பெற்றோர்களும் தங்களது அதிகாரத்தையும், கௌரவத்தையும் இழந்து போயினர். இன்னுமொரு காரணியாக, பணவீக்கப் பொருளாதாரச் சீர்குலைவால் திகைத்து நிலை குலைந்து செய்வதறியாது நின்ற பழைய தலை முறையினரிலும் பார்க்க, புத்திக் கூர்மையுடைய புதிய தலைமுறையினர் தங்களை நிலைமைக்கேற்ப இயல்பாக்கிக் கொண்டனர். இவ்வாறாக, புதிய தலைமுறையினர் பழைய தலைமுறையினரின் மீதான பார்வையை மீளமைத்து, உயர்வு மனப்பான்மையை தங்களுக்குள் தக்கவைத்துக் கொண்ட பழைய தலைமுறையினரின் படிப்பினைகளைப் பெரிதாக மதிப்பதற்கு முனையவில்லை. இவற்றிற்கெல்லாம் சிகரமாகப் பொருளாதார சீர்குலைவு பழைய தலைமுறையினரைத் தங்கள் குழந்தைகளின் பொருளாதார எதிர்காலத்தின் பாதுகாவலர்கள் என்ற நிலைமையை இல்லாதொழித்து விட்டது.

பழைய தலைமுறையினர் மத்தியதர வர்க்கக் கீழ்தட்டு கசப்பானவர்களாகவும் சிடுசிடுப்பானவர்களாகவும் மாறினர். ஆயினும் இவர்களது உணர்வுகளைப்போல் தீவிரமானவர்களாக அல்லாமல், அடங்கியவர்களாகவே இருந்தனர். இளைய தலைமுறையினரோ செயற்பாடுகளுக்காகத் துடித்துக் கொண்டிருந்தனர். தங்கள் தாய் தந்தையரைப் போன்ற வாழ்நிலையின் பொருளாதார நிலைமையும் இல்லாது போனபின்பு என்ன செய்யலாம் என்ற கேள்வி குடையத் தொடங்கியது. தொழில் முறைக் கல்வியின் பின்னான வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களும் பெரிதாக இல்லை. ஓர் வழக்கறிஞனாகவோ, வைத்தியனாகவோ ஆவதும் அவ்வளவு சுலபமாக இல்லை. போரில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் - குறிப்பாக பல இளைய இராணுவ அதிகாரிகள் - பல வருடங்களாகவே கட்டளையிடும் அதிகாரத்தைக் கொண்டிருந்தவர்கள், தங்கள் ஆளுமையை நிலைநாட்டிப் பழகியவர்கள் தங்களை மீளமைத்துக் கொண்டு எழுதுவினைஞர்களாகவோ, விற்பனைப் பிரதிநிதிகளாகவோ வர விரும்பவில்லை.

தீவிரமான சமூக காழ்ப்புணர்வு நிலை அதிகரிப்பானது வடிகாலைத் தேட... அதுவே சோசலிசத்தின் (National Socialism) முக்கிய காரணியாக அமைந்தது. தங்களது பொருளாதார சமூக மாற்றங்களில் தனிப்பட்ட முறையில் கவலை கொள்ளாத பழைய நடுத்தர வர்க்கம் இவைகளினூடாக தங்கள் நாட்டின் தலைவிதியை நினைத்துக் கவலைப்படத் தொடங்கினர். தேசத்தின் தோல்வியும் அதன் பின்னான ஒப்பந்தமும் (Treaty Of Versailles) தோல்விகளின் அடையாளமாகப் பார்க்கப்பட்டது.

1918 இல் வெற்றி பெற்றவர்கள் ஜெர்மனியை எவ்வாறு நடத்தினார்கள் என்ற காரணமே நாசிசத்தின் எழுச்சிக்குக் காரணமாக விளங்கியது என்று பரவலாக ஓர் கருத்துள்ளது. இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஜெர்மனியர்களில் பெரும்பாலானோர் இச்சமாதான ஒப்பந்தம் பாரபட்சமானது என்றே கருதினர். நடுத்தர வர்க்கம் இவ் ஒப்பந்தத்திற்கு எதிரான உணர்வுகளைக் கொண்டிருந்தனர். தொழிலாளர் வர்க்கமோ இதனை அவ்வளவாக எதிர்க்கவில்லை. பழைய அரசுக்கு எதிரானவர்களாகவே இருந்த இவர்கள் போரின் தோல்வி அரசின் தோல்வி என்றே பார்த்தனர். அத்துடன் தாங்கள் நன்றாகவே போரிட்டோம், இதனால் வெட்கப்பட ஒன்றுமில்லை என்றும் கருதினர். மறுபுறத்திலோ புரட்சியின் வெற்றி முடியரசின் தோல்வியில் தான் என்பதும் தெரிந்ததே. எனவே முடியரசின் தோல்வி இவர்களுக்குப் பொருளாதார, அரசியல், மனித சாரம்ச இலாபங்களை வழங்கியது. இச்சமாதான ஒப்பந்தத்திற்கு எதிரான உணர்வுகள் மத்திய தரவர்க்கத்தின் கீழ்த்தட்டில் தளங்கொண்டிருந்தன. இதுவே தேசிய தோல்வியாக இவர்கள் காட்டிக் கொண்டனர். இதனை நியாயப்படுத்தவே, தங்களது வர்க்கத்தின் தோல்வியை இவர்கள் தேசத்தின் தோல்வியாக முன்னிலைப்படுத்தினர்.

இவ்வாறான முன்னிலைப்படுத்தல் கிட்லரின் தனிப்பட்ட வளர்ச்சியில் காணக் கூடியதாகவிருக்கிறது. இவர் நடுத்தர வர்க்கத்தின் கீழ் மட்டத்திற்கு ஓர் எடுத்துக் காட்டும் கூட. எதிர்காலத்தில் எந்தவித வெற்றிக்கும் வாய்ப்பற்ற 'யாரோ' சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டவர் என்ற உணர்வைத் தக்க வைத்துக் கொண்டவர். தனது புத்தகமான Mein Kampf (எனது போராட்டம்)இல் தன்னைப்பற்றி நிறைய வேளைகளில் யாரோ (Nobody), எவ்விதத்திலும் 'அறியப்படாதவர்' (Unknown Man) என்ற பதங்களின் மூலம் தனது இளமைக்கால நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளார். இது இவரது சமூக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையின் தார்ப்பரியமாயிருந்தும், அதனை தேசியத்தின் நிலைமையாக உருவகப்படுத்த திறமையான வாதங்களை முன்வைத்தார். ஜெர்மனிய சாம்ராச்சியத்திற்கு (Reich) வெளியே பிறந்தவராயினும், சமூக தேசிய அளவில் தான் விடுபட்டுப் போனவரில்லை என்ற உணர்வைக் கொண்டிருந்ததுடன் ஜெர்மன் சாம்ராச்சியத்தின் மைந்தர்கள் மீண்டும் அதனிடம் திரும்பி வருவதைப் பெருமையாகவும் சமூகத்தின் பாதுகாப்பிற்கு உகந்ததென்றும் கருதினார்.

பழைய நடுத்தர வர்க்கத்தின் தற்போதைய கையாலாகாத்தன்மை, என்ன செய்யலாம் என்ற கவலை, சமூகத்திடமிருந்து தனிமைப்பட்டுப்போன நிலைமை என்பனவற்றின் தாக்கங்களிலிருந்து வெடித்த அழிவுத்தன்மை மாத்திரம்தான் நாசிசத்தின் உளவியல் காரணிகளல்ல. நாட்டுப்புற விவசாயிகள் நகர்ப்புறக் கடன் கொடுப்பாளர்கள் மேல் வெறுப்புற்றிருந்தார்கள். தொழிலாளர்கள் ஏமாற்றமும் சோர்வு நிலையும் அடைந்திருந்தனர். 1918இன் முதல் தொழிலாளர் வெற்றிக்கும் பின்னான தொடரான அரசியல் பின்னடைவும் தொழிலாள தலைமை தொலைநோக்கு இழந்து போராட்டத்தை முன்னெடுக்க வக்கற்று நின்ற நிலைமையும் நிலவின. ஜெர்மன் மக்களில் பெரும்பாலானோர் தனிப்பட்ட முறையில் தாங்கள் கையாலாகாதவர்கள், சக்தியற்றவர்கள் என்ற உணர்வின் பிடியினுள்ளேயே சிக்கிக் கிடந்தனர். இந்த நிலைமை ஏகபோக முதலாளித்துவத்தின் (Monopolistic Capitalism) இயல்பான நிலை என்பது எனது விளக்கம்.

இந்த உளவியல் நிலைமைகள் நாசிசத்தின் 'தோற்றுவாய் காரணிகள் அல்ல'. இவை மனிதாசார அடிப்படையை நாசிசத்தின் தோற்றத்திற்கு அமைத்தன, இக்காரணிகளின்றி நாசிசம் தோன்றியிருக்க மாட்டாது. ஆயினும் நாசிசம் பற்றிய முழுமையான எந்த ஆய்வும் அதன் தோற்றம், வெற்றி என்பவற்றைப் பகுத்தறியும் போது, அந்நிலையில் நிலவிய பொருளாதார, அரசியல், அத்துடன் உளவியல் நிலைமைகளை அடிப்படையாக வைத்தே ஆராயப் படவேண்டும். இக்கட்டுரையின் குறிக்கோள் உளவியல் ஆய்வாக இருப்பதால் அதனில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. ஆயினும் பெருந்தொழில் நிறுவனங்களும், கடனில் மூழ்கிப்போன ஜெர்மனிய இளம் கோமகன்களும் (Junkers) - இவர்கள் ஜெர்மனியில் மாத்திரமல்லாது பெர்சியாவிலும் தனி ஆளும் உரிமை பெற்றிருந்தனர்- கிட்லருக்கு தங்கள் ஆதரவைக் கொடுத்திராவிடில் கிட்லர் ஒருபோதுமே வெற்றியடைந்திருக்க மாட்டார். அவர்கள் நிலைமையில், பொருளாதார அடிப்படை தான் உளவியல் காரணிகளைவிட மேலோங்கி நின்றது.

இந்தச் சொத்துரிமை பெற்ற மேற்தட்டு வர்க்கம் பாராளுமன்றத்தில் 40வீத சோசலிச கம்யூனிச பிரதிநிதிகளுக்கு எதிராகப் போராட வேண்டியிருந்தது. இந்த 40வீத பிரதிநிதிகளுமே சமுதாயத்தின் சமகால நடைமுறையின்மீது அதிருப்தி கொண்ட சமூகத்தின் பிரதிநிதிகள், ஜெர்மனிய முதலாளித்துவத்தின் அதிபலம் பொருந்திய பிரதிநிதிகளுக்கு எதிரானவர்கள். இந்தக் குழுவினுள்ளேயே நாசிசத்தின் ஆதரவாளர்களும் அதிகரிக்கத் தொடங்கினர். ஜெர்மன் முதலாளித்துவ அசுர பலத்திற்கு எதிரானவர்கள் என்ற வகையிலேயே நாசிச ஆதரவாளர்கள் - இந்த 40 வீதத்துள் - இருந்தனர், அத்துடன் அதிகரித்தும் வந்தனர். ஓர் பாராளுமன்ற அமைப்பு முறையில் தங்கள் சார்பான பொருளாதாரத்தினை எதிர்க்கும் தன்மை பிரதிநிதித்துவ அளவில் அதிகரித்திருந்ததானது மேற்தட்டு வர்க்கத்திற்கு அபாய அறிவிப்பாகப் பட்டது.

பெருந்தொழில் நிறுவனர்கள் அரைநிலப் பிரபுக்களின் விசேட உரிமைகளைப் பாதுகாக்க பாராளுமன்ற விதிமுறைகளை மாற்றியமைக்க முடியாத நிலையில் ஜனநாயகம் இங்கு சரியாக நடைமுறையில் இல்லை எனக் கூறினர். உண்மையிலேயே ஜனநாயகம் சரியான நடைமுறையில்தான் இருந்தது. ஜெர்மனிய சமூகத்தின் எல்லா வர்க்க மக்களின் பிரதிநிதிகளும் பாராளுமன்ற நடைமுறையில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பினையும் போதிய ளவு பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருந்தனர். ஆகவே ஜனநாயகம் மிக நன்றாகவே செயல் நிலையில் இருந்ததென்று தான் கூறவேண்டும்.

மேட்டுக்குடி பிரதிநிதிகள் நாசிசம் தங்களுக்கெதிரான மற்றைய வர்க்கங்களின் பகையுணர்வினை வேறு பக்கம் திருப்பி விடுமென்றும் அதே வேளையில் தேசத்தின் திமிறும் தன்மைக்கு வடிகாலமைத்துச் சாந்திப்படுத்தி தங்களின் பொருளாதார சேவைக்கானதாக்கும் எனவும் நம்பினர். இந்தக் கணிப்பில் பெரும்பான்மையான பகுதி சரியாகவும் சிறிய பகுதி பிழையாகவும் போயிற்று. கிட்லரும் அவரது ஆட்சியாளர்களும் மற்றவர்களின் கட்டளையை ஏற்கும் நிலையில் இல்லாததால், முந்தைய ஆளும் வர்க்கம் இவர்களுடன் தங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியும், சில வேளைகளில் பணிந்து போகவும் வேண்டியிருந்தது. நாசிசம் பொருளாதார ரீதியில் எல்லா வகுப்பினருக்குமே இழப்புத் தன்மையையே கொண்டு வந்தது. ஆனால், மிகப் பலம் வாய்ந்த ஜெர்மனியின் பெருந்தொழில் குழுவினருக்கு மாத்திரம் செவிலித்தாயாக இருந்தது. நாசிசம் முன்னைய ஜெர்மனின் முடியாட்சியை அடியொற்றியதாக, முடியாட்சியின் வீழ்ச்சிக்குப் பின் அது விட்ட இடத்திலிருந்து தனது ஆட்சியை தொடர்ந்தது. (ஜெர்மன் குடியரசு எந்த விதத்திலும் ஜெர்மன் ஏகபோக முதலாளித்துவத்தின் (German Mono-polistic Capitalism) வளர்ச்சிக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடையாக அமையவில்லை. மாறாக, அதனைத் தனது வழிகளில் விருத்தியே செய்தது.)

இந்த இடத்தில் வாசகர்களிடம் ஓர் கேள்வி எழாமல் போகாது. 'பழைய' நடுத்தர வர்க்கம்தான் நாசிசத்தின் உளவியற் தளமாக அமைந்தது என்ற கூற்றுக்கும், நாசிசம் ஜெர்மன் முதலாளித்துவ நன்மை கருதி உழைத்தது என்ற கூற்றுக்கும் இடையிலான முரண்பாட்டுத் தொனியை எவ்வாறு ஒருவர் சமநிலைப்படுத்தி புரிந்து கொள்வது? என்பது தான் அது.

போருக்கு முந்தைய காலத்தில் நடுத்தர வர்க்கம் - குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு - முதலாளித்துவத்தினால் பயமுறுத்தப்பட்டு வந்தது. இதனால், இவ்வர்க்கத்தின் எதிர்காலம் பற்றிய பதட்ட நிலைமை பயத்தை வெளிக்கொணர்ந்தது. இந்தப் பயம் கலந்த நிலைமையில் இவ்வர்க்கத் தட்டு தன்னை எந்தச் சக்தியிடமாவது முழுமையாகக் கையளிக்கவும், அதிகாரமற்றவர்கள்மீது தங்கள் அதிகாரத்தை வளர்த்துக் கொள்ளவும் துடிப்புடன் காத்திருந்தது. இந்த உணர்வை முற்றும் முழுவதுமான இன்னொரு வர்க்கம் தனக்குச் சார்பான அரசை அமைக்கவும், அதன் மூலம் தன் வர்க்க சார்பு நன்மைகளைப் பெறவும் பயன்படுத்திக் கொண்டது. கிட்லர் இவ்வரையறைக்கெல்லாம் மிகக் கச்சிதமாகப் பொருந்தி வந்தார். மனக் கசப்பு நிறைந்த, வெறுப்பு மிக்க குட்டி பூர்சுவா குணநலன்களை இவர் கொண்டிருந்தார். இந்த நிலையையே மத்தியதர வர்க்கத்தின் கீழ்த்தட்டு தனது சமூகக் குணமாகக் கொண்டிருந்ததால் இலகுவில் இவ்வர்க்கம் தன்னை கிட்லருடன் இனங்கண்டு கொண்டது. உணர்வு பூர்வமாக சமுதாய நிலையில் ஓர் சந்தர்ப்பவாதியைப் போல் ஜெர்மனிய இளங்கோமகன்களுக்கும் பெருந்தொழில் துறையாளருக்கும் தங்கள் சேவையை அர்ப்பணிக்கக் காத்துக் கிடந்தது.

ஆரம்பத்தில் கிட்லர் நடுத்தர வர்க்கத்தின் இரட்சகனாகத் தன்னைக் காட்டிக் கொண்டார். தொடர் கடைகள் (Departmental Stores) வங்கியின் வர்த்தக முதலின் பலம் என்பவற்றை நிர்மூலமாக்குவேன் என சூளுரைத்தார். ஆனால், வரலாறு துல்லியமாகவே காட்டுகிறது - இவையெல்லாம் வெற்று வாக்குறுதிகள் என.' எனினும் இதை விட்டுவிட்டாலும் நாசிசம் ஓர் தெளிவான அரசியல் பொருளாதாரக் கொள்கையை கொண்டிருக்கவில்லை. நாசிசம் உண்மையிலேயே தீவிரத்தன்மை கொண்ட ஓர் சந்தர்ப்பவாதம் என்பதைப் புரிந்து கொள்வது மிக முக்கியம். இதில் கவனிக்க வேண்டியது இன்னும் ஒன்று உள்ளது. வழமையில் சமூக வளர்வு முறையில் இலட்சக்கணக்கான குட்டி பூர்சுவாக்கள் அதிகாரத்தையோ பணத்தையோ சம்பாதித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வெகு குறைவாகவே காணப்பட்டது. நாசிச ஆட்சியின் உள்வட்டத்தினர் 'உயர்குடி'யினரிடமிருந்து பெருவாரியான செல்வத்தையும் சமூக அந்தஸ்தினையும் தங்களுக்கென பறித்தெடுத்துக் கொண்டனர். நாசிச இயந்திரத்தினுள் வாங்கப்படாதவர்கள் யூதர்களிடமும், அரசியல் பகைவர்களிடமிருந்தும் பறித்தெடுக்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொண்டனர். மிகுதியான வர்களோ முன்னரிலும் பார்க்க எதுவித புதிய நலன்களையும் பெறாவிடினும் நாசிசச் சித்தாந்தம் அரங்கேற்றிய வக்கிரக் கூத்தின் மூலம் தாங்கள் உலகின் உயர்ந்த குடி என்ற உணர்வு அவர்களுக்கு மன நிறைவை அளித்தது. தங்களது பொருளாதார, கலாச்சாரம் வளர்ச்சிப் போக்கில் முன்னேறுகின்றது என்று இவர்கள் நினைத்துக் கொண்டனர்.

இதுவரையில் சமூக, பொருளாதார மாற்றங்கள் சமூகத் தட்டுகளில் எவ்வாறு நிகழ்ந்தன எனப் பார்த்தோம். குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் படிப்படியான வீழ்ச்சி ஏகபோக முதலின் ஆதிக்க வளர்ச்சி என்பன ஆழமான உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தின. இவ்உளவியல் தாக்கங்கள் வளர்த்தெடுக்கப்பட்டன, அல்லது அரசியல் சித்தாந்த ரீதியாக நெறிப்படுத்தப்பட்டன. 16ம் நூற்றாண்டில் எவ்வாறு மத ரீதியான சித்தாந்தங்கள் தொழிற்பட்டனவோ, அவ்வாறே இக்காலகட்டத்திலும் இவ் அரசியல் உணர்வு நெறிப்படுத்துகை அதே வர்க்கத்தின் முந்தைய பொருளாதார நல இருப்புக்களுக்கு எதிரானதாகவே தொழிற்பட்டது. நாசிசம் நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு மக்களின் உணர்வு அடிப்படையில் புத்துயிர்ப்பை அளித்து, சமூகப் பொருளாதாரத் தளத்தில் அதன் முந்தைய நிலையிலிருந்து சரிவுறக் காரணியாக அமைந்தது. நாசிசம் இவ்வர்க்கத் தட்டின் உணர்வினை அணிதிரட்டி ஜெர்மன் முதலாளித்துவத்தின் பொருளாதார அரசியல் இலாப நோக்கின் முக்கியமான காரணியாகப் பயன்படுத்திக் கொண்டது.

இனி, கிட்லரின் குணாம்சங்களை சிறிது பார்ப்போம். அவரது படிப்பினைகள், நாசிச அமைப்பு என்பன 'ஆட்சியாதிக்கக்' கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. இதுவே ஏறத்தாழ நாசிச அறைகூவலை ஏற்றுக்கொண்ட மக்களின் சமூகப் பண்பாகவும் இருந்தது. கிட்லரின் சுயசரிதை ஆட்சியாதிக்கக் கொள்கைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. அது தவிர, நாசி இலக்கியங்களில் முதன்மைப் பிரதிநிதி என்ற கணிப்புமிருக்கிறது. எனவே, இதனை எனது ஆய்வின் முதன்மை ஆதாரமாக எடுத்துக் கொள்கிறேன்.

ஆட்சியாதிக்கத்தின் சாராம்ச குண இயல்பாக சாடிச மசோகிச சமகாலப் பிரசன்னம் விபரிக்கப்படுகிறது. மற்றையவர்கள் மீது அளவற்ற அதிகாரத்தை நிலைநாட்டும் நோக்கமும், அவ் அதிகாரம் பிறரின் அழிவுத் தன்மைக்கு காலாயிருக்கும் போக்கினையும் சாடிசம் எனக் கணிக்கின்றனர். மசோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிசம் ஒரு மாபெரும் சக்தியினுள் தன்னை அர்ப்பணித்து, அச்சக்தியின் பலத்தில் அதன் புகழினில் பங்கேற்று மகிழ்வதெனக் கருதப்படுகிறது. இவ்விரு குணஇயல்புகளுமே தனிமைப்படுத்தப்பட்ட ஓர் மனிதன் - சமூகத்தில் தனியனாக நிற்பதற்கான பலமில்லாமையால் - சமூக இணைவாழ்வு உற வினை ஏற்படுத்தி, தனது தனிமையைப் போக்கும் தேவையின் விளைவாக அமைகிறது.

ஆளுமைக்கான சாடிச ரீதியான ஆவல் கிட்லரின் 'எனது போராட்டம்' (Mein Kampf) என்ற புதத கத்தில் பல தடவைகள் வெளிப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஜெர்மன் மக்களின் மீதான கிட்லரின் வெறுப்பும், 'அன்பும்' சாடிசத்திற் கேயுரிய ஓர் குணாம்சம். அது போலவே, இவரது அரசியல் எதிரிகள் மீது செலுத்திய அராஜகமும் சாடிசத்தின் முக்கியமான குணாம்ச வெளிப்பாடாக இருந்தது. அவர் தனது ஆளுமையின் கீழ் இருக்கும் மக்களின் திருப்தி பற்றிக் குறிப்பிடுகையில் "அவர்களுக்குத் தேவையானதெல்லாம் வலியவர்களின் வெற்றியும், நலிந்தவர்களின் அழிவு அன்றேல், வரைமுறையற்ற அர்ப்பணிப்பும்." ஓர் புழுவைப் போல்... தன்னிலும் வலிவு குறைந்தவர்களை தன் ஆளுமையின் கீழ் வைத்துக் கொள்ளாது, மாறாக தன்னை முழுமையாக வலியவருக்கு அர்ப்பணித்துக் கொள்வது என்பதாகும். இவ்வாறு மக்கள் ஆளுபவனை நேசிக்கிறானே ஒழிய ஆளுமைக்கு உட்படுபவனையல்ல. எந்தவொரு சித்தாந்தம் தலைவனைத் தவிர வேறொருவரையும் தலைமைப் பதவிக்கு ஊடுருவ விடாதிருக்கின்றதோ அந்தச் சித்தாந்தத்தை உள்ளார உளத்திருப்தியுடன் நேசிப்பார்கள். பரந்த சுதந்திரம் இவர்களுக்கு ஒரு பாரமாகவே அமையும். அவ்வாறான சுதந்திர அமைப்பில் இவர்கள் அடிக்கடி திசையறியாது தனது சுதந்திரத்தினை என்ன செய்வதென்று தெரியாது திகைப்பதுடன், தான் தனிமைப்பட்டுப் போனதாக உணர்ந்து நிற்பர். இவர்கள் தங்கள் உணர்வுகள் எவ்வாறு கேலிக்கிடமான வகையில் கையாளப் படுகின்றது, மழுங்கடிக்கப்படுகின்றது என்பதை உணரார். மனித சாராம்ச ரீதியான சுதந்திரம் இவர்களது வாழ்முறையில் எட்டியும் பார்க்காத அளவிற்கு தடைசெய்யப்பட்டு, (இவர்கள்) தாங்கள் வரித்துக்கொண்ட சித்தாந்தத்தில் கற்பனையில் மாத்திரம் அதை கவர்ச்சிப் பொருளாக ஆளுபவர்கள் வைத்திருப்பர்.

"பார்வையாளர்களின் மனோபலத்தினை தகர்த்து, தங்கள் பிரச்சாரங்களை ஏற்க வைப்பதற்கு பேச்சாளருக்கு அதிக பலம் வேண்டும். இதுவே பிரச்சாரத்தின் முக்கியம்" எனக் கூறினார் கிட்லர். "அது மட்டுமல்லாது பார்வையாளர்கள் உடல் களைப்புற்றவர்களாக இருப்பின் அது இன்னும் உகந்ததாக இருக்கும்" எனவும் குறிப்பிட்டார்.




ஆகவே, ஒரு தினத்தின் எந்த நேரத்தில் அரசியல் கூட்டங்களை நடாத்த வேண்டும் எனத் தீர்மானிப்பது முக்கியமானதென்பதும் அவர் கருத்து. "காலையிலும் நாள் முழுவதும் கூட ஓர் மனிதனின் மனோபலம், அதனை அடக்க முயலும் இன்னொரு பலத்திற்கு எதிராக வீறுகொண்ட சக்தியுடன் எதிர்த்தெழும், ஆனால், பின்னேரங்களில் தன்னிலும் கூடிய ஓர் பலத்தின் முன்னால் இலகுவாக நெகிழ்ந்து விடும். உண்மையிலேயே இவ்வாறான அரசியல் கூட்டங்கள் இரு எதிர் சக்திகளுக்கும் இடையிலான மல்யுத்தம் போன்றதே. ஆயினும் திறமையான, அதே நேரத்தில் போதனை போன்று தொனிக்கும் பேச்சுத் திறமை புதிய அங்கத்தவர்களை வென்றெடுக்க உதவும். ஏனெனில், பார்வையாளர்கள் மனோபலம் மெல்ல மெல்ல தங்கள் பிடியிலிருந்து நழுவுவதை உணர்வர். ஒருவரின் மனோபலம் அவரது பிடியிலிருக்கும் போதிலும் பார்க்க, வலுவிழந்த இந்நேரமே பிரச்சாரத்தின் வெற்றி இரகசியம்."

ஒரு மனிதன் தன்னை ஓர் சக்தியிடம் முற்றும் முழுவதுமாக ஒப்படைப்பதற்கான மனோநிலையை தோற்றுவிக்கும் சூழ்நிலைகளைப் பற்றி கிட்லர் நன்றாகவே அறிந்திருந்தார். இதுபற்றி ஓர் திறமையான விளக்கத்தையும் அவர் கொடுக்கின்றார்.

"ஓர் மக்கள் திரள் அரசியல் கூட்டத்தின் அவசியம் என்னவெனின், ஓர் தனிமனிதன் புதிதாக அரசியல் இயக்கமொன்றினுள் தன்னை இணைத்துக் கொள்ளும்போது, தனிமையை உணர்வதுடன் தான் தனிமைப்பட்டு விட்டேனோ என்ற பயமும் அவனைப் பீடிக்கின்றது. ஆனால், இவ்வாறான கூட்டமொன்றில் அவன் பங்கேற்கும்பொழுதுதான், தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வளவு பெரிய சமூக அமைப்பினுள் தன்னைப் பிணைத்துள்ளேன் என்பதனை முதன்முறையாக அறிகின்றான். இதுபோன்ற மக்கள் திரளின் மத்தியில் தனி மனிதனது உணர்வு உரம் பெறுவதுடன், புதிய உற் சாகத்தையும் அவன் பெறுவான். கிட்டத்தட்ட எல்லோருக்குமே இந்த உணர்ச்சிக் கிளர்வு ஏற்பட வாய்ப்புண்டு.... யாராவது ஒருவர் தனது சிறிய தொழிற்கூடத்திலிருந்தோ அன்றேல் பாரிய வியாபார ஸ்தலத்திலிருந்தோ ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கும் ஓர் அவையினுள் நுழையும்பொழுது முன்னையதில் தனிமையை உணர்ந்தவர் பின்னையதில் தன்நம்பிக்கையைப் பகிரும் தொகையினர் மத்தியில்.... தானே தனக்குள் உருவாகும் ஒருவித மனக் கிளர்வில் எதிர்ப்பாற்றல்களை இழந்து விடுவார். இதனை நாங்கள் 'மக்கள் திரள் மயக்கம்' (Mass Suggestion) என அழைக்கின்றோம்.

கோயபெல்ஸ்சும் மக்களை இவ்வாறான கண்ணோட்டத்தில் தான் விபரிக்கின்றார். "மக்கள் தாங்கள் சரியான முறையில் ஆளப்படுவதைத் தவிர வேறொன்றையும் விரும்புவதில்லை." - தனது நாவலான 'மிசயேலில்' இவ்வாறு குறிப்பிடுகிறார். "சிற்பிக்குக் கல் எவ்வாறோ அவ்வாறேதான் எனக்கும் மக்கள்! தலைவனுக்கும் மக்களுக்கும் இடையிலான பிரச்சினை ஓர் அச்சிடுபவருக்கும் நிறங்களுக்கும் இடையிலான சிறிய பிரச்சினை போன்றதே." இன்னுமொரு நூலில் இவரது சாடிசத்தன்மை தெளிவாக வெளிப்படுகின்றது. "மற்றையவர்கள்மீது ஆளுமை செலுத்த முடியாவிடின் எவ்வளவு பலமற்றவனாகவும் வெறுமையானவனாகவும் உணர்கின்றேன். ஆனால், அதே வேளையில் ஆளுமை எனக்கு புதிய சக்தியைத் தருகிறது" என்கிறார். அவரது மனநிலை வேறுபாடுகள் பற்றி அவரே குறிப்பிடுகையில் "சிலவேளைகளில் ஒருவர் ஆழமான மனச்சோர்வுடையவராக இருப்பார். இதனை நிவர்த்தி செய்ய மக்களின் வழிநடத்தியாக நின்றால் இச்சோர்வு தானாகவே பறந்துவிடும். ஏனெனில் மக்களே சக்தியின் ஊற்று" என்கிறார்.

நாசிகளால் தலைமைத்துவத் தகுதி என்று கருதப்பட்ட - அதாவது மக்களைத் தங்களது ஆட்சியின் கீழ் வைத்துக் கொள்வதற்கான சக்தியே தலைமைத்துவம் என்றதான - வரையறை ஜெர்மன் தொழிலாளர் முன்னணி (German Labor Front) தலைவர் லேயினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று. நாசி தலைவர்களது குணநலன்கள் பற்றியும் அவர்கள் பெறவேண்டிய கல்வியின் தன்மை பற்றியும் அவர் எழுதுகையில்... 'முதலில் எங்களுக்குத் தெளிவாக வேண்டியது தலைவர்களாகப் போகின்ற இவர்கள் மக்களை வழிநடாத்த வேண்டுமென்று முழுமனதாக விரும்புகிறவர்களா? எஜமானர்களாக இருக்க விரும்புகின்றவர்களா? ஒரே சொல்லில் ஆள விரும்புகிறவர்களா?... நாங்கள் ஆள விரும்புவதுடன் ஆளுமை அளிக்கும் சந்தோசத்தையும் அனுபவிக்க விழைகின்றோம்.... இந்த இளம் தலைவர்களுக்கு நாங்கள் குதிரைகளை அடக்கிச் சவாரிசெய்யும் திறனை கற்பிப்போம். இதனால் ஓர் உயிரின் மேலான முழு ஆதிக்கத்தையும் இவர்கள் உணர்ந்து கொள்வார்கள்."

இவ்வாறான கோட்பாடுகளே கிட்லரின் கல்வி பற்றிய கருத்திலும் விரவியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவர் கூறியிருந்தார்... "மாணவர்களின் முழுக்கல்வி முறையும் அவர்களது வளர்ச்சியும் நாங்கள் மற்றையவர்களை விட உயர்ந்தவர்கள் என்ற நம்பிக்கையை வலுப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். ஆனால், வேறோர் இடத்தில் "ஓர் பையன் அநீதியையும் சகித்துக் கொள்ள பழக வேண்டும்" எனவும் கிட்லர் குறிப்பிடுகிறார். அப்போதுதான் அவன் தலைவனுக்கு எதிராகத் திரும்ப மாட்டான் என்று கருதுகிறார் என நான் நினைக்கிறேன். வினோதமான கருத்து! இவ்வாறான மனோநிலை சடோ - மாசோசிசத் (Sado Masochistic) தன்மையின் வெளிப்பாடே. (ஆளுமைக்கான ஆசையும் அதேவேளையில் அடிபணிவுக்கான ஆவலும்)

மக்களின்மீது ஆட்சி செலுத்துவதற்கான ஆவலே நாசித் தலைவர்களின் உள் அவாவாக இருந்தது. மேலே குறிப்பிட்டது போல், சில வேளைகளில் ஆட்சிக்கான அவா மிகத் தெளிவாகவே வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டது, சில வேளைகளில் இவ் ஒப்புக்கொள்ளல் அவ்வளவு வெளிப்படையாக இல்லாவிடினும் மக்கள் ஆளப்படுவதையே விரும்புகின்றார்கள் என்பதுபோல் மென்மையாக வெளிப்படுத்தப்பட்டது. சிலவேளைகளில் மக்களைச் சிறிது தூக்கி வைத்துப் பேசி தங்கள் கபடத்தனத்தை மறைக்க முயற்சித்தனர். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் (Self Preservation) உணர்வு பற்றிப் பேசுகையில் கிட்லர், "ஆரியர்களின் இவ் உணர்வு ஓர் உயர்ந்த தளத்தினை எட்டிவிட்டது. ஆரியன் 'நான்' என்ற முனைப்பினை (Ego) தனது சமூகத்திற்கு அர்ப்பணித்ததுடன் காலத்தின் தேவையையொட்டி அதனைத் தியாகம் செய்யவும் தயங்க மாட்டான்" என்றார். கிட்லரைப் பொறுத்தவரை தன்னைப் பாதுகாத்தலும் அதிகாரவெறியும் கிட்டத்தட்ட ஒன்றாக இருந்ததென்பதை பின்பு பார்ப்போம்.

தலைவர்கள் ஆட்சிச் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கையில் மக்களுக்கு சாடிச மனநிறைவு தொடர்ந்து வழங்கப்பட்டது. ஜெர்மனிக்குள்ளும் வெளியேயும் இன, அரசியல் ரீதியான சிறிய குழுக்கள், 'தேய்ந்து' கொண்டிருக்கும் நாடுகள் என்பன இவர்களது குரூர மகிழ்ச்சியின் அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டன. கிட்லரும் அவரது சகாக்களும் ஜெர்மன் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த, ஜெர்மன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களோ உலகினில் உயர்ந்த குடி என உலகின் மீது ஆதிக்கப் பார்வையைக் கொண்டிருந்ததுடன், உலகினைத் தாங்கள் ஆளவேண்டும் என்ற பேராவல் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

கிட்லரும் உலகினைத் தானும் தனது கட்சியும் ஆளவேண்டும் என்ற விருப்பினைத் தெளிவாகவே வெளிப்படுத்தினார். அமைதியை விரும்புபவர்கள் பற்றி அவர் கேலி செய்கையில்... "உயர்ந்த கோட்பாடுகளையுடைய ஓர் மனிதன் ஏற்கனவே உலகினை வெற்றி கொண்டு அவனே உலகின் எஜமானன் என்ற பின்பு, அமைதியை விரும்புபவர்களது சிந்தனை நல்லதெனவே கொள்ளவேண்டும்" என்கிறார்.

தொடர்ந்தும்... "இனம் மாசடைந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் இருக்கும் தேசமொன்று - என்றோ ஒருநாள் உலகத்தைக் கட்டியாளப்போகும் - இவ் இனத்தின் தூய்மையினைப் பாதுகாப்பதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்" என்றார்.

வழமையாக கிட்லர் தனது ஆட்சிக்கான ஆவலை நியாயப்படுத்திக் கொள்வார். அவரது முக்கியமான நியாயப்படுத்தல்களில் சில இங்கே தரப்படுகிறது.

"நான் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது அவர்களது நன்மைக்காகவும் உலக கலாச்சார நலன் கருதியுமே. ஆளுமைக்கான ஆவல் இயற்கையின் விதியே. நான் அதனை உணர்ந்து இயற்கையின் சட்டங்களைக் கடைப்பிடிக்கின்றேன்" என்கிறார்.

தான் தனக்கும் மேலான சக்தியின் கட்டளையின் கீழ்த்தான் இயங்குவதாகவும், இச் சக்தி கடவுள், விதி, சரித்திரம், இயற்கை என்பன போலவும் கூறினார்.

"எனது ஆளுமையைக் கையிலெடுக்கும் முயற்சி மற்றவர்கள் என்னையோ ஜெர்மன் மக்களையோ தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு எடுக்கும் முயற்சிகளின் முறியடிப்பே. நான் விரும்புவது சமாதானத்தையும் சுதந்திரத்தையுமே." என்கிறார்.

மேற்கூறிய இவரது நியாயப்படுத்தல்களில் முதலாவதை அவரது 'எனது போராட்டம்' (Mein Kampf) என்ற புத்தகத்தின் பந்தியில் காணக் கிடக்கின்றது.

"சரித்திரத்தில் காணப்படுவதுபோல் மற்றையவர்களிடம் காணப்பட்ட இன ஒற்றுமை ஜெர்மன் மக்களிடம் இருந்திருக்குமாயின் ஜெர்மன் சாம்ராச்சியம் இன்று உலகினை ஆண்டுகொண்டிருக்கும். ஜெர்மன் உலகை ஆண்டுகொண்டிருந்தால் உலகில் சமாதானம் இன்று ஒலிவ் மரத்துக் கிளையுடனும் கண்ணில் கண்ணீருடனும் இருக்கும் சமாதான விரும்பிகளால் அல்ல, மாறாக வீரவாள்களுடன் மக்களை நடாத்திச் சென்ற தலைவர்களினால் தான் ஈட்டப்பட்டிருக்கும். அவ்வாறான வீரமே உலகினை மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்தது."

இக்கால கட்டங்களில் இவரது பேச்சுக்கள் ஜெர்மன் மக்களினது நலன்களைப் பற்றியதாக மாத்திரமல்லாது, பரந்து பட்ட மக்களின் நலன் கருதிய பேச்சாக அமைந்திருந்ததை ஒவ்வொரு பத்திரிகை வாசிப்பவரும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இரண்டாவதான நியாயப்படுத்தல் - தனது ஆளுமைக்கான ஆவல் இயற்கையின் விதிப்படியானதென்பது - கண்துடைப்புச் செயலே. அத்துடன் இந்த உணர்வு தனக்கு வெளியே உள்ள இன்னுமொரு சக்தியிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்கான ஆவலின் வெளிப்பாடே (கடவுள், இயற்கை, சரித்திரம், விதி). கிட்லரின் டாவினிசம் பற்றிய கொச்சையான விளக்கத்தில் 'உயிர் வாழ்வன தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உணர்வு' என்பதை அவர் 'மனித சமூகங்களைப் பாதுகாப்பதே முதன்மையானது' என விளக்குகிறார்.

தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உணர்வு எளியவர்களை வலியவர்கள் அடக்கியாள்வதற்கான சண்டைக்கு இட்டுச் சென்று, அது பொருளாதார மேலாண்மைக்கு வழிவகுத்து, இறுதியில் வலியவர்கள் தான் வாழத்தகுந்தவர்கள் என்று முடியும். தன்னைப் பாதுகாக்கும் உணர்வுடன் மற்றையவர்கள் மீது ஆளுமை செலுத்த வேண்டும் என்ற கிட்லரின் கூற்று மிகத் தெளிவாகவே வெளிப்படுகிறது. "மனிதனின் முதல் கலாச்சாரம் பழக்கியெடுக்கப்பட்ட மிருகங்களில் தங்கியிருந்ததிலும் பார்க்க, கூடியளவு தரத்தில் அல்லது நிலையில் மற்றவரை விட தாழ்ந்தோரிலேயே தங்கியிருந்தது" என்கிறார்.

தனது சாடிசத்தை இயற்கையின் மீதும் திணித்தார். "இயற்கை எல்லா அறிவுகளையும் கொண்ட குரூர அரசி. இயற்கையின் 'தன்னைப் பாதுகாக்கும் தன்மை' வெட்கமற்ற தன்னலம் கருதுவதுடன், திறமையானதும் வலுவானதின் வெற்றிக்கு அடிகோலுவதும் ஆகும்" என்கிறார்.

கொச்சைப்படுத்தப்பட்ட டாவினிச விளக்கத்தினூடு 'சோசலிச' கிட்லர் சமூகத்தில் மட்டுப்படுத்தப்படாத போட்டி வாய்ப்பினிற்கெதிராக எவ்வாறு வெற்றி கொள்கிறார் எனக் கவனிப்போம். பல தேசிய இனக்குழுக்களுக்கிடையிலான கூட்டு முயற்சிக்கெதிரான விவாத்தில், "இவ்வாறான சேர்க்கையில் சக்தியின் சுதந்திரமான போக்கு கட்டுப்படுத்தப்படுகிறது. திறமையானதைத் தேர்ந்தெடுப்பதற்கான நிகழ்வு தடைப்படுகிறது. அத்துடன் வலிய, அறிவாற்றல் கூடிய மனிதனின் இறுதி வெற்றி என்றென்றும் தடைப்படுகிறது" என்கிறார். ஆனால் வேறிடங்களிலோ வேறுபட்ட சக்திகளின் சுதந்திர




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான இயக்கம் தான் 'வாழ்வைப் பற்றிய பேரறிவு' எனவும் குறிப்பிடுகின்றார்.

உண்மையிலேயே டார்வினின் கொள்கை சாடோ - மாசோக்கியத் தன்மை வாய்ந்ததல்ல. ஆனால், மாறாக, மனிதனின் கூர்ப்பு மூலம் கலாச்சார சிகரங்களை எட்டுவதற்கான நம்பிக்கையின் தொனி. கிட்லரிற்கோ இதுவே தனது சாடிசத் தன்மையை நியாயப்படுத்தும் ஓர் ஊடகம். உளவியல் ரீதியாக டார்வினின் கொள்கையின் முக்கியத்துவம் பற்றி அரைவேக்காட்டுத்தனமான கருத்துக்களை முன் வைத்தார். உதாரணமாக, இவர் முனிச்சில் வாழ்ந்தபோது (இந்தக் காலத்தில் இவர் யாருமே அறியாத ஒரு அனாம தேயம்) காலை ஐந்து மணிக்கு எழும்பி விடுவாராம். அவ் அதிகாலை வேளையில் "எனது சிறிய அறையினுள் வரும் எலிகளுக்கு மீதிப் பாண் துண்டுகளைச் சிறிய துகள்களாக்கிப் போடும் பழக்கத்திற்குள்ளானேன். இச்சிறிய பிராணிகளின் உணவிற்கான போராட்டத்தைக் கவனிப்பேன்."




இந்த 'விளையாட்டு' சிறிய அளவிலான டார்வினின் 'வாழ்விற்கான போராட்டம்' கிட்லரிற்கோ இது வேறுவிதமான ஓர் விளையாட்டு. குட்டி பூர்சுவா ஒருவர் தன்னை ரோமப் பேரரசனாகப் பார்க்கும் விளையாட்டு. உலகரங்கில் அவர் விளையாடப் போகும் சரித்திர விளையாட்டிற்கு முன்னோடி.

கடைசியான அவரது சாடிசத்திற்கான நியாயப்படுத்தல் - மற்றையவர்களின் தாக்குதலிற்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்தல். கிட்லரின் எழுத்துக்களில் இது பிரசன்னமாகிறது. அவரும் ஜேர்மன் மக்களும் என்றுமே குற்றமற்றவர்கள். சூதுவாது அறியாதவர்கள். ஆனால், எதிரிகள்தான் சாடிசக் காட்டுமிராண்டிகள். இவ்வாறான பிரச்சாரம் சுதந்திரத்திற்கெதிரானதும், பொய் என்று தெரிந்தும் உண்மையென உருவகப்படுத்தியதும் ஆகும்.

ஆனாலும், உணர்வுரீதியாக ஓரளவேனும் 'உண்மை' உள்ள கற்பனையான குற்றச்சாட்டுக்கள். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தனது சாடிச உருவகத்தையும் பேரழிவுத் தன்மையையும் கண்டு கொள்ளாதிருக்க காவலரணாகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறான காவலரண்கள் ஒரு சமன்பாட்டுக்கமையவே எழுப்பப்பட்டன. நீதான் சாடிச உட்கருத்துக் கொண்டவன். எனவே நான் தூய்மையானவன். ஆனால், கிட்லரைப் பொறுத்தவரை இச்சமன்பாடு பொய்யானதே. அவரது எதிர்ப்பு அரண் உண்மைக்குப் புறம்பான எல்லையையே தொட்டு நின்றது. எதிராளிகளை என்னென்ன குற்றச்சாட்டுக்களைக் காட்டி குற்றம் சாட்டினாரோ, அவைகளையே அவர் வெளிப்படையாகத் தனது இலட்சியமாக ஒப்புக் கொண்டார். யூதர்களை, கம்யூனிஸ்டுகளை, பிரான்சியர்களை தனக்கும் ஜெர்மன் மக்களுக்கும் எதிராக சதி செய்பவர்கள், தங்களை அடக்க நினைப்பவர்கள் என்று குற்றம் சாட்டிக் கொண்டே அவர்களுக்கெதிரான தனது நடவடிக்கைகளை நியாயமானதெனச் சாதித்தார். இவ்வாறாக தனது சொல்லிற்கும் செயலுக்குமிடையிலான பொருந்தாத் தன்மையை நியாயப்படுத்தலால் நிரவிவிடுகின்றார். "யூதர்கள் பிரான்சிய ஆபிரிக்கத் துருப்புக்களை ரைன் நதிக்கரைக்கு எங்களை அழிக்கும் நோக்கத்திற்காகவே கொண்டு வருகிறார்கள்" என்றும், "இதன்மூலம் இனக்கலப்பினால் வெள்ளையினம் மாசுபடும்" என்றும், "அத்துடன் அவர்கள் தாங்கள் எஜமானர்கள் ஆகிவிடுவார்கள்" என்றும் கூறினார். கிட்லரின் இந்தக் குற்றச்சாட்டில் தான் எதைத் தனது உயர்ந்த இலட்சியமாகக் கருதுகிறாரோ, அதனையே அவர்கள் மீது குற்றச்சாட்டாக வைக்கும் முரணான தன்மையைக் கண்டுகொண்டு, அதை நியாயப்படுத்த முனைகிறார். "யூதர்களின் தற்காப்பு உணர்விற்கும், ஆரியர்கள் உலகை ஆழ்வதற்கான முயற்சியில் அவர்களின் தற்காப்பு உணர்விற்குமிடையில் குணாம்சங்களில் பாரிய வேறுபாடு இருக்கின்றன" என முடிக்கிறார்.

இதே குற்றச்சாட்டை பிரான்சியர்களுக்கெதிராகவும் வைக்கின்றார். "பிரான்சியர்கள் ஜேர்மனின் கழுத்தை நெரித்து அதனது பலத்தைப் பறிக்க நினைக்கின்றனர்" என்கின்றார். இதையேதான் பிரான்சியர் ஐரோப்பாவில் மேலாதிக்கம் பெற நினைக்கும் முயற்சியை முறியடிக்கும் நடவடிக்கையில் விவாதமாக வைக்கின்றார். பின்பு, தான் பிரான்சிய தளபதியாக இருந்தால், தானும் இதைத்தான் செய்திருப்பேன் என்றும் ஒப்புக் கொள்கிறார்.

"கம்யூனிஸ்டுகள் மனிதப் பண்பற்றவர்கள், கொடூரமானவர்கள்" என்பது இவரின் குற்றச்சாட்டு! "மார்க்சியத்தின் வெற்றி அதன் அரசியல் நோக்கத்தினை கொடூர வழியில் அடைவதற்கான முயற்சி. அதேநேரத்தில் ஜெர்மனின் குறைபாடு, எதையும் கவனத்தில் கொள்ளாத வீறுகொண்ட சக்திகளு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டனான கூட்டில்லாமையும் உயர்ந்த அரசியல் நோக்கினை முன்வைத்து இக்கூட்டுடன் சாதிக்க முனைப்பில்லாமையும் ஆகும்" என்றும் கருத்துத் தெரிவித்திருந்தார். செக்கோஸ்லவாக்கியாவின் 1938இன் பிரச்சனையும் அதன் பின்பான போரும் மேலே குறிப்பிட்டது போன்று பல உதாரணங் களைக் கொண்டிருந்தன. நாசிகளுக்கெதிரான அடக்குமுறை அங்கு இல்லாததால், அடக்குமுறைக் கெதிரான தற்காப்பு நடவடிக்கை என்ற விளக்கம் அங்கு இடம்பெறவில்லை. செக்கோசிலவாக்கி யாவில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் பொய் யானவை என்பதுடன் யூதர்கள், பிரான்சியருக்கெ திரான குற்றச்சாட்டிலிருந்த கற்பனைத்தனமான 'உணர்வு' க்குக்கூட இங்கு இடமில்லை. இவ்வா றான நடவடிக்கைகளின் பிரச்சாரத்திற்கான பெறுமா னத்தை மாத்திரம் பெற்றிருந்தன. சனத்தொகையின் ஒரு பகுதி - குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் கீழ் மட்டம்- அதனது வர்க்கக் குணாம்சமான சித்தப் பிரமை (Paranoid) நிலையில் இதை நம்பியது.

தேசிய விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த மற் றைய குழுக்கள் மீதான, அவர்களது சக்தியற்ற நிலைமையின் மீதான, வெறுப்பு இவரது குணமான சக்தியற்றவர்கள் மீதான வெறுப்பின் வெளிப்பாட் டினை இனங்காண உதவியது. தேசிய விடுத லையே தனது தலையாய நோக்கெனக் கூறிக் கொண்ட இவர், அதே தேசிய விடுதலைக்கான போராட்டத்தை முன்வைத்த குழுக்களின் மீது, அவர்களது சக்தியற்ற தன்மையின் மீது, வெறுப்புக் காட்டியபோது, தேசிய விடுதலைக்கும் இவருக்கும் உண்மையிலேயே என்ன உறவிருந்ததென்பது புலனாகியது. இவர் மூனிச்சில் இருந்தபோது சிறிய தேசியவாதக் குழுவினில் சேர்ந்திருந்தார். முதலில் அக்குழுக் கூட்டத்திற்குச் சென்றபோது அவரது உணர்வு வெளிப்பாடு இவ்வாறிருந்தது... "வெட்கம் வெட்கம்! இது ஏதோவொரு பொழுதுபோக்குச் சங்கம் மாதிரியல்லவா இருக்கிறது. இதிலா நான் அங்கத்தவனாவது? கடைசியாக புதிய அங்கத்தவர் சேர்ப்பது பற்றி விவாதிக்கப்பட்டது. நான் அதில் சிக்கிக் கொண்டேன்."

இந்தத் தேசிய விடுதலைக் குழுவை அவர் 'கேலிக்கிடமான ஓர் சிறிய சங்கம்' எனவும், அதன் ஒரேயொரு அனுகூலம் "தனிப்பட்ட ரீதியான சொந்த நடவடிக்கைகளுக்கு உகந்தது" எனவும் சாடினார். கிட்லர் தனது சமகாலத்தில் இருந்த எந்தப் பெரிய அரசியல் கட்சியிலும் தன்னை இணைத்துக் கொண் டிருக்கமாட்டேன் எனக் கூறினார். அவரைப் பொறுத் தவரை பலமற்ற ஓர் குழுவினிலேயே தான் தனது அரசியல் வாழ்வினைத் தொடங்கவேண்டும் என்றி ருந்தார். அவரது தொலைநோக்கும் பலமும் பலம் வாய்ந்த இன்னுமொரு அமைப்பில் வெளிப்பட்டிருக் காது. ஏனெனில், அங்கு ஏற்கனவே இருக்கும் சக்தி யுடன் மோதி, தன் பலத்தை நிலைநாட்டுவதற்கே அவரது சக்தி செலவழிந்து போய்விடும்.

பலமற்றவர்கள் பற்றிய அவரது நிலைப்பாட்டில் இந்திய சுதந்திரத்திற்கான போரைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தேசிய விடுதலை பற்றிய கோசங் களை தனது சொந்த நலன்களை முன்னிட்டு வைத்த அதே கிட்லர், எந்தவித இராணுவ வலிமை யற்ற இந்தியப் புரட்சிவாதிகள் பலம் பொருந்திய ஆங்கில சாம்ராச்சியத்துக்கு எதிராகப் போராடத் திரும்பியபோது, அவர்கள் மேல் வெறுப்பையே உமிழ்கிறார். "யாரோ ஒரு ஆசிய நாட்டு பக்கி ரியே... யாரோ எனக்கு அதைப் பற்றிக் கவலை யில்லை. ஐரோப்பாவில் அலைந்து கொண்டு இவர் இந்தியாவின் உண்மையான சுதந்திரப் போரா ளியாம்! புத்திக் கூர்மையுள்ள ஐரோப்பிய மக்களை - இந்தியாவினை தனது அதிமுக்கிய பிரதேசமாக வைத்திருக்கும் - பிரித்தானிய சாம்ராச்சியம் நிலை குலையப் போகிறதென நம்பவைக்கப் பார்க் கிறார்... இந்தியக் கலகக்காரர்கள் இதனை ஒரு போதும் சாதிக்கப்போவதில்லை... அங்கவீனர் களின் கூட்டணி ஒருநாளும் பலம் பொருந்திய ஒரு சாம்ராச்சியத்தை முறியடிக்க முடியாது... இனரீதியாக தாழ்வான அவர்களது 'ஒடுக்கப் பட்ட' நாட்டையும், எனது நாட்டையும் நான் ஒருபோதும் ஒப்பிட்டுப் பார்க்கமாட்டேன்" என்கிறார்.

வறியவர்கள்மீது காதலும் பலமற்றவர்கள்மீது வெறுப்பும் சாடோ - மசக்கியிசத் தன்மை. இத் தன்மை கிட்லரினதும் அவர்களது சகாக்களினதும் அரசியல் நடவடிக்கைகள் பற்றிய அதிக விளக்கங் களைத் தருகிறது. நாசிகளின் எழுச்சிக்கு முந்திய அரசு இவர்களை எதிர்க்காமல் இணக்கப் போக் கைக் கடைப்பிடித்தால்தான் இவர்களைச் சமா தானப்படுத்தலாம் என எண்ணி கருணை காட்டத் தொடங்கியது. ஆனால், நாசிகளோ இதனால் ஆறு தலடையவில்லை. மாறாக, அரசின் சக்தியற்ற தன் மையும் நிர்வாகக் கொள்கைகளில் உறுதியற்ற தன்மையும் நாசிகளின் வெறுப்பைத் தூண்டவே உதவியது. கிட்லர் வைமர் குடியரசை வெறுத்தார். ஏனெனில், அது ஓர் பலமற்ற அரசாக இருந்தது. ஆனால், அக்குடியரசின் இராணுவ அதிகாரிகளை, பெருந் தொழில் உரிமையாளர்களை, அவர்களின் பலம் பொருந்திய நிலைமைக்காக ஆதர்ச புருஷர் களாகக் கண்டார். இவர் என்றுமே பலம் பொருந்திய பெரிய அமைப்புகளுக்கெதிராகப் போராடவில்லை. பலமற்ற சிறிய குழுக்களுக்கெதிராக போர்க் கொடியை உயர்த்தினார். கிட்லரதும் ஏன் முசோலி னியினுடையதும் 'புரட்சிகள்' தங்களைப் பாது காத்துக் கொள்ளப் பலமற்றவர்களுக்கெதிராகவும், ஏற்கனவே திரட்டப்பட்ட இவர்களது பலத்தின் துணையுடனுமே நடந்தேறின. கிட்லரின் பிரித்தானி யாவின் மீதான பார்வையானது பல காரணங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுடன், (இங்கு விவாதிக்கப்படும்) உளவியல் தன்மையின் அடிப்படையிலும் பெறப்பட்ட ஒன்றாகும். பிரித்தானியா பலம் பொருந்திய அமைப்பென்று இவர் கருதும்வரை அதனை நேசித்தார். பிரித்தானியாவின் பலவீனங்களைக் காணத் தொடங்கியவுடன் இவரது காதல் வெறுப்பாக உருமாறத் தொடங்கியது. இதுவே அதனை நிர்மூலப்படுத்தும் ஆவலையும் கொண்டு வந்தது. புரிந்துணர்வு, இரக்க குணம் என்பன இவரைப் பொறுத்தவரை நட்பைக் கொண்டு வருதலுக்குப் பதிலாக வெறுப்பையே கொடுத்தது.

இதுவரை கிட்லரின் சித்தாந்தத்தின் சாடிசப் பக்கம் பற்றிப் பார்த்தோம். அதேபோல் இவ்விவாதத்தில் ஆட்சியதிகாரக் குணாம்சத்தில் சாடிசம் போலவே மச்சோயிசப் பக்கமும் இருப்பதைக் கண்டோம். இது தன்னை விட அதிவல்லமை பொருந்திய சக்தியிடம் தன்னை அர்ப்பணிப்பதற்கான ஆவல், தனது தனித்தன்மையை அழித்துக் கொள்ளல், இது தவிர, பலமற்றவர்கள் மீது அதிகாரத்தை நிலைநிறுத்தும் ஆவல் என்பன. இந்த மச்சோயிசப் பக்கம் நாசிகளின் சித்தாந்தத்தில் அவர்களது ஆட்சியில் பொதுமக்கள் தொடர்பாக மிகத் தெளிவாகவே தெரிந்தது. பொதுமக்களுக்கு மிகத் தெளிவாகவே மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்ட செய்தி: “ஒரு தனிமனிதன் அவனைப் பொறுத்தவரையில் எந்தவிதமான சக்தியுமே அற்றவன் என்பதை அவன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவன் பெரிய சக்தியினுள் தன்னைக் கரைத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு இரண்டறக் கலந்து அப்பெரிய சக்தியின் வலிமை புகழ் என்பவற்றில் பங்கேற்று மகிழவேண்டும்.” கிட்லர் சித்தாந்தம் பற்றிய தனது கருத்தில் இதைத் தெளிவாக இவ்வாறு வரையறுத்தார்: “சித்தாந்தம் மாத்திரமே மனிதர்களைத் தன்னிச்சையாக ஆளுமையின் முன்னுரிமையை அதன் பலத்தை ஏற்றுக் கொள்ளவும், இதனால் உலகினை ஆளும் முதன்மைச் சக்தியினுள் தங்களைச் சிறு தூசித் துகள்களாக இணைத்துக் கொள்ளவும் வழி வகுக்கும்.”

கொபபெயல்ஸ்சும் ஏறத்தாழ இவ்வாறான ஒரு வரையறையையே சோசலிசம் எனக் கருதி முன்வைத்தார். ஒரு ‘சோசலிசவாதி’, ‘நான்’ என்ற உணர்வினை அழித்து ‘நீ’ ஆகிறான். சோசலிசம் என்பது தனிமனிதன் ‘நான்’ என்பதை முழுமையாகத் தியாகம் செய்வதுதான் என்றார்.

தனிமனிதத் தன்மையைத் தியாகம் செய்து தன்னை ஒரு தூசாக்கிக் கொள்வது கிட்லரைப் பொறுத்தவரை ஒரு தனிமனிதன் தனது அபிப்பிராயம், அவனது ஆவல்கள், சந்தோசம் என்பனவற்றின் உரிமையை விட்டுக் கொடுத்தல் அல்லது அழித்துக் கொள்ளல் என்றே தெளிவாகிறது. இவ்வாறான உரிமைத் துறப்பு அரசியல் அமைப்புகளுக்கு மிகத்




தேவையானது. இவ்வாறான அமைப்புகளில் “தனி மனிதர்கள் தங்களது சொந்தக் கருத்துக்களையோ தாம் சார்ந்த நலன்களையோ முன்வைப்பதைக் கைவிட்டுவிடுவார்கள்.” சுயநலமற்ற தன்மையை இவர் வெகுவாகப் புகழ்ந்து மக்களுக்கு ஓர் தார் மீகப் பாடத்தையும் போதிக்கிறார். “தங்களது சொந்த மகிழ்விற்கான வேட்டையில் மக்கள் மோட்சத்தில் இருந்து நரகத்தினுள் நழுவி விழுந்து விடுகின்றனர்” என்றார். கல்வியின் நோக்கமே தனி மனிதத் தன்மையை பலப்படுத்துவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளப் பயிற்றுவிப்பதே. “ஒரு பையன் பாடசாலையிலேயே நீதியான குற்றச்சாட்டுக்களை மாத்திரமன்றி எவ்வித அடிப்படையுமில்லாத குற்றச்சாட்டுக்களைக் கூட மௌனமாக ஏற்றுக் கொள்ளப் பயிற்றுவிக்கப்படுகிறான்” என்கிறார். தனது இறுதி வெற்றியைப் பற்றி எழுதுகையில்... “மக்கள் குடியரசில் மக்களின் சிந்தனை இறுதியாகவும் வெற்றிகரமாகவும் ஓர் கட்டத்தினை வந்தடையவும், இக்கால கட்டத்தில் மனிதர்கள் உயர்தர நாய்கள், குதிரைகள், பூனைகளை வளர்த்தெடுப்பது பற்றிய தங்கள் கரிசனையை மனித சமுதாய மேம்பாட்டிற்காகச் செலவழிக்கவும், அதேவேளையில் ஒருவர் எதற்காக விட்டுக்கொடுக்கின்றார் என அறிந்து அமைதியாக




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டுக் கொடுக்கவும், மற்றையவர் மகிழ்ச்சியாக விட்டுக்கொடுத்து தியாகம் செய்யவும் ஆயத்தமாயிருப்பார்கள்" என்கிறார்.

மேற்கூறிய விடயம் சிறிது ஆச்சரியமானதாக உள்ளது. "எதற்காக விட்டுக் கொடுக்கின்றார் எனத் தெரிந்து அமைதியாக விட்டுக் கொடுக்கவும்..." என்ற வசனத்தின் பின் இன்னுமொரு அணி எதிரானதாக வந்திருக்க வேண்டும். அது இப்படியாக இருக்கலாம், தலைமை வகிக்கும் அணி அன்றேல் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட அணி என்றுகூட இருந்திருக்கலாம். ஆனால், கிட்லர் மற்ற அணியையும் 'தியாகத்தின்' அடிப்படையிலேயே விபரிக்கின்றார். 'அமைதியாக விட்டுக் கொடுத்தல்', 'மகிழ்ச்சியாகத் தியாகம் செய்தல்' என்ற இரு பதங்களையும் விளங்கிக் கொள்வது கடினமாக உள்ளது. எனது ஊகம் சரியானதாயின், கிட்லர் தனது எண்ணத்தில் நிதர்சனமாகக் கண்டது தியாகம் செய்யும் மக்களையும் ஆளும் ஆட்சியாளர்களையும் தான். வெளிப்படையாகவே தான் ஆளுவதற்கான 'உயர்வான' நோக்கினை அவர் வெளிப்படுத்தியிருப்பினும் பல வேளைகளில் அதனை மறுத்துமிருக்கின்றார். இந்த சர்ச்சைக்குரிய வசனத்தில் இதனை வெளிப்படையாகக் கூற விரும்பவில்லை. எனவேதான் ஆளுவதற்கான ஆவலை அவர் 'மகிழ்வுடன் தியாகம் செய்தல்' என மாற்றி விட்டார். சுயஒறுப்பு, தியாகம் பற்றிய தனது தத்துவம் பொருளாதார ரீதியில் எவ்விதமான மகிழ்விற்கும் இடமற்றவர்களுக்கானதே என்பதை கிட்லர் தெளிவாகவே உணர்ந்திருந்தார். சமூகத்தின் நிலையை மாற்றி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மகிழ்வினைத் தரக்கூடிய அமைப்பினை உருவாக்க இவர் விரும்பவேயில்லை. வறுமையையே இவர் ஆயுதமாகப் பாவித்தார். இதன் மூலம் தனது போதனையான 'சுய ஒறுப்பினை' மக்கள் நம்பும்படியும் செய்தார். மிகத் தெளிவாகவே இவர் இதனை வெளிப்படுத்தினார். "நாம் மிகப் பெரிய வறுமையான மக்கள் தொகையினரைப் பார்க்கின்றோம். இவர்களது தனிப்பட்ட சொந்த வாழ்க்கைதான் உலகின் அதியுயர்ந்த செல்வந்த நிலை என்றிருப்பினும் அதில் அவர்களுக்கு எந்தவித நாட்டமுமில்லை."

'தியாகம்' பற்றிய முழுப் போதனைகளுக்கும் பின்னால் ஓர் வெளிப்படையான காரணமுள்ளது. மக்கள் தங்களை விட்டுக் கொடுத்து ஆளுமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் - அதாவது, தலைவரதும் அவரது சகாக்களினதும் பதவிக்கான மற்றும் ஆளுமைக்கான ஆவலை நிறைவேற்றவேண்டும். இவ்வாறான தன்மை கிட்லரின் குணாம்சத்திலும் காணக்கூடியதாக இருந்தது. அவரைப் பொறுத்தவரை தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்ட உயர் சக்திகளாக கடவுள், விதி, சரித்திரம், இயற்கை... என்பனவாக விரிந்தன. இவை எல்லாமே அவரைப் பொறுத்தவரை ஒரேயொரு கருத்தைத் தான் கொண்டிருந்தன. இவையெல்லாமே தனக்கும் மீறிய மிக வலிமை வாய்ந்த சக்தி என்பதுதான் அது. தனது சுயசரிதையின் ஆரம்பத்தையே இவ்வாறுதான் தொடங்கினார். "எனது நல்லகாலமாக விதி எனது பிறப்பிடத்தை 'பிறவ்நவ்' இலுள்ள 'இன்' என்ற இடத்தைத் தேர்வு செய்தது (Braunau On The Inn)" என்கிறார். தொடர்ந்து எழுதுகையில்... "ஜெர்மனியர்கள் எல்லோருமே ஓர் நாட்டின் கீழ் கூடவேண்டும். அப்போதுதான் இந்நாடு எங்களுக்குச் சிறியதாகப் போவதன் மூலம் தேவையின் உந்தலால் தார்மீக அடிப்படையில் நிலப்பரப்புக்களையும் பிரதேசங்களையும் நமதாக்கிக் கொள்ளலாம்" என்கிறார். 1914 - 1918 நடந்த போரின் தோல்வி இவரைப் பொறுத்தவரை 'புரிந்த குற்றங்களுக்கான தண்டனையே.' ஒரு நாடு மற்றைய இனங்களுடன் கலப்பதால் "படைப்பின் சக்திக்கெதிராகப் பிழை செய்கின்றனர்" என்கிறார். இதை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் "படைப்பின் கர்த்தாவிற்கெதிராக நடக்கின்றார்கள்" என்றார். 'ஜெர்மனியின் பணி 'பிரபஞ்சங்களைப் படைத்தவரின்" கட்டளை. மோட்சம் மக்களை விட உயர்ந்தது. மக்களை மடையராக்கலாம். ஆனால், மோட்சத்தினை லஞ்சம் கொடுத்து வளைத்து விட முடியாது" என்றார்.



கிட்லரை ஆச்சரியப்பட வைத்த சக்தி கடவுளோ, படைப்பின் இரகசியமோ, விதியோ அல்ல. இவைகளிலும் மேலாக இயற்கைதான் அந்த சக்தி. ஏனெனில், கடந்த நானூறு வருட சரித்திர நிகழ்வில் மனிதனின் மேல் ஆதிக்கம் செலுத்திய இயற்கையை மனிதன் ஆதிக்கம் செய்ய முடிந்ததுதான். கிட்லரின் கூற்று : மனிதர்களை ஒருவன் ஆள வேண்டும், ஆனால், இயற்கையை ஒருவன் ஆளமுடியாது என்பது. முன்பு குறிப்பிட்டது போல் - இவரின் கூற்றுப்படி - மனித சரித்திரம் மிருகங்களைப் பழக்கியெடுத்ததில் ஆரம்பிக்கவில்லை. நிலையில் குறைந்த மனிதர்கள் மீதான மற்றவர்களது அதிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரத்தினால்தான் ஆரம்பமானதென்பது. இயற்கையை மனிதனால் வெல்ல முடியுமென்ற கருத்தை கேலியாகக் கொச்சைப்படுத்தும் இவர், "இயற்கையை வெல்வோம்" என்பவர்களையும் கேலியாகவே பார்த்தார். "ஏனெனில் அவர்களிடம் இந்த எண்ணத்தைத் தவிர வேறெந்த ஆயுதமுமில்லை" என்றார். தொடர்ந்தும்... "மனிதன் இயற்கையை வெல்லவில்லை, மாறாக இயற்கையின் சில இரகசியங்களையும் அடிப்படை விதிகளையும் அறிந்து கொண்டு, அதன்மூலம் இவ் அறிவினைப் பெறாத மற்றைய உயிரினங்களின் எஜமானனாக உயர்ந்து விட்டான்" என்று விளக்கமளித்தார். மீண்டும் இதே கருத்தை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அவர் சொன்னார்... "அதாவது இயற்கை நாம் அடிபணிய வேண்டிய மாபெரும் சக்தி, ஆனால் உயிர் வாழ்பவைகளை நாம் அடக்கியாளலாம்."

இதுவரை கிட்லரின் எழுத்துக்களிலிருந்து - முன்பே நான் விபரித்தபடி - ஆட்சியாதிக்கக் குணாம்சத்தின் இருவிதமான உணர்வுகளான 'ஆளுமைக்கான தீவிர ஆவலையும்' அதேபோன்றே 'தன்னிலும் பெரிய சக்தியிடம் தன்னை அர்ப்பணிப்பதற்கான போக்கினையும்' கண்டோம். கிட்லரின் சிந்தனையும் நாசிக் கட்சியின் சித்தாந்தமும் ஏறத்தாழ ஒன்றாகவே இருந்தன. இக்கட்டுரையில் காணப்படும் அவரது சிந்தனைகள் அவரின் எண்ணற்ற கூட்டங்களில் தனது உரைகளின் மூலம் குறிப்பிடப்பட்டவை. இதே கூட்டங்களின்மூலம் தனது கட்சிக்கான மக்கள் திரளையும் அவர் பெற்றார். நாசிச் சித்தாந்தம் கிட்லரின் தனிப்பட்ட குணாம்சமான தாழ்வு மனப்பான்மை, வாழ்வின் மீதான வெறுப்பு, சுய ஒறுப்பு, அத்துடன் வாழ்வினை மகிழ்வாக வாழ்வோர் மீதான வெறுப்பு என்ற அடிப்படைகளைக் கொண்டது. இது போன்றே, மேற்கூறப்பட்ட குணங்களே சாடோ - மசோகிசத்தின் விளைநிலமாகும். இவைகளே மக்களுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டது. தங்களது குணாம்சங்களையே படிப்பினைகளாக கிட்லரின் வாய்மூலம் கேட்ட அதே குணங்கொண்ட மக்கள் சாரிசாரியாக அவரைப் பின்தொடர்ந்தனர். சித்தாந்தம் மாத்திரம் கீழ்மட்ட மத்தியதர மக்களின் மனநிறைவினைக் கொடுக்கவில்லை. நடைமுறையிலும் படிநிலை அமைப்பொன்று (Hierachy) நிறுவப்பட்டு, இதில் ஒவ்வொருவரும் தனக்கு மேல் ஒருவரிடம் தன்னை அர்ப்பணிக்கவும் தனக்குக் கீழ் உள்ளோரை அதிகாரம் செய்யவும் வழி கிடைத்தது. தலைவர் விதி, சரித்திரம், இயற்கை என்ற அவரிலும் பெரிய 'சக்தியிடம்' தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இவ்வாறு நாசிச் சித்தாந்தம் மக்கள் திரளில் ஒருபகுதியினரின் குணாம்ச அடிப்படையிலான உணர்வுகளின் நிறைவைக் கொடுத்தது. மிகுதி மக்களோ வாழ்க்கையின் மீதே நம்பிக்கை இழந்து தாங்களாகவே சுருங்கிக் கொண்டனர்.

இங்கு விபரிக்கப்பட்ட நிலைமைகளும் கருத்துக்களும் எதிர்காலத்தில் நாசிசத்தின் இருப்பிற்கான தகவல்களை எங்களுக்குத் தருகின்றனவா? என்னால் எந்தவொரு திடமான முடிவினையும் முன்வைக்க முடியாதிருக்கிறது. ஆயினும் சில கருத்துக்களை - குறிப்பாக உளவியல் அடிப்படையிலான கருத்துக்களை - உன்னிப்பாக நோக்குவது இங்கு அவசியமாகின்றது. ஒரு சாராரின் உணர்வினை நாசிசம் திருப்திப்படுத்தவில்லையா? இந்த உளவியல் காரணமே அதன் தொழிற்பாட்டையும், வளர்ச்சியையும், இருப்பையும் உறுதி செய்யவில்லையா?

ஆயினும், இதுவரை சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கையில் இவ்வினாவிற்கான விடை எதிர்மறையே! மனிதன் தனது 'ஆரம்பத் தளைகளில்' இருந்து விடுபட்டுத் தனித்துவமுடையவனாக மாறினான். எனவே முந்திய நிலைமைக்கு இவனால் செல்ல முடியாது. சரித்திரத்தின் இடைக்கால நிலைமை வழக்கொழிந்து போக நானூறு வருடங்கள் எடுத்தன. எங்கள் காலத்தில் இதன் முடிவு நடந்தேறியது. தற்போதைய தொழிற்துறை அமைப்பும் உற்பத்தி அமைப்பும் முற்றும் முழுவதுமாக அழிக்கப்பட்டு தொழிற்துறையின் வளர்ச்சிக்கு முந்திய காலகட்டத்தின் நிலைமை மீண்டும் வந்தால்தான் (!) தனித்துவம் பெற்ற மனிதனாக மீண்டும் மாற வாய்ப்புண்டு.

மனிதனால் எதிர்மறையான சுதந்திரத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாதெனக் கண்டோம். அதனால்தான், அவன் இச் 'சுதந்திரத்திலிருந்து' தப்பித்துக் கொள்ள புதிய உறவுகளினுள் தன்னை நுழைத்துக் கொள்கின்றான். இவை இவனது 'ஆரம்பத்தளை'களுக்கான மாற்றீடே. ஆனால், இப்புதிய உறவுகள் மூலமும்கூட இவனால் நடைமுறையுடன் இனங்காணவியலாது போய்விடுகிறது. இப்புதிய உறவுகளினூடு கிடைக்கும் பாதுகாப்பிற்கும் முழுமையான சமுதாயத்தினின்றும் பிரிந்து சிறு கூடு ஒன்றினுள் புகவேண்டிய கட்டாயத்தையும் எதிர்நோக்குகின்றான். இவனுக்கும் அதிகாரமுடையோருக்கும் இடையேயுள்ள அதிகார நிலைமை மாறுபடாமலே இருக்கும். இவ்வாறான அதிகாரத்திற்கு ஏலவே தன்னை உணர்வு பூர்வமாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பினும், இவனது வாழ்க்கையில் இது குறுக்கீடுகள் மூலம் இவனை முடக்கத்தான் போகின்றது. அதே போலவே, இவனது சூழலானது சமூகத்தில் இவன் 'சிறு துகளாக' வாழும் நிலையுடன் கூடவே, தனிமனித சுதந்திரத்தை பேணுவதற்கான வாய்ப்பையும் கொண்டதாகவே இருக்கின்றது. நவீன பெருந்தொழிற்துறை பொருளாதாரம் மனிதனின் பொருளாதார சுபீட்சத்தை உறுதிப்படுத்துவது மாத்திரமல்லாது, மனிதனின் அறிவு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வு, புலனுணர்வு போன்றவற்றின் முழுவெளிப்பாட்டினைத் தூண்டுவதாகவும் அமைகிறது. தொழிற்துறை நவீனத்துவம் வேலை நேரத்தினைக் குறைக்கவும் வழிசெய்தது.

சமூகத்தில் ஆட்சியாதிக்கச் சித்தாந்தம், அதன் நடைமுறை என்பவற்றை நரம்பியல் நோயின் குணாம்சங்களுடன் ஒப்பிடலாம். தாங்கமுடியாத உளவியல் அழுத்தங்களே இதன் காரணி. அதே வேளையில், இதற்கான தீர்வையும் ஆட்சியாதிக்க நிலைமை முன்வைக்கின்றது. இந்தத் தீர்வுகள் உண்மையிலேயே அமைதியான மகிழ்வான வாழ்வினைச் சமூகத்துக்கு உறுதி செய்யும் தீர்வுகளல்ல. இவ்வாறான தீர்வுகள் பிரச்சனைக்கான காரணிகளை எந்தவிதத்திலும் களையாமலும் மாற்றாமலும் விட்டுவிடுகின்றன. மனிதனின் ஆக்கசக்தி ஓர் முக்கியமான காரணியாக, இவ்வினாக்களுக்கு விடை தேடுவதிலும் அதனை அடைய முடியுமாயின் அடைவதற்கான முயற்சியிலும் பங்கெடுத்துக் கொள்கிறது. அந்நியமாகவும் சக்தியற்றும் போகும் மனிதன், ஏறுதிசையில் செல்லும் உற்பத்திச் சக்திகளின் தேவையின்போது வெளிப்படுத்தும் ஆற்றலானது 'ஆற்றல் சக்திகளாக' அவனது சுதந்திரத்திற்கான ஆவலுக்குத் துணைபோகும். மாறாக உண்மைச் சுதந்திரத்தை விடுத்து வேறு வழிகளில் தான் தப்பித்துக் கொள்ளப் பார்த்தால் அது குறுகிய காலத்திற்கு அவனுக்கு மறைவிடமாக இருக்குமேயொழிய அவனது அல்லல்களை என்றுமே தீர்க்கப் போவதில்லை. மனித வரலாற்றின் வளர்ச்சி என்பது மனிதனின் தனித்துவத்தினதும் சுதந்திரத்தினதும் வளர்ச்சி ஆகும். சுதந்திரத்திற்கான வேட்கை இயற்கையின் தத்துவங்களால் விளங்கப்படுத்த முடியாத பிரபஞ்ச இரகசியமல்ல. அது மனித நாகரீகத்தின், மனித சாராம்சத்தின் வளர்ச்சி கோரி நிற்கும் தேவையையொட்டியது. ஆட்சியாதிக்க அமைப்பால் சுதந்திரத்திற்கான தேடுதலின் மையக் காரணிகளை அழித்துவிடவும் முடியாது, அதேபோலவே, இக்காரணிகளினால் எழும் சுதந்திர வேட்கையையும் அழித்துவிட முடியாது! ●

**நாசிசத்தை உளவியல் அடிப்படையில் விளக்க முனையும் இக்கட்டுரை இன்றைய நிலைமைகளை இன்னொரு பரிமாணத்தில் விளங்கிக்கொள்ள உதவும்**


**வல்லினம்** (காலாண்டிதழ்)



சிறப்பாசிரியர்: பாண்டியன்

வெளியிடுபவர்: ஆசிரியர் பு. புனிதா

தொடர்புகளுக்கு:
**எண் 9, லு—பிளாக், அரசு குடியிருப்பு**
**இலாசு பேட்டை — புதுவை 605 008**

தொலைபேசி:
**04 13 25 71 51**

மின்னஞ்சல்:
**Vallinam@rediffmail.com**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மகிழ்ச்சி பஞ்ஞீய! அடிப்படைக் கொள்கைகள்

ஒரு
கலந்துரையாடல்

மூலம் :
MARXISM TODAY, 1991

தமிழில் :
ஆதிரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

எங்களுடைய அதி ஆழ்ந்த உணர்ச்சிகள் சிலவற்றின் குவியமாக பாலியல்ரீதியான உறவுகள் இருக்கின்றன. வேறுவேறுவிதமான அனுபவங்களையும் வித்தியாசமான எதிர்பார்ப்புகளையும் கொண்ட சிலர், பின்வரும் கலந்துரையாடலில் பாலியல் உறவின் விசுவாசம் பற்றிய வினாவின்மீது தங்களுடைய தேடலை மேற்கொள்கிறார்கள். இக் கலந்துரையாடல் கிறிஸ் கிறான்லன்ட் இனால் நெறிப்படுத்தப்பட்டது.

# கலந்துரையாடலில் பங்கு கொள்பவர்கள்:

**பேக்கா**

*பெண்.*
*வயது 23.*
*தன் துணைவனுடன் வசிப்பவர் அல்ல.*

**அன்ரோனியோ**

*ஆண்.*
*வயது 34.*
*தன் துணைவியுடன் வசிக்கிறார்.*

**கிறிஸ்**

*ஆண்.*
*வயது 25.*
*தன் துணைவியுடன் வாழ்ந்து வருகின்றார்.*

**ஜேம்ஸ்**

*ஆண்.*
*வயது 27.*
*பகிரங்கமான தன் பாலியல் உறவை அண்மையில் முடித்துக் கொண்டவர்.*

**மொறிக்கா**

*பெண்.*
*வயது 23.*
*இவருக்கு ஒரு ஆணுடன் உறவுண்டு. ஆனால் அவருடன் வசிப்பதில்லை.*

**லூயிஸா**

*பெண்.*
*வயது 31.*
*தன் துணைவனுடன் 7 வருடங்கள் வசித்தவர். அண்மையில் அவரைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்.*

**விவியன்**

*பெண்.*
*வயது 75.*
*50 வருடங்களிற்கு முன்பு தன் கணவனிடம் இருந்து விவாகரத்து பெற்றவர்.*

**கிரஹாம்**

*ஆண்.*
*வயது 75.*
*இரு தடவைகள் திருமணம் செய்தவர்.*

**டேவிட்**

*ஆண். வயது 69.*
*விவாகரத்துப் பெற்றுக் கொண்டவர்.*
*இப்போது ஒரு பெண்ணுடன் உறவுண்டு. ஆனால் இருவரும் இணைந்து வசிப்பதில்லை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**♦ பேக்கா, விசுவாசம் என்றால் என்ன என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

**பேக்கா:**

இது பாலியல் தொடர்பான ஒரு கேள்வி மட்டும் என்று நான் நினைக்கவில்லை. ஒருவர் இன்னொருவருக்கு விசுவாசமில்லாமல் இருப்பதென்பது பேச்சில்கூட இருக்கலாம். விசுவாசமின்மை என்பது உண்மையில், இருவருக்கிடையேயான நெருக்கமான விடயங்களை வெளியே தெரியப்படுத்துவதாகக்கூட இருக்கலாம்.

**♦ அது சரி. ஆனால், உங்களுடைய துணைவன் உங்களைத் தவிர்ந்த வேறு யாருடனாவது பாலியல்ரீதியான உறவினைக் கொண்டிருந்தார் என்பது உங்களுக்குத் தெரிய வந்தால், அது உங்களுக்கு மிகப் பெரியதொரு தாக்கத்தைக் கொடுக்காதா?**

**பேக்கா:**

நிச்சயமாக. ஆனால், நான் உண்மையில் எங்கள் இருவரையும்பற்றி மிகவும் குழப்பமடைவேன்.

**அன்ரோனியோ:**

என்னால் பாலியல் உறவின் சில தாற்பரியங்களைக் களைந்துவிட முடியாது. ஏனெனில், எனக்கு என்னுடைய துணைவருடன் இருக்கும் பாலியல் உறவென்பது எமது உறவின் அதி பிரத்தியேகமான நிலை என்று நான் உணருகின்றேன்.

**ஜேம்ஸ்:**

இருவரிற்கிடையேயான உறவுக்கு வெளியில், ஒவ்வொருவரும் தனித்தனியே வேறு வேறு நபர்களுடன் பாலியல்ரீதியான உறவொன்றைப் பேணிக்கொள்வதென்பது அவரவர்களுடைய சுதந்திரத்துக்கான ஒரு அடையாளம் மாதிரித்தான். அதாவது, உங்களுடைய துணைவரைப்பற்றி நீங்கள் அறியாத விடயங்கள் அவர்களிடம் இருக்கும். நீங்கள் விளங்கிக் கொள்ள முடியாத விடயங்கள் அவர்களிடம் இருக்கும். அந்த விடயங்கள் முற்றாக உங்களிற்கேயானதல்ல. இது ஒரு பகிரங்கமான உறவுக்கும் பொருந்திப் போகக் கூடியதாகும்.

**♦ லூயிஸ், நீங்கள் நேற்றிரவு உங்கள் கணவரிடம், அவர் எப்பொழுதாவது உங்களுக்கு விசுவாசமில்லாமல் இருந்திருக்கின்றாரா என்று கேட்டிருக்கின்றீர்கள். இந்த வகையான ஒரு சிக்கல் அந்தக் கேள்வியை அவரிடம் கேட்கும் போது உங்களுக்கு இருந்ததா?**

**லூயிஸ்:**

நான் பாலியல்ரீதியான விடயத்தை மட்டும்தான் கருத்தில் கொண்டு கேட்டேன். ஆனால், இதைவிட மிகப் பெரிய சங்கடமான விடயம் அதற்குள் பொதிந்திருக்கின்றதென்று நான் நினைக்கிறேன். உங்களுடைய துணைவருக்குச் சொல்லாமல் நீங்கள், உங்கள் சக ஊழியர் ஒருவருடன் ஓர் இரவுச் சாப்பாட்டுக்குப் போவது, இந்த மாதிரியான விடயம்.

**விவியன்:**

ஜேம்ஸ் குறிப்பிடும் 'பகிரங்கமான உறவு' என்ன என்பதை என்னால் சரியாகக் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால், திருமண பந்தத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் தாங்கள் இணைந்து வாழ்வதற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய சுக துக்கங்களில் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கின்றார்கள். ஒருவர் அதனை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் திருமணத்திற்கான உடன்படிக்கை அதனைத் தெளிவாகச் சொல்கின்றது. எனக்கு அது சகலதையும் உள்ளடக்குகின்றது.

**அன்ரோனியோ:**

நான் அதனை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், இது அனைவரையும் உள்ளடக்காது.

**விவியன்:**

இல்லை. இது வாழ்க்கையின் சகல அம்சங்களையும் உள்ளடக்குகின்றது.

**அன்ரோனியோ:**

ஆனால் மக்களுடைய எல்லா அம்சங்களையும் அல்ல.

**விவியன்:**

சரிதான். அப்படி மட்டும்தான் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், திருமண பந்தத்தில் ஈடுபடுபவர்கள் தாங்கள் எந்தெந்த விடயங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாக அறிந்திருக்கிறார்கள்.

**♦ இது கெட்ட நிமித்தங்கள் உள்ளதான ஒரு தொனியைக் கொடுக்கின்றது....!**

**விவியன்:**

இது அப்படிக் கெட்ட நிமித்தமானதாக இல்லை. ஆனால், எந்த ஒரு உறவு முறையும் ஒரு அபாயத்தை நோக்கியதுதான். ஒருவர் தன்னுடைய எதிரகால வாழ்க்கையை இன்னொருவர் மீதான விசுவாசத்தில் நம்பினார் என்றால், மற்றவரும் அதேயளவு அந்த விடயத்தில் அர்ப்பணிப்புள்ளவர் என்னும் உத்தரவாதத்தை விரும்புவார். எனக்கு அது அப்படி வந்து வாய்க்கவில்லை. ஏனெனில், என்னுடைய கணவன் இந்த அர்ப்பணிப்புத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்பாக என்னைப் போன்ற அபிப்பிராயத்தை சிறிதளவும் கொண்டிருக்கவில்லை.

**♦ நீங்கள் அதனைப்பற்றி எங்களுக்குக் கூற முடியுமா?**

**விவியன்:**

எங்களுடைய திருமணம் முடிந்த முதலாவது வருடத்திலேயே அவருக்கு வேறு வேறு பெண்களுடன் தொடர்புகள் இருந்தன. அத்துடன், கருச்சிதைவு தடைசெய்யப்பட்டிருந்த அந்தக் காலத்தில் நான் இரண்டு தடவைகள் கருச்சிதைவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது அவர் என்னை விட்டுவிட்டுச் சென்றார். பிறகு திரும்பி வந்தார். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். அதன்பின்பு என்னையும் குழந்தைகளையும் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். என்றைக்குமே எனக்கோ குழந்தைகளுக்கோ ஒரு வெள்ளிக் காசு கூடத் தந்ததில்லை.

ஆனால், இங்குதான் உங்களுடைய பிரச்சினை வருகின்றது. இதைத்தான் நான் சொல்கின்றேன். நீங்கள் திருமணபந்தத்தில் ஈடுபடும்போது ஒரு அபாயத்தை நோக்கிச் செல்கின்றீர்கள் என்று.

**♦ நீங்கள் திருமணம் செய்வதற்கு முன்பு உங்கள் கணவன் உங்களுக்கு விசுவாசம் இல்லாதவராக இருந்தாரா?**

**விவியன்:**

எனக்கு எப்படித் தெரியும்?

**♦ நீங்கள் உங்கள் கணவனுடன் இதுபற்றி எப்போதாவது பேசியிருக்கிறீர்களா?**

**விவியன்:**

இல்லை. அவர் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி என்னிடம் கேட்டார். சரி. நாங்கள் திருமணம் செய்வதற்கு முன்பு, நீங்கள் எனக்கு விசுவாசமற்றவராக இருப்பீர்களா என்று நான் கேட்கவில்லை. யுத்தகாலத்தின்பொழுது நீங்கள் இப்படியான நுண்ணிய விடயங்களில் உங்களுடைய நேரத்தை வீணடிக்கமாட்டீர்கள்.

என்னை நம்புங்கள்.

**♦ கிரகாம், உங்களுடைய திருமணத்தின் ஆரம்பத்தில், நீங்கள் விசுவாசமுள்ளவராக இருப்பீர்கள் என்று கருதப்பட்டதா?**

**கிரகாம்:**

ஒரு மறைமுகமான எண்ணம் இருந்தது. அதனை அவள் காப்பாற்றினாள். அவள் விசுவாசமாக இருந்தாள். என்னுடைய முதலாவது திருமண உறவில், இரண்டு சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய வேளைகளில் நான் விசுவாசமாக இருந்திருக்கின்றேன். என்னுடன் கூடப் பணிபுரிந்த ஒரு

**"இருவரிற்கிடையேயான உறவுக்கு வெளியில், ஒவ்வொருவரும் தனித்தனியே வேறு வேறு நபர்களுடன் பாலியல்ரீதியான உறவொன்றைப் பேணிக்கொள்வதென்பது அவரவர்களுடைய சுதந்திரத்துக்கான ஒரு அடையாளம் மாதிரித்தான். அதாவது, உங்களுடைய துணைவரைப்பற்றி நீங்கள் அறியாத விடயங்கள் அவர்களிடம் இருக்கும். நீங்கள் விளங்கிக் கொள்ள முடியாத விடயங்கள் அவர்களிடம் இருக்கும். அந்த விடயங்கள் முற்றாக உங்களிற்கேயானதல்ல."**

பெண்ணுடன் எனக்குத் திருமணத்தின் முன்பே உறவிருந்தது. அது திருமணத்தின் பின்பும் தொடர்ந்தது. இந்த விடயத்தைத் தவிர நான் விசுவாசமாக இருந்திருக்கிறேன். தனக்குத் தெரியாமல் ஏதோ நடந்து கொண்டிருக்கின்றதென்று என் மனைவிக்கு ஓரளவிற்குத் தெரியும். என்னுடைய இரண்டாவது திருமணத்தைப் பொறுத்தவரை நான் எப்போதுமே விசுவாசமற்றவனாக இருக்கவில்லை.

**♦ நீங்கள் உங்களுடைய முதல் மனைவியிடம் உங்களுடைய விசுவாசமின்மைபற்றிப் பேசியிருக்கிறீர்களா?**

**கிரகாம்:**

ஆம். அவள் அந்த உறவின் முழுமையான தாற்பரியத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளாவிட்டாலும்கூட ஓரளவு கூறியிருக்கிறேன்.

**கிறிஸ்:**

இந்த விவகாரத்தில் நீங்கள் குற்றவாளியாக உங்களை உணர்ந்தீர்களா?

**கிரகாம்:**

ஆம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கிறிஸ்:**

பிரத்தியேக காதலர்களுடைய அதியுயர் சக்தி வாய்ந்த நண்பர்கள் அல்லது ஆயுதங்கள் பொறாமையும் குற்ற உணர்ச்சியும் என்றுதான் நான் நினைக்கிறேன். விசுவாசமற்ற தன்மை என்பதை நான் அனுபவித்திருக்கிறேன். ஆனால் பொறாமையையோ குற்றவுணர்ச்சியையோ வெல்வதற்கு என்னால் எப்போதும் முடியவில்லை. எனவே, விசுவாசமான உறவுகளோடு மட்டும்தான் என்னால் உறவு கொண்டிருக்க முடியும்.

**டேவிட்:**

வாழ்க்கை முழுவதும் ஒரு துணைவருக்கு மட்டும் விசுவாசமுள்ளவராக இருக்கவேண்டும் என்பது ஒரு எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இதனைச் செய்ய முடிந்தவர்கள்மீது நான் பொறாமை கொள்கிறேன். ஆனால் பாலியல் உந்துணர்வும் ஏனைய காரணிகளும் மாறக்கூடியனவாக இருக்கின்றபொழுது, இது மிகச் சிலரினால் மட்டுமே நடைமுறைப்படுத்த முடிந்த எதிர்பார்ப்பு என்று நான் சுட்டிக் காட்டுவேன். இது குறித்து வாக்கெடுப்புகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இந்த வாக்கெடுப்புகளில் இருந்து திருமணத்துக்கு அப்பாற்பட்ட பாலியல் உறவுகள் அதிகமான அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**விவியன்:**

தங்களுடைய திருமணத்திற்கு அப்பால் வேறு உறவுகளைக் கொண்டிருப்பதற்கான சாத்தியப்பாடு இருக்கின்றதென்பது அவர்களுடைய மனதில் படிந்திருக்குமாயின், வேறொரு உறவை விருத்தி செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டுகொள்ளும். ஆயினும் எல்லாவிதமான உறவுநிலைகளும் இருக்கின்றன. எனக்குப் பலரைத் தெரியும். கணவனும் மனைவியும் திருமண பந்தத்திற்கு அப்பால் தனித்தனியே வேறுவேறு உறவுகளைக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் இந்த உறவுகளைப்பற்றித் தெரியும். அவர்கள் இந்த உறவுகளை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தத் திருமணம் எப்படியோ முறிந்து போகாமல் இருந்தது. இது அசாதாரணமானது. ஆனால் இப்படியும் நடைபெறுகின்றது.

**டேவிட்:**

திருமணம் என்பது வாழ்க்கை முழுவதற்குமான பந்தம் என்று பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். நிரந்தரமான உறவுகளிற்கான சாத்தியப்பாடுகளை ஊடறுக்கும், குறுக்கிடும் முக்கிய காரணிகளைச் சுட்டி, இறுதியில் இந்த எதிர்பார்ப்பு யதார்த்தத்திற்குப் புறம்பானது என்னும் உண்மையினை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

**அந்த நேரத்தில் நான் யாருடன் உறவு கொண்டிருந்தேனோ அவளிடம் நான் காதல் கொண்டிருந்தேன் என்று நான் நினைக்கவில்லை. எனவே, என்னால் வெகு இலகுவில் இன்னொருத்தியுடன் உறவுகொள்ள முடிந்தது. வெளியில் இருந்த உறவைப் பேணிக் கொண்டிருந்தபொழுது, நான் ஏற்கனவே உறவு கொண்டிருந்தவளிடம் காதல் கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. அப்போது எனக்குள் குற்ற உணர்ச்சி பரவத் தொடங்கியது.**

**அன்ரோனியோ:**

என் தற்போதைய உறவின் முதல் மூன்று வருட காலத்திலும், எங்களுடைய இந்த உறவுநிலை எப்படி இருக்கவேண்டும் என்று நான் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றவேண்டி இருந்தது. ஆரம்பத்தில் விசுவாசம் பற்றிய எதிர்பார்ப்பு எனக்கு இருந்தது. நான் ஸ்பானிய உழைக்கும் வர்க்கத்தின் பின்னணியில் இருந்து வந்தவன் என்பது இதற்கு ஒரு முக்கிய காரணியாகும். என் துணைவியுடன் நான் வாழ்வது என்றால், நான் அவளை நம்பவேண்டும். நான் எந்த அளவிற்கு அந்த அந்நியோன்னியத்தை கணக்கெடுத்துக்கொள்ள முடியும் என்பது பற்றி எனக்குத் தெரிந்திருக்க வேண்டும். நிச்சயமாக, இந்த விடயங்கள் கலாச்சாரரீதியாகவும், முற்று முழுதாக எழுந்தமானமாகவும் உருவாக்கப்பட்டவை என்பது எனக்குத் தெரிந்தபோதிலும், என்னுடைய பாலியல்ரீதியான உந்துதலை நான் கட்டுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. எனக்கு இன்னும் ஒரு பகிரங்கமான உறவிற்கு விருப்பமில்லை. ஆனால், எங்களில் ஒருவர் விசுவாசமற்றவராக இருக்கலாம் என்பதனை சில முக்கியமான காரணங்களுக்காக நான் ஏற்றுக் கொள்கிறேன்.

**♦ பேக்கா, உங்களுக்கு விசுவாசமின்மை பற்றி அனுபவம் இருக்கிறதா?**

**பேக்கா:**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்குப் 17 வயதாக இருந்தபோது எனது பெற்றோர்கள் மிகவும் கொடூரமான முறையில் பிரிந்தார்கள். என்னுடைய அப்பா, என் அம்மாவின் மிக நெருங்கிய சிநேகிதியுடன் துரோகத்தனமாக உறவு கொண்டிருந்தார். இந்த நிகழ்வு விசுவாசம் பற்றிய எனது எண்ணக் கருத்தை அதிகளவில் மாற்றியது. ஒருவர் இன்னொருவருக்கு விசுவாச மில்லாமல் இருப்பதற்கான தேவைபற்றி நான் எப்போதும் உணரவில்லை. ஆயினும், நான் என்னு டைய சிநேகிதனை விட்டுப் பிரிந்தபொழுது, தான் ஒருமுறை எனக்கு ஓரளவு விசுவாசமில்லாமல் நடந்திருக்கிறேன் என்று சொன்னான். மேலும் அவன், அப்படி நடந்தது ஏனென்றால், அவன் என்னை அதிகமாக இழந்திருப்பதாக உணர்ந்த தனால்தான் அப்படி நடந்தது என்றும் சொன்னான். இதனை நான், விசேடமாக என்னுடைய தந்தை யாரின் நடவடிக்கைகளினால் மிகவும் பாதிக்கப் பட்டிருந்ததனால், சிறிது அசௌகரியமாக உணர்ந் தேன். எனவே நான் எச்சரிக்கையானவளாக இருக்கின்றேன். நான் அநேகமானவர்களை நம்புவதில்லை.

**விவியன்:**

ஒருவரும் பாதுகாப்புத் தரமுடியாது.

**அன்ரோனியோ:**

ஒரு உறவு குறித்து ஒருவருடைய எதிர்பார்ப் புகள் என்ன என்பது ஒரு பொருட்டல்ல. சில சமயங்களில் இவ் விடயங்கள் பிழையாகிப் போவது என்பது இயல்பானது. நியாயமானது. ஆரோக்கி யமானது.

என் துணைவியை எனக்கு 5 வருடங்களாகத் தெரியும். நானும் அவளும் பெரிய அளவில் மாறி இருக்கிறோம். இந்த மாற்றத்தை நான் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும், அதாவது, உறவின் நிலை மாறிக்கொண்டு இருக் கின்றதென்பதனை.

**♦ கிறிஸ், உங்கள் இருவருடைய உறவுக்கும் அப்பால் வெளியே கொண்டிருந்த தொடர்புகள்பற்றி உங்களுடைய உணர்வுகளை எங்களுக்கு விபரிக்க முடியுமா?**

**கிறிஸ்:**

அந்த நேரத்தில் நான் யாருடன் உறவு கொண்டிருந்தேனோ அவளிடம் நான் காதல் கொண்டிருந்தேன் என்று நான் நினைக்கவில்லை. எனவே என்னால் வெகு இலகுவில் இன்னொருத் தியுடன் உறவுகொள்ள முடிந்தது. வெளியில் இருந்த உறவைப் பேணிக் கொண்டிருந்தபொழுது, நான் ஏற்கனவே உறவு கொண்டிருந்தளிடம் காதல் கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. அப்போது எனக்குள் குற்ற உணர்ச்சி பரவத் தொடங்கியது. நான் அறிவுபூர்வமாக பகிரங்க உறவை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் பொறாமையுடனோ, குற்ற உணர்ச்சியுடனோதான் இருப்பேன் என்பதனை நான் உணருகின்றேன். என்னுடைய இந்தக் கருத்து, மற்றவர்கள் இப்படி யான பகிரங்க உறவை வைத்துக் கொள்ளக்கூடாது என்பதல்ல. காதல் என்பது மிகவும் பிரத்தியேகமான ஒரு விடயம். அது மோசமாகத் தீங்கிழைக்கக் கூடியளவு பிரத்தியேகமானதாக இருக்கமுடியும் என்று நான் நினைக்கிறேன். அதனைக் கேள்விக்குட் படுத்த முடிவது நல்லது.

**டேவிட்:**

இறுதியில் இதனால் ஏற்படும் வலி சரியாக ஒரே மாதிரியானது. அதுதான் பெரும்பாலும் மிக முக்கியமான விடயமாகும். ஒரு உறவின் முறிவால் ஏற்படும் வலி.

**அன்ரோனியோ:**

ஆனால், எந்த உறவும் எப்படி இருக்கும் என்று முன்கூட்டியே கூறப்படுவதில்லை. இயங்கிக் கொண்டிருக்கும் உறவின் எல்லைகளும் அதன் சீர்ப்பிரமாணமும் ஒவ்வொரு நாளும் மீண்டும் திட்டமிடப்படுகின்றன.

**ஜேம்ஸ்:**

அங்கு ஏற்றுக் கொள்ளுதல்களும் விவாதங் களும் இருக்கமுடியும். உதாரணத்திற்கு, எனக்கு ஒரு பகிரங்கமான உறவு அண்மைக் காலமாக இருந்தது. பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் எங்களுடைய உறவுக்கு அப்பால் வேறு பாலியல் ரீதியான தொடர்புகளை பேணிக்கொள்வது நன்றாக இருந்தது. ஆனால், எப்படியும் பிரச்சினைகள் இருக் கும் என்றுதான் நான் இப்பொழுது நினைக்கின்றேன். ஏனெனில், பொறாமைப்படாமல் இருக்கும்படி ஒருவரைக் கேட்பது என்பது 'மனித உயிரியாக இல்லாமல் இரு' என்று ஒருவரைக் கேட்பதற்கு ஒப்பானதாகும். அவள் எனக்குச் சொல்லாமல் வேறு நபர்களுடன் தொடர்பு கொள்கின்றாள் என்பதனை நான் கண்டுபிடித்தபொழுது, அது என்னை ஒரு கொலையைச் செய்வதற்கு தூண்டுகிறது என்ப தனை நான் உணர்ந்தேன். இது நாங்கள் போட்டு வைத்திருந்த குறிப்பிட்ட விதிகளை உடைத்தது.

**♦ கிரகாம், உங்களுடைய முதல் திருமணத்தில், நீங்கள் விசுவாசமற்றவராக இருந்து, ஓரளவுக்கு இதுபற்றி உங்கள் மனைவியுடன் பேசிக் கொண்ட பிறகு எவ்வளவு காலம் உங்களுடைய திருமண பந்தம் நீடித்தது?**

**கிரகாம்:**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளுடைய இறப்பு வரையும். அந்தக் கால இடைவெளியில் குடும்பத்திற்கானதும் வீட்டுக்கானதுமான அர்ப்பணிப்பு எப்போதும் ஆடிப் போனதில்லை. சந்தேகமில்லாமல் குடும்பத்திற்கும் பிள்ளைகளுக்கும்.

**♦ மற்ற உறவினால் இந்த உறவுநிலை அச்சுறுத்தப்பட்டதாக நீங்கள் கருதுகின்றீர்களா?**

**கிரகாம்:**

ஆம், அப்படித்தான் நினைக்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக அது யுத்தகாலம். நான் மிக நீண்ட காலங்களாக வீட்டைவிட்டு வெளியில் இருந்தேன். சாதாரண நிலைமைகளில் நான் அப்படிச் செய்திருக்க மாட்டேன். இந்த நிலைமை பாரிய அளவில் வித்தியாசத்தை ஏற்படுத்தியது.

**♦ விவியன், உங்களுடைய கணவர் உங்களுக்கு விசுவாசமாக இல்லை என்பதை நீங்கள் கண்டுபிடித்த பொழுது நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?**

**விவியன்:**

நல்லது. இச் சம்பவம் எங்களுடைய திருமணத்தின் பின் ஆறு மாதங்களில் நடந்தது. என்னுடைய முழு நம்பிக்கையையும் தாங்கக் கொடுத்துவிட்ட ஒருவரினால் ஏமாற்றப்படுவதென்பது மனதைப் புண்படுத்துவதாக இருந்தது. ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்த உணர்வுகளிற்கு முன்பு மற்றவருடைய உணர்வுகளை எவ்வளவு துாரம் கணக்கிலெடுக்கிறார்கள் என்பது இவ்விடயத்தின் புதிராக எனக்குத் தெரிகிறது. ஒருவரும் தன் துணைவரைக் கோபப்படுத்தாமல் வாழ்நாள் முழுவதற்கும் தொடர்ந்து இருந்துவிட முடியாது என்று நான் எண்ணுகிறேன். இது குறித்து ஒருவரால் என்ன செய்யமுடியும் என்பதுதான் முக்கியம்.

**லூயிஸா:**

அவருடைய விசுவாசமின்மைகளை நீங்கள் ஏன் தாங்கிக்கொண்டீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை?

**விவியன்:**

நான் அவரை மிகவும் ஆழமாக விரும்பினேன். அவரில்லாமல் ஒரு வாழ்க்கையை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அடுத்த 50 வருடங்களும் அவர் பெண்களுக்குப் பின்னால் சுற்றிக்கொண்டுதான் இருப்பார் என்பது எனக்கு எப்போதும் மனதில் தோன்றவில்லை.

**♦ மொறிக்கா, ஒரு உறவில் இருந்து எதனை எதிர்பார்க்கிறீர்கள் என்பதுபற்றி ஏதாவது ஒரு எண்ணக் கருத்து உங்களிடம் உள்ளதா?**

**மொறிக்கா:**

நான் இந்த ஆளுடன் இப்போது மூன்று வருடங்களாக இருக்கின்றேன். இந்த உறவில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இது உண்மையில் காலாகாலமான உறவு போல் தோன்றுகின்றது. அவன் எனக்குத் தரமுடிவதைவிட எனக்கு மிக அதிக மாக வேண்டும் என்று இந்தக் கணத்தில நான் உணருகின்றேன். ஒரு கணநேர விசுவாசமின்மையைக்கூட எங்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்ற நினைப்பு வரும்போது சில வேளைகளில் சிறிது சஞ்சலமடைவதுண்டு. என்னுடைய பின் சட்டைப்பையில் கொண்டொம்களை வைத்துக் கொண்டு நகரத்திற்கு என்னால் செல்ல முடியுமாயிருந்தால் நான் அவனை மிகவும் குறைவாகத்தான் தொல்லைப்படுத்துவேன் என்று நான் உணருகிறேன். விசுவாசம் எனபதில் பாலியல் அம்சத்தின்மீது அதிகளவு அழுத்தம் கொடுப்பது என்பது உண்மையில் மட்டுப்படுத்தப்பட்டது என்றெண்ணுவதை என்னால் தடுக்க முடியவில்லை.

**அன்ரோனியோ:**

ஒருவருக்கு நீங்கள் விசுவாசமானவராக தொடர்ந்து இருந்தால், நீண்ட காலத்தில் உங்களுக்கு அவர்களுடனான பாலியல் உறவில் சலிப்பு ஏற்பட்டுவிடும். அதன் பின்பு நீங்கள் வேறு நபர்களைக் கவர்ச்சியானவராகக் காண்பீர்கள். இப்படியான ஒரு எண்ணத்தை• நாங்கள் ஏற்படுத்தப் பார்க்கிறோம். நானும் சிலவேளைகளில் என் துணைவியுடன் சலிப்பை உணர்ந்திருக்கிறேன். ஆயினும் சிலவேளைகளில் அப்படியல்ல. அவளுடன் வாழ்வதனால், வேறு பெண்கள் அல்லது ஆண்கள்கூட எப்படிக் கவர்ச்சியானவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கருத்திற் கொள்வதை நிறுத்திக் கொள்ளவில்லை. இது நான் எப்போதும் செய்து வந்த விடயம். எனவே இது பாலியல் இறுமாப்பு பற்றிய வினா அல்ல.. என் துணைவி என்னுடைய பாலியல் உறவுக்கான துணைமட்டும் அல்ல. அத்துடன் என்னுடைய அதியுயர் நம்பிக்கைக்குப் பாத்திரமான நபரும்கூட.

**♦ உங்களுடைய உறவின் இருத்தலை அச்சுறுத்தாத, பாலியல் உறவுரீதியான ஒரு சிறிய விசுவாசமின்மையை நீங்கள் எப்படிக் கையாளுவீர்கள்?**

**அன்ரோனியோ:**

நான் மிகவும் வேதனையடைவேன். அழுவேன். நான் எப்படி நடந்துகொள்ளுவேன் என்று எனக்குத் தெரியும். ஆனால் மீண்டும் நான் நினைக்கிறேன் என்னவென்றால் ஒரு உறவும் விசுவாசமின்மையும் என்பது அன்றாடம் கையாளும் விடயம் என்ற அடிப்படையில் நோக்கப்பட வேண்டும். ஏனெனில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"கணவன் மனைவியரிடையே ஒவ்வொருவரும் அவரவருடைய தனித்தன்மையைப் பேணிக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர்களிருவரும் ஒரிடத்தில் இல்லாதபொழுதும் 'நாங்கள்' என்று தங்களை கூறிக் கொள்ளும் கணவன் மனைவியரை நான் வெறுக்கிறேன். நீங்கள் ஒருவர்மீது உண்மையாகக் காதலாக இருந்தாலும் உங்களுடைய தனித்துவமான சொந்த அடையாளத்தை வைத்திருப்பது மிக முக்கியம். இதனால்தான் நான் திருமணத்தை நம்பவில்லை."**

நீங்கள் எப்போது தாக்கத்திற்குள்ளாவீர்கள் என்றோ எப்படி நீங்கள் நடந்துகொள்ளுவீர்கள் என்பதோ உங்களுக்கு முன்கூட்டியே தெரியாது.

**♦ லூயிஸா, நீங்கள் விவியனிடம், அவருடைய கணவனின் விசுவாசமின்மையை அவர் எப்படித் தாங்கிக் கொண்டார் என்று கேட்டீர்கள். உங்களுக்கு அப்படியொரு நிலைமை வந்தால் நீங்கள் எப்படி நடந்து கொள்ளுவீர்கள்?**

**லூயிஸா:**

நான் நீதியைக் கூறக்கூடியவள் அல்ல. ஆனால், நான் இதனைத் தாங்கிக் கொள்ளுவேன் என்று நினைக்கவில்லை. பொறாமையினால் அல்ல, முற்றாக கைவிடப்பட்டுவிட்டேன் என்ற ஏமாற்றத்தினால்தான். அத்துடன் அவர் வேறொரு இடத்திற்குச் செல்கிறார் என்பதை எனக்குச் சொன்னாலும் அவர் உண்மையில் அப்படிச் செல்கிறாரா என்றுதான் நான் எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பேன். இதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். எப்போதாவது அவர் வேறு யாருடனாவது பாலியல் ரீதியாக உறவுகொள்ளுவாராக இருந்தால் நான் அவரை மீண்டும் பார்க்கமாட்டேன் என்று நான் உண்மையிலேயே நான் அவருக்குச் சொல்லி இருக்கின்றேன்.

**விவியன்:**

என்னுடைய கணவன் இந்தப் பெண்ணுடன் சேர்ந்து போகாமல் இருந்திருந்தால் அது என்னை அழித்திருக்கும்.

**லூயிஸா:**

அது ஏனென்றால், அவர் உங்களுக்கு முற்றாக இல்லாமற்போவதைவிட, அவருடைய எல்லாவற்றுடனும் அவர் உங்களுடன் இருந்தால் போதும் என்று உணர்ந்திருக்கிறீர்கள்.

**விவியன்:**

இந்த முடிவுக்குத்தான் நான் வந்து சேர்ந்திருப்பேன் என்பதில் எனக்கு நிச்சயம் இல்லை. ஆனால் எப்படியோ எங்களுடைய இரண்டாவது பிள்ளை, குழந்தையாக இருக்கும்போதே அவர் என்னை விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். இந்த விடயங்களைப்பற்றியெல்லாம் தெளிவாகச் சிந்திக்கக்கூடிய ஒரு ஆரோக்கியமான நிலையில் நான் இருக்கவில்லை. அவர் எங்களோடு தங்கியிருந்தால் அவருடைய வளைப்புக்குப் போயிருப்பேன்.

**♦ ஜேம்ஸ், இவைகள் திருமணத்துடன் அல்லது இரு நபர்கள் இணைந்து வாழ்வதுடன் கூடிய எதிர்பாலுறவு முறைகள். அதிக கட்டுப்பாடுகளற்ற வரைவு கொண்ட உறவுமுறை பற்றிய உங்கள் அனுபவம் என்ன?**

**ஜேம்ஸ்:**

நிச்சயமாக நான் நல்ல சந்தோஷமாக இருந்த கட்டம் ஒன்று இருந்தது. அது கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு என்று சொல்லலாம். ஆனால், பின்பு நான் அவன்மீது ஆழ்ந்த ஈடுபாடும் உணர்ச்சியும் கொண்ட பொழுது பிரச்சனை ஆரம்பமாகியது. என் மனசின் ஒரு பகுதி "அவன் என் அன்புக்குரியவன்" என்றும், இன்னொரு பகுதி "அவன் கெட்ட ஒரு போக்கிரி" என்றும் ஒரே நேரத்தில் சொல்லியது. இது குறித்து நீங்கள் அக்கறைப்படமுடியாது என்று இறுதியில் நினைக்கவேண்டி வரும்போது அது உங்களுக்கு மிகவும் கஷ்டமான ஒரு விடயம். ஏதோ பிரச்சினைகள் இல்லாதது போலவும் மிகவும் பாதுகாப்பாக இருப்பது போலவும் இருக்கும். ஆனால், நம்பகமற்றவனாக ஒரு கொலைக்கத்தியுடன் நிற்கும் நேரங்களும் நிச்சயமாக உண்டு. விசுவாசமின்மை என்பது இங்கிருக்கின்றதோ அல்லது அங்கிருக்கின்றதோ என்பதல்ல என்றுதான் நான் நினைக்கின்றேன். இது அர்ப்பணிப்பின் சமநிலைமீதான இலகுவான ஒரு கேள்வியாகத்தான் இருந்தது. அவனுடன் ஒப்பிடும்போது நான் கண் மூடித்தனமான அர்ப்பணிப்பைச் செய்துவிட்டதாக உணருகிறேன்.

**மொறிக்கா:**

எனவே விசுவாசமின்மையோ அல்லது கட்டுப்பாடகளற்ற வரைவுபடுத்தப்பட்ட உறவோ சாத்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றதா?

**விவியன்:**

அது வாழ்க்கையில் இருந்து நீங்கள் எதைப் பெற விரும்புகிறீர்கள் என்பதில் தங்கியுள்ளது. எப்போதும் நீங்கள் ஒரு புதிய ஒரு சிலிர்ப்புக் காகவோ உணர்ச்சியூட்டலுக்காகவோ அலைந்து கொண்டிருப்பீர்களேயானால் நீங்கள் கவர்ச்சியாக இருக்கும்வரையும் அல்லது உங்களுக்கு அவை அலுத்துப் போகும்வரையும் நீங்கள் அவற்றைப் பெறுவீர்கள் அல்லது உங்களுக்கு அவை கிடைக்கும்.

**டேவிட்:**

பாலியல் தன்மை என்பது முக்கியமாக சரீரத்து டனும் அதனுடைய இன்பத்துடனும் முற்றாகச் சம்பந்தப்பட்டது. விசுவாசமின்மை ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று: பாலியல் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் இருவரும் ஒருவரையொருவர் சந்தோஷிக்கச் செய்வதன் அடிப்படையில் தங்கள் பாலியல் உறவுவெளியில் இருக்கும் பிரச்சினைகள் பற்றிப் பேசிக் கொள்வதில்லை. அநேகமான திரும ணங்கள் இந்த அடிப்படையில் கட்டப்படுவதில்லை - அவைகள் பாலியல்ரீதியில் மேலோட்டமானவை.

**அன்ரோனியோ:**

நீங்கள் ஒருவருடன் 15 அல்லது 20 வருடங்கள் வாழும்பொழுது ஒருவர் உங்களுக்கு நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் அதே பழைய நபராக இருந்து ஒன்றை வழங்குவதென்பது மிகவும் கடின மான விடயம் என்பதை நீங்கள் உணரவேண்டும், இதற்கு நீங்கள் எவ்வளவு அர்ப்பணிப்புள்ளவராக இருந்தாலும் அது ஒரு பொருட்டேயல்ல. இது நீங்கள் கையாளவேண்டிய விடயம்.

**டேவிட்:**

நான் என்ன சொல்கின்றேன் என்றால், ஒரு உறவு தொடரும்பொழுது அதனுடைய சுறுசுறுப்பும் இந்திரிய அனுபவ நாட்டமும் பலவீனமடைகின்றன. அதுபற்றிப் பேசிக்கொள்ளாமல் இருப்பதனால் உறவு திக்கற்றுப் போகின்றது.

**♦ கிறிஸ், உங்களுடைய விசுவாசமின்மைபற்றிய அனுபவம்பற்றி உங்களால் மீண்டும் பேசமுடியுமா? அது உங்களை எப்படிப் பாதித்தது?**

**கிறிஸ்:**

நான் ஒரு தொடர்ந்த உறவில் இருந்த ஆகக் கூடிய காலம் 3 வருடங்கள். ஆனால், பலர் தங்களு டைய உறவு மிகவும் பெறுமதி வாய்ந்ததென்று உணர்கிறார்கள் என்பது உண்மையாகப்படுகின்றது. அவர்கள் கொண்டிருக்கும் மிகவும் பெறுமதி வாய்ந்த இந்த உறவை பற்றியிருக்க விரும்பினால், இந்த பல்லுறவுகளிற்கான கவர்ச்சிகள் மாயத் தோற்றம் கொண்டவை என்று அவர்கள் உணர்கிறார்கள். ஆயினும், திருமணத்தின்மூலம் இவர்கள் அதிக தியாகம் செய்கிறார்கள். தங்களது நண்பர்களை இழந்த பல பேர்களை எனக்குத் தெரியும். அநேகமான விடயங்களில் அவர்கள் இனிமேலும் இரண்டு நபர்கள் அல்ல. அது மிகவும் வரையறைப்படுத்தப்பட்டது. நீங்கள் உங்களுடைய எதிர்கால உறவுக்காக அதைத் தடுப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டு முயற்சிக்கும்பொழுது, உங்களு டையதை நீங்கள் பெற்றுக் கொள்வதென்பதில் எந்தத் தீங்கும் இல்லை.

**அன்ரோனியோ:**

நீங்கள் எல்லாவற்றையும் ஒரேயடியாக வைத்தி ருக்க விரும்புகிறீர்கள். அது கடினம். ஏனெனில் எல்லாவற்றிற்கும் ஒரு விலையுண்டு என்பதை நீங்கள் வாலிபப் பருவத்தை அடைந்ததும் உணரு வீர்கள்.

**பேக்கா:**

கணவன் மனைவியரிடையே ஒவ்வொருவரும் அவரவருடைய தனித்தன்மையைப் பேணிக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர் களிருவரும் ஒரிடத்தில் இல்லாத பொழுதும் 'நாங்கள்' என்று தங்களை கூறிக் கொள்ளும் கணவன் மனைவியரை நான் வெறுக்கிறேன். நீங்கள் ஒருவர்மீது உண்மையாகக் காதலாக இருந்தாலும் உங்களுடைய தனித்துவமான சொந்த அடையாளத்தை வைத்திருப்பது மிக முக்கியம். இதனால்தான் நான் திருமணத்தை நம்பவில்லை. ஒருவரைக் காண்பதும் நான் அவருடன் வாழ்நாள் முழுவதும் சேர்ந்திருக்கப் போகின்றேன் என்று நினைப்பதும் எரிச்சலூட்டக்கூடிய விடயம்.

**♦ அதிக கட்டுப்பாடுகளற்ற, வேறு பாலியல்ரீதியான உறவுகளை அனுமதிக்கின்ற விரிந்த உறவுமுறையானது இந்த இரண்டுங் கெட்டான் நிலைக்கு ஒரு சாத்தியமான தீர்வாக இருக்க முடியுமா?**

**பேக்கா:**

ஆம். நீங்களும் உங்களுடைய துணைவரும் அவரவர்களை அவரவராகவே ஏற்றுக்கொள்வதை ஒத்துக்கொள்ள முடியுமாயின் இது சாத்தியப்பட முடியும். அங்கு எந்த ஏமாற்றமும் இல்லாதவரை இது நன்றாக இருக்கும், எனது முதலாவது சிநேகி தன், தான் எனக்கு கிட்டத்தட்ட விசுவாசமில்லாமல் இருந்திருக்கிறேன் என்று சொன்னதுபோல். அதனை விசுவாசமின்மை என்று நான் நினைத்தேன் ஏனென்றால், அவன் அதனை எனக்கு உரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரத்தில் சொல்லாததால்.

**♦ நீங்கள் உங்களுடைய துணைவருக்கு விசுவாசமாக இல்லாமல் இருந்திருக்கின்றீர்கள் என்பதைச் சொல்லாமல் இருப்பது நல்லதா?**

**டேவிட்:**

ஆம். அதனை வெளிப்படையாகச் சொல்லாமலிருப்பதுதான் நல்லதென்று நான் சொல்லுவேன்.

**♦ உங்களுடைய உறவுக்கு அல்லது உங்களுக்கு அது சுலபமானதாக இருக்குமா? அது எதைப் பாதுகாக்கின்றது?**

**டேவிட்:**

அது என்னைப் பாதுகாக்க காரணமாயிருப்பதை விட மற்றவரை அதிகம் பாதுகாக்க காரணியாயிருக்கும்.

**கிறிஸ்:**

நீங்கள் சிலவற்றை மறைக்க முடியாது. ஏனெனில், நீங்கள் ஒருவரைப் பாதுகாப்பதாக பாசாங்கு செய்கிறீர்கள். உண்மையாக இருத்தல் என்பது பரிபூரணமான ஆரோக்கியமானது.

**பேக்கா:**

நீங்கள் அவ்வளவு நெருக்கமாக ஒருவருடன் இருப்பீர்களானாலும், அது உண்மையில் மிக முக்கியமான விடயமாக இருந்தாலும் நீங்கள் அவருக்குக் கட்டாயம் சொல்லவேண்டும்.

**அன்ரோனியோ:**

அது உங்களுடைய உறவுக்கு முக்கியமான விடயம் என்றால், நீங்கள் மனந் திறந்து பேசவேண்டும். அந்த விடயம் விவாதிக்கப்பட வேண்டும். மறுபக்கத்தில், அது மிகவும் சாமானியமான விடயம் என்றால் அதை உங்கள் துணைவர் எவ்வாறு உணர்ந்துகொள்வார் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**விவியன்:**

ஏமாற்றம் நம்பிக்கையைக் கொலை செய்துவிடும். ஏனெனில் அடுத்த ஏமாற்றம் எப்பொழுது திரும்பி வரும் என்பது உங்களுக்கு எப்போதும் தெரிந்திருக்காது.

**ஜேம்ஸ்:**

அது நம்பிக்கையைக் கொலை செய்யும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஏனெனில் உங்களிற்கு உண்மைதான் சொல்லப்படுகின்றது என்பதில் நீங்கள் எப்போதுமே உறுதியாக இருக்கமுடியாது. இந்த உறவு பிரச்சினைகளைக் கையாளும் நிலையில் இல்லை.

**மொறிக்கா:**

இன்னொருவருடன் பாலியல்ரீதியாக உறவு கொள்ளுவதென்பது விசுவாசமின்மையின் மிகப் பெரிய செயற்பாடு என்பதையும் அது மிகப்பெரிய அளவில் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது என்பதையும் நான் ஆட்சேபிக்கிறேன். என்னுடைய வேலையின் சுமைகளைக் கொடுத்த உறவுநிலையை தக்க வைத்துக்கொண்டு, ஒன்றை மட்டும் தள்ளிவிட்டு சமரசம் செய்யும் ஒரு வழியைக் கண்டு பிடிப்பதற்கு விரும்புகிறேன். ஒரு நல்ல தனிமையான இடம் என்பதற்காக நான் இதை விட்டுவிட்டுப் போக மாட்டேன்.

**ஜேம்ஸ்:**

அதிகளவு கட்டுப்பாடுகளற்ற ஒரு உறவுநிலையில், கருத்துரீதியாக, நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதையே செய்யலாம். ஆனால், ஏமாற்றத்திற்கான பதில் என்ன?

**மொறிக்கா:**

அது அவனை மிகவும் காயப்படுத்தும், அதனால், நான் அதனைச் செய்யமாட்டேன். அது ஒரு பிரச்சினையாக அவனுக்கு இருக்கக்கூடாது என்பதை நான் உண்மையில் உணர்ந்துகொண்ட போதிலும்.

**லூயிஸா:**

நான் என்னுடைய துணைவருக்குச் சொல்ல மாட்டேன், ஏனெனில், அது அவரைக் காயப்படுத்தும் என்று சொல்வது பிழையானது. தன்னளவில் மிகமோசமான விசுவாசமின்மை என்பதுதான். மற்றவர்களுக்கு நீங்கள் ஏற்படுத்தும் வலிக்கு முன்பு உங்களுடைய சொந்த ஆசைகளை முன்னுக்கு வைக்கிறீர்களா என்பதுதான் கேள்வி.

**♦ உங்களுடைய துணைவருக்கு நீங்கள் நேர்மையாக இருப்பதென்பது நீங்கள் கருத்துரீதியாகச் சிந்திப்பதுமாதிரி நடைமுறையில் அவ்வளவு இலகுவானதா?**

**விவியன்:**


இந்த விடயங்கள் எப்பொழுதுமே அவ்வளவு சுலபமானவையல்ல. வாழ்க்கை என்பது சுலபமானதல்ல. வாழ்க்கை என்பது பாரபட்சமானதும் நீதியற்றதும் கடினமானதுமாகும். இது மிகவும் அபாயகரமான ஆச்சரியங்கள் நிறைந்ததென்று யாராவது நினைக்கிறார்களா? ஆனால், நீங்கள் கொள்கைகளுடன் வாழ்க்கையை ஆரம்பித்தீர்கள் என்றால் உங்களிடம் என்னென்ன கொள்கைகள் இருக்கின்றன என்பதாவது குறைந்த பட்சம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். நீங்கள் அவற்றை மீறலாம். ஆயினும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதாவது குறைந்த பட்சம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிவந்துள்ளது!





# பெண்கள் சந்திப்பு மலர் 2002

பெண்ணியம் பற்றிய
புரிதலில், உணர்தலில்
பாலவினைத் தொழில் பற்றிய
கருத்தோட்டங்கள்

**தொகுப்பு:**

**தயாநிதி**

**லக்ஷ்மி**

**தொடர்புகட்கு:**

**Tamil Women's Forum**
**c/o SALZ**
**Waiblingerstr. 59**
**70372 Stuttgart**
**GERMANY.**

---

**SAKTHI**
**Boks Oppsal**
**0619 Oslo**
**NORWAY.**


பால்வினைத் தொழிலைச் சட்டபூர்வமாக்கலாமா?
*- ப்ரெட் லெவி*

பால்வினைத்தொழில்: மறுபக்கம்....
*- ஜெயந்திமாலா (சுவிஸ்)*

பால்வினை
*- சந்திரவதனா செல்வகுமாரன் (ஜேர்மனி)*

உலகமயமாக்க,லும் தென்கிழக்காசியாவின் பால்வினை வர்த்தகமும்
*- சிந்துக்கரையாள்*

பால்வினை: பரிணாமம்
*- தீபா (ஜேர்மனி)*

சில முரண்கள்: குறிப்புகள்
*- தேவா (ஜேர்மனி)*

சென்னையில் ஒரு சின்ன வீடு
*- ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்*

மானிடராய் வாழ....
*- உமா (ஜேர்மனி)*

பாலியல் சிக்கல்களா? உரிமை மறுப்புக்களா?
*- பார்வதி கந்தசாமி (கனடா)*

பால்வினைத் தொழிலும் ஆண் மேலாதிக்கமும்
*- அந்திரியா ட்வார்கின்*

பெண்கள் சந்திப்பு மலர் 2001: எனது பார்வையில்...
*- சந்திரவதனா செல்வகுமாரன் (ஜேர்மனி)*

பயந்தாங்கொள்ளி
*- நிருபா (ஜேர்மனி)*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏகாதிபத்தியமும்
# லத்தீனமெரிக்காவின்
# அரசுசாரா நிறுவனங்களும்

ஜேம்ஸ் பெட்ராஸ்

தமிழில்:

நிர்மூல்யா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இக்கட்டுரையின் முதற்பகுதி தமிழகத்திலிருந்து வெளிவரும் 'காலக்குறி' இதழ்-9இல் வெளிவந்துள்ளது. அதன் இறுதிப்பகுதி இங்கு பிரசுரமாகின்றது. இலங்கை, இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் சமீப காலங்களில் அதிகரித்து வரும் அரசுசாரா நிறுவனங்களின் செயற்பாடுகளையும் அதன் பின்னால் இயங்கும் குழுக்களினதும், நபர்களினதும் சமூக அபாயம்குறித்து அக்கட்டுரை இன்றைய காலத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. வாசகர்களுக்கு அக்கட்டுரை கிடைக்காவிடின் 'அசை'யுடன் தொடர்புகொள்ளவும்.**

NGOக்களின் நிர்வாகிகள் திட்டங்கள் தீட்டுவதில் கைதேர்ந்து விட்டார்கள். "அடையாளம்", "உலகமயமாக்கம்" என்ற புதிய உத்திகளை அவர்கள் பொதுமக்களின் இயக்கங்களுக்குள் நுழைக்கிறார்கள். அவர்களது நடவடிக்கைகளும் எழுத்துக்களும் சர்வதேச ஒத்துழைப்பு, சுய உதவி, சிறு தொழில்கள் ஆகியவற்றை ஊக்குவித்து நவதாராளவாதிகளுடன் கொள்கைரீதியான பிணைப்பை ஏற்படுத்துகின்றன. அதே சமயம், மக்களை வெளிநாட்டுப் புரவலர்களின் கையை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளுகின்றன. பத்து வருடகால NGOக்களின் நடவடிக்கைகளின் பிறகு பெண்கள், குடியிருப்புகள், இளைஞர் அமைப்புகள் இங்கெல்லாம் உள்ள சமூக வாழ்வை முழுமுற்றாக அரசியல் பிரக்ஞையற்றதாக, முற்போக்கு சிந்தனையற்றதாக மாற்றிவிடுகின்றனர், இந்த தொழில் நிபுணர்கள், பெருவிலும் சிலேயிலும். எங்கெல்லாம் NGOக்கள் ஆழமாக காலூன்றினவோ அங்கெல்லாம் முற்போக்கான சமூக இயக்கங்கள் மடிந்து போயின.

நேரடியாக பாதிக்கும் விஷயங்கள் மீதி என உள்ளூர் போராட்டங்கள்தான் தோன்றி வருகின்ற இயக்கங்களுக்குள்ள ஆதாரம். NGOக்கள் "உள்ளூர்" என்பதை வலியுறுத்துவது உண்மைதான். ஆனால் "உள்ளூர்" நடவடிக்கைகள் எந்தத் திசையில் போகின்றன என்பதுதான் முக்கியம். அவை சமூக அமைப்பிலுள்ள பிற முக்கிய விவகாரங்களைப்பற்றி விவாதங்களை எழுப்புமா, பிற உள்ளூர் சக்திகளுடன் இணைந்து அரசையும் அதன் ஏகாதிபத்திய ஆதரவாளர்களையும் எதிர்க்குமா அல்லது உள்வயமாகத் திரும்பி வெளிநாட்டு புரவலர்களை எதிர்பார்த்துக் கிடக்கும் சிறுசிறு பகுதிகளாகப் பிரியுமா என்பதுதான் கேள்வி. NGOக்களின் கொள்கை இரண்டாவதைத்தான் ஊக்குவிக்கிறது.

NGO அறிவுஜீவிகள் அடிக்கடி "ஒத்துழைப்பை"ப் பற்றி எழுதுகிறார்கள். அதில் நவதாராள அரசுகளின் வெளிநாட்டுப் புரவலர்களின் நிதியைப் பெற, தரவேண்டிய விலைபற்றியோ, கட்டுப்பாடுகள் பற்றியோ விவரிக்கப்படுவதில்லை. படுதரகர்களாகவும் தூதர்களாகவும் செயல்படுகிற, வெளிநாடுகளில் பணத்தை தாராளமாக புழங்கவிட்டு, புரவலர்களுக்கும் உள்ளூரில் அதை வாங்குபவர்களுக்கும் ஒத்துவரக்கூடிய திட்டங்களுக்கு நிதியை ஒதுக்கி வரும் இந்த அடிப்படைத் தொழில் முனைவோர்களது அரசியல் லேபர் காண்ட்ராக்டர்களின் அரசியலை ஒத்தது. லேபர் காண்ராக்டர்களை மறந்திருக்கமுடியாது. இவை பெண்களை பயிற்றுவிப்பதாக சொல்லி ஒன்று சேர்த்து பெரிய உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் உற்பத்திப்பொருட்களை விற்கும் சிறு நிறுவனங்களை ஏற்படுத்தி, குறைந்த கூலியில் உழைக்கச் செய்த விவகாரம் நடந்து வெகுகாலம் ஆகிவிடவில்லை. NGOக்களின் இந்தப் புதிய அரசியலும் Compradores இன் அரசியலும் ஒன்றுதான். இவை தேசிய உற்பத்தி எதையும் செய்வதில்லை. மாறாக வெளிநாட்டுப் புரவலர்களை உள்ளூர் உழைக்கும் மக்களுடன் இணைக்கின்றன. (சுய உதவி, சிறு தொழில்கள்) நவதாராள அரசு தொடர்ச்சியாக நீடிக்கிறது. இந்த NGOக்களின் நிர்வாகிகள் உண்மையில் அரசியல் நடிகர்கள்தான். அவர்களது திட்டங்களும் பயிற்சியும் தொழிலாளர் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கம் கொண்டவையல்ல. ஆனால், வர்க்கப் போராட்டத்திலிருந்து மக்களைத் திசை திருப்பி தம்மை ஒடுக்குபவர்களுக்கே ஒத்துழைப்பு தருமளவு அவர்களிடையே பாதிப்பை உண்டாக்குகின்றன.

இந்தக் கண்ணோட்டத்தை நியாயப்படுத்தி, NGO கொள்கைகள், அடிக்கடி நடைமுறை சாத்தியம் அல்லது யதார்த்தம் இவற்றை துணைக்கழைப்பதுண்டு. இதற்காக புரட்சிகர இடதுசாரிகளின் வீழ்ச்சி, முதலாளித்துவம் கிழக்கில் பெற்றுள்ள வெற்றி, மார்க்ஸியத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி, போதிய மாற்றுக்கள் இல்லாமல் போய்விட்ட நிலை, யு.எஸ்.இன் வலிமை, ராணுவ ஆட்சிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிழ்ப்பு அல்லது ஒடுக்குமுறை ஆகியவற்றை சாக்காக முன்வைக்கின்றன. இந்த சாத்தியப்பாடு இடதுசாரிகளை உலக வங்கி திணிக்கும் தாராளச் சந்தை, அமைப்பியல், சீரமைப்பு போன்ற நிலைமைகளில் இணைந்து செயல்பட ஒப்புக்கொள்ள வைப்பதற்காக உபயோகிக்கப்படுகிறது. ராணுவம் திணிக்கும் தேர்தல் வரைமுறைகளுக்குள் அரசியலை அடக்கிவிட முனைகிறது.

NGO கொள்கையின் இந்தச் சாத்தியப்பாடு ஒரு பக்கச் சார்புடையது அவை நவதாராள தேர்தல் வெற்றிகளை மட்டுமே எடுத்துரைக்குமே தவிர, தேர்தலுக்குப் பின்னான பொதுமக்கள் எதிர்ப்புக்களை, பெருமளவு மக்களை பாராளுமன்றத்துக்கு வெளியிலான திட்ட நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் பொது வேலைநிறுத்தங்களைப் பற்றிக் கண்டுகொள்வதில்லை. எண்பதுகளின் கடைசியில் நிகழ்ந்த கம்யூனிச வீழ்ச்சியைப் பார்க்கும் இவை, தொண்ணூறுகளின் மத்தியில் முற்போக்கு சமூக இயக்கங்கள் மீண்டும் எழுவதை பார்க்க மறுக்கின்றன. தேர்தல் அரசியல்வாதிகளின்மேல் ராணுவம் விதிக்கும் கட்டுப்பாடுகளை விளக்கும் இவை, ஜபாடிஸ்டா கொரில்லாக்களால் காரகாஸின் நகர்ப்புற எழுச்சியால், பொலிவியாவின் பொது வேலைநிறுத்தங்களால் ராணுவத்துக்கு ஏற்பட்டிருக்கும் சவால்களை கவனிக்க மறுக்கின்றன. சுருங்கச் சொன்னால், பகுதி அளவில் அல்லது உள்ளூர் அளவில் ராணுவத்தின் தேர்தல் வரையறைகளுக்குள் தோன்றி வளரும் போராட்டங்களின் ஆற்றலை, மக்களின் அடிப்படைத் தேவைகளையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றத் தவறும்போது அவை இந்தக் கட்டுப்பாடுகளுக்கு மேலேயும் வெளியேயும் இப்போராட்டங்கள் வளருவதை அலட்சியம் செய்கிறார்கள்.

NGOக்களின் நடைமுறை நவதாராளவாதிகளின் தீவிரவாதத்துக்கு பொருத்தமானது. 1990களில் நவதாராளவாத கொள்கைகளில் ஒரு முற்போக்குத் தன்மை உருவானது. இது மேலும் அதிகமான முதலீட்டினை வழங்கி வெளிநாட்டு வங்கிகளையும் பன்னாட்டு நிறுவனங்களையும் கொழுக்க வைத்து நெருக்கடியை வளரவிடாமல் ஒடுக்கும் நோக்கம் கொண்டது. உதாரணமாக பிரேசில், ஆர்ஜன்டைனா, மெக்ஸிக்கோ, வெனிசூலா இந்த நாடுகளில் பெட்ரோலியம் தொழிலுக்குக் குறைந்த ஊதியமும் குறைவான சமூகப் பாதுகாப்புத் தொகையையும் அளித்தல், அதீத வரிவிலக்கு அளித்தல், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களை முற்றிலுமாக விலக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. இன்றைய லத்தீன் அமெரிக்க வர்க்கக் கட்டமைப்பு மிகவும் இறுக்கமானது. அரசுகள் முன்னைக் காட்டிலும் அதிகமாக ஆளும் வர்க்கங்களுடன் நேரடிப் பிணைப்புள்ளவை. இதில் முரண் என்னவென்றால் இந்த நவதாராள வாதிகள் உருவாக்கும் பிரிவுபட்ட வர்க்க அமைப்பு NGO கண்ணோட்டத்தில் இருப்பதைவிட மாக்ஸியக் கண்ணோட்ட சமூகம்தான் அதிக ஒற்றுமை உடையதாக இருக்கிறது.

அதனால்தான், NGO இசம் மார்க்சியத்திற்கு மாற்றாக அமைந்து விடுகின்றது. லத்தீன் அமெரிக்காவில் உள்ள மாக்ஸிய அறிஞர்கள், ஒரே மாதிரியான அரசியல் பின்விளைவுகளை எதிர்நோக்கி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூக இயக்கங்களுக்காக எழுதியும், பேசியும் வருகிறார்கள். இவர்கள் அடிப்படையில் இயக்கத்தின் ஒரு அங்கமாக செயல்படும் அறிஞர்கள். வர்க்கப் போராட்டத்திற்கு தேவையான ஆராய்ச்சியையும் அறிவையும் வழங்கும் அறிஞர்கள், நிறுவனங்கள், கல்வித்துறை சார்ந்த கருத்தரங்குகள்,வெளிநாட்டு நிறுவனங்கள், சர்வதேச மாநாடுகள், அதிகாரிகளின் அறிக்கைகள் ஆகியவற்றில் மூழ்கிப்போயிருக்கும். Post Marxist Ngo அறிவுஜீவிகளுக்கு எதிரிடையானவர்கள் உள்ளூர் போராட்டங்களின் முக்கியத்துவத்தை நன்கறிந்தவர்கள். இந்தப் போராட்டங்களின் வெற்றி தேசிய அளவில் அரசதிகாரத்தின் மீது வர்க்கங்களுக்கிடையிலான சண்டைகளின் விளைவு என்னவாக இருக்கிறதோ அதைப் பொறுத்தது என்றும் இந்த மாக்ஸிய அறிஞர்கள் ஒப்புகிறார்கள்.

அவர்கள் குறிப்பிடுவது நவதாராளமயத்துடன் ஒத்துழைப்பதும் வெளிநாட்டு நிதியின் படிமுறை ஒருமைப்பாடும் அல்ல. மாறாக வர்க்க ஒருமைப்பாடும், வெளிநாட்டு உள்நாட்டு ஒடுக்குபவர்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்டுள்ள குழுக்கள் (பெண்கள், கறுப்பர்கள்) தங்களுக்குள் ஒருமைப்பாடு கொள்வதும்தான். அவர்கள் கவனம் செலுத்துவது வர்க்கங்களைத் துண்டாடுகிற சிறு குழுக்களை குறைந்த காலத்திற்கு அமைதிப்படுத்தும் நன்கொடைகளின் மீது அல்ல. பொது நடவடிக்கைகளின் மூலம் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது பொதுவான பொருளாதார நிலைமையை எதிர்த்து கூட்டு முன்னேற்றத்துக்காக போராடுவதில்தான் இவர்களின் கவனம் இருக்கிறது.

மார்க்ஸிய விமர்சன அறிஞர்களின் வலிமை அவர்களது எண்ணங்கள் மாறிவரும் சமூக யதார்த்த நிலைமைகளுக்கு ஏற்ப அமைந்து இருப்பதுதான். வர்க்கங்கள் பிரிவுபடுவதும், வன்முறையான சண்டைகளும் அதிகரித்து வருவதும் கண்கூடு. எனவேதான், நிறுவனரீதியில் பார்த்தால் எண்ணிக்கையில் குறைவு பட்டிருக்கும் மார்க்ஸிஸ்டுகள் மெக்ஸிக்கோவின் Zapatista முதல் பிரேஸிலின் MST வரையான புதிய தலைமுறை புரட்சிகர போராளிகளுடன் இணையத் தொடங்கும்போது போர்த்திறனின் அடிப்படையில் வலிமை மிக்கவர்களாகி விடுகிறார்கள். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாதியமும் சமூக மாற்றமும்

தலித்தியம் சாதியடிப்படையிலான ஒன்றுபடலுக்கு அறைகூவுகிறது. அது இயல்பிலேயே ஏனைய சாதியினரை எதிர்நிலையில் நிறுத்தும். சாதியத்தை விரும்பாதவர் அனைத்துச் சாதியிலும் உண்டு.

என். ரவீந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### நோக்கம்:

இக்கட்டுரை மேல்வரும் மூன்று அடிப்படையான விஷயங்களைத் தெளிவுபடுத்த முயலும் :

1. சாதியம் எந்தவொரு இனத்தினரதோ அல்லது சமூகப் பிரிவினரதோ திட்டமிட்ட சதியால் கட்ட மைக்கப்பட்ட ஒன்றல்ல. அது எமது சமூக வரலாற்று இயக்கப்போக்கின் விசேடித்த சூழல் ஏற்படுத்தியுள்ள ஒரு அமைப்பு. எமது சொந்த வளர்ச்சிப்போக்கில் இல்லாமற்போயொழிவது. சாதியத்தின் தோற்றம், வளர்ச்சி - இன்றைய நிதர்சனம் பற்றிய தெளிவு, சாதிய ஒழிப்புச் செயல்வீரர்கட்கு அவசியமானது.

2. சாதிய இறுக்கம், பிராமணிய ஆதிக்கக் கருத்தியலால் மட்டும் சாத்தியப்படவில்லை. யதார்த்தத்தில் தனக்குக் கீழுள்ள சாதியை ஒடுக்குவதில் தனது அடிமை நிலையைச் சகிப்பது ஒருபுறம்; அதை விடவும் இன்னொரு பக்கம், பொதுப்புத்தி நிலையில் ஒவ்வொரு சாதியும், தம்மை மேலான பண்புடையதாகக் கணிப்பதில் உள்ளது. ஒவ்வொரு சாதிப் பிரிவினரும் ஏனைய வர்களைவிட மேலானவராக கட்டமைத்துள்ள ஐதீகங்களின் அடிப்படையில் அகநிலை ரீதியாகத் திருப்தி கொள்வதானது சாதிய அமைப்பு நீடிப்பதற்கு அடிப்படையாக அமைகிறது.

3. வர்க்கங்களை அறவே ஒழித்து, சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதனூடாகவும், பண்பாட்டுப் பேரியக்கங்கள் தொடர்ச்சியாக நடத்தப்படுவதன் வாயிலாகவும், சாதிய ஒழிப்பைச் சாத்தியமாக்க முடியும். சாதியத்துக்கு எதிரான பண்பாட்டுப் பேரியக்கங்கள் இடைவிடாது முடுக்கி விடப்படுவதன் மூலம் சமத்துவத்துக்கான போராட்டம் விரிவடையும் - வெற்றி கொள்ளும். சமத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியப்படும் முதற் கட்டமாகிய சோஷலிச சமூகம், பரந்த ஜனநாயகத் தன்மையுடையது, சாதியத்துக்கு எதிரான இறுதிப் போராட்டத்துக்கு ஏற்ற பண்பாட்டுப் பேரியக்கங்கள் சோஷலிச சமூக அமைப்பில் முனைப்படைந்து, சோஷலி சத்தின் உச்சப்படி நிலையில், சாதியம் முழுதாய்த் தகர்ந்து போய்விடும்.

இன்றைய உலகமயமாக்கல் புவிப்பரப்பை ஒரு கிராமமாகச் சுருக்கி வருகிறதாம். இந்தக் கிராமத் தினுள் மனித அடையாளங்கள் எப்படியிருக்கும்? எல்லோரும் ஓர் விலை, ஓர் நிறை, என்பதாகவா? இல்லை! வெள்ளை - கறுப்பு, செல்வந்தன் - ஏழை, அறிஞன் - அறிவிலி, பெரும்பான்மை - சிறுபான்மை, ஆண் - பெண், ஆண் - அலி, மேலோர் - கீழோர் என்பவையும், இன்னும் பலவாய், ஒவ்வோர் தனிமனிதர்களிடையேயும் பேதங்கள் தவிர்க்க முடியாதவை என்ற வகையில் பேதம் சர்வ வியாபகமானது என்பதே உலகமயமாதல் கோட்பாட்டாளர் கருத்தியல்.

ஆக, ஒரு கிராமமாய்ப் பொருளுற்பத்தி - விநியோக அடிப்படையில் சுருங்கிவிட்ட இந்த உலகில், ஒவ்வொருவரும் தனி உலகமாய்ச் சுருங்கிப் போய்விட்ட அவதியே ஏற்பட்டுள்ளது. அந்த அவதிக்கு மாற்றுத் தேடும் வண்ணம் மதஅடிப்படை வாதங் களும், இனவெறி அடையாளங்களும் உலகெங்கும் பல குழுக்களைத் தோற்றுவித்துள்ளது. ஒவ்வொன் றும் எதிர் மத - இனக்குழுக்களை முட்டி மோதித் துவம்சம் செய்துவிடத் துடிக்கின்ற வெறித்தனம், காட்டுமிராண்டி நிலைக்கு மனிதகுலத்தை வழி நடத்திச் செல்கிறது.

இத்தனிக்குழு அடையாளத்தில் எமது சமூகத் துக்கு சாதி மேலதிக கொடுப்பினை. பூமண்டலத்தின் எந்தவொரு மூலைமுடுக்குக்குப் போயினும் நாம் மத - இன அடையாளங்களுடன் மட்டுமின்றிச் சாதியுடனுந்தான் பிரவேசிக்கிறோம். இப்பிளவுபட்ட காட்டுமிராண்டி நிலையிலிருந்து மனிதகுலம் ஒன்று எனும் பொதுநிலைக்கு முன்னேறத் தடையாக சாதி இன்னமும் எம்மைத் தொடர முடிவது எப்படிச் சாத்தியமாகிறது? இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உன்னத கோஷத்துடன் வரலாற்று அரங்கில் பிரவேசித்த தமிழர் சமூகம் அதனைச் சாதிக்க முடியாது போனது ஏன்? உலகமயமாதல் 'யாதும் ஊரே' என ஒப்புவித்து ஒரு குடைக்கீழ் கொணர்ந்து ஒவ்வொருவரையும் பகையாளியாய் முட்டிமோத வைப்பதுபோல்தான் அன்றைய தமிழர் கனவும் நிர்மூலமானதா? இந்த மோதலில் சாதி நீடிக்க முடிவது எப்படி?

எமக்குள் எழும் ஓராயிரம் கேள்விகளில் சிலவற்றை எழுப்பி, அவற்றில் தனது தர்க்கத்தை முன்வைக்க இக்கட்டுரை முயலும்.

நம்மில் பலரிடமும் இன்னும் அதிக கேள்விகள் உண்டு. விவாதிப்போம், விடை தேடுவோம், ஒன்றுபட்டு செயலாற்றி சாதியொழிப்பு வாயிலாக இறுதிப் பதிலைக் கண்டடைவோம். இனி, இந்த இடத்துக்கான கேள்விகளுக்குள் -

### 1. எமது சமூகத்தில் சாதியமா, வர்க்கமா வலிமை பெற்று விளங்குகிறது?

'எழுதப்பட்ட வரலாறு முழுமையும் வர்க்கப் போராட்ட வரலாறாகவே இருந்துள்ளது' என்றனர் மார்க்சிய மூலவர்கள். கிரேக்க - ரோம் அடிமைச் சமூகமும், அடிமைப் புரட்சியும், பேறாக நிலவு டைமைச் சமூகமும், இறுதியில் முதலாளித்துவ சமூகமும் எனும் வரலாற்றுப்போக்கை இனங் காட்டினர். எதிர்காலத்தில் சோஷலிச சமூகம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்து முழுமையாக பொதுவுடைமை அமைப்பும் வந்தமையும் என்பதை மாக்ஸிய மூலவர்கள் எடுத்துக் காட்டினர்.

இந்திய சமூக அமைப்பின் வரலாற்றைக் கூறும் போது விவேகானந்தர் வேறுவகையில் சொன்னார். இங்கே தொடக்கத்தில், பிராமணர்களின் ஆட்சியும், பின்னர் சத்திரியர்கள் ஆட்சியும், இன்று வைசியர்கள் ஆட்சியும் நடந்துள்ளன. எதிர்காலத்தில் சூத்திரர்கள் ஆட்சி மலரும் என்றார் விவேகானந்தர். வர்த்தகத்துக்கு வந்த வெள்ளையரின் ஆட்சியை அவர் வைசியர் ஆட்சியாக இனங்கண்டார். சுதந்திர இந்தியாவில் சூத்திரர் ஆட்சி சாத்தியப்படும் எனக் கருதினார். சுதந்திர இந்தியாவில் இன்றுவரை சொத்துடையோர் ஆட்சி என்ற வகையில் வைசியர் ஆட்சியே தொடர்ந்து வருகிறது. எதிர்காலத்தில் உழைப்பவர் அரசு (ஒடுக்கப்பட்ட சாதிகள் தலைமைப் பண்பேற்பது) சித்திக்கும்போது விவேகானந்தர் கனவு பலிதமாகும்.

இங்கே வர்க்கங்கள் இல்லையா? சாதிய வரலாறாகக் காண்பது சரியானது தானா? எமது சமூக வளர்ச்சிச் செல்நெறி சாதிகளின் வரலாறாகவே உள்ளபோது, வர்க்கக்கதை பேசல் வலிந்து கோட லாகவே அமையும். 'ஐயோ' என்ற குரலுக்கு சாதிசனம் தான் வரும்; சரி, துக்கத்தில் சாதியையும் கடந்து வர்க்க பந்தம் வேலை செய்யும் என்று உதார ணங்கள் அடுக்க முடியுமா, பரவாயில்லை! சந்தோ ஷத்தில், கல்யாண பந்தத்தில், பலவகைச் சடங்கு களில், திருவிழாக்களில் எப்படிச் சங்கதி?

அடிமட்டத் தொழிலாளர்களில் மிகமிகப் பெரும் பான்மையாக இருப்பது யார்? நகர சுத்தித் தொழி லாளர்களுக்கு ஆட்சேர்க்கும்போது இட ஒதுக்கீடு அவசியமானது தானா? எந்தப் பிராமணன் அந்த வேலைக்கு விண்ணப்பிக்க வருவான்? வர்க்கப் படிநிலைகளுக்குள் பெரும்பாலும் சாதிகள் பொதுப் படி அடுக்கப்பட முடியும் என்பதே உண்மை. உதிரியாகச் சிலபேர் இடம் மாறிப்போதல் விதிவிலக்கே. குறித்தவொரு சாதியை எந்த வர்க்கத்தில் இனங்காணலாம் என்பதை ஓரளவு சரியா கக் கூறிவிட முடியும். இங்கே வர்க்க பேதத்தை விடவும் சாதியம் பலமாக வேரோடியுள்ளது என்பதை எவராவது வறட்டுப் புத்தகவாதி மட்டுமே மறுக்க முன்வருவார்.

**2. சாதியம் வலிமை பெற்றுள்ள எமது சமூகத்தின் விடுதலையைத் தலித்திய நோக்கில் அலசுவதன் மூலம் ஈட்ட முடியாதா?**

ஒடுக்கப்பட்ட மக்கள் (தலித்) தமது நோக்கில் சமூகத்தை மறுபடைப்புச் செய்யும் தலித் இலக்கிய உருவாக்கம் மராட்டியத்திலும் - ஈழத்தமிழிலும் அறுபதுகளில் தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளன. ஆரம்பத்தில் இவை வர்க்க நோக்கில் சமூகத்தை தலித் உணர்வுடன் கட்டவிழ்த்து, கலை-

**ஆரியர்கள் வால்கா நதிக்கரையில் இருந்து இந்தியா நோக்கி நாடோடிகளாக வந்தார்கள். ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் ஊடாக, ஆங்காங்கே குடியிருப்புகளை ஏற்படுத்தியபடி வந்து, வட இந்தியாவின் ஆரியவர்த்தம் முழுமையும் பரவினர். வால்காவிலிருந்து ஆப்கானிஸ்தான்வரை சாதிக் கட்டமைப்பு இல்லையே, இங்கு மட்டும் சாதிகள் தோன்றினவென்றால் அதற்கு ஆரியர்கள் மட்டுமே காரணம் என எப்படிக் கூறிவிட முடியும்?**

இலக்கியங்களாக மறுபடைப்புச் செய்தன. ஆங்காங்கே ஒடுக்குமுறை மீதான ஆத்திர உணர்வு காரணமாக, சாதிய வக்கிரங்கள் தவிர்க்கவியலாமல் வெளிப்பட்டதுண்டு. எது சாதிய வக்கிரம், எது வர்க்கப் பார்வை என்ற கடும் விவாதங்கள் இடம் பெற்றன. மனிதகுல விடுதலையுடன் மட்டுமே சாதிய ஒழிப்புச் சாத்தியம் என்பதால், வர்க்கப்பார்வையின் அவசியத்தையே தாமும் வலியுறுத்துவதாய் சாதிய வக்கிரக் குற்றச்சாட்டுக்குள்ளான ஒவ்வொருவரும் மீண்டும் மீண்டும் பிரகடனப்படுத்தினர். இதற்குத் தமிழின் முதல் தலித் இலக்கிய கர்த்தாவாகிய கே.டானியல் சிறந்த எடுத்துக்காட்டு.

எண்பதுகளின் பின்னர்தான், தமிழகத்தினூடாகத் தான் தலித்திய நோக்கில் சிந்திப்பது பற்றிய விவாதங்கள் எழுந்தன. இன்று பெருகியுள்ள சாதி மோதல்களுக்கும், இத் தலித்தியத்துக்கும் நேரடி யாகவோ மறைமுகமாகவோ உறவிருப்பதை அவதா னிக்க முடியும். தலித்தியச் சிந்தனை சாதிகளிடையே உக்கிரமான மோதல்களையே தூண்டியுள்ளது. அதுவும் மிகவும் பிற்படுத்தப்பட்டோரும் ஒடுக்கப்பட்ட மக்களும் இரத்தம் சிந்தும் கொடிய அவலம். உயர் சாதியினர் எனப்படுவோர். மோதும் சாதியினரை வேடிக்கை பார்ப்பதுடன் கேவலப்படுத்தவும் செய்கின்றனர்; இந்த மோதல்களினூடாகத் தமது மேலிருப்பை இன்னும் இறுக்கமாக உறுதிப்படுத்திக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கின்றனர். இது தலித்திய நோக்கின் பலவீனத்தை (மிகச்சரியாகச் சொன்னால் பின்பற்றும் சாதாரண மக்களின் நோக்கத்துக்கு நேரெதிர் விளைவைத் தரும் வகையில் 'திட்டமிட்ட சதியை') வெளிப்படுத்துகிறது. தலித்தியத்தின் பின்னால் இருக்கும் திட்டமிட்ட சதி வேறொன்றுமில்லை - உலகமயமாதல்.

வர்க்கப் பார்வையில் சாதியத்துக்கு எதிராகப் போராடினால் மட்டும் எதிர்பார்க்கும் நோக்கத்தை எட்டிவிட முடியுமா? முடியும், முடிந்திருக்கிறது.

**3. வர்க்கப்பார்வை எவ்வகையில் சாதியத் தகர்ப்புக்கான பாதையைத் தரமுடியும்?**

அறுபதுகளில் மராட்டியத்தில் தலித் இயக்கம் தொடக்கம் பெற்றபோது வர்க்கப் பார்வை வழிகாட்டும் மார்க்கமாய் அமைந்தது. அவ்வாறே ஈழத்தில் சாதியம் முனைப்புற்றுள்ள யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் முடுக்கி விடப்பட்டபோது தலித்தியம் முளைவிடாத வகையில் கூர்மையான தத்துவார்த்தப் போராட்டத்துடன், வர்க்கப் பார்வையில் அப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இன்றைய உலகமயமாதல் தலைமைப் பாத்திரம் ஏற்று சுரண்டலுக்கான உலகமயச் சுதந்திரம் நிலவுகின்ற, சுரண்டற் போட்டிக்குக் குரோதம் முனைப்புற்ற காலமல்ல அது.

அறுபதாம் ஆண்டுகளில் சோஷலிசத்தின் சர்வதேசியக் கோட்பாடு முனைப்புடையதாயிருந்தது. உலகமயமாதல் கோட்பாட்டிலிருந்து சர்வதேசிய கோட்பாடு எவ்வகையில் வேறுபட்டது?

நடைமுறை உதாரணம் ஒன்றைக் காண்போம். பெயர் தெரியாத ஒரு வியட்நாம் கிராமத்திலோ - வேறெந்த ஒரு நாட்டுக் குக்கிராமத்திலோ - அமெரிக்கா குண்டு போட்டபோது, உலகின் ஒவ்வொரு சிறு நகரங்களிலும் 'குண்டு போடாதே' என ஆர்ப்பாட்டங்கள் வெடித்தெழுந்தன. அமெரிக்காவின் நகரங்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணி - யுத்தத்தை நிறுத்து என்ற மக்கள் குரல். இன்று, ஈராக்கில் குண்டு போடுவதற்கு 'மக்கள் ஆதரவு' அபிப்பிராயம் திரட்டல். அடுத்த ஊர், குண்டில் நாசமடையும்போது நமக்கொன்றுமில்லையே என்ற சுயதிருப்தி மனோபாவம். அயலில் சொந்த இனம் தீயில் கருகினும் கண்டு கொள்ளாத ஓட்டம், ஒவ்வொருவருக்கும் அவரவர் நுகர்வுப் பொருளைத் தேடிக் குவிக்கும் அவதி.

சோஷலிச சர்வதேசியம் உழைப்பை மையமாகக் கொண்டது. எல்லாரும் உழைத்துண்ணும் சகோதர மனப்பாங்கு உலகெங்கும் வளர்க்கப்பட்டது. மேலாதிக்க வாதத்தின் மறுபக்கமான உலகமயமாதல் உலகநாடுகளைச் சுரண்டலுக்காகத் திறந்துவிடும் கோட்பாடு. கிடைக்கும் எலும்புத் துண்டைக் கடித்துக் குதறித் தனக்குத் தனக்கென அபகரிக்கும் மனப்பாங்கே விதைத்து அறுவடை செய்யப்படுகிறது. அதன் ஒரு அறுவடை, ஒவ்வொரு சாதிச்சங்கமும் தனது நலனை வளர்க்க முனைய, தன்னைப் பாதிப்பதாக அடுத்த பிற்படுத்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட சாதியினர் எதிர்த்து மோத, எங்கும் குரோதமும் கொலைவெறித் தாண்டவமும்.

அறுபதுகளில் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் வர்க்கப்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது. சாதிகளிடையே மோதலாக்கப் படவில்லை. சாதியம் எனும் அசிங்கத்தை வெறுக்கும் நல்லெண்ணம் கொண்ட அனைவரையும் 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' அணிதிரட்டிச் சென்றது. இறுதியில் தீண்டாமைக் கொடுமை ஒழிக்கப்பட்டது. சாதிய ஒழிப்பை பரந்துபட்ட ஐக்கிய முன்னணியொன்றை வர்க்கப் பார்வையில் கட்டியெழுப்பிப் போராடுவதன் வாயிலாகவே கண்டுகொள்வோம்.

தலித்தியம் சாதியடிப்படையிலான ஒன்றுபடலுக்கு அறைகூவுகிறது. அது இயல்பிலேயே ஏனைய சாதியினரை எதிர்நிலையில் நிறுத்தும். சாதியத்தை விரும்பாதவர் அனைத்துச் சாதியிலும் உண்டு. எமது சமூகத்தின் பாட்டாளி வர்க்கத்தில் தலித் மக்களே மிகப் பெரும்பான்மையினர், மிகச் சிறுபான்மையினராயினும் ஏனைய சாதியினரும் பாட்டாளி வர்க்கத்தில் உள்ளனர். தவிர, தலித்தியம் சில சாதிகளின் முன்னேற்றம் பற்றிப் பேசுவது போலன்றி, பாட்டாளி வர்க்கம் அரசதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது, ஒரு வர்க்கம் எனும் நிலையிலிருந்து பாட்டாளி வர்க்கம் தன்னையும் அழித்து, வர்க்கங்கள் அனைத்தையும் இல்லாதொழிப்பதற்கே.

மேற்கில் சாதி வடிவம் தோன்றாமல் வர்க்கப் பிளவு சாத்தியப்பட்டது. கூர்மையான வர்க்கப் போராட்டங்கள் வெடிக்க முடிந்தது. புரட்சிகள் ஊடாக சமூக மாற்றங்கள் தெளிவாக ஏற்பட்டன. ஆதலால் வர்க்கப் போராட்டச் சிந்தனையும், பாட்டாளி வர்க்கம் அரசதிகாரம் பெற்று சோஷலிசத்தை கட்டமைத்துப் பொதுவுடமை அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான மார்க்கத்தையும் கண்டடைய முடிந்தது. சாதிய நோக்கில் சமத்துவத்துக்கான வழிமுறையைக் காண முடியாது. ஆதலால், வர்க்கச் சிந்தனை அடிப்படையில் சமத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்புவதன் வாயிலாக மட்டுமே இறுதியில் சாதிகளை இல்லாதொழிக்க முடியும்.

**4. மேற்கில் வர்க்கங்களின் வரலாறு நிதர்சனமாகியது போலன்றி எமது சமூகம் சாதிய வடிவத்தில் தொடர ஏதுவான அடிப்படை அம்சம் யாது?**

மேற்கில் கிரேக்க ரோம் சமூகங்கள் புராதன பொதுவுடமை அமைப்பிலிருந்து மாற்றமடைந்து வர்க்கங்களாகப் பிளவுண்டு, அரசு உருவானபோது, இரத்த உறவு இனக்குழுக்கள் தகர்க்கப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனக்குழுக்கள் தகர்ந்து ஆண்டான் - அடிமை வர்க்கங்கள் தோற்றம் பெற்றன. பின்னர் மேற்கின் வரலாறு வர்க்கங்களினதும், வர்க்கங்களிடையேயான போராட்டங்களினதும், புதிய வர்க்க அதிகாரங்களின் விளைவான சமூக மாற்றங்களினதும் வரலாறாகவே இருந்து வந்தது.

புராதன பொதுவுடமைக் குழுக்கள் இயற்கைச் சொத்தின் காரணமாயோ (காட்டு வளம், பசு நிரை கவர்ல்), பெண்கொள்ளல் காரணமாயோ ஒன்றுடனொன்று மோதியதுண்டு. வெற்றி பெற்றவர் மற்றவருக்கு சோறுபோட முடியாது என்பதால் வென்றடக்கப்பட்டவரைக் கொன்று விடுவதுண்டு; அல்லது மன்னித்து, மறந்து விட்டுப்போய் விடுவதுண்டு. விவசாயப் பண்பாட்டுக்கு வளர்ந்து, உழுதுவித்து உண்ண அடிமை வேண்டியபோது, உபரியாக உணவுற்பத்தி செய்யும் வாய்ப்பேற்பட்டு, சோறு போட்டு அடிமையைப் போஷிக்கவும் முடிந்தபோது, வென்றடக்கப்பட்ட இனக்குழுக்கள் அடிமைகளாக்கப்பட்டனர். இத்தகைய ஆண்டான் களின் அரசுகளாய்த் திகழ்ந்த கிரேக்க - ரோம் - எகிப்திய அரசுகள் வென்றடக்கப்பட்ட இனக்குழுக்களை அவரவர் இடங்களிலிருந்து பெயர்த்தெடுத்து அடிமைகளாய்க் கொணர்ந்தனர்.

இவ்வாறு பெயர்த்து அடிமைகளாக மாற்றப்பட்டவர்கள், இரத்த உறவு இனக்குழு இயல்புகளை இழந்து தமக்குரிய பண்பாடுகளை விட்டொழிக்க வேண்டியவர்களாயினர். அவர்கள் புதிய அடிமை வர்க்கமாய்ப் புனையப்பட்டு அடிமைப் பண்பாட்டில் கட்டமைக்கப்பட்டனர். தமது வேர்களை இழந்து கொடுமையாய்ச் சுரண்டப்பட்டனர். சொந்தப் பணபாட்டழிப்பு வேறெதையும் விடச் சகிக்க வியலாதது. சுயமழிதல் ஏற்கவொண்ணாதது. இதன் பேறாக, அங்கெல்லாம் அடிமைகள் கிளர்ந்தெழுந்து கூரிய வர்க்கப் போராட்டத்தை நடத்தினர்.

இங்கு வரலாறு அவ்வாறு அமையவில்லை. இங்கும் உழுதுவித்து உண்ணலும், சமூக மாற்றங்களும் நிகழ்ந்துள்ளனவாயினும், எவரும் சொந்தப் பண்பாட்டை பலாத்கார முறையில் விட்டொழிக்க நிர்ப்பந்திக்கப்படவில்லை; தமது சொந்த மண்ணிலிருந்து பெயர்த்தெடுத்து வேறுக்கப்படவில்லை. தம் மண்ணில் உழைத்து, வெற்றி பெற்ற இனக்குழுக்களுக்கு உபரியுற்பத்தியைத் தாரை வார்த்துவிட வேண்டியிருந்தது; அல்லது வெற்றி பெற்றவர்களது இடத்துக்குச் சென்று உழைத்துச் சேவகம் செய்து மீண்டும் தன்னிடத்துக்கு மீள முடிந்தது. தன்னிலை இழக்காமல், தமது இரத்த உறவுப் புனிதத்தையும், தமது பண்பாட்டையும் விரும்பியபடி தொடர முடிந்தது. மாறும் சூழலுக்கமைய விருப்பத்துடன் தம்மைத் தகவமைக்க வழிப்படுத்தப்பட்டனர். பலாத்காரம் முற்றாகவே இல்லையென்பதில்லை. அடிமை கொள்ளும் வன்முறை நோகாமல் அமைந்ததென்பதே இதன் பொருள். மரத்தில் கட்டி வைத்து அடித்து விட்டு, எள்ளும் எண்ணையும் கொடுத்தனுப்பும் பக்குவம் தெரிந்த ஆண்டான்கள்!

அந்த வகையில், ஒவ்வொரு இனக்குழுக்களும் தத்தமது இரத்த உறவுப்புனிதத்தைப் பேணின. இத்தூய்மையே சாதி. புராதன பொதுவுடமை அமைப்பில் இனக்குழுக்களிடையே மோதல்கள் இருந்தன; எனினும் ஒவ்வொரு இனக்குழுவும் தமது இரத்த உறவை தமக்குள் புனிதத்துடன் பேணிக் கொண்டனர். ஆயினும், பொதுவுடமை நிலவிய காலத்தை விடவும், அடுத்தவரை அடிமை கொள்ளும் சாத்தியம் ஏற்பட்ட பின்னர், இனக்குழுக்கள் சாதிகளாகக் கட்டமைக்கப்பட்டபோது, இன்னும் கறாராக இரத்தப் புனிதம் போற்றப்பட்டது. இதனைத் தெளிவாகத் தமிழர் வரலாறிலும் காணமுடியும்; வர்க்க அமைப்புக்கு மாறிக் கொண்டிருந்த ஆரம்பகால வீரயுகப் பண்பாட்டில் ஐந்து நிலப்பிரிவினரிடையே பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மத்தியில் காதல் கொள்ளலும், உடன் போக்கும் இருந்துள்ளது. சங்க காலம் எனப்படும், வீரயுகப் பண்பாட்டு யுகத்துக்குப் பின்னர் மருதநில வேளிர் குலத்தவன் நெய்தல் நிலத்தின் பரதவரிடையே காதல் கிழத்தியைத் தேடியதுண்டா?"

ஆக, புறமணத் தடையும் கறாரான அகமண முறையும் கொண்ட இறுக்கமான சாதிகளாய் இனக்குழு முறைமை இன்றுவரை தொடர முடிகிறது. வெளியே பாரதூரமான சமூக மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், இரத்தத் தூய்மை பேணும் உணர்வு காரணமாய், சாதிகள் அலுங்காமல் குலுங்காமல் தம் இருப்பைத் தக்க வைத்துக் கொள்கின்றன. வெறும் பிராமணர்களின் சதித் திட்டங்களினால் மட்டுமே சாதி நின்று நிலைத்திருக்கவில்லை, ஒவ்வொரு சாதியினரிடமும் உள்ள இரத்த உறவுத் தூய்மை பேணலிலும்தான் இது தங்கியுள்ளது. வேண்டுமாயின், பிராமணியம் அதற்கான கோட்பாட்டை உருவாக்கிக் கொடுத்துள்ளது எனலாம்.

### 5. இரத்த உறவுப் புனிதம் பேணும் இனக்குழு முறைமை நீடிப்பதற்கு (அதாவது, சாதியத்துக்கு) ஆரியர்கள் தான் காரணமா?

பிராமணியம் சாதியத்துக்கான கோட்பாட்டுருவாக்கத்தை வழங்குவதனால், பிராமணர்கள் ஆரியர்களே என்ற எடுகோளின் அடிப்படையில், சாதியக் கொடுமைக்கு ஆரியர்களே காரணம் என்ற கருத்து நிலவி வருகிறது. ஆரியர்கள் வால்கா நதிக்கரையில் இருந்து இந்தியா நோக்கி நாடோடிகளாக வந்தார்கள். ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் ஊடாக, ஆங்காங்கே குடியிருப்புகளை ஏற்படுத்தியபடி வந்து, வட இந்தியாவின் ஆரியவர்த்தம் முழுமையும் பரவினர். வால்காவிலிருந்து ஆப்கானிஸ்தான் வரை சாதிக் கட்டமைப்பு இல்லையே, இங்கு மட்டும் சாதிகள் தோன்றினவென்றால் அதற்கு ஆரியர்கள் மட்டுமே


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணம் என எப்படிக் கூறிவிட முடியும்? இங்கே விசேசமாய் இருந்த, வேறொரு காரணமே சாதித் தோற்றத்துக்கு காரணமாயிருந்திருக்க வேண்டும்.

அந்த விசேச காரணிக்கான அடுத்த அம்சம் இந்தியாவில் இருந்த திராவிடர்கள். இன்றைய பிராமணர்கள் எல்லோரும் ஆரியர்கள் இல்லை. திராவிடப் பூசகர்களுடன் ஆரியர்களின் பிராம ணர்களும் இணைந்தே இன்றைய பிராமணர்கள் உருவாயினர். ஈரான், ஈராக் ஊடாக வரும்போதே ஆரியர்கள் தமக்குள் தொழில் அடிப்படையில் மூன்று பிரிவினர் ஆயினர். இயற்கைத் தெய்வங்களை மகிழ்விக்கும் பிராமணர்கள், போர்த் தொழில் புரியும் சத்திரியர், மாற்றுக் குழுவினருடன் வர்த்தகம் புரியும் வைசியர் எனும் மூன்று பிரிவுகள் அவை. சுதேசிகளின் நிறத்திலிருந்து தம்மை வேறுபடுத்தி அடையாளம் காணும் வகையில் மூவர்ணத்தவராய் தம்மைக் கருதினர். அப்போதெல்லாம் மாடு மேய்ப்பு மட்டுமே அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இந்தியாவினுள் பிரவேசித்து, நிலையான குடியிருப்புக்கள் அமைத்து, நிலத்தைப் பண்படுத்தி விவசாயப் பண்பாட்டிற்கு மாறிய பின்னர், உடலுழைப்பில் ஈடுபட்ட சூத்திரர் எனும் புதிய வர்ணப் பிரிவுடன் நால்வர்ணத்த வராயினர் ஆரியர்.

தமது நிறத் தூய்மை பற்றிய இனக்குழு முறைமைக்கேயுரிய இயல்பு ஆரியரிடம் இருந்த போதிலும், கலப்பு யதார்த்தத்தில் நிகழாமலில்லை. இதிகாசங்கள் காட்டும் உதாரணம் கொண்டு அம்பேத்கர் அத்தகைய கலப்புக்கள் பலவற்றை எடுத்துக் காட்டியுள்ளார்கள். தவிர, டி.டி.கோசாம் பியும், தம்மை ஆரியர் எனக்கொள்வோரையும் ஸ்கண்டிநேவியன் ஆரியரையும் ஒரே இனத்தவர் எனக் கொள்ள முடியுமா எனக் கேள்வி எழுப்பி, கலப்புற்ற இனமே இன்று இங்கு நிலவுகிறது என்று காட்டுவார்.

இந்தியாவினுள் ஆரிய - திராவிட கலப்பு ஏற்ப டுத்திய விசேச சூழல் காரணமாகவே சாதிகள் தோன்றின (இனக்குழுக்கள் சாதிகளாகக் கட்ட மைக்கப்பட்டு நீடித்து நிலைத்தன) என்பதே உண்மை. அத்தகைய ஒரு சூழ்நிலையில், ரிக் வேதத்தின் இறுதிக் கட்டத்தில், வர்ணங்கள் ஒவ்வொன்றும் பிரகஸ்பதியின் உடலுறுப்புக்களில் இருந்து தோன்றியதான புனைவை கட்டமைத்தனர் கலப்புப் பிராமணர். பிரகஸ்பதியின் முகத்திலிருந்து பிராமணரும், புஜங்களில் இருந்து சத்திரியரும், தொடைகளில் இருந்து வைசியரும், பாதங்களில் இருந்து சூத்திரரும் தோன்றியதாய் ரிக்வேத பத்தாவது மண்டலம் கூறும். சமத்துவ சமூகத்திற்கு அவசிய மற்றிருந்த ஒன்று இப்போது தேவைப்பட்டுள்ளது, அவ்வளவே!.

**6. சாதியத்திற்கான சூழல் ஆரிய — திராவிட இனக்கலப்பினால் எவ்வாறு ஏற்பட முடிந்தது?**

உலக வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் இனக் கலப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறே இங்கும் ஆரிய - திராவிட இனக் கலப்பு நிகழ்ந்தது. இங்கு மட்டும் இனக்குழு முறையைத் தகர்க்காதபடி வரலாற்றைத் தொடரும் புதிய கருத்தியல் எவ்வாறு சாத்தியமானது? ஆரியரிடமிருந்த வர்ணக் கோட் பாடுதான் அதன் மூலகாரணியா? அவ்வாறெனின் ஈரான் - ஈராக்கில் சாதியம் தோன்றாமல் போனது ஏன்? வர்ணக் கோட்பாட்டைக் கொண்டு பிராமணியம் இதற்கான கருத்தியல் தெளிவை ஏற்படுத்தியது உண்மையே ஆயினும், அது ஆரியப் பிராமணரது வர்ணக் கோட்பாடல்ல என்பது தெளிவு.

கலப்படைந்த ஆரிய - திராவிட பூசகர்களைக் கொண்ட புதிய பிராமணர்கள் சாதியம் என்னும் புதிய பரிணாமத்திற்கு வர்ணக் கோட்பாட்டை மடைமாற்றிவிட்டனர். ஆரியப் பிராமணர்கள் தமக்குள் வர்க்கங்களாக பிளவுபடாத, புராதன பொதுவுடமை அமைப்பைக் கொண்ட இனக்குழுக்களின் ஆன்மீகப் பிரதிநிதிகள். இந்தியாவினுள் நுழைந்தபோது விவசாயப் பண்பாட்டை அவர்கள் அறியாத காரணத்தால், விவசாய நிலப்பரப்பாக இருந்த சிந்துவெளிக் குடியிருப்புக்களை ஒதுக்கி, மாடு மேய்ப்புக்காக மேலும் கிழக்கு நோக்கி முன்னேறிக் கங்கைக் கரையின் புல்வெளிகளை நாடிச் சென்றவர்கள்.

அந்த வேத கால ஆரியப் பிராமணர்கள் தமக்கு நிரந்தரக் குடியிருப்பை அறியாத நிலையில் கடவுளுக்கான கோயில், தலம், தீர்த்தம் ஆகிய வற்றையும் அறிந்திருக்கவில்லை. விக்கிரக வழிபாட்டை கடுமையாக எதிர்த்தனர். இயற்கை அம்சங்கள் அனைத்தையும் வழிபட்டனர். ஒரு கடவுள் பற்றிய மதக் கோட்பாடுகள் எதையும் அவர்கள் அறிந்திருக்க வில்லை.

சிந்துவெளிப் பண்பாட்டினர் இவற்றிற்கு நேர்மாறாக இருந்தனர். அவர்கள் வர்க்க பேதமுடைய சமூகத்தவர். அதற்குரிய வளர்ச்சியில் உயிர்களின் தலைவன் எனும் வகையில் ஒரு கடவுள் பற்றி அறிந்த வர்கள். படைப்புக் கோட்பாட்டை உடையவர்கள். விக்கிரக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைக் கொண்டி ருந்தார்கள்.

கலப்புற்ற வைதீக சமயங்களில் வேதப் பாராய ணம் தவிர ஏனையவை அனைத்தும் சிந்துவெளித் திராவிடப் பண்பே தொடர்வதை அறிவோம். தான் அழிக்க முனைந்த விக்கிரகத்தின் முன் வேதச் சுலோகம் ஒப்புவிக்கப்படும் நிலை ஆரியர்களைப் பொறுத்தவரை தவிர்க்கவியலாததே. ஒரு இடத்தில் நிலையான குடியிருப்பை தொடங்கி விவசாயப் பண்பாட்டிற்கு மாறும்போது, ஏற்கனவே அப் பண்பாட்டு வளர்ச்சியை எட்டிய சிந்துவெளிக் கருத்தியல்களை உள்வாங்காமல் இருந்திருக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாது. வெற்றி கொண்ட ஆரியர்கள் முழுதாய் தமது கருத்தியலை இழந்து விடவும் விரும்பவில்லை. வேதப் பாராயணங்களைப் பாதுகாத்தது போலவே இனக்குழுக் கருத்தியலையும் அழிவுறாது தொடர்ச்சியாக கைக்கொள்ள முன்வந்தனர்.

கலப்படைந்த புதிய பிராமணர்கள் தொடர்ந்து ஏனைய இனங்களை வெற்றி கொண்டபோது அவையவற்றுக்கான இனக்குழுக் கருத்தியலை அனுமதித்தபடியே தமது வைதீக சமயத்தை மேலாண்மை கொள்ள வைத்தனர். வளர்ச்சி பெற்ற இனக்குழுக்களாயின் வைதீக சமயக்கடவுளின் திருவுருவாயோ, அவதாரமாயோ, கொள்ளப்பட்டு பெளராணிகக் கதைகள் புனையப்பட்டன. இல்லாவிடின் சிறு தெய்வங்கள் ஆக்கப்பட்டனர். வெல்லப்படும் இனங்கள் வெற்றிகொண்டோரின் மேலாண்மையை அங்கீகரித்தபடி தம் கடவுளையும் இவ் வகையில் தக்க வைத்துக்கொண்டனர். வைதீக சமயங்களின் ஆயிரக்கணக்கான சாதிகளுக்கும், ஆயிரக்கணக்கான தெய்வங்களுக்கும் இதுவே மூலகாரணமாகும்.

## 7. வர்ணக் கோட்பாட்டிற்கும் சாதியத்திற்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு ஏதும் உண்டா?

சாதியத்தைக் கட்டமைத்த கலப்புப் பிராமணரின் நோக்கு நிலையிலிருந்து ஆரியர்களின் வர்ணக் கோட்பாடு அடிப்படையான வேறுபாடு ஒன்றினைக் கொண்டிருந்தது. வர்ணங்களிடையே நெகிழ்வுத் தன்மை உண்டு; ஒருவர் அல்லது ஒரு சாதி, ஒரு வர்ணத்திலிருந்து இன்னொரு வர்ணத்திற்கு மாற முடியும். சாதியம் நெகிழ்வுத் தன்மையற்றது. எக்காலத்திலும் எத்தகைய மாற்றங்களும் சாதியை மாற்ற அனுமதிப்பதில்லை.

ஆரம்பக்காலங்களில் ஆரியர்கள் தமது நால் வர்ணங்களில் விரும்பியபோது ஒன்றிலிருந்து மற்றதிற்கு மாறியுள்ளனர். போர் ஆர்வம் இருப்பின் சத்திரியனாக இருக்கவும், ஆன்மீக நாட்டம் மிகுந்தால் பிராமணனாகவும், அவ்வாறே விரும்பினால் வைசிகனாகவோ சூத்திரனாகவோ மாற முடிந்தது. ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு வர்ணத்தை தேர்ந்தெடுக்க முடிந்தது. சாதியாகப் பரிணமித்த பின் இது சற்று இறுக்கமடைந்தது. ஒரு குடும்பம் முழுமையாகவோ, ஒரு தனி நபரோ எப்பொழுதும் ஒரே வர்ணமாகத் தொடர வேண்டியிருந்தது.

ஆயினும், குறித்த ஒரு சாதி ஒரு வர்ணத்திலிருந்து வேறொரு வர்ணத்திற்கு மாறக்கூடிய நெகிழ்வு இருந்தது. தமிழகத்தில் வேளிர் குலங்களில் இருந்தே அரசர்கள் அநேகமாகத் தோன்றினர். அந்த வகையில் வடக்கின் சத்திரியர்கள் இங்கே இல்லை. அதற்காக வேளாளர் சத்திரியர்களாகக் கொள்ளப்படவில்லை. வேளாளர்களில் பெரும்பாலோர் விவசாயிகள் என்கிற வகையில் பிராமணியம் அவர்களை சூத்திரர்கள் என்றே வகுத்தது. ஆயினும், பத்து பதினோராம் நூற்றாண்டுகளில் புனையப்பட்ட புராணங்களைக் கொண்டு வேளாளர்கள் தம்மை வைசியர்களாக 'உயர்த்திக்' கொண்டனர். சென்ற நூற்றாண்டில், பல போராட்டங்கள் ஊடாக நாடார்களும் வர்ண உயர்வை நிலைநாட்ட முடிந்திருக்கிறது. இவ்வாறு வர்ணம் மாறத்தக்க நெகிழ்வு இருந்தபோதும் சாதி நெகிழ்வற்று இறுக்கமுடையதாகவே தொடர்வதை அவதானிக்க முடியும்.

## 8. நெகிழ்வற்ற சாதி அடையாளம் என்றென்றும் தொடரப்போகின்றதா?

மேற்கில் போல இனக்குழு முறை முழுமையாகத் தகர்க்கப்பட்டிருப்பின் இங்கே சாதி தோன்றியிருக்க முடியாது. சிந்துவெளியினரின் வர்க்கக் கருத்தியலும் ஆரியரின் வர்ணக் கோட்பாடும் வர்க்க சமூக அமைப்புத் தேவை கருதி சாதியமானது. அந்த வகையில் அடிக்கட்டுமானம் - மேற்கட்டுமானம் ஆகிய இரு தன்மைகளையும் இது கொண்டிருப்பதைக் காண முடியும். ஆதலால் பொருளுற்பத்தி முறை மாற்றப்பட்டு, வர்க்க ஒழிப்பைச் சாத்தியப்படுத்தியும் பண்பாட்டுப் பேரியக்கங்களுக் கூடாக கருத்தியல் போராட்டம் முன்னெடுக்கப்படுவதினூடாகவும் இறுதியில் சாதியம் தகர்க்கப்பட முடியும். அந்த வகையில் கூர்மையான வர்க்கப் போராட்டமும், பண்பாட்டுப் பேரியக்கங்களும் முடுக்கி விடப்படுதல் அவசியமாகும். கலப்பு மணம் உற்சாகப்படுத்தப்படுவதும் மேலிருந்து கீழ்வரை கூட்டுக் கற்றல் உள்ளிட்ட பல்வேறு பண்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் வாயிலாகவும் இறுதியில் சாதி முழுதாக துடைத்தழிக்கப்படும்.

## முடிவுரை:

வர்க்க ஏற்றத் தாழ்வினை நிலைநிறுத்துவதற்கு ஏற்புடையதாகக் கட்டமைக்கப்பட்ட உற்பத்தி உறவு சாதி; அதற்கான கருத்தியல், சாதியம். சமூக மாற்றங்களுடன் சாதியக் கருத்தியல் தகவமைக்கப்பட்டு மாற்றம் பெற்று வர முடிந்தது.

இனி, எம் முன்னால் உள்ள வரலாறு வர்க்கங்களை ஒழிப்பதான கடமையை வேண்டி நிற்கின்றது. அதனை சாதிய நோக்கில் ஈட்ட முடியாது. மனிதகுலம் கண்டடைந்த முன்னேறிய, வர்க்க ஒழிப்புக் கருத்தியலான மார்க்சிச - லெனினிச வழிகாட்டல் வாயிலாகவே சாதியம் தகர்ந்து சமத்துவம் நிதர்சனமாகும்.

சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக அனைத்துச் சாதி, மத, இன, தேச மக்களும் ஒருவர்போல் ஐக்கியப்பட்டு போராடுவோம்! ●

நன்றி: உலகமயம் பண்பாடு சமூகமாற்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜமாலனின் ஆழ்மனத்தில்

# மதம் நிகழ்த்தும் மாயங்கள்!

### எதிர்வினை

"கூலியினுள் ஆதாயமும் ஆதாயத்தினுள் கூலியும் அடங்கிக் கிடக்கின்ற காரணத்தினால்தான், ஆன்மிகத் தன்மையும் இறைமைத் தன்மையும் ஒவ்வொருவரின் உள்ளும் ஒருசேர அடங்கிக் கிடக்கின்றன என்னும் கருத்துக்கள் இங்கே உதயம் ஆகிட முடிகிறது. இதுபோல, தங்கள் திண்மை இயல்புகளாக வருக்க இயல்புகளையும் நுண்மை இயல்பாக மனித நேயத்தையும் மனிதர்கள் சுமந்து கொண்டு இருக்கின்ற காரணத்தினால்தான், மனித நேயம் மிக்கவராகவும் கடவுள் கருதப்பட்டு வருகிறார்."

சோதிப்பிரகாசம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

"அரசியலுக்குள் நுழைவதற்கு முன்னர் உங்கள் அரசியலை நீங்கள் பரிசோதித்துக் கொள்ளுங்கள்"

என்று ஆங்கிலத்தில் நமக்கு அறிவுரை வழங்கிய வாறே தமது கட்டுரையை (அசை, ஜனவரி - ஜூன் 2002)த் தொடங்குகிறார் ஜமாலன்! ஜமாலனுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்கிறது என்பதை எண்ணி எண்ணி நாம் பூரித்து நிற்கின்ற வேளையில், தமிழில் அவர் கூறுகிறார் - தமது அரசியலைப் பரிசோ தித்துக் கொள்ளுகின்ற ஒரு வாய்ப்பாகவும் தமது கட்டுரையை அவர் கருதிக் கொள்கிறார் என்று!

அடிப்படைவாதங்கள் பற்றிய தமது கருத்து ரைகளைப் பொழிவதற்கு முன்னர், 'மதம்' பற்றிய தமது கருத்தாக்கத்தை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்ற வகையில், ஜமாலன் கூறுகின்ற ஒரு கருத்தினை முதலில் நாம் பார்ப்போம்:

"இன்றைய மதங்கள் எல்லாம் தாய்வழி மதங்களை அழித்து அதன்மேல் கட்டப்பட்டுள்ள தந்தைவழி மதங்கள். தந்தை என்பவன் எப்பொ முதுமே அதிகாரத்தின் பிரதிநிதியாக இருப்பதால் மதங்கள் இன்று உலக அரசாட்சிக்கான போட்டியில் குதித்து உள்ளன. மதங்களின் கருணை (தாய்மை) அழிக்கப்பட்டு வெறி (அதிகாரம்) மட்டும் எஞ்சிய நிலையே இன்று உள்ளது."

மதங்களின் அதிகாரப் போட்டி பற்றிய ஜமாலனின் கருத்து இது.

சொற்களின் மேல் அவற்றின் அருத்தங்கள் வழுக்கிக் கொண்டு சென்றுவிடுவதாகப் பின்-புதினவாதிகள் கூறுகிறார்கள் என்று ஜெயமோகன் ஒருமுறை குறிப்பிட்டார். இப்படி, ஜமாலனின் அனைத்துக் கருத்துகளும் ஆங்காங்கே வழுக்கிக் கொண்டு சென்றுவிடுகின்றன. தாய்மையின் உணர் மங்களுடன் (sentiments) விண்ணில் பறந்து கொண்டு இருக்கின்ற அவர், பறந்து பறந்து களைத்து விட்டவரைப் போல திடுமென மண்ணுக்கு இறங்கி வருகிறார்; ஆனால், மண்ணில் கால் பதித்திட முடியாமல் வழுக்கிக் கொண்டு மீண்டும் விண்ணுக்கே சென்றும் விடுகிறார். எனவே, ஜமாலனின் கட்டுரையை எப்படி நாம் அணுகுவது என்பது நமக்கோ மிகப் பெரிய சிக்கல் ஆகி விடுகின்றது.

ஆழ்மனம், தொல்மனம், நினைவிலி தளம், பிரக்ஞை, சாரம், மையம், சுயம், புதினவாதம், பின் - புதினவாதம் என்று எல்லாம் ஏராளமான கருத்துச் சிதறல்களை ஆங்காங்கே அள்ளித் தெளித்து, தமது அறிவாண்மைத் திறத்தினை ஜமாலன் நமக்குக் காட்டிச் செல்கிறார் என்பது சரிதான்! ஆனால், தன்னை வீழ்த்திட வேண்டிய அவசியம் எதையும், பின்னதாக எழுந்து வந்து இருக்கின்ற புதினவாதங்களுக்குக் கொடுக்காமல், தானாக வீழ்ந்து மடிந்து போய்விட்ட ஒரு முன்ன தான வாதமாக மார்க்சியத்தை அவர் கருதுவதுதான் சரியானதாக நமக்குத் தெரியவில்லை. இந்த அறிவாண்மை நாணயத்திற்காக ஜமாலனுக்கு நமது வணக்கங்களைத் தெரிவித்துவிட்டு, மதம் பற்றிய ஜமாலனின் கருத்துக்களை இனி நாம் எதிர்கொள்ள முயல்வோம்.

## மாங்காய்ப்பால்

உண்ணாமலும் உடுக்காமலும் ஓர் இடத்தில் உறையாமலும் மனிதர்களால் உயிர் வாழ்ந்துவிட முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு கிறிஸ்தவனால் மட்டும் அல்ல, ஓர் இந்துவால் மட்டும் அல்ல, ஓர் இஸ்லாமியனால் கூட, இவை எல்லாம் இல்லாமல் உயிர் வாழ்ந்துவிட முடியாது.

ஆனால், இவர்களுள் யாராவது ஓர் அடிப்படை வாதியாக மாறிவிட்டால் போதும், உணவு, உடை, உறையுள் என்று எதுவும் அவர்களுக்குத் தேவைப் படுவது இல்லை - கிறிஸ்தவ அடிப்படைவாதிகளாக அவர்கள் இருந்தாலும் சரி, இந்து அடிப்படை வாதிகளாக இருந்தாலும் சரி அல்லது இஸ்லாமிய அடிப்படைவாதிகளாக இருந்தாலும் சரி! ஏனென் றால், ஓர் அடிப்படைவாதியாக ஒருவன் மாறி விட்டவுடன், 'மாங்காய்ப்பால் உண்டு மலைமேல்' இருப்பவனாக அவன் மாறிவிடுகிறான்.

தவம் செய்துகொண்டு மலைமேல் இருப்பவர் களின் குலை-மாங்காயில் இருந்து, அதாவது, நுரை யீரல் மற்றும் இதயப் பகுதியில் இருந்து, ஒரு வகை யான பால் சுரக்கும் என்பதும் அந்தப் பாலை அருந்தியே அவர்கள் உயிர் வாழ்ந்துவிட முடியும் என்பதும், ஒரு சில மாயச் சித்தர்களின் நம்பிக்கை!

இப்படி ஒரு மாங்காய்ப்பால் சுரந்து அடிப்படை வாதிகளை உயிர் வாழ வைக்கிறது என்பதையும், எனவேதான், அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் எவையும் தேவைப்படுவது இல்லை என்பதையும், ஜமாலனது கதையாடலின் பின்பு லமாக நாம் எடுத்துக் கொள்வதில் தவறு இல்லை. ஏனென்றால், எதை உண்டு, எதை உடுத்து, எதில் உறைந்து அடிப்படைவாதிகள் உயிர் வாழ்கிறார்கள் என்பது பற்றிய எந்த ஒரு சொல்லாடலும் ஜமா லனின் கதையாடலில் காணப்படவில்லை.

எனினும், அடிப்படைவாதம் பற்றிய ஜமாலனின் சொல்லாடலைக் கொச்சைப்படுத்துகின்ற ஒரு சித்த ரிப்பு என்று இதனை அறிவாளர்கள் கருதி விடக்கூடும் என்பதால், இந்த அணுகுமுறையினைக் கைவிட்டுவிட்டு வேறு அணுகுமுறைகளை நாம் கையாண்டு பார்க்கலாம். ஏனென்றால், வயிற்றில் இருந்து வாழ்க்கையை விளக்குகின்ற ஓர் 'எச்சில்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாதமாக உட்பரிகையாளர்களுக்கு இது தோன்றி விடக்கூடும்!

## அதிகாரப் பீடங்கள்

சரி, ஜமாலனின் கதையாடலை இப்படி நாம் அணுகிப் பார்ப்போம் : வானத்தில் கடவுள் உறங்கிக் கொண்டு இருந்தார். அவரைச் சுற்றி சில மதங்கள் வட்டம் அடித்துக் கொண்டு இருந்தன. தம்மில் - தாம் - ஆன இந்த மதங்கள், தம்மின் - பிறிது - ஆக மாறிட வேண்டும் என்று ஒரு நாள் முடிவு செய்தன. எனவே, வானத்தில் இருந்து பூமியை நோக்கி இறங்கி வந்து, தாம் இறங்கிய இடங்களில் வாழ்ந்துகொண்டு இருந்த மனிதர்களை அவை பற்றிப் பிடித்துக் கொண்டன. எனினும், பிறிது - ஆனது - ஆகிவிட்ட ஒரு நிறைவு அவற்றிற்கு ஏற்படவில்லை. ஏனென்றால், ஆங்காங்கே அதிகாரப் பீடங்கள் உருவாகி, மனிதர்களை அடக்குமுறைக்கு ஆட்படுத்திக்கொண்டு வந்ததை மதங்கள் கண்டன.

இப்படி, அதிகாரப் பீடங்கள்தாம் உச்சமான பீடங்கள் என்பதைப் புரிந்து கொண்ட மதங்கள், உடனே அவற்றைக் கைப்பற்றியும் கொண்டன. அதிகாரப் பீடங்களைக் கைப்பற்றிய உடன், அதிகார மையங்களாக அவை மாறிப் போயும் விட்டன.

இந்த அடிப்படையில், ஜமாலனின் கதையாடலை நாம் புரிந்து கொள்ள முயன்றால், அதுவும் தவறு ஆகிப் போய்விடும் என்பது நமக்குத் தெரிகிறது. ஏனென்றால், மதத்திற்காக மதம், அதிகாரத்திற்காக அதிகாரம், பணத்திற்காகப் பணம் என்பதில் எல்லாம் அவருக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால், உலகளாவிய ஓர் அதிகாரமாகத் தனியான ஓர் அதிகாரம் மாறி ஆகவேண்டும் என்று அவர் நம்புகிறார்.

அப்படி என்றால், ஜமாலனின் சொல்லாடலை எப்படி நாம் புரிந்து கொள்வது? அவரே விளக்கம் கூறுகிறார் :

"இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது ஒரு புவிசார் அரசியல் நிகழ்வாக, ஏகாதிபத்தியங்களின் மோசமான ஆதிக்கவெறி மற்றும் பொருளியல் சுரண்டலின் பக்க விளைவாக உருவான ஓர் எதிர்ப்பே" ஆகும் என்று!

நமது அறிவிற்கு எட்டியவரை, இங்கு இருந்து தான் தமது கதையாடலை ஜமாலன் தொடங்கி இருக்கவேண்டும். ஆனால், ஒரு முடிவாக மட்டும் தான் இதனை அவர் சொல்லாடி இருக்கிறார். ஆனால், ஏன்?

ஏனென்றால், 'புவிசார் அரசியல்நிகழ்வு' என்பதைப் பற்றிச் சொல்லாடுவதற்காக, மண்ணின் வாழ்க்கையைப் பற்றியும், மண்ணின் வாழ்க்கையில் இருந்து எழுந்து விண்ணுக்கு மதங்கள் எப்படிப் பறந்து சென்று விடுகின்றன என்பதைப் பற்றியும் அவர் விளக்கிட வேண்டியது இருக்கும். ஆனால், சொல்லாடலுக்கு, அதாவது, அரட்டை அடிப்பதற்கு, ஒத்து வராத விசயங்கள் இவை என்பது அவருக்குத் தெரியும்.

இது மட்டுமா, 'ஏகாதிபத்தியங்களின் மிக மோசமான ஆதிக்கவெறி' என்பது பற்றிச் சொல்லாடுவதற்காக, முதலாண்மை உற்பத்திமுறை பற்றியும், முதலாண்மைத் தேசங்களின் அயலாதிக்கம் பற்றியும், அவற்றின் ஆதிக்கவெறிக்குக் காரணம் ஆகின்ற வணிகப் போட்டிகள் பற்றியும், எனவே, பொருளாதாரம் பற்றியும், மனிதர்களின் பொருளாதார நலன்கள் பற்றியும், இந்நலன்களின் வேறுபாட்டினால் வேறுபட்டு நிற்கின்ற மனிதர்களின் வருக்கங்கள் பற்றியும் அவர் விளக்கிடவேண்டியது வரும். ஆனால், அரட்டை அடிப்பதற்கு முடியாத விசயங்கள் இவை என்பது அவருக்குத் தெரியும்.

வருக்கப் போராட்டத்தின் வரலாறாக வரலாற்றைச் சித்தரிப்பதற்கு ஆய்வுகளும் வாதங்களும் தேவை! ஆனால், ஜமாலனோ ஆய்வுகளிலும் தருக்கங்களிலும் நம்பிக்கை இல்லாதவர்! எனவே, அரட்டையை மட்டும் மிகவும் வசதியாக அவர் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்.

ஆளும் கட்சிகளின் தந்திரங்களும் எதிர்க் கட்சிகளின் சதிகளும்தாம் வரலாற்று நிகழ்ச்சிகள் என்று சித்தரிப்பது மிகவும் எளிதுதான். கட்சிகளின் தலைவர்களைப்பற்றியும் அவர்களின் பண்பாடுகள், தந்திரங்கள், ஊழல்கள், குழி - பறிப்புகள் முதலியன பற்றியும் எவ்வளவு நேரம் வேண்டும் என்றாலும் அரட்டைகளையும் நாம் அடித்துக் கொள்ளலாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நடக்கின்ற போராட்டமாக வரலாற்றை விளக்குவதுகூட எளிதானதுதான். இதுபற்றி அரட்டை அடிப்பது மிகவும் கிளு - கிளுப்பாகவும் இருக்கும்.

இதுபோல, மதங்களின் போராட்டம்தான் மனிதர்களின் போராட்டம் என்று வரலாறு பற்றிச் சொல்லாடுவது 'பரவசமானது'தான் என்ற போதிலும், மத 'அடிப்படைவாதிகளின் போராட்டமாக' வரலாறு பற்றிச் சொல்லாடுவது, 'முரணியக்க' விளையாட்டினைவிட 'வீர-தீரமாக' இருக்கும் என்பதால், அடிப்படைவாதத்தை ஜமாலன் தேரந்தெடுத்துக் கொள்கிறார். மதத்தின் ஆதிக்கம், மதத்தின் நலன், மதங்களின் போராட்டம் என்று விண்ணகத்தில் மனிதனை நீச்சல் அடிக்க வைத்து விட்டு, தமக்குப் பிடித்தமான கதைகளை எல்லாம் அவர் அளந்து கொள்ளலாம் அல்லவா! அதாவது, கதையாடிக் கொள்ளலாம் அல்லவா!

எனவே, ஜமாலனின் கதையாடலை இப்படி நாம் அணுகுவோம்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஞானிகளின் போராட்டம்

திடும் என்று ஒருநாள் புவியில் ஒரு ஞானி தோன்றினான். அவனுக்கே உரிய ஒரு திறனாக (energy) அளவிலா ஞானம் அவனுள் அடங்கிக் கிடந்தது அவனுக்குத் தெரிந்துதான் இருந்தது என்ற போதிலும், என்ன வகையான ஞானம் என்று அதனை வரையறுத்து முதலில் அதனைத் தீர்மானப்படுத்திட (determine) வேண்டும் என்பதை அவன் உணர்ந்தான்.

ஆனால், இயற்கை ஞானமோ அவனுக்குப் பிடிபடவில்லை. இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள உறவும் அவனுக்குப் பிடிபடவில்லை. உண்டு, உடுத்து, உறைவதற்காக உற்பத்தியில் மனிதர்கள் ஈடுபடவேண்டியது இருந்ததும், உற்பத்தியில் தொழில் நுட்பங்களை அவர்கள் பயன்படுத்திடவேண்டியது இருந்ததும் அவனுக்குப் பிடிபடவில்லை. ஆதாயம் என்றும், கூலி என்றும் மனிதர்கள் அலைந்து திரிந்து கொண்டு இருந்ததும் அவனுக்குப் பிடிபடவில்லை. ஏன்? ஆணும் பெண்ணும் என்று இணைந்தும் பிரிந்தும் மனிதர்கள் மோதிக்கொண்டு இருந்ததும் கூட அவனுக்குப் பிடிபடவில்லை. மூளையை நோக வைக்கின்ற முயற்சிகளாகவும் அவனுக்கு இவை தோன்றின.

எனவே, மூளை நோகாத வகையில் மனிதர்களின் கோட்பாடுகளையும் (ideology) கோட்பாட்டு நிறுவனங்களையும் பற்றிப் பிடித்துக் கொள்ள அவன் முற்பட்டான். ஆனால், அரசியல், கற்பு முதலிய கோட்பாடுகளும் அரசு, குடும்பம் முதலிய அவற்றின் நிறுவனங்களும் அருவருப்பாக அவனுக்குத் தோன்றின. தங்கள் ஆறுதலுக்காக மக்கள் புனைந்துகொண்டு வந்து இருந்த கற்பனைகள், அதாவது,கதைகள்அவனைக் கவர்ந்திடத்தவறவில்லை தான் என்ற போதிலும், தங்கள் விடிவின் கற்பனையாக மனிதர்கள் படைத்துக்கொண்டு இருந்த கடவுள்தான் பெரிதும் அவனைக் கவர்ந்தார். எல்லா வல்லமைகளையும் எல்லா நலன்களையும் எல்லா அதிகாரங்களையும் தம்முள் ஒருங்கே கொண்டு இருப்பவர் அல்லவா, அவர்!

ஆனால், இந்த ஒரே கடவுளுக்கோ பல்வேறு மதங்கள்! எனவே, கடவுளின் விளையாட்டாக வாழ்க்கையையும் 'மதப் போராட்டங்களின் முரணியக்கங்களாக' கோட்பாடுகளையும் அவன் கருத்தில் கொண்டான். அவனுக்கு மிகவும் உகந்ததாக இந்த மதக் கோட்பாடு இருந்தது. மெய்மறந்த நிலையில், ஒரு மலையை நோக்கி அவன் நடந்தான். மலையின்மீது ஏறி நின்று கொண்டு கைகளை அகல விரித்து அவன் சொற்பொழிவு ஆற்றத் தொடங்கினான்.

'பரமண்டலத்தின் கடவுளிடம் ஒன்றிப்போய் விடுவதுதான் மனிதவாழ்க்கையின் மெய்மையான இலக்கு.! ஆனால், சரியான மதத்தின்மூலம்தான் கடவுளை நாம் அடைந்திட முடியும். நான் கூறுகின்ற மதம்தான் சரியான மதமும் ஆகும்!'

கூடியிருந்தவர்கள் ஆர்ப்பரித்தார்கள்! பரமண்டலங்களை நோக்கிக் கைகளை உயர்த்தினார்கள்: கண்களை மூடிக்கொண்டு செபித்தார்கள்!

ஆனால், வேறு திசைகளில் இருந்தும் ஆர்ப்பரிப்புகள் எழுந்து வந்து கொண்டிருந்தன. சுற்றிலும் பார்த்தான் ஞானி. வெவ்வேறு மலைகளின் உச்சிகளில் வெவ்வேறு ஞானிகள் நின்றுகொண்டு, இவனைப்போலவே சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்ததையும் அவற்றைக் கேட்டுக்கொண்டு இருந்தவர்களின் நடுவில் இருந்து இதேமாதிரியான ஆர்ப்பரிப்புகள் எழுந்து வந்து கொண்டிருந்ததையும் அவன் கண்டான். மற்ற ஞானிகளை இவன் பார்த்துவிட்டதைப் போலவே அவர்களும் இவனைப் பார்த்துவிட்டார்கள். சரியான மதம் எது? என்று முதலில் 'சொல்லாட'த் தொடங்கிய அவர்கள், பின்னர் 'கையாட'த் தொடங்கி இறுதியில், ஆயுதங்களைக் கையில் ஏந்திப் 'போராட'த் தொடங்கினார்கள். மதப் போராட்டங்கள் உருவாயின!

இறைவனை அடையும் சரியான வழி இஸ்லாம் இசம் என்றான் ஒருவன், இந்து இசம் என்றான் இன்னும் ஒருவன், கிறிஸ்தவ இசம் என்றான் மற்றும் ஒருவன்! ஆனால், ஞானிகளுக்கும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றவர்களுக்கும் இடையே ஓர் ஒற்றுமை இருந்ததைக் கவனித்திட அவர்கள் முற்படவில்லை. மதப் போராட்டங்களின் வரலாறுதான் மனித வாழ்க்கையின் வரலாறு என்கின்ற ஒரு கதையாடலின் ஒற்றுமைதான் அது.

இந்த ஒற்றுமையின் வேற்றுமைகள்தாம்- ஒருமையின் பன்முகத் தன்மைகள்தாம் - பல்வேறு மதங்கள்! இந்த மதங்களின் போராட்டம்தான் அதிகாரத்திற்கான போராட்டம்! என்று தமது சொல்லாடலை ஜமாலன் தொடங்குகிறார். ஆனால், மதத்தின் ஞானமோ அல்லது ஞானிகளோ அவருக்குப் பிடிக்கவில்லை. எப்படியும், மதங்களின் தோற்றம் பற்றியும் அவர் சொல்லாடி ஆகவேண்டும் அல்லவா! எனவே, அவரது சொல்லாடலைத் தொடர்ந்து நாம் கவனிப்போம்.

## குற்ற உணர்மை

## Guilty Consciousness

"பிராய்டு கூறியதைப் போல, ஆதிச் சமூகத்தில் கொலை செய்யப்பட்ட தந்தை (murder of the primal father) பற்றிய நினைவு, குற்ற உணர்ச்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யால் மாற்றீடு செய்யப்பட்ட கடவுளின் இயக்கமாக ஆழ்மனத்தில் படிந்து கிடக்கலாம். இந்தக் கொலை மறக்கடிக்கப்பட்டு அல்லது ஒடுக்கப்பட்டு இருப்ப தன் ஓர் அறிகுறிதான் மதங்கள்."

பின் - புதினவாதிகள் கூறிட வருகின்ற கருத்து கள் மற்றவர்களுக்குப் புரிவது இல்லை என்று அவர்கள் மேல் ஒரு குற்றச்சாட்டு இருப்பதாக ஜெயமோகன் ஒரு முறை குறிப்பிட்டார். ஆனால், இங்கே ஜமாலன் கூறிட வருகின்ற கருத்துகளை அவராவது புரிந்து கொண்டு இருக்க முடியுமா? என்னும் ஐயம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. கூடவே, பாண்டிய நாட்டைக் கடல் விழுங்கி விட்டதற்குச் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்ற ஒரு காரண மும் நமது நினைவுக்கு வந்து விடுகிறது.

என்றோ ஒரு காலத்தில், ஏதோ ஒரு கோபத்தில், யாரோ ஒரு பாண்டிய மன்னன் இந்து மாக்கடலின் மேல் தனது வேலை வீசி எறிந்து விட்டானாம்! இந்தப் பழைய பழியைத் தீர்த்துக் கொள்வதற்காகத்தான் பஃறுளி ஆற்றையும் குமரி மலையையும் இந்து மாக்கடல் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டதாம்!

"வடிவேல் எறிந்த வான் பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள"

என்று இதனைப் பாடுகிறார் இளங்கோ அடிகள்! 'வான் பகை' என்பதற்குப் 'பழைய பகை' என்று பொருள் கூறுகிறார் அடியார்க்கு நல்லார்!

குமரிக் கடலில் ஏற்பட்டு வந்து இருக்கின்ற கொந்தளிப்புகளைப் பற்றி நமக்குத் தெரியும். இவற்றால் பாண்டிய நாட்டின் தென்பகுதி கடலுக்குள் அமிழ்ந்து போனது என்பதும் நமக்குத் தெரிந்தது தான். மேலும், கடலுக்குள் ஏற்படுகின்ற நில அதிர்ச்சிகளும் எரிமலை வெடிப்புகளும்தாம் கடல் கோள்களுக்குக் காரணம் என்பதும் மிகவும் நன்றாகவே நமக்குத் தெரியும். ஆனாலும், நம்மிடம் இளங்கோ அடிகள் கூறுகிறார் : கடலின் கோபம் தான் அதன் கொந்தளிப்புக்குக் காரணம் என்று!

இப்படி, யாரோ ஒரு தந்தையை எவனோ ஒருவன் கொன்றுவிட்ட 'நினைவு'தான் 'கடவுளின் இயக்கம்' என்று கடவுளின் தோற்றத்துக்கு ஒரு காரணத்தைக் கூறுகிறார் ஜமாலன்! யாருடைய தந்தையை, எதற்காக, யார் கொன்றார்கள் என்னும் விளக்கம் எதையும் அவர் கூறாததால், 'கொலை செய்யப்பட்ட தந்தை' என்பதை மட்டும் இங்கே நாம் எடுத்துக் கொள்வோம்.

'செய்யப்பட்ட' என்பது போன்ற செயப்பாட்டு வினைத் தொடர்களில் எப்பொழுதும் ஒரு வசதி யுண்டு. யார் செய்தார்கள் என்பதைக் கூறாமலே 'செய்யப்பட்ட' நிகழ்ச்சிகளை அதில் நாம் குறிப் பிட்டு விடமுடியும்! மேலும், 'படிந்து கிடக்கலாம்' என்று ஜமாலன் கூறுகின்ற ஐயப்பாட்டு வினை முற்றின் பொருளையும் நாம் புறக்கணித்து விடலாம்.

ஏனென்றால், நேர்மறையான ஒரு வினைமுற்றாக அதன் அடுத்த வாக்கியம் அமைந்து முந்திய வாக்கியத்தின் பொருளை நிறைவு செய்திருக்கின்றது. எனவே, 'படிந்து கிடக்கிறது' என்றே இதனை நாம் பொருள்படுத்திக் கொள்ளலாம்.

ஜமாலன் இங்கே சொல்ல வருகின்ற கருத்துக் களை முதலில் நாம் புரிந்து கொள்ள முயல்வோம்.

*1. கொலை செய்யப்பட்ட தந்தையைப்பற்றிய நினைவு!*
*இது காரணம்.*
*2. கொலை செய்யப்பட்ட தந்தையைப் பற்றிய இந்த நினைவு, கடவுளின் இயக்கமாக மாற்றீடு செய்யப்படுதல்!*
*இது காரியம்.*
*ஆனால்,*
*3. இந்தக் காரியமாக இந்தக் காரணத்தை இங்கே மாற்றீடு செய்வதோ, குற்ற உணர்மை! இதுதான் கருவி.*
*4. கொலை நடந்த இடம்: ஆதிச் சமுதாயம்!*
*5. கொலை நடந்த காலம்: ஆதிக்காலம்!*
*6. இந்த ஆதிக் கொலையின் நினைவு படிந்து கிடக்கின்ற இடமோ, ஆழ்மனம்!*
*7. அது படிந்து கிடக்கின்ற காலமோ, நிகழ் காலம்!*

'மறக்கடிக்கப்பட்டு' என்னும் ஜமாலனின் கருத்தை இங்கே நாம் புறக்கணித்து விடலாம். ஏனென்றால், 'மறக்கடிக்கப்படாமல் ஒடுக்கப்பட்டுப் படிந்து கிடக்கிறது' என்பதுதான் நமக்கு அவர் தெரிவிக்க வருகின்ற கருத்து. மறக்கடிக்கப்பட்டு விட்ட ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய 'நினைவு', ஆழ்மனத்தில் மட்டும் இன்றி, மேல்மனத்தில் கூட படிந்து கிடந்திட முடியாது அல்லவா?

இங்கே, இரண்டு வகையான பங்குகளைக் குற்ற உணர்மை ஆற்றுகிறது.

ஒன்று:

ஆழ்மனத்தில் படிந்து கிடக்கின்ற நினைவை, ஆதிக் காலத்தில் இருந்து நிகழ்காலம் வரை, சுமந்து கொண்டு வந்து இருக்கின்ற ஒரு சுமை தாங்கியாக அது செயல் ஆற்றுகிறது. இந்தக் குற்ற உணர்மை மட்டும் இல்லாமல் போய் இருந்தால், கொலை செய்யப்பட்ட தந்தையின் நினைவு நம்மிடம் மறக்கடிக்கப்பட்டு இருந்து இருக்கும்!

எனவே, நினைவை விட முக்கியம் ஆனதாகக் குற்ற உணர்மை மாறுகிறது. கடவுளை விட முக்கி யம் ஆனதாக மதம் மாறிவிடுவதைப் போல! மதம் என்னும் ஒரு சுமைதாங்கி மட்டும் இல்லாமற் போயி ருந்தால், கடவுளுக்கு என்று புகலிடம் எதுவும் இருந்திட முடியாது அல்லவா?

இரண்டு :

கடவுளின் இயக்கமாகத் தந்தை பற்றிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைவை மாற்றீடு செய்கின்ற இந்தக் குற்ற உணர்மை, தனது அறிகுறியாக மதத்தை உருவாக்கிக் கொள்கிறது. அதாவது, மதத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. சரியாகச் சொல்வது என்றால், ஒடுக்கப்பட்டுப் படிந்து கிடக்கின்ற, அதாவது, ஆழ்மனத்தின் உள்ளடக்கமாக அமைந்து கிடக்கின்ற, குற்ற உணர்மையின் வெளிப்பாடுதான் மதம்! அல்ல, அல்ல, குற்ற உணர்மையின் வெளிப்பாடுகள்தாம் மதங்கள்!

அதாவது,
ஒரே ஒரு கொலை!
ஒரே ஒரு நினைவு!
ஒரே ஒரு குற்ற உணர்மை!
எனினும், பல்வேறு மதங்கள்!

இப்பொழுது, கொலை செய்யப்பட்ட தந்தையின் நினைவும், அதனால் ஆய குற்ற உணர்மையும், யாரிடமாவது இன்று படிந்து கிடக்கின்றனவா? என்று ஒரு கேள்வியைக் கேட்டு ஜமாலனை மடக்கி விடலாம் என்று நாம் முயன்றால், அதனால் நாம் அடைந்திடப் போவதோ தோல்விதான்! ஏனென்றால், குற்ற உணர்மையினால், ஒரு கடவுளாக, ஏற்கனவே அந்த நினைவு மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. குற்ற உணர்மையின் அறிகுறிகளோ மதங்கள் ஆகியும் விட்டன.

இப்படி, கடவுளும் மதமும் நமது ஆழ்மனத்தில் படிந்து போய்விட்டதனால்தான், தந்தையின் நினைவும் அவரைக் கொலை செய்துவிட்ட குற்ற உணர்மையும் நம்மிடம் இன்று இல்லாமற்போய் விட்டன. கடவுளையும் மதத்தையும் மட்டும் நாம் மறந்துவிட நேர்ந்து விட்டால், அந்த நினைவும் குற்ற உணர்மையும் மீண்டும் நமது நினைவுக்கு வந்து விடும். மீட்டுருவாக்கம் பெற்று நமது மனத்தை அவை வதை செய்யும். உண்ணவும் முடியாமல், உறங்கவும் முடியாமல் அல்லலபட்டு, மனநோயாளிகள் ஆகி, நமது ஆழ்மனத்தைப் படித்திடக்கூடிய மேல்மனத்து மருத்துவர்களைத் தேடி நாம் அலைந்து திரிந்துகொண்டு இருக்கவும் நமக்கு நேர்ந்து விடலாம்!

ஆக, மதங்களின் தோற்றம் பற்றிய ஜமாலனின் கருத்தாக்கத்தை நாம் புரிந்து கொண்டு விட்டோம் என்பது உறுதி. காரண - காரியங்களுடன் கூடிய மிகச் சிறந்த ஒரு விளக்கமாகவும் நமக்கு இது தோன்றுகின்றது. ஆனால், மதங்கள் தோன்றிய காரணத்தை இதன்மூலம் நாம் புரிந்து கொண்டு விட்டோமா? என்றால், அதுதான் இல்லை. ஆனால், ஒன்றை மட்டும் மிகவும் நன்றாக நாம் புரிந்து கொண்டு விட்டோம் - குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாம் என்று!

ஏனென்றால், கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையைத் தெரிந்து வைத்துக்கொண்டு, இறந்தவர்களின் மனங்களில் இருந்து இருப்பவர்களின் மனங்களுக் குத் தாவித் தாவித் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்ற மனிதத்தின் நினைவு இது.!

அண்டத்தின் உயிர்மையாக (cosmic spirit) இல்லை என்ற போதிலும், மனிதத்தின் உயிர்மையாக (human spirit) நம்மைத் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்ற நினைவு இது! - ஜெயமோகனது 'பின் தொடரும் நிழலின் குரலை'ப் போல!

இப்பொழுது சில கேள்விகளை நாம் எழுப்புவோம்!

## பாமரத்தனத்தின் பகட்டுகள்

கொலை செய்யப்பட்ட அந்தத் தந்தை யார்? ஒரே ஒரு தந்தையிடம் மட்டும் இருந்துதான் மனித இனம் தோன்றி வந்தது என்று ஜமாலன் நம்புகிறாரா?

அவருக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்றால், ஒரே ஓர் ஆதி மந்தி மட்டும் ஆதிமாந்தனாக விளர்ச்சி (evolve) அடைய, அந்த ஒரே ஓர் ஆதிமாந்தனிடம் இருந்துதான் மனித இனம் தோன்றி வந்ததா?

கொலை செய்யப்பட்ட தந்தையின் நினைவுதான் 'தந்தைவழி' மதங்களுக்குக் காரணம் என்றால், கொலை செய்யப்பட்ட ஒரு தாயின் நினைவுதான் 'தாய்வழி' மதங்களுக்குக் காரணமா?

அப்படி என்றால், மனிதர்களை மனிதர்கள் தின்று வந்த நினைவுகளும் கடவுளுக்கு மனிதர்கள் நரபலி கொடுக்கப்பட்டு வந்த நினைவுகளும் என்ன ஆயின?

குற்ற உணர்மைதான் மதத்தின் தோற்றத்துக்குக் காரணம் என்றால், ஒரு பேயாக அது மாறாமல் ஒரு கடவுளாக அது மாறி இருப்பதற்குக் காரணம் என்ன? ஒரு வேளை, கடவுள்களாக நல்ல குற்றங்களின் நினைவுகளும் பேய்களாகக் கெட்ட குற்றங்களின் நினைவுகளும் மாறிவிடுகின்றனவா?

இந்தக் கேள்விகள் அத்தனையும் பாமரத்தனமான கேள்விகள் என்பதில் யாருக்கும் ஐயம் இருந்திட முடியாது.

ஆனால், மிகவும் பாமரத் தனமாக மதத்தைப் புரிந்து கொள்ள முயன்று இருக்கின்ற ஜமாலனின் பாமரத்தனம்தான் இதற்குக் காரணம்!

ஆனாலும்,

"மரணம் குறித்த பேரச்சத்தின் விளைவே மதங்களைத் தோற்றுவிக்கின்றது" என்றும்

"சாத்தான்களோ, அரக்கர்களோ, எதிர்ப்பாளர்களோ இல்லாமல்.... மதங்கள் சாத்தியம் இல்லை" என்றும்

தமது பாமரத்தனத்தின் பகட்டுகளை ஜமாலனோ அடுக்கிக் கொண்டே போகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆழ் மனம்

'ஆழ் மனம்' என்று ஒரு மாயமனத்தினை உள வியல் பகட்டுடன் நமக்குச் சுட்டிக் காட்டுகிறாரே, ஜமாலன்! அதன் தன்மையையாவது அவர் புரிந்துகொண்டு இருக்கிறாரா? என்றால் அதுவும் இல்லை.

ஆழ் மனம் என்றும், மேல் மனம் என்றும் மனிதனின் திண்மையான மனத்தில் பிளவுகள் ஏற்படுவதற்கு மனிதனின் கபடத்தனம்தான் காரணம். ஆனால், ஒரு மாயமாக இதனைப் புரிந்துகொள்ள முயல்வதோ பாமரத்தனம் ஆகும். ஏனென்றால், மெய்மையை மூடி மறைத்துப் பொய்மையாக வாழ்ந்திட நாம் முற்படுகின்ற பொழுது மட்டும்தான் நமது மனத்தில் இத்தகு பிளவுகள் ஏற்படுகின்றன.

நமது ஆழ்மனத்திற்குள் அமிழ்ந்து கிடப்பவை தாம் என்ன? வெளியில் சொல்வதற்கு நாம் வெட்கப் படுகின்ற நமது செயல்கள் மற்றும் ஆசைகள் மட்டும்தாமே! இதனால்தான், குற்ற உணர்மையை ஆழ்மனத்தில் ஜமாலன் படியவும் விடுகிறார்!

ஆனால், இந்த ஆழ் மனமோ - பொய்மைகளின் புகலிடம்! வெட்கக்கேடுகளின் விளைநிலம்! நாணம் கொள்ளத்தக்க நமது இச்சைகளை நாம் மூடி மறைத்துக் கொள்கின்ற முக்காடு!

கபடத் தனத்தின் சித்து விளையாட்டுகளைத் தெரிந்து வைத்துக் கொண்டு, தங்களுக்கு வருமானம் தேடிக் கொள்வதற்கு வேண்டும் என்றால் மனநோய் மருத்துவர்களுக்கு இது பயன் படலாமே ஒழிய மதங்களைப் புரிந்து கொள்வதற்கு ஜமாலனுக்கு இது பயன்பட்டுவிட முடியாது!

# மதங்களின் வளர்ச்சி

நுகர்ச்சி வாழ்க்கை (consumptive life)க் காலத்தில் இயற்கைக்கு அடி பணிந்து கிடந்து வந்த மனிதர்கள், இயற்கைத் திறல்களை (force) எல்லாம் தேவதைகளாக எண்ணி வழிபட்டுக் கொண்டு வந்தார்கள். தங்களுக்குச் சாதகமாக இயற்கையைப் பயன்படுத்திட முடியாத மனிதர் களின் உடல் பலவீனம் மட்டும் அல்ல, இயற்கைத் திறல்களை எளிதில் புரிந்துகொண்டுவிட முடியாத மனிதர்களின் மனப் பலவீனமும் இதற்குக் காரணங்கள் ஆயின.

குலச் சமுதாயங்களாக (tribal society) மனிதர்கள் வாழ்ந்து வந்த உற்பத்தி வாழ்க்கைக் காலத்தில் (productive life) இயற்கைத் திறல் களைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகக் கருதப் பட்டு வந்த குலத் தலைவர்களை, மந்திரக்காரர் களாகவும் குருக்களாகவும் கருதித் தங்கள் மதக் கோட்பாடுகளை மக்கள் வகுத்துக்கொண்டு இருந்தனர்.

ஆண்டை - அடிமைச் சமுதாயத்திலோ, மாண்டு போய் இருந்த குலப் பெருந்தலைவர்கள் தெய்வங் களாகக் கருதப்பட்டு வந்தனர் என்றால், அவர்களின் மறுநிகரிகளாக(representatives)க் கருதப்பட்டு வந்தனர் ஆண்டைகள்!

வணிகம் வளரத் தொடங்கி இருந்த அரை - அடிமை, அல்லது பண்ணையச் சமுதாயத்தில் (feudal society), கடவுளின் 'அவதாரங்களாக' மதப் போதகர்களும் மக்கள் நேயர்களும் கருதப்பட்டு வந்தனர். ஆளும் வருக்கங்களிடம் இருந்து பிரித்து எடுக்கப்பட்டு, தனித்து விடப்பட்டு இருந்தனர் கடவுளர்கள்!

பண்ணையச் சமுதாயத்து உறவுகளுக்கு இடையே முதலாண்மை உற்பத்தி உறவுகள் தலையெடுக்கத் தொடங்கி இருந்த காலத்தில், மனிதனாக அவதாரம் எடுத்து மண்ணுக்கு இறங்கி வருவது போன்ற வேலைகளை எல்லாம் கடவுள் கைவிட்டுவிட நேர்ந்தது. தமக்குப் பதிலாகத் தமது மைந்தர்களை அவர் மண்ணுக்கு அனுப்பி வைத்திடத் தொடங்கினார். பணத்தைக் கடவுளும், சரக்குகளை அவரது குமாரர்களும், சரக்குகளின் மதிப்பினைப் புனித ஆவியும், விண்ணகத்தில் மறுநிகர்த்திடத் தொடங்கினர்.

இன்றைய முதலாண்மைச் சமுதாயத்திலோ, கடவுளின் மைந்தர்கள் மடிந்துவிட நேர்ந்துவிட்டது. உயிர்த்து எழுந்து விண்ணகத்துக்குத் தப்பிச் சென்று விட்டவர்களும் அவர்களுள் உண்டு. என்றைக்கு அவர்கள் திரும்பி வருவார்கள் என்பதுதான் யாருக்கும் தெரியாத ஒரு கரசியம் (secret).! ஆனால், அப்படி அவர்கள் திரும்பி வருகின்ற பொழுது, பழைய உலகத்தை அழித்துப் புதியது ஓர் உலகத்தை அவர்கள் படைத்துக்கொண்டும் விடுவார்களாம்!

இந்த முதலாண்மைச் சமுதாயத்துக் கடவுள் தான் முழுமுதல் ஆனவர், அருவமானவர், அனைத்து வேறுபாடுகளையும் தம்முள் அடக்கிக் கொள்கிற ஒருமையானவர்! ஏனென்றால், முதலின் (capital) உருவகம் அவர்.

பணத்தின் வடிவத்தில்தான் முதல் வெளிப் படுகிறது என்றபோதிலும், முதலும் பணமும் ஒன்று அல்ல என்பது கார்ல் மார்க்ஸின் கருத்து. மதிப்பின் வடிவம் பணம்தான் என்ற போதிலும், முதலோ மதிப்பு - நிகழ்ப்பாடு அல்லது நிகழ்கின்ற மதிப்பு. எனவே, இதற்கு உருவம் எதுவும் கிடையாது!

இப்படி, உருவமாகவும் அருவமாகவும் முதல் இருக்கின்ற காரணத்தினால்தான், தந்தையின் உருவம் கொண்டவராகவும், அதே நேரத்தில், உருவம் இல்லாத அருவமாகவும் கடவுளை மனிதர்கள் இன்று கருதிக்கொள்ள முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதாயமும் கூலியும் முரண்பட்டு நிற்கின்ற இரண்டு எதிரிடைகள் என்பது நமக்குத் தெரியும். ஆனால், இந்த எதிரிடைகளின் ஒற்றுமையில்தான் உற்பத்தி என்பது இங்கே நடைபெற்றுக்கொண்டு வருகிறது: மனிதர்களின் உயிர்வாழ்க்கையும் நிலைநின்றுகொண்டு வருகின்றது.

இப்படி, கூலியினுள் ஆதாயமும் ஆதாயத்தினுள் கூலியும் அடங்கிக் கிடக்கின்ற காரணத்தினால்தான், ஆன்மிகத் தன்மையும் இறைமைத் தன்மையும் ஒவ்வொருவரின் உள்ளும் ஒரு-சேர அடங்கிக் கிடக்கின்றன என்னும் கருத்துக்கள் இங்கே உதயம் ஆகிட முடிகிறது. இதுபோல, தங்கள் திண்மை இயல்புகளாக வருக்க இயல்புகளையும் நுண்மை இயல்பாக மனித நேயத்தையும் மனிதர்கள் சுமந்து கொண்டு இருக்கின்ற காரணத்தினால்தான், மனிதநேயம் மிக்கவராகவும் கடவுள் கருதப்பட்டு வருகிறார். (பார்க்க : மனத்தின் விடுதலை, அதிகாரம் 11)

இன்றைய முதலாண்மைப் பொருளாதாரத் திற்கும் மதம், அரசியல், முதலிய கோட்பாடு களுக்கும் இடையே உள்ள உறவுகளை - முன்ன தால் பின்னது நிலவரப்படுத்தப்படுகின்ற தீர்மானப் பாடுகளை-விரித்து எழுதுவது, தனி ஒரு நூலைப் போல விரிவு ஆகிவிடும் என்பதால், இத்துடன் இதனை முடித்துக் கொள்வதுதான் ஈண்டு பொருத்தம்!

விரிவாக இதுபற்றித் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள், கார்ல் மார்க்ஸ் எழுதிய The German Ideology, The Holy Family, Early Writings முதலிய பிற நூல்களைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம். வாழ்க்கையின் கேள்விகள், மனத்தின் விடுதலை, வரலாற்றின் முரண் இயக்கம் : பாகம் ஒன்று, முதலாண்மைப் புரட்சி : பாகம் இரண்டு, தேசியத்தின் எழுச்சி ஆகிய நூல்களும் இந்த வகையில் பயன்படலாம்.

## ஏங்கெல்ஸ்

ஆண் - பெண்களின் சமுதாய நிலைமைகளில் (status) ஏற்பட்டு வந்து இருக்கின்ற மாற்றங் களுக்கு, சமுதாய நிலவரங்களின் வளர்ச்சி அல்ல, மதக்கருத்துக்களில் ஏற்பட்டு வந்து இருக்கின்ற மாற்றங்கள்தாம் காரணம் என்று :பச்சோபன் என்பவர் எழுதினாராம் - 'தாய் உரிமை' என்னும் தமது நூலில்! ஏஸ்கிலஸ் என்பவர் எழுதி இருந்த ஒரு நாடகத்தையும் தமது கூற்றுக்கு ஆதாரமாக அவர் எடுத்துக் கொண்டு இருந்தாராம். இதுபற்றி ஏங்கல்ஸ் கூறுகின்ற சில கருத்துக்களைச் சிறிது நாம் பார்ப்போம்.

திரையர்தம் போரில் இருந்து அப்பொழுதுதான் திரும்பி வந்து இருக்கிறான் அ:கம்னான். அவனது மனைவியின் பெயர் க்லைட்டம்னெஸ்ட்ரா. அவர்களது மைந்தனின் பெயர் ஒரேஸ்ட்டஸ். ஆனால், க்லைட்டம்னெஸ்ட்ராவுக்கு ஏஜிஸ்தஸ் என்று ஒரு காதலனும் உண்டு.

தனது காதலனுக்காகத் தனது கணவனைக் கொல்கிறாள் மனைவி!

தனது தந்தையைத் தனது தாய் கொன்றுவிட்டதற்குப் பழி வாங்குவதற்காகத் தனது தாயைக் கொல்கிறான் அவளது மைந்தன்!

கடவுள்களின் மன்றத்திற்கு வழக்கு வருகிறது. தாய் உரிமைக்கு ஆதரவாளர்களான எரின்யர்களும் தந்தை உரிமைக்கு ஆதரவாளரான அப்பல்லோவும் மன்றத்தின் நடுவரான எத்தினாவும் இந்த வழக்கு விசாரணையில் கலந்து கொள்கிறார்கள்.

தமது கணவரைக் கொன்று இருக்கிறார் க்லைட்டம்னெஸ்ட்ரா! அவரது கணவரோ எனது தந்தை! எனவே, தமது கணவரையும் எனது தந்தையையும் கொன்றுவிட்ட இரட்டைக் குற்றங்களை அவர் புரிந்து இருக்கிறார் என்று வாதிடுகிறான் ஒரேஸ்ட்டஸ் - அப்பல்லோவின் ஆதரவுடன் !

தனது கணவனைக் க்லைட்டம்னெஸ்ட்ரா கொன்றது குற்றம் அல்ல! ஏனென்றால், அவனுடன் அவளுக்கு இரத்தபந்தம் எதுவும் இல்லை என்று வாதிடுகிறார்கள் எரின்யர்கள்!

இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இரு தரப்பிற்கும் சமமான அளவில் வாக்குகள் கிடைக் கின்றன.

இறுதியில், ஒரேஸ்ட்டசுக்கு ஆதரவாக வாக்கு அளித்து அவனை விடுவிக்கிறாள் எத்தினா. அப்பொழுதே 'தாய் உரிமை' அழிந்து 'தந்தை உரிமை' நிலைநிறுத்தப்பட்டுவிட்டது என்கிறார் :பச்சோபன்!

மனித உறவுகளை மதக்கருத்துக்கள்தாம் தீர்மானிக்கின்றன என்பதை எடுத்துக்காட்டு வதற்காகப் :பச்சோபன் கூறுகின்ற ஒரு கதை இது!

எரின்யர்களையும் அப்பல்லோவையும் எத்தினாவையும் ஏஸ்கிலஸ் நம்புவது போலவே :பச்சோபனும் நம்புகிறார்.

மாயவாதத்தில்தான் இத்தகைய ஒரு கருத் தாக்கம் முடிவுற்று ஆகவேண்டும் என்று கூறுகின்ற ஏங்கெல்ஸ், : பச்சோபனது நூல் முழுவதையும் ஆய்ந்துகொண்டு இருப்பது வீண்வேலை என்றும் குறிப்பிடுகிறார்.

(பார்க்க: The Origin of the Family, Private Property and the State pp10-11)

இங்கே,

பொருளாதார 'நலன்களுக்கும்' (economic interest) கோட்பாடுகளுக்கும் (ideology) இடையே உள்ள உறவு என்ன? என்பதுதான் அடிப்படையான கேள்வி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கோட்பாடு

## Ideology

தங்கள் கொள்கைகளாக மனிதர்களால் கொள்ளப்படுவனதாம் கோட்பாடுகள்! இந்தக் கோட்பாடுகளோ மனிதர்களின் பொருளாதார அல்லது பருமையான (material) நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதை நோக்கமாகக்கொண்டு அவர்களால் கொள்ளப்படுபவை! அதாவது, தங்கள் பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளு கின்ற வகையில், தங்களுக்கு என மனிதர்கள் வகுத்துக் கொள்கின்ற கொள்கைகள்தாம் கோட்பாடுகள் ஆகும். இப்படிக் கொள்ளப்படுகின்ற கொள்கைக்ள்தாம் அரசு, குடும்பம், மதம் முதலிய கோட்பாட்டு நிறுவனங்களின் அமைவாக்கத்துக்கும் காரணம். எனவேதான், மனிதர்களின் கருத்து நிலவரங்களை மனிதர்களின் பருமை நிலவரங்கள்தாம் தீர்மானிக்கின்றன என்று மார்க்சியம் கொள்கிறது.

ஓர் எடுத்துக்காட்டாக, ஒரு முதலாளி கூறுவதாக 'வாழ்க்கையின் கேள்வி'களில் வருகின்ற ஒரு கூற்றினை இங்கு நாம் பார்ப்போம்:

"எனவே, 'பொருளாதாரத் தீர்மானவாதத்திற்கு' எதிராகக் கூக்குரல் எழுப்புவதில் எந்தப் பயனும் இல்லை. அள்ளிக் கொடுத்து மகிழ்ச்சியால் பூரிக் கின்ற 'வள்ளல் மனம்' எனக்கும் இருக்கத்தான் செய்கிறது என்ற போதிலும், அதனால் எனது பொருளாதார நலன்கள் பாதிக்கப்பட்டு விடும் என்பதால், கூலி உயர்வு கேட்கின்ற உழைப்பாளர் களைத் தடி கொண்டு தாக்கியும் துப்பாக்கிக் குண்டு களுக்குப் பலி ஆக்கியும், ஒரு கொலைகார வாழ்க் கையினை நான் நடத்துகிறேன் என்றால், இரும்புத் தனமான எனது பொருளாதார நலன்களினால் நசுக்கப்பட்டு, ஒரு 'வருக்க மனமாக' எனது 'மனித மனம்' மாற்றம் அடைகிறது என்றுதானே பொருள்!" (பக். 227)

இதுதான் வாழ்க்கையின் மெய்ம்மை. வெறும் 'நல் எண்ணப் புலம்பல்' அல்ல! மார்க்சியத்தின் அடிப் படையும் இதுதான்!

மார்க்சியத்திற்கு எதிராக வாதங்கள் புரிவதற்குத் தாராளமாக ஜமாலன் முன்வரலாம். ஆனால், கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடும் என்னும் உத்தியாக, யாரும் வீழ்த்தாமல் மார்க்சியம் வீழ்ந்துவிட்டது என்று அவர் கருதிக் கொள்வதில் தான் எந்தப் பயனும் இல்லை. மார்க்ஸின் நூல் களைக் கொஞ்சம் படித்தும்தான் பார்க்கலாமே!

அதைவிட்டு விட்டு, நேற்றைய வாதம், இன் றைய வாதம், நாளைய வாதம் என்கின்ற பாணியில் முன் - புதினவாதம், பின் - புதினவாதம், பின்னைக் கும் பின் - புதினவாதம் என்று எல்லாம் மாயங்களை அவிழ்த்து விட்டுக்கொண்டு இருப்பதில் யாருக்கு என்ன பயன்?

## மூளை நோகாத ஞானங்கள்

பழைய கற்காலம், புதிய கற்காலம், இரும்புக் காலம் என்று வரலாற்றுக் கட்டங்களை டென்மார்க் நாட்டு அகழ்வு ஆய்வாளர்கள் வகைப்படுத்தி னார்கள் என்று மார்:கன் கூறுகின்றார். 'தொழில் நுட்பத்தின் வளர்ச்சியை'க் குறிக்கின்ற வகைப் பாடுகள் (categories) இவை என்பதால், அனை வரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய வகைப்பாடுகள் இவை என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

குலச் சமுதாயக் காலம், அடிமைச் சமுதாயக் காலம், பண்ணையச் சமுதாயக் காலம், முதலாண் மைச் சமுதாயக்காலம் என்று 'உற்பத்தி உறவு' களின் அடிப்படையில் சமுதாயங்களை மார்க்சியம் வகைப்படுத்துகிறது. மனிதர்களின் 'சமுதாய உறவுகளை' அடிப்படையாகக் கொண்டு வரையறுக் கப்பட்டு இருக்கின்ற வகைப்பாடுகள் இவை என்பதால் - மனித 'உறவுகளின் தன்மை'தான் மனித வாழ்க்கையின் தன்மையினைக் குணவரைப்படுத்திட முடியும் (characterize) என்பதால் - சமுதாய அக்க றையுடன் வரையறுக்கப்பட்டு இருக்கின்ற வகைப் பாடுகள் இவை என்பதிலும் ஐயம் எதுவும் இல்லை.

ஆனால், புதினவாதம், பின் - புதினவாதம் என் கின்ற வரையறைகள், வெறுமனே 'காலம்' பற்றிய வரையறைகளே அன்றி 'மனித உறவுகள்' பற்றிய வரையறைகள் அல்ல. சொல்லப் போனால், ஸ்தாலி னிசத்திற்கு எதிராக எழுந்து வந்து இருந்த வெறும் மாயவாதச் சிதறல்கள்தாம் இவை! ஆனால், உடல் நோகாத அறிவாளர்களின் மூளை நோகாத இந்தச் சிந்தனைகளோ, இரண்டும் - கெட்டான் சிந்தனைகள் ஆகிவிட்டன. இவைதாம் சிற்றுடைமைச் (petit bourgeois) சிந்தனைகளும் ஆகும். முதலாளர்க ளுக்கும் உழைப்பாளர்களுக்கும் இடையே இரண் டும் - கெட்டான்களாக இடிபட்டுக்கொண்டு இருப்ப வர்கள் அல்லவா, அவர்கள்!

ஆனால், மார்க்ஸின் சிந்தனைகளோ மனித வாதச் சிந்தனைகள் ஆகும். மனித இயல்பு என்றும் மனிதச் சாரம் என்றும் மனித விடுதலை என்றும் எதுவும் இருந்திடமுடியாது என்று நாம் சொல்வதற்கு நமது மூளையை வருத்தி நாம் உழைத்திட வேண்டிய தேவை எதுவும் நமக்கு இல்லை.

மூக்கு முட்டச் சோறும் சோம்பலில் கழிப்பதற்கு கொஞ்சம் ஓய்வும் மாயவாதத்தின் மயக்கமும் காதல் பற்றியும் காமம் பற்றியும் விந்தையான சில சிந்தனைகளும், கூடவே, இவற்றைப் படித்துப் பகிர்ந்துகொள்வதற்குச் சில கதைகளும் கவிதை களும் இருந்தால் போதும், ஒரு பின் - புதினவாதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாக யாரும் மாறிவிடலாம். தனது வருமானத்தையும் தனது வசதிகளையும் தவிரப் பிற அனைத்தையும் கட்டுடைத்தும் பார்த்துக் கொள்ளலாம்.

அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகச் சில சிந்தனைச் சிதறல்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, மனிதர்களின் சமுதாய வாழ்க்கையை அந்தச் சிதறல்களுக்குள் அடக்கிவிட முடியும் என்கின்ற கற்பனையில் மூழ்கிக் கிடப்பவர்கள் இவர்கள்!

ஒரு முதலாளியாலோ அல்லது உழைப்பாளியாலோ இத்தகு கற்பனைகளில் மூழ்கிவிட முடிவது இல்லை. அத்தகைய வாய்ப்புகளும் அவர்களுக்குக் கிட்டுவது இல்லை. ஏனென்றால், பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டுக்கொண்டு வருபவர்கள் அவர்கள்! ஆனால், இந்த மாயாவாதச் சிந்தனையாளர்களுக்கோ உடல் நோகாத வாழ்க்கையும் மூளை நோகாத ஞானமும் எப்படியோ கிடைத்து விடுகின்றன.

## கார்ல் மார்க்ஸ்

"சமுதாய வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை, அறிவாண்மை வாழ்க்கை ஆகிய அனைத்தையும், பருமை வாழ்க்கையின் உற்பத்திமுறை நிலவரப்படுத்துகிறது. மனிதர்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பது அவர்களின் உணர்மை அல்ல மாறாக, அவர்களது சமுதாய வாழ்க்கைதான் அவர்களின் உணர்மையைத் தீர்மானிக்கின்றது" என்று கார்ல் மார்க்ஸ் கூறுகிறார். (பார்க்க: Preface, A Contribution to the critique of Political Economy அல்லது வரலாற்றின் முரண் இயக்கம்: பாகம் ஒன்று, பக்கம் 93)

இந்த அடிப்படையில்தான் மதத்தைப்பற்றி அவர் கூறுகிறார் - "மெய்மை உலகின் மறுபலிப்புத்தான் (reflection) மத உலகம்!" (Capital, Vol-I p. 83 அல்லது கார்ல் மார்க்ஸ்: முதல்: அதிகாரம் ஒன்று: பணம், தமிழாக்கம் பக். 123) என்று! ஆனால், மத உலகின் மறுபலிப்புதான் மெய்மை உலகம் என்று கூறிட முற்படுகிறார் ஜமாலன்! அதே நேரத்தில், இஸ்லாமியரிடையே நிலவி வந்து இருந்த சமன்மைப் பண்பிற்கு அவர்களது வணிகம்தான் காரணம் என்று கூறிடவும் அவர் தயங்கவில்லை.

"ஆன்மா இல்லாத உலகின் ஆன்மா" என்று மதத்தை மார்க்ஸ் சித்தரித்ததற்கு, தாங்கள் இழந்து விட்ட மனித இயல்பினைக் கடவுளில் கண்டு மனிதர்கள் ஆறுதல் அடைந்து கொள்கிறார் கள் என்பதுதான் காரணமே ஒழிய, முற்போக்கா னவை என்று மதங்களை அவர் கருதியது அல்ல. மண்ணைப்பற்றிய விள்ளனமாக விண்ணைப் பற்றிய விள்ளனம் (criticism) மாறி ஆகவேண்டும் என்று அவர் கருதியதற்கும் இதுதான் காரணம்! (பார்க்க: வரலாற்றின் முரண் இயக்கம்: பாகம் இரண்டு, பக். 201-02)

ஏனென்றால், "தொழில் மற்றும் கைமாற்று ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தித்தான் மனித இனத்தின் வரலாற்றினை நாம் ஆய்தல் வேண்டும்' (The German Ideology p. 49) என்பதுதான் மார்க்ஸின் அடிப்படையான கருத்து. இதற்கு, மனிதர்களின் உணர்மைக்குச் செயல்முறையான பங்கு எதுவும் வாழ்க்கையில் இல்லை என்று கார்ல் மார்க்ஸ் கூறுவதாகப் பொருள் ஆகிவிடாது. ஏனென்றால், "தங்கள் வரலாற்றைத் தாங்கள்தாம் மனிதர்கள் படைக்கிறார்கள். ஆனால், தாங்கள் விரும்புவது போல் அவர்கள் அதனைப் படைத்து விடுவது இல்லை. அவர்களாகத் தேர்கை செய்து கொண்ட சூழ்நிலைகளை ஆதாரமாகக் கொண்டும் வரலாறு படைக்கப்படுவது இல்லை. கடந்த காலத்தில் இருந்து வளர்ச்சியுற்று வந்து, நேரடியாக அவர்களை எதிர்கொண்டு நிற்கின்ற சூழ்நிலைகளை ஆதாரமாகக் கொண்டுதான் தங்கள் வரலாற்றை மனிதர்கள் படைக்கிறார்கள்" (பார்க்க: வரலாற்றின் முரண் இயக்கம்: பாகம் ஒன்று: பக். 67) என்பதுதான் வரலாற்றின் படைப்பு பற்றிய மார்க்ஸின் கருத்தாக்கம்.

ஆனால், வருக்க உணர்மை பெற்ற ஒரு முன்னணிப் படையாகக் கட்சியை மார்க்ஸ் கருதினார் என்று, லெனினின் காவுட்ஸ்கியிசத்தை மார்க்ஸின் மேல் ஏற்றி வைத்து விடுகிறார் ஜமாலன்! (இதுபற்றிப் பார்க்க: வரலாற்றின் முரண் இயக்கம், பாகம் இரண்டு: அதிகாரம் 3: புரட்சிகர உணர்மை)

மக்களுக்கு கட்சி வழி காட்ட, கட்சிக்குத் தலைவர் வழி காட்ட, தேர்வு செய்யப்பட்ட ஒரு சிலரின் ஞானத்தினால் வழிநடத்தப்படுகின்ற ஒரு சமுதாயமாகப் பொதுமைச் சமுதாயத்தை என்றைக்கும் கார்ல் மார்க்ஸ் கருதியது இல்லை.

வரலாற்றின் படைப்பு பற்றிய ஹே:கலின் கருத்தாக்கத்தையும் :ப்ருனோ:பாயரின் கருத்தாக்கத்தினையும் ஒப்பிட்டுப் பார்த்து, மார்க்ஸ் கூறுகின்ற ஒரு கருத்து நமக்கு இதனைத் தெளிவுபடுத்தும். 'திறனாய்வு' என்பதைப் புரட்சிகர உணர்மை (revolutionary consciousness) என்று மட்டும் ஈண்டு நாம் புரிந்துகொண்டால் போதும்!

"முதலாவதாக, திறனாய்வுதான் முழுமையான உயிர்மை (absolute spirit) எனவும் தானேதான் அந்தத் திறனாய்வு எனவும், :ப்ருனோ:பாயர் பறைசாற்றுகின்றார். (மக்கள்) திரளிடம் இருந்து திறனாய்வுக் கூறு விரட்டி அடிக்கப்படுவது போல திறனாய்வில் இருந்து (மக்கள்) திரளின் கூறு விரட்டி அடிக்கப் படுகிறது. எனவே, திரளிடம் அல்லாமல், அதற்கு எனத் தேர்கை செய்யப்பட்ட சில தனிமனிதர்களிடம் - :பாயர் மற்றும் அவரது சீடர்களிடம் தனது பிறப்பெ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுப்பைத் திறனாய்வு காண்கிறது."

இரண்டாவதாக, "...மனித இனத்தின் எஞ்சிய திரளுக்கு எதிராக, உலக உயிர்மை என்னும் பங்கினை உணர்மையாக அவர் ஆற்றுகிறார் ...ஒரு நோக்கத்துடன் - முதிர்ந்த சிந்திப்பிற்குப் பின்னர் - வரலாற்றை உருவாக்கி அவர் இயக்குகிறார்." (பார்க்க: The Holy Family pp. 101-102, அல்லது வரலாற்றின் முரண் இயக்கம்: பாகம் இரண்டு, பக். 81)

ஆக, மக்களுக்கு வழிகாட்ட வந்தவராக என்றைக்கும் தம்மை மார்க்ஸ் கருதியது இல்லை என்பது தெளிவு.

"உங்கள் போராட்டங்கள் மடைமையானவை, அவற்றைக் கைவிடுங்கள், உண்மையான போர் முழக்கங்களை உங்களுக்கு நாங்கள் நல்குவோம் என்று நாம் சொல்லப் போவது இல்லை. மாறாக, உலகம் ஏன் போராடிக் கொண்டு இருக்கிறது என்பதைச் சொல்லிட மட்டும்தான் போகிறோம். இதனைப் பற்றிய உணர்மையினை உலகம் பெற்றுக்கொண்டே ஆகவேண்டும் - அது விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி!" (Early writings, p.209 அல்லது வரலாற்றின் முரண் இயக்கம்: பாகம் இரண்டு, பக். 69) என்பதுதான் மார்க்சியப்பான்மை ஆகும்.

## ஸ்தாலினிசத்தின் வீழ்ச்சி

மார்க்ஸைப் பொறுத்தவரை, "விடுதலையான தனிமனிதர்களின் சமுதாயம்"தான் பொதுமைச் சமுதாயமே ஒழிய (பார்க்க : கார்ல் மார்க்ஸ் : முதல்: அதிகாரம் 1: பணம், தமிழாக்கம் பக். 122), ஆயர்க ளைப் பின் தொடர்கின்ற ஆடுகளைப்போல, தலை வர்களைப் பின் தொடர்கின்ற மனிதர்களின் மந்தைச் சமுதாயம் அல்ல! சரியாகச் சொல்வது என்றால், 'விடுதலையான மனிதர்களின் விடுதலையான உறவு களாக விரிகின்ற ஒரு சமுதாயம்' தான் பொதுமைச் சமுதாயம் ஆகும்.

இதனால்தான், சோவியத் ருஷ்யா வீழ்ச்சி அடைந்தவுடன் மார்க்ஸியமும் வீழ்ச்சி அடைந்து விட்டது என்றும் இந்த வீழ்ச்சியில் எழுச்சி கண்டது தான் அடிப்படைவாதம் என்றும் ஜமாலன் கூறுகின்ற பொழுது நமக்குச் சிரிப்பு வருகிறது.

மார்க்சியத்தின் வழிகாட்டுதலில்தான் 'புரட்சிகர மாற்றம்' அடைந்ததாம் சோவியத் ருஷ்யா, ஜமாலன் கூறுகிறார்! அப்படி என்றால், மார்க்ஸ் என்று ஒருவர் மட்டும் பிறக்காமல் இருந்திருந்தால், ருஷ்யாவில் மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டு இருந்திருக்காது என்று ஜமாலன் கருதுகிறாரா? சில நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக மட்டும் மார்க்ஸ் பிறந்து இருந்தால், மிகவும் முன்னரே ருஷ்யாவில் மாற்றங்கள் ஏற்பட்டு இருந்து இருக்குமா? அப்படி என்றால், மார்க்சிய வாதிகளின் வழிகாட்டுதலில் சமுகாண்மைச் சமுதாயத்தைச் சமைத்துக்கொண்டு இருந்த ருஷ்ய மக்கள், முதலாண்மைவாதிகளின் வழிகாட்டுதலில் முதலாண்மைச் சமுதாயத்தை உருவாக்கிட முற்பட்டுவிட்டார்கள் என்று நாம் எடுத்துக் கொள்ளலாமா? கேள்விகள் எழுகின்றன.

ஆட்சியாளர்களாக சோவியத் ருஷ்யாவில் அரியணை ஏறி இருந்த லெனின், ட்ரொட்ஸ்கி, ஸ்தாலின் முதலியோர் மார்க்சியவாதிகளாகத்தாம் இருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால், ருஷ்யாவில் அன்று உருவாகி இருந்ததோ 'அரசு முதலாண்மை'ச் சமுதாயம்! தமது இறுதி நாட்களில் ருஷ்யச் சமுதாயத்தை இப்படித்தான் லெனின் வரையறுத்தும் இருந்தார். (பார்க்க Collected works, vol. I, pp. 334, 335,344-45,346 அல்லது வரலாற்றின் முரண் இயக்கம்: பாகம் 2, பக். 156-57)

எனவே, ருஷ்யாவில் வீழ்ச்சி அடைந்தது அரசு முதலாண்மைச் சமுதாயமே ஒழிய, சமுகாண்மை (socialist) சமுதாயம் அல்ல. அதாவது, அரசு முதலாண்மையின் அதிகார வருக்கக் கோட்பாடான ஸ்தாலினிசம்தான் அங்கு வீழ்ச்சியடைந்ததே ஒழிய மார்க்சியம் அல்ல!

"'நலன்' என்பதில் இருந்து 'கருத்து' என்பது எந்த அளவுக்கு வேறுபட்டு வந்து இருக்கிறதோ, அந்த அளவுக்கு, கருத்து என்பது எப்பொழுதும் அவமானப்பட்டுத்தான் வந்து இருக்கிறது." (The Holy Family, p. 96) என்று மார்க்ஸ் கூறியதுபோல, சோவியத் ருஷ்யாவின் ஸ்தாலினிஸ்டுக்களால் மார்க்சியம் இன்று அவமானப்பட்டு நிற்கிறது என்று வேண்டும் என்றால் ஜமாலன் கருதிக் கொள்ளலாம், அவ்வளவுதான்! இதில், ஸ்தாலினிஸ்டுகளுடன் ட்ரொஸ்கிஸ்டுகளையும் நாம் சேர்த்துக் கொள்வதில் தவறு இல்லை. ஏனென்றால், அரசு முதலாண்மைக்குச் சமுகாண்மை என்று பெயர் சூட்டிவிடுவதில் யாருக்கும் ட்ரொட்ஸ்கி சளைத்துப் போய்விடவில்லை!

இனி, அடிப்படைவாதம் பற்றிய ஜமாலனின் கருத்துக்களைச் சிறிது நாம் பார்ப்போம்.

## அடிப்படைவாதம்

அரசியல் என்றாலும் சரி, கற்பு, கடப்பாடு முதலிய குடும்பக் கோட்பாடுகள் என்றாலும் சரி, மதம் என்றாலும் சரி, இவற்றின் வேர்களைப் பொருளாதார நலன்களில்தாம் நாம் தேடி ஆக வேண்டும் என்று மார்க்சியம் கூறுகிறது. ஆனால், அரசியலின் வேர்களை அரசியலிலும், மதத்தின் வேர்களை மதத்திலும்தாம் தேடவேண்டும் என்கின்ற ஒரு கொள்கையைக் கொண்டு இருக்கின்றார் ஜமா


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லன்! விரிக்கில் பெருகும் என்பதால், ஜமாலன் வெளிப்படுத்துகின்ற அத்தனை கருத்துக்களையும் பின்வருமாறு நாம் சுருக்கிக் கொள்ளலாம்:

ஒவ்வொரு மதத்தினர் இடையேயும் எழுகின்ற அடிப்படைவாதத்தின் வேர்கள், அந்தந்த மதங்களுக்கு உள்ளேதான் ஆழமாய்ப் புதைந்து கிடக்கின்றன. ஆனால், உலக அரசாட்சிக்கான போட்டியில் ஒவ்வொரு மதமும் இன்று ஈடுபட்டு நிற்பதால், அந்தந்த மதங்களின் 'முன்னணிப் படைகளான' அடிப்படைவாதிகள், உலகளாவிய போர்களில் இன்று ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். 'உலக அரசாட்சிக்கான மதங்களின் போட்டி' என்பதுதான் 21-ஆம் நூற்றாண்டின் தனிச் சிறந்த கூறு!

அடிப்படைவாதம் பற்றிய ஜமாலனின் மையக் கருத்து இது!

## முதலாண்மையின் மறுமலர்ச்சி

மலிவான சரக்குகளின்மூலம் உலகச் சந்தையில் ஆதிக்கம் செலுத்தியும் வலுவான தேசிய அரசுகளின்மூலம் பிறநாடுகளை அடிமைப்படுத்தியும் வெற்றிகரமாக வளர்ந்து வந்துகொண்டிருந்த முதலாண்மை, 20-ஆம் நூற்றாண்டில் தள்ளாடத் தொடங்கி இருந்தது. முதலாளர்களின் எதிர்ப் புரட்சிகளும் உலகப் போர்களும் இந்தத் தள்ளாட்டத்தின் அடையாளங்கள்தாம் என்றால் அது பிழையாகாது.

மன்னராட்சியும் பண்ணையக்கிழார்களும் வீழ்ச்சியடைந்ததன் பின்னர், ருஷ்யாவில் அரசு முதலாண்மை உற்பத்திமுறை எழுச்சி கண்டதற்குக்கூட, தனியார் முதலாண்மையின் இந்தத் தள்ளாட்டம்தான் காரணம். இந்தத் தள்ளாட்டத்தின் தொடர்ச்சியில், பேரரசு நாடுகளாக இந்தியா, சிறீலங்கா, பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகள் விடுதலையடைந்தன என்றால், வேறு பிற நாடுகளிலோ தேசிய விடுதலைப் போராட்டங்கள் எழுச்சி கண்டு வந்திருந்தன.

அதே நேரத்தில், பழைய பண்ணையத்துடன் கூட்டுச் சேர்ந்துதான் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற முதலாண்மையின் பலவீனமோ, மன்னராட்சிகளுக்கு ஆதரவாகவும் தேசியப் போராட்டங்களுக்கும் பொதுநாயக(democracy)ப் போராட்டங்களுக்கும் எதிராகவும் முதலாண்மைத் தேசங்களைத் திசைதிருப்பி விட்டிருந்தது.

ஆனால், அரசு முதலாண்மை என்பது முதலின் இயல்பான ஒரு வடிவம் அல்ல! எனவே, பழைய சமுதாய நிலவரங்களை ஒழித்துக் கட்டிவிட்டு, அரசு முதலாண்மை வடிவத்தில் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சி நிலையினை எய்திவிட்டவுடன், அரசின் ஆதிக்கத்தில் இருந்து முதல் விடுதலை பெற்றிடத்தக்க நிலவரங்கள் உருவாயின. பண்ணையத்துடன் கொண்டிருந்த பிற்போக்கான கூட்டணியினை முறித்துக் கொள்ளுகின்ற அளவுக்கு வலிமை பெற்றும் முதல் திகழ்ந்திடத் தொடங்கியது.

முதலாண்மையின் இந்தப் புதிய எழுச்சிதான், உலகெங்கிலும் அரசு முதலாண்மையின் வீழ்ச்சிக்கும் தேசிய இனங்களின் எழுச்சிக்கும் காரணமாகும். எனவே, முதலாண்மையின் மறுமலர்ச்சி நூற்றாண்டு என்று 21ம் நூற்றாண்டை நாம் அழைப்பதில் தவறு எதுவும் இல்லை. ஏனென்றால், தேசிய இனங்களின் எழுச்சியும் தனிமனித உரிமைகளின் வளர்ச்சியும் ஏற்படத்தக்க ஒரு முற்போக்கான நூற்றாண்டிது.

அப்படியென்றால், இன்றைய அடிப்படைவாதத்திற்குக் காரணம் என்ன? என்பது கேள்வி.

இங்கே, புரட்சிகரமான வருக்கம் என்று முதலாளர் வருக்கத்தைக் கார்ல் மார்க்ஸ் கணித்ததற்குக் காரணமாக அமைந்திருந்த முதலாண்மையின் சில கூறுகளை சிறிது நாம் பார்ப்போம்.

### அ) தனிமனித உரிமைகள்

விடுதலையான ஒரு தனிமனிதனாக ஒவ்வொரு மனிதனும் திகழ்ந்திடத்தக்க பருமை நிலவரங்களை முதலாண்மை உருவாக்குகிறது. சமன்மையும் (equality), கிளைமையும் (fraternity), மாண்பும் (dignity) ஒவ்வொரு மனிதனிடத்தும் ஒப்பளிக்கப் (recognize)படத்தக்க நிலவரங்கள் இவை.

சமுதாய உறவுகளில் அடிமைப்பாடுகளும் முரண்பாடுகளும் பகைமைகளும் மனிதர்களிடையே நிலவிடத்தான் செய்கின்றன என்ற போதிலும், தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மனிதனும் இங்கே விடுதலை ஆனவன்!

அப்படியென்றால், தங்கள் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும், அடக்குமுறையாக மற்றவர்கள் மீது திணிப்பதற்கு எந்த ஒரு மனிதனுக்கும் இங்கே உரிமையில்லை என்று பொருள்! இதன் அரசியல் வெளிப்பாடுதான் பொதுநாயக (democracy) ஆட்சி முறையும் ஆகும்.

அரசியலில் இருந்து மதத்தை முதலாண்மை விலக்கி வைத்திருப்பதால், எந்த மதத்தையும் தழுவிக் கொள்வதற்கு எந்த மனிதனுக்கும் இங்கே உரிமை உண்டு! 'பெரும்பான்மையை' அனுசரித்துத்தான் 'சிறுபான்மையினர்' செயல்பட்டிட வேண்டும் என்பது , அரசியலில் ஆளும் கட்சிகளுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் வேண்டும் என்றால் பொருந்திவரலாமேயொழிய, மத நம்பிக்கைகளுக்கு அல்ல. அரசியலில்கூட, பெரும்பான்மைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற அனைத்து உரிமைகளும் சிறுபான்மைக்கு உண்டு!

ஒரு முதலாண்மைச் சமுதாயத்தில், பெரும்பான்மை மதம் எது? சிறுபான்மை மதம் எது? என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்ற கேள்விகளுக்கே இடம் இல்லை. ஏனென்றால், மதம் என்பது ஆள்வயமானது (personal); மனிதர்களின் தனிப்பட்ட நம்பிக்கைகளைப் பொறுத்தது! விளைவாக, அரசியலிலோ, தனிமனித உரிமைகளிலோ, சட்டங்களிலோ தலையிடுவதற்கு எந்த மதத்திற்கும் உரிமையில்லை!

எடுத்துக் காட்டாக, கடவுள் இணைத்த கணவனையும் மனைவியையும் மனிதன் பிரிக்க ஒண்ணாது என்றுதான் கிறிஸ்தவ மதம் கூறுகிறது. ஆனால், மணமுறிவுக்கு என்று கிறிஸ்தவ மக்களிடையே சட்டங்கள் இருக்கின்றன. மணமுறிவுகளைக் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டும் உள்ளனர்.

பிரிக்க முடியாத பந்தங்களை உருவாக்குகின்ற ஒரு புனிதச் சடங்கு என்றுதான் திருமணங்களை இந்துமதம் கருதுகிறது. எனினும், இந்துத் திருமணச்சட்டமோ மணமுறிவுக்கு ஒப்பளிப்பு நல்குகிறது. ஆனால், திருமணம் மற்றும் மகிழ் மணம் ஆகியவற்றை வெறும் ஒப்பந்தங்களாக மட்டும் கருதுகின்ற இஸ்லாம் மதத்திலோ, மண முறிவுகளை அறிவித்துக் கொள்ளுகின்ற உரிமையில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சமன்மை இல்லை. கணவனின் அனுமதியை ஏற்கனவே பெற்றிருந்தால் மட்டும்தான், மணமுறிவினை அறிவிக்கும் உரிமையை மனைவி பெறுகிறார். இப்படி, இந்துச் சட்டங்களும்(!) கிறிஸ்தவச் சட்டங்களும்(!) சட்டத்தின் எல்லைகளுக்கு அப்பால் மதங்களை ஓரம் கட்டி வைத்திருக்கின்றன என்றால், இஸ்லாமியச் சட்டங்களோ மதத்தின் பெயரால்தான் இன்னமும் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. பண்ணையக் கூறுகளும் சிற்றுடைமைப்பான்மைகளும் இஸ்லாம் சட்டங்கள்மேல் செலுத்தி வருகின்ற ஆதிக்கம்தான் இதற்குக் காரணம்.

ஆக, எதை உண்பது, எதை உடுப்பது, எப்படி வாழ்வது என்பனவற்றில் மட்டுமல்ல, பிற அனைத்து உலகாயத (secular) காரியங்களிலும், மதம் தலையிடுகின்ற உரிமையினை மறுத்துத் தனிமனித உரிமைகளை நிலைநிறுத்திட முதலாண்மை முன்வருகிறது என்பது தெளிவு.

எனவேதான், தமது சைவசித்தாந்த நண்பர்கள் தம்மை ஆழம் பார்க்கிறார்களோ என்று கவனித்திட வேண்டிய தேவையும் ஜமாலனுக்கில்லை! இங்கே ஒரு கேள்வி எழலாம் - மனித உரிமைகள் எல்லாம் முதலாண்மையால் மெய்மைப்படுத்தப்பட்டு விட்டனவா? என்று!

காலத்திற்குக் காலம் வளர்ந்து வந்து இருக்கின்ற சூழ்நிலைகளிற்கு ஏற்பத் தங்கள் வரலாற்றினைத் தாங்கள்தாம் மனிதர்கள் படைத்துக் கொள்கிறார்கள் என்று கார்ல் மார்க்ஸ் கூறியது போல, முதலாண்மையின் பருமை நிலவரங்கள் அடைந்திருக்கின்ற பக்குவத்திற்கு ஏற்பத் தங்கள் உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்வது மனிதர்களின் பொறுப்புதான் ஆகும்.

### ஆ) தேசிய இனங்களின் எழுச்சி

பல்வேறு தேசிய இனங்களையும் ஒரே குடையின் கீழ்க்கொண்டு ஆட்சி நடத்தி வந்த பேரரசுகளை உருக்குலைத்து, தங்கள் சொந்த ஆட்சியினைத் தேசிய இனங்கள் அமைத்துக்கொள்கின்ற பருமை நிலவரங்களை முதலாண்மை உருவாக்குகின்றது.

அதாவது, அரசு முதலாண்மையை ஆதரித்து வந்த பேரரசுகளுக்கு பல சமயங்களிலும், அயலாதிக்கத்தை எதிர்த்து எழுந்து வந்து தேசியப் போராட்டங்களுக்கு சில சமயங்களிலும், ஆதரவு அளித்து வந்த அரசு முதலாண்மை அரசுகளைப் போல் அல்லாமல், விடுதலையான வணிகப் போட்டியினை உலக அளவில் வளர்த்திட விளைகின்ற முதலாண்மையின் மறுமலர்ச்சியோ, தேசிய இனங்களின் எழுச்சிக்குத் தேவையான பருமை நிலவரங்களை உருவாக்குகிறது.

ஆனால், ஏற்கனவே நாம் குறிப்பிட்டதுபோல, தேசிய இனங்களின் விடுதலையினைச் சாதித்துக் கொள்வது தேசிய இனங்களின் பொறுப்புதான் ஆகும்.

இனி அடிப்படைவாதத்திற்கு நாம் வருவோம்.

## சிற்றுடைமையின் அடிப்படைவாதம்

விடுதலையான வணிகப்போட்டியினை அவசியப்படுத்தி வருகின்ற முதலாண்மையின் மறுமலர்ச்சியில், உலகச் சந்தையைச் சார்ந்தும் முற்றிலும் சமுதாய மயமாகவும் உற்பத்தியும் பகிர்வும் நடைபெற்று வந்திட முடிகிறது. முதலாண்மையினது அழிவின் அவசியங்களை உருவாக்கிடத்தக்க இத்தகு சூழ்நிலைகள், கூடவே, தொழில் நுட்பத்தையும் வளர்க்கின்றன.

இந்தத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியும் விடுதலையான வணிகப்போட்டியும், சிறு உற்பத்தியாளர்களான சிற்றுடைமைக்காரர்களை (petit bourgeoise)ச் சீரழித்து, ஒரு பக்கம் முதலாளர்களும் மறுபக்கம் உழைப்பாளர்களும் ஒருத்திரளுகின்ற சூழ்நிலைகளை உருவாக்குகின்றன.

இதனால், முதலாளர்களாக வளர்ந்திடவும் முடியாமல் உழைப்பாளர்களாக மாறிடவும் விரும்பாமல், ஓர் இரண்டும் - கெட்டான் நிலையில் சிற்றுடைமைக்காரர்கள் அல்லற்பட நேர்ந்து விடுகிறது. இந்தச் சிற்றுடைமைக்காரர்களின் ஒரு மூடு - மந்திர வாதம்தான் மத அடிப்படைவாதமாகும். (பார்க்க: வரலாற்றின் முரண் இயக்கம் பாகம் 1, முன்னுரை பாகம் 2, பக். 179: முரட்டுவாதம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்ணையக் கிழார்களை எதிர்த்து முதலா ளர்கள் போராடத் தொடங்கிய காலங்களில், முதலாண்மையின் பக்கம் நின்று இருந்தவர்கள் இவர்கள்! முதலாளர்கள் பலவீனமடைந்து இருந்த நேரங்களில், பண்ணையக் கிழார்களுக்கு ஆதரவாக நின்று இருந்தவர்களும் இவர்கள்தாம்!

தேசிய விடுதலைப் போராட்டங்களில் தேசியத் தின் பக்கம் நின்றிட இவர்கள் தயங்கிடவில்லை தான் என்ற போதிலும், முதலாண்மையின் வளர்ச்சி யைத் தடுத்து நிறுத்தி, தங்கள் சிற்றுடைமைகளைப் பாதுகாத்துக் கொள்வதுதான் அப்பொழுதும் இவர்களின் நோக்கமாக இருந்தது. இதனால்தான், வரலாற்றுச் சக்கரத்தை பின்னோக்கிச் சுற்றிட விரும்புகிற பிற்போக்காளர்கள் என்று இவர்களை லெனின் வரையறுத்திடவும் நேர்ந்தது. (பார்க்க: Collected works Vol. I p. 353 அல்லது வரலாற்றின் முரண் இயக்கம்: பாகம் 2, ப. 18-19)

எல்லா எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளிலும் அடியாட்களாக முன்வந்து நிற்பவர்கள் இவர்கள் தாம்! ஹிட்லரின் முரட்டுவாதத்திற்கு (fascism) ஆதர வாக நின்று கொண்டிருந்தவர்களும் இவர்கள்தாம்!

பொதுப்படையாகச் சொல்வது என்றால், பழமையின் பாதுகாவலர்கள் இவர்கள்! பொருளா தார நிலவரங்களுக்கு ஏற்ற வகையில் மட்டும் மாற்றமடைந்து வருகின்ற பண்பாடுகளை, புவி எல்லைகளுக்கு உள்ளும், மத எல்லைகளுக்கு உள்ளும், மொழி எல்லைகளுக்கு உள்ளும் அடைத்து வைத்திட விரும்புபவர்கள்!

வெளிப்படையான முதலாண்மைப் பண்பாடு இவர்களிற்குப் பிடிப்பதில்லை. மேலைப் பண்பாடு என்று அதனை ஒதுக்கி வைத்திடுகின்ற முயற்சி களை என்றைக்கும் இவர்கள் கைவிடப்போவதும் இல்லை! மேலைப் பண்பாடுகூட, முதலாண்மைப் பண்பாடாக மாறி வந்திருக்கின்ற ஒரு பண்பாடுதான் என்பதும் இவர்களுக்குப் புரிவதில்லை.

முதலாண்மையின் வளர்ச்சியில் தாங்கள் அழிந்து போவதைத் தடுத்து நிறுத்திடத் துடிக்கின்ற இவர்கள், இறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டி ருக்கின்ற ஒரு வாதம்தான் மத அடிப்படைவாதம் ஆகும்.

ஆக, அழிவின் விளிம்பில் நின்றுகொண்டு புதிய வளர்ச்சிகள் அனைத்தையும் அழித்திடத் துடிக்கின்ற பிற்போக்காளர்களின் இறுதி ஆயுதம்தான் மத அடிப்படைவாதம் என்பது தெளிவு.

அமெரிக்காவின் மேல் தாலி:பான்கள் நடத்திய தாக்குதல், கிறிஸ்தவர்கள்மேல் முஸ்லிம்கள் நடத் திய தாக்குதல் அல்ல. மாறாக, உலக முதலாண் மையின் அதிபதிகளின்மேல், உலகின் மூலைகளில் ஓரம் கட்டப்பட்டிருந்த சிற்றுடைமைக்காரர்கள் நடத்திய தாக்குதல்! இஸ்லாமிய நாடுகளில் முதலாண்மை வளர்ந்து பழைய பொருளாதார

**"ஆன்மா இல்லாத உலகின் ஆன்மா" என்று மதத்தை மார்க்ஸ் சித்தரித்ததற்கு, தாங்கள் இழந்து விட்ட மனித இயல்பினைக் கடவுளில் கண்டு மனிதர்கள் ஆறுதல் அடைந்து கொள்கிறார்கள் என்பதுதான் காரணமே ஒழிய, முற்போக்கானவை என்று மதங்களை அவர் கருதியது அல்ல.**

அடிப்படைகளைத் தகர்த்து எறிந்துவிடக் கூடாதே என்கிற பேரச்சம்தான் இதற்குக் காரணம்! இந்து அடிப்படைவாதிகளுக்கும் இஸ்லாம் அடிப்படை வாதிகளுக்கும் இடையே இந்திய ஒன்றியத்தில் நடைபெற்று வருகின்ற மோதல்கள், இஸ்லாம் மதத்திற்கும் இந்து மதத்திற்கும் இடையே நடை பெற்று வருகின்ற மோதல்கள் அல்ல. மாறாக, அரசு முதலாண்மை வீழ்ந்து, தனியார் முதலாண்மை வளர்ந்திடத்தக்க நிலவரங்களை எதிர்த்திட முடியாத சிற்றுடைமைக்காரர்கள், அழிவின் அச்சத்தில் மதி மயங்கிப்போய், பொருளாதாரத்தில் வளர்ந்து வருகின்ற எதிர்மதக்காரர்களுக்கு எதிராகத் தொடுத்துக்கொண்டிருக்கிற தாக்குதல்கள்தாம் இவை!

எனவே, முதலாண்மையின் வேகமான வளர்ச்சி யில் மட்டும்தான் அடிப்படைவாதங்கள் தவிடுபொடி யாகிட முடியும் என்பது முடிபு.

இறுதியாக, இந்தக் கட்டுரையின் கருத்துக்களை நாம் ஆய்ந்து கொள்கின்ற வகையில், தமது கருத் துக்களை முன்மொழிந்து நமக்கு உதவியிருக்கின்ற ஜமாலனுக்கு நமது நன்றியினை நாம் தெரிவித்துக் கொள்வோம்! எதிர்க்கருத்துக்களின் மோதல்களில் தாமே, தெளிவு பிறந்திட முடியும்! ●

அச்சுக்குறிப்பு: :ப - b; ஃப - f; :க - g



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிவந்துவிட்டது!




ஆசிரியர்:

## சோதிப்பிரகாசம்




வரலாற்றின் முரண் இயக்கம் (பாகம் – I)

**முதலாண்மைப் புரட்சி**

வரலாற்றின் முரண் இயக்கம் (பாகம் – II)

**தேசியத்தின் எழுச்சி**

மார்க்சியத் திறனாய்வாக எழுதப்பட்டுள்ள இந்த நூல்கள் வரலாற்றின் இயக்கத்தை ஒரு முரணியக்கமாக நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

கிடைக்குமிடம்:

**பொன்மணி பதிப்பகம்**
**7 முதல் குறுக்குத்தெரு**
**சிறுதொண்டன் தெரு**
**ஒண்டிக் குப்பம்**
**மணவாள நகர்**
**திருவள்ளுவர் மாவட்டம் 602 002**
**தமிழ்நாடு.**

இரண்டு பாகங்களும் ரூ. 230/-

ஐரோப்பாவில் கிடைக்குமிடம்:

**PARIS ARIVAALAYAM**
**7 Rue Perdonnet**
**75010 PARIS**
**FRANCE.**

ஆசிரியரின் பிற நூல்கள்:

01. கார்ல் மார்க்ஸ் : முதல் அதிகாரம் ஒன்று: பணம் (தமிழாக்கம்)
02. வாழ்க்கையின் கேள்விகள்
03. மனத்தின் விடுதலை
04. திராவிடர் வரலாறு
05. ஆரியர் வரலாறு
06. இந்திய வரலாறும் பண்பாடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்நவீனத்துவத்தின் மீதான விமர்சனம்

# அழகியல் குறித்த கருத்தியல்


T. Eagleton

டெரி ஈகிள்டனுடன்
ஜொனாதன் ரீ
லின்ட்ஸே ஜெர்மன்
ஜான் ரீ
மைக்கேல் பெய்ன்

நீங்கள் யார், நீங்கள் ஈடுபடுகிற போராட்டம் என்ன என்பதைப் பொறுத்துத்தான் நீங்கள் இந்த முழுமைத்துவ அமைப்பு அல்லது உலகமயமான கட்டமைப்புகள் பற்றிப் பேசப்போகிறீர்கள் என்பது தீர்மானிக்கப்படுகிறது.

தமிழில்:
**யமுனா ராஜேந்திரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஜொனாதன் ரீ :**

பிற மார்க்சியவாதிகள் போலவே நீங்களும், நகைச்சுவையாகப் பேசுகிற விக்டோரியன் சோசலிஸ்ட்டுக்கும் கம்யூனிஸ அமைப்புக்கும் எந்த விதத் தொடர்ச்சியும் இல்லை என மறுதலிக்கிறீர்கள். அது வெறும் நம்பு என்றும் நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், ஒரு தொடர்பு இருக்கிறதென நான் நினைக்கிறேன். அது என்னவென்றால், மனித உரிமைகள் பற்றிய காரண காரிய விளைவு பற்றியதாக அது இருக்கிறது. மனித உரிமை என்பதை மார்க்ஸ், மனித இருத்தல் குறித்துப் பேசுவதற்கு ஒரு தனிநபருக் குள்ள அவருக்கேயுரிய சிந்தனை முறையோடு தொடர்புள்ளது எனக் கண்டார். மார்க்சிய மனித உரிமை சம்பந்தமான அம்சங்களை நீங்களும் பகிர்ந்து கொள்கிறீர்களா?

***டெரி ஈகிள்டன் :***

*இல்லை. முழுமையாக நான் அப்படியில்லை. மார்க்ஸ் உரிமை பற்றி மட்டுமல்ல, அறவியல் பற்றிக் கூட இரட்டைநிலையைக் கடைப்பிடிக்கிறார் என்றுதான் நான் நினைக்கிறேன். நிஜமாக, ரொம்பவும் இகழ்ச்சி யான நிலையில்தான் அறவியல் பற்றி அவர் சொல்லி யிருக்கிறார். முரண்பாடு என்னவென்றால், இன்னொரு வகையில், இன்னொரு அர்த்தத்தில், அவர் முழுக்கவும் ஒரு ஆழமான அறவியலாளர். அறவியல் தன்மை யால் கொந்தளித்தெழுந்து சக்தி பெற்றவர். மார்க்ஸ் எல்லா வகையான அறவியல்களும் முதலாளித்துவ அறவியல்கள்தான் என்று தவறாகக் கருதினார். அவரது திட்டம் மரபுரீதியான அர்த்தத்தில், ஒரு அறவியல் திட்டம். ஏனெனில், அது மனித மகிழ்ச் சிக்கான நிலைமைகளை விசாரணை செய்தது - மனிதர்கள் உலகெங்கும் சுதந்திரமாகவும் மகிழ்ச்சி யுடனும் இருப்பதற்கான பொருளியல் நிலைமையை அவர் விசாரணை செய்தார். ஆனால், அன்று நிலவிய உரிமை பற்றிய மொழியிலிருந்து அதை உருவாக்க முடியும் என்று அவர் கருதவில்லை - அன்று அவருக் குக் கிடைத்த மொழியிலிருந்து அதை உருவாக்க முடியும் என்று அவர் நம்பவில்லை - ஆனால், உரிமைகள் குறித்த அக்கறை என்பது மனித மகிழ்ச்சி, மனித சுதந்திரம் போன்றவற்றைச் சாதிப்பதற்கு இன்றியமையாதது எனும் அளவில் அவர் தவறு செய்தார் என்றே நான் காண்கிறேன். மறுபுறத்தில் - ஆனால், அதேவேளையில் அவர் செய்தது சரி என்கி றேன். ஏனெனில், அவர் காலத்தில் நிலவிய அறவியல் குறித்த மொழி என்பது - இன்றும் கூட - நீர்த்துப் போனதாக, போதாததாக இருந்தது. இந்த அர்த்தத் தில் என்று நான் சொல்கிறேன் - பிற வார்த்தைகளில், உரிமைகள் என்பது சோசலிசத் தன்மை வாய்ந்தது. அப்புறம், சோசலிஸ்ட்டுகள் நிச்சயமாக மனித உரி மைகளைப் பாதுகாக்க வேண்டும். இதுவல்ல விளை யாட்டின் இறுதி. இப்படியெல்லாம் அப்போது அங்கே சொல்லியிருக்க முடியாது. தனிமனிதர்களுக்கு பகுதி யான வகையில் அப்போது சுதந்திரம் இருந்தது. அதனால், நேர்மறையாக ஏதேனும் செய்ய முடிந்தது. ஆனால், அந்த நடவடிக்கையானது வெறுமனே மனித*

**பின்நவீனத்துவச் சவால் என்பது மிக முக்கியமானது. ஏனெனில், அது வெறுமனே பிரதிப் பகுப்பாய்வாக இருந்த விஷயத்திலிருந்து நகர்ந்துவிட்டது. கலாச்சார அரசியல் குறித்த முழுப் பிரச்சினைகளையும், மறுபடி பின்நவீனத்துவம் விவாதக்களத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது உண்மைதான். இலட்சியவாதம் அல்லது கருத்துமுதல்தன்மை என்பது இடதுசாரிகளிடமும் கலாச்சார அரசியலில் இருந்து வந்திருப்பதுதான்.**

*உரிமை குறித்த சொற்களில் புதைந்து விடவோ இழந்து படவோ முடியாது.*

**ஜொனாதன் ரீ :**

மார்க்சிஸ்ட் அறவியலில் தரப்படுத்தப்பட்ட ஒரு விவாத அம்சம்: இறுதி இலக்கானது வழியை நியாயப்படுத்தும் என்பதாகும். அதாவது, முட்டையை உடைக்காமல் ஆம்லெட் போடமுடியாது என்பது போல — எதிர்காலத்தின் மகிழ்ச்சி தரும் சந்தோஷத்திற்காக இப்போதைய மகிழ்ச்சி யையும் உயிரையும் தியாகம் செய்ய வேண்டும்.

இது சரியான தொகுப்பு என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

***டெரி ஈகிள்டன் :***

*ஸ்டாலினியத்தின் திரிபடைந்த அறவியல் நடத்தை களை நினைக்கிறபோது நீங்கள் செய்வது சரியான தொகுப்பு போலத்தான் தெரிகிறது. எந்த வகையான சோசலிஸ்ட்டும் இதற்கான பொறுப்பை ஒப்புக்கொள் ளத்தான் வேண்டும். ஆனால், இது சோசலிசத் திற்கான ஒரு நக்கல் என்பதால், ஒருவர் இந்த விஷயம் பற்றி 'விட்டுவிடுங்கள்' எனச் சொல்ல முடியாது. மார்க்ஸ், இறுதி செல்லும் வழியை நியாயப் படுத்தும் என்பதை மறுத்தவர் மட்டுமல்ல, அவர் அதிர்ச்சி தருமாறு சிந்தித்தார். இன்றும்கூட, அறவியல் வாதிகள் அப்படித்தான் சொல்கிறார்கள் - மனிதகுல வரலாறு என்பது தன்னளவில் புரட்சிகரமான ஒரு இறுதிதான். மார்க்ஸ் தொடர்ந்து மனித சக்தி, அதனு டைய தகைமையினை, அதனது வளர்ச்சி குறித்துத் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். இந்தச் சொற்றொ டரை இவர் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டே யிருந்தார் - மார்க்சியத்தின் புரட்சிகரத் தன்மை யாதெ னில் - அவர் நினைக்கவில்லை, அது ஒரு கருவி*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலமானதென்றோ இறுதியென்றோ, கருதவில்லை - ஆண்களுடையதும் பெண்களுடையதும் விமோசனம், மற்றும் தகைமைகள் குறித்த முழு வரலாற்றைப் பற்றியும் அவர் சொல்கிறபோது, புறநிலையிலான எந்த அறிவாதாரத்தையும் கொண்டு அவர் பேசவில்லை - புரட்சிகரமாக அதனளவிலேயே அந்நிலை அதனது இறுதியாகும். முரணாக, மார்க்ஸை இவ் வகையில் நீங்கள் ஒரு அழகியலாளன் என்று சொல்லலாம். சுயசந்தோஷப்படுத்திக் கொள்ளல், சுயமுன்னேற்றப்படுத்திக் கொள்ளல் போன்றன அப்பாலை அறிவை வேண்டுவதல்ல - பயன் படுத்திக் கொள்வதோ, நியாயப்படுத்துவதோவும் அல்ல. மகத்தான முதலாளித்துவ மரபில் இது மாபெரும் கலை நடவடிக்கையாகும். இவ்வகையில் தான் மார்க்ஸ், இதை ஒரு மாதிரியாக எடுத்துக் கொண்டு மனித வாழ்வு அப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவர் சொன்னார்.

**ஜொனாதன் ரீ:**

**ஆங்கிலம் பேசும் உலகில் இலக்கிய விமர்சனம் என்பது இரண்டு காலகட்டங்களாக பிரிந்து இருக்கிறது. 1970கள், 1980கள் என இதைப் பிரித்துக் காணலாம். உங்களது சொந்த எழுத்துக்களும் இந்த வளர்ச்சியுடன் இணைந்தேயிருந்தது என்பதை நாங்கள் பார்க்கலாம். தோராயமாகப் பேசினால், எழுபதுகளின் காலம் என்பது அமைப்பியலின் காலம். அமைப்பியல் என்பதுதான் என்ன? அது உங்களளவில் என்ன வகையில் முக்கியத்துவம் உள்ளதாகிறது?**

*டெரி ஈகிள்டன் :*

கோட்பாட்டு மூலதனத்தில் எழுபதுகளில் கவிந்த விஷயம் என்று அதை நான் சொல்வேன். அந்தக் காலத்தில் ஒரு கண்ணோட்டம் எழுந்தது. நிலவுகிற கலாச்சாரப்படிப்பு சம்பந்தமான முறைமைகள் எதுவும் இனி உபயோகப்படாது எனும் உணர்வு அதிகரித்தபடியில் எழுந்தது. ஒரு பகுதிக் காரணமாக, அறுபதுகளில் நிகழ்ந்த உலகச் சம்பவங்களைச் சொல்லலாம். வியட்நாம் யுத்தத்தைத் தொடர்ந்து, மேற்கிலும் அமெரிக்காவிலும் ஏற்பட்ட மாற்றங்கள், இந்த வளர்ச்சிகளில் அக்கறை கொள்ளாத மானுட ஆய்வுகளெல்லாம் மாணவர் இயக்கங்களாலும் அதைத் தொடர்ந்து தோன்றிய பிற இயக்கங்களாலும் கேள்விக்கு உள்ளாகின. நாம் இப்போது சொல்கிற கோட்பாடு என்பதின் வேர்களைப் பார்ப்போமானால், நீங்கள் பின்னால் அறுபதுகளில் நடந்ததைத் திரும்பப் பார்க்க வேண்டும். அப்புறமாக எழுபதுகளின் ஆரம்பத்தில் அமைப்பியலின் எழுச்சி தோன்றுகிறது. சமூகத்தைத் தீர்மானிக்கிற சக்திகளின் விதிகளையும், அதைக் கட்டுப்படுத்துகிற சக்திகளையும், சமூகத் தடத்திலும், இலக்கியப் பிரதியிலும், கலாச்சார உருவாக்கத்திலும் ஆழத் தோண்டிப் பார்க்கும் முயற்சியாகும் இது. அது ஒரு போக்கிரித்தனமான செயலாகப் பார்க்கப்பட்டது. ஏனெனில், விமர்சனம் என்பது அப்போது விஞ்ஞானமாக ஆக்கப்பட்டிருந்தது அல்லது அவ்வாறாக ஆவதற்கு முயற்சி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

எழுபதுகளின் முன்பாதி என்பது இடதுசாரிகள் இன்னும் நம்பிக்கை கொண்டிருந்த காலம். இந்தக் காலம், ரீகனாலும் தாட்சரினாலும் இடதுசாரிகள் பின்நோக்கித் திருப்பப்பட்டுக் கொண்டிருந்த காலம். ஒப்பீட்டளவில் இடதுசாரி நம்பிக்கை கொண்டிருந்த காலமும் இதுதான். அந்தக் காலத்தில்தான், கோட்பாடு மிகப் பெரிய உயரத்தில் கொட்டை எழுத்துக்களுடன் பயணம் செய்து கொண்டிருந்தது. ஆனால், ஒரு பிரதான ஆபத்தையும் இது கொண்டிருந்தது. சாதாரண மக்களின் கலாச்சார அனுபவத்திலிருந்து இது அதிகரித்தபடியில் தொலைவுபடுத்திக் கொண்டிருந்தது. எழுபதுகளின் இறுதியிலிருந்து எண்பதுகளின் ஆரம்பத்துக்குள் இதற்கெதிரான எதிர்வினையை நாம் பார்க்க முடியும். இக் காலகட்டத்தை கோட்பாட்டிலிருந்து கலாச்சாரப் படிப்புகள் நோக்கி நகர்ந்த காலம் என்று சொல்லலாம். இதை நீங்கள் பின்நவீனத்துவத்தை நோக்கி நகர்ந்த காலம் என்றும் சொல்லலாம்.

**ஜொனாதன் ரீ :**

**1980கள் பற்றி என்ன சொல்கிறீர்கள்? பின்அமைப்பியல், பின்நவீனத்துவம் போன்றவை குறித்த உங்கள் அபிப்பிராயங்கள் என்ன?**

*டெரி ஈகிள்டன் :*

எழுபதுகளின் பின் பாதியில் பல்வேறு பின் வளர்ச்சிகள் தோன்றின. பின்மார்க்சியம், பின்நவீனத்துவம் என்று. பிரச்சனையென்னவென்றால், இனிமேல் கன்ஸர்வேடிவ் மதிப்பீடுகள் மட்டுமல்ல, புரட்சிகரச் சிந்தனை முறையும்கூட பாவனைக்கு உகந்தது அல்ல என்கிற நிலைமை தோன்றியது. இதில் நிறைய ஆக்கபூர்வமான அம்சங்கள் இருந்தன. அந்தச் சிந்தனை முறை என்ன செய்ததென்றால், கலாச்சாரச் சிந்தனையை முழுமையானது என்னும் அடிப்படையில் பார்த்தது. வேறு வகையில், இந்தப் பின்நவீனத்துவ வளர்ச்சியில் நிறைய எதிர்மறையான அம்சங்களும் தோன்றியது. இம்முறையில், நிறையப் பேர் புரட்சிகரமாக வேஷம் போட்டார்கள். ஆசாரக் கலாச்சாரத்தைக் கேள்வி கேட்கிற வகையில், தமது நுகர்ச்சியை மட்டும் பாவனை செய்கிறவர்களாக மாறிப் போனார்கள். தம் வகைப் பண்டத்தை மட்டுமே வழிபடுபவர்கள் ஆனார்கள். தத்தமது பன்முகத் தன்மையை மட்டுமே கொண்டாடினார்கள். இங்கு நாம் பார்க்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. பன்முகத்தன்மையில் புரட்சிகரமான தன்மை இருந்தே ஆகவேண்டும் என்று எதுவுமில்லை. இது ஒரு புரட்சிகரமான கருத்தாக்கமாக இருக்கலாம். ஆனால், வளர்ச்சியடைந்த அல்லது பிற்காலத்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவம் இயல்பாக பன்முகத் தன்மையை (சில உள்ளடக்கத்தில் முக்கியமானது, பயனுள்ளது என்பதையும் ஒப்புக்கொண்டாலும்) உற்பத்தி செய்கிறது. ஆகவே, முழுமையைக் கலைத்தல், பன்முகத் தன்மையுடன் வேறுவேறாக இருப்பது போன்றன தன்னளவிலேயே புரட்சிகரத் தன்மை வாய்ந்த கருத்துக்கள் என்று நம்பத் தேவையில்லை. ஒரு நீட்சி வரையிலும் இந்தக் கருத்துக்களை ஏற்கனவே முதலாளித்துவம் தனக்குள் சுவீகரித்துக்கொண்டுவிட்டது.

எண்பதுகளில் இம்மாதிரிச் சிந்தனைத் தாரைகள் மறுபடியும் வீறுகொண்டெழுந்தது. இவை அனைத்தையும் ஒன்றுபடுத்தி, தொடர்ந்த வகையில் இந்தச் சமூகத்தை, இதனது அரசியல் அமைப்பை பகுப்பாய்வு செய்வதற்கும் பயன்படுத்தினார்கள். இவற்றில் பெண்நிலைவாதமானது மிக முக்கியமானதொரு வளர்ச்சியாகும். பெண்நிலைவாதம் இரண்டு முகாம்களிலும் காலை வைத்திருந்தது. ஒரு பக்கத்தில், இது முழுக்கவும் தனிநபர் அனுபவம் சார்ந்தது. உடனடி அர்த்தத்தில் வாழும் உணர்வும் கலாச்சாரமும் சம்பந்தமானது. மறுபுறம், முழு அரசியல் அமைப்பையும் பகுப்பாய்வு செய்வது தொடர்பானது. இந்தக் கலாச்சார அரசியலின் மிக முக்கியமான திட்டமாக வந்தது இதுதான் - இந்த இரண்டு பரிமாணங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்ட ஒரு மாதிரியை உருவாக்குவது முடியுமா என்பதுதான் அது. நாம் இவ்வகையில் முழுச் சமூக அமைப்பையும் குறித்துப் பேசுவது சாத்தியமாக இருக்குமா? துரதிருஷ்டவசமாக, எனக்குத் தோணுவது என்னவென்றால், சில புரட்சியாளர்கள் அவ்வாறு பேசுவதை நிறுத்திக் கொண்டால், அரசியல்ரீதியில் பேசுகிற இச்சமூகம் முன்னெப்போதையும் விடவும் இந்த அளவு மொத்தத் துவமாக இருந்திருக்காது என்பதுதான்.

**சோசலிஸ்ட் வொர்க்கர்ஸ் ரெவியூ :**

**நீங்கள் எப்போதுமே அத்துமீறல்காரர்களாக மாறிய காவல்காரர்களையே பிடிக்கிறீர்கள். காவல்காரர்களாக மாறிய அத்துமீறல்காரர்களைப் பிடிப்பதில்லை. கலை விமர்சனத்திலிருந்து உங்களை ஆக்க இலக்கியம் எழுத நகர்த்திய விஷயம் எது?**

*டெரி ஈகிள்டன் :*

ஆமாம். நான் இப்போது ஆக்க இலக்கியம் என்று சொல்கிறதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறேன். பகுதிக் காரணம் என்னவென்றால், கலை பற்றிய புரட்சிகர விமர்சனத்தில் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்கள் செய்தாயிற்று என ஒரு அர்த்தத்தில் நான் நினைக்கிறேன். அறிவு பூர்வமாக அந்த யுத்தத்தில் நாம் வெற்றி பெற்று விட்டோம். ஆகவே, கோட்பாட்டிலிருந்து நகர்வதற்கான எதிர்மறைக் காரணம் இருக்கிறது. ஏனென்றால், இப்போது மேற்கொண்டு அதை எங்கு நோக்கி நகர்த்துவது என்று எனக்குத் தெரியவில்லை.

**சோசலிஸ்ட் வொர்க்கர்ஸ் ரிவியூ :**

**நீங்கள் இப்படிச் சொல்வது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இடதுசாரிகள் மிக முக்கியமாக நினைத்த விஷயங்களை எல்லாம் இந்தப் பின்நவீனத்துவவாதிகள் மிகக் கீழாக மதிப்பிடுகிறார்கள். இவர்கள் எல்லாம், மறுமலர்ச்சிக் காலத்தைத் தொடர்ந்த எல்லாம் ஒன்றுமேயில்லை என்கிறார்கள்**

*டெரி ஈகிள்டன் :*

அழகியல் பற்றிய கருத்தியல் என்பது ஒரு வகையில் பின்நவீனத்துவம் பற்றிய விமர்சனம்தான். எங்களில் பலர் சம்சயத்துடனும் நம்பிக்கையுடனும் பிரெஞ்சுக்கோட்பாடு - அல்த்துாஸரியலிஸம் - அரசியல்ரீதியில் ஏதேனும் சொல்லும் என எதிர் பார்த்தோம். அது ஏதும் சொல்லவில்லை. எனது புதிய புத்தகம் அந்தக் காற்றில் ஒரு திரும்பல்தான் - அந்தப் பெரிய கேள்விகளுக்கு பின்னோக்கிப் போகிறது - அது எவ்வளவுதான் இலட்சியவாதத் தன்மை கொண்டிருந்தாலும் - ஜெர்மன் தத்துவ வரலாற்றிலிருந்து எடுத்துக் கொள்வதுதான் அது - அறிவுநிலை, நீதி, உண்மை, சுதந்திரம் போன்ற கேள்விகளுக்கு நான் மறுபடி போகிறேன்.

**சோசலிஸ்ட் வொர்க்கர்ஸ் ரிவியூ:**

**ஆனால், மறுபடி கலை கலைக்காக என்கிற போக்கு வந்திருக்கிறது இல்லையா? இந்தக் கோஷங்கள் எப்போதுமே தாராளவாதிகளிடமிருந்து மட்டுமல்ல, இடதுசாரிகளாக இருந்தவர்களிடமிருந்தும் வருகிறது. இவர்கள் யதார்த்தத்திலிருந்து பின்வாங்குகிறார்கள் என்று தோன்றுகிறது. வலதுசாரிகள் உண்மையில் பின்வாங்கிவிட்டார்கள்தான்.**

**ஆனால், அதேவேளை இடதுசாரிகளும் சிலர் தமது கடப்பாடுகளைக் கைவிட்டுவிட்டார்கள் என்று தோன்றுகிறது — அதாவது, கலை சமூக மாற்றத்தோடு இணைந்தது என்கிற விஷயத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.**

*டெரி ஈகிள்டன் :*

இடதுசாரிகள் நீண்ட காலங்களாகவே இந்த நிலையோடு பொருத்தப்பட்டிருக்கிறார்கள். இப்போது, அதை எந்த இடம் நோக்கி எடுத்துச் செல்வது எனும் அர்த்தத்தில் கேட்கிறார்கள். பின்நவீனத்துவச் சவால் என்பது மிக முக்கியமானது. ஏனெனில், அது வெறுமனே பிரதிப் பகுப்பாய்வாக இருந்த விஷயத்திலிருந்து நகர்ந்து விட்டது. கலாச்சார அரசியல் குறித்த முழுப் பிரச்சனைகளையும் மறுபடி பின்நவீனத்துவ விவாதக் களத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது உண்மைதான். இலட்சியவாதம் அல்லது கருத்து முதல் தன்மை என்பது இடதுசாரிகளிடமும் கலாச்சார அரசியலில் இருந்து வந்திருப்பதுதான்.

ஆஸ்கர் வொய்ல்ட் பற்றிய எனது நாடகத்தை நடைமுறையில் வைத்துப் பார்க்கிறபோது மிக முக்கியமானதாகும். அதை ஒரு அரங்கத் திட்டமாகத்தான் செய்தேன். ஆனால், அது அரங்குக்கும் அப்பாலான தன்மை கொண்டது. அயர்லாந்துப் பின்னணியிலிருந்து வேலை செய்யும்போது அரசியலிலிருந்தும் கலாச்சாரத்திலிருந்தும் பிரிக்கப்பட முடியாது எனும் உணர்வு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கும். கலாச்சாரச் செயல்பாட்டில் பயனற்ற இலட்சிய வாதம் இருப்பதை உணரும் இடதுசாரிகளுக்கு - அந்தக் கேள்வி நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதோடு சம்பந்தப்பட்டதுதான் - அயர்லாந்து அனுபவத்திலிருந்து பார்க்கும்போது அங்கே இது பொருந்தாது.

**சோசலிஸ்ட் வொர்க்கர்ஸ் ரெவியூ:**

**பின்நவீனத்துவத்தின் இந்தப் பன்முகத்தன்மை என்கிற விஷயத்தை – அந்த வெளியை இப்போது இடதுசாரிகள் எடுத்துக்கொண்டு விட்டார்கள். ஒரு வகையில், வலதுசாரிகளும் யுத்தத்திற்குப் பின்னான நாட்களில் அதை எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்று நீங்கள் பார்க்கவில்லையா?**

*டெரி ஈகிள்டன்:*

நடந்தவற்றின் ஒரு பகுதியை நாம் பார்த்தால், புதிய வகையிலான 'கருத்தியல் முடிந்து போய் விட்டது' எனும் அலைதான் அது. அது முதலில் தோன்றியபோது, சந்தேகமில்லாமல், அது வலதுசாரி இயக்கமாகத்தான் இருந்தது. ஆனால், அதே மாதிரி சில பிரச்சினைகளை முன்வைக்கிறவர்கள் இடதுசாரி நோக்கங்களைக் கொண்டிருக்கிறார்கள். சமவேளையில், பின்நவீனத்துவத்தில் இருக்கிற புரட்சிகரமான போக்குகளை, பெண்ணிலைவாதப் போக்குகளை நீங்கள் பார்க்க வேண்டும். அதாவது, நடைமுறையாக வேண்டிய அரசியல் பிரச்சினை இது. திறந்த தன்மையும் பன்முகத் தன்மையும் முதிர்ச்சியற்றதோ தவறானதோ அல்ல. ஆனால், எவ்வாறு அதனைச் சாத்தியமாக்க முடியும்? இந்த வர்க்க சமூகத்தில் அதை உருவாக்க முடியும் என்று நீங்கள் நினைத்தீர்கள் என்றால் - அப்புறம் நீங்கள் நிற்கிற இடம் தாராளவாத பன்முகத்தன்மை நிலைப்பாட்டிலிருந்து வேறானது அல்ல - இந்த நிலைப்பாடு ஒரு முக்கியமான விஷயத்தை உதாசீனப்படுத்துகிறது. அதாவது, இந்தப் பன்முகத்தன்மை என்கிற விஷயங்களைக்கூட ஆளும் அதிகாரம்தான் நிர்ணயம் செய்கிறது. இந்தப் பன்முகத்தன்மை குறித்த விவாதங்களில் பல்வேறு விஷயங்கள் பணயப் பொருள் போன்றவை. உதாரணமாக, அயர்லாந்துப் பின்னணியில் எடுத்துக்கொண்டால், இயான் பெஸ்லியையே எடுத்துக்கொண்டால், ஒரு கன்ஸர்வேடிவ் பேராசிரியரை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. அவர் இன்னும் நடைமுறைரீதியிலான இம்மாதிரி விவாதத்தை இன்னும் பொருத்தமாக முன்வைப்பார்.

**சோசலிஸ்ட் வொர்க்கர்ஸ் ரிவியூ :**

**1968க்குப் பின் பல்வேறு மனிதர்கள் அவநம்பிக்கைக்குத் தள்ளப்பட்டார்கள். தொழிலாளி வர்க்கம் முடிந்துபோய்விட்டது என்று நம்பினார்கள். எமது நம்பிக்கைக்கு லேபர் கட்சி ஒன்றுதான் இருக்கிறது என்றார்கள். இம்மாதிரிக் கருத்துக்கள் குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

*டெரி ஈகிள்டன் :*

இந்தக் கருத்துக்கள் எதிர்த்துப் போராடப்பட வேண்டும். ரொம்பத் துயரமான வகையில், பின்நவீனத்துவவாதிகளைப் போலவே இவர்களும் மொத்தத்துவ சமூகம் ஏதும் இல்லை என்கிறார்கள். ஒரு அர்த்தத்தில், இவ்வகையில் இந்த அமைப்பு எப்போதும் மொத்தத்துவத்தன்மை கொண்டதாக இருக்கவில்லை. பகுப்பாய்வு இதில் இருக்கிறது என்பதை விடவும் தோல்வி மனப்பான்மைதான் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால், மக்கள் இப்போது அதற்கு எதிராகச் செயல்படுகிறார்கள். எனது கோட்பாட்டு எழுத்துக்கள்கூட அத்திசை நோக்கித்தான் போகிறது.

நீங்கள் யார், நீங்கள் ஈடுபடுகிற போராட்டம் என்ன என்பதைப் பொறுத்துத்தான் நீங்கள் இந்த முழுமைத்துவ அமைப்பு அல்லது உலகமயமான கட்டமைப்புகள் பற்றிப் பேசப்போகிறீர்கள் என்பது தீர்மானிக்கப்படுகிறது. பல சமயங்களில் பின்நவீனத்துவவாதிகள் முன்வைக்கிறபோது இது அறிவு சார்ந்த மாற்று அல்ல. அவர்களது முழுமையான ஒடுக்குமுறைத்தன்மை பற்றி அறிந்து கொள்ளாமல் தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத ஒடுக்கப்பட்ட குழுக்களும் மக்களும் இருக்கிறார்கள்.

அரசியல்ரீதியில் ஒரு மிகப்பெரிய இடப்பெயர்வு நடந்திருக்கிறது. பல முக்கியமான உடனடிக் கேள்விகள் எதிர்கொள்ளப்படவில்லை என சிலர் நினைக்கிறார்கள். அப்புறம், அத்தகையவர்களது தலை சரியாகப் பொருத்தப்படாமல் சரியில்லாமலும் இருக்கிறது. அவர்கள் மோஸ்தர்களுக்குள் போகிறார்கள். அப்புறம், அவர்கள் இப்போது வேறு விதமான பதில்களை வேண்டுகிறார்கள். ஆனால், இதை இன்னும் ஆர்வத்துடனும் பொருள்வயமான படியிலும் பார்த்தால் அதில் சாரம் இருப்பது தெரியும்.

**மைக்கேல் பெய்ன் :**

**உங்களது கோட்பாட்டு எழுத்துக்களில் மிகவும் ஆகர்ஷிக்கும் அம்சம் என்னவென்றால் உங்களது பொதுவான பல்கூறுகளைத் தேர்ந்து பாவிக்கும் உங்களது ஆய்வு முறை – நீங்கள் உளப் பகுப்பாய்வு, கட்டுடைத்தல், மார்க்சியம், பெண்ணிலைவாதம் எல்லாமே உங்களுடைய எழுத்தில் இயைந்த வகையில் வருகிறது. ஒரு வகையில், மிகுந்த பரந்த மனப்பான்மையுள்ளதாகவும் ஈடுயாடு தரக் கூடியதாகவும் இருக்கிறது. இந்த பல்கூறுகளிலான அணுகுமுறை, உங்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரச்சினைக்குரியதாக இருந்திருக்குமே – உதாரணமாக, நீங்கள் அந்தந்த அணுகுமுறைகளில் கறாரான நிலைப்பாடு எடுக்காது நீங்கள் மறுக்கிறபோது பிரச்சினை வரும். உதாரணமாக, மார்க்சிய நிலைப்பாட்டுக்காக கட்டுடைப்புக்கு எதிரான நிலைப்பாடு எடுக்காதபோது இப்பிரச்சினை வரும். இது உங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறதா?**

*டெரி ஈகிள்டன் :*

பிரச்சினையாகத்தான் இருக்கிறது. உதாரணமாக, பின்அமைப்பியல் குறித்து நான் விமர்சன ரீதியாக இருக்கிறேன் என்கிற விமர்சனம் இருக்கிறது. அதே சமயத்தில், விமர்சனமற்று அதை நான் நிறைய எடுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் ஒரு பன்முகத்துவவாதி என்றழைக்கப்படுவதில் சந்தோஷப்படுகிறேன். இதன் வழி, ஒருவகையில் பற்பல விமோசன உரையாடல்களின் வழி செயல்பட முடியும். நான் இங்கும் விமோசன உரையாடல் என்று சொல்கிறேன். பிற உரையாடல்களை நிராகரிப்பதற்கான முஸ்தீபாக இதைச் சொல்கிறேன். மூடி விடுவதிலும் வெளியேற்றி விடுவதிலும் எதுவும் தவறிருப்பதாக நான் நினைக்கவில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால், விமோசனத் தன்மையில்லாத விமர்சன கோட்பாட்டு நெறிகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை என்னுடைய எழுத்துக்களில் காணக் கிடைக்காது. இதுதான் முறையியலிலும் உரையாடல்களிலும் தவிர்ப்புக்கான தொடுகல்லாகும். ஒருவரது அரசியல் இலக்குகளை அடைவதில் இந்த அடிப்படையில் இந்த அணுகுமுறை அர்த்தமுள்ளதாகும்.

துக் கொள்கிறேன் என்கிற விமர்சனமும் இருக்கிறது. மதில் மேல் உட்கார்ந்திருந்தால் அவருக்கு இரண்டு புறமிருந்தும் நெருப்பு கொட்டப்படும் போலும். முறையியல் எனும் அளவில் எழுபதுகளைத் திரும்பிப் பார்க்கிறபோது, நாம் கோட்பாடு குறித்த சரக்கு வழிபாட்டுக்கு ஆட்பட்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது. ஒரு திட்டமிட்டபடியிலான முறையியல் சரியானது என்று தீர்மானித்துக் கொள்கிறோம். அதன் வழியில் நாம் தொடர்ந்து செல்லவேண்டும் என நினைக்கிறோம். என்னுடைய சில ஆரம்ப நூல்கள் - 'விமர்சனமும் கருத்தியலும்' நூல் - அந்த வகைக்குள்தான் விழுந்திருந்தது என நான் நினைக்கிறேன். நான் இப்போது சொல்ல விரும்புகிறேன், முறையியல் என்று பார்க்கிறபோது பன்முகப்பார்வைதான் வாகை சூடும். பல்கூற்றுப் பார்வையை உண்மையில் தோற்கடிப்பது எதுவென்றால், முறையியலின் வலியுறுத்தல் அல்ல, மாறாக, அரசியல் இலக்கின் வலியுறுத்தல் ஆகும். அங்குதான், ஒரு மார்க்சியவாதி பல்கூற்றுப் பார்வையை மறுக்கவேண்டும் என நான் நினைக்கிறேன். மார்க்ஸிஸ்ட் என்பவன் சில உடனடியான அரசியல் இலக்குகளை வகுக்க வேண்டியவன். அவன் அவ்வழி தன்னை அனுமதிக்க வேண்டும். முறையியல் பற்றிய கேள்விகளை இதுதான் தீர்மானிக்க வேண்டுமேயொழிய, மாறாக, வேறு வகையில் அல்ல. வேறு வகையில்தான் நாம் சிந்தித்துப் பழகியிருக்கிறோம். ஆனால், அது கோட்பாட்டாளன் வழி சிந்தனை தானேயொழிய அரசியல்ரீதியில் சிந்திப்பதற்கான அடையாளம் அல்ல. இவ்வகையில், நான் ஒரு பன்முகத்துவவாதி என்றழைக்கப்படுவதில் சந்தோஷப்படுகிறேன். இதன்வழி, ஒருவகையில் பற்பல விமோசன உரையாடல்களின் வழி செயல்படமுடியும். நான் இங்கும் விமோசன உரையாடல் என்று சொல்கிறேன். பிற உரையாடல்களை நிராகரிப்பதற்கான முஸ்தீபாக இதைச் சொல்கிறேன். மூடி விடுவதிலும் வெளியேற்றி விடுவதிலும் எதுவும் தவறிருப்பதாக நான் நினைக்கவில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால், விமோசனத் தன்மையில்லாத விமர்சனக் கோட்பாட்டு நெறிகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை என்னுடைய எழுத்துக்களில் காணக் கிடைக்காது. இதுதான் முறையியலிலும் உரையாடல்களிலும் தவிர்ப்புக்கான தொடுகல்லாகும். ஒருவரது அரசியல் இலக்குகளை அடைவதில் இந்த அடிப்படையில் இந்த அணுகுமுறை அர்த்தமுள்ளதாகும்.

**மைக்கேல் பெயின் :**

**கோட்பாட்டுக் கலையைப் பார்க்கிறபோது — உங்கள் அனுபவத்தில் இன்னும் முப்பது நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் முக்கியத்துவமுள்ளதாக எவரது கோட்பாட்டு எழுத்துக்கள் வாழும் என்று சொல்கிறீர்கள்?**

*டெரி ஈகிள்டன் :*

*கொஞ்சம் மறைமுகமாக உங்கள் கேள்விக்கு வர*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாம் என நினைக்கிறேன். அப்பாலை நகர்வாக, பின்னோக்கிப் போக, பொதுவான இடங்களுக்குப் போக இப்போது இயலாதென நான் நினைக்கிறேன் - எனது 'விமர்சனமும் கருத்தியலும்' என்கிற புத்தகத்தை நான் இப்போது திரும்பிப் பார்க்கிறபோது, அன்றைக்குத் தேவையான மொழியைக் கற்றுக் கொள்வதற்கும், ஆய்வு செய்வதற்கும் நான் மேற்கொண்ட முயற்சிகளை நினைத்துப் பார்க்கிறேன். எழுபதுகளின் பின்னால், ஒரு திருப்புமுனையாக அமைப்பு என்பது குறித்த பிரச்சனையில் மனிதர்கள் அக்கறை செலுத்தினார்கள். அவர்கள் கோட்பாட்டு ஆயுதச்சாலையை அங்குதான் குவித்தார்கள். ஆனால், இப்போது ஒரு காத்திரமான கேள்வி வருகிறது - அதை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறோம்? அதை வைத்துக்கொண்டு ஒருவர் செய்யக்கூடியது என்னவென்றால், ஒருவர் தொழிற்சாலையை - நிலைபேறுடையதாகச் செய்து கொண்டிருக்கலாம். நான், சில கோட்பாடுகள் இன்னும் வாழ்வதற்கான நியாயம்பற்றி, நினைத்துப் பார்க்கிறேன். அதன் காரணம், அந்தப் பிரதிகளின் அறிவார்ந்த கிளர்ச்சியூட்டும் தன்மையும் அதனது உள்ளார்ந்த சக்தியும்தான். ஆனால், நமக்கு இவைகளிலிருந்து வேண்டியதெல்லாம் நமக்கு என்ன தேவையாக இருக்கிறது, நாம் எதை நினைவுகூர வேண்டும், நாம் செய்து கொண்டிருப்பதிலிருந்து எந்த அளவு இது வித்தியாசமாக இருக்கிறது என்பதுதான். நான் நினைக்கிறேன் - என்னைப் போன்றவர்கள் நீண்ட காலங்கள் காத்திருந்தோம் - கட்டுடைப்பு மாதிரியிலான முறைக்கான வருகைக்காகக் காத்திருந்தோம் - அவர்கள் ஒருபோது கொடுத்த வெற்றுக்காசோலையைச் செலுத்துவதற்காகக் காத்திருந்த மாதிரி - அதில் அவர்கள் உறுதி தந்தார்கள், பரந்துபட்ட அர்த்தத்தில், இவையெல்லாம் அரசியல் தன்மை வாய்ந்தவை தான் என்று.

நிஜத்தில், தெரிதாவின் வார்த்தைகளில் சொல்வதானால், கட்டுடைப்பு என்பது குறைந்தபட்சம் அடிப்படையில் வெறுமனே பிரதி இயக்கம் (text operation) அல்ல என்று சொன்னார்கள். ஆனால், நான் நிஜமாகவே சந்தேகப்படுகிறேன், அந்தக் குறிப்பிட்ட முறை, குறிப்பிட்ட அரசியல் அம்சத்தைத் தருகிறதா எனப் பார்க்கிறேன். ஆனால், அது தன்னைத்தானே மறு உற்பத்தி செய்துகொள்கிற (self reproducing) சொல்லாடலாகத்தான் இருக்கிறது என்பதுதான் அதிகரித்தபடி உறுதியாகி வருகிறது.

இந்த வகையில், நான் பெண்நிலைவாத விமர்சனத்தில் அதிக ஈடுபாடு காட்டுகிறேன். அதை நான் பயன்படுத்தி பெஞ்ஜமின் பற்றிய எனது நூலில், ஒரு விமர்சன அணுகுமுறையாக உருவாக்குகிறேன். இந்த அணுகுமுறை பரந்துபட்ட அரசியல் அர்த்தத்தில் அடிப்படை கொண்ட வகையிலான உரையாடல் என்று நான் இதைப் பார்க்கிறேன். இருபதாம் நூற்றாண்டின் விமர்சனத்தைத் திரும்பிப் பார்க்கிறபோது - நான் நார்த்பிரை பற்றி அவ்வளவாக நினைவுகூரவில்லை - பெஞ்ஜமின் பற்றியும் சோவியத் முன்னணிப் படையினர் (avant guard) விமர்சகர்கள் பற்றியும் சொல்கிறேன். அவர்கள் செய்ததை இன்னும் விரிந்தளவில் அடிப்படை கொண்டதாகச் செய்ய முடியும்.

பின்னாளைய பெஞ்ஜமின் சாத்தியமானதற்கு பகுதிக் காரணம், பிரெக்ட் சாத்தியமானதுதான். பிரெக்ட் சாத்தியமானதற்குக் காரணம், ஜெர்மன் தொழிலாளர் இயக்கம் சார்ந்து ஒரு உயிரூக்கமுள்ள கலாச்சாரப் பரிமாணம் அமைந்ததினால்தான். நமக்கு அத்தகைய பரந்துபட்ட இயக்கம் இல்லாதபோது, கோட்பாடும் தன்னை நிலை நாட்டிக் கொள்வது ஜீவிப்பது என்பது இயலாது. அது கடினம். இவ்வகையில், எதிர்காலத்தை வேவு பார்த்து இது வாழும், இது வாழாது என்று சொல்ல முடியாது. ஏனென்றால், இக்கேள்வியை முதன்மையாக நாம் அரசியல் தளத்தில் அல்லாமல் கோட்பாட்டுத் தளத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த வகைகளில் ஜீவிதத்தன்மை ஏற்படுவதில்லை. பிரெக்ட் நமக்கு ஞாபகமூட்டுவதெல்லாம், ஆச்சரியகரமாக ஞாபகமூட்டுவதெல்லாம், எவை மறுபடைப்பு செய்யப்படும், எவை செய்யப்படமுடியாது என்பதுதான். பெஞ்ஜமின் நமக்கு ஞாபகமூட்டுவதெல்லாம் பொறுமையாகக் கிடைப்பதையெல்லாம் திரட்டிக்கொள்வதுதான்.

ஏனெனில், ஒருவர் என்ன நமக்கு வரப்போகிறது என்பதை எவராலும் அறிய முடியாமல் இருப்பதுதான். ஆகவே, நான் நினைக்கிறேன், முன்கூட்டிச் சொல்லுதல் என்பது நடைமுறையில் கடினம். ஏனெனில், எதிர்காலத்தில் நமக்கு மிகத் துல்லியமாக என்ன தேவை என்பது நமக்குத் தெரியாது. ஆனால், நாம் இன்று சிந்திப்பதாக அது இருக்காது என்பதுதான் அதன் சுவாரஸ்யமான பகுதியாகும். ●

**அரசாங்கத்தின் ஆதரவாளர்களுக்கு மட்டும், ஒரு குறிப்பிட்ட கட்சியின் உறுப்பினர்களுக்கு மட்டும் சுதந்திரம் வழங்கப்படுமாயின் அது சுதந்திரமாக இருக்க முடியாது. சுதந்திரம் என்பது வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டிருக்கும் சுதந்திரம்தான். அது தனிச் சலுகைகளுக்காக மாற்றப்படும் அந்தக் கணமே அதன் பாத்திரம் மறைந்து விடுகின்றது.**

— ரோசா லுக்ஸம்பேர்க்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கத்திய முற்போக்காளரின் பார்வை குறித்து....

மூலம்:
இலியா ட்ரொஜானொவ்

தமிழில்:
சந்துஷ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


குன்ரர் கிறாசின் 'நாக்கைக் காட்டு' என்ற அவரது ஆறு மாத கால கல்கத்தா வசிப்பினை யொட்டி எழுதப்பட்ட நூலின் மீது எனது விமர்சனத்தை நான் குவிக்கக் காரணம், அது வழமைக்கு மாறாக, தோல்வியடைந்த நூலென நான் நினைப்பதால் மட்டுமன்று. மேற்குலகின் பயண எழுத்துக்களில் பொதுவில் காணப்படும் பாரம்பரியத்தை இது கொண்டிருப்பதாலும், இடதுசாரி முற்போக்கு புத்திஜீவிகளின் எழுத்துக்களிலும் இந்தத் தன்மை மாறாமல் இருப்பதனாலும்தான். குறும் புத்தி படைத்த கிறுக்கர்களின் இனவாதமும் அழுத்தமான மேலாதிக்கவுணர்வும் ஏற்கனவே அறியப்பட்டுள்ளதுடன் அது ஆவணப்படுத்தப் பட்டுமுள்ளது. ஆனால், எதையும் ஆழமாக நோக்கக் கூடிய குன்ரர் கிறாஸ் போன்றவர்களின் எழுத்துக் களைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டியுள்ளது. ஒரு பரந்துபட்ட, பல்வகைப்பட்ட பயண எழுத்துக் களின் வாசிப்பிற்குள்ளாகவே எனது விவாதங்களை முன்வைக்கின்றேன். ஆனால் விரிவஞ்சி நான் குன்ரர் கிறாசையும், திரைப்பட இயக்குனரும் மேற்கைரோப்பிய எழுத்தாளர்களிடையே ஒரு மார்க்ஸிஸ்டாக அறியப்பட்டவரும், 'இந்தியாவின் சுவாசம்' ( L'oodre dell India - The Breath of India) என்ற நூலை எழுதியவருமான ப்பிய பாலோ பசோலினியையும் மாத்திரம் இங்கு குறிப்பிடுகின்றேன்.

பொதுவாகச் சொன்னால், மூன்றாவது உலக நாடுகள் என்று சொல்லப்படுகின்ற நாடுகள் பற்றிய சமகாலப் பயணக் கட்டுரைகள் மூன்று அடிப்படை அம்சங்களைக் கையாள்கின்றன. இந்த அம்சங்களை முற்கற்பிதம், வல்லுனர் தன்மை, மேலாண்மை என நான் அழைத்துக் கொள்ளுகிறேன்.

## முற்கற்பிதம்

பழையகாலத்தில் உலக வரைபடத்தின் வெற்றிடங்கள் யாவும் புராண விலங்குகளாலும், நரமாமிச பட்சணிகளாலும், ஒட்டகங்களினாலும், சனாடுவின் கோபுரங்களாலும், எல்டொறாடோவின் பொக்கிசங்களாலும் நிரப்பப்பட்டன. பின்னர் 18ம் நூற்றாண்டில் இந்தக் குழப்ப நிலையானது கால்லோஸ் லினாயுசின் இயற்கை அமைப்புக்கள் பற்றிய தகவல்களிற்கமைய உலக வரைபடத்தில் பதிவு செய்யப்பட்டது.

இந்த ஜதீகங்கள் முதலில் கரையோரப் பகுதிகளில் உடைந்து வீழ்ந்த பின்னர் அடிமேல் இரத்த அடியாக உள்பிரதேசங்கள் பற்றிய தரிசனங்களையும் தெரிந்து கொண்டனர். இறுதியாகப் பேராசை கொண்ட இந்த உலக வரைபடங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டதுடன், அனைத்தையும் திட்டமிடவும், விளங்கிக் கொள்ளவும் முடிந்தவர்கள் தாம் தானெனவும், தமது சொந்த ரசனைக்கும் எதிர்பார்ப்புகளிற்குமேற்ப 'தங்கள் கால் படா நிலங்களை' இன்னும் வரைய முடியுமெனவும் இந்த வரைபடங்களை வரைந்தவர்களே நம்பத் தொடங்கினர். காலனியாதிக்கத்திற்கு முந்திய 18ம், 19ம் நூற்றாண்டுகளின் பயணிகள் தாம் சென்ற இடங்களின் அழகையும், செல்வத்தையும் வளத்தையும், தூய்மையையும் கண்ட அதேவேளையில் காலனியாதிக்கத்திற்குப் பிந்திய தற்காலப் பயணி அசிங்கம், ஒழுங் கின்மை, தாழ்ந்த தன்மை போன்றவற்றின்மீது விரைவாகத் தன் பார்வையைக் குவிக்கின்றான்.



GUNTER GRASS

19ம் நூற்றாண்டில் இவர்களால் கண்டுபிடிக்கப் பட்ட நாடுகளின் செல்வமானது பாராட்டப்பட்டது. இன்று நாகரிகத்தின் வளர்ச்சியின்மையுடன் கூடிய ஒழுங்கற்ற, எதற்கும் தயாரற்ற மூன்றாமுலகு என ஏளனத்துடன் அணுகப்படுகிறது.

இந்த மனோபாவமானது கொள்ளையடிப்பிலிருந்து நிராகரிப்பாகவும், ஆதரவிலிருந்து வெறுப்பாகவும் உருமாறிவிட்டது.

'உங்கள் நாக்கைக் காட்டுங்கள்' நூலின் ஆரம்பத்திலிருந்தே இந்தியா குன்ரர் கிறாசிற்கு ஏமாற்றமளித்திருப்பதையே அறிய முடிகிறது. இந்தியா அவரது எதிர்பார்ப்பிற்கமைய இல்லாதிருந்தமையால் கண்டிக் கப்பட வேண்டியதாகிறது.

அந்த நாட்டுப் பிரஜைகள், அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தில் நடக்காத பட்சத்தில் அவரிடம் வாங்கிக்கட்டிக் கொள்ளுகின்றனர். நூல் ஆசிரியர் தனது முற்கற்பிதத்தை சாட்சியாய் வைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்கொவ்வாத அனைத்தையும் சாடும் ஒரு இரக்க மற்ற குற்றம் சாட்டுபவராகிறார். அயல் வீட்டுக் காரனின் வாத்துக்கூட 'விக்கல் சிரிப்பைப்' போன்ற அதன் குவாக் குவாக் ஓசைக்காக சாட்சிக் கூண்டிற்கு அழைக்கப்படுகிறது.

மிக்க கவனத்துடன் இவர் அசிங்கங்களைச் சேகரிக்கின்றார். இறைச்சிக் கடையில் பிறக்காத ஒரு கருப்புப் பிண்டத்தை (அது ஆடோ, பிள் ளையோ) நாயொன்று விழுங்க முயற்சிக்கின்றது, வெட்டுண்ட தலைகள் போல தேங்காய்கள், கொல் கொத்தாவில் மண்டையோட்டுக் குவியல் போல பழங்கள். பின்பு பழங்கள்மீது காகங்கள், ஆகாயத் திலிருந்து மேலும் காகங்கள். மலிந்து கிடக்கும் கருமை. ஆற்றங்கரையில் இளைஞர்கள் ஒரு பெண் ணின் பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு மயானத்தை நோக்கிச் செல்லுகிறார்கள். மும்பாயில் வழக்கமாகக் காணக்கூடிய காட்சியிது. சாவின் பகிரங்கப் பிரசன்னம். உயிர்க்கும் வீதிகளினூடாக சோக ஊர்வலம். இறந் தவர் உலகத்திற்குப் பிரியாவிடை சொல்வது போல வும் உலகம் அவருக்குப் பிரியாவிடை கொடுப்பது போலவும். என்னைப் பொறுத்தவரையில ஒரு அழகான விம்பம். ஏனெனில், ஜேர்மனியில் ஒரு விலக்கப்பட்ட காட்சியாகிவிட்ட மரணத்துடன் இது மிகவும் முரண் பட்டு நிற்கும் விம்பம்.

கிராஸ் தனது விமர்சனத்தைத் தொடர்கிறார் : "ஒவ்வொரு இளைஞனும் மின்னும் கைக்கடிகாரங் களைக் கட்டியிருந்தனர் - காசிற்கு வாங்கிய சந்தோ ஷங்கள்"

இந்தியாவின் அன்றாட வாழ்கையில் குன்ரர் கிறாசை ஒரே கணத்தில் மலைக்கவும் வெறுக்கவும் செய்த விடயம் எங்கும் வியாபித்திருக்கும் மலம். நூற்றுக்கும் சற்றே குறைந்த பக்கங்களில், சில மனிதர்கள் தம் வாழ்நாள் முழுவதிலும் காண முடியா தளவு மலத்தைப்பற்றி விபரிக்கின்றார். அனைத்தும் மலத்தினால் மூடப்பட்டிருக்கிறது. சேரிகள், புகையிரத நிலையங்கள், அவரது இராப்போசனத்திற்குப் பின் னான நடையின் பொது அஜீரணத்தை ஏற்படுத்தும் வகையில் கடற்கரைகளில், எல்லா இடங்களிலும் மலம்தான். மலம் பற்றிய ஒரு விவரணையே தரு கிறார்.

இந்தியா என்பது ஒரு மலக்குழியா அல்லது இது ஆசிரியரின் அடிப்படை நோக்கினால் எழும் பார்வைப் பிசகா? தமது பின்புறங்களை கையால் கழுவுபவர்களுக்கும் 'ரொய்லட்' பேப்பரினால் துடைப் பவர்களுக்குமிடையில் கலாச்சார வித்தியாசங்கள் உள்ளனவா?

தனிப்பட்ட மற்றும் பொது மலசல கூட வசதிகள் எந்த நிலையில் இருக்கின்றன? இத்தகைய கேள்விகள் கிறாசிடம் இருந்து எழவில்லை. முடிவற்ற மலத் தையே அவர் கண்டு பிடிக்கிறார்.

முடிவுகளற்ற அழுக்குகளின் விபரிப்பில் ஒரு




முறையேனும் அங்குள்ள மனிதர்களின் தனிப்பட்ட வாழ்வில் கடைப்பிடிக்கப்படும் சுத்தம் பற்றி குறிப் பிடுதல் அவசியமென அவர் எவ்விடத்திலும் நினைக்க வேயில்லை. நன்கு தோய்த்து ஸ்திரிக்கையிட்ட சட்டை, கால்சட்டைகளுடன் தம் வீடுகளிலிருந்து புறப்படும் சேரி வாழ் மனிதர்களைப் பற்றி அவர் சொல்லவில்லை. அவர் வரைய விரும்பும் ஏமாற்றம் தரும் சித்திரத்தை அது மங்கச் செய்திருக்கும்.

## வல்லுனர்தனமும் தகுதியும்

இவரது வக்கிரமான மறுப்பின் பின்புலத்தில் எவ்வித ஆய்வுகளும் இல்லை. வாசகர்களிடம் பேச, உள்ளூர்வாசிகளுக்கு ஒரு சந்தர்ப்பமும் கொடுக்கப் படவில்லை. எனினும், ஆசிரியர் முழுத்தகைமையும் தனக்கே இருப்பதாக நினைக்கின்றார். ஆசிரியரின் இந்தத் தகைமைக்கு எவ்வித ஆதாரமும் காட்டப் படவில்லை. கிறாஸ் கண்டவை மாத்திரமே அங்கு காணக் கிடைக்கிறது என்று வாசகனை நம்பச் சொல் லுகிறார். இந்தியாவின் யுதார்த்தம் இதுதான் என்று தவறு செய்யாத ஒரு விதக் கடவுள் நிலையில் இருந்து கொண்டு அவர் விவரணம் தருகிறார். அவர் வரைந்த சித்திரம் வாசகரின் முன் ஒரு நிதர்சன உண்மையாகத் தொங்குகின்றது. இது மேரி லூசி பாரோட் கூறுவது போல 'நானே எல்லாவற்றிற்கும் ராஜா' என்ற தன்மை யையே காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இதை நாய்போலின் 'இந்தியா-ஓராயிரம் கிளர்ச்சிகள் இப்போது' என்ற நூலுடன் ஒப்பிடுகையில், அவர் தன்னுடைய சேரிக் காட்சியை ஒரு சேரிவாசி தன் சூழலைப் பார்க்கும் பார்வையிலிருந்து காட்டுகிறார். சேரிகளைப் பற்றிய மேற்கத்திய கற்பனையைத் தவிர்த்து பன்முகத்தன்மையை இது தருகிறது.

கிராமங்களினூடாக சொகுசான அம்பாஸிடர் டாக்சியில் பயணிக்கும் கிறாஸ் அதற்குள் இருந்த வாறே விளக்கம் தருகிறார்.

"விறகு பொறுக்கும் சிறுவர்கள்.... மூக்குத்தி அணிந்த பெண்கள்.... ஒரு குடும்பத்தில் ஒன்றோ இரண்டு பேர் இப்படிப் பல கிலோமீட்டர்கள் நடக்க வேண்டியுள்ளது." அதாவது, பல குழந்தைகள் இப் படி நடப்பதாகச் சொல்லப்படுகிறது. "இதனால்தான் காடுகள் அழிகின்றன. அதுதான் அங்கு எதுவுமே வளர்வதில்லை, பிள்ளைகளைத் தவிர".

எவ்வளவு சுலபத்தில் சனத்தொகைப் பெருக்கத் திற்கும் சுற்றுச்சூழல் அழிவிற்கும் இரண்டு வசனங் களில் விளக்கம் தருகிறார். இந்தியாவின் பொதுவான முக்கியத்துவம் பற்றி ஒரு புறத்தில் வேறு குறிப்பி டுகிறார்.

இந்த 'சொல்லப்படுகிறது' என்ற வாக்கியத்தைக் கவனியுங்கள். இது கிறாஸ் தனது டாக்ஸியிலிருந்து இறங்கி வந்து அதிலொரு பெண்ணிடம் "ஒரு நாளில் எத்தனை கிலோமீட்டர் விறகு தேடி நடக்கிறாய்?" எனக் கேட்கும் அவசியத்தை இல்லாமல் செய்து விடுகிறது. இந்தியாவில் பல மாதங்கள் செலவழித்த பின் இந்தியா பற்றிய ஒரு பொதுவான பார்வையை உருவாக்குகின்றார்.

பசோலினி எழுதுகிறார்: "கஜீராகோதான் இந்தியாவில் அழகானதும் மேன்மையானதுமாகும். இந்தியர்கள் சமயப் பிரச்சனைகளில் அதிக அக்கறை காட்டாதவர்கள்" என்கிறார். இவர்களின் இந்த மேலாண்மைப் போக்கு கண்டங்களைப்பற்றிப் பொது மையாகப் பேச வைப்பதை இந்தக் கடைசி கூற்றுக் கள் காட்டுகிறது. இப்படிப் பொதுமைப்படுத்தும் எழுத் தாளர்கள் தமது சொந்த நாடுகளின் மாகாணங் களைக்கூட பொதுமைப்படுத்திப் பேசுவதில்லை.

டென்மார்க் இந்தியாவைவிட புதிர்கள் நிறைந்த நாடென்கிறார் கிறாஸ். 'ஆழங்காண முடியாதது' எனச் சொல்லப்படுகிற இவர்களுடைய மதம் வெறும் ரசனையற்ற மூடநம்பிக்கைதான்" என்கிறார்.

"இந்தியர்கள் உண்மையில் மகிழ்ச்சியாக இருப்ப தில்லை" எனச் சொல்லும் பசோலினி "அவர்கள் அடிக்கடி புன்னகைக்கிறார்கள் - அது அவர்களின் மென்மையான தன்மையால் ஏற்படுகிறதே அன்றி மகிழ்ச்சியினால் அல்ல" என்றும், தொடர்ந்து "அவர் களது மதமென்பதே இந்த ஒரு அசைவுதான்" என்கி றார். பின்பு "ஒவ்வொரு இந்தியனும் ஒரு பிச்சைக் காரன்" என்கிறார்.

சிரிப்பிற்கிடமாக இன்னுமொன்றையும் சொல்லு கிறார் - அதுதான் "இந்தியர்கள் தமது இசையைத் தவிர வேறெதையும் ரசிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்" என்பது.

## தலைக்கனம்

கிறாசும் பசலோனியும் ஒரு நாட்டில் பல மாதங் களைக் கழித்த பின்னரும் அறிவுபூர்வமாக ஒருவரு டனும் பேசாமலிருந்து கொண்டே இந்தியப் புத்தி ஜீவிகள் பற்றிய மட்டமான மதிப்பீடுகளையே வைத்தி ருப்பதுடன் அவர்களுடன் எந்த உரையாடலையும் மேற்கொள்ளவில்லை.

கலைஞர்களுடனான ஒரு சந்திப்பை கிறாஸ், 'சுவாரசியமற்ற அரட்டை' என்று விபரிக்கிறார்.

பசோலினி சொல்லுகிறார்: "ஒரே சக்திவாய்ந்த குரல் டொம் மொறாயசினுடையதுதான்" என்று!

70களின் மத்தியில் கல்கத்தாவிற்கு சென்ற கிறாசை இலக்கிய அமர்விற்கு அழைத்த உள்ளூர் கவிஞர்களை "ஆத்திரத்தையும் கோபத்தையும் உரு வாக்கும் நகரில் கவிதைகள் எழுதுவது பொருத்த மற்றது" என்று திட்டினார் அவர்.

இந்தியக் கலைஞர்களால் உருவாக்கப்பட வேண் டும் என்று கிறாஸ் எதிர்பார்க்கும் துயரம், வறுமை, கஷ்டம் என்பவை பற்றிய விமர்சனத்துடன் கூடிய தத்வருபமான படங்களை, சத்தியஜித்ரே, மிருணாள் சென் போன்ற இயக்குனர்கள் தம் வாழ்நாளைச் செலவளித்து தந்திருக்கின்ற போதிலும் வங்காளத் திரைப்படங்களைப்பற்றி மூன்று வசனங்களையே கிறாஸ் எழுதுகிறார்.

## ஆளுமை செலுத்தலும் விலகி நிற்றலும்

கருத்து வித்தியாசங்களின் சந்திப்பு பன்மையான கருத்துக்களாக பரிணாமம் பெறும் பிரதேசத்திற்கு கிறாஸ் ஒருபோதும் நுழைவதில்லை. மாறாக, வெறுப் பும் தோழமையும் கலந்த அதிகார மொழியையே கிறாஸ் பிரயோகிக்கிறார். அதிருப்தி தூண்டப்பட்டு எரிய விடப்படுகிறது.

கல்கத்தாவில் கடும் மழைக்குப் பின் எழுதுகிறார்: "தாழ்ந்த நிலங்களில் இருக்கும் சேரிகளை நினைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாலே எனக்கு கோபம் வருகிறது". மனச்சாட்சி உறுத்தலைச் சாந்தப்படுத்தச் செய்யப்படும் அதிசயப் தியல்வா இது? வாசகனுக்கு இது எப்படி உதவு கின்றது. சேரிவாசிக்கு எப்படி உதவுகிறது?

"எமது நுகர்ச்சி ஜனநாயகவாதிகள் எல்லாம் இரு இரவுகளை இந்தச் சேரிகளில் கழிக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு அவர்களின் நாசமாப் போன செல்வங்களில் வெறுப்பு வரும்." என்கிறார் கிராஸ். நுகர்வுச் சமூகத்தினால் சலிப்படைந்த எழுத் தாளனின் கற்பனா அனுபவிப்பு ஆசை! ஆனால், இந்தக் கற்பனை ஒரு சேரிவாசியினுடைய விருப்பங் களிடமிருந்து பல ஒளி வருடங்களால் வித்தியாசப் படுகிறது. அவன் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வாங்க பணம் சேமிக்கின்றான். தான் அடைய விரும்பும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நுகர்வுப் பொருட்களையும் அதனை அனுபவிப்பவர்களையும் அதில் பார்க்க விரும்புகின்றான்.

கிராஸ் தனக்குப் புறம்பான ஒரு உலகத்திற்குள் செல்லும் சந்தர்ப்பத்தைத் தவற விடுகிறார். வெறுப் புடன் கூடிய கோபம் அவரைத் தடுக்கின்றது. ஆறு மாதங்களுக்குப் பின் அவர் எந்த அனுபவத்தையும் பெறவில்லை. அவரில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு, அறிந்த அறியாத தோற்றங் களில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அவர் சிந்திக்க வில்லை. பாதுகாப்பற்ற நிச்சயமற்ற புதிய பரிமாணங் களுக்குள் அவர் தன்னையிழக்க விரும்பவில்லை. ஒரு விடயத்துடன் எந்தவித உறவையும் ஏற்படுத் தாமல் அதை விபரிக்க முற்படுகின்றார். அது அவர் தானறியாத ஒரு மனிதனை விபரிப்பதுபோல இருக் கிறது. இதன் காரணமாக, அவன் ஒரு பாதிக்கப் பட்டவனாக, விபரிக்கப்படாத ஒரு அமைப்பில் பிடி பட்டிருக்கும் ஒரு துணிச்சலற்ற மனிதனாக, சித்தரிக் கப்படுகிறான். அந்த அமைப்பின் விளைவுகள்தான் அழுக்கு, மலம், மற்றும் மூடநம்பிக்கைகள். ஆனால், அதற்கான காரணங்களைக் கூறாமல் விடுகிறார். பசோலினியின் வார்த்தைகளைக் கவனியுங்கள் :



GUNTER GRASS

"கருமையும் இருளும் சேர்ந்த நம்பிக்கையற்ற பட்டினிக் குவியல்கள்."

கிராசும் பசோலினியும் மேற்கைரோப்பிய இடதுசாரிகளுக்கு வெளிச்சம் கொடுப்பவர்கள். பல தசாப்தங்களாக ஜேர்மனியிலும் இத்தாலியிலும் இவர்களின் அரசியல் விவாதங்களுக்கு வழிகாட்டி களாக, பேச்சாளர்களாக இருந்தவர்கள். இதன் உச்சக் கட்டமே சென்ற வருடம் குன்ரர் கிறாஸிற்குக் கொடுக்கப்பட்ட நோபல் பரிசாகும். காலனித்துவ கோட்பாடுகளையும் நோக்கங்களையும் தாம் களைய வில்லை என்பதை இருவரும் நிச்சயம் மறுப்பார்கள். அவர்கள் உணராமல் இருந்தாலும் கூட, அவர்களு டைய ஆதிக்கம் செலுத்தும் இலக்கியம் முதலாவது உலகத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தைப் பிரதிபலித்துக் கொண்டே அதை விமர்சிக்கின்றது. முற்போக்கு நோக்கும், ஏகாதிபத்திய நோக்கும் கைகோர்த்துச் செல்லுகின்றன. ஏகாதிபத்திய அரசிய லின் பெரும் விமர்சகர்கள், ஏகாதிபத்திய பயணக் கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். ●

(நன்றி: இந்து. இதை எழுதியவர் தற்பொழுது மும்பாயில் வசிக்கும் ஜேர்மானிய நாவலாசிரியர்)

---

**சிறைக்காவலனின் கனமான காலடிகளின் கீழ்**
**சிக்குண்ட ஈரமண் அரைபடும் ஓசை**
**ஒரு பெரிய கவிதை போன்றது,**
**அதனை எப்படிக் கேட்பது என்பதைத்**
**தெரிந்துகொண்டால்.**

— ரோசா லுக்ஸம்பேர்க் —





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வந்தன சிவா

## உரையாடல்




தமிழில்:

**B. A. காதர்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



***இக் கட்டுரையாசிரியரின் கருத்துக்களில் நவீன தொழில் நுட்பங்களை முற்றாக நிராகரிக்கும் போக்கு அவ்வப்போது வெளிப்பட்டாலும், சுற்றாடலையும் மனிதகுலத்தையும் பற்றிய கரிசனை எதுவுமில்லாமல், அதிக லாப வேட்கை காரணமாக பல தேசிய நிறுவனங்கள் விஞ்ஞான தொழில்நுட்பத்தை துஷ்பிரயோகம் செய்து வருவதுபற்றி சிறப்பான முறையில் விமர்சிக்கப்படுவதுடன், இப்போக்கிற்கு எதிராக சர்வதேசரீதியில் உருவாகி பலமடைந்து வரும் மக்கள் இயக்கங்கள் அடைந்துவரும் வெற்றிகள் பற்றிய சித்திரத்தையும் தருகிறது. உலகமயமாக்கலின் மற்றொரு கோரமுகத்தைத் தரிசிக்க முடிகிறது.***

**— B. A. காதர் —**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*சுஜாதா குப்தா - டாட்டா வலு ஆய்வு நிறுவனம்:*

**தண்ணீரைப் போன்ற விவசாயத்திற்குத் தேவையான அரிதான வளங்களை நிலையிருத்தலான (SUSTAINABLE) முறையில் பயன்படுத்துவது தொடர்பான தங்கள் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன். தாங்கள் சந்தை (MARKET) முறையை முற்றாக நிராகரிப்பதாகவே, தங்கள் விரிவுரையிலிருந்து, நான் புரிந்து கொள்கிறேன்.**



*முதலில் நான் சந்தைகளை நேசிக்கிறேன் எனக்கூறி எனது பதிலை தொடங்குகிறேன். உள்ளூர் 'சப்ஜீ'களை விற்பனை செய்யக்கூடிய, ஒருவர் பெண்களோடு அளவளாவக்கூடிய, உள்ளூர் சந்தைகளை நான் நேசிக்கின்றேன். உண்மையிலேயே வேதனையான விடயம் என்னவென்றால், சந்தை என்பது வாழ்க்கைக்கான கோட்பாட்டினை நெறிப்படுத்தும் ஒரே விடயமாக மாற்றப்பட்டுவிட்டது என்பதுதான். அத்துடன் 'வோல் ஸ்ட்ரீட்' (WALL STREET) விழுமியத்தின் ஒரே மூலமாக மாறியுள்ளது. ஏனைய சந்தைகளும் விழுமியங்களும் காணாமற் போகின்றன. இவற்றையே நான் நிராகரிக்கிறேன். தண்ணீரின் உதாரணத்தை எடுத்துக் கொண்டால்கூட நீர்வளப்பேணலுக்கும், அரிதான அதனை முகாமைப்படுத்துவதற்குமான தீர்வு அதன் கடைசித் துளியைக்கூட விலை கொடுத்து வாங்கக்கூடியவர்களின் கரங்களிலே அதனை விடுவதல்ல. புதுப்பித்தல் (RENEWAL) என்ற எல்லைக்குட்பட்டவாறு நிலையிருத்தலாக அதனைப் பயன்படுத்துவதற்காக அதனை சமூகத்தின் கைகளிலே விடவேண்டும். அது சந்தைத் தளத்திற்கு அப்பால் கொண்டு வரப்பட்டு சமூகத்திடம் மீண்டும் கையளிக்கப்பட்டு பொதுமையான முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும்.*

*பேராசிரியர் மார்வா - டில்லி பல்கலைக்கழகம்:*

**நிலையிருப்பு சனத்தொகை இல்லாத இடத்தில் நிலையிருப்பு அபிவிருத்தி நிலவ முடியுமா?**



*நிலையிருப்பற்ற சனத்தொகை அதிகரிப்பு (non sustainable population growth) என்பது நிலையிருப்பற்ற அபிவிருத்தியின் அறிகுறியாகும் என்றே நான் நினைக்கிறேன். சனத்தொகை அதிகரிப்பு என்பது சுயமாக தனி இலட்சணமாக ஏற்படுவதில்லை. இத் தரவுகளைப் பாருங்கள்: 1800வரை இந்தியாவின் சனத்தொகை நிலையானதாக இருந்து வந்தது. குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமையும் நிலங்கள் இழக்கப்பட்டமையுமே சனத்தொகை அதிகரிப்பு தொடங்குவதற்கு ஏதுவாகின. இங்கிலாந்தில் விவசாயிகளை பொதுநிலத்தை விட்டு வெளியேற்றிய (enclosures) பின்னரே மிகக்கூடிய சனத்தொகை அதிகரிப்பு வீதம் காணப்பட்டது. மக்களின் வளங்கள் இழக்கப்படுவதுதான் ஜீவாதார தேடலை உருவாக்குகிறது. நிச்சயமற்ற சந்தையில் அன்றாட வேதனத்திற்காக விற்கவேண்டிய உழைப்பால் வளங்கள் பதிலீடு செய்யப்படுவதுதான் சனத்தொகை அதிகரிப்பை ஏற்படுத்துகிறது. சனத்தொகை அதிகரிப்பு என்பது நிலையிருப்பற்ற அபிவிருத்தியின் விளைவாகும்.*

*பூபிந்தர் சிங் ஹூடா, சட்டசபை உறுப்பினர் - ஹரியானா:*

**விவசாயிகள் குடும்பத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவன் நான். உலகமயமாக்கல் இல்லாத வேளையிலும் விவசாயிகள் சுரண்டலுக்கு உள்ளாகினர். உலகமயமாக்கல் நவகாலனியத்திற்கு இட்டுச் செல்லப் போகின்றது என்ற தங்களது கருத்தை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், எம்மால் உலகமயமாக்கலுக்கு வெளியே நிற்க இயலாது. உலக வர்த்தக அமையம் (WTO) ஒரு யதார்த்தமாகிவிட்டது - தாங்கள் கூறியதைப் போல எந்த ஒரு நாடும் அதிலிருந்து தப்பிவிட முடியாது.**



*WTO விதிகள் கடதாசித்தாள்மீது எழுதப்பட்டவையே தவிர, நான் எனது விரிவுரையிலே குறிப்பிட்டதைப் போல, கடவுளால் வழங்கப்பட்டவை அல்ல. எனவே, அவை இந்த மண்ணையும் கங்கைகளையும் போல மாற்றமுடியாத யதார்த்தங்கள் அல்ல. அவ்விதிகள் மாற்றப்படவேண்டியவை. 'சீட்டில்' (seattle) மாநாடு கூறும் செய்தி இதுதான். அதனை மாற்றுவதற்கான வழி யாதெனில் மக்களின் ஜீவாதாரங்களை கருத்திற் கொள்ளச் செய்வதும் வர்த்தகத்தின் ஒவ்வொரு படிநிலையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களிலும் வளங்களின் நிலையிருத்தலை கருத்திற்கொள்ளச் செய்வதுமாகும். அவ்விதிகள் நிலையிருத்தலையும் மக்கள் பாதுகாப்புடன் இருக்கும் உரிமையையும் உறுதிப்படுத்தவேண்டும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*பூபிந்தர் சிங் ஹூடா:*

**இந்தியாவில் விவசாயிகள் எதிரிடையான மானியத்தையே (negative subsidy) பெறுகிறார்கள் - (உரிய) மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதில்லை. அப்படியானால் அசமத்துவமான போட்டியாளர்கள் உலகமயமாக்கலை நோக்கிச் செல்வது எவ்வாறு?**



*உண்மையான பிரச்சினையே அதுதான். சமதையை ஏற்படுத்தும் தளம் ஒன்று எமக்கு வாய்க்கும் என்று எம்மிடம் கூறப்பட்டது. WTO விதிகள் வரையப்பட்டபோது இந்திய விவசாயிகளுக்கு நீதியான சந்தை ஒன்று எமக்குக் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. உருகுவே பேச்சுவார்த்தையின் பின்னர் GATT ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதை அந்த ஒரே ஒரு பிரதான காரணத்தை முன்வைத்தே இந்தியா நியாயப்படுத்தியது. (ஆனால்) அது தலைகீழாக மாறிவிட்டது. எம்மிடம் இப்போதிருப்பது மிகவும் அசமதையை ஏற்படுத்தும் தளமாகும். வடநாடுகள் அல்லது OECD நாடுகள் 343 பில்லியன் டொலர்களை மானியமாகக் கொடுக்கின்றன. உருகுவே பேச்சுவார்த்தை நிறைவுபெற்ற பின்னர் இம்மானியம் உண்மையில் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் இந்தியா எதிரிடையான மானியமாக 25 பில்லியனை (மாத்திரமே) வழங்குகின்றது. இங்கு ஒருவர் வடக்கு எவ்வாறு கூடுதலான மானியத்தை வழங்குகிறது என வாதமிடலாம். அவ்வாதம் வேறு திசைநோக்கி நகர்த்தப்படுதல் வேண்டும் என நான் கருதுகிறேன். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சிறு விவசாயிகளையும், மண்ணையும், நீரையும், உயிர்ப்பன்மயத்தையும் (BIODIVERSITY) நாம் எவ்வாறு பாதுகாப்பது....... முழு தவறிழைக்கத்தக்க வர்த்தக அமைச்சர்களாலும் வர்த்தக செயலாளர்களாலும் வரையப்பட்ட வர்த்தகவிதிகளை - இவ் அசமத்துவமான நிலைத்தனமானது இப் புவியையும் உற்பத்தியாளர்களையும் அழித்துவிடாமல் இருப்பதை உறுதிபடுத்தும் விதத்தில் மீள்வரைவது எவ்வாறு என்பது பற்றியே வாதிட வேண்டும்.*

*கலாநிதி சந்த்யா திவாரி, Confederation of Indian Industry:*

**கலாநிதி சிவா அவர்களே, உற்பத்தித் திறன் குறைந்த பயிர் உற்பத்தி செய்வதும், உயிர்பன்மயத்தையும் (biodiversity) உயிர்க்கரு திரள்வுகளையும் (germ plasm) பேணுவதும் உண்மையிலே விவசாயியினது பணியா? இப்பணியை நிபுணர்களிடம் விடக்கூடாதா?**



*நல்லது. பெண்விவசாயிகள் என்ற நிபுணரிடம் அப் பணியை விட்டுவிடுவது பற்றி நான் பேசினேன். இதுவரை எமக்கு உயிர்ப்பன்மயம் கிடைக்கப்பெற்றிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் உயிர்ப்பன்மய நிபுணராக பெண்கள் - பால் பிரிவுப்படி - இருக்க நேர்ந்ததுதான். சிறிய விவசாயிகளாக அவர்கள் உலகின் மிக வறிய பகுதியில் வாழ நேர்ந்ததுதான். அவர்கள் தொடர்ச்சியாக உயிர்ப்பன்மயத்தை பேணிப்பாதுகாத்து வந்ததுதான். ஏனெனில் அவர்களது நோக்கு நிலையில் அது அவர்களுக்கு உற்பத்தித்திறன் மிகுந்ததாக உள்ளது. ஒரு தனி ஏகபோக வர்த்தக நிறுவனத்திற்கு அது உற்பத்தித் திறனற்றதாக இருக்கலாம். ஏனெனில் அவற்றிற்குத் தேவையானது ஒவ்வொரு விவசாயியும் ஒரு மாநிலம் முழுவதிலும் சோளம் நடவேண்டும் அல்லது ஒவ்வொரு விவசாயியும் ஒரு மாநிலம் முழுவதிலும் கோர்னோலா (CORNOLA )வளர்க்க வேண்டும் என்பதாகும். ஆனால் அது உற்பத்தித் திறன் மிக்கது. மிகச் சிறப்பான முறையில் நிலத்தையும் நீரையும் பயன்படுத்தி குடும்பத்திற்கு உணவூட்டவும் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யக்கூடிய சிறிதளவு உபரியைப் பெறவும், உங்கள் பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பவும் போதுமானது. உண்மையில் சமுகங்களே இவ்வளங்களை எமக்காக காப்பாற்றி வைக்கின்றன. வேறு எவரது கரங்களிலும் அவை இருக்கும்போது எம்மால் அதில் நம்பிக்கை வைக்க முடியாது.*

*குல்கித் சௌத்ரி RAM ORGANICS:*

**நான் முன்னர் மன்சான்டோ (MANSANTO)வுடன் பணியாற்றினேன். ஒரு சாதாரண வினாவை உங்களிடம் நான் வினவ வேண்டும். உத்தேசமாக சமுதாய ஆளுகைக்குட்பட்ட சுற்று வட்டாரம் ஒன்றை அதன் நிலையிருப்பை உறுதி செய்யும் விதத்திலே அபிவிருத்தி செய்யும் வாய்ப்பு தங்களுக்கு வழங்கப்பட்டால், இந்தியா போன்ற நாடுகளுக்கு தாங்கள் வழங்கும் ஆலோசனை என்ன?**

*சமுகங்களை ஸ்தாபனப்படுத்துவதை உறுதி செய்வதன் மூலமும், ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள மக்களுக்கும்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தகவல் சென்றடைவதை உறுதிப்படுத்துவதன்மூலமும், கூட்டு செயற்பாட்டின் மூலம் மாத்திரமே நிலையிருப்பு செய்யக்கூடிய வளங்களை கூட்டாக முகாமைப்படுத்தக்கூடிய விதத்தில், மக்கள் பங்கேற்கும் ஜனநாயக கட்டுமானத்திற்கூடாக அத்தகைய அளவுகோலை உருவாக்கும் பணியில் கடந்த சிலவருடங்களாக நாம் ஈடுபட்டு வருகிறோம். என்னிடம் ஆழமான குழாய் கிணறு ஒன்றைத் தோண்டுவதற்கு தேவையான பணமும் அதிகாரமும் இருந்தால் எனது அயலவரின் ஆழமற்ற கிணறை வற்றச் செய்ய என்னால் இயலும் - அவள் வழமைபோல மிகவும் வறிய பெண்மணி ஒருத்தியாகத்தான் இருப்பாள். ஆகவே, ஒரு கிராமத்தின் நிலத்துக்கடியில் உள்ள நீர்வளப் பேணுகைக்கான ஒரே வழி கராஷ்இல் (HARASHஇல்) தண்ணீர்ப் பஞ்சாயத்து PAANI PANCHAYAGH செய்ததைப்போல செய்வதுதான் - நீரை வரையறைக்குட்பட்ட வகையில் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துவதே அதுவாகும். தாக்க விளைவுகளை மக்கள் உணரக்கூடிய விதத்தில் ஆளுகை முறைகள் (SYSTEMS OF GOVERNANCE) ஆரம்பிக்கப்படவேண்டும். ஆகவே பன்முகப்படுத்தப்பட்ட, நேரடியான ஜனநாயகத்தை புனர்நிர்மாணம் செய்யவேண்டிய தேவை எமக்குள்ளது. பயிரிடுவோரை தனிமைப்படுத்தப்பட்ட தனிநபர்களாக நான் கருதவில்லை. ஏனெனில் அவர்களது செயல்களின் விளைவுகள் அயலவர்களால் உணரப்படுகிறது. நான் எனது வயலில் பி.ரி. சோளத்தை பயிரிடும்போது அயலவரின் வயலில் உள்ள ராஜவண்ணத்துப் பூச்சியை நான் கொன்று விடுகிறேன். கூட்டுத்துவம் என்பது சமூகங்களின் ஒருமைப்பாடாகும். இவையே பிரதானமானவை - தனிமனித பயிரிடுவோன் அல்ல. இவையே தீர்மானம் நிறைவேற்றும் அடிமட்ட அலகுகளாகும். இவற்றிற்கே கூட்டுத்தாபனங்களும் அரசாங்கங்களும் பதிலளிக்கவேண்டும். சீட்டிலுக்குப் (SEATTLE) பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பரிசோதனை இதுவாகும். சரியான இடத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சரியான மட்டத்தில் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதை உறுதிபடுத்தக்கூடிய விதத்தில் கண்காணிப்பை வட்டாரமயப்படுத்தும் இப்பரிசோதனையானது - எமது உயிருக்கு உலகமயமாக்கல் அச்சுறுத்தல் விடுத்தபோதும் - உலகெங்குமுள்ள சமூகங்கள் ஈடுபட்டு உருவாகிக் கொண்டிருக்கும் புதுவிதமான ஜனநாயக நிறுவனமாகும்.

ஹோஸ்ட் காட்டே அதீ:

**உங்களுக்கு நன்றி. இன்னும் சில வினாடிகளில் டில்லி நேரு ஞாபகார்த்த நூலகத்திலே மேலும் வினாக்கள் கேட்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். முதலில் பீபீசீ ரீத் 2000 இணையத்திற்கு அனுப்பப்பட்ட இலத்திரன் மடல்களில் சிலவற்றை வாசிக்க விரும்புகிறேன். பங்களாதேஷைச் சேர்ந்த அலிம்கிகியா GM உணவுவிவகாரத்தில் தான் வந்தனா சிவா, வேல்ஸ் இளவரசர் இருவரையும் ஆதரிப்பதாகக் கூறுகிறார். கடவுளுக்கு நன்றி. அவர் கூறுகிறார் பிரித்தானிய மக்கள் தங்கள் குரலை ஒலிக்கச் செய்துள்ளனர். ஆதலால் பிரதமர் ரொனி பிளையர் அதனைக் கேட்டாக வேண்டும் என்று. யொங் என கையொப்பமிட்டுள்ள மலேசியாவைச் சேர்ந்த ஈடுபாட்டாளர் ஒருவர் தனது சொந்த நாட்டின் தலைவர்களைச் சாடுகிறார். அவர் கூறுகிறார்: அவர்கள் ஒரு புறத்தில் உலகமயமாக்கலை கண்டனம் செய்கிறார்கள். மறுபுறத்தில் அவர்கள் அணைகள் கட்டுவதற்கும் ஏனைய சுற்றாடலை பாதிக்கும் நடவடிக்கைகளுக்கும் அங்கீகாரம் வழங்குகிறார்கள் என்று. நேபாளத்திலிருந்து கிறிஸ் வைட் ஹவுஸ் தனது இ-மடலில், கூடுதலான பாதைகளும், கூடுதலான குளிரூட்டிப் பெட்டிகளும் அதிகமான நீர்மீது பேராசை கொண்ட நீரடிக்கும் மலசலகூடங்களும் வளர்முக நாடுகளில் உள்ள மக்களை மேலும் மகிழ்விக்குமா என வினவுகிறார். ஒவ்வொரு சமுதாயமும் அபிவிருத்தி தொடர்பான சுயமான பார்வையை(VISION) தானே தீர்மானிக்க வேண்டும் என்கிறார் அவர். பிரித்தானியாவைச் சேர்ந்த செப்பில்ஸ் என்பவர் மாமிசத்தை உண்பதிலே பல விடயங்கள் பதிலளிக்கப்படவேண்டியுள்ளன - பயிரிடப்படும் அனைத்தினதும் 70% எமக்கு உணவூட்டுவதற்காக கொல்லப்படும் விலங்குகளுக்கு உணவூட்டுவதற்காகவே பயன்படுகின்றன. நிலத்தில் பயிரிடப்படும் உணவை நேரடியாக மக்களுக்காக பயன்படுத்துவதன்மூலம் அனைவருக்கும் எளிதாக உணவூட்ட முடியும். முற்றிலும் குரூரத்தனத்திலிருந்து விடுபட்ட, நிலைஇருத்தலைப் பேணும், மரக்கறி மாத்திரம் உண்போனாக இருப்பது இலகுவான விடயம், எமக்கு வேறென்ன வேண்டும் என்கிறார். இறுதியாக, அந்தனி கிட்டன்ஸ் கூறுகிறார் கடந்த வருட 'ரீத்' விரிவுரையில் இருந்து இது தொடர்கிறது. "வந்தனா உங்களது சவால்கள் மிகுந்த விரிவுரைக்காக உங்களைப்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பாராட்டுகிறேன். பெரும்பாலான கருத்துகளோடு நான் இணக்கம் காணாதபோதும் கூட" என்று. அவர் மேலும் "உலகமயமான ஊடகங்களை உலகமயமாக்கலுக்கு எதிராக பயன்படுத்துவது முரணான விடயமல்லவா?" என வினவுகிறார்.**



*பீபீசீ (BBC)யை WTO எமக்களித்த பொருளாதார உலகமயமாக்கல் கும்பலின் படைப்பு என்றோ புதிய, அண்மைக்கால வர்த்தக தாராளமயமாக்கல் தந்த ஒன்று என்றோ நான் கருதவில்லை. அது 1922இல் உருவாக்கப்பட்டது என நான் நினைக்கிறேன். சர்வதேச ஒருமுகப்பாடும் (INTEGRATION) சர்வதேச தொலைத் தொடர்புமல்ல பொருளாதார உலகமயமாக்கல் எனப்படுவது. கூட்டுநிறுவனங்களின் செறிவும் (CORPORATE CONCENTRA-TION) கூட்டுநிறுவனங்களின் கட்டுப்பாடுமே அண்மைக்கால பொருளாதார உலகமயமாக்கல் என்பதாகும். உண்மையில் BBC அதற்கு நேர்மாறான உதாரணமாகும். ஏனெனில், உலகமயமாக்கப்பட்ட ஊடகத்திற்கு சரியான உதாரணம் 'டைம் வார்னர்' (TIME WARNER) ஆகும். இப்போது அது அமெரிக்கன் ஒன் லைன், டிஸ்னி, நியூஸ் கார்ப்பரேசன் ஆகியவற்றால் விலைக்கு வாங்கப்படுள்ளது.*

*பேராசிரியர் வினோத் சௌத்ரி, பொருளாதாரம், சென். ஸ்டீபன் கல்லூரி:*

**வந்தனாஜி மிகவும் அசாதாரணமான விதத்தில் ஒரு பக்க சார்பு கண்ணோட்டத்தைக் கொண்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது. அவரது உயிரோட்டமிக்க ஒரு தலை விரிவுரைக்கு உரிய மரியாதையுடன் இதைக் கூறுகின்றேன். வந்தனாஜி இரு எதிரெதிரான முறைகள் (PARADIGMS) இருப்பதாக நம்புகிறார் எனத் தோன்றுகிறது. ஒன்று, அதிகாரப் பரவலாக்கம், ஜனநாயகமயப்படுத்தல் ஆகியவற்றை சாராம்சத்தில் அடிப்படையாகக் கொண்ட ஒரு முறை- அதில் வாழ்க்கையில் உள்ள சகல நல்லவையும் இருக்கும், பெண்கள் நன்கு கவனிக்கப்படுவர், வறியவர்கள் கவனிக்கப்படுவர், இது, அது, எல்லாம் அதில் இருக்கின்றது. மற்றது பயங்கரமாகத் தீங்குடையது. அதில் எல்லாமே தவறானது. ஆனால் வந்தனாஜி, நிச்சயமாக வாழ்க்கை அவ்வாறிருக்க முடியாது. உங்களை மூன்றாவதான ஒரு முறையைப்பற்றியும் தயவுசெய்து பரிசீலனை செய்யுமாறு வேண்டுகிறேன். அங்குமிங்குமாக துண்டுகளையும் துணிக்கைளையும் பொறுக்கி கதம்பமான (ECLETIC) நடைமுறை அணுகுமுறை ஒன்றினைப் பெறுவோம். நான் ஹரியானா காங்கிரஸ் தலைவர் பூபிந்தர்சிங் ஹூடாவை ஆதரிக்கிறேன். எந்த நாடுமே WTOவை விட்டு வெளியேற முடியாத நிலைமையில் வேறு மாற்று வழி என்ன என அவர் வினாவினார். நீங்கள் அதற்கு பதிலளிக்கவில்லை. அது ஒரு கடதாசித்துண்டு அல்ல பெண்மணி. அது நாடுகள் ஆற்றவேண்டிய கடப்பாடுகள் (COMMITMENT) அல்லது அவை இழிநிலை நாடுகளாகி விடும். இழிநிலை நாடாக நாம் மாறுவதை தாங்குதிறன் எம்மிடமில்லை. தயவுசெய்து பதிலடி தாருங்கள்.**



*அவருக்கு பதிலடி கொடுத்து விட்டேன். அவ்விதிகளை மீள்வரைவதுபற்றி - ஒருதலைப்பட்சமான அவ்விதிகளை மீள்வரைவதுபற்றி - நான் கூறினேன். உண்மையில் WTO விதிகளே முழுமையாக ஒருதலைப்பட்சமானவை. ஏனெனில் அவை உண்மையிலே சர்வதேச சமூகத்தின் ஒரு துறையை (SECTOR) - அதாவது சர்வதேச கூட்டுத்தாபனங்களையே - பாதுகாக்கின்றன. உள்ளூர் கைத்தொழில்களை அல்ல, உள்ளூர் சில்லறை வியாபாரத்தைக்கூட அல்ல. எங்குமுள்ள சிறுவிவசாயிகளையும் அல்ல. வடக்கிலும் அல்ல. தெற்கிலும் அல்ல. அவ்விதிகள் மீள்வரையப்பட இயலும். அந்த விடயத்தைத்தான் இங்கு முன்வைக்க முயலுகிறேன். வர்த்தகத்தை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பான கடைசி வார்த்தைதான் உருகுவே சுற்று ஒப்பந்தத்தின் WTO விதிகள் எனக் கருதிவிடாதீர்கள். அவ்விதிகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. சீட்டில் (SEATTLE) மாநாட்டில் நாம் கோரியது, மேலும் கூடுதலான ஜனநாயகத்தை உள்வாங்கியதாக நிலையிருத்தலும் நீதியும் கொண்ட விதிகளை விவசாயத்திற்காகவும், அறிவுடைமை உரிமைபற்றியும் (INTELLECTUAL PROPERTY RIGHTS) சேவைகள் துறையிலும் முதலீட்டுத் துறையிலும் உருவாக்க வேண்டும் என்பதைத்தான். இவ்வாறு நான்கு புதிய துறைகள் உள்ளே கொண்டு வரப்பட்டன. முன்பெல்லாம் GATTஉடன் எவருக்கும் பிரச்சினை இருக்கவில்லை. பழைய GATT தேசிய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட அசல் உற்பத்திப் பொருட்கள்மீது அசல் வர்த்தகத்தை மேற்கொள்வது பற்றியது. உருகுவே சுற்றின் முடிவில் உருவான புதிய GATT எமது*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றாட வாழ்வின் சகல அம்சங்களையும் முற்றுகையிடுவது பற்றியது. நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால் உங்களுக்கென மாறுபட்ட கருத்து இங்கு இருக்கிறது. அதனால்தான் நாம் பால் (GENDER) பற்றி பேசுகிறோம். நீங்கள் ஒரு ஏழையாக இருந்தால் உங்களுக்கென, வசதி படைத்தோரில், மாறுபட்ட கருத்து இருக்கிறது. சமுதாயத்தில் வகிக்கும் இடத்தின் வேறுபாடு காரணமாக வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவது ஒரு பிரச்சனை அல்ல. ஆயினும் வசதி படைத்தவர்களின் நோக்குநிலையில் சில கூறுகளையும், வறியவர்களின் நோக்குநிலையில் சில கூறுகளையும் எடுத்து சந்தர்ப்பவாத வார்த்தைஜால வாசகங்களுக்குள் இடுவது சந்தர்ப்பவாதமாகும். கூட்டுத்துவ கோட்பாடுகளினாலும் COHERENT PRINCIPLES, ஸ்தாபன முறைகளாலும் ORGANISATIONAL SYSTEMS, விழுமியங்களாலும், உலக கண்ணோட்டத்தினாலுமே சமுகங்கள் உயிர் வாழ்கின்றன. நாம் கோருவதெல்லாம் வாணிபத்தால் மட்டுமே நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற ஒருதலைப்பட்சமான எண்ணத்தை சமநிலைப்படுத்தவேண்டும் என்பதைத்தான்.

ரொவிந்தர் ராக்கி, மாணவன்:

**தாங்கள் மரபுரீதியான விவசாயத்தையும் சமுதாயங்களையும் உற்பத்திமுறையையும் அவற்றின் திறனையும் சிறப்பையும் துதிபாடுவதாகத் தோன்றுகின்றது. ஆனால் யதார்த்தம் என்னவென்றால் விவசாயிகள் இச்சமுதாயத்திலும் காசு கடன் கொடுப்போரினாலும் நில பிரபுக்களாலும் சுரண்டப்பட்டனர். சந்தைகள் இச் சமுதாயங்களை சென்றடையத் தொடங்கியதும் சுரண்டல் சமுதாயமுறை நிச்சயமாக வலுவிழந்தது. இப்போது நான் தங்களிடம் என்ன வினவுகிறேன் என்றால் சந்தையில் உள்ள இந்த ஆரோக்கியமான தாக்கத்தை அங்கீகரிக்க விடாமல் தங்களை எது தடுக்கின்றது?**



நல்லது. சந்தையின் இந்த ஆரோக்கியமான தாக்கமானது இறுதியாக மக்களை கிருமிகளைப்போல நடத்துவதில்தான் முடிவடைகிறது. அவர்களைத் துடைத்தெறிகிறது. எனது விரிவுரையினை தவிர்க்கக்கூடியது (DISPENSABILITY) என்ற கருத்தையும் சிறியவை மறைந்து போவதையும் பற்றியே, கவனத்தை ஈர்க்க முயன்றேன். சுரண்டல் எப்பொழுதும் இருந்து வந்துள்ளதுதான். நான் திரு. ஹூடாவுடன் இவ்விடயத்தில் ஒத்துப்போகிறேன். ஆனால் தற்போதைய காலகட்டத்தின் உலகமயமாக்கலுக்கு முன்னர் இருந்த எந்த சுரண்டலும் ஒருபோதும் சுரண்டப்படுவோரை ஒட்டுமொத்தமாக இல்லாதொழிக்கும் அளவுக்கு தம்மைத்தாமே ஒழுங்கமைத்துக்கொண்டதில்லை. அடிமைமுறையில்கூட அடிமைகள் தேவைப்பட்டார்கள். வங்காளத்தில் பஞ்சத்தை ஏற்படுத்தி, சுரண்டலுக்கு எதிராக 'பேபி ஹகா' FAYBE HAGA இயக்கத்தை தோற்றுவித்த அந்த மிக மோசமான பிரித்தானிய ஆட்சியில் கூட விவசாயிகளை உயிருடன் வாழவைக்க வேண்டி இருந்தது. முதற் தடவையாக எவருக்கும் விவசாயிகள் தேவைப்படாத ஒரு அமைப்புமுறையை SYSTEM நாம் (இப்போது) கொண்டிருக்கிறோம் - சமுதாயம் என்ற ரீதியில் நாம் அவர்கள் தேவையென கருதினால் தவிர. உண்மையிலே இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் மனிதர்கள் சிறு உற்பத்தியாளர்களை அப்புறப்படுத்தி விடலாம் என்பதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். உண்மையான வளர்ச்சியும் சுபீட்சமும் வெற்று விண்வெளியிலிருந்து வரப்போகிறது என்பதைப்போல வாதங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதைப்போல, ராஜஸ்தானிலும் குஜராத்திலும் இன்றுபோல செத்து மடியும் மக்களின் பிரேதங்களின்மீதுதான் செய்தி தகவல் (IT) தொழில் நுட்பம் மிதந்து கொண்டிருக்கிறது. - அவை அவர்களை மீட்கப் போவதில்லை. நாம் உயிர் வாழ்வதற்கும் அனைவரது தேவைக்குமான புவிபடலத்தின்மீது நாம் கவனம் செலுத்தியாக வேண்டும். அதி வல்லமை வாய்ந்த கூட்டுத் தாபனங்களுக்கும் அதி வல்லமை மிக்க தனி நபர்களுக்கும் இம் மண்டலத்தில் கௌரவத்துடன் வாழ்வதற்குமுள்ள அதே உரிமை மிகச் சிறிய மக்கள் சமூகத்திற்கும் மிகச் சிறிய உயிரினத்திற்கும் (species) இருத்தல் வேண்டும் என தனிப்பட்டமுறையில் உணர்வுபூர்வமாக நான் நம்புகிறேன்.

அனுராங் ஜேக்கப்:

**சுதேச சமூகங்களின் அறிவை குப்பையானது என்று நான் கூறவில்லை. ஆனால் ஒரு விவசாயி தனது பாரம்பரிய விதைகளுக்குப் பதிலாக தாங்கள் வெண்தங்கமென்று கூறும் அதனைப் பயன்படுத்தும் வாய்ப்பு தனக்குக் கிடைக்கும்போது அவன் அந்த வெண்தங்கத்தையே தேர்ந்தெடுக்கிறான். ஏனெனில் தனது சுதேச விதைகளை செயற்கை பரம்பரை அலகு திரிபு செய்யப்பட்ட GM உணவுடன் வைத்து மதிப்பீடு செய்ய அவனுக்குத் தெரியாது. ஆகவே, தாம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**என்ன செய்ய வேண்டும் என்பதை மதிப்பீடு செய்யக்கூடிய விதத்தில் நாம் அவர்களுக்கு கல்வியூட்ட வேண்டுமென தாங்கள் சிந்திக்கவில்லையா?**



*உண்மையிலே, மொன்சான்டோ(MONSANTO)வில் பணி புரியும் அந்த நபருக்கு பதிலளிக்கும்போது இதனை நான் சுட்டிக் காட்டினேன். அதாவது கல்வியையும் முழுமையான பொது விழிப்புணர்வையும் பெறுவது ஜனநாயகத்தின் ஒரு அங்கம். தொழில் நுட்பங்கள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதிலே தங்களோடு நான் இணங்குகிறேன். அதனாற்றான் கடந்த 13 வருடங்களாக பரம்பரையலகு பொறியியலை மதிப்பீடு செய்யும் முறைமை ஒன்றினை உருவாக்குவதற்கும் பல்லின உயிர்ப் பிரிகை ஒப்பந்தத்தின் கீழ் பல்லின உயிர்ப்பாதுகாப்பு ஒப்பந்தத்தை கொண்டு வருவதற்கும் நாம் முயற்சிகளை மேற்கொண்டு வந்தோம். இறுதியாக ஒரு தசாப்த முறியடிப்பு முயற்சிகளின் பின்னர் இப்போது அவை இடம் பெற்றுள்ளன. மொன்றியலில் MONTREAL ஜனவரி மாதம் இது நிறைவு பெற்றது. உண்மையான பங்கேற்புக்கான (PARTICIPATE) செயல்முறைகள் (PROCESSES) இருக்கக்கூடியதாக, தொழில்நுட்பங்கள் என்றால் என்ன என்பது பற்றிய அறிவைக்கொண்டிருக்கும் அடிப்படையிலேயே சம்பந்தப்பட்டவர்கள் தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். உச்ச நீதிமன்றில் நடைபெற்ற மொன்சான்டோ MONSANTO வழக்கு விசாரணையின்போது எமது வேண்டுகோளின் அடிப்படையாக இதுவே இருந்தது. அதாவது எமக்கு கூடுதலான அறிவு பரிமாற்றம் தேவை. கூடுதலான பங்குபற்றல் தேவை. கூடுதலான கண்காணிப்புத் தேவை. இறுதியாக, அதன் தாக்க விளைவுகளை மதிப்பீடு செய்யும் எமது ஆற்றல் தயாராகு முன்னமே உற்பத்தி தொழில் நுட்பம் தயாராகிவிடும் நிலைமைகள் காணப்படுகின்றன. அதன் விளைவாகத்தான் எம்மிடம் இன்று முன்னெச்சரிக்கை கோட்பாடு (PRECAUTIONARY PRINCIPLE) உள்ளது. தொழில்நுட்பங்களை ஈடுபடுத்துவதற்கு முன்னதாக அவற்றினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் பற்றி அறிந்து கொள்ளுங்கள். ஏனெனில் நாம் DTTயை உருவாக்கினோம் - நோபல் பரிசு கொடுத்தோம். இப்போது அதனை வாபஸ் பெற முனைகிறோம். நாம் உயிர்சுவடு எரிபொருளை உருவாக்கினோம். இப்போது காலநிலை மாற்றமுறுகிறது என கவலைப்படுகிறோம். GM பயிர்களைப் பொறுத்தளவில் அவற்றை நீங்கள் ஈடுபடுத்த முடியாது. ஏனெனில் அவற்றை வாபஸ் பெற முடியாது. எது எப்படியானாலும் காலநிலைமாற்றப் போக்கு உயிருக்கு அச்சுறுத்தலாக ஆகிக் கொண்டிருக்கிறது. அதனால் இறுதியானதும் முடிவானதுமான எதிர்விளைவுகளை திட்டவட்டமாக எதிர்வு கூறமுடியாத யதார்த்தத்தை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். ஆகவே, பாரிய அளவிலான தொழில் நுட்பங்கள் இப் பூகோளத்திற்கு பேரழிவை கொண்டு வரக்கூடும் என்பதால் தொடர் மதிப்பீடுகளின் அடிப்படையில் (COMPLEX ASSESSEMENT) அவற்றை ஈடுபடுத்த முன்னர் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருங்கள்.*

ருக்மினி பாயா நாயுர் – பேராசிரியர் இன்டியன் இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னோலஜி:

**சிலர் எனது நிறுவனம் பிரத்தியேகமாக, தாங்கள் கூறிய, டொட் கொம் (DOT.COM) பாதை வழியாக வெற்றியீட்ட எத்தனிப்பதாக வாதிடுகின்றனர். தாங்கள் மிகவும் வலியுறுத்திய பல்லின உயிர்ப்பிரிகை பற்றி செவிமடுத்தபோது எனக்கு என்ன தோன்றியதென்றால் எமது கலாச்சாரத்தில் மீள்சுழற்சி செய்யக்கூடிய, மீள்பயன்பாட்டிற்குரிய நிழல் இரட்டை (SHADOW TWIN) கண்காணாமல் இருந்தது என்பதாகும். இந்தியா மாபெரும் மீள்சுழற்சி கலாச்சாரம் எனப்படுகிறது. நாம் அனைத்தையும் மீள்சுழற்சி (RECYCLE) செய்கிறோம் - ஆன்மா உட்பட. இந்த நிழல் இரட்டை மீள்சுழற்சியிடம், இந்த முழு பிரபஞ்சத்திலுமுள்ள அனைத்து பொருட்களும் உண்மையில் மீள்பயன்பாட்டிற்குரியது (REUSABLE) எனவே தொழில்நுட்பம் என்ற வகையில் உலகிற்கு வழங்க எம்மிடம் ஏதோ உள்ளது என்ற கருத்திற்கு, ஏதாவது பங்களிப்பதற்கு கிடையாதா எனத் தங்களிடம் வினவ விரும்புகிறேன்.**



*மீள்சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு உருவான ஒரு நாகரிகத்தை கொண்டவர்கள் நாம். அதனாற்றான் இன்று பிளாஸ்டிக் எமக்கு சுமையாகிவிட்ட வேளையில், சட்டத்தினால் பிளாஸ்டிக் பொதி பண்ணுதல் கட்டாயத் தேவையாக்கப்பட்டிருக்கிறது. மக்கள் சிறு வாழை இலையைப் போலவே பிளாஸ்டிக் உறைகளும் அழிந்துவிடுமென நினைக்கிறார்கள். பசுமாடுகள்கூட பிளாஸ்டிக்கை வாழைஇலையைப்போல சாப்பிடக்கூடிய ஒன்று என கருத தலைப்பட்டுள்ளன. சில தயாரிப்புகள் மீள்சுழற்சியாவதில்லை. அதுவே நெருக்கடியின் ஒரு பகுதியாகும். விரைவாக துய்த்துணரும் வழிமுறைகள் மூலம் மென்மையானதாக எமது சுற்றாடல் பாதச்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவடுகளை இப்புவிமீது பதிக்கும் கலாச்சாரம் என்ற முறையில் கடந்த வருடம் கனடாவிலிருந்து ஒரு விஞ்ஞானி சுற்றாடல் பாதச்சுவடு (ECOLOGICAL FOOTPRINT) பற்றிய தனது தரவுகளை எனக்கு அனுப்பியிருந்தார். வளங்களின் பயன்பாடு, உற்பத்தியையும் கழிவுகளையும் உள்வாங்கும் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில், அவரது தரவுகளின்படி மூன்று நாடுகள் மாத்திரமே உபரியான மூலவளங்களைக் கொண்டிருந்தன. அவை: கனடா, சுவீடன் - அச்சமயத்தில் இந்தியா. அது இந்தியா பிளாஸ்டிக்கிற்கான ஓட்டப் போட்டியில் ஈடுபட முன்னர், தன்னைத்தானே உலகமயமாக்கல் செய்ய முன்னர். இன்று எமக்குத் தேவை நாம் மிகவும் நேர்த்தியான முறையில் எம்மால் பரிணமிக்கப்பட்ட அந்த முறைமை (SYSTEMS) களுடன் பொருந்துவதாக அவற்றை ஆக்குவதும் வேதனப் பொருளை மீள்சுழற்சி செய்வதன்மூலம் இரசாயன பண்ட ஆலைகளை அப்புறப்படுத்துவதும் ஆகும். ஏனெனில் இரசாயனப் பொருட்களை மீள்சுழற்சி செய்ய இயலாது. அவை வெறுமனே பல்லின உயிர் திரள்வை ஏற்படுத்துகின்றன.

*P.D. கைரா, டில்லி:*

**பல்லின உயிர்ப்பிரிகையும் அது போன்ற முறைமைகளும் உற்பத்திக்கு உதவுகின்றன என்பதை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை நான் அதைவிட அக்கறை கொள்ளும் விடயம் யாதெனில் இன்றைய விவசாயி உற்சாகம் குன்றியும் நம்பிக்கையிழந்தும் காணப்படுகிறான். முழுமையாக தனது வாழ்க்கைமுறைமீது அக்கறை இழந்தவனாக ஆகிவருகிறான். இதற்கான காரணத்தை பல்லின உயிர்ப்பிரிகையில் மாத்திரம் விளக்க இயலாமல் போகலாம்.**



எங்கெல்லாம் ஒற்றைப் பயிர் முன்னுக்கு வந்துவிட்டதோ, எங்கெல்லாம் புற உள்ளீடுகளும் இரசாயனப் பொருட்களும் விவசாயிகளை அவ்விலையுயர்ந்த, உதவாக்கரை உள்ளீடுகளை வாங்குவதற்கு தம்வசமுள்ள சிறிதளவு வருமானத்தைக்கூட செலவிடுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் விவசாயிகள் இரு காரணங்களினால் நம்பிக்கையிழந்து காணப்படுகின்றனர். (ஒன்று) நான் எதைப்பற்றிப் பேசினேனோ அந்த எதிர்விளைவு பொருளாதாரம் காரணமாகவும் (மற்றது) அதேபோல இயந்திர கைத்தொழில் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து தொழில்நுட்பங்களும் கவனயீனமான தொழில்நுட்பங்கள் என்பதாலும். அவை கவனத்திற்குப் பதிலாக கவனயீனத்தை பிரதியீடு செய்கின்ற தொழில்நுட்பங்கள். நீங்கள் யூரியா தெளித்தால் போதும் தாவர பசளை செய்யத் தேவையில்லை. உரியநேரத்தில் நீங்கள் களை பறிக்கத் தேவையில்லை. சில சின்னஞ்சிறிய களைகள் முளைக்கும்போது களைக்கொல்லி தெளியுங்கள். கவனயீனமான அந்த தொழில்நுட்பமானது படிப்படியாக நம்பிக்கையீனமான மக்களை உருவாக்குகின்றது. ஏனெனில் அவர்களுக்கு எந்த அர்த்தமும் கிடையாது. எந்த பாத்திரமும் கிடையாது. 'நவ்தான்யா' (NAVDANYA) என்றழைக்கப்படும் எமது இயக்கத்தினூடாக நாம் வேலைசெய்யும் பகுதிகளில் பல்லின உயிர்ப்பிரிகையை பேணிப் பாதுகாக்கிறோம். இப்போது ஏழு மாநிலங்களில் விதை-வங்கிகள் வைத்திருக்கிறோம். 11 சமூக விதை வங்கிகள் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன. எல்லா இடங்களிலும் சொற்ப காலத்தின் பின்னர் புற உள்ளீடுகளுக்கு (EXTERNAL INPUTS) பதிலாக அக உள்ளீடுகளை (INTERNAL INPUTS) மாற்றீடு செய்து உணவை வேதனரீதியாக (ORGANICALLY) உற்பத்தி செய்கிறார்கள். இங்கெல்லாம் தமது கடன்சுமையிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். செலவினங்களை குறைத்ததன் மூலமாக மாத்திரம் இவர்களது வருவாய் மும்மடங்காக அதிகரித்துள்ளதால் உத்வேகம் அடைந்துள்ளனர். அவர்கள் முற்றிலும் புதிய திடசங்கற்பத்தின் விளிம்பிலே நிற்கிறார்கள். உங்களில் சிலரை அப் பகுதிகளுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றேன். ●

**நான் ஒரு தெருச் சண்டையில் என் முகாமிலோ கடின உழைப்புச் சிறையிலோ இறந்து போவேன் என நம்புகிறேன்.** (1918இல் சிறைக்கைதியாக)

— ரோசா லுக்ஸம்பேர்க்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஸ்டாலினிசம்

## 1948-1954

**“ஸ்டாலினை வரலாற்றுப் போக்குகள், அதிகார அமைப்பின் இயக்கத்துள் வைத்து புரிந்து கொள்ளவேண்டுமே தவிர, தனித்தனிச் சம்பவங்களைப் பிரித்தெடுத்து நோக்குவதும் அதனடிப்படையில் விளக்குவதும் மார்க்சியமல்ல.”**

**தமிழரசன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

ஸ்டாலினிசம் என்பது சிலர் கருதுவதுபோல் ஸ்டாலின் ஆதரவாளர்களை கோபமூட்டும் ஸ்டாலினைப் பழிக்கும் அரசியலற்ற வெறும் புனைந்துரையல்ல. மாறாக, அது ஒரு அரசியல் அதிகாரத்துவப் போக்கை குறிப்பதாகும். சமூகவிஞ்ஞான சொற்களை, அரசியல் நிகழ்வுப் போக்கை சுட்டும் சொற்களை மார்க்சியவாதிகள் எழுந்தமானத்தில் அவசரப்பட்டு காரணகாரியம் இன்றிப் பயன்படுத்துவது இல்லை. உண்மையில் அவை வரலாற்றின் விளைபொருளாக மனிதப் படிப்பினைகளின் தொகுதியாக எழுகின்றன. ஸ்டாலினிச அதிகாரம் ஜார் ஆட்சியிலிருந்து சீதனமாய் பெறப்பட்ட பின்தங்கிய பொருளாதார நிலை, அதிகார இயந்திரம், சர்வாதிகார கருத்தியல் தொடர்ச்சி இவைகளில் இருந்தே தொடங்கியது. சக்தி வாய்ந்த முதலாளியம் வளர்ந்திராத நிலை சோசலிசப் புரட்சிக்கு முன்நிபந்தனையான அரசியல், பொருளாதார அடிப்படைகளும் ஜனநாயக உணர்வுகளும் மனிதச் சிந்தனைப் பரப்புக்களும் விரிவடைந்திராத மூர்க்கத்தனமான விவசாய சமூகக்குணங்களில் தான் ஸ்டாலினிசம் உதித்தெழுந்தது. ஜனநாயகப் புரட்சியைக் கண்டறியாத தேசமாய் ரஷ்யா இருந்தது. முதலாமுலக யுத்த அழிவுகள் ஒருபுறமும் ஏகாதிபத்தியங்கள் தொடுத்த அரசியல் பொருளாதார நெருக்கடிகள் மறுபுறமுமாய் சோவியத்தின் புரட்சி சுற்றிவளைக்கப்பட்டபோது ஸ்டாலினிசமானது வீங்கி விகாரமடைந்த தத்துவப் போக்காய் அதிகாரத்துவ அமைப்பாய் வன்முறையையும் பயங்கரவாதத்தையும் துணையாகக் கொண்டு எழுந்தது. இந்த அதிகார அமைப்பை தலைமை தாங்கிய மனிதர் என்ற முறையில் ஸ்டாலினது தனிப்பட்ட இயல்புகளான தத்துவார்த்த பலவீனம், பழிவாங்கும் மனித இரக்கமற்ற அநாகரீக அரசியல் கலாச்சாரம் பெரும்பங்கைக் கொண்டு இருந்தது. புரட்சியை சூழவுள்ள நிலைகளை எதிரிடும் தத்துவப் பலமும் மனிதக் குணங்களும் ஸ்டாலினிடம் இருக்கவில்லை என்பதோடு புரட்சியை உருக்குலைக்கும் நடைமுறைகளும் தொடர்ந்து வளர்ந்தன.

ஸ்டாலின் தீய மனிதர், சதி நிறைந்த அரசியலாளர், தன் சொந்த தோழர்களையே இரக்கமின்றி கொன்றொழித்தவர் என்பதல்ல பிரச்சினை. இதை ஸ்டாலினிச அதிகாரத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் உயிர்வாழ்வுக்கான மூர்க்கமான போராட்டம் இவைகளின் தொடர்ச்சியாகவே காணவேண்டும். ஸ்டாலினிசத்தினது பயங்கரவாதமும் தத்துவமற்ற தன்னிச்சைப் போக்கும் அதிகார இயக்கத்தின் அங்கமே, அதன் தவிர்க்க முடியாத இயல்பே. சில ஸ்டாலினிசப் பிறவிகள் ஸ்டாலின் மக்களைச் சார்ந்து நிற்கவில்லை, மேல் இருந்து அதிகாரம் செலுத்தினார், தத்துவத் தவறுகள் இழைத்தார் என்று கூறி அவருக்கு தத்துவார்த்த அபயம் அளிக்க விரும்புகின்றார்கள். ஸ்டாலின் என்ற தனிமனிதரின் குணாதிசயங்களோடு அது அதிகாரத்துவ அமைப்பின் வீச்சுகள் எவ்வாறு ஒத்து இயங்கியது, சங்கமாகியது என்பதே கவனத்துக்குரியதாகும். ஸ்டாலினை வரலாற்றுப் போக்குகள் அதிகார அமைப்பின் இயக்கத்துள் வைத்தே புரிந்து கொள்ள வேண்டுமே தவிர தனித்தனிச் சம்பவங்களைப் பிரித்தெடுத்து நோக்குவதும் அதனடிப்படையில் விளக்குவதும் மார்க்சியமல்ல. புரட்சியை முன்னரே மதிப்பிட்டு, புரட்சி நாட்களில் தொடர்ந்து அதன் ஒவ்வொரு இயக்கத்திலும் தத்துவரீதியில் தலையிட்டு புரட்சியின் போக்கை கண்காணித்து எச்சரித்து பிறழ்வுகளில் இருந்து விடுபடப் போராடும் அரசியல் பண்பாடுகள் எதுவும் ஸ்டாலினிச அதிகார இயக்கத்துக்கு அந்நியமானதாகும். எனவேதான் ஸ்டாலினிசம் இத்தகைய போக்குகளை விமர்சனத்தை துடைத்தழித்தது. சுய விமர்சனப் பண்பை கண்டறியாமல் போனது.

இன்று ஸ்டாலினிசம் என்ற பதம் இலங்கை, இந்தியச் சூழல்களில் ரொட்ஸ்கியவாதக் குற்றச்சாட்டாய் மட்டுமே குறுகிப்போய் நிற்கிறது. போதிய முதலாளியம் வளர்ந்திராத ஜனநாயகம், மனித உணர்வுகள் பற்றிய போதிய விழிப்புணர்ச்சியற்ற சூழலில் வாழும் பெரும்பாலான கீழைத்தேச ஸ்டாலினிச அமைப்புகள் தாம் வாழும் சமூகத்தின் நிலைக்கேற்ப விவசாய சமூகக் குணாம்சங்களின் முரட்டுத்தனத்தோடு ஸ்டாலினிசத்தை அரவணைத்துக் கொள்கின்றன. மேற்குநாடுகளின் ஒரு பகுதி இடதுசாரி அமைப்புகள் அதன் ஆரம்பத்திலேயே ஸ்டாலினிச அதிகார இயக்கத்தை அடையாளம் கண்டு கொண்டன. மார்க்சியத்தையும் ஸ்டாலினிசத்தையும் பிரித்துப் பார்க்கும் அரசியலைக் கொண்டுள்ளன. இன்னும் ஒரு பிரிவு ஸ்டாலினிசத்தை மரபான மார்க்சியம் என்று விளக்க முயல்கிறது. மாற்றாக நவமார்க்சியத்தை முன் வைக்கிறது. இந்த நவமார்க்சியமானது ஸ்டாலினிச நடைமுறைகளை அவை மார்க்சியத்தின் போதாமையால் விளைந்தவை என்று விளக்க முயன்றது. கீழைத்தேச நாடுகளில் ஸ்டாலினிச இயக்கங்கள் பெரும்பாலும் காலம் கடந்த, கிழடு தட்டிய ஸ்டாலினிச வாய்ப்பாடுகளையே தொடர்ந்து ஓதி வருவதோடு இன்றைய சமூக நிகழ்வு கட்கும் பொருத்த முயல்கின்றனர். நடப்பானது உயிருள்ள மார்க்சிய சமூக இயக்கவியலால் தம்மை பரிசோதிக்கும்படி அழைப்பதை இவர்கள் உணர்வதில்லை. இவர்கள் ஸ்டாலினிசத்துக்கு புறம்பான மார்க்சிய மதிப்பீடுகளை அதிகாரத் திமிரோடு குற்றத்தன்மை வாய்ந்ததாய்க் கருதி எதிர்ப்பதோடு பரந்த வாதிடலுக்கான தளத்தை நிராகரித்து நிற்கின்றனர். மறுபுறம் மேற்கில் ஸ்டாலினிசத்துக்கு மாற்றாய் உருவாகிய நவமார்க்சியப் போக்குகள் இன்று அடையாளம் அற்றுப் போய்விட்டன. அதன் இன்றைய கதி பரிதாபகரமானது. இப்போக்குகளை அது எழுந்த மேற்குலகின் அரசியல், சமூக நிலைகளிலும் வர்க்க உறவுகளின் நிகழ்வுப்போக்குள்ளும் தான் வைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிப்பிட முடியும். இன்று ஜெர்மனியில் கன்சிலராக வுள்ள சுறோடர் உட்பட பசுமைக்கட்சியில் உள்ள பல மூதேவிகள் நவமார்க்சியப் போக்கை ஒரு காலத்தில் கொண்டு இருந்தவர்களே. தமிழ்நாட்டில் சோவியத் யூனியனின் வீழ்வின் பின்பு மார்க்சியமும் தோற்றுவிட்டதோ என்ற சந்தேகத்திலும் பயக்கெடுதியிலும் தீர விசாரணையற்ற பல ஸ்டாலினிச விசுவாசிகள் தம் பழைய இருப்பை மறைக்க நவமார்க்சியம் முதல் பின்நவீனத்துவம் வரை பல தும்பத்தையும் காவி வந்தனர். அதனால் மார்க்சியத்தின் இடத்தை இட்டு நிரப்ப முயன்று இன்று தோல்வியடைந்து நிற்கின்றனர். மேலும் நிகழ்காலத்தில் புதைவதன் மூலம் அதன் இறந்தகால மற்றும் எதிர்காலத் தொடர்ச்சியில் நம்பிக்கையிழந்து நிற்கின்றனர்.

மேற்கு நாடுகளில் ஸ்டாலினிசம் மேலான விமர்சனம் 1920களின் இறுதியிலேயே தொடங்கி விட்டது. பிராங்போட் மார்க்சியம் போன்ற போக்குகளை விடப் பலமான தத்துவரீதியில் வீச்சான விவாதங்கள் பல இடதுசாரி அமைப்புகளில் நடைபெற்று வந்தன. ரொட்ஸ்கி 1920களின் முடிவுகளில் ஸ்டாலினிசப் போக்கு அதன் எதிர்காலம் பற்றி திட்டவட்டமான பார்வைகளை முன்வைத்தார். ரொட்ஸ்கியின் கருத்துக்கள் மார்க்சியத்தின் தொடர்ச்சியாகவும் லெனின், ரோசா லுக்சம்பேர்க் போன்றோரின் பின்பான பங்களிப்பாகவும் இருந்தது. ரொட்ஸ்கியின்



ஸ்டாலின்

கருத்துக்களால் பாதிக்கப்படாத எந்த இடதுசாரிக் கட்சியும் அப்போது ஐரோப்பாவில் இருந்தது கிடையாது. ஆனால் கீழைத்தேசங்களிலும் இந்தியா போன்ற நாடுகளிலும் முதலாளிய வளர்ச்சிக் கட்ட குணங்களைக் கண்டிராத மக்கள் மத்தியில் இருந்த நிலைமைகள் ஸ்டாலினிசத்துக்குப் பட்டு மெத்தையாக இருந்தன. மேற்குலகில் மார்க்சியத்தையும் ஸ்டாலினிசத்தையும் ஒன்றாய்ப் போட்டுக் குழப்பும் இடதுசாரியைக் காண்பதென்பது மிக அபூர்வம். ஸ்டாலினிசம் என்பது மார்க்சியத்தின் பெயரால் எழுந்த அதற்குப் புறம்பான சீரழிந்த ஒரு அரசியல் நடைமுறை வடிவமாகும். ஜெர்மனியில் வெளிவரும் இடதுசாரிப் பத்திரிகைகளான 'Freitag Neues Deutschland', 'JunglWelt' போன்றவையும் சோசலிசச் சஞ்சிகைகளான 'Sozialimus', 'Konkret' போன்றவைகள் உட்பட சகல இடதுசாரி எழுத்துக்களும் மார்க்சியத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்ட ஸ்டாலினிச அதிகார அமைப்பை 'ஸ்டாலினிசம்" என்றே அழைக்கின்றன. Hamburg நகரில் இயங்கும் இடதுசாரி ஆய்வு நிறுவனமான 'சமூக ஆய்வுக்கான நிறுவனம்" (Institut fur sozialforschung) பெர்லின் நகரில் இயங்கும் ரோசா லுக்சம்பேர்க் நிதியம் (Rosa Luxemburg-stiftung) என்பனவும் தம் ஆய்வுகள், விவாதங்கள் யாவற்றிலும் ஸ்டாலினிசம் என்ற சொற்றொடரையே பாவிக்கின்றன.

இன்னும் சிலர் மார்க்சியத்துக்கு மனித அறவியல் அம்சங்களை வழங்கவேண்டும் என்று குறையிரக்கின்றார்கள். இவர்கள் சோவியத் யூனியனில் ஸ்டாலினிச அமைப்புகள், இவைகளைத் தேடிக் களைத்தவர்கள். ஸ்டாலினிசத்தையே மார்க்சியமாக பாடமாக்கியதின் விளைவு இது. உலகம் முழுவதும் மார்க்சியப் போக்குள் இத்தகைய மனப்பதிவுகளை ஸ்டாலினிச நடத்தை விதைத்துள்ளது. இவையே மார்க்சியத்தின் போதாமை, அதையிட்டு நிரப்பும் முயற்சிகள் தொடங்கியமைக்கான காரணமாகும். மார்க்சியம் என்பது சமூக வளர்ச்சியின் முன்னேறிய அம்சங்களை உள்வாங்குவது என்ற எளிய உண்மை கூட பேசப்படுவதில்லை. மார்க்சிய இயங்கியல் என்பது பேசாப் பொருளாக்கப்படுகிறது.

1937 - 1938களில் போல்சுவிக்கட்சியின் புரட்சியை நடத்திய தலைமுறைமீது ஸ்டாலினியம் இறுதித் தாக்குதலைத் தொடுத்தது. மிஞ்சியிருந்த லெனினிய அரசியல் கலாச்சாரத்துள் வளர்ந்த சக்திகளும் இத்தோடு அழிக்கப்பட்டன. மேற்குலகத்தின் தொழிலாள வர்க்கம் சோவியத் யூனியன்மேல் கொண்டிருந்த இறுதி நம்பிக்கையையும் இத்தோடு துறந்தது. இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபின்பு கூட, ஸ்டாலினிசம் தனது எல்லைகளை உறுதிப்படுத்துவதிலேயே கருத்தாய் இருந்தது. 1944 இல் போர்த்துக்கல், கிறீஸ், ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கம்யூனிஸ்டுக்களும் பாசிச எதிர்ப்பு சக்திகளும் செய்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தியாகங்களும் நடத்திய போராட்டத்தின் பெறுபேறு களும் ஏகாதிபத்தியத்திற்கு இலகுவாக விட்டுக் கொடுக்கப்பட்டன. தற்காலிகமாக பாசிச எதிர்ப்பில் உண்டான கூட்டணியுடன் சோசலிசமும் முதலாளி யமும் அருகருகே வாழ முடியும் என்ற ஸ்டாலினிச அதிகாரத்தின் மதிமயக்கம் உலகப் புரட்சி, பாட்டாளி வர்க்கம் என்ற கோசங்களைக்கூட கைவிட வைத்தது. 'மக்கள் முன்னணி', 'மக்கள் ஜனநாயகம்' என்பவை ஸ்டாலினிசத்தால் முன்மொழியப்பட்டன. பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் போன்ற நாடுகளில் ஸ்டாலி னிசப் புத்திமதிப்படி கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளித் துவ மற்றும் தேசியவாதக் கட்சிகளோடு ஐக்கிய முன்னணிக்குப் போயின. ஜெர்மனியப் பாசிசத்திற் கெதிராய் ஜெர்மனிய கம்யூனிஸ்ட் கட்சியை மிகப் பெரும் சீர்திருத்தவாத தொழிலாளர் அமைப்பான SPD யுடன் கூட்டுக்குப் போவதைத் தடுத்த ஸ்டாலின் பின்பு பாசிஸ்டுக்களோடு உடன்பட்டுப்போனதும் ஒப்பந்தம் செய்ததும் வரலாறு கண்டது. பின்னதாக ஸ்டாலினிசம் ஏகாதிபத்தியத்தோடு சமாதான சகவாழ்வுக்கு தயாராகி நிற்கிறது.

ஸ்டாலினிசத்தின் ஏகாதிபத்தியத்துடனான நல்லெண்ண அரசியலுக்கு ஆதரவாக டிமிட்ரோவ் போன்றோரும் களம் இறக்கப்பட்டனர். 1947 செப் டெம்பர் 22இல் கூடிய சோவியத் யூனியனின் கட்சி மத்திய குழுவில் அதன் செயலாளர் அன்ரேஜ் ஸ்டானேவ் (Andrej Shdanow) சர்வதேச அளவிலான புரட்சிக்குப் பதில் தேசிய அளவிலான சோசலிச அபிவிருத்திகளே சாத்தியம் என்று பேசினார். 1947இல் போலந்துக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோமுல்கா போன்றோர்கூட ஸ்டாலினியத்தின் 'மக்கள் முன்னணியில்' அள்ளப்பட்டனர். கோமுல்கா இத்தா லிய, பிரான்சிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு விடுத்த வேண் டுகோளில் "சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கட்சிக ளைக் கட்ட இது உசிதமான காலமல்ல. ஒவ்வொரு நாடும் தன் உள்ளூர் அரசியல் நிலவரங்களில் தங்கி நிற்கும் காலம்" என்றார். எனினும் ஏகாதிபத்தியங்களிட மிருந்து இவர்கட்கு விரைவில் சாத்தல் கிடைத்தது. 1947 இல் அமெரிக்கா கிறீஸ், துருக்கி போன்ற நாடுகட்கு ஆயுதங்களை வழங்கியது. இந்த நாடுகளில் ஸ்டாலினால் கைவிடப்பட்டு முதலாளித்து வத்திடம் ஒப்படைக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகள் ஒழித்துக் கட்டப்பட்டனர். கிறீஸில் இருந்து பல ஆயிரம் கம்யூனிஸ்டுகள் யூகோஸ்லா வியாவுக்கு தப்பியோடினார்கள். பல இடங்களில் பாசிஸ்டுகள் அமெரிக்க ஆதரவுடன் அரசியலுக்கு வந்தனர். 1947 யூலை 5இல் அமெரிக்கா Marshall Plan அறிவிக்கப்பட்டு மேற்கு ஐரோப்பா அமெரிக்க மூலதனத்துடன் இறுக்கமாயிற்று.

ஆனால் யுத்தத்தால் அழிந்திருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சோவியத் யூனியனும் மிகப் பெரும் சமூக, பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டன. இங்கு சகல இடங்களிலும் ஸ்டாலினிசம் தன்னை மேய்ப்பனாய் ஆக்கிக் கொண்டது. சோவியத் யூனியனின் மாதிரிகள் கிழக்கு ஐரோப்பா எங்கும் படைக்கப்பட்டது. அதுவே மாற்ற முடியாத, விமர்சனம் கடந்த சோசலிச முன்னுதாரணமாயிற்று. சோசலிசம் மேலான நோய்க் கிருமியாய் ஸ்டாலினிசம் மாறி யிருந்தது. கருத்து முரண்பாடுகள் கொண்டவர்கள், தவறுகளை எதிர்த்தவர்கள், தன் மனச்சாட்சியைப் பேசியவர்கள் யாவரும் எதிர்ப்புரட்சியாளர்கள் என்று அழிக்கப்பட்டனர். கட்சித் தோழர்களின் சந்தேகங்கள், குழப்பங்கள், தயக்கங்கள் தீவிர உணர்வுகள் யாவுக் கும் எதிராய் ஒரேயொரு அருமருந்தாய் பயங்கரவாதம் ஏவப்பட்டது. பழிவாங்குவதையும் வன்முறையையும் அரசியல் கலாச்சாரம் ஆக்கியது.

சோவியத் யூனியனின் பொறிவையடுத்து அல்பா னியா, பல்கேரியா, கங்கேரி, ருமேனியா, சோவியத் யூனியன், கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளில் இரகசிய ஆவணக்காப்பகங்கள் திறக்கப்பட்டு, பல ஸ்டாலின் காலத்திய உண்மைகள் வெளிவந்துள்ளன. பல பத்தாண்டுகளாக விதைக்கப் பட்டு உண்மைகளாக நம்பப்பட்டு வந்தவைகள் ஸ்டாலினிய அரசியல் பாரம்பரியங்கள் சிதறடிக்கப் பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் பெரும் தொகையான ஆவணங்களின் அடிப்படையிலான வெளியீடுகள் வெளிவந்துள்ளன. கம்பேர்க் நகரில் இயங்கும் இடதுசாரி ஆய்வு நிறுவனத்தின் வெளியீ டாக டேவிட் கிங் (David King) இன் 'Stalins Retu-schen' என்ற நூலும் ய. சியேவ்ன்யுக் (W.Schew-njuk)ஆல் எழுதப்பட்ட 'Das politburo' என்ற வெளி யீடும் வந்துள்ளன. அது தவிர, மிக முக்கியமான வெளியீடாக ரஷ்ய மார்க்சியவாதியான வாடின் S. ரோகோவின் (Wadin S. Rogowin) எழுதிய '1937-Jahr des terrors', 'Vor dem grossen terror stalins Neo-Nop', 'Die Partei der Hingerichteten' போன்ற 3 பெரும் பிரதான வெளியீடுகள் வெளிவந்துள்ளன. மார்க்சிய அறிஞரான வாடின் S. ரோகோவின் சோவியத் ஆவணங்களை விரிவாக ஆராய்ந்து, இது வரை வெளிவராத ஸ்டாலினிசப் பயங்கரவாதங்களை ஆதாரங்களுடன் வெளிக்கொணர்ந்துள்ளார். புரட்சியா ளர்கள் மேல் நடத்தப்பட்ட கொடுமைகளை பேசி யுள்ளார். இதைவிட, பல நூல்கள் சோவியத் யூனிய னில் கம்யூனிஸ்டுகள் அனுபவித்த துன்பங்கள் மக்கள்மேல் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் பற்றி வெளியாகியுள்ளன. இன்றைய நடப்பு நிலைமைகள் கோரும் அபிவிருத்திகளையும், கடந்த ஸ்டாலினிசப் போக்குகள் மேலான கடுமையான விமர்சனப் பாங் கையும் ஏற்காத, தத்துவச் செழுமையற்ற வரண்டு போன ஸ்டாலினிச மண்டைகள் இன்றும் நிறைய வுள்ளன. புகலிடத்தில் இத்தகைய ஸ்டாலினிசக் கிளிப்பிள்ளை சுலோகங்களை இடைவிடாமல் முழங்குவோர், புரட்சியாளன் ரொட்ஸ்கியை ஸ்டா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லினிசத்தின் சக்கேறிய பழஞ்சரக்குகளை மூல மாய்க் கொண்டு எதிர்க்கின்றனர். தாம் தம் வாழ்நாளில் ஒருபோதும் படித்திராத, படித்து அறிந்திராத ரொட்ஸ்கியை விமர்சிக்க தத்துவரீதியில் பிணமாகி விட்ட இவர்களால் முடியாது. தமிழ்ப் பரப்பில் அந்தோ னியோ கிராம்சி, அல்தூசர் படிக்கப்பட்ட அளவுக்குக் கூட ரோசா லுக்சம்பேர்க், ரொட்ஸ்கி, கார்ல் லீப் னெக்ட், பிரான்ஸ் மேரிங், காவுட்ஸ்கி படிக்கப் படவில்லை என்பதோடு ரொட்ஸ்கி பற்றி அதிதீவிரவாத ரொட்ஸ்கியக் குழுக்கள் ஏற்படுத்தியுள்ள மதிப்பீடு களே மிஞ்சி உள்ளன. அவர் உள்ளபடி படிக்கப் படவில்லை. மார்க்சியக் குடும்பத்தின் முதல் வரிசைச் சிந்தனையாளரின் தத்துவக்கனம் போதிய கவனிப் பைப் பெறவில்லை.

ஸ்டாலினிச அதிகார இயக்கத்தின் முக்கிய நபர்களில் ஒருவனான பெரிஜா கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிசம் துளிர் விடத் தொடங்கிய போது கம்யூனிஸ்டுகளை அழிப்பதில் மிக முக்கிய கருவியாய் செயற்பட்டவன். இவன் ஸ்டாலினைப் போலவே ஜோர்ஜியாவை சேர்ந்தவன். ஸ்டாலினது இளம்பருவ அரசியல் கூட்டாளி, இக்காரணங்களால் 1938இல் NKWக்குப் பொறுப்பாய் ஸ்டாலினால் நியமிக்கப்பட்டான். 1937இல் சுட்டுக் கொல்லப்பட்ட செம்படையின் முக்கிய தளபதிகளான டாசாட்ஸ் செவ்ஸ்கி (Tachatschewski) உட்படப் பலருக்கு எதிராக நாசிகளுடன் தொடர்பு என பொய் ஆவ ணங்கள் தயாரிப்பில் இவன் பங்கு கொண்டமைக் காகவும் இப்பதவி ஸ்டாலினது துணையால் இவனுக் குக் கிடைத்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உளவுத்துறைகளை இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு ஸ்டாலினது நேரடிக் கட்டுப்பாட்டுள் இவனே நிர்வகித்தான். போலந்தின் உளவுத்துறைப் பொறுப் பாளன் யோசெப் ஸ்வேயாட்லோ இவனின் கையாள். இவன் ஸ்டாலின் மரணம், பெரிஜா கைது ஆகிய வற்றின் பின்பு மேற்கு ஐரோப்பாவுக்கு தப்பியோடி னான். அங்கு வெளிப்படையான சோசலிச எதிர்ப்பா ளனாய் இயங்கினான். ஏகாதிபத்தியப் பிரச்சார சேவை யான 'Freies Europa" (சுதந்திர ஐரோப்பா)இல் இணைந்து செயற்பட்டதோடு தீவிரமான சோசலிச எதிர்ப்புப் பிரச்சாரகன் ஆக மாறினான். இவனின் செய்திகள், அறிக்கைகள் யாவும் CIAஆல் அச்சிடப் பட்டு போலந்து மேல் பலூன் மூலம் வீசப்பட்டன. இவனே நொயல் பீல்டை முதலில் அந்நிய உளவாளி என்று குற்றம் சாட்டியவன். ஸ்டாலின் பின்பான விசாரணைகளில் இவன் அமெரிக்க உளவுத்துறை ஆள் என்று தெரியவந்தது. தத்துவ நடைமுறைகள் செத்த ஸ்டாலினிச அதிகார அமைப்பு இப்படியான சக்திகளில் தங்கி நின்றுதான் தலைசிறந்த புரட்சியாளர் களை அழித்தது.

ஸ்டாலினின் நிழலான பெரிஜா 23-12-1953இல் சோவியத் உயர்நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டு 5மார்ச் 1954இல் சுட்டுக் கொல்லப் பட்டான். பல ஆயிரம் நேர்மையான கம்யூனிஸ் டுகளை கொன்றமை, பிரிட்டிஸ் உளவுத்துறைக்கு வேலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின்படி 'சோவியத் மக்களின் எதிரி' என்று பிரகடனப்படுத் தப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவன் சிறையில் இருந்தபோதும், தான் கொல்லப்பட மாட்டேன் என்றும் விடுதலை செய்யப்படுவேன் என்றும் நம்பினான். சிறை வைக்கப்பட்ட சிறைச் சாலைச் சுவரில், தான் குற்றமற்றவன் எனவும் ஸ்டாலி னது கட்டளைகளையே நிறைவேற்றியதாயும் எழுதினான். சுட்டுக் கொல்லப்படுமுன்பு சோசலிச இலட்சியத்துக்காகவோ எசமான் ஸ்டாலின் பெய ரிலோ அவன் எவ்வித சபதங்களும் செய்யவில்லை. எதையும் உச்சரிக்கவில்லை. இறுதிவரை தன் சொந்த வாழ்வு பற்றிய சோகங்களிலேயே மூழ்கியிருந்தான். இவன் கொல்லப்பட்டு உடல் எரிக்கப்பட்டு சாம்பல் காற்றாடியின் மூலம் காற்றில் பரப்பப்பட்டது. இவனோடு பல்கேரிய, செக்கோசில வாக்கிய, கங்கேரிய களையெடுப்புகளில் பங்கு கொண்ட ஸ்டாலினிச கொலையாளிகளான அபகுமெவ் (Abakumow), லீசற்சோவ் (Lichatschow), மக்காரோவ் (Makarow), பெஜல்கின் (Bjelkin) ஆகியோரும் கைதாகி விசாரணையின் பின்பு சுட்டுக் கொல்லப் பட்டனர். ஸ்டாலினிசத்தை சோசலிசம் என்று நம்ப விரும்புகிறவர்கள் இவர்களையே பாட்டாளி வர்க் கத்தின் தலைவர்கள் என்றும் நம்பலாம்.

## நொயல் பீல்ட்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற களையெடுப்புக்களில் இவர் பெயர் முக்கிய மானதாகும். இவர் பிரிட்டனைச் சேர்ந்தவர். இவரின் தந்தையான கேர்பேர்ட் காவிலாண்ட் பீல்ட் (Herbert Haviland Field) சர்வதேசரீதியாக அறியப்பட்ட உயிரியல் ஆய்வாளர். இவர் தந்தை சுவிற்சர்லாந்தில் (Zurich) நடத்திய 'சர்வதேச உயிரியல் விஞ்ஞான அமைப்பின்' நிர்வாகியாக நொயல்பீல்ட் இருந்தார். முதலாம் உலக யுத்தத்தில் இவரின் தந்தை அகதி கட்கு உதவும் நிறுவனமொன்றை அமைத்தார். தந்தையின் இறப்பையடுத்து இவர்கள் அமெரிக் காவுக்கு குடிபெயர்ந்தனர். அங்கு நொயல்பீல்ட் Boston Harward பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறையில் பயின்றார். 1926இல் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சில் பொருளாதார ஆலோச கராகச் சேர்ந்தார். இரண்டாம் உலக யுத்தத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பாவில் கடமை புரிந்தபோது சோவியத், அமெரிக்க அரசுகளின் கிட்லருக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இவர் சுவிற்சர்லாந்தில் இருந்த காலத்தில் பாசிச எதிர்ப்பு சக்திகளோடும் கம்யூனிஸ்டுகளோடும் தொடர்பு ஏற்பட்டது. இவர் தீவிர பாசிச எதிர்ப்பாளராகவும் சோசலிச அனுதாபி யாகவும் மாறினார். இதையடுத்து, அமெரிக்க அரசு இவரைப் பதவியில் இருந்து விலக்கியது. அதன் பின்பு பாசிச எதிர்ப்பு இயக்கங்களோடு இவர் தன்னை முழுமையாய் கரைத்துக் கொண்டார். சோசலிச சிந்த னையை அவர் நம்பினார். சோவியத் உளவுத்துறை அவரைப் பயன்படுத்தி வந்தது. சுவிற்சர்லாந்தில் fkaுdp ];fshy;njhlff;gg;l} Rote Hilfe' என்ற உதவி நிறுவனத்துக்கும், ஸ்பெயினில் போரிட்டு தோல்வியின் பின்பு தென்பிரான்சில் முகாமில் வைக்கப் பட்டு இருந்த 'சர்வதேச கம்யூனிஸ்டு'களுக்கும் பெரும் சேவைகள் செய்தார்.

கங்கேரிய கம்யூனிஸ்டுகளின் அழைப்பின் பெயரில் கங்கேரிய பல்கலைக்கழகத்தில் சேவை செய்ய விரும்பி இவர் கங்கேரி சென்ற சமயம் அங்கு கைது செய்யப்பட்டார். இவரின் மனைவியும் கைது செய் யப்பட்டார். இவரின் சகோதரனும் சுவிஸில் மார்க்சிய குழுவொன்றில் இயங்கியவருமான கேர்மான் பீல்ட் (Hermann Field)டும் பின்பு கைதாகினார். போலந்து உளவுத்துறைத் தலைவனும் பெரிஜாவின் விசுவாசி யுமான யோசெப் ஸ்வியாட்லோ தான் நொயல் பீல்ட் அந்நிய உளவாளி என்று கங்கேரிக்கு தகவல் தந்த வன். இவரின் கைதையடுத்து ஜெர்மனி, ஒஸ்திரியா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து கம்யூனிஸ்டுகளிடமிருந்து பலத்த எதிர்ப்பு வந்தது. பலர் கட்சியை விட்டு வெளி யேறினர். நொயல் பீல்ட் தம்பதிகள் மேற்கு ஐரோப் பிய கம்யூனிஸ்டுகளாலும் பாசிச எதிர்ப்பு சக்திக ளாலும் நேசிக்கப்பட்ட உயர்ந்த மனிதாபிமானிகளா கவும் சோசலிச அனுதாபிகளாகவும் இருந்தனர். இவர்மீது கிழக்கு ஐரோப்பாவில் நடைபெற்ற பல வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. இவருடன் தொடர்புடையவர்கள் யாவருக்கும் உளவாளி என்று பெயரிடப்பட்டது. இவரின் பெரும் தொகையான நண்பர்களும் தோழர்களும் கைதாகி சிறைவாழ்வுக்கும் கொலைகட்கும் இலக்காயினர். இவரின் நண்பர், தோழர்கட்கு 'பீல்ட் வாதிகள்' என்று ஸ்டாலினிசம் நாமம் சூட்டியது. சிறையில் கடும் துன்பங்கட்கு இலக்காகிய இத்தம்பதிகள் ஸ்டாலினின் மரணத்தின் பின்பு விடுதலையாகினர். இவர் சாகும் வரை சோசலிச இலட்சியத்துக்கு விசுவாசமாக இருந்தார். ஸ்டாலினிசத்தால் பீல்ட்வாதி என்றும், துரோகி என்றும் வேட்டையாடப்பட்ட ஸ்பெயினின் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான யேசுஸ் மொன்சோன் (Jesus Monzon) ஸ்பெயின் பொலிசால் பிடிக்கப்பட்டு சிறையில் கடும் சித்திர வதையில் இறந்தார்.

# பாசிசம் பற்றிய ஸ்டாலினின் மதிப்பீடுகள்

ஜெர்மனிய கம்யூனிஸ்ட் கட்சி (KPD) பாசிசத்துக்கு எதிராக ஜெர்மனியின் மிகப்பெரும் தொழிலாளர் அமைப்பும் சீர்திருத்தவாதிகளினால் நிரம்பப் பெற்றதுமான SPDயுடன் பாசிச எதிர்ப்பு அணியொன் றைக் கட்டவேண்டிய அவசியத்தை உணர்ந்து இருந்தது. மேற்கு ஐரோப்பிய கம்யூனிஸ்டுகளும் பெரும்பாலும் இந்த நிலையையே கொண்டு இருந்த னர். 1930முதல் 1934 வரையில் ரொட்ஸ்கியின் எழுத் துக்கள் பாசிச அபாயம் பற்றி எச்சரித்தன. KPD-SPD இணைந்த தொழிலாளர்களின் பாசிச எதிர்ப்பு அணி என்ற சிந்தனையை முன்வைத்தார். 1920களில் தொடங்கிய பாசிஸ்டுகளின் அமைப்பு பற்றி ரொட்ஸ்கி ஆரம்ப முதலே அவதானித்து வந்தார். கிழக்கு ஐரோப் பிய நாடுகளிலும் கம்யூனிஸ்டுகள் பாசிச எதிர்ப்பின் பொருட்டு சகல சக்திகளும் ஒன்றிணைக்கப்படல் வேண்டும் என்று கருதினார். போலந்து கம்யூனிஸ் டான இசாக் டொச்சர் (Isaac Deutscher) ரொட்ஸ் கியின் சிந்தனைகளை ஆதரித்து நின்ற இவர், 1931இலேயே பாசிசம் பற்றி எச்சரிக்கை செய்தார். ஸ்டாலினிசப் போக்கை விமர்சித்தமைக்காக இவர் 1932 இல் போலந்துக் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு ரொட்ஸ்கியவாதி என்று வெளியேற்றப்பட்டார். இவரே பின்பு ஸ்டாலினது அரசியல் வரலாற்றை புத்தகமாக எழுதி வெளியிட்டார். டிமிட்ரோவ் போன்றோரின் பாசிச எதிர்ப்பு முயற்சிகள் ஸ்டாலினிச அதிகார ஒழுங்கை விட்டு மீறவில்லை. ஸ்டாலின் ஆரம்பத்தில் பாசிஸ்டுகளும் SPD யும் ஒன்றே என்று KPD-SPD கூட்டை எதிர்த்து வந்தமை கிட்லருக்கு எதிரான ஒரு பாசிச எதிர்ப்பு அணியை ஜெர்மனியில் இல்லாமல் செய்தது. பின்பு இதே ஸ்டாலின் தொழிலாளர்களின் அமைப்பான SPD யை விட்டு சோவியத் யூனியனை 'யூதப் போல்சுவிக்சிசம்' (Judischen Boslschewis-mus) 'ஸ்லாவிய இனம்' (Slawische Rasse) என்று பழிப்புச் செய்த கிட்லரோடு உடன்பாட்டுக்குப் போனார்.

அத்தோடு சோவியத் யூனியன் பாசிச ஜேர்மனி யோடு செய்து கொண்ட உடன்பாட்டின் பின்பு சோவியத் யூனியனுக்கு ஜெர்மனியிடமிருந்து ஆபத்து எதுவும் கிடையாது. இது முதலாளித்துவ நாடுகளிடை யேயான முரண்பாடு என்று ஸ்டாலினால் விளக்கமும் தரப்பட்டது. ஆனால் கிட்லர் சோவியத் யூனியனை கட்டாயம் தாக்குவான் என்று ஜெர்மனியக் கம்யூனிஸ் டுகள் எதிர்பார்த்தனர். 1941இல் கிட்லர் சோவியத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யூனியனை தாக்கியபோது அது எந்த யுத்தத் தயாரிப்பு மற்று இருநதது. 1940இல் பெர்லினில் சோவியத் தூதராக இருந்த (W. G. Dekanosov) W. G. டெக்கா னொஸ்சோவ், கிட்லர் சோவியத் யூனியனைத் தாக்க வுள்ளதாய் செய்தியனுப்பினார். இதே வருடம் பிரிட்ட னில் சோவியத் தூதராக இருந்த ஸ்டவ்போட் கிறிப்ஸ் போன்றோரும் இதே எச்சரிக்கையை செய்தனர். ஜெர்மனியில் சோவியத் யூனியனின் வெளிநாட்டு உளவுப்பிரிவுக்கு வேலை செய்த ஜெர்மனிய கம்யூ னிஸ்டுகளும் பாசிச எதிர்ப்புப் போராளிகளுமான சுல்ஸ் பொய்சன் (Schulze Boysen) கார்நாக் (Harnack) ஆகியோர் 1941இல் கிட்லரின் சோவியத் யூனியனுக்கு எதிரான போர்த் தயாரிப்பை மொஸ் கோவுக்கு அறிவித்தனர் என்று ஜெர்மனிய பாசிச எதிர்ப்பு அமைப்பான 'Roten Kepelle' அமைப்பின் வரலாற்றை எழுதிய கான்ஸ் கொப்பி (Hans Coppi) குறிப்பிடுகின்றார். சோவியத்தின் இராணுவத் தலை மையைச் சேர்ந்த சூக்கோவ் (Shukow) பாதுகாப்புத் துறைக் கொமிசார் S. K. ரிமோஸ்சென்கோ (S.K.Timoschenko) போன்றோர் சோவியத்தின் மேற்கு எல்லைகளைப் பலப்படுத்த வேண்டும் என்று முயற் சித்தமைக்காக ஸ்டாலினால் கண்டிக்கப்பட்டனர். சோவியத் எல்லைகளில் நாசிகளை ஆத்திரமூட்டக் கூடாது என்று செம்படைக்கு ஸ்டாலினால் கடுமை யான கட்டளை பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

சோவியத் யூனியனின் பிரிட்டிஷ், ஜப்பானிய, சீன உளவுப் பிரிவினர் பாசிஸ்டுகள் சோவியத் யூனியனை தாக்கவிருப்பதாய் தந்த செய்திகளை ஸ்டாலின் பொருட்படுத்தவில்லை. அவர், கிட்லர் வாக்கை மீறாத வன் என்றும், ஒப்பந்தத்தை பாசிஸ்டுகள் மீற மாட் டார்கள் என்றும் ஸ்டாலின் நம்பினார். அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகள் கிட்லர் சோவியத் யூனியனை தாக்கவுள்ளான் என்று பகிரங்கமாய் எழுதின. பாசிசம் சோவியத் யூனியனைத் தாக்கியபோது அதை ஸ்டா லினால் நம்ப முடியாமல் இருந்தது.

ஸ்டாலினின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய டிமிட்ரி வால்கோனோவ் (Dimitri Walkogonov) சகல அதிகாரங்களையும் தன்னிடத்தே குவித்துக்கொண்டு இருந்த ஸ்டாலின், கிட்லரின் தாக்குதலையடுத்து முழுமையாய் அதிர்ச்சியடைந்து இருந்தார் என்று எழுதினார். முதல் தாக்குதலில் செம்படை ஏராளமான இழப்புகளைக் கண்டது. ஸ்டாலினது தவறுகட்கு பாசிசம் பற்றிய பிழையான போக்குக்கு வழக்கம் போலவே ஏனையோர் பலி கொடுக்கப்பட்டனர். செம்படையின் மேற்கு எல்லையின் ஜெனரலான, மூன்று முறை லெனின் விருது பெற்றவரான D. G. பாவ்லோ (D.G.Pawlow) உட்பட, பல செம்படை ஜெனரல்கள் தோல்விக்குப் பொறுப்பாக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. சிலர் தற்கொலை செய்து கொண்டனர்.



ஸ்டாலின்

## யூகோஸ்லாவியா

செம்படையின் உதவியின்றி தன்னை விடுவித்துக் கொண்ட ஒரே கிழக்கு ஐரோப்பிய நாடு யூகோஸ் லாவியா மட்டுமே. இருபத்தாறு வரையிலான இனங் கள் பல்வேறு மக்கள் குழுக்களைக் கொண்ட நாட்டை கம்யூனிஸ்டுகள் பாசிச எதிர்ப்புப் போருக் காக திரட்டியிருந்தனர். பல நூற்றாண்டு காலம் யூதர் களைப் போன்று ஒதுக்கப்பட்ட 'ரோமா' இனமக்கள் கூட நாசிகட்கு எதிரான போராட்டங்களில் கம்யூனிஸ் டுகளின் கீழ் அணி திரட்டப்பட்டு வீரம் நிறைந்த வரலாற்றைப் படைத்தனர். இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்னர் சோவியத் யூனியன் யூகோஸ்லாவியா வையும் தன் மேற்பார்வையுள் கொண்டுவர முயன் றது. ஆனால், டிட்டோ ஸ்டாலினிசத்தை தொடர்ந்து கண்டித்து வந்தவர். ஸ்டாலினை சோசலிச உலகின் மன்னராக முடி சூடிவிட விரும்பவில்லை. சோவியத் யூனியனின் சோசலிச நாடுகள் மற்றும் கம்யூனிசக் கட்சிகளுடனான உறவு சோசலிசப் பண்புகள் அற்றது என்று கருதியதோடு 'தென் ஸ்லாவிய மக்களின் குடியரசு' என்ற இலட்சியத்தையும் டிட்டோ கொண்டு இருந்தார். இந்த தென் ஸ்லாவிய மக்கள் அடங்கிய சோசலிச அரசு என்ற கருத்து டிட்டோவுக்கு மட்டும் உரியதாய் இருக்கவில்லை. டிமிட்ரோவ் உட்பட பல கம்யூனிஸ்ட் தலைவர்களும் இக்கருத்தைக் கொண்டு இருந்தனர். ஆனால், ஸ்டாலின் இதை விரும்ப வில்லை. சோவியத் யூனியனின் அரசியல், பொருளா தார நலன்கட்கு உட்பட்ட தொங்குசதை நாடுகளா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவே அவர் சோசலிச நாடுகளை வைத்திருக்க விரும்பினார். புவியியல் ரீதியிலும் கலாச்சார ரீதியிலும் சக்தி கொண்ட பொருளாதார ரீதியில் சிறப்பாய் செயற்படக் கூடிய அகண்ட ஒரு சோசலிசக் குடியரசு 'ஸ்லாவிய மக்களின் அரசு' சோவியத் யூனியனின் அதிகாரத்துவ இயக்கத்துக்கு தடையாக இருக்கும் என்று ஸ்டாலின் கருதினார். ஏற்கனவே சோவியத் மேல் விமர்சனம் உடைய டிட்டோ இந்தக் கருத்துக் களால் பலம் பெற்று விடுவார் என்று ஸ்டாலினிச அதிகாரம் கண்டு கொண்டது. எனவே, டிட்டோ மீது 'சர்வாதிகாரி' பாசிஸ்ட், மாக்சிய லெனிய எதிரி, ரொட்ஸ்கியவாதி, புகாரினிசவாதி என்று பிரச்சாரங்கள் ஏவப்பட்டன. யூகோஸ்லாவியா ஏகாதிபத்தியக் கருவி சோவியத் யூனியன் உட்பட சோசலிச நாடுகளின் பகை நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டது. இறுதி யாக, யூகோஸ்லாவியாவுடனான சோசலிச நாடுக ளின் அரசியல் பொருளாதார உறவுகள் தடைசெய்யப் பட்டது.

யூகோஸ்லாவியாவை சோசலிச நாடுகளிடமிருந்து தனிமைப்படுத்திய ஸ்டாலின் அடுத்து அதன் உள் நாட்டு அதிகாரத்துள், கட்சியுள் தலையிட்டார். டிட்டோவுக்கு எதிரான போக்கை கட்சியுள் உருவாக்க முனைந்தார். மற்றைய புதிய சோசலிச நாடுகளில் ஸ்டாலினிசம் நேரடியாக அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் தலையிடும் வாய்ப்பும் பலமும் இருந்தது. செம்படையினால் விடுவிக்கப்பட்ட நாடுகளில் ஸ்டாலி னிசம் நேரடியாகவே தலையிட்டு தன் ஆதரவாளர் களை ஆட்சிக்குக் கொண்டு வந்தது. தேவைப்பட்ட போது பொய் வழக்குகள், சதிகள் மூலம் தன்னுடன் முரண்படுபவர்களை அழித்தது. இந்தப் போக்கை ஸ்டாலினால் யூகோஸ்லாவியாவுள் உருவாக்குவது சாத்தியமற்றதாக இருந்தது. எனினும் ஸ்டாலினிசத்தின் கடும் பிரயத்தனத்தின் பின்பு கட்சியின் மத்திய குழுவில் தன் ஆதரவுக் குழுவை உருவாக்கியபோதும் டிட்டோ இந்த மிகச்சிறு பிரிவை தகர்த்தார். மத்திய குழுவில் இருந்த 'அன்ட்ரீயா கெப்பராங்' (Andrija Hebrang) ஸ்றெரன் சுயோவிக் (Sreten Zujovic) என் போர் ஸ்டாலினிச ஊடுருவலாளர்கள் என்று கைது செய்யப்பட்டனர். கட்சியுள் டிட்டோவை எதிர்த்து வந்த திட்டமிடல் அமைச்சுக்குப் பொறுப்பான நாகோ ஸ்பீரு (Nako Spiru) விளக்க முடியாத வகையில் இறந்தார். கங்கேரிய கம்யூனிஸ்டும் யூகோஸ்லாவிய புரட்சியா ளர்களுடன் நெருக்கமான உறவு கொண்டு இருந்த வருமான லாயோஸ் செபி (Lajos Cseby) டிட்டோ அனுதாபி என்று கங்கேரியில் கைது செய்யப்பட்ட போது அவரின் சகோதரி ஸ்டாலினிய ஆதரவாளர் என்று யூகோஸ்லாவியாவில் கைதானார். ஸ்டாலினின் டிட்டோவை அழிக்கும் சதி முயற்சிகள் தோல்வி கண்டன. ஸ்டாலினிசத்துடன் ஏற்பட்ட மோதல் டிட் டோவை பிற் காலத்தில் சோவியத் அணியும் அல்லாத முதலாளிய அணியும் அல்லாத அணிசேரா நாடு களின் அணி என்ற கருத்துக்கு துரத்தி விட்டது. டிட்டோவின் சோசலிசப் போக்கை ஸ்டாலினிச அதிகா ரத்தின் போக்குக்கு எதிரான சோசலிசப் பிரயத் தனமாயே காண வேண்டும்.

டிட்டோயிசமானது ஸ்டாலினிச சதி, அரசியல் தலைமைகளைக் கவிழ்த்தல் போன்ற நடவடிக்கை களை உள்நாட்டில் முறியடித்து அத்தோடு ரொட்ஸ்கியவாதிகள் என்று மார்க்சியவாதிகளில் ஒரு பகுதியையும் இல்லாமல் ஆக்கியது. யூகோஸ் லாவியாவில் கம்யூனிஸ இயக்கத்தை தொடக்கிய வர்களில் ஒருவரான லாசூர் புன்டோ (Lazur Fundo) கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணித்தலைவரான அனாஸ்ராஸ் லூலோ (Anastas Lulo) பாசிச எதிர்ப்பு விடுதலைப்படையின் முக்கியதலைவர்களில் ஒருவ ரான முஸ்ராபா ஜியினிஸ்சி (Mustafa Gjinishi) என்போர் ரொட்ஸ்கியவாதிகள் என்று கொல்லப் பட்டனர். இங்கு ஸ்டாலினிசமும் டிட்டோயிசமும் ரொட்ஸ்கியின் கருத்துக்களைக் கொண்டு இருந்த வர்களை சரிசமமாய் வேட்டையாடின. டிட்டோவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய விளாடிமிர் டேடியர் (Vladimir Dedijer) ஸ்டாலினிசம் கொடுத்த நெருக்க டிகளை அடுத்து டிட்டோவும் அல்பானியா உட்பட வலிமை குறைந்த நாடுகளில் ஆதிக்கம் செலுத்த முயற்சித்தமையைக் குறிக்கின்றார்.

குருசேவ் வருகையின் பின்பு யூகோஸ்லாவியா வுடனான சோவியத் யூனியனின் உறவுகளில் நெருக் கம் ஏற்பட்டது. இராணுவ பாசிச சர்வாதிகாரி என்று ஸ்டாலினால் டிட்டோவுக்கு சூட்டப்பட்ட பட்டங்கள் மறைந்து யூகோஸ்லாவியா சோசலிச நாடு என்று ஏற்கப்பட்டது. 'பிராவ்தா' பத்திரிகை யூகோஸ்லாவியா பாசிசத்திலிருந்து விடுதலை பெற்ற 10 வருட நினைவு தினத்தை நினைவு கூர்ந்ததோடு 'யூகோஸ்லாவிய - சோவியத் மக்கள் இருவரும் ஸ்லாவிய இனத்தைச் சேர்ந்த இரத்தஉறவு கொண்ட மக்கள்' என்று 'ஸ்லா வியப் பெருமை' பேசியது. சோசலிச இயக்கங்களை தத்துவரீதியில் சிதைத்து பயங்கரவாதப்படுத்திய பெருமை ஸ்டாலினிசத்துக்கே யுரியது.

## ஜெர்மனி

ஜெர்மனியில் மட்டும் பாசிசம் 300, 000க்கு மேற் பட்ட கம்யூனிஸ்டுகளை கைது, அழிப்பு இவைகட்கு உள்ளாக்கியிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி கிட்டத்தட்ட உள்நாட்டில் செயலிழந்தது. வெளிநாடுகட்கு தப்பிச் சென்ற ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் பாரிஸ், மார்சைல், வீயன், பிராக், சுவிற்சர்லாந்து போன்ற இடங்களில் நாடு கடந்த ஜெர்மனியக் கம்யூனிஸ்ட் கட்சிகளை அமைத்தனர். சோவியத் யூனியனுக்குத் தப்பிச் சென்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்யூனிஸ்டுகளில் ஒரு பகுதி ஸ்டாலினின் கையால் அழிந்தது. 1937-1938 இல் ஸ்டாலினால் நடத்தப்பட்ட களையெடுப்புகளிலும், பெரும் தொகையில் ஜெர்மனியக் கம்யூனிஸ்டுகளும் ஒக்டோபர் புரட்சியையடுத்து ஜெர்மனியில் இருந்து சோவியத் யூனியனுக்கு குடும்பங்களுடன் குடிபெயர்ந்த உணர்வு மிகுந்த தொழிலாளர்களும் கொல்லப்பட்டு இருந்தனர். இதன் காரணமாய் லெனின் கால சோவியத் யூனியன் போன்று ஸ்டாலினிச ஆட்சியில் இருந்த சோவியத் யூனியன் ஜெர்மனிய கம்யூனிஸ்டுகளால் கௌரவிக்கப்படவில்லை. எனவேதான் பெரும்பகுதி ஜெர்மனிய கம்யூனிஸ்டுகள் மேற்கு நாடுகட்குச் சென்றனர். ஸ்பெயினில் பாசிசத்துக்கு எதிராய் போரிட்ட மிகப்பெரும் அணி ஜெர்மனியக் கம்யூனிஸ்டுகளினுடையதாகவே இருந்தது. அவர்கள் மேற்கு ஐரோப்பிய மார்க்சிய இயக்கங்களோடும் பாசிச எதிர்ப்பு இயக்கங்களோடும் கலந்து இருந்தனர். முதலில் பாரிஸில் தமது கட்சியமைப்பை உருவாக்கியிருந்த இவர்கள் நாசிகள் பாரிஸைக் கைப்பற்றியடுத்து தமது நாடுகடந்த கட்சியின் மையத்தை சுவிற்சர்லாந்துக்கு மாற்றினர். அப்போ சுவிஸ் பல நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளின் புகலிடமாயிருந்தது. அங்கிருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளோடு தொடர்புகள் பேணப்பட்டன. பத்திரிகைகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள் என்பன இங்கு அச்சிடப்பட்டு ஜெர்மனிக்குக் கடத்தப்பட்டன.

ஜெர்மனிக்கு வெளியேயான கட்சி பிரான்ஸ் டாலெம் (Franz Dahlem), பவுல் பேர்ட்ஸ் (Paul Bertz), பவுல் மேர்கர் (Paul Merker) போன்றோரால் இயக்கப்பட்டது. இவர்கள் பெரும் தொகையான ஜெர்மனியக் கம்யூனிஸ்டுகளை வழிநடத்தியதோடு பாசிச எதிர்ப்பு சக்திகளோடும் இறுக்கமான தொடர்பைக் கொண்டு இருந்தனர். இச்சமயத்தில் இங்கு இயங்கிய உதவி நிறுவனமான USC இல் பணிபுரிந்த நொயல் பீல்ட் (Noel Field) கேர்டா பீல்ட் (Herta Field) என்ற தம்பதிளின் உறவுகளையும் கொண்டு இருந்தனர். இந்த உதவி நிறுவனம் அமெரிக்க நிதியுதவியுடன் இயங்கியது. அப்போ அமெரிக்க உளவுத்துறையான OOS (Office Of Strategie) சோவியத் உளவுத்துறையுடன் இணைந்து ஐரோப்பாவில் நாசிக்கு எதிராக செயற்பட்ட காலமாக அது இருந்தது. நொயல் பீல்ட் கம்யூனிஸ்டுகளுடனான தொடர்பையடுத்து அவர் சோசலிச அனுதாபியாக மாறியிருந்தார். ஜெர்மனிய கட்சியின் முக்கிய தோழர்களான புருணோ கோல்ட்கம்மர் (Bruno Gold hammer), வில்லி கிறைக்கமெயர் (Willy Kreike meyer), லெக்ஸ் என்ட (Lex Ende) உட்பட சகலருடனும் இவர் தொடர்பு கொண்டு இருந்தார். தென் பிரான்சில் முகாமில் அடைக்கப்பட்டு இருந்த சர்வதேசக் கம்யூனிஸ்டுகட்கு நொயல் பீல்ட், உணவு, உடை, மருத்துவ உதவி உட்பட பல உதவிகளை தொடர்ந்து வழங்கியதோடு அவர்கள் அங்கிருந்து தப்பவும் உதவிகள் புரிந்தார்.

நாசிகள் தோற்கடிக்கப்பட்டு வந்த சமயம் விடுவிக்கப்பட்ட ஜெர்மனியப் பிரதேசங்கட்கு செல்லவும் நிர்வாகத்தில் பங்கு கொள்ளவும் புதிய பாசிச எதிர்ப்பு அணிகளைத் தோற்றுவிக்கவும் நொயல் பீல்ட் உதவியாக இருந்தார். இவர் சோவியத் உளவுத்துறைக்குமாக வேலை செய்து வந்தார். யுத்தம் முடிந்த பின்னர் புடாபெஸ்ட் சென்ற போது அங்கு உளவாளியென்று கைது செய்யப்பட்டார். இச்சமயம் கங்கேரிக்குச் சென்ற ஜெர்மனியக் கம்யூனிஸ்டான இபொல்யா ஸ்டைன்பேர்கர் (Ibolya Steinberger) அவரின் கங்கேரிய மனைவியான பேர்ன்ட் ஸ்டைன்பேர்கர் (Berndt Steinberger) இரண்டு வயதுக் குழந்தையுடன் கைது செய்யப்பட்டார். இவர்கள் சோவியத் அதிகாரிகளது உத்தரவுப்படி ஜெர்மனியில் உள்ள தடுப்பு முகாமான (Karl-shorst) கார்ல் கோர்ஸ்ட்டுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களுடன் ஜெர்மனிய மண்ணில் ஸ்டாலினிசம் தன் களையெடுப்பைத் தொடங்கியது. 1949 ஒக்டோபர் 7இல் கிழக்கு ஜெர்மனி உதயமாகிவிட்டபோதிலும் சோவியத் அதிகாரமே இன்னமும் சகலத்தையும் கட்டுப்படுத்தியது. MWD சகல அரசு நடவடிக்கைகளையும் இயக்கியது. கட்டளையிட்டது. கண்காணித்தது. கிழக்கு ஜெர்மனியின் 'மக்கள் பொலிஸ்' (Volks Polizei) அதன் கட்டுள்தான் இயங்கியது. அரசியல் கைதிகள் கைது, விசாரணை, தண்டனை என்பன சோவியத் உளவுத்துறையிடம் இருந்தது.

கிழக்கு ஜெர்மனியின் பர்துகாப்பு மற்றும் நீதி, நிர்வாகத்துறைகள் யாவும் சோவியத் அதிகாரத்தின் கட்டளைகளை நிறைவேற்றும் அலகுகளாக இயங்கின. தீர்மானங்கள் ஸ்டாலினால் எடுக்கப்பட்டு கிழக்கு ஜெர்மனியக் கட்சித் தலைமைக்கு உத்தரவுகளாக அனுப்பட்டன. பிராக், வார்சோ, சோபியா, புடாபஸ்ட் ஆகியவைகளின் வரிசையில் கிழக்கு ஜேர்மனியிலும் ஸ்டாலினது கட்டளைப்படி பெரிஜா சோசலிசத்தின் துரோகிகளைத் தேடும் திருப்பணியைத் தொடங்கினான். மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்புடையவர்கள் தீவிரமான சர்வதேச உணர்வுடையவர்கள். ஸ்டாலினிசம் மேல் விமர்சனம் கொண்டோர் என்போர் முதல் இலக்காக இருந்தனர். கிழக்கு ஜேர்மனிய கம்யூனிஸ்டுகள் மேற்கு ஜேர்மனிய தோழர்களோடு தொடர்புடையவர்கள், கடந்த காலப் போராட்ட பிணைப்புடையவர்கள் என்பதால் களையெடுப்புகள் மேற்கு ஜெர்மனியக் கம்யூனிஸ்டுகட்கு எட்டிவிடாத எச்சரிக்கையுடன் சோவியத் உளவுத்துறையும் கிழக்கு ஜேர்மனியக் கட்சியும் செயற்பட்டன.

கிழக்கு ஜேர்மனிய சோசலிசக் கட்சியான SED யின் முக்கியமானவரும் அரசுத் தலைவருமான வால்டர் உல்பிறிக் (Walter Ulbricht) மொஸ்கோவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து ஸ்டாலினால் முதலில் அனுப்பப்பட்ட ஜெர்மனிய ஸ்டாலினிஸ்டுகளின் குழுவில் இருந்தவர். மொஸ்கோவில் இவரின் நெருங்கிய தோழர்களும் ஜெர்மனிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஏர்ன்ஸ்ட் தேல்மானின் முக்கியத் தோழர்களும் ஸ்டாலினால் கொல்லப்பட்ட சமயம் இவர் மூச்சடங்கி விமர்சன மற்றுக் கிடந்தவர். அதன் மூலம் தன் தலையைக் காத்துக் கொண்டவர். இவர் ஜெர்மனியின் சோவியத் ஜெனரலான சேறொவ்(Serow) இருவரும் இணைந்து சோவியத் உளவுத்துறையின் ஆலோசனையுடன் கைது செய்யப்பட வேண்டியவர்களில் மொஸ்கோவினால் தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்படி கம்யூனிஸ்டுகள் மேலான புனித வேட்டை தொடங்கியது. கிழக்கு ஜேர்மனி பிறந்து 14 நாட்களிலேயே ஸ்டாலினிசவாதியான கெர்மான் மாடேன் (Hermann Matern) கம்யூனிஸ்ட் கட்சியுள் மேற்குலக உளவாளிகள் புகுந்து விட்டதாய் அபாய அறிவிப்புச் செய்தார். கட்சி தன்னுள்ளே 5ம் படைகளைத் தேடத் தொடங்கியது. வால்டர் உல்பிறிக்ட், கெர்மான் மாடேன், கேர்த்தா கேவ்கோ (Hertha Geffko) போன்றவர்களைக் கொண்ட கட்சியின் தலைமையான ஸ்டாலினால் பதவியில் இருத்தப்பட்டவர்கள் மேற்கு ஜெர்மனியில் இருந்து குடியேறிய ஸ்டாலினின் மேல் விமர்சனம் உடையவர்களை சந்தேகித்ததோடு அவர்களைக் கைது செய்ய ஆதாரங்கள் தேடப்பட்டன. நொயல் பீல்டுடன் பிரான்ஸ் சுவிற்சர்லாந்தில் தொடர்பு கொண்டு இருந்தவர்களும் சந்தேகத்துக்குரியவர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டு இருந்தனர்.

பவுல் பேர்ட்ஸ், பவுல் பாஎன்டர் (Paul Baender), மக்ஸ் ரைமான் (Max Reumann), மரியா (Maria) போன்ற கம்யூனிஸ்டுகள் முதல் வரிசையில் கைதாகினர். KPயின் உறுப்பினரும் பழைமையான தொழிற்சங்கவாதியுமான கான்ஸ் போக்மான் இக் கைதுகளை எதிர்த்ததோடு நொயல் பீல்டுக்கு எதிராய் செய்யப்படும் பிரச்சாரம் பொய்யானது என்று கண்டித்தார். இவரைக் கைது செய்ய முயற்சிகள் எடுக்கப்படுவதை அறிந்து இவர் நாட்டைவிட்டு வெளியேறினார். கைது செய்யப்பட்ட KPயின் மத்தியகுழு உறுப்பினரும் பிரான்ஸ், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் KPயை நிர்வகித்தவருமான பவுல் பேர்ட்ஸ் நொயல் பீல்டுடன் தொடர்புடைய ஏகாதிபத்திய உளவு நபர் என்று குற்றம் சாட்டப்பட்டார். இவர் 1950 ஏப்பிரலில் தற்கொலை செய்துகொண்டு இறந்து போனார். ஜியோர்ஜி அடெம் நாசிகளால் தேடப்பட்டு லத்தீன் அமெரிக்காவுக்கு தப்பிச் சென்ற வர். யுத்தத்தின் பின்பு கிழக்கு ஜேர்மனி திரும்பினார். இவரோடு பவுல் பாஎன்டர் போன்றோரும் 1951 நவம்பரில் கைது செய்யப்பட்டு துரோகிகள் என்று சுட்டமைக்கான காரணம் இவர்கள் சோவியத் யூனியனின் சோசலிசம் குறித்து மாறுபாடான கருத்துக் கொண்டிருந்தது ஆகும். கிழக்கு ஜேர்மனிய சோவியத் கட்டுப்பாட்டுக்குழுவின் முக்கிய ஆலோசகர் ஆக விருந்த விளாடமீர் செம்ஜோனேவ் (Wladimir Semjonow) தனது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பு கையில் கிழக்கு ஜேர்மனியின் முக்கிய அரசு, கட்சி இவைகளின் தலைவரும் கைது செய்யப்பட்டவர்கள் மேல் அனுதாபம் கொண்டு இருந்தவருமான ரோசா லுக்சம்பேர்க்கின் போராட்டத் தோழரான பீக் (Pieck) மீது வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார். கட்சியில் உளவாளிகள் எதிரிகள் நிறைந்துள்ளமைக்கு இவரின் போதியளவு விழிப்புணர்வு இன்மையும் காரணம் என்று குறிப்பிட்டார்.

1951 மார்ச் 22 இல் கைதாகிய கூர்ட் முல்லர் KPDயின் இரண்டாவது முக்கியத் தலைவராக இருந்தவர். 1930களில் சோவியத் யூனியனின் சோசலிசக் கட்டுமானத்துக்காக உழைத்தவர். இவர் 1934 இல் பாரிஸில் ரொட்ஸ்கியின் மகனான லேவ் சேடெவ் (Lew Sedow)யைச் சந்தித்து ஜெர்மனி திரும்பிய பின்பு சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததாயும் ரொட்ஸ்கியவாதி என்றும் குற்றம் சாட்டப்பட்டது. மேலும் இவரும் மேற்கு ஜெர்மனிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான மக்ஸ் ரைமான் உடன் இணைந்து பிரிட்டிஷ் உளவுத்துறைக்கு வேலை செய்ததாயும் இவர்கள் மேல் பழிகள் போடப்பட்டன. இதே சமயம் மேற்கு ஜேர்மனிய அரசு நாசிகட்கு பொது மன்னிப்பு வழங்கி விட்டு பல ஆயிரம் கொம்யூனிஸ்டுகள் பாசிச எதிர்ப்பு போராட்ட நபர்கள் மீது வழக்கு, கைது நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தது. 'சோவியத் கட்டுப்பாட்டுக் குழு' சோவியத் உளவுத்துறையான MWD விசேடமாக யூகோஸ்லாவியாவுடன் தொடர்புடையவர்கள் டிட்டோ அனுதாபிகளையும் தேடியலைந்தன. அத்தோடு கட்டுப்பாட்டுக் குழுவைச் சேர்ந்த வசிலி. ஈ. சுய்கோவ் (Wassili. I. Tschuikov) ரொட்ஸ்கிய வாதிகளை அழிப்பதில் பெரு விருப்பு கொண்டவன். இவனின் ரொட்ஸ்கிய சிந்தனையாளர்கள் மேலான நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து ஜி. போட்யூகோவ் (G. Bordjugow) என்ற வரலாற்றாய்வாளர் தனியே எழுதியுள்ளார்.

உல்பிறிஜ் இன் நடவடிக்கைகளில் பிற்காலத்தில் மீல்க (Mielke) போன்ற ஸ்டாலினிசவாதிகளும் இணைந்து கொண்டனர். 1950 யூலை 3 இல் நடந்த SED யின் மாநாட்டில் கங்கேரியில் நடந்து வரும் வழக்குகள் பற்றியும் சோசலிச அனுதாபியும் கம்யூனிஸ்டுகளுக்காக பல பணிகள் செய்வருமான நொயல் பீல்ட் கங்கேரியில் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளமைக்கு எதிராக குரல்கள் எழுந்தன. அதற்குக் கட்சித் தலைமை நொயல் பீல்ட் வாதிகள், ரொட்ஸ்கிய வாதிகள் இங்கும் கட்சியை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்று பதிலடி கிடைத்தது. கட்சியுள் கூட விமர்சன சுதந்திரம் இன்மை, கருத்துச் சொல்ல முடியாதளவு நிலையும் முத்திரை குத்தலும் நடைபெற்றது. ஸ்டாலினிச கண்காணிப்பு முறையில் கட்சி செயற்பட்டது. உளவுத்துறை கட்சியின் ஸ்டாலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னிசத்துக்கு மாற்றாய் எதிர்க்குரல் தந்தவர்களை தொடர்ந்து கண்காணித்தது. விமர்சனப் பண்புகள் மறைந்து ஸ்டாலின் சந்தேகத்துக்கு இடமற்ற விமர் சனம் கடந்த அப்பழுக்கற்ற தலைவராக்கப்பட்டார். தனிமனித வழிபாடு வெறித்தனமாய் நிலவியது. ஸ்டாலின் மனித குலத்தின் தலைவர் (Fuhrer der Menschheit) எனப்பட்டார். எழுத்திலும் பேச்சிலும் ஸ்டாலின் காவிய நாயகன் ஆக்கப்பட்டார். தெய்வீக வழிபாட்டுக் கோலங்கள் நிலவின. ஸ்டாலினை விமர்சித்தோர் சோவியத் யூனியனின் சோசலிசத்தை கண்டித்தோருக்கு கம்யூனிச விரோதி என்று வழக்கும் தண்டனையும் காத்திருந்தது.

இந்த மாநாட்டில், பீக் போன்ற, பழம் கம்யூனிஸ்டுகள்கூட ஸ்டாலினிச பயங்கரங்கட்கு எதிராய் நாவடக்கம் காட்டியதோடு கட்சியுள் உல்பிறிஜ் மற்றும் மொஸ்கோவின் கட்டளைகளை நியாயப் படுத்தும் பரிதாபகரமான நிலையில் இருந்தனர். மீல்க இந்த மாநாட்டில் பேசும்போது "எம் விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. ரொட்ஸ்கியவாதிகளை எம் வரிசையில் இருந்து அகற்ற வேண்டும்" என்று தன் ஸ்டாலினிச விசுவாசத்தை காட்டிக் கொண்டார். நொயல் பீல்ட் வாதிகள் பற்றி ஆதாரமற்ற வசைகள் இவரால் பேசப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கட்சி மற்றும் அரச பதவிகளில் இருந்து அகற்றப் பட்டனர். தற்கொலை செய்து கொண்ட பவுல் பேர்ட்ஸ் கூட கட்சியை விட்டு விலக்கப்பட்டதாய் அறிவிக்கப் பட்டது. கம்யூனிச இலட்சியத்துக்குத் தம்மை அர்ப் பணித்த பல கம்யூனிஸ்டுகள் பழி வாங்கப்பட்டபோது இக்கொடுமைகளை எதிர்க்கத் துணிவின்றி ஸ்டாலினிச அதிகார நடைமுறைகளை கண்டிக்க அஞ்சி பெரும் தொகையான கட்சி நபர்கள் இருந்தனர். கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமானவரான பவுல் மார்க்கர் பிரான்சில் இருந்த சமயம் 1939இல் ஏற்பட்ட கிட்லர் - ஸ்டாலின் ஒப்பந்தத்தை கடுமையாய் எதிர்த்து கட்சியுள் போராடியவர். ஜெர்மனிய கம்யூனிஸ்ட் கட்சியின் பெரும்பகுதி இந்த ஒப்பந்தத்தைக் கண்டு திடுக்கிட்டது. அப்போ ஜெர்மனியச் சிறையில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான ஏர்ன்ஸ்ட் தேல்மான் (Ernst Thalmann) ஒப்பந்தத்தையிட்டு கடுமையான அதிர்ச்சியடைந்தார். இவர் 1928 முதல் ஸ்டாலினிச அரசியலை கையேற்றவர். ஸ்டாலினைத் திருப்திப் படுத்த ரோசா லுக்சம் பேர்க்கையே விமர்சிக்குமளவு போனவர். இவரை எதிர்த்து KPD யில் இடதுசாரி எதிர் அணி ஒன்று இயங்கியது. இதில் KPD யின் ஸ்தாபகர்களில் ஒருவரான கைன்றிச் பிராட்லர் (Heinrich Bradler)ரும் அடக்கம்.

இவர்கள் 'தொழிலாளர் அரசியல்' (Arbeiter Politik) என்ற தத்துவார்த்த பத்திரிகையையும் வெளியிட்டனர். ரோசா லுக்சம்பேர்க்கின் 'ஸ்பார்ட்டாகோஸ்' அமைப்பில் இருந்தவரும் தொழிற்சங்கவாதியுமான யாக்கோப் வால்சர் (Jacob Walcher) 'செங்கொடி' (Roten Fahne) பத்திரிகை ஆசிரியர் ஓகஸ்ட் தால் கைமர் (August Thalheimer) உட்பட பெரும் தொகையான 1918 நவம்பர் புரட்சியிலும் போராட்ட மரபுகளிலும் இருந்து வந்த கம்யூனிஸ்டுகள் இடதுசாரி எதிர் அணியில் இருந்தனர். இவர்கள் SPD யுடன் KPD தற்காலிகமாக உடன்பாட்டுக்குச் செல்ல வேண்டும். பாசிஸ்டுகளை இதன் மூலமே எதிர் கொள்ள முடியும் என்றபோது ஸ்டாலின் 'சமூக பாசிஸ்டுகள்' (Sozialfaschisten) என்று SPDக்கு எதிராய் தீர்ப்பு வழங்கி விட்டு பின்பு பாசிஸ்டுகளோடு ஒப்பந்தத் துக்கு தானே போனார்.

கிட்லர்-ஸ்டாலின் ஒப்பந்தம் ஏற்பட்டபோது ஆயிரக் கணக்கான கம்யூனிஸ்டுகள் சிறையில் இருந்தனர். யூத அழிப்பு நடந்து வந்தது. குறைந்த பட்சம் சிறையில் இருந்த கம்யூனிஸ்டுகள் ஒருவர்கூட விடுவிக்கப் படவில்லை. ஏர்ன்ட் தேர்லமான் தன் சிறைக்குறிப்புகளில் ஸ்டாலின் மேலான அவநம்பிக்கையை வெளியிட்டுள்ளார். ஸ்டாலினது ரஷ்ய வகைப்பட்ட தேசிய சோசலிசம் சர்வதேச நெருக்கடிகளில் இருந்தும் பாசிசத்திடமிருந்தும் தப்பித்துவிட முடியும் என்று மதிப்பிட்டு தோல்வி கண்டது. அதன் தீர்க்கதரிசனமின்மையை விமர்சித்தவர்களை எதிர்கொள்ள அது வன்முறைகளை சரணடைந்தது. ஸ்டாலினது தவறுகட்கு ஜெர்மனிய மற்றும் ஐரோப்பிய கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல முழு சோவியத் யூனியனும் பின்பு விலை கொடுக்கவேண்டி வந்தது.

கைது செய்யப்பட்ட பவர் (Bauer) கிழக்கு ஜெர்மனியின் அரச ஒலிபரப்புத்துறைக்குப் பொறுப்பாயிருந்தவர். கோல்ட் கம்மர் செய்தித் தொடர்புத்துறை நிர்வாகியாகவும் கிறைக்கமாயர் அரச புகையிரதப் பிரிவை நிர்வகித்தவர். 1951 பெப்ரவரியில் கைதான பிரிட்ஸ் ஸ்டேலிங் (Fritz sterling) நாசிகளின் வதை முகாமில் இருந்து பின்பு 1945 இல் ஜெர்மனிய பயண் மாநிலத்துக்குத் திரும்பி அங்கு கட்சியை புனரமைத்தவர். மரியா நீண்ட காலமாய் மார்க்சிய பெண்ணியவாத இயக்கங்களில் இருந்தவர். 'ஜனநாயகப் பெண்கள் அமைப்பு' என்ற அமைப்பில் முக்கியமானவர். எலக்ஸ் என்ட கட்சிப் பத்திரிகையான 'Neues deutschland'இன் பிரதம ஆசிரியராக இருந்தவர். இவர் 1951 ஜனவரி 15இல் தெளிவுபடுத்தப்படாத முறையில் மரணமடைந்தார். தற்கொலை எனவும் கருதப்படுகிறது.

கைதானவர்கள் பயமுறுத்தல், உளவியல் ரீதியான வதைகள், தண்டனை குறைக்கப்படும் என்ற ஆசை காட்டல்கள் மூலம் வாக்குமூலங்கள் பெற்றப்பட்டன. 1952இல் ஸ்டைன் பேர்க்கர், கான்ஸ் முல்லர் போன்றோர் மொஸ்கோவுக்கு அனுப்பப்பட்டு அங்கு இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு 25 வருட கட்டாய உழைப்பு முகாம் தண்டனை வழங்கப்பட்டு சைபீரியாவுக்கு கடத்தப்பட்டனர். பவர், எரிக்கா வால்லக், கிழக்கு ஜெர்மனியில் சோவியத்தின் Karl-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

horst கைதிகள் முகாமில் நடத்தப்பட்ட 3 நாள் இரகசிய விசாரணையின் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்பு மொஸ்கோவுக்கு அனுப்பப்பட்டு மரணதண்டனை 25 மற்றும் 15 வருட கட்டாய உழைப்புத் தண்டனையாக மாற்றப்பட்டது. கிழக்கு சைபீரியாவுக்கு இவர்கள் அனுப்பப்பட்டனர். 1952 இல் ஸ்டாலின் பெரிஜாவின் நேரடிக் கட்டளையினால் கைதாகிய பிரான்ஸ் டாலெம் நாட்டின் 3வது முக்கிய தலைவராக இருந்தவர். இவர் ரொட்ஸ்கியவாதியெனவும் 'சுதந்திர சோசலிசக்கட்சி' என்ற அமைப்பில் முன்பு அங்கம் வகித்ததாயும் குற்றம் சாட்டப்பட்டது. பவுல் மார்க்கர் தனது தலைமறைவு வாழ்வின்போது பிரான்சில் இருந்து வெளியிட்ட 'சுதந்திர ஜெர்மனி' என்ற பத்திரிகை ஊடாக சியோனிஸ்டுகட்கு ஆதரவாய் பிரச்சாரம் செய்ததாயும் குட்டி முதலாளிய சந்தர்ப்பவாதத் தவறுகள் இழைத்ததாயும் வழக்கில் குற்றம் இணைக்கப்பட்டது. பவுல் மார்க்கர் கைது செய்யப்பட்ட 1952 டிசம்பர் 3இல் தான் பிராக் நகரில் ஸ்லன்ஸ்கியும் அவரது 10 தோழர்களும் தூக்கிலிடப்பட்ட தினமுமாகும். கட்சியுள் சியோனிசக் குழுக்களை தேடுதல் என்ற தந்திரம் ஸ்டாலினின் யூதர்களை கட்சியில் இருந்து துடைக்கும் நடவடிக்கையாகும். 'யூத அடியைச் சேர்ந்த தோழர்கள்' (Genossen Judischer Abstammung) என்ற கௌரவப் பெயர்களில் யூதக் கம்யூனிஸ்டுகள் கண்காணிக்கப்பட்ட கேவலங்கள் நடந்தன. யூதர்களின் அமைப்பான VVN மீதும் தாக்குதல் நடந்தது. அதன் பொறுப்பாளரான சூக்கர்மான் (Dr. Zuckermann) தான் கைது செய்யப்படவுள்ளதை அறிந்து தப்பி மேற்கு ஜெர்மனிக்கு ஓடினார். மொஸ்கோவினது கட்டளைப்படி பிடிக்கப்பட்ட பிரான்ஸ் டாலெம் ஸ்பெயினில் சர்வதேச அணியில் யுத்தம் செய்தவர். நாசிகளிடம் பிடிபட்டு தடுப்பு முகாமில் இருந்து யுத்த முடிவில் சாகும் தறுவாயில் வெளியேவந்த யூதக் கம்யூனிஸ்ட். உயர்ந்த சர்வதேசியவாதி.

ஸ்டாலின் இறந்து இரண்டு மாதத்துள் சோசலிச உலகின் போக்கில் பல மாற்றங்கள் தென்பட்டன. குருசேவ் பதவிக்கு வந்து 43 நாட்களில் பெரிஜா கைதானான். கால் நூற்றாண்டுக்கும் மேலான ஸ்டாலினிசப் பயங்கரவாதம் முதல் தடவையாக தரைதட்டிநின்றது. கிழக்கில் சோவியத் அதிகாரத்தின் ஒரு பகுதி மொஸ்கோவுக்கு திருப்பி அழைக்கப்பட்டது. சோசலிச நாடுகளிலும் பழைய கெடுபிடியும் இறுக்கமும் தளர்ந்து வந்தன. இருந்தபோதும் கிழக்கு ஜெர்மனிய அரசுத் தலைவர் உல்பிறிஜ் வழக்குகளை தொடர்ந்து நடத்தினார். தனிமைச் சிறையில் வைக்கப்பட்டு இருந்த பவுல் மாக்கர் 1955 மார்ச் 30இல் 8 வருட கட்டாய உழைப்பு சிறை விதிக்கப்பட்டது. கலாச்சாரத்துறையின் நிர்வாகியாக இருந்த அலெக்சாண்டர் அபூச் (Alexander Abusch) ரொட்ஸ்கியவாதி, சியோனிச கும்பலைச் சேர்ந்தவர் என்று



ஸ்டாலின்

சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. 1955 இல் இறுதியில் மொஸ்கோவின் வேண்டுதலையடுத்து பெரும் பகுதியினர் விடுதலை செய்யப்பட்டனர். அடக்குமுறைகள் தணிந்ததையடுத்து கட்சியின் அடிமட்டங்களில் துணிவு தென்பட்டது. எனினும் கட்சியுள் 5வது மாநாட்டில் உல்பிறிஜ் கட்சிக்கு பெரும் சேதம் விளைவிக்கவில்லை என்று பெரும்பான்மையாக ஸ்டாலினிஸ்டுகளின் ஆதிக்கத்தில் இருந்தவர்களினால் உல்பிறிஜ் காப்பாற்றப்பட்டார். 300க்கும் மேற்பட்ட கட்சியின் முக்கிய கம்யூனிஸ்டுகள் மரணமடையவும் சிறை வாழ்வு, கட்டாய உழைப்பு முகாம் இவைகட்கு அனுப்பப்படவும் காரணமானவர்கள் தண்டிக்கப்படவில்லை. இன்னும் பல நூறு கட்சி உறுப்பினர்கள் மேல் கொடுக்கப்பட்ட தொல்லைகளினால் அரசியலில் இருந்து ஒதுங்கியவர்களும் நாட்டை விட்டு வெளியேறியவர்களும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் கடைசிவரை எந்த நீதியையும் அடையவில்லை.

1955 இல் சைபீரியச் சிறையில் இருந்து எரிக்கா வாலாக், கூர்ட் முல்லர், லியோ பவர், பிரிட்ஸ் ஸ்பேர்லிங், பேர்ன்ட் ஸ்டைன்பேகர் என்போர் விடுதலையாகி பலர் கிழக்கு ஜெர்மனி செல்லாமல் மேற்கு ஜெர்மனிக்கும் மற்றைய நாடுகட்கும் சென்றனர். 1956 இல் ஸ்டாலின் கால அநீதிகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு போலி ஆவணங்கள் அடிப்படையில் அரசியல் பழிவாங்கலாக விசாரணை மற்றும் வழக்குகள் நடைபெற்றதாய் அறிக்கை சமர்ப்பித்தது. பிரான்ஸ் டாலெம் போன்ற சிலர் கட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஸ்டாலினிச வளர்ப்புகளான உல்பிறிஜ், மீல்க போன்றவர்கள் இன்னமும் கட்சியில் அதிகாரம் கொண்டு இருந்தனர். கிழக்கு ஜெர்மனிய ஸ்டாலினிச அதிகா ரத்தை சகியாமல் நாட்டை விட்டு வெளியேறிய கம்யூனிஸ்டு கட்கு 'verrater' (துரோகி) பட்டம் தொடர்ந்து வழங்கப் பட்டு வந்தது. 1971இல் மீல்க அரசியல் குழு, அரச பாதுகாப்புத்துறை (Staatssicherhrit) இரண்டுக்கும் பொறுப்பானார். ஸ்டாலின் பெயர்கள் சகல இடங் களில் இருந்து நீக்கப்பட்ட போதிலும் எந்தக் கருத்து மற்றும் விமர்சன சுதந்திரமும் மேற்கு ஜெர்மனிய முதலாளிய அமைப்பைச் சாட்டிக்கொண்டு அடக்கப் பட்டன.

1956இல் வோல்வ்காங் கரிஸ்ச் (Wolfgang Harich) 'ஜெர்மனிய சோசலிசத்துக்கான அடிப்படைகள்' என்ற நூல் வெளியிட்டமைக்காக 8 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இவர் லூக்காஜ் இன் நூல்கள் பலவற்றை வெளியிட்டவர். SED யின் கட்சிப் பள்ளிக்குப் பொறுப்பாயிருந்த வெல்வ்காங் லியோன் காட் (Wolfgang Leonhard) யூகோஸ்லாவியாவில் ஸ்டாலின் தலையீட்டை எதிர்த்ததால் சோசலிச விரோதி என்ற பட்டத்தோடு மேற்கு ஜெர்மனிக்கு தப்பியோடினார். இவரின் தாயார் ரோசா லுக்சம் பேக்கின் ஸ்பார்ட்டாகோஸ் இயக்கத்தில் இருந்தவர். 1920 இல் இளம் சோவியத் யூனியனின் வர்த்தகப் பிரதிநிதியாய் பெர்லினில் வேலை செய்தவர். இவர் நாசிகளிடமிருந்தது தப்பி சோவியத் யூனியனுக்கு தம் சிறிய மகனோடு சென்றபோது கைது செய்யப் பட்டு கட்டாய உழைப்பு முகாமுக்கு அனுப்பப் பட்டார். கிழக்கு ஜெர்மனிய ஸ்டாலினிசம் சோசலிச சிந்தனைக்குப் புறம்பான ஒற்றைத்தன்மையான தத்துவ விளக்கங்களையும் சமூக இயங்கியலுக் கெதிரான ஸ்டாலினிச அரசியலையும் கொண்டு இருந்தது.

## போலந்து

நீண்டகாலமாய் போலந்தின் களையெடுப்புகள் அறியப்படாத விடயமாகவே இருந்தது. மேற்கு ஐரோப்பிய முதலாளியப் பிரசுரங்கள் போலந்தின் கத்தோலிக்க மதம் மேலான அடக்குமுறைகட்காக மட்டுமே கதறியழுதன. 1953 இல் நடைபெற்ற பிசப் காட்ஸ் மாரெக்ஸ் (Bischef Kacz marex) கந்தினால் வீசின்ஸ்கி (Kardinal Wyszynski) உட்பட கிறிஸ்தவ அமைப்பினர் மீது நடந்த உளவு சம்பந்தமான வழக்குகள் மேற்கு ஐரோப்பாவிலும் வத்திகானிலும் நீண்ட நாட்களாகப் பேசப்பட்டன. அவை பற்றிய இரங்கியமும் வெளியீடுகள் பல வெளிவந்தன. கொடிய கம்யூனிசத்துக்கு எதிரான கிறிஸ்தவத்தின் துயரம் நிறைந்த போராட்டம் பற்றி எழுதிக் குவிக்கப்பட்ட ா. ஆனால் கம்யூனிஸ்டுகள் மேலான அழிப்புகள் 1980களில் வார்சோ ஆவணக் காப்ப கங்களும் பின்பு சோவியத் யூனியனின் ஆவணங்க ளும் திறக்கப்பட்ட பின்பே ஸ்டாலின் கால கொடு மைகள் ஆதார பூர்வமாய் வெளிவந்தன. 1933-1938 இடையில் போலந்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய மானவர்கள் சோவியத் யூனியனில் கொல்லப்பட்டு விட்டனர். அப்போதைய கட்சியின் மத்தியகுழுவைச் சேர்ந்த 12 பேரும் இதில் உயிர் தப்பவில்லை. 1924இல் தொடங்கிய போலந்துக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தது. ரோசா லுக்சம்பேர்க்கின் தத்துவச் செல்வாக்குக்கு உட்பட்டு இருந்தது. போலந்து அரசுக்கும், பாசிசத்துக்கும் தப்பி சோவியத் யூனியனுக்கு இவர்கள் சோசலிசத் தாயகம் என்று ஓடிச் சென்றபோது அங்கு ஸ்டாலினிசத்திடம் பிடிபட்டு செத்தனர். ஸ்டாலின் இவர்களை ஆரம்ப முதலே 'லுக்சம்பேர்க் வாதிகள்' என்று வெறுத்து வந்தார். லெனினியத்தின் பகைவராக ரோசா லுக்சம்பேர்க் இட்டுக் கட்டப்பட்டார். ரோசா லுக்சம்பேர்க் ரொட்ஸ் கியைப் போன்று ஆபத்தானவராக ஆக்கப்பட்டார். 1937 டிசம்பர் 2ம் திகதி போலந்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களை கொல்லும்படி ஸ்டாலின் கட்டளை பிறப்பித்தமைக்கான ஆதாரங்கள் இன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பாசிஸ்டுகள் போலந்தின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கு ஏற்படுத்த முடியாத அழிவை ஸ்டாலினிசம் ஏற்படுத்தியது. அரசியல் வலிமை கொண்ட கட்சியின் உயர் மட்டம் முழுமையாய் அழிக்கப்பட்டு விட்டது. போலந்து கம்யூனிஸ்ட் கட்சி 1938 ஒகஸ்ட் 16 இல் ஸ்டாலின் வேண்டுகோளின்படி 3ம் அகிலத்தில் இருந்தும் வெளியேற்றப்பட்டு இருந் தது. இப்படியாக போலந்தின் கம்யூனிச இயக்கம் ஸ்டாலினால் முழுமையாக நாசமறுக்கப்பட்டது. சொற்பமான கொம்யூனிஸ்டுகளே மிச்சமாயிருந்தனர். நாசிகள் சோவியத் யூனியனை தாக்கியபோது சோவியத் யூனியனின் தடுப்பு முகாமில் உயிர் தப்பியிருந்த போலந்து கம்யூனிஸ்டான கோமுல்கா (Gomulka) தப்பி போலந்துக்கு ஓடினார். அவர் அங்கு சென்ற சமயம் முழுமையாக கட்சி அழிந்தி ருந்தது. பாசிச எதிர்ப்பு அணியைக்கட்டும் தகுதி கொண்ட பெரும் பகுதி கம்யூனிஸ்டுகளை ஸ்டாலின் அழித்து துவசம் செய்திருந்த நிலையில் லண்டனில் இருந்து இயங்கிய போலந்தின் தற்காலிக அரசின் ஆதரவில் இயங்கிய 'தாய் நாட்டு இராணுவம்' என்ற அமைப்பே அங்கு ஆயுதம் ஏந்திப் போராடி வந்தது. இந்த அமைப்பு சோவியத் எதிர்ப்பையும் கொண்டு இருந்தது. தப்பி வந்த கோமுல்கா அவரின் நெருங்கிய தோழரான ஸ்ப்பிசால்ஸ்கி (Marian spychalski)யுடன் இணைந்து 'மக்கள் காவலர்கள்' என்ற விடுதலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படையை தொடங்கினார். இந்த அமைப்பு பாசிச எதிர்ப்புப் போராட்டத்தை போலந்து முழுவதும் பரவலாக்கியது.

1943 இறுதியில் சோவியத் உளவுத்துறையைச் சேர்ந்த போலஸ்லாவ் (Boleslaw) தலைமையில் சில ஸ்டாலினிச நபர்கள் போலந்தில் இரகசியமாய் பாரசூட் மூலம் இறக்கப்பட்டனர். இவர்கள் ஸ்டாலின் திட்டப்படி அவசர அவசரமாய் கோமுல்காவுடன் தொடர்பை ஏற்படுத்தினர். இவர்களிடையே ஏற்பட்ட உடன்பாட்டையடுத்து 'போலந்து தொழிலாளர் கட்சியின்' கீழ் 'வார்சோ குழு' அமைக்கப்பட்டது. அதன் செயலாளராக கோமுல்கா தெரிவு செய்யப் பட்டார். இவ்வாறாக கோமுல்கா உருவாக்கியிருந்த பாசிச எதிர்ப்பு அணியுள் ஸ்டாலினிச வாதிகள் புகுத்தப்பட்டனர். ஸ்டாலினிசத்திடம் அனுபவப்பட்ட வரான கோமுல்கா ஸ்டாலின் - பெரிஜா இருவரிடமும் மிகவும் எச்சரிக்கையுடன்தான் இயங்கினார். 1944இல் செம்படை போலந்து எல்லையை நெருங்கிக் கொண்டு இருந்த வேளையில் ஸ்டாலின் ஏற்பாட்டின் படி 'வார்சோ தேசிய ஆலோசனைச்சபை' (KRN) அமைக்கப்பட்டு இதற்குத் தலைவராக ஸ்டாலினிச வாதியான பீயரூட் (Bierut) நியமிக்கப்பட்டு சோவியத் பாதுகாப்புத்துறையின் ஏஜண்டுகளான யாக்கோப் பேர்மான் (Jakub Berman), ஸ்டாலினிஸ்லோ (Stanislow), ராட்கீவிக்ஸ் (Radkiewicz) போன்றோர் இதன் நிர்வாகத்துள் நுழைக்கப்பட்டனர். 1944 மார்ச் மாதம் போலந்து விடுதலை செய்யப்பட்டபின்னர் 'வார்சோ தேசிய ஆலோசனைச் சபை' உறுப்பினர்கள் மொஸ் கோவுக்கு அழைக்கப்பட்டனர். இதில் திட்டமிட்டு கோமுல்கோ அழைக்கப்படவில்லை. ஸ்ப்பிசால்ஸ்கி மட்டுமே அழைக்கப்பட்டார். இவர்கள் எதிர்காலப் போலந்து பற்றிய ஸ்டாலினின் போதனைகளைப் பெற்றுத் திரும்பினர்.

1944 யூன் மாதம் ஸ்டாலினிசப் புனிதப் பணிகள் தொடங்கின. முழு ஜெர்மனியர்களும் பிரகடனப் படுத்தப்படாத பாசிஸ்டுகளாக ஆக்கப்பட்டு பயங்கர வாதம் ஏவப்பட்டு குடியெழுப்பப்பட்டனர். லூப்லின் (Lublin) பகுதியில் இருநது சகல ஜெர்மனியர்களும் வெளியேற்றப்பட்டனர். 1944 இல் டிசம்பர் 31 புதிய போலந்து அரசு பிரகடனப்படுத்தப்பட்டு அரசுத் தலைவராக பீயரூட், பாதுகாப்பு அமைச்சராக சோவியத் உளவுத்துறை ஆளான ராட் கீவிக்ஸ் அரசுத்தலைவரின் முதன்மைச் செயலாளராக இன்னொரு சோவியத் உளவுத்துறை நபரான யாக்கோப் பேர்மான் போன்றோர் நியமிக்கப்பட்டனர். ப்பிசால்ஸ்கி இராணுவத்துக்குப் பொறுப்பாய் நியமிக்கப்பட்டார். ஆனால் போலந்தின் அதிமுக்கிய தலைவரான கோமுல்கா ஜெர்மனியிடமிருந்து மீட்கப்பட்ட பழைய போலந்தின் பிரதேசங்களை நிர்வகிக்கும் அரசின் பிரதிநிதியாக அதிகாரமற்ற பதவிக்கு நியமிக்கப் பட்டார். இவருக்கு கட்சியுள் செல்வாக்கு இருந்தது.

கட்சியின் செயலாளர் பதவியும் இவரிடம் இருந்தது. கட்சி, அரசு இரண்டிலும் புதிய சோசலிச அரசுக்கு வழிகாட்டல் என்ற பெயரில் சோவியத் யூனியன் முழு அதிகாரமும் கொண்டு இயங்கியது.

1948 யூன் 3ம் திகதி கட்சியின் மத்திய குழுவில் பேசிய கோமுல்கா போலந்தின் தனித்துவம் சுதந்திரம் இவைகளைப் பேசியதோடு கம்யூனிஸ்டுகள் தேசபக்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார். இதனூடு ஸ்டாலினிசத்தை வழிபடும் பீயரூட் தலைமையிலான பரிவாரங்களையே தாக்கினார். போலந்துக்கேற்ற சோசலிசம் பற்றிப் பேசிய அவர் கூட்டுறவுமயமாக்கல், தொழில்மயமாக்கல் இவை களில் அவதானம் தேவை என்றார். சோவியத் யூனியன் வகைப்பட்ட சோசலிசமயமாக்கலையே அவர் விமர்சித்தார். பீயரூட் தலைமையிலான ஸ்டாலி னிசவாதிகள் அவர் கூட்டுறவுமயமாதல், தொழில் மயமாதல் இவைகளை எதிர்ப்பதாயும் போலந்துக் கேற்ற சோசலிசம் என்பது மாக்சிய விரோதம், டிட்டோவின் பாதையையே கோமுல்கா முன்மொழி வதாயும் மறுதாக்குதலைத் தொடங்கினர். இது மொஸ்கோவுக்கு தாக்குதலைத் தொடுப்பதற்கான அரிய தருணமாயிருந்தது. ஸ்டாலின் தானே நேரடி யாக கோமுல்காவை கட்சிப் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அகற்றும்படி பீயரூட்டுக்கு செய்தி அனுப்பினார். பீயரூட் முதலில் எதிர்ப்பிரச்சாரத்தைத் தொடங்கினார். லெனியப் பாதையின் எதிரி, மார்க்சிய எதிர்ப்பாளர், டிட்டோ அனுதாபி என்று பகிரங்கமாக அரச பிரச்சார சாதனங்களின் உதவியுடன் கோமுல்கா மீது தாக்குதல் நடந்து, கட்சியுள் கோமுல் காவின் கருத்துப்பரிமாறலுக்கு இவ்வாறு ஸ்டாலி னிசத்துவ நடைமுறை பதிலளித்தது. தொழிலாளர் அரசின் கட்சியுள் கோமுல்கா போன்றோர் இருப்பது ஆபத்தானது என்று மொஸ்கோ தத்துவம் படித்தது.

ஆபத்து நெருங்கி வருவதை உணர்ந்த கோமுல்கா பின்வாங்கினார். தான் சுயவிமர்சனம் செய்து கொள் ளத் தயாராய் இருப்பதை அறிவித்தார். கோமுல்கா செய்த தவறு கட்சியுள் தனது கருத்துச் சுதந்திரத்தை பயன்படுத்தியதுதான். ஸ்டாலினிச அரசியல் அடிமை களை கோபமூட்டியதுதான். பீயரூட் 1930களில் ஸ்டா லினால் சோவியத் யூனியனில் வேட்டையாடப்பட்டு போலந்துக்குத் தப்பி வந்தவர். இவர் இப்போது ஸ்டாலினுக்குத் தன் அதிஉயர் விசுவாசத்தை நிரூபிக்க இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தினார். அடுத்து சோவியத் உளவுத்துறை நபரான ராட் கீவிக்ஸ் தன் சொந்த சகோதரனை 1930களின் ஸ்டாலினிச களை யெடுப்புக்குப் பறி கொடுத்தவர். அவரின் சகோதரரின் மனைவி இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்புதான் கட்டாய உழைப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டு இருந்தார். மக்கள் தொடர்புத்துறைத் தலைவராக இருந்த ஸ்டீபன் ஸ்டாஸ்சவாஸ்கி (Stefen Staszawski) சைபீரிய கட்டாய உழைப்பு முகாமில் கைதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாக இருந்தவர். கட்சியின் மத்தியகுழு உறுப்பினரான பிரான்கீஸ்செக் மாசூர்லீட் (Franciszek Mazurlitt) மொஸ்கோவில் விசாரணைக் கைதியாக அடைக்கப் பட்டு சித்திரவதை செய்யப்பட்டவர். எனவே இவர்கள் ஸ்டாலினிசத்திடம் பட்டுத் தெளிந்தவர்கள். எச்சரிக்கை யோடு ஒத்துழைத்தனர்.

கோமுல்கா கட்சியின் அடிமட்டத் தோழர்களிடம் பெரும் மரியாதை பெற்று இருந்தபோதும் கட்சியின் தலைமையில் இப்போது தனிமைப்படுத்தப்பட்ட நிலை. அவர் சுயவிமர்சனம் செய்து கொண்ட போதும் அவருக்குப் பாவமன்னிப்பு வழங்கப்படவில்லை. புதிய கோணத்தில் வசைகள் பொழியப்பட்டன. 'வலது தேசிய சந்தர்ப்பவாதி', 'கட்சியின் வலதுசாரிப் பிரிவின் தலைவர்', 'பணக்கார விவசாயிகளின் நண்பன்', 'டிட்டோவின் போலந்துப் பிரதிநிதி' என்று கோமுல்கா தாக்கப்பட்டார். 1948 செப்டம்பர் 2ம் நாள் கோமுல்கா அரசுத்தலைவரான பீயரூட்டை சந்தித்து தான் சகல கட்சி, அரசு நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்குவதாயும் தன்னை நெருக்கடிகளில் இருந்து விடுவிக்கும்படியும் வேண்டினார். அதற்கு அடுத்த நாள் கோமுல்கா கட்சியின் மத்திய குழு, அரசியல் குழு, கட்சிச் செயலாளர் ஆகிய பதவிகளில் இருந்து வெளியேற்றப் பட்டு இருப்பதாய் அறிவிக்கப்பட்டது. பின்பு இவரின் பொறுப்பிலிருந்த ஜெர்மனியிடமிருந்து மீட்கப்பட்ட பழைய போலந்தின் பிரதேசங்களை நிர்வகிக்கும் பொறுப்பும் பறிக்கப்பட்டு அரச காப்புறுதியின் பிரி வொன்றின் சிறிய அடையாளமற்ற பதவிக்கு நியமிக் கப்பட்டார். இவரின் நெருங்கிய தோழர்களான கிளிஸ்கோ (Kliszko), பீன்கோவ்ஸ்கி (Bienkowski), லோகா சோவின்ஸ்கி (Loga Sowinski) ஆகியோர் கட்சி மற்றும் அரச பதவிகளில் இருந்து வெளியேற்றப் பட்டனர். கட்சியின் புதிய செயலாளராக அரசுத் தலைவரான பீயரூட் ஏகமனதாக தெரிவானதாய் அறிவிக்கப்பட்டது. ஸ்டாலினிசத்தின் முதற்கட்ட புனித அரசியல் கடமைகள் முடிவடைந்தன.

கோமுல்காவுக்கு ஏற்பட்ட கதி பற்றிய அறிக்கை கள் உடனடியாக மொஸ்கோவுக்கு அனுப்பப்பட்டன. இதையடுத்து 1949 நவம்பர் 11ம் திகதி போலந்தின் மத்தியகுழுவுக்கு ஸ்டாலினிடம் இருந்து புதிய அறிவு றுத்தல்கள் வந்தன. டிட்டோயிசப் போக்கு, ஏகாதி பத்திய உளவாளிகட்கு எதிராகச் செயற்படாமை. முதலாளித்துவ சக்திகளை கட்சியுள் அனுமதித்தமை ஆகியவற்றுக்காக கோமுல்கா மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்று கேட்கப்பட்டு இருந் தது. இத்தோடு கோமுல்காவின் அரச காப்புறுதியின் அநாமதேயப் பதவியும் பறிக்கப்பட்டது. அவர் தன் சொந்தக்கிராமமான கூரோர்ட் கிறினிக்காவு(Kurort Krynica)க்கு திரும்பினார். உளவுத்துறையால் இவர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டதோடு வழக்குத் தொடர்வதற்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டு வந்தன. அதே சமயம் போலந்து உளவுநிறுவனமான பெஸ்பீக்கா (Bezpieka)வின் X பிரிவுக்குக் கைது செய்யப்பட வேண்டிய 'கோமுல்கா வாதிகளின்' பெயர்ப் பட்டியலை பீயரூட் அனுப்பினார். இந்த X பிரிவே கட்சியின் மத்தியகுழு உட்பட சகல கட்சி நபர்களையும் கண்காணித்து வந்தது. சோவியத்தின் NKWDக்குப் பொறுப்பாக போலந்தில் இயங்கிய பேயி ஜின் (Fejgin) இதன் பின்புறமாய் இருந்தான். 1949 செப்டம்பரில் X பிரிவு கங்கேரி சென்று உயர் மருத் துவ அதிகாரியான லியோன் கீகொங் (Dr.Leon Ge-cow)கைக் கைது செய்தது. இவர்மீது ஏகாதிபத்திய உளவாளி என்று சாட்டப்பட்டார். சூரிச்சில் மருத்துவம் பயின்ற காலத்திலேயே கம்யூனிஸ்டாக இருந்தவர். யுத்த சமயத்தில் செம்படையில் இணைந்து நாசிகட்கு எதிராய் போரிட்டார். இவரோடு இவர் மனைவியும் மருத்துவருமான ஜான் லிஸ் (Dr. Jan Lis), டொனியா லேச்மான் (Tonia Leachtmann), அன்னா டூராசி (Anna Duracz) உட்பட பல கம்யூனிஸ்டுகள் கைதா கினர். சிறையில் கடுமையான வன்முறையால் லியோன் கீகொங் இறந்து போனார். நாசிகளிடம் பிடிபட்டு தடுப்பு முகாமில் இருந்து யுத்தத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டவரான அன்னா டூராசி இவர்மேல் மேற்கொள்ளப்பட்ட வதைகளை தாங்க முடியாமல் தன் நாடியை சிறையில் அறுத்துக் கொண்டு தற்கொ லைக்கு முயற்சித்தார். இவரைப் போலவே மற்று மொரு சோசலிசப் பெண்மணியான டொனியா லெச் மான் பைத்தியமாகிப் போனார். இவர்கள் சகலர் மேலும் டிட்டோயிசத் தொடர்பு கோமுல்காவின் ஆதரவாளர்கள் என்று கதைகள் கட்டப்பட்டன.

1952 இல் பெரிஜாவின் ஆலோசனைப்படி பீரூட் தனது பாதுகாப்பு அமைச்சரான ரோம் கோங்ஸ்கியை பிராக் நகருக்கு அனுப்பி கோமுல்காவுடன் ஸ்லன்ஸ்கி, இதன் பின்பு இரண்டாம் கட்ட வேட்டை தொடங்கியது. 'கோமுல்காவின் தோழரும் மக்கள் இராணுவத்தின் பொறுப்பாளருமான ஸ்பிசால்ஸ்கி, உளவுத்துறையைச் சேர்ந்த பலரும் இவரோடு கைது செய்யப்பட்டனர். ஸ்பிசால்ஸ்கியின் சகோதரர் தாய் நாட்டு இராணுவத்தில் இருந்து நாசிகளால் கொல்லப் பட்டவர். எனவே இவர் வலதுசாரிப் போக்காளர் என்று கூறப்பட்டார். ஸ்பிசால்ஸ்க்கி 1948 இலேயே MWDஆல் சோவியத் எதிர்ப்பாளர் என்று கருதப் பட்டவர். இவர் போராட்டங்களினூடு உரமேறிய கம்யூனிஸ்ட் சமரசமற்றவர். விமர்சன உணர்வு கொண்டவர். பெரிஜா இவரை ஒட்ட வெறுத்தான். இவருக்கு எதிராய் தானே நேரடியாய் ஆர்வம் காட்டி னான். இவருடன் தொடர்புடைய மக்கள் இராணு வத்தின் ஜெனரல்களான மீசெயிஸ்லாவ் வாசாக் (Mieczyslaw Waczak) பியோட்ர்மான்கீவிக் (Piotr mankiewicz) இருவரும் கைதாகி கடும் சித்திரவதை மூலம் ஸ்பிசால்ஸ்கிக்கு எதிரான வாக்குமூலங்கள் பெறப்பட்டன. மக்கள் இராணுவத்தைக் கட்டியமைத்த வரான ஸ்டாலினிஸ்லோ டாட்டர் (Stanislaw Tatar)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்டாலின்

இவர்களுடன் தொடர்புடைய சதிக்கும்பலில் ஒருவராக்கப்பட்டார். இவர் முன்பு லண்டனில் இயங்கிய போலந்தின் தற்காலிக அரசின் ஆதரவாளராக இருந்தவர். பின்பு 1947 இல் போலந்து திரும்பி வந்தார். இவரே புதிய மக்கள் இராணுவத்தை சீர்திருத்தி அமைத்தவர். இவர் ஸ்பிசால்ஸ்கி, கோமுல்கா இருவரதும் சதிக்கும்பலின் கூட்டாளியாக்கப்பட்டார். ஸ்பிசால்ஸ்கி சிறையில் உறங்க முடியாத அளவுக்குக் கடுமையாய் சித்திரவதைக்குள்ளானார். சோவியத் உளவுத்துறையாலும் Xபிரிவாலும் தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் கையெழுத்திடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது.

1951 யூன் 31இல் வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. கோமுல்கா இதுவரை கைது செய்யப்படவில்லை. ஆனால் அவரின் தோழர்கள் சகலரும் பிடிக்கப்பட்டு விட்டனர். வழக்கு விபரங்கள் ஸ்டாலினது பார்வைக்கும் சென்று வந்தன. பிரிட்டிஷ், அமெரிக்க உளவுத்துறைகட்கு வேலை செய்தமை ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு திட்டமிட்டது ஆகியவை பிரதானமான குற்றங்களாக காட்டப்பட்டது. 1951 ஒகஸ்ட் 13இல் தீர்ப்புகள் வழங்கப்பட்டது. 99 முக்கியமான குற்றம் சாட்டப்பட்டவர்களில் 19 பேருக்கு மரண தண்டனையும் கட்டாய உழைப்பு முகாம், ஆயுள் தண்டனை என்பன விதிக்கப்பட்டன.

இவர்களில் ஒரு பகுதி உடனடியாய் தூக்கிலிடப் படவில்லை. சிலர் ஸ்டாலின் மரணத்தின் பின்பும்கூட உயிருடன் இருந்து கொல்லப்பட்டனர். இந்த வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்ட மறுநாள் கட்சி ஏடான 'Trybuna Ludu' கோமுல்கா தலைமையிலுள்ள வலதுசாரிகள், தேசியவாதிகட்கு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாய் எழுதியது. கோமுல்காவுடன் ஜெர்மனியிடமிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களில் பணி புரிந்த தோழர்களான டுபியெல் (Dubiel) கேஸ்லவ் (Czeslaw) போன்றோர் கெஸ்டப்போவுக்கு வேலை செய்ததாய் கைதாகினர். பாசிச எதிர்ப்புப் போராட்ட வீரரும் யுத்த சமயத்தில் சோவியத்தின் NKWDக்கு வேலை செய்தவருமான பொகுஸ்லாவ் கிறின்கீவிட்ச (Bogustlav Hrynkiewicz) இவர்களோடு பிடிக்கப்பட்டார். இவர் பாசிச எதிர்ப்புப் போரின்போது பல வீரச்செயல்களைப் புரிந்தவர். 'மக்கள் காவலர்' அமைப்பின் முக்கிய தலைவரும் மொஸ்கோ இராணுவப் பள்ளியில் பயின்றவரும் போலந்தில் MWD ஆளாய் செயற்பட்டவருமான அலெக்சாண்டர் கோவாஸ்க்கி, கட்சியின் மத்திய குழு உறுப்பினர் நோவோட்ஸ் கோஸ் போன்றோரும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டபோது நோவேட் கோஸ் இறந்து போனார். போலந்து உளவுத்துறையான 'பெஸ்பீக்கா' வில் உயர்பதவியில் இருந்த வாக்லாவ் டோப்ரெயின்ஸ்கி (Waclaw Dobrzynski) அப்பாவியான குற்றமற்ற கம்யூனிஸ்டுகளை கைது செய்வதை எதிர்த்தவர் கடும் சித்திரவதையில் இறந்தார்.

மேலே கைதானவர்கள் இறந்தவர்கள் சகலர் மீதும் கோமுல்காவின் சதிக்கும்பல் என்றே பெயரிடப்பட்டு இருந்தது. இறுதியாக கோமுல்காவின் நேரமும் வந்தது. 1951 ஒகஸ்ட் 1 திகதி ஸ்டாலினின் கட்டளைப்படி கோமுல்கா இரகசியமாய் கைதாகி அடைக்கப்பட்டார். தேசியவாதி, சியோனிஸ்ட், ரொட்ஸ்கியவாதி என்று இவரை விசாரித்த விசாரணையாளர்கள் இவரை ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தனர். 1.11.1951 இல் கட்சிப் பத்திரிகையான 'Tuybuna Ludu' கோமுல்கா தேசத் துரோகக் குற்றச்சாட்டில் கைதாகியிருப்பதாய் அறிவித்தது. வழக்குக்கான ஒழுங்குகள் நடைபெற்று வந்த சமயம் ஸ்டாலின் மறைவு குருசேவின் வருகை இவை நடைபெற்றன. போலந்தின் ஸ்டாலினிசத் தலைமையிடம் தளர்ச்சி தெரிந்தது. ஸ்டாலின் - பெரிஜாவின் போலந்து விசுவாசியான யோசப் ஸ்வேயாட்லோ மேற்கு ஜெர்மனிக்கு தப்பியோடி அங்கு ஏகாதிபத்தியத்தின் பிரச்சாரக் கூலியானான். 1954இல் குருசேவ்இன் வேண்டுகோளின்படி அமைக்கப்பட்ட விசாரணைக்குழு கம்யூனிஸ்டுகள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்தது. இதையடுத்து 1954 முடிவில் உயிருடன் இருந்த பலர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுவிக்கப்பட்டனர். ஆனால் கோமுல்கா, ஸ்பி சால்ஸ்கி இருவரும் விடுதலை செய்யப்படவில்லை. பல வருடமாய் கூட்டப்படாதிருந்த கட்சியின் மாநாடு 1955 இல் பலத்த நிர்ப்பந்தங்களின் மத்தியில் நடந்தது. குற்றமற்ற பெரும் தொகையான மனிதர்களும் தியாகங்கள் பல புரிந்த கம்யூனிஸ்டுகளும் தண்டிக் கப்பட்டதாய் கலகக் குரல்கள் எழுந்தன. ஸ்டாலினிச அடக்குமுறைகள் தளர்ந்து இருந்தமையால் சோச லிசக் கலாச்சாரமும் மனித நெறிகளும் மீறப்பட்ட தாய்க்கூட துணிந்து பேசப்பட்டது. கட்சியின் அடி மட்டத்தில் அடங்கியிருந்த கோபம் வெடித்தது. கோமுல்கா உடன் விடுதலை செய்யப்பட்டார். எனினும் ஸ்சால்ஸ்கி 1956 மார்ச் மாதத்திலேயே விடுவிக் கப்பட்டார்.

போலந்தின் சோவியத் ஆலோசகர்களாக செயற்பட்ட வோஸ்னெஸ்சென்ஸ்கி, ஸ்குல்பாய் செவ்ஸ்கி இருவரும் மொஸ்கோவுக்குத் திருப்பி அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். போலந்துக் கட்சி ஸ்டாலினிசக் களையெடுப்புகளால் பலவீன மடைந்து இருந்தது. பல முக்கிய கம்யூனிஸ்டுகள் பலநூறு பேர் சிறைவாழ்வுக்கும் 50 பேருக்கு மேல் மரண தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டு இருந்தனர். சுயநலமும் சொந்த அதிகாரத்துவ இருப்புகட்கும் ஆட்பட்டுப்போன ஒரு கும்பலே ஸ்டாலினிசத்தின் பெறுபேறாய் அரச கட்சி அதிகாரங்களில் நிரம்பி நின்றது. குருசேவ்வின் வருகையின் பின்பான ஸ்டாலினிச அதிகார் வாழ்வின் தளர்வு தொழிலாளர் களின் கிளர்ச்சிகளை வெளிப்படையாக உருவாக்கின. 1956 யூன் மாதம் பொஸ்னானில் (Poznanஇல்) தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் வெடித்தன. நாடு முழுமையும் வேலை நிறுத்தங்கள் பரவி வந்தன. இச்சமயத்தில் அதிகாரத்திலிருந்த ஸ்டாலினிச வளர்ப் புகள் தம்மைக் காத்துக் கொள்ள தொழிலாளர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று இருந்த கோமுல் காவை உடனடியாகக் கட்சியில் சேர்த்துக் கொண்ட னர். இரண்டு மாதத்துக்கு இடையில் அவர் கட்சியின் செயலாளர் ஆக்கப்பட்டார். ஸ்சால்ஸ்கி பாதுகாப்பு அமைச்சராக்கப்பட்டார். ஸ்டாலினிச அதிகார அமைப்பு புதிய நிலைகட்கு ஏற்ப தன்னை தகவ மைத்துக் கொண்டு இயங்கியது. 1970இல் தொழி லாளர் கலகங்கள் ஏற்பட்டபோது கோமுல்கா பதவியை விட்டு விலகினார்.

போலந்து, வரலாற்றில் நீண்ட காலம் தனது சுதந்திரத்துக்காக ஒரு புறம் ரஷ்யாவுடனும் மறுபுறம் ஜெர்மனியுடனும் போராடியது. 18ம் நூற்றாண்டில் தன்பக்கத்து நாடுகளால் பங்கிடப்பட்டு உலக வரைபடத்திலிருந்து மறைந்தது. 1ம் உலக யுத்தத்தில் மீண்டும் பிறந்த போதும் 1939 கிட்லர்-ஸ்டாலின் ஒப்பந்தத்தால் மீண்டும் கொள்ளையிடப்பட்டது. 2ம் உலக யுத்தத்தின் முடிவில் ஸ்டாலினிசத்தின் பிடியுள் வந்தது. போலந்தின் விவசாய உறவுகளின் வலிமை தேசியவாத பண்புகள் என்பன புரட்சிகர போக்குகட்கு எதிராய் நின்றது. ஸ்டாலினிசம் பண்படாத முரட்டுத் தனமான ரஷ்ய தேசிய சோசலிசத்துடன் போலந் துக்குள் நுழைந்தது. போலந்துக்கு எந்த சோசலிச முன்னுதாரணத்தையும் அது கற்றுத்தரவில்லை. போலந்தை தொழில் மயமாக்குவதில் பெரும் வெற்றிகளைச் சாதிக்க முடியவில்லை. மறுபுறம் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் ஜனநாயகத்தை வழங்கவும் ஸ்டாலினிச அதிகாரத்துள் இடம் இருக்கவில்லை. ஸ்டாலினிசத்து எதிரான முரண்பாடுகள் வெடித்தபோது அது 'சொலிடார்னோ' அமைப்பின் பிற்போக்கு பிடியுள் சென்றது. வரலாறு சோசலிசத்துக்கு வழங்கிய புரட்சிகரமான வாய்ப்பை ஸ்டாலினிச அதிகாரம் மீண்டும் ஏகாதிபத்திய நலன் களிடம் பறி கொடுத்தது. ●



**பாட்டாளிகளின் உலகம் தழுவிய சகோதரத்துவம் என்பது பூமியின் மிக உயர்ந்ததும் மிகப்பெரிய புனித மானதுமான ஒன்று; அதுதான் என்னுடைய வழி காட்டும் நட்சத்திரமாகவும் என்னுடைய இலட்சிய மாகவும் என்னுடைய தந்தை நாடாகவும் இருக் கின்றது. இந்த இலட்சியங்களுக்கு நான் உண்மை யற்றவளாக இருப்பதைவிட மடிந்துபோவது மேல்.**

— ரோசா லுக்ஸம்பேர்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமர்த்யா சென்னின் பொருளியல் பார்வை
# -
## ஒரு சிறு அறிமுகம்

சந்துஷ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

1933இல் வங்காளத்தில் பிறந்த அமர்த்யா சென் இரவீந்திர நாத் தாகூரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சாந்திநிகேதனில் தனது கல்வி வாழ்வைத் தொடங்கினார்.
நோபல் பரிசு பெற்ற ஆறாவது இந்தியர் இவர். பொருளியல் நோபல் பரிசு பெற்ற முதலாவது ஆசியர். 1943இல் ஏற்பட்ட மாபெரும் வங்காளப் பஞ்சம், ஒன்பதரை வயதுச் சிறுவனாக இருந்த சென்னின் குடும்பத்தையும் பாதித்தது. பஞ்சம் பற்றிய அவரது ஆழமான ஆய்விற்கு அந்நாள் அனுபவங்களும் நினைவுகளும் ஊற்றாய் அமைந்தன என்கிறார் அவர்.

அதற்கு முன் கொஞ்சம் .....,

- 3 பில்லியன் மக்கள் ( அதாவது உலகச்சனத் தொகையில் ஏறக்குறைய அரைவாசியினர்) 2 டொலரை நாட் சம்பளமாகப் பெறுகின்றனர்.
- 1.3 பில்லியன் மக்கள் ஒரு டொலரை நாட் கூலியாகப் பெறுகிறார்கள். இது 2015இல் இரண்டு பில்லியனாக உயரலாம்.
- உலக மக்களில் முக்கால் பகுதியினர் கிராமங்களில் வாழுகின்றனர்.
- 1.5 பில்லியன் மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதிகள் இல்லை. ஒரு நாளுக்குத் தேவையான நீரின் அளவு 1950இல் இருந்ததை விட 50 மடங்குகள் அதிகரித்துள்ளது.
- இரண்டு மில்லியன் மனிதர்கள் மின்சாரம் இல்லாது வாழ்கின்றனர்.
- 130 மில்லியன் பிள்ளைகளுக்கு பாடசாலை வசதிகள் இல்லை. காலமெல்லாம் கல்வியறிவில்லாமல் வாழவேண்டியுள்ளனர்.
- தென்னாசியாவில் 43%மான சனத்தொகையினர் பட்டினியால் வாடுகின்றனர். தென் கிழக்காசியாவில் இது 26%. சகாராப்பகுதி ஆபிரிக்காவில் இது 39%. 2015ல் இதை அரைவாசி ஆக்குவதே பெரிய விசயம்.

இனி....,

பாரம்பரியப் பொருளாதாரக் கல்வியில் வளங்கள், சனத்தொகை, செல்வங்கள் பற்றிப் பாடங்கள் உண்டு. வறுமை பற்றியும் பஞ்சம் பற்றியும் ஒரு அத்தியாயம் இல்லை.

பஞ்சத்திற்குச் சொல்லப்படும் காரணங்கள்:

1. சனத் தொகை.
2. உற்பத்திக் குறைவு.

உணவுப் பற்றாக்குறை மட்டுமே பஞ்சத்திற்குக் காரணமாகாது என்கிறார் சென்.

1. மக்களின் உணவைப் பெறும் தகமை. (இயலுமை)
2. ஜனநாயகமற்ற - சமூக நிலைமைகள்.

என்பனவற்றின் தாக்கம் அதிகம் என்கிறார்.



அமர்த்யா சென்

உணவிருந்தும், பெறும் இயலுமை இழந்தால் பஞ்சம் நேரும். கல்வியறிவு, சுகாதாரம், பெண்கள் கல்வி, சுத்தமான குடிநீர் என்பன மக்களின் இந்த இயலுமையை பெரிதும் தீர்மானிக்கின்றன என்கிறார் சென். இத்துடன் ஆசிய சமூகங்களில் நிலவும் சாதிய நடைமுறைகளும் இயலுமையைக் கட்டுப்படுத்துகின்றன. ஜனநாயகம் மறுக்கப்பட்ட நிலை, பத்திரிகைச் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலை, சர்வாதிகார ஆட்சி - இந்த நிலைகளின்கீழ் உணவிருந்தும் பஞ்சம் தலைவிரித்தாடியதை வரலாற்றில் இடம்பெற்ற பஞ்சங்களை ஆய்வு செய்த சென் தரவுகள் மூலம் வெளியிடுகிறார்.

வங்காளம் (1943), பங்களாதேஷ் (1974), பின்னாளில் நடந்த சோமாலியாப் பஞ்சம் என்பன முக்கிய உதாரணங்கள்.

## பங்களாதேஷ் 1974

வெள்ளப்பெருக்குக் காரணமாக அருவி வெட்டு வேலைகள் தடைப்பட்டுப் போக அருவி வெட்டுத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் வருவாய் இல்லாமல் போனது. இந்தியா இலங்கை நாடுகளில் இருபோக விளைச்சல்கள்தான். ஆனால் பங்களா தேசில் மூன்று போகங்கள் நெல் விளையும்.

அரிசிக்கு இங்கு தன்னிறைவு உண்டு. 1972 இலிருந்து 1975 வரையான காலத்தைக் கணக்கெடுத்தால் இக்காலங்கள் விளைச்சல் கூடிய காலங்களாக விருந்தன. அதிசயம் என்னவென்றால் பஞ்சம் ஏற்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1974இல் தான் அமோகமான விளைச்சல் கிடைத்தது.
- அப்படி இருந்தும் அங்கு ஏன் பஞ்சம் வந்தது? அரிசி வாங்குவதற்கான காசு அருவி வெட்டும் தொழிலாளர்களிடம் இருக்கவில்லை.

உணவு விநியோகம், பாதிக்கப்பட்டவர்களிற்கான நிவாரணம் என்பன நடைபெறவில்லை. இவைகளை வெளிக்கொண்டு வரும் சூழ்நிலைகளும் அப்போது நிலவிய சர்வாதிகார ஆட்சியில் சாத்தியமாகவில்லை.


## சோமாலியா (90கள்)

1980இல் உலகவங்கி தனது கடனை மீளப் பெறுவதற்கான நிபந்தனைகளை சோமாலியாமீது திணித்தது. சமூகநலத்திட்டங்களை வெட்டுமாறும் பணமதிப்பைக் குறைக்கு மாறும் நிர்பந்தித்தது. இதனால் ஏற்றுமதி வருமானம் குறைந்தது. இறக்கு மதிப் பொருட்கள் குவிந்தன. இப்படி வெளி நிர்ப்பந்தத்தால் ஏற்பட்ட நிதி நெருக்கடிகளிற்கு 'உதவி' என்ற பெயரில் அமெரிக்கா தான் விற்க முடியாத கோதுமையையும் அரிசியையும் கடனாகக் கொடுத்தது. மலிவாகக் கிடைத்த வெளிநாட்டுத் தானியங்கள் அவர்களின் வழமையான உணவுகளான சோளம் போன்ற வற்றின் உற்பத்தியைக் குறைத்ததோடு அந்த உணவுப் பொருட்களை விற்க முடியாத விவசாயிகளை வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளியது. அவர்களின் முக்கிய ஏற்றுமதியான கால்நடைகளின் நாட்டு வைத்திய முறைகளிற்குப் பதிலாக மேற்கத்திய வைத்திய முறைகளும் மருந்துகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. உலகச் சந்தையில் இந்த மருந்துகளின் விலைகள் உயர்ந்த பொழுது கால்நடை உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன் அதில் தங்கியிருந்தோரின் வருமானங்களும் குறைந்தது. இந்த நடவடிக்கையினால் நன்மையடைந்தோர் இராணுவ அதிகாரிகள், பெரும் வியாபாரிகள் மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளும் தான். பாரம்பரிய விவசாயிகளும் மந்தை வளர்ப்போரும் வருமானங்களை இழந்து கொள்வனவுச் சக்தியையும் இழந்து வறுமைக்கும் பஞ்சத்திற்கும் ஆளாயினர்.

1989ஆம் ஆண்டு ஏற்றுமதிக்காகக் கொடுக்க வேண்டிய வெளிநாட்டு செலவாணியை கடன் வாங்கியே கட்டவேண்டிய சூழலில் சோமாலியா இருந்தது. 1970இல் இருந்த கூலியிலும் பார்க்க 90% வீதத்தால் குறைந்தது. ஒருவரின் சம்பளம் 3 டாலராகக் குறைந்தது. சுகாதாரம் மற்றும் கல்வி முற்றாகச் சீர் குலைந்து போனது. 1982ஆம் ஆண்டு ஒரு மாணவனுக்குச் செலவு 82 டாலர்கள். இது 90ல் 4 டாலராகக் குறைந்தது.

சோமாலியாவிலும் 'இயலுமை' முடக்கப்பட்டதால் பஞ்சம் ஏற்பட்டது.

1958ற்கும் 1962ற்கும் இடையில் இரு பெரும் பஞ்சங்கள் சீனாவில் ஏற்பட்டன. மில்லியன் கணக்கான மக்கள் மடிந்தனர். இந்தக் காலத்தில் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் சீனாவில் உணவுற்பத்தி அதிகமாக இருந்தது. தேவைக்கு அதிகமாக 100 மில்லியன் தொன் உணவு இருப்பில் இருந்தது. பிரதேசங்களிற்கிடையிலான இணைப்புகள் இல்லாமை. கருத்து வெளியிடும் சுதந்திரம் பற்றிய பிரச்சனைகள் என்பன வற்றால் உணவிருந்தும் அங்கு பஞ்சம் ஏற்பட்டது.




நோபல் பரிசை வைத்து சென்னை முக்கியப் படுத்தல் அல்ல இந்த அறிமுகத்தின் நோக்கம். பொருளாதார நோபல் பரிசு கொடுக்கப்படும் விதமும் சூழலும் சென்னின் பங்களிப்பிற்கான முக்கியத்துவத்தை அறிவிக்கின்றன. 1951 இல் "பொருளாதார தீர்மானங்களில் பெரும்பான்மையினரின் தீர்மானங்கள் அவசியமில்லை" என்பதனை வலியுறுத்தும் "Impossible Theorem" (சாத்தியமற்ற தத்துவம்) வெளியிட்ட கெனத் அறோவிற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இது பங்குச்சந்தைப் பொருளாதாரத்தின் ஆளுமையை பரிந்துரை செய்யும் தத்துவமாகும்.

1977 இல் பங்குச் சந்தைகளின் இலாபங்களை முன் கூட்டியே அனுமானிக்கும் வாய்ப்பாட்டை முன் மொழிந்த இரு அமெரிக்கர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால், இவர்கள் பயன்படுத்திய அதே கணித பொருளியல் தரவுகளையும் வாய்ப்பாடுகளையும் கொண்டு பஞ்சத்தை ஆய்வு செய்தார் அமர்த்யா சென்.

பொருளாதாரம், தத்துவம், கணிதம் ஆகியவற்றின் துணை கொண்டுதான் சென்னும் பிரச்சனைகளை அணுகினார். அத்துடன் பாரம்பரிய பொருளாதார ஆய்வுகளின் தரவுகளை மறுதலித்து வேறோர் தளத்திலிருந்து அதாவது வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளவர்களின் தளத்திலிருந்து தரவுகளை அவர் எடுக்கின்றார். இவர் ஒரு வித அறப்பரிமாணத்தைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரத்திற்குக் கொடுக்க முனைகிறார். ஆசியப் பெருமதிகளில் இருந்து நிறைய உதாரணங்களை எடுத்து தற்போது நிலவும் பயன்பாட்டு பொருளியலை எதிர்க்கிறார். "சமூக அரசின் அடிப்படை என்பது அடித்தள தனிமனிதரின் அபிலாசை ஆக வேண்டும்" என்ற ஜோன் றாவெலின் அறத்தினைப் பல இடங் களில் விதந்துரைக்கின்றார்.

பெரும்பான்மை சிறுபான்மை என்ற பிரிப்பாய்வில் சிறுபான்மையிலும் சிறுபான்மையானவரின் தெரிவு களும் உரிமைகளும் மதிக்கப்பட வேண்டுமென்கிறார் சென். பொதுவாக சராசரி தனிமனித வருமானமானது எப்படிக் கணிக்கப்படுகிறது?

- ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் அதன் சனத் தொகை 500.
- 50 பேர்களுக்கு தோட்டங்களும் வீடுகளும் தொழில்களும் சொந்தமாக இருக்கின்றன.
- இந்த 50 பேரின் வருமானம் 200,000 - (தலைக்கு 4000)
- மிகுதி ஜனங்களின் வருமானம் 45,000 - (தலைக்கு 100 )

சராசரி தனிமனித வருமானம் 245000 / 500 = தலைக்கு 490 ஆகும். இந்தப் பெறுமதி உண்மை நிலையைச் சொல்வதில்லை. தேசிய வருமானத் தையும் இப்படியே கணக்கிடுகிறார்கள்.

இந்த முறைக்கு மாற்றீடாக சென் தன் சூத்திரங் களை முன் வைக்கிறார். வருமான வித்தியாசம் என்ற அலகினை அவர் சூத்திரங்களில் முன் வைக்கிறார். தனது சூத்திரங்களிற்கான தரவுகளை அவர் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களிடமிருந்து எடுக்கிறார்.

ஒரு நாட்டிலோ அல்லது ஒரு பிரதேசத்திலோ வறுமை குறைந்து வருகிறதென்றால் அதை எந்த அளவு கோலை வைத்து அளப்பது?

வெவ்வேறு நாடுகளில் சமூகநலப் பங்கீடு அல்லது ஒரு நாட்டின் பங்கீட்டு மாற்றங்கள் பற்றி அறிய அந்த நாட்டு வருமானங்கள் பற்றிய சுட்டெண் கள் தேவைப்படுகின்றன. அதே மாதிரி சமூக ஏற்ற தாழ்விற்கான சுட்டெண்களும் அவசியமாகின்றன.

வறுமைக்கான சுட்டெண்.

$$P = H * [I + (I - 1) * G]$$

P - வறுமைக்கான சுட்டெண்

H - வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களின் தொகை

I - வருமானப் பங்கீடு

G - வருமானச் சமமின்மையின் விகிதம்.

வருமானச் சமமின்மையின் மாற்றங்கள், பங்கீட்டு மாற்றங்கள் போன்ற நுணுக்கமான விடயங்கள் வறுமையின் அளவினைக் காட்டும். வறுமைச் சுட்டெண்ணில் ஏற்படுத்தும் தாக்கங்கள் இங்கு துல்லியமாக அவதானிக்கப்படுகின்றன. இத் தரவுகள் வறுமைக் கோட்டிற்கு கீழிருந்து பெறப்பட்டவை.

அமர்த்யா சென் முன் வைத்த கருத்துக்கள் ஏலவே ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் மார்க்சிய நோக்கின் அடிப்படையில் பலரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இவரது கருத்துக்கள் பல வேளைகளில் இடைக்காலத் தீர்வுகளைச் சொல்லும் சீர்திருத்தக் கருத்துக்கள் என்றும் நடைமுறைக்கொவ்வாத பல்கலைக்கழக ஆய்வுகள் என்ற அளவில் முடிந்து விடும் பயன்பாட்டுச் சமன்பாடுகள் என்றும் பல விமர்சனங்கள் ஒரு புறமும், உலகமயமாக்கல் திறந்த பொருளாதாரக் கொள்கை இவை தொடர்பான இந்தி யாவின் நிலைப்பாடு. இந்த நிலையில் சென்னுக்கு நோபல் பரிசு கொடுப்பதற்கான பின்னணி தொடர்பான நியாயமான சந்தேகங்கள் மறுபுறமும் இருக்கின்றன.

எனினும் தமது சுரண்டலை மிக லாவகமாக மூன்றாமுலக நாடுகளில் நடத்தி வரும் அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் ஒரு அறிவியல் யுத்தத்தையும் தமது பிரசாரங்கள், கல்வி முறை, தொடர்பு சாதனங் கள் போன்ற ஆயுதங்களைத் தாங்கிச் செய்து வருகின்றனர்.

தமது உள்நாட்டு பிரஜைகளின் மிதமிஞ்சிய நுகர்வு வாழ்க்கை முறையை அவர்கள் எந்தவித கேள்விக்கும் உட்படுத்தாமல் இருக்கும் முகமாய் தொடர்பு சாதனங்களையும் கல்வி முறையையும் தந்திரமாக பயன்படுத்தும் இந்த நாட்டு அரசுகளின் பிரச்சாரங்களை அறிவியல் ரீதியாக எதிர்கொள்ளும் ஆய்வுகளும் பொய்களை அம்பலப்படுத்தும் பல எழுத்துக்களும் மூன்றாமுலக தரப்பிலிருந்து வெளி வரத் தொடங்கியுள்ளது.

உலக வறுமைக்கு சனத்தொகைப் பெருக்கத்தை முக்கிய காரணமாகக் காட்டுவது மற்றும் சூழல் மாசடைதல் தொடர்பான இவர்களது பிரச்சாரங்கள் எல்லாம் பொய்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பஞ்சம் பட்டினி என்பவற்றிற்கு இவர்களின் வியாக்கியானங்கள் தொடர் பாக பதிலடி கிடைக்கத் தொடங்கியுள்ளது. மூன்றா முலகில் சுரண்டலுக்கெதிரான குரலிற்குப் பலம் சேர்க்கும் அறிவியல் அம்சங்களை இனங்கண்டு கொள்வது, அந்த அறிதலை விரிவுபடுத்தும் எதிர்ப்புக் குரலிற்கு மேலும் உரப்பூட்டவும் உதவுமே அன்றி தீமையாகாது. இந்த வகையில்தான் அமர்த்யா சென் பற்றிய சிறிய அறிமுகம் அமைகிறது. ●






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



“தேசிய அரசுகள் என்பவையும் தேசியவாதம் என்பதும் இயல்பாகவே காலிக்கூடுகள். ஒவ்வொரு வரலாற்று மாற்றமும் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள வர்க்க உறவுகளும் தங்களது குறிப்பிட்ட தன்மையை அவற்றுள் நிரப்புகின்றன.”

**“உழைக்கும் வர்க்கம் வெறுமனே விரும்பத் தகுந்த இலக்கு களை அல்ல, அதற்கு மாறாக, திட்டவட்டமான முன்நிபந் தனைகள் நிலவுகிற சமூக முன்னேற்றத்திற்கான நடை முறைக்கு ஒத்த இலக்குகளைத்தான் நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். உழைக்கும் வர்க்கம் கற்பனைவாதங் களைப் பின்பற்றக்கூடாது. மாறாக, முற்போக்கான கொள் கைகளைக் கைக்கொள்ள வேண்டும். குட்டிமுதலா ளித்துவ அரசியலில் உள்ளதுபோன்று பாரம்பரியமாகவே குறுகிய மனப்பான்மை கொண்டதும் கோழைத்தனமான துமான ஒரு நடைமுறைக் கொள்கையை அல்ல; மாறாக இறுதிப் புரட்சிகரக் குறிக்கோளுக்காக மிக உறுதியுடன் போராடும் ஒரு கொள்கையையே பின்பற்ற வேண்டும்.”**

**ரோசா லுக்ஸம்பேர்க் (1871—1919)**


**இலங்கையில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் காத்திரமான கலை இலக்கிய சஞ்சிகை!**



# மூன்றாவது மனிதன்

ஆசிரியர்: எம். பௌசர்

தொடர்புகளிற்கு:
**The Editor**
**37/05 Vauxhall Lane**
**Colombo - 02**
**Sri Lanka.**
மின்னஞ்சல்:
**3man@sltnet.lk**

www.tamilarangam.net



# மார்க்சியத்தின் போதாமைகள் பற்றி....



இமயவரம்பன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்த அறிவியல்துறையும் முழுமையான அறிவின் பொக்கிஷமாக மனிதரை வந்தடைவதில்லை. எல்லா மனித அறிவும், மனிதரது சிந்தனையும் செயற்பாடும் ஒன்றிணைந்து உருவாக்குவதே. மனித அறிவின் வளர்ச்சி முடிவின்றி நடைபெறுகின்றது. எந்த அறிவியல் துறையிலும், நடைமுறை மூலம் சேகரிக்கப் பட்ட தகவல்கள் பொதுமைப்படுத்தப்பட்ட தகவல் களாக அதாவது கொள்கைகளாகத் தொகுக்கப் படுகின்றன. கொள்கைகளின் அடிப்படையில் மேலும் தகவல்கள் சேர்க்கப்படுகின்றன. கொள்கைகள் சோதிக்கப்படுகின்றன. இவ்வாறான சில சமயங்களில் கொள்கைகளின் வரையறைகள் அடையாளங் காணப் பட்டுக் கொள்கைகள் மாற்றியமைக்கப்படுகின்றன. சில சமயங்களில் மாற்றுக் கொள்கைகள் உருவா கின்றன.

எந்தக் கொள்கையும் எக்காலத்துக்கும் உண்மை யாகவும் சரியாகவும் இருக்கும் என்ற உத்தரவாதத் துடன் வருவதில்லை. எனினும் அறிவியற் கொள்கை கள் மனித நடைமுறையுடன் சேர்ந்து விருத்தி பெறுவதால் அவை திரும்பத் திரும்ப சோதிக்கப்பட்டு நிறுவவோ நிராகரிக்கப்படவோ கூடும். இந்த வகை யில் அவை சமயச் சிந்தனைகள் ஊட்டப்பட்ட கருத்து முதல்வாத எண்ணங்களைப் போலன்றி மாற்றத்தை ஏற்கத் தயாராகவே உள்ளவை.

கடந்த முப்பது ஆண்டு காலத்தில் விஞ்ஞான மறுப்பும் மனித சமத்துவக் கொள்கைகளின் மறுப்பும் மனித அறிவின் நிச்சயமற்ற தன்மைபற்றிய மிகைப் படுத்தலும் பலவேறு வடிவங்களில் ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ளன. மாற்றுச் சிந்தனைகள் என்ற வகையில் அவற்றை நாம் எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறிவதும் வலிந்து தவறாக விளக்குவதும் எவருக்கும் நல்ல தல்ல. அதேவேளை இவ்வாறான சிந்தனைகள் எந்தவிதமான சமூகப் பார்வைகளின் வெளிப்பாடு களாக வருகின்றன என்பதை மறந்து அவற்றை மதிப்பிடுவது முழுமையான ஆய்வுமல்ல.

பௌத்தம் முதல் பின்நவீனத்துவம் வரையிலான பல சிந்தனைப் போக்குகள் மூன்றாமுலக நாடு களிலும் முன்னேறிய நாடுகளில் சமூக உணர்வுடன் செயற்படுகிறவர் மத்தியிலும் மார்க்சியத்தை மறுப் பதற்குப் பயன்பட்டு வருகின்றன. இவைபற்றிய தெளி வான ஆணித்தரமான பதில்கள் மார்க்சியச் சிந்தனை யாளர்களினால் வழங்கப்பட்டு வந்தாலும் திரும்பத் திரும்பச் சில விடயங்கள் அவை செல்லாதன என்று நிறுவப்பட்ட பின்னரும் வலியுறுத்தப்படுவதை நாம் காண்கிறோம். எல்லா நேரத்திலும் இவைபற்றித் திரும்பத் திரும்ப மறுமொழி சொல்லிக் கொண்டி ருப்பதும் இயலாது. எல்லா நேரத்திலும் இவைபற்றி மௌனமாயிருக்கவும் முடியாது.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குறிப்பாக பழைய விவாதங்கள் பற்றி இளைஞர்கட்கும் அரசியலுக்குப் புதியவர்கட்கும் தெரியாதிருக்கும்போது விஞ்ஞான ரீதியான சிந்தனை மார்க்சியம் என்பன பற்றிய குழப்பமான கருத்துக்கள் தெளிவுபடுத்தப்படாவிட்டால் அதன்மூலம் சமூகப்பயனுள்ள நடைமுறை பாதிக்கப் படும். எனவே போதாமைகள் பற்றிக் கூறப்படுகிற விடயங்கள் உண்மையில் போதாமைகள் அல்ல என்றால் அவை ஏன் அப்படிக் கூறப்படுகின்றன என்று கவனித்துத் தவறான வாதங்கள் முறையாக மறுக்கப்படவேண்டும். சுட்டிக் காட்டப்படும் போதா மைகள் உண்மையானவை என்றால் அவற்றின் அடிப் படையான குறைபாடு எதன் காரணமாக ஏற்பட்டவை என்று நாம் ஆராயவேண்டும்.

அப்படியானால் நமது அணுகுமுறை மீளாய்வுக்கு உள்ளாக வேண்டும். தகவல்களின் போதாமை அல்லது தவறான பாவனையின் விளைவான குறைபாடுகளாயின் அவை நிறைவு செய்யப்பட வேண்டும். இவை ஒவ்வொரு மார்க்சியவாதியினதும் கடமைக்குட்பட்டவை. ஏனெனில், மார்க்சியம் எல்லா வற்றையும் கேள்விக்குட்படுத்து என்று வற்புறுத் துகிறது. அது மார்க்சியத்திற்கு விலக்களிக்கவில்லை. எனவே மார்க்சியத்தை கேள்விக்குட்படுத்தி அதன் மூலம் மார்க்சியத்தைச் செழுமைப்படுத்த முடியும் என்பது முற்போக்கான மார்க்சியம், உயிருள்ள மார்க்சியம். மார்க்சியத்தை ஏதோ ஒரு கால வரம் பிற்குள் அது இருந்த நிலையில் நிரந்தரமான விறைப் பான ஒரு வடிவத்தை அதற்கு வழங்கி அதை வழிபடு வதும் கேள்விக்குட்படுத்த மறுப்பதும் வரட்டு மார்க்சியம், உயிரற்ற மார்க்சியம்.

நாம் இன்று பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசும்போது மார்க்சியத்தின் போதாமைபற்றிக் கூறப்படுகிறது. இவற்றைக் கூறுவோரிற் பலர் மார்க்சியத்தை நிராகரிக்கும் நோக்கிலேயே அப் போதாமைகள் பற்றிப் பேசுகின்றனர். அதேவேளை கணிசமானவர்கள், மார்க்சியத்தைப்பற்றி மேலும் அறியவேண்டியும் தமது அனுபவமும் தகவல்களும் கூறுகின்ற விடயங்களின் காரணமாக எழும் ஐயங்க ளாலும் மார்க்சியத்தால் சில விடயங்களைக் கையாள முடியுமா என்று கேட்கிறார்கள். எந்த நோக்கமாக இருந்தாலும் கேள்விகள் எழுவதற்கான நியாயம் இருக்கும்பொழுது பதில் தருவதற்கான தேவையும் உள்ளது. இந்தக் கண்ணோட்டத்திலேயே இன்று பெண்ணிய நோக்கிலிருந்தும் தலித்திய நோக்கிலி ருந்தும் மார்க்சியம் பற்றி முன்வைக்கப்படுகிற கேள்வி கட்கு விடை தருவது பயனுள்ளது.

நியாயமான போராட்டங்கள் ஒன்றை ஒன்று ஆதரிக் கின்றன. எனவே அவற்றை ஒருங்கிணைப்பதற்கான தேவை மனித சமூகத்தின் விடுதலைமீது அக்கறை யுள்ள அனைவருக்கும் உண்டு. அந்தத் தேவையை முன்நிறுத்தியே இக் கட்டுரை எழுதப்படுகின்றது.

அடுத்து வருகின்ற பகுதிகளில் வெவ்வேறு சமூக விடுதலைப் போராட்டக் கோணங்களிலிருந்து மார்க்சி யத்தின்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிய விளக்கங்கள் சுருக்கமான முறையில் வழங்கப்படும். இவ் விளக்கங்களின் நோக்கம் மார்க்சியத்தை நியாயப்படுத்துவதற்கான வேறெந்தப் போராட்ட நியாயத்தையும் மறுப்பதல்ல. மாறாக, நியாயத்திற்கான எந்தப் போராட்டத்தையும் ஆதரிப்பதும் வற்புறுத்துவதுமே மார்க்சிய நோக்கிற் சரியானது.

இக் கட்டுரை மார்க்சியத்தின் போதாமை எனக் கூறப்படுவனவற்றை மறுப்பதற்குப் பதிலாக அவை ஏன் போதாமைகளாகக் காணப்படுகின்றன என விளங்கிக் கொள்வதிலேயும் நடைமுறை மூலமும் கொள்கையின் விருத்தி மூலமும் மார்க்சியத்தை எவ்வாறு செழுமைப்படுத்துவது என்பதிலும் கூடிய கவனஞ் செலுத்தும். பகையான விமர்சனங்களையும் சிநேகமான விமர்சனங்களையும் பகுத்து ஆராயும். அதேவேளை சகல விமர்சனங்களையும் அவற்றின் ஆதாரங்களின் அடிப்படையிலேயே நேர்கொள்ள இயலும் என்ற நம்பிக்கையுடனேயே இக் கட்டுரையை எழுதுகின்றேன். ●

நன்றி: புதிய பூமி (யூன் - யூலை 2002)


# www.thenee.com

## இன்றைய அரசியலின் ஒரு ஆய்வக இணையவலையம்

செய்திகள், விமர்சனங்கள், ஆய்வுகள், விவாதங்கள் மற்றும் பிற படைப்புக்களோடு....

**"கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க, அவற்றை நல்ல மனிதர்கள் என்போர் அதிர்ச்சியூட்டுமளவிற்கு மௌனமாய் சகித்துக் கொண்டிருப்பது பற்றியே நாம் இந்தத் தலைமுறையில் வருத்தமுற வேண்டும்."**

—மார்ட்டின் லூதர்கிங்—

மின்னஞ்சல்: thenee41@hotmail.com

# உயிர்நிழல்



புகலிடத்திலிருந்து....
இலக்கியம், அரசியல், கலை கலாச்சார வெளிப்பாடுகளின் காத்திரமான மாற்றுப் பன்முகக் குரல்களுடன்....

தொடர்புகளுக்கு:
UYIRNIZHAL
EXIL Publication
27 Rue Jean Moulin
92400 Courbevoie
FRANCE.

மின்னஞ்சல்:
EXILFR@aol.com




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத

# புதிய கட்சி

புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

வரலாற்று ஆய்வு நூல், பாகம் - 1

அரவிந்த மகரிஷி சத்தியத் தேடலில்

நூல் வரிசை - 1

ஆசிரியர் : **அ. கௌரிகாந்தன்**



வெளியீடு:

**சுடர் பதிப்பகம்**
**4, கந்தசாமி வாத்தியார் தெரு**
**தருமபுரி – 636 701**
**தமிழ்நாடு.**

## இதழாய் ஓர் எழுத்தியக்கம்

# கவிதாசரண்



தொடர்புகளிற்கு:

**KAVITHAASARAN**
**31, T.K.S. Nagar**
**Chennai 600 019**
**Tamil Nadu**
**INDIA.**

மின்னஞ்சல்:
**kavithaasaran@yahoo.com**

இணையத்தளம்:
**www.geocities.com/kavithaasaran**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னட்டை : **ரோசா லுக்சம்பேர்க்**

## ரோசா லுக்ஸம்பேர்க் (1871—1919)



ஜெர்மன், போலந்து மற்றும் சர்வதேச தொழிலாள இயக்கத்தின் முக்கிய தலைவி. இரண்டாவது அகிலத்தின் இடதுசாரித் தலைவர்களில் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் முக்கியமானவர். மார்க்சிய லெனினிய வாதத்தின் முன்னோடி. 1919ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி இரவு பாஸிஸ்டுக்களினால் கொலைசெய்யப்பட்டு பெர்லின் லாண்ட்வெர் கால்வாயில் தூக்கி யெறியப்பட்டார்.

பாஸிஸவாதிகளின் மொழி உலகில் எங்கும் ஒன்றே.

பின்னட்டை ஓவியம் : **பிரபஞ்சம், பூமியைத் தழுவும் காதல்**
ஓவியர்: **பிரைடா காலோ**

## பிரைடா காலோ (1907 - 1954)



பிக்காஸோ, சால்வடோர் டாலி அளவுக்கு நிகரான படைப்பாளுமை கொண்டவராகவும், உலக ஓவிய வரலாற்றில் தன் பாணியை ஸ்தாபித்தவராகவும் அறியப்பட்ட தனித்துவம் மிக்க ஓவியர் பிரைடா காலோ.

இவர் ஒரு மார்க்சியவாதி. மெக்சிக்கோ கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணிச் செயற்பாட்டாளர். ஐரோப்பாவிற்கு வெளியில் முதல் சர்ரியலிசவாதி எனக் கணிக்கப்படுபவர்.

அதிர்ச்சி தரத் தக்கதும் அழுகி நாறுவதுமான விம்பங்களை படைக்கும் நவீன கலக எக்ஸ்பிரஷனிச முன்னோடி என்று கருதப்படுபவர். பிரைடா மன முறிவையும், உடல் ரணத்தையும், துயரத்தையும், காதலையும் ஓவியத் திரைச் சட்டங்களில் தீட்டி மனோ பிரபஞ்சங்களில் யாத்திரை போனபடி புறவுலக மனிதர்களின் சிந்தனைகளை ஆக்கிரமித்துக் கொண்டார். கலைஞராகவும், மனுஷியாகவும், பின்நவீனத்துவ பெண்நிலைவாதிகளின் கலைக் கோட்பாட்டாளர்களில் ஒருவராகவும் பெண் நிலைவாதிகளால் ஆதர்சமாக போற்றப்படுபவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கு நிலவுடைமையாளர்களும் முதலாளிகளும் வணிகர்களும் இருக்கிறார்களோ அங்கே சட்டத்தின்படி பெண்கள் ஆண்களுக்குச் சமமாய் இருக்கமுடியாது.

எங்கே நிலவுடைமையாளர்களும் முதலாளிகளும் வணிகர்களும் இல்லையோ, எங்கே உழைக்கும் மக்களின் அரசாங்கம் இந்தச் சுரண்டல்காரர்கள் இல்லாத புதிய வாழ்க்கையை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறதோ, அங்கே சட்டப்படி பெண்களும் ஆண்களும் சமமாக இருக்கின்றார்கள்.

ஆனால், அதுமட்டும் போதுமானதல்ல.

சட்டப்படி சமம் என்று சொல்லி விட்டால் அது நடைமுறையிலும் சமத்துவம் என்றிருப்பது அவசியமல்ல.

ஒரு உழைக்கும் பெண் ஒரு உழைக்கும் ஆணுக்கு சமமாக — சட்டத்தில் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் இருக்கவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்.

பெண்களுக்கு முழு சுதந்திரம் வாங்கிக் கொடுக்காதவரையிலும் பாட்டாளி வர்க்கம் முழுவிடுதலையை அடைய முடியாது.



1920 டிசம்பர் 21
வி. லெனின்

(நூல்திரட்டு தொகுதி 29 உழைக்கும் பெண்களுக்கு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிச்சுற்றுக்கு மட்டும் - Private Circulation only

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்